த.பா.நி. (க.வெ.) வரிசை எண்—386

பிரிட்டனின் அரசாங்கமும் அரசியலும்

(கி.பி. 1485-க்குப்பின்)

ஆசிரியர்

வீ. கண்ணையா, எம்.ஏ.,
பேராசிரியர், அரசியல் துறை,
அரசினர் கலைக் கல்லூரி,
கோவை.





தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1972

T.N.T.B.S. (C. P.) No. 386

© Tamil Nadu Text Book Society

Government and Politics in Britain since 1485

V. Kannaiah

Price Rs. 7-30

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
Avvai Achukkoodam,
96, P. V. Koil Street,
Madras-13.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி — உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்விமொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும், அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்களின் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனிநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'பிரிட்டனின் அரசாங்கமும் அரசியலும் (கி.பி. 1485-க்குப்பின்)'** என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **386**ஆவது வெளியீடாகும். இதுவரை **421** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மானில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெறவேண்டும். அதுவே, தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனமகிழ்ந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	டியூடர் மரபினரின் புதிய முடியாட்சி	1
2.	தற்கால ஆங்கில அரசாங்கத்தின் அடிப்படைகள்	30
3.	டியூடர் முடியாட்சியின் உச்சநிலை	69
4.	டியூடர்களும் பாராளுமன்றமும்	106
5.	டியூடர்களும் திருச்சபையும்	117
6.	அரசப் பதவிபற்றிய ஸ்டுவர்ட்டுகளின் கோட்பாடு	141
7.	முதலாம் சார்லஸ் (1625—1649)	160
8.	பொதுநல அரசு (1649—1660)	184
9.	இரண்டாம் சார்லஸ் (1660—1685)	194
10.	இரண்டாம் ஜேம்ஸ் (1685—1688)	206
11.	விக்குகளின் ஆட்சி	234
12.	மூன்றும் ஜார்ஜ் மன்னரும் அவரது சொந்த அதிகாரமும் (1760—1784)	244
13.	பாராளுமன்றச் சீர்திருத்தம்	257
14.	பெருமக்கள் சபையும் பொதுமக்கள் சபையும் ...	271
15.	முடியாட்சி	285
16.	கேபினெட் அமைச்சரவை	298
17.	பிரதம அமைச்சர்	321
18.	அரசியல் கட்சிகள்	331
19.	தலஆட்சி	343
20.	திருச்சபையும் அரசும்	363
21.	நீதிமன்ற அமைப்பு	371
22.	அரசாங்கத் துறைகள்	378
	கலைச்சொல்லகராதி	390

1. டியூடர் மரபினரின் புதிய முடியாட்சி

பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முன்னிருந்த பல அரசர்களின் ஆட்சியின் தொடர்ச்சியாக யார்க் அரசர்களின் ஆட்சியும் இருந்தது. 1464வரை லங்காஸ்டிரியர்களே ஒழிப்பதில் நான்காம் எட்வர்டு முனைந்திருந்தார். சிறிதுகால அமைதிக்குப்பின், 1470-ல் இவருடைய ஆட்சியுரிமைக்குத் தீங்கு நேரிடும்போல் தோன்றியது. ஆயினும் படைவலியால் இவருடைய உரிமையைத் தக்கவைத்துக் கொண்டார். எட்வர்டின் மகன் இரண்டு மாதங்களே ஆட்சி செய்தார். எட்வர்டின் சகோதரரும் இரண்டாண்டு ஆட்சி செய்தார். இதன்பின் போரினால் இம் மரபினரின் ஆட்சியுரிமை மாற்றியமைக்கப்பட்டது. அமைதியையும் வளமான வாழ்வையும் மக்கள் எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தனர். இருந்தபோதிலும் இக்காலத்திய சூழ்நிலையிலிருந்து ஒரு வலிமைமிக்க இங்கிலாந்து உருவாகியது. புதிய அரச மரபினர் உருவாக்கிய அரசாங்கக் கருத்துகளின் வளர்ச்சியின்மீது ஓர் அதிகாரக் கட்டமைப்பு நிலைபெற்றது. ஏழாம் ஹென்றியின் முன்னோர்களில் ஒருவர் நான்காம் எட்வர்டு. இதைக் கருத்தில் கொண்டு பார்க்கும்பொழுது இவருடைய ஆட்சியைக் குலைத்த போராட்ட நிகழ்ச்சிகள் பொருத்தமற்றவைகளாய்த் தோன்றுகின்றன. எல்லாமே அழிந்துகொண்டிருந்ததாக அக் காலத்தியவர்கள் கருதினரெனினும் அவ் வழிவிலும் ஒரு புதிய வாழ்க்கைமுறை தோன்றியது. இக் காலத்தை இடை மாறுபாட்டுக் காலமென வருணிக்கிறார்கள். ஆரும் ஹென்றியின் காலத்திற்கும் எட்டாம் ஹென்றியின் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சூழ்நிலைகளின் மாற்றத்தை இது குறிப்பிடுகிறது. யார்க்கிய மரபினரின் குழப்பமான காலத்திலும் முதல் டியூடர் அரசரின் இக்கட்டான நிலையிலும் எலிசபெத் அரசியாரின் நல்லாட்சி வல்லரசு ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாயிற்று.

இம் மாற்றத்தைத் தொடங்கிவைக்க மார்ச்சின் கோமகன் எட்வர்டு[1] தெரிவு செய்யப்பட்டார். இதற்கான தகுதியை எட்வர்டு பெற்றிருக்கவில்லையெனினும், சில சூழ்நிலைகளின் விளைவாக இப் பதவி இவருக்குக் கிடைத்தது. ஆரும் ஹென்றியின் திறமையின்மை எட்வர்டின் தகுதியாயிற் றெனலாம். ஹென்றியின் மென்மையான நற்பண்புகள் இவரை அரசரிமைக்கு அருகதையற்றவராக்கின. கல்லூரி களையும் திருச்சபைகளையும் அமைப்பதில் வெற்றி கண்ட இவர், முரட்டுப் பிரபுக்களை அடக்கியாள்வதில் வெற்றி காணவில்லை. தம் தந்தை வென்று வசப்படுத்திய ஃபிரஞ்சுப் பகுதிகளைப் பாதுகாக்கவும் இவர் முற்படவில்லை. ஹென்றியின் வலிமையற்ற நிலையைக்காட்டிலும் மார்கரெட்டின்[2] பழியஞ் சாத் தன்மை மக்களின் மனத்தில் நிலைத்துவிட்டது. இவரை அரசருக்குத் திருமணம் செய்து வைப்பதில் ஃபிரான்சின் சில பகுதிகளை ச.ஃபோல்க்[3] இழக்க நேரிட்டது. இதற்கும் மார்கரெட் பொறுப்பென மக்கள் கருதினர். யார்க் மரபின ரோடு போராட இவர் ஃபிரான்சின் உதவியை நாடினரென்பது வெளியானதும் மக்கள் இவரை வெறுத்தனர். தம் மகனின் உரிமையை நிலைநாட்டுவதற்கு இவர் வடக்கேயிருந்து சில முரட்டுப் படைவீரர்களைக் கொண்டுவந்து விடுகளைக் கொள்ளை யடித்ததும், பயிர்களை நாசப்படுத்தியதும் தெற்கே இருந்த நகரத்தினர்களுக்குப் பெருத்த வெறுப்பை உண்டாக்கியது. துயரமிக்க ஹென்றியின் வல்லாட்சிக்கு இவருடைய முறை கேடான அரசாங்கம் ஒரு காரணமாக இருந்ததால் இவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். தன் விருப்பம்போல் செயல்பட விரும்பிய பாராளுமன்றத்தை முதல் யார்க் அரசர் எதிர்நோக்கியிருந்தாலும், முதல் லங்காஸ்டிரிய அரசரால் எதைச் சாதிக்க முடிந்திருக்குமோ அதையே ஹென்றியாலும் செய்திருக்கமுடியும். அறிந்தோ அறியாமலோ ஆங்கிலே யர்கள் தாம் அனுபவித்த துன்பங்களைத் தம் வாழ்க்கையைக் காக்க வேண்டிய அரசியலமைப்பு முறையோடு தொடர்பு படுத்திக் கொண்டார்கள். இக் காலத்திய பிரதிநிதித்துவ அரசாங்கமும் வலிமையற்றே காணப்பட்டது. வளர்ச்சி பெறுத சமூகத்தின் முன்னேற்றத்திற்கு இது ஒரு தடை யாகவே இருந்தது. மக்களும் வலிமை இழந்து காணப் பட்டார்கள். மக்களுடைய ஆற்றல்கள் பயனுள்ள முறையில்

[1] Edward Earl of March
[2] Margaret
[3] Suffolk

செயல்பட இவைகள் திறமைமிக்க ஒரு கட்டுப்பாட்டு நிறுவனத்திடம் விடப்படவேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிறுவனம் இல்லாத பொழுது இவைகள் வலிமைமிக்க ஒருவரின் முன் பயனற்றுப்போயின. தனிமனிதன் ஒருவனின் மகிழ்ச்சிக்கு அரசாங்கத்தின் சிறந்த கோட்பாட்டைவிட அமைதியும் பாதுகாப்பும் அவசியமெனக் கருதப்பட்டன. நான்காம் ஹென்றியோடு வந்த அரசாங்கத்தின்கீழ் இவைகளைப் பெற இயலாதென்பதை ஆங்கிலேயர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். இவைகளைப் பெற எதையும் இழக்க இவர்கள் தயாராஞர்கள்.

புதிய முடியாட்சி

மக்கள் தம்மிடமிருந்து எதிர்பார்ப்பதை நான்காம் எட்வர்டு ஓரளவு உணர்ந்திருந்தார். இதை நிறைவேற்றுவதில் இவர் சிறிது முன்னேற்றம் கண்டார். ஆனால், நிலையான ஓர் அரசாங்கத்தை நிறுவுவதுபற்றி இவருக்குச் சில தனிப்பட்ட கருத்துகள் இருந்தன. இக் காலத்திய புதிய முடியாட்சியில் இக் கருத்துகளை இவர் எந்த அளவிற்குப் பயன்படுத்தினரென்பதில் இவருடைய சாதனையைக் காண முடிந்தது. அரசியலமைப்பை அழிக்கும் நோக்கத்தோடு இவர் அரியணையேறினர் என்பதற்குச் சான்றுகள் துணை செய்யவில்லை. குறிப்பிடத்தக்க நல்லுணர்வுகளைக்கொண்ட இளைஞர் இவர். நல்ல கருத்துகள் ஒருசில இவரிடம் இருந்தன. அரியணையேறியபோது இவர் சில இனிய கருத்துகளை வெளியிட்டார். இவரோ, இவருக்குப் பின்வந்த டியூடர்களோ இறை உரிமைக் கோட்பாட்டை வலியுறுத்தவில்லை. முதலாம் சார்லஸ், இரண்டாம் ஜேம்ஸ் ஆகியவர்களின் வரலாற்றைப் பார்க்கும் பொழுது இவர்களுடைய (டியூடர்களுடைய) அறிவுடைமை தெளிவாகிறது. அரசியலமைப்புச் சார்ந்த அரசாங்க முறைகளை அப்படியே வைத்துக்கொண்டு தாம் விரும்பிய வாறு வல்லாட்சி நடத்தலாமென்று எட்வர்டு எண்ணினர். பாதுகாப்புப் பற்றிய தேசிய விருப்பத்தோடு இன்னும் பல சூழ்நிலைகள் அரசின் கொள்கைச் செயற்பாட்டிற்குதவின என்பதையும் இவர் கண்டார்.

மரபுவழி உரிமை அடிப்படையில், யார்க்கினரின் மரபு வழியை ஏற்றுக்கொண்டது இவைகளில் ஒன்றாகும். நிலமானிய மரபுரிமை விதிகள் இவர்களின் ஆட்சி உரிமைக்குப் பெரிதும் உதவின. பாராளுமன்ற இசைவாணையை இவர்கள் நம்பி இருக்கவில்லை. பிறப்புரிமை அடிப்படையில் அரசுரிமை

பெற்றவர்கள் மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கலாமெனக் கருதப்பட்டது. தம் விருப்பில் ஆட்சி செய்யும் உரிமைக்கும் அரசியலமைப்பிற்குட்பட்டு ஆட்சி செய்யும் உரிமைக்கும் இடையிலான கருத்துகளை சமூகம் உணர்ந்திருந்ததாகத் தெரியவில்லை. அரசுரிமை நிருணயச் சட்டத்தின்படி பதவியேற்காத அரசர்களின் குழப்பமான நிலையை இன்னும் சில ஐரோப்பிய நாடுகளில் காணுகிறோம். மேலும், 15ஆம் நூற்றாண்டில் தனியாட்சியாளர்களின் மீது மக்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஏனெனில், இக் காலத்தில் ஐரோப்பிய நாடுகள் நிலமானியக் குழப்ப நிலையிலிருந்து விடுபட்டன. மூன்று நூற்றாண்டுகளுக்குமுன் இரண்டாவது ஹென்றியின் காலத்தில் இங்கிலாந்து இந் நிலையை அடைந்தது. ஒரேவிதமான ஆட்சிமுறைக் கோட்பாட்டை ஆதரிக்கும் சட்ட அறிஞர்களும் இதையொட்டியே கருத்தை வெளியிட்டார்கள். அரசெதிர்ப்புக் குற்றத்தை வரையறை செய்வது இப்பொழுது எளிதாகத் தோன்றியது. ஆனால், பொதுமக்கள் சபையினரின் உரிமைக்கோரிக்கைகளைப் பெரு மக்கள் சபையினரின் கோரிக்கைகளோடு இணங்கச்செய்வது இவ் வறிஞர்களின் அதிகாரத்திற்கப்பாற்பட்டதாக இருந்திருக்கவேண்டும். கிளர்ந்தெழும் பிரபுக்களை அடக்கவேண்டுமென்ற கோரிக்கையை அரசர் ஏற்கவேண்டிய இச் சூழ்நிலையில், அரசரே நீதியின் பிறப்பிடம் என்னும் கோட்பாடு மறுபடியும் உயிர்பெற்றது. இறுதியாக எட்வர்டின் சொந்த வலிமையும் இவர் குடும்பத்தின் தலைச் செல்வாக்கும் இவருக்குப் பெரும் துணையாக இருந்தன.

இருப்பினும், கட்டுப்பாடற்ற அரசாங்கத்தை நடத்த விரும்பும் அரசர், ஓரளவாவது நிதிக் கட்டுப்பாட்டதிகாரத்தைப் பெற்றிருக்கவேண்டியதன் உண்மை நிலையை உணர்ந்திருந்தார். மக்கள் செல்வாக்கோடு மரபுவழி அரசுரிமையையும் பெற்றிருந்தது எட்வர்டுக்குப் பேருதவியாக இருந்தது. தாம் விரும்பும் வகையில் பாராளுமன்றத்தை நடத்திச் செல்லாத வரையில் அல்லது பாராளுமன்றத்தைக் கூட்டாமலேயே பணத்தைத் திரட்டாத வரையில் இவரும் அரசியலமைப்பிற்குட்பட்ட லங்காஸ்டிரிய அரசரைப்போல்தான இருந்திருக்க வேண்டும். இவைகளில் முதல் வழியைப் பின்பற்ற அரசர்கள் இன்னும் பல ஆண்டுகள், காத்திருக்க வேண்டும். ஆனால், புதிய முடியாட்சி தொடக்க காலத்தின் போது இரண்டாவது வழியையே தெரிவு செய்துகொள்ள விரும்பியது. இந் நோக்கங்களுக்காகக் கட்டாயக் கடன்

திரட்டும் முறையை நான்காம் எட்வர்டு கண்டுபிடித்தார். அரசரோடு கொண்டிருந்த தொடர்பிற்கேற்பப் பெரும் செல்வந்தர்களிடமிருந்து இக்கட்டாயக் கடன் திரட்டப்பட்டது. அல்லது தீய விளைவுகளுக்கஞ்சிய செல்வர்கள் இக் கடனுதவியை யளித்தனர். இயல்பாகவே செல்வந்தர்கள் இக் கட்டாயக் கடன்களை வெறுத்தனர். இவை சட்டத்திற்கு முரணானவை என்பதும் தெளிவாகும். இருப்பினும் இவைகளில் ஓரளவு நியாயம் இருந்ததாகச் சிலர் கருதினர். இவைகளைக் கவனமாக ஒழுங்குபடுத்தினால் இக் காலத்திய நிதியமைச்சருக்கு இவைகள் பெரும் பயனுள்ளவைகளாக இருக்கும். செல்வந்தர்கள் மீது மட்டும் ஒவ்வா வரியைச் சுமத்தவில்லை. குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தின் செலவில் படைவீரர்களும் படைச்சாதனங்களும் திரட்டப்படும் வழக்கமிருந்தது; வறிய நிலையில் இருந்தவர்களை இது பெரிதும் பாதித்தது; தல நீதிமன்றங்களைப் பயன்படுத்தித் தண்டப் பணம் வசூலிக்கப்பட்டது. கடுமையற்ற, எளிதான, வரி திரட்டும் முறைகளும் இருந்தன. இவைகளைப் பயன்படுத்திக் கொள்ள எட்வர்டு தயங்கவில்லை. நேர்மையாக நடந்து கொண்ட வரையில் இவருடைய சொந்தத் தொழில் முயற்சிகளை ஒருவரும் எதிர்க்கவில்லை. இவருடைய நிலைக்கு முன்னேடியாக மூன்றாவது எட்வர்டு இருந்தார். யார்க்கிய அரசர்களின் வெளிநாட்டுக் கொள்கையை இவர் உருவாக்கினர். 1475-ல் பெரும் படையொன்றைத் திரட்டி ::பிரான்சின் மீது படையெடுத்தார். ஆனால், இவர் பதினாராம் லூயியைச் சந்தித்து 75,000 கிரவுன்களைப் பெற்றுக்கொண்டு போரிடாமல் இங்கிலாந்திற்குத் திரும்பினர்.

பெரும் செலவிற்குரிய இன்பங்களில் எட்வர்டு நாட்டம் கொண்டிருந்தார். இச் செலவிற்கான பணத்தைப் பொது மக்கள் சபையினர் அளிக்க மறுத்திருந்தால் பாராளுமன்றத்தைத் தவறாமல் கூட்டவேண்டிய நிலையில் அரசர் இருந்திருப்பார். ஆனால், பொதுமக்கள் சபை இப்படி எதையும் செய்யவில்லை. மாறாக, இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் மீது எடைமதிப்பின்பேரிலும் விலைமதிப்பின் பேரிலும் அரசரின் வாழ்நாள் முழுவதும் வரி விதித்துக்கொள்ளவும், கம்பெனியின் மீது உதவித்தொகையைத் திரட்டவும் பொதுமக்கள் சபை இசைவளித்ததோடு தேவையானபோதெல்லாம் கூடி அரசருக்குத் தாராளமாக நிதி அளித்தது. குழப்பத்திற்கும் உள்நாட்டுப் போருக்கும் அஞ்சிப் பொதுமக்கள் சபையினர் தம் நலன்களையும் கருத்தில்

கொள்ளாமல் நிதிஉதவி யளித்திருக்கவேண்டுமென நாம் ஊகிக்கலாம். லங்காஸ்டிரிய அதிகாரத்தை வலுவிழக்கச் செய்த தம் முன்னோர்களைப்போலச் சபையினர் விரைந் திணங்கிச் செயல்பட்டு வருங்காலத்தினருக்குப் புதிய இடர்களை உண்டாக்கினர்கள். 1478-லிருந்து 1483 வரையி லான ஐந்தாண்டுகளும் எட்வர்டு பாராளுமன்றத்தைக் கூட்டாமல் சட்டமீறிய வழிகளில் தொடர்ந்து பணம் திரட் டினர். இம் மாற்றம் அஞ்சத்தக்கதாக இருந்தாலும் அக் காலத்தில் வசித்தவர்கள் இதற்கு எவ்வித எதிர்ப்பும் தெரி விக்கவில்லை. நாடு உண்மையாகவே அயர்வுற்றிருந்திருக்க வேண்டும். ஏனெனில், நடுத்தர வகுப்பினர் தம் குரலைத் தாம் கேட்டுக் களைத்துப்போய் இருந்தனர். பாராளுமன்றம் கூட்டப்படாததால் ஆங்கிலேயரின் அரசியல் வாழ்க்கையில் புதிய பழக்கங்கள் தோன்றி மாசுபடுத்தின. யார்க்கிய அரசர்கள் நீதி, படை ஆகியவை சார்புடைய பல கொலைகளைச் செய்தும் போர்க்கைதிகளை இரக்கமின்றிக் கொன்றும் குவித் தார்கள். அரசெதிர்ப்புக் குற்றங்களுக்காகப் பலரைத் தண்டித்துத் தம் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண் டார்கள். இதனோடு இவைகள் நிற்கவில்லை. இங்கிலாந்தின் உயர்காவல் அலுவலருக்கு[1] விரிவான நீதி வழங்கும் அதிகாரங்களை எட்வர்டு அளித்தார். அரசெதிர்ப்புக் குற்றங்கள் பற்றிய உண்மையைச் சந்தடியின்றி எளிதாக ஆய்ந்து முடிவுசெய்ய இவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இவர் அரசரின் பகர ஆளாக அமர்த்தப்பெற்றார். சட்டங்கள், விதிகள், அவசரச் சட்டங்கள், ஒழுங்கு முறைகள் ஆகியவை நாட்டில் இருந்தபோதிலும் மேல்முறையீடு இன்றியும் இவர் முழு அதிகாரத்தோடு செயல்படலாம். இவரை விண்மீன் நீதிமன்றத்தின் முன்னோடியெனலாம். இத்தகைய முறை கேடான அதிகாரங்களைப் பயன்படுத்தியே லங்காஸ்டிரி யர்கள் கொல்லப்பட்டார்கள். நிதிச் சார்புடைய அல்லது தனிமுறையிலான கொலைகளிலும் எட்வர்டு கேவலமான சித்திரவதை முறையைப் பயன்படுத்தினர். இதற்குமுன் இதை எந்த ஆங்கில அரசரும் பயன்படுத்தவில்லையென்ற அவசர முடிவிற்கு வந்துவிடலாகாது. ஏனெனில், அரைகுறை யான நாகரிகமுடையவர்களிடம் இவ்வாறு கொடுமை செய்யும் பழக்கம் இருந்துவந்துள்ளது. குற்றவாளிகளிட மிருந்து உண்மையைத் தெரிந்துகொள்ள மிகக் கொடுமை யான முறைகள் நான்காம் எட்வர்டின் ஆட்சிக்காலம் வரையில்

[1] High Constable of England

பயன்படுத்தப்படவில்லை. இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் இங்கிலாந்தின் ஆட்சி முறையில் இது ஒரு சிறப்பான இடம் பெற்றிருந்ததைக் காணலாம்.

எட்வர்டின் ஆட்சிக் காலத்தில் அவருடைய அரசப் பதவிக்கும் முறைகளுக்கும் யார்க்கு மரபினரின் சிறந்த ஆதரவாளரான வார்விக் என்பவரிடமிருந்து அபாயம் ஏற்படும் நிலை இருந்தது. தற்காலத்தோடு இடைக்காலம் நடத்திய இறுதிப் போராட்டமாக ரோசாமலர்ப் போர்கள்[1] வருணிக்கப்பட்டன. இக் கருத்தை நாம் ஏற்பதாக இருந்தால் மக்களின் நிலையை அறிந்துகொள்வது கடினமாக இருக்கும். லங்காஸ்டிரியர் இடைக்காலத்தையும் யார்க்கியர் தற்கால வாழ்க்கையையும் பிரதிபலித்தனர். ஹென்றியின் சார்பில் நிலமானியதார்களையும் எட்வர்டின் தரப்பில் வணிகர்களையும் வேளாண்மைக் குடிகளையும் காணமுடிந்தது. ஆயினும் இடைக்கால நிலமானியப் பெருங்குடி மக்கள் யார்க்கிய அரசரை அரியணையில் அமர்த்தினர்கள். பதவி நீக்கப்பட்ட குடும்பத்தினருக்காக வார்விக் கிளர்ச்சி செய்தபொழுது இவர் தம் மனப்போக்கில் சென்று தம்மையே அழித்துக் கொண்டாரெனலாம். இருப்பினும், இடைக்காலத்திய பெரு மக்களுக்குரிய பெறலரும் குணமும் சிறந்த வீரமும் வார்விக் கோமகனுக்கு இருந்தனவாவென்று சிலர் ஐயப்பட்டனர். இவர் யார்க்மரபினரோடு கொண்டிருந்த தொடர்பை மடத்தனமான ஈடுபாடு என்று கொள்ள முடியாது. தம் சொந்த விவகாரங்களைக் கவனித்துக்கொள்ள இவருக்குப் போதிய அவகாசம் இருந்தது. அரியணைக்கான இவரது போராட்டத்தின் போது செயல்படுத்தப்படாமல் இருந்த பாராளுமன்றத்தின் தண்டனையொன்று இவருக்கு ஓர் இடராக இருந்தது. எட்வர்டின் காலத்தில் இவர் வார்விக், சாலிஸ்பரி கோமகனைக இருந்ததோடல்லாமல் இங்கிலாந்தின் மீதுயர் அரண்மனை அலுவலராகவும், தலைமை அட்மிரலாகவும், கலேயின் காப்டனாகவும், அயர்லாந்தின், லெப்டனென்டாகவும் இருந்து ஆண்டிற்கு 75,000 மார்க்குகள் ஊதியமும் பெற்றுவந்தார். எட்வர்டுக்கும் தமக்குமாகச் சில திட்டங்களை வகுத்துக்கொண்டு பேரூக்கத்தோடும் அரசத் தந்திரத்தோடும் இவர் செயல்பட்டார். இவர் விருப்பப்படி எதுவும் நடக்காத பொழுதுதான் தொல்லைகள் எழத்தொடங்கின. இளம் அரசரைத் தம் விருப்பம்போல் நடத்திச் செல்லலாமென இவர் நினைத்தார். ஆனால், இவர் நினைத்தபடியெதுவும் நடக்க

[1] Wars of Roses

வில்லை. தம் ஆட்சியின் தொடக்கத்தில் எட்வர்டு நெவில்லி குடும்பத்தினரின் சேவைகளைப் பாராட்டினர். இக் குடும்பத்தினரும் இதை விரும்பி வரவேற்றனர். வார்விக்கின் சகோதரர்களில் ஒருவரை அரசர் நார்த்தம்பர்லாந்தின் கோமகனாகவும், மற்றொருவரை யார்க்கின் அதிமேற்றிராணியாராகவும் அமர்த்தினர். எல்லாமே இக் குடும்பத்தினரின் வசதிக்கேற்ப நடந்ததெனலாம். ஆனால், இளம் அரசர் தொடக்கத்திலிருந்தே தற்பெருமை பாராட்டுவதையும் தம் விருப்பப்படி செயல்பட விரும்பாததையும் இவர் தெளிவாக அறிந்திருந்தார். மேலும், கிளவ்செஸ்டரின் கோமகனாகிய ரிச்சர்டும் கிளாரென்சின் கோமகனாகிய ஜார்ஜும் இவரது சகோதரர்களாக இருந்தனர். இவர்களில் முன் குறிப்பிடப்பட்டவர் பெருங் குற்றங்களுக்காளானவர். பின் குறிப்பிடப்பட்டவரைப்பற்றிச் சிறப்பாகச் சொல்வதற்கொன்றுமில்லை. இவர்களில் ஒருவரைத் தெரிவு செய்வதில் எட்வர்டிற்குப் பெரும் நன்மை பிறக்கப்போவதில்லை. இச் சூழ்நிலைகளின் கீழ், வெளி எதிர்ப்புகளுக்கெதிரான ஓர் அமைப்பின் தேவையை உணர்த்தும் அளவிற்கு அரசவை அமையவில்லை. ∴பிரஞ்சு நாட்டின் அரசகுமாரியை எட்வர்டுக்கு மணமுடிக்க வார்விக் கோமகன் (1464-ல்) பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு நிலையான அமைதியைத் தேடிக்கொள்ள விரும்பினர். இத் திட்டத்தில் அரசர் நம்பிக்கை வைக்கவில்லையா அல்லது வார்விக்கின் மகளை மணந்து கொள்ளும் மாற்றுத் திட்டத்தில் ஐயம் கொண்டாரா என்பதும் தெளிவாகவில்லை. இத்தகைய திட்டங்களில் அரசர் அக்கறை கொள்ளாமல் இருந்திருக்கலாம். எவ்வாறாயினும், தாம் எலிசபெத் உட்வில்லி[1]யை மணந்து கொள்ளவிருக்கும் திட்டத்தை இவர் விரைந்து தெளிவுபடுத்தியது பலரின் பாராட்டுதலுக்குரியதாயிற்று. ஆனால், இத் திருமண ஏற்பாட்டைப் பெருங்குடியினர் பலர் கண்டனம் செய்தார்கள். எட்வர்டு நுண்ணுணர்வுகளுக்குட்பட்டது மகிழ்ச்சிக்குரியதாயினும், இத்தகைய உணர்ச்சிகளைத் தம் மனைவியின் உறவினரிடம் இவர் காட்டியதற்கு ஈடான முன்னிகழ்வுகள் இல்லை. அடுத்துவந்த இரண்டாண்டுகளில் தம் மனைவியின் உறவினர்களுக்குப் பதவிகளையும் பட்டங்களையும் தேடித்தருவதிலும் ஆதாயமான திருமண வினைகளுக்கு ஏற்பாடு செய்வதிலும் இவர் ஈடுபட்டார்.

பதினைந்தாம் நூற்றாண்டில் அரசரின் ஆதரவை இழந்து விட்ட ஆலோசகர் ஒருவர் தம் தலைவருக்கெதிராக மக்களிடம்

[1] Elizabeth Woodville

முறையிடும் நிலையில் இல்லை. உலக ஆசைகளை வெறுத்துப் பொதுவாழ்க்கையிலிருந்து விலகித் தனித்திருக்கவும் எவரும் விரும்பியதாகத் தெரியவில்லை. ஒருவர் தம் எதிரியின் செல்வாக்கைக் குலைக்கத் திட்டமிடலாம் அல்லது ஆட்சி முறையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யலாம். எந்தத் துரோகச் செயலுக்கும் எப்பொழுதும் தயாராக இருந்தவரும், அடுத்துப் பட்டத்திற்குரியவருமாகிய கிளாரென்சின் ஜார்ஜ் என்பவரின் உதவியை வார்விக் நாடினார். ரோகின்[1] என்பவரின் தலைமையில் வடக்கே தோன்றிய கிளர்ச்சி ஒன்றைப் பயன் படுத்திக்கொண்டு 1469-ல் இவ் விருவரும் தம் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முற்பட்டனர். ஒரு வகுப்பினரின் மனக்குறைகளை வெளிப்படுத்தும் நோக்கத்தோடு குடிமகன் ஒருவன் கிளர்ச்சியில் இறங்குவது பழைய பயனுள்ள தந்திரமாக இருந்தது. ரோகினுக்கு உதவியாக வந்த 60,000 பேர்களும் வார்விக்கோடு சேர்ந்துகொண்டு அரசப்படைகளைத் தோற்கடித்தனர். இதனால் தனிப்பட்ட அரசர், ஜார்ஜ் நெவில்லி என்பவரால் சிறைப்பிடிக்கப்பட்டார். ஆனால், எதிரிகள் எவ்விதமான தீவிர நடவடிக்கையையும் எடுக்க வில்லை. ஏனெனில், கிளாரென்சு என்பவரை அரியணையில் அமர்த்துவதைவிட மற்றொரு மாற்று ஏற்பாடு வார்விக்கின் மனத்தில் தோன்றியிருக்கலாம். அரசர் விடுதலை செய்யப் பட்டார். ஓர் அவசர உடன்பாடு காணப்பட்டது; அல்லது இப்படி ஓர் உடன்பாடு ஏற்பட்டதென இரு கட்சியினரும் நம்பினர். தயார் செய்துகொள்ளச் சிறிது அவகாசம் பெற்ற வுடன் அடுத்த ஆண்டில் வார்விக் ::பிரான்சிற்கு ஓடி மார்கரெட் அரசியாரின் ஆதரவாளரெனத் தம்மை அறிவித்துக்கொண்டு லங்காஸ்டிரியர்களுக்காகப் போரிடத் தயாரானார். இதனால் கிளாரென்சுக்கு என்ன நன்மை கிட்டியிருக்குமென்பது தெளிவாகவில்லை. வார்விக்கின் திட்டம் தெளிவானது. யார்க்கியர்களுக்குள் ஒரு பொம்மை அரசர் கிடைக்கவில்லை யென்றால் அப்படிப்பட்ட ஒருவரை லங்காஸ்டிரியர்களுக் குள்ளிலிருந்து பெறலாமென்பது இவர் கருத்தாகும்.

லங்காஸ்டிரியரின் வெற்றி

இக் குழப்பமான காலங்களில் இங்கிலாந்தில் இருந்த ஒவ்வொருவரும் புரட்சியோடு மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டு இதன் விளைவுகளைத் தவிர்க்க முடியாதவைகளாக ஏற்றுக்கொண்டது தெளிவாகிறது. எட்வர்டின் ஆதர

[1] Rohin

வாளர்கள் சிதறியோடிவிட்டார்கள். எட்வர்டும் நாட்டைவிட்டு வெளியேறினர். வெற்றிபெற்ற லங்காஸ்டிரியர்கள் லண்டனைக் கைப்பற்றி அங்கேயே தங்கிவிட்டனர். வயதான ஆரும் ஹென்றியை விடுதலை செய்து அரசரென அறிவித்தனர். இவரை அரசராக ஏற்றுக்கொள்ள மக்கள் தயங்கினர்கள். ஆனால், ஆரும் ஹென்றியின் அல்லது நான்காம் எட்வர்டின் ஆட்சி உரிமைக்காக உயிரைக் கொடுக்கவும் மக்கள் பொறுமையோடு காத்திருந்தார்கள். வெளியேற்றப்பட்ட அரசர் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு இங்கிலாந்திற்குத் திரும்ப முடிவு செய்தபொழுது நெவில்லிகள் படைகளைக் கலைத்து விட்டுத் தாம் பெற்ற வெற்றியின் பயனை அனுபவித்தனர். இங்கிலாந்தில் வந்திறங்கும் இவருடைய திட்டம் பயனுள்ளதாகக் கருதப்பட்டது. கோமகனுக்குரிய தம் ஆட்சிப்பகுதியைத் திரும்பப்பெற, தாம் படையெடுத்து வந்திருப்பதாகவும் இங்கிலாந்தின் அரசுரிமையைப் பெறத் தாம் வரவில்லை யெனவும் இவர் சொல்லிக் கொண்டார். இப்படிக் கூறிக் கொண்டு தாம் இழந்த அரியணையைப் பெறுவதற்காக இவர் தலைநகரை நோக்கிப் படையோடு முன்னேறினர். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட போராட்டம் உள்நாட்டுப்போரின் ஒரு சிறந்த அம்சமாகும். ஏனெனில், இதன் ஒவ்வொரு நிலையும் துரோகச் செயல்களோடு தொடர்பு கொண்டிருந்தது. எட்வர்டின் முன்னேற்றத்தை மான்டேகு பிரபுவால் தடுத்து நிறுத்த முடியவில்லை. தாக்குதலில் தாம் கலந்து கொள்ளாத வகையில் கிளாரென்சு வார்விக்கை வேறு பக்கம் திருப்பி, பின்னர் வெளிப்படையாக எட்வர்டின் பக்கம் சேர்ந்து கொண்டார். பார்னெட் (Barnet) போரில் வார்விக் கொல்லப் பட்டதும் மறுபடியும் அரசுரிமை யார்க் மரபினரைச் சென்றடைந்தது. டுவிக்ஸ்பரி[1] போரில் மார்கரெட்டின் நம்பிக்கை இறுதியாக மறைந்தது. சாமர்செட் கோமகனை அரசியார் இழந்ததோடு பலர் இவரோடு ஓடி மறைந்தனர்.

1471-ல் எட்வர்டு உறுதியாக அரியணையில் அமர்த்தப் பட்டார். மக்களிடமிருந்து வரிதிரட்டவும் எதிரிகளைக் கொன்று குவிக்கவும் முழு உரிமை பெற்றிருந்தார். இறக்கும் வரையில் (1483) நெறிகெட்ட சிற்றின்ப வேட்கையில் இவர் ஈடுபட்டிருந்தார். தமக்குத் தேவையானவற்றைப் பெற்று இவர் எல்லா வசதிகளுடனும் செல்வாக்குடனும் வாழ்ந்து வந்தார். இரு மரபினருக்குமிடையில் ஒரே போட்டியாளராக மார்கரெட்

[1] Tewkesbury

மியோர்ஃபர்ட்[1] என்னும் சிறுவன் ஒருவன் இருந்தான். இவன் கான்டின் ஜான்[2] என்பவரின் பேரனுவான். இவன் சிறு வயதினனாக இருந்ததால் இவனைப்பற்றிய அச்ச உணர்வு அரசருக்கு ஏற்படவில்லை. மேலும், 1470-ல் எட்வர்டின் மனைவியார் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார். இதனால் அரசுரிமையில் தகராறு ஏற்படாதெனப் பலர் கருதினர். 1478-ல் அரசத் துரோகக் குற்றத்திற்காகக் கிளாரென்சு அரசக் குடும்பத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு 1470-ல் நடந்த கிளர்ச்சியில் தொடர்புப்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். தண்டனை நிறைவேற்றப்படவில்லையெனினும், கிளாரென்சு எப்படியோ இறந்து போனார். அரசவையின் எல்லாப் பிரிவினரும் இவருடைய மறைவை வரவேற்றனர். இறக்கும் பொழுது எட்வர்டு அமைதியாக இறந்தார் எனலாம். இவருடைய ஆட்சிக்காலத்தில் இவருக்குப் பெருந்துணையாக இருந்த கிளவ்செஸ்டர் கோமகனாகிய ரிச்சர்டு என்பவரிடமிருந்து இவருடைய குடும்பத்திற்கு அழிவு ஏற்படலாமென்பதை உணர்ந்திருந்தார்.

மூன்றாம் ரிச்சர்டு எனப் பெயர்பெற்ற இவர், இரக்கமற்ற அரக்கனாக இருந்து பெரும் கொடுமைகளைச் செய்து வந்தார். இவர் அரசப் பதவியைக் கவர்ந்தார் என்பதும் உண்மைதான். மரபுவழி அரசுரிமைக் கோட்பாட்டை உறுதிப்படுத்த இவர் எட்வர்டு எலிசபெத் திருமணத்தைச் சட்ட முறைன் என்று கூறினர். ஆனாலும், ஆங்கில அரசர்களில் பலர் ஏதோ ஒரு வகையில் அரசுரிமையைக் கவர்ந்து கொண்டவர்களாக இருந்திருக்கின்றனர். ஏனெனில், முதல் மகவுரிமை விதிகள், நெறிமுறை விதிகளைப்போல் ஒரேமாதிரியாகப் பின்பற்றப்படவில்லை. இருப்பினும், ரிச்சர்டு ஒரு நெறிகெட்ட கொலைகாரர் என்பது உண்மையாகும். அரசப் பதவியை எய்துவதற்கு ஏதிலாப் பல உயிர்களை இவர் குடித்திருக்கிறார். டிவிக்ஸ்பரி போருக்குப்பின் நடந்த வன்கொலைகளில் இவருக்குப் பெரும் பங்குண்டு. சிறையில் இருந்த ஆறாம் ஹென்றியின் மரணத்திற்கும் இவரே பெருமளவில் பொறுப்புடையவர். இவருடைய உடன்பிறந்தானாகிய கிளாரென்சின் மரணத்திற்கும் இவரே காரணமாகவும் இருக்கலாம். தம் மருமக்கள் இருவரின் காப்பாளர்களின் கொலைக்கும் இவர்தாம் காரணம். இவர்களுக்குப் பரிவுணர்வு காட்டிய பெருங்குடியினரையும் ரிச்சர்டு கொன்றார். இவ் விரு சிறுவர்களையும்

[1] Margaret Beaufort

[2] John of Gaunt

வன்கொலை செய்யுமாறு கட்டளையிட்டவரும் இவர்தாம் என்பதில் ஐயமில்லை. மனைவியைத் துன்புறுத்தி அவர் உயிரை விரைந்து பறித்தவரும் இவரே. மனைவியைப் புதைக்குமுன் இன்னொருத்தியை மணக்கவும் இவர் திட்டமிட்டார். இவை களெல்லாம் பெருங்கொடுமைகளாகத் தோன்றலாமெனினும், வரலாற்றில் இவரைப்போல்ப் பலர் இரத்தம் சிந்திக் கொடுமைகள் பல புரிந்து இவைகளைத் தம் வெற்றியால் மறைத்துவிட்டனரென்பதை எவரும் மறுக்க இயலாது. இவருடைய மிகக் கடினமான நிலையைக் கருத்தில்கொண்டு இவரது செயல்களை மதிப்பீடு செய்வதும் கடினமாகும். இயல்பான ஒழுக்க நெறிமுறைக்கு இவர் கட்டுப்பட்டவரல்லர். ஆனால், தீய உணர்வுகளுக்குள்ளாகும் சந்தர்ப்பவாதிகளின் நிலையும் இப்படிப்பட்டதேயாகும். இங்கிலாந்தை மூன்றாவது ரிச்சர்டு ஆளவேண்டுமெனும் நிலை இருந்திருக்குமாயின் இங்கிலாந்தில் அமைதி நிலைநாட்டப்பட்டிருக்கும். ஏனெனில், அரசுரிமைக்குப் போராடிய போலிகள் பலர் ஒழிந்திருப்பர். மார்கரெட் பியோர்ஃபர்ட்டின் மகனைக் கொன்றதோடு இன்னொரு கொலையையும் ரிச்சர்டு செய்திருந்தாலும், இவருடைய ஆட்சிக் காலத்தில் பல நன்மைகளைச் செய்து ஒற்றுமையை வளர்த்திருந்தார்.

வரலாற்றில் தோன்றி மறைந்த அரசர்கள் பலருள் ரிச்சர்டு எவ்வகையிலும் அரசப் பதவிக்குத் தகுதிபெற்றவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எட்வர்டின் சிறந்த பணிகள் எனக் குறிப்பிடப்படும் ஆட்சிச் செயல்களுக்கு ரிச்சர்டு உதவியும் அறிவுரை கூறியும் வந்தாரென்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. யார்க்கிய அரசர்களின் காலத்தில் அமைதியை நிலைநாட்டும் பணியில் நாடு முன்னேற்றம் காணவில்லை. 1473-க்கும் 1483-க்கும் இடையில் எட்வர்டு சிற்றின்பங்களில் ஈடுபட்டிருந்தபொழுதும் அரசாங்கப் பொறுப்பு ரிச்சர்டிடம் இருந்தபொழுதும் அமைதி மேலும் கெட்டதெனலாம். 1475-ல் எட்வர்டு ஃபிரான்சோடு செய்துகொண்ட போர் நிறுத்த உடன்பாடு, ரிச்சர்டின் கருத்துகளுக்கு எதிராகச் செய்யப்பட்ட ஒரு கேவலமான ஏற்பாடாகும். 1482-ல் ரிச்சர்டு ஸ்காட்லாண்டின் மீது படையெடுத்துச் சென்ற பொழுது மிக விரிவாகச் செய்திப்போக்குவரத்து ஏற்பாட்டை இங்கிலாந்தின் அஞ்சல் முறைக்கான முதல் முயற்சியாகக் கொள்ளலாம். இந்நிறுவனம் இக்காலத்தில் மிகச் சிறப்பான முறையில் வளர்ச்சியடைந்துள்ளதைத் தொடக்கிவைத்த பெருமை கிளவ்செஸ்டர் கோமகனாகிய ரிச்சர்டையே சாரும்.

அரசரின் மரணத்திற்குப்பின் ரிச்சர்டு கொடுங்குற்றங்கள் பலவற்றைச் செய்தார். ஆனல், இவர் குற்றமற்றவரென மட்டும் காட்டிக்கொண்டிருந்தால் இவர் ஆட்சி வெற்றிகரமான தாக அமைந்திருக்கும். அரியணையேறும் அளவிற்கு இவருக்குச் செல்வாக்கிருந்ததோடு, அரசராக வேண்டுமென விண்ணப் பிக்கும் அளவிற்குப் பாராளுமன்றத்தில் இவருக்கு ஆதரவாக ஒரு கட்சியையும் அமைத்துக்கொண்டார். இவருடைய சகோதரரின் ஆட்சிக் காலத்திலேயே இவர் மக்களின் நல்லெண்ணத்தைத் தேடிக்கொண்டார். இந் நல்லெண்ணம் இவருக்குப் பெரும் உதவியாக இருந்தது. விரைந்து செயல் பட்டு ஆட்சியைக் கைப்பற்றியதும் இவருடைய திறமைக் கோர் எடுத்துக்காட்டாக இருந்தது. வாய்ப்புகளை விரைந் தேற்றுச் செயல்படுத்தும் அரசியல் திறமையை இவர் பெற் றிருந்தார். ஒத்திணைந்து வராத பகைவர்கள் யார் என்பதை ரிச்சர்டு உடனடியாகக் கண்டுகொண்டார். அரசியின் குடும் பத்தினராகிய உட்வில்லிகள் இணங்க மறுத்ததை அறிந்து அவர்களைக் கடுமையாகத் தாக்கி ஒழித்தார். அவையில் வலிமைமிக்க பிரபுவாக இருந்த ஹேஸ்டிங்ஸ் என்பவரின் ஆதரவை ஒருகாப்பரசிற்கு இவரால் பெற முடிந்தது. ஆனல், ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்வதற்கு அவ் வாதரவு மறுக்கப் பட்டது. இவருடைய ஆதரவால் அவையில் நிலைபெற்றவுடன் ரிச்சர்டு இவரைச் சிறையில் தள்ளினர். பக்கிங்ஹாம் கோமகனின் செல்வாக்கும் செல்வமும் ரிச்சர்டுக்கு ஆத வளித்தன. இவரும் ரிச்சர்டுக்கு உடந்தையாக இருந்தார். இவருடைய உதவியால் லண்டன் நகரை வென்று இளவரசரை விலக்கிவிட்டு ரிச்சர்டு தம்மை அரசரென அறிவித்துக் கொண்டார்.

மூன்றும் ரிச்சர்டின் அரசாங்கம்

இரண்டாண்டுகளே ரிச்சர்டு ஆட்சி செய்தார். இதில் பெரும்பகுதிக் காலத்தை அரசுரிமையைத் தக்கவைத்துக் கொள்ளும் போராட்டத்தில் ஈடுபடுத்தினர். இவர் அரசரான மூன்று மாதங்களுக்குள், முதல்நிலைத் திருச்சபையினர், நான்காம் எட்வர்டின் மனைவி ஆகியோரின் துணையோடு பக்கிங்ஹாம் கோமகன் புரட்சி செய்தார். எட்மண்டு டியூடர் மார்கரெட் பியோர்பர்ட் ஆகியவர்களின் மகனுகிய ரிச் மாண்டின் ஹென்றியின் படையெடுப்பிற்கு உதவப் பேச்சு வார்த்தைகள் நடந்தன; பெரும் படைகளும் திரட்டப்பட்டன. இக்கலகம் ஒடுக்கப்பட்டது. ஆனல், ஓராண்டிற்குள் இன்னெரு

கலகத்திற்கான அறிகுறிகள் தென்பட்டன. இப் புரட்சி ரிச்சர்டின் தோல்வியிலும் மரணத்திலும் முடிவுற்றது. அரசாங் கத்தைப்பற்றிச் சிந்திக்க நேரமில்லை என்பதை அரசர் அறிந்துகொண்டார். ஆயினும், இவருடைய குறுகியகால ஆட்சியில் இவர் இயற்றிய சட்டங்களின் சிறப்பைக் குறைத் துக்கூற முடியாது. இவருடைய முன்னோர்களைவிட இவர் புதிய முடியாட்சிக் கருத்தை மிகக் கெட்டியாகப் பற்றிக் கொண்டார். இப் புதிய கருத்தை டியூடர் அரசர்கள் செயல் படுத்தினர்கள். இக் கருத்தின்படி புதிய முடியாட்சி, அடக்கு முறையற்ற வல்லாட்சியாகவும், மக்களின் சொத்துகளைப் பேணுவதாகவும், சொந்த அலுவல்களில் தலையிடாததாகவும், சிந்திக்கும் பணியிலிருந்து மக்களைப் பாதுகாப்பதாகவும் இருக்குமெனக் கருதப்பட்டது. வணிகத்தை முறைப்படுத்துவ தில் ரிச்சர்டின் காலத்திய பாராளுமன்றம் ஈடுபட்டிருந்தது. இடைக்காலத்திய அரசியல் அறிஞர்களுக்குப் பயனுள்ள முறையில் பல வணிகப் பாதுகாப்புச் சட்டங்களை இச் சபை நிறைவேற்றியது. வெளிநாடுகளில் அரசியல் தூதுவர்களாக அமர்த்தப்பட்டவர்களுக்கு இது ஒப்புதல் அளித்தது. அரசர் செய்ய விரும்பியதனைத்தையும் செய்து முடிக்கும் வகையில் பாராளுமன்றம் செயல்பட்டது. அடுத்த நூற்றாண்டில் வர விருக்கும் பாராளுமன்றங்களைப்போல் இச் சபை அரசருக்கு அடங்கிச் செயல்பட்டது. அரசரின் தூண்டுதலின் பேரில் மிகச் சிறந்த சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவைகளில் இரண்டு நிலச்சட்டங்கள் பற்றியதாக இருந்தன. இவைகளில் ஒன்று, நிலஉடைமை உரிமையை எளிதாக்கியது. இன் னொன்று, உள்நாட்டுக் கலகத்தின்போது பரவலாகக் காணப் பட்ட இரகசிய உரிமை மாற்றங்களை முடிவிற்குக் கொண்டு வந்தது. மூன்றாவது சட்டம், பணிச் சின்னங்கள் பற்றிய தாகும். பெருங்குடி மக்கள் வைத்துப் பேணி வந்த படைக் கலம் தரித்த வீரர்களின் பெரிய அமைப்புகளைக் குறைக்கும் நோக்கமுடையதாகும். அக் காலத்தில் அமைதிக்கு இவை பெரும் இடராக இருந்தன. ஃபிரான்சோடும் ஸ்காட்லாந் தோடும் அமைதியான உறவுமுறைகளைப் பேணிக்கொள்ள அரசர் முற்பட்டார். கப்பற் போக்குவரத்து வளர்ச்சியில் அரசர் பெரிதும் நாட்டம் கொண்டிருந்தார். இவைகளுக் கெல்லாம் மேலாகக் கட்டாயக் கடன்களைத் திரட்டுவதில்லை யென இவர் அறிவித்தது மிகச் சிறந்த நடவடிக்கையாகும். சொந்தக் காரியங்களைச் செய்துகொள்ள அமைதியும் பாதுகாப்பும் அளிக்கும் நோக்கத்தோடும், வணிகத்தை வளர்க்கவும், அமைதியற்ற நிலையை ஒழிக்கவும் இக்கால

நிலைக்கேற்பப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெரும் செலவில் உரிமையைப் பேணிக்கொள்ளமுடியும் என்பதை இங்கிலாந்து உணர்ந்து கொண்டிருந்தபொழுது இதற்காதர வாகப் புதிய முடியரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஆனால், ரிச்சர்டின் திறமைகள் எப்படி இருந்தபோதிலும், இவருடைய நுண்ணறிவாற்றல், ஊக்கம் ஆகியவை எப்படி யிருப்பினும் அமைதியான ஆட்சியை அனுபவிக்கத் தவிர்க்க முடியாத தடையொன்று இருந்தது. பகைவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் அனைவரையும் இவர் கொன்றுவிட்டார். ஆனால், இவருக்கென ஒரு நண்பரைப் பெற இவர் மறந்து விட்டார். மற்றவர்களின் மிகப் பயங்கரமான குற்றங்களைத் துணிந்து மெய்ப்பிக்கவும் அல்லது மறைக்கவும் வரலாற் றாசிரியர்கள் முயலும்போது இவர்மீது மட்டும் குறிப்பாக ஏன் நிலையான பெரும்பழியைச் சுமத்தவேண்டுமென்பதன் உண்மையை ஓர் ஆசிரியர் விளக்கியுள்ளார். ஆரும் ஹென்றி யையும், அவருடைய இளம் மகனையும் ரிச்சர்டு கொன்றதால் லங்காஸ்டிரிய அரச மரபினர் எல்லோருமே இவரை வெறுத் தனர். கிளாரென்சையும் இரண்டு அரசக் குமாரர்களையும் கொலை செய்ததால் இவர் யார்க் மரபினரின் பகையையும் தேடிக்கொண்டார். அரசியாரின் உறவினர்களும் இவரை இரத்த வெறி பிடித்தவரென்று கருதினர்கள். ஸ்டேன்லி பிரபுவின்[1] தலைமையின் கீழிருந்த மற்றப் பிரபுக்கள் அரசரால் தம் சொந்த நிலைக்கே இடரேற்படலாமென அஞ்சினர். இதேபோல் வாட்பலத்தாலன்றித் தம் நிலையைக் காத்துக் கொள்ள இயலாதென அரசரும் நினைத்தார். ரிச்சர்டைப் புகழ்ந்து பாராட்டுபவர் எவருமில்லை. 1484-ல் ரிச்மாண்டின் ஹென்றியின் படையெடுப்புப்பற்றிய வதந்திகள் இங்கி லாந்தில் நிலவின. அடுத்த ஆண்டில் கோடைக் காலத்தில் ஒரு சிறு படையுடன் ஹென்றி வந்திறங்கி முன்னேறினர். எட்மண்டு டியூடரின் பெயரும் கான்டின் ஜான் மரபில் வந்தமையால் லங்காஸ்டிரியர்களின் மரபும் மக்களிடையே பெரும் உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கின. ரிச்சர்டு துணி விழந்துவிடவில்லை. ஆனாலும், ஒரு பெரிய தவறு செய்த குற்றத்தை உணர்ந்திருந்தது இவருடைய முடிவை விரைவு படுத்தியதெனலாம். ஸ்டேன்லி பிரபு இன்னும் அரசரையே பற்றிநின்றார். இருப்பினும், அரசர் எவரையும் எளிதாக நம்பும் இயல்பினரல்லராதலால் அக் குடும்பத்தின் இளைய மகன் ஒருவனை அடைக்கலமாக வைத்துக்கொண்டார். போர்

[1] Stanely Lord.

மூண்டபொழுது ஸ்டேன்லி பிரபு ஹென்றியோடு சேர்ந்து கொண்டார்; ரிச்சர்டும் போரில் கொல்லப்பட்டார்; இவருடைய படைகள் சிதறியோடின. படையெடுப்பாளராகிய ஹென்றி ஏழாம் ஹென்றியாக ஏற்றுக்கொள்ளப்படும் பொருட்டு லண்டனில் நுழைந்தார்.

உள்நாட்டுப் போரின் முடிவு

ரோசாமலர்ப் போர்களே பாஸ்வொர்த் போர், முடிவிற்குக் கொண்டு வந்தது. லங்காஸ்டிரர்களின் உரிமையால் ஏழாம் ஹென்றி அரசுரிமை பெற்று அரியணையேறினர். நான்காம் எட்வர்டின் மகளே மணந்துகொண்டு யார்க்கியர்களின் ஆதரவோடு அரியணையை உறுதிப்படுத்திக்கொண்டார். இறுதியாகச் சிவப்பு ரோசாவும் வெள்ளை ரோசாவும் இணைந்தன. இவைகளே அணிந்திருந்தவர்களில் முதன்மையானவர்கள் இறந்தபொழுது அமைதிக்கு இது இன்னும் ஏற்புடையதாயிற்று. ஹென்றி கலகங்களைச் சமாளிக்க வேண்டியிருந்ததெனினும், புரட்சிகளைச் சந்திக்கவில்லை. இவருடைய ஆட்சிக் காலத்தின்போது அல்லது இவருக்குப் பின் வந்தவரின் ஆட்சிக்கால முற்பகுதியில் ஆபத்தானவர்கள் அனைவரும் துணிச்சலோடு அகற்றப்பட்டனர். இவ்வாறு உள்நாட்டுப்போர் இறுதியாக முடிவிற்கு வருகையில் இருபதாண்டுகளில் குழப்பத்தில் உருவாகிக்கொண்டிருந்த சமூக வாழ்க்கை, அரசாங்கம் ஆகியவைபற்றிய புதிய கருத்துகள் முழுமையாக வளர்ச்சியடைய இடமிருந்தது. புதிய சக்திகளை முன்னே பிடித்துத் தள்ளக்கூடிய புதிய காலம் ஒன்று தோன்றியதெனினும், புதிய பிணைப்புகள் இவைகளைப் பின்னே தள்ளின. ஆரும் ஹென்றியோடும் அரசர்களைப் படைக்கும் வார்விக்கோடும் வாழ்ந்த ஆங்கிலேயர்கள் இருண்ட காலத்தில் இருப்பதாகக் கருதினர்கள். எட்டாம் ஹென்றியையும் உல்சியையும் சந்திக்கும்பொழுது நாம் இக்காலத்திற்கு வந்து விடுகிறோம்.

பதினைந்தாம் நூற்றாண்டின் இங்கிலாந்தின் நிலைமை

ஆங்கிலச் சமூகத்தில் மாறுதல்கள் ஏற்படக்கூடிய காலமாக இந் நூற்றாண்டு இருந்தது. ஆங்கிலேயரின் வரலாற்றில் இந்த ரோசாமலர்ப் போர்களின் காலத்தைப் போல் உயிர்ப்பற்ற, துயரார்ந்த, பொருளற்ற, ஆக்கமற்ற வெறுமையான ஒரு காலம் இருந்ததில்லை யெனலாம். அரசியல் வாழ்க்கையின் பழைய தூண்கள் நலிவுற்றன;

வலிமையின் பழைய வளங்கள் வற்றிப்போயின; பழைய பிணைப்புகள் தேய்ந்து முறிவுறும் நிலையை அடைந்தன. ஒருவன் இன்னொருவனுக்குப் பற்றுறுதியோடு இருந்தாலும், மக்கள் திருச்சபையைப் பற்றிநின்றாலும் இடைக்காலத்திய பண்புகள் சமூகங்களின் அரண்களாக விளங்கின. இப் பண்புகள் தோன்றியிராவிட்டால் கொடுமைக்கும் வெறிக்கும் பாதுகாப்பு இல்லாமல் போர் இருக்கக்கூடும். 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் திருச்சபையின் நிலை ஒளிவிற்கு ஒழுக்கச் சிதைவிற்குக் காரணமாகவும், அறிகுறியாகவும் இருந்தது. திருச்சபைமுறை, போப்பாண்டவரின் வரிவிதிப்பு, நீதி வழங்குவதில் ஊழல், குருமார்கள், மடத்தலைவர்கள் ஆகியோரின் ஆடம்பர வாழ்க்கை போன்றவைகளை மக்கள் கடுமையாகக் குறைகூறி வந்தார்கள். சாசரும் விக்லிப்பும் திருச்சபையை வன்மையாகத் தாக்கினார்கள். ஆனால், இந்த நூற்றாண்டில் எல்லாத் தீமைகளும் பெருகியிருந்தன. இவைகளைப் பொறுத்துக்கொள்ள முடியாத அளவிற்கு மனிதனின் பொறை, ஏளனத்தோடு கலந்து வெளிப்பட்டது. ரோமிற்குச் செலுத்திய வரிகள் மிகக் குறைவாகத்தான் இருந்தன. ஆனால், மறைமுக வரிவிதிப்புப்பற்றிய அவதூறு, எப்பொழுதும் இருந்ததைவிட இப்பொழுது அதிகமாக இருந்தது. கழுவாய்ச் சீட்டுகள் வெளிப்படையாய் விற்கப்பட்டன. இங்கிலாந்தின் திருக்கோயில் மானியங்களில் சட்டத்திற்கு மாறுக இத்தாலிய துணிச்சல் வீரர்கள் வந்து இருந்துகொண்டனர். இவர்களில் பெரும்பாலோர் மன நோயாளிகளாகவும், நெறி தவறியவர்களாகவும் இருந்தார்கள். இங்கிலாந்தின் திருச்சபையினரும் குணத்தால் இவர்களிலிருந்து மாறுபட்டு இருக்கவில்லை. திருச்சபை மானிய விற்பனையில் பேரம் செய்யவும், பருவமுதல் விளைவுக் காணிக்கையை வசூலிக்கவும் மேற்றிராணியார்களுக்கு உரிமை உண்டென்பதை வின்செஸ்டரின் மேற்றிராணியார் வெளிப்படையாக வலியுறுத்தியது அரசரை இழிவு படுத்தியது. மேற்றிராசனப் பிரிவுகளில் வசிக்க அல்லது பிரசாரம் செய்யவேண்டுமென்னும் கட்டாயம் இவர்களுக்கில்லை யெனவும் இவர் கூறினர். பாவ மன்னிப்புப் பெறுபவர்களிடமிருந்து குருமார்கள் பணம்திரட்ட வேண்டுமென யார்க்கின் அதிமேற்றிராணியார் கட்டளையிட்டார். பிரசாரப் பணியை ஏலத்தில் விட்டுப் பணம்திரட்டும் வழக்கம், நாடு முழுவதும் காணப்பட்டது. உள்நாட்டுக் கலகத்தின்போது 33 ஆண்டுகளுக்கு தாமஸ் போர்சியர்[1] என்பார் சமய முதல்

[1] Thomas Bourchier

வராக இருந்தார். எல்லா மாற்றங்களையும் இவர் ஏற்றுக் கொண்டார். இரத்தம் தோய்ந்த வாளுடன், இவர் முன்வந்து சிரம் தாழ்த்தியவர்களுக்கு இவர் முடி சூட்டினர். நெறிகெட்டு வாழ்க்கை நடத்திய குருமார்களின் போக்கில் தலையிட வெல்ஷ் மேற்றிராணியார் மறுத்ததோடு, சந்தர்ப்ப வாதம் பேசித் தம் நிலையை உறுதிப்படுத்திக்கொண்டார்.

திருச்சபையின் முதல்நிலையாளர்கள், தம் தரத்தைத் தாழ்த்திக்கொண்ட பொழுது திருமடத்தார்கள், திரிதுறவிகள் ஆகியோரின் நிலை, எந்த அளவிற்கு இழிவடைந்திருக்கும் என்பதை அறியலாம். இடைக்காலத்திய மடாலய வாழ்க்கை கண்டனத்திற்குள்ளாயிற்று. அடுத்த நூற்றாண்டின் வரலாற்றைப் படிக்கும்பொழுது குருமார்களின் நிலையை ஆராயும் வரலாற்றாசிரியர்களின் முடிவும் இவர்களைக் கண்டனம் செய்யும் போக்கில்தான் இருந்தது. கத்தோலிக்கத் திருச்சபையால் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ள பதவியிலிருந்து மனிதனைப் பிரித்துணரும் கோட்பாட்டை அறிந்து கொள்ள இடைக்காலத்தவரால் முடியாது போயிற்று. பணிவுப் பிரமாணம் எடுத்துக்கொண்டவர் பணிவின்றி விருப்பம்போல் வாழ்வதையும், தூய்மைப் பிரமாணம் எடுத்துக்கொண்டவர் கட்டுப்பாடற்ற வாழ்க்கை நடத்துவதையும், எளிமைப் பிரமாணம் எடுத்துக்கொண்டவர் பெரும் பொருள் திரட்டுவதையும் கண்ட மக்கள் வெறுப்புற்று திருச்சபையைத் தூற்றத் தொடங்கிவிட்டார்கள். திருச்சபைப் புரட்சிக்கான ஏற்பாடுகள் தயாராகத் தொடங்கின.

இங்கிலாந்தில், திருச்சபை மீதான நம்பிக்கை வீழ்ச்சியடைந்து விட்டதென்றால், போரில் மக்கள் வைத்திருந்த பற்றார்வமும் அப்படித்தான் இருந்தது. இந் நூற்றாண்டின் அரசியல் வளர்ச்சியில் பெருமக்களின் வாழ்க்கையிலும், பொதுமக்களின் வாழ்க்கையிலும் போரிடல் தலையாயப் பண்பாக இருந்து வந்தது. போர்த்துறையின் நடவடிக்கைகள் நன்னெறிக்குட்படுத்தப்படும்வரை ஆங்கிலச் சமூகத்தின் கீழ்நிலையில் இருந்தவர்கள், இழிநிலையடையாமல் பார்த்துக்கொள்ள முடிந்தது. ஒருவர் புரட்சி செய்யலாம்; தெய்வ நிந்தனை செய்யலாம்; திருச்சபையைக் கொள்ளையிடலாம் அல்லது திக்கற்றவரிடமிருந்து திருடலாம்; ஆனால் போர்க்களத்தில் அவர் புறமுதுகு காட்டமாட்டார்; போர் ஓய்ந்தபின் கோழைத்தனமாக ஒருவனைத் தாக்கிக் கொல்லமாட்டார். ஆனால், இப்பொழுது இப் பண்பு மறைந்துவிட்ட

தாகத் தோன்றியது. ரோசாமலர்ப் போர்களின் ஒவ்வொரு நிலையிலும் கொலையையும் துரோகச் செயலையும் கண்டோம். ஸார்த்தாம்ப்டன் போரில் ஹென்றியின் முன்னணிப் படையை நடத்திச்சென்ற கிரே பிரபு[1] வார்விக் பக்கம்போய்ச் சேர்ந்து கொண்டார். பார்னெட் போருக்குமுன் மாண்டேகும் கிளாரென்சும் அரசெதிர்ப்புச் செயல்களில் ஈடுபட்டனர். சாமர்செட் கோமகனும், இன்னும் பலரும் டுவிக்ஸ்பரி போர்க்களத்தில் பகைவர்களோடு சேர்ந்துகொண்டார்கள். வேக்பீல்டு போருக்குப்பின், சாலிஸ்பரி கோமகனும் ரட்லண்டு கோமகனும் கொல்லப்பட்டனர். டுவிக்ஸ்பரி போருக்குப் பின்னர், இதேபோல் லங்காஸ்டிரிய இளவரசர் எட்வர்டும் கொலையுண்டார். நாட்டுத் தலைவர்களின் செயல் இப்படியிருந்தால் இவர்களின் தலைமையின்கீழ் போரிட்டவர்களைப் பற்றி ஒன்றையும் எதிர்பார்க்க இயலாது. ஓர் உள்நாட்டுப் போரில் எல்லோருமே ஏதோ ஒரு தரப்பில் ஈடுபாடு கொண்டிருப்பது இயல்பெனினும், புரிந்துகொள்ள முடியாத ஒன்றிற்காகக் காரணமின்றி மக்கள் போரிடுவதென்பது மிகக் கொடுமையாகும். தேவையில்லாமல் இரத்தம் சிந்துவதை முப்பதாண்டு நாட்டினர் பார்த்துக் கொண்டிருந்தனர். வாட்பலத்தால் முதலில் ஒருவரும், பின்னர் இன்னொருவரும் அரசப் பதவியை அடைந்து வெற்றியோடு ஆட்சி செய்வது போன்ற நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருந்ததை மக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாட்டுப்பற்று ஒரு கேலிக்கூத்து என்பதையும், திட்டமிட்ட கொலைதான் போர் என்பதையும் இக் காலத்தில் மனிதன் அனுபவத்திலிருந்து தெரிந்துகொண்டான். போரில் ஆங்கிலேயர்கள் தோற்றோடத் தொடங்கியபொழுது நாடு கீழ்நிலைக்குச் சென்றுவிட்டதாகக் கருதலாம். நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றால் சில தேவையான வன்முறை மாற்றங்கள் வரவேண்டும். அழிந்துவிடும் அளவிற்கு இங்கிலாந்து இக் காலத்தில் நலிவுற்றிருந்ததெனலாம். ஆனால், யார்க்கியர், டியூடர் ஆகிய இரு மரபினரின் இதமான ஒழுக்க முறைகளினால் ஆங்கிலமக்களின் இரத்தத்திலிருந்து நச்சு அகற்றப்பட்டு மக்கள் மறுபடியும் உயிர்வாழும் திறம்பெற்றனர். எனவே யார்க்கியரும் டியூடர்களும் இந்நாட்டை வென்று காப்பாற்றினார்கள் எனலாம். நாட்டைக் காப்பாற்றியது புதிய அரசர் என்பதைவிடப் புதிய கருத்து என்று சொல்வது பொருத்தமாகும். தேசிய நோக்கத்திற்காக மக்கள் ஒன்றுபட வேண்டுமென்னும் கருத்து, அரசர்மீது முழு ஈடுபாடு

[1] Lord Grey

கொள்ளச் செய்தது. நிலமானியப் பிணைப்புகளிலிருந்து மக்கள் விடுதலை பெற, இக் கருத்து பெருமளவில் உதவியது. மக்களின் ஒற்றுமைக்குத் தடையாக இருந்த கருத்துகள் இப்பொழுது ஆதரவாக மாறின. நிலமானியப் பிரபுக்களிடம் பற்றுக்கொள்வது மக்களின் கண்மூடிப் பழக்கமாக இருந்தது. இதைப் பின்பற்றி, மக்கள் அரச வழிபாட்டில் இறங்கினர். இதுவே பின், நாட்டுப்பற்றுகவும் மாறியது.

பாஸ்வொர்த் போர்க்களத்தில் இடைக்காலம் முற்றுப் பெற்றது என்ற கூற்றை, இதுபோன்ற வேறுபல கருத்துகள் மெய்ப்பிப்பதாக இருந்தது. டியூடர்களின் நல்லாட்சி வல்லரசு, மேல்நிலை நடுத்தர வகுப்பினரின் ஆதரவை நாடியது. பொதுமக்கள், பெருமக்கள், அரச குடும்பம் என்ற பழையபடி நிலை அமைப்பு டியூடர்களின் ஆட்சியால் நீக்கப்பட்டது. மேலாண்மை இருந்த இடத்தில் குடிமைப் பிணைப்புகள் எழுந்தன. ஒரு காலத்தில் திருச்சபை கருத்தளவில் மக்களின் ஆன்மாவின் மீது மேலாதிக்கம் செலுத்தியது. ஆனால், இப்பொழுது அரசோடு இதுவும் ஒரு பணிவான இடத்தைப் பெற்றது. இதற்கான காரணங்களை நாம் பாஸ்வொர்த் போர்க்களத்திலிருந்து ஆராய்வதைக் காட்டிலும், பல ஆண்டுகள் முன்னே சென்று காணவேண்டும். இருப்பினும், வரலாற்றில் பொருளை மாற்றமல் ஒரு வேறுபாட்டைக் காண வியலாது. இடைக்காலத்தை நாம் முடிவிற்குக் கொண்டு வந்துவிட்டுத் தற்காலத்தை ஆராய வேண்டும். ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் வாணிகம் வளர்ந்தது. ஆனால் அரசகுலப் புரட்சிகள் தொடர்ந்திருந்து வந்தன. வெடிமருந்து பயன்படுத்தப்பட்டாலும், பெரும்பாலான மக்கள் ஈட்டிக்கு இரையானார்கள். மறுமலர்ச்சி இயக்கம் விரைந்து பரவி வந்தாலும், மேற்றிராணியார்களின் வறட்டுப் பெருமையையும் போப்பாண்டவரின் நல்லாதரவையும் அரசர்கள் இக் காலத்தில் எதிர்பார்க்க வேண்டியிருந்தது. இருப்பினும், நல்ல வேளையாக, ஹென்றியின் ஆட்சிக்காலத் தொடக்கத்தோடு கொடுமையும் துயருமிக்க இடைக்காலம் சரியாக வந்திணைந்து கொண்டது.

ஏழாம் ஹென்றியின் நிலை

அயர்ந்திருந்த நாட்டைக் கிளர்ந்தெழச் செய்யக்கூடிய வர்களை ஹென்றி உயிரோடு விட்டுவைக்கவில்லை. அரியணைக் கான உண்மையான போட்டி எதையும் கண்டு, இவர் அஞ்ச வில்லை. ஆயினும், பகையையும் குழப்பத்தையும் உண்டாக்கக்

கூடிய பல இடங்கள் இருப்பதை அரசர் கண்டறிந்திருந்தார். வார்விக்கின் தாயின் வழிவந்த கிளாரென்சின் மகனுகிய எட்வர்டு என்பவர் இவருக்கு முதல் போட்டியாக இருந்தார். ஆங்கிலேயர்களின் மனத்தில் இடம்பெற்றிருந்த பழைய அரச மரபின் பெயரையும் பட்டத்தையும் இவர் பெற்றிருந்தார். இவரிடமிருந்து தமக்கு எந்த நேரத்திலும் எதிர்ப்பு நேரலாமென அஞ்சிய ஹென்றி, விரைந்து இவரைச் சிறைவைத்தார். நான்காம் எட்வர்டின் தங்கை எலிசபெத்தின் மகன் ஜான் டிலா போல்[1], என்பவரும் ஹென்றிக்குப் போட்டியாக இருந்தார். புதிய முடியரசிற்கு இவர் முதலில் உதவியாக இருக்க உறுதி கூறியிருந்தாலும், விரைவில் மனம் மாறி நாட்டைவிட்டு வெளியேறினர். ஆட்சிக்கால இறுதியில் ஹென்றி இவருடைய இளவலைச் சிறைப்பிடித்தார். இவரைக் கவனமாகப் பார்த்து வந்த அரசர், தம் மகன் வேல்ஸ் இளவரசரெனப் பட்டம் பெற்றவுடன், கைதியைக் கொன்றுவிட வேண்டுமென்று அறிவுரை கூறித், தம் நுட்பமான சட்ட அறிவை வெளிப்படுத்தினர். எட்வர்டின் இன்னொரு தங்கை, ஹென்றிக்கு ஒத்து வராத பெரும் எதிரியாக இருந்தார். இவர் பர்கெண்டியில் இருந்தார். இங்கிலாந்திற்கும் பர்கெண்டிக்கும் இடையில் வளர்ந்துவந்த வாணிகத்தை இவர் தலையிட்டு ஹென்றியின் நிலையைத் தகர்க்கலாம். இரு அரச குமாரர்களின் கதிபற்றிய ஐயப்பாடு ஹென்றியின் மற்றொரு இடராகும். அரச குமாரர்களின் கதியை மூன்றும் ரிச்சர்டு ஒரு புதிர்நிலையாக மூடி மறைத்திருந்ததால், எவரும் தம்மைப் போலியாக ஐந்தாம் எட்வர்டு என்றோ யார்க்கின் ரிச்சர்டு என்றோ அறிவித்தால் மக்களிடமிருந்து அவர்களுக்கு நல்லாதரவு கிடைக்கும் வாய்ப்பிருந்தது. ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் புரட்சிக் காரர்கள் ஆள்மாறாட்டத்தை நன்றுகப் பயன்படுத்திக்கொண்டார்கள். வார்விக்கின் கோமகன் எட்வர்டு என்று லாம்பர்ட் சிம்னல்[2] தம்மைக் கூறிக்கொண்டபொழுது படையினர் இவருக்கு ஆதரவளித்தனர். ஆலை லோவெல்,[3] டிலா போல் போன்ற தலைவர்கள் இத்தகைய போலியை வெறுத்ததோடு, சிம்னலை புறக்கடையில் அடைத்துவைத்தார்கள். 1497-ல் நடந்த மிகக் கடுமையான கிளர்ச்சியில் யார்க்கின் இளம் ரிச்சர்டு என பெர்க்கின் வார்பெக்[4] தம்மைக் கூறிக்கொண்

[1] John de la Pole
[2] Lambert Simnel
[3] Lovel
[4] Perkin Warbeck

டார். ஸ்காட்லாந்திலும், ஓரளவிற்குப் பிரான்சிலும் இவர் ஏற்றுக் கொள்ளப்பட்டார். பர்கெண்டியிலிருந்து இவர் உதவி பெற்றார். வார்விக்கின் கோமக (எட்வர்டு) னோடு இவர் பெரும் நண்பரானார். தம்மை யார் என்று (போலியாக) கூறிக்கொண்டாரோ அவராகவே இவர் இருந்திருப்பாரானால் (ரிச்சர்டு ஆக) இவருடைய தலையைக் கொய்ய எட்வர்டு சிறிதும் தயங்கியிருக்கமாட்டார். ஆனால் இவ் வரச குமாரனிடக் கம்பள வாணிகம் முக்கியமானதெனக் கருதிய பர்கெண்டி கோமகன், அவருக்கு அளித்துவந்த உதவிகளை விலக்கிக் கொண்டார். வார்பெக்கின் வேடமும் கலைந்தது. இறுதியாக இவரும் சிறைப்பிடிக்கப்பட்டு, இவரது நண்பராகிய பிரான்டா ஜெனெட்டோடு சிறைவைக்கப்பட்டார். இது ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தை முடிவிற்குக் கொண்டுவந்தது.

கடமைப் பொறுப்புகளை நிறைவேற்ற, தக்க தகுதிகளை ஹென்றி பெற்றிருந்தார். எல்லாவிதமான எதிர்ப்புகளையும் சமாளிக்கத்தக்க ஆற்றலையும் அறிவையும் இவர் பெற்றிருந்தார் என்பதை அறியலாம். கலகக்காரர்களை இவர் கடுமையாக ஒடுக்கினர். மென்மனமாக இருக்க விரும்பாத நாடு, இவரை வரவேற்றதில் வியப்பில்லை. பெருங்குடி மக்களைப் பொறுத்தவரை இவர் சற்று நிதானமாகச் செயல் பட்டார். படைபலம் வரவேற்கத் தக்கதாயினும், நாடு அமைதியோடு இருக்கவேண்டுமெனின், சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். பெரும் எண்ணிக்கையில் படைக்கலம் தரித்த வீரர்களை வைத்துப் பேணுகின்ற முறைக்கெதிரான மூன்றாம் ரிச்சர்டின் சட்டத்தை, இவர் மேலும் கடுமையாக்கினர். இச் சட்டத்திற்குப் பிரபுக்கள் கீழ்ப்படிந்து நடக்குமாறு வற்புறுத்தப்பட்டார்கள். பெருமளவில் ஆடம்பரமாக விருந்து நடத்திய பிரபு ஒருவருக்கு, இவர் செலவோடு கூடுதலான தண்டப் பணத்தையும் சேர்த்துத் திருப்பிக் கொடுத்த செய்தி இவரது நிலையைத் தெளிவாக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். மிக்க பயனுள்ள முறையில் செயல்படக்கூடிய ஒரு புதிய நீதிமன்றத்தையும் இவர் படைத்தார். நான்காவது எட்வர்டு காவல்துறை முதல்வருக்களித்த அதிகார அடிப்படையில் இம் மன்றம் உருவாக்கப்பட்ட தெனலாம். இந் நீதிமன்றம் பிற்காலத்தில் விண்மீன் நீதிமன்றமெனப் பெயர்பெற்று விளங்கியது. இது பற்றிப் பின்னர் விரிவாகப் பார்ப்போம். சிறுநிலக்கிழார், வணிகர்கள் ஆகியோரின் நலன்களை வளர்க்கும் நோக்கில் இவர் பல சட்டங்களை இயற்றிச் செயல்படுத்தினர். பண்ணைக் குடிகளின் ஊதியத்தை நிருணயிக்கப் பொதுமக்கள்

சபை சட்டமியற்றியது. பிற்கால இங்கிலாந்திற்குச் சொந்தமான கப்பல்களில் மட்டுமே மது இறக்குமதி செய்யப்பட வேண்டுமெனும் சட்டம், நாவாய்ச் சட்டங்களுக்கு முன்னோடியாக இருந்தது. இன்னொரு சட்டத்தால் கம்பளத் துணிகளின் உயர்அளவு விலை நிருணயம் செய்யப்பட்டது. இதனால் கம்பள உற்பத்தி பெருகிற்று. விளைநிலத்தை, மேய்ச்சல் தரையாக்க நில அடைப்பு செய்ததால் இறையிலி நிலச் சொந்தக்காரர்களுக்குப் பெரும் ஆதாயம் கிடைத்ததெனினும், தானிய விளைச்சல் பெருமளவில் குறைந்ததைக் கண்டு அரசாங்கம் நில அடைப்பு முறையைச் சட்டத்தால் தடை செய்தது. இச் சட்டத்தால் பெரும்பயன் கிட்டவில்லை. இதன் விளைவுகளால் ஆங்கிலச் சமூகத்தில் கணிசமான மாற்றங்கள் பிற்காலத்தில் ஏற்பட்டன.

மீட்புப் பணிகளுக்கும் சீர்திருத்தப் பணிகளுக்கும் உதவுவதற்கு ஹென்றியின் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் பாராளுமன்றங்கள் ஒழுங்காகக் கூட்டப்பட்டன. ஆனாலும், சொந்தப் பொறுப்பில் நாட்டை ஆட்சி செய்வதற்கு அரசர் முற்றிலும் தயாராக இருந்தார். அரசப் பதவிபற்றி டியூடர்கள் திடமான கருத்துடையவர்களாக இருந்தனர். குறிப்பாக, ஏழாம் ஹென்றி முழுமையான அதிகாரத்தைச் செயல்படுத்திக் காட்டவில்லையெனினும், இவருக்குப் பின்வந்த அரசர்களைக் காட்டிலும் இவ் வதிகாரங்களைச் செயல்படுத்துவதில் இவர் பெரும் மனவுறுதி காட்டினர். இதற்குப் போதிய அளவு பணம் வேண்டியிருந்தது. இதைப் பெறுவதில் அரசருக்கு இடரெதுவுமில்லை. ஏற்றுமதி இறக்குமதியாகும் பொருள்களின் எடை மதிப்பிலும், விலைமதிப்பிலும் தம் வாழ்நாள் முழுவதும் வரிவிதித்துத் திரட்டிக்கொள்ளும் உரிமையைப் பாராளுமன்றம் இவருக்களித்தது. பாராளுமன்றத்தை அரசர் கூட்ட விரும்பும் வரை தொடர்ந்து பண உதவியளிக்கப் பாராளுமன்றம் தயங்கவில்லை. பணப் பற்றுக்குறையை நிறைவுசெய்ய, யார்க்கிய அரசர்களின் கட்டாயக் கடன்முறையை ஹென்றி மேற்கொண்டதோடன்றி, நான்காம் எட்வர்டின் முறையை மேம்படுத்தி அமைதிப்பணம் திரட்டினர். ஃபிரெஞ்சுப் படையெடுப்புத் திட்டத்திற்குச் சிறப்பு நிதியுதவி பெற்றார். பின்னர் ஃபிரெஞ்சு அரசரோடு உடன்பட்டு, மேலும் பணம் பெற்றுக் கொண்டு இங்கிலாந்திலேயே தங்கிவிட்டார்.


லங்காஸ்டிரியர்களின் காலத்தில் கட்சிகளின் முதன்மையான கருவியாக இருந்த கவுன்சில் இப்பொழுது செயலற்றுக் கிடந்தது. ஏனெனில், இது அரசரின் ஓர் ஆயுதமாக இப்பொழுது மாறிச் செயல்பட்டது. வலிமைமிக்க, அடங்காப் பிரபுக்களனைவரையும் அறிவுரையாளர்களாகச் சேர்த்துக் கொள்வதில் ஹென்றி கவனமாக நடந்துகொண்டார். பெருங்குடி மரபினரான ஹோவார்டுகள் (Howards) கீழ்நிலைப் பதவிகளை வகித்தார்கள். ஹென்றியின் அமைச்சர்களில் சுயேச்சையாக ஓரளவு அதிகாரத்தைச் செயல்படுத்திய அதிமேற்றிராணியாராகிய மோர்ட்டன்[1] உயர் குடும்பத்தினர் அல்லர். வசைப்பெயர் எடுத்த எம்சன்[2], டட்லி[3] ஆகிய இருவரும் நடுத்தர வகுப்பு வழக்குரைஞர்கள். மேலும், திருச்சபையின் சுயேச்சையான வாழ்க்கைத் தொழிலிலிருந்து திருச்சபைத் தலைவர்களுக்கு உலகியல் அதிகாரங்களில் பெரும்பங்கினை அளித்துக், கவரும் திட்டமொன்றை ஹென்றி கையாண்டார். மோர்ட்டன், ∴பாக்ஸ், வார்ஹாம் போன்ற முதல்நிலைத் திருச்சபையினர் போப்பாண்டவருக்குச் சேவை செய்வதிலிருந்து அரசருக்குச் சேவைசெய்யத் தூண்டப்பட்டனர். மிகச் சிறந்த அறிஞர்களை அரசர் தம் பணியில் வைத்துக்கொண்டார். இதன் விளைவாக, அமைதியை நிலைநாட்டுவதற்காக முற்றிலும் திறமைமிக்க ஒரு நிறுவனத்தை அரசர் உருவாக்க முடிந்தது. கொந்தளிப்பு மிகுந்த லங்காஸ்டிரியர்களின் காலத்தில் இருந்ததைவிட நான்கு அல்லது ஐந்து பங்கு அதிகத் திறமையோடு இந் நிறுவனம் (திருச்சபை) செயல்பட்டது.

1485-க்கும் 1509-க்கும் இடையில் உலகில் பெரும் நிகழ்ச்சிகள் தோன்றின. இவைகளைவிடப் பெரும் மாற்றங்கள் வந்து கொண்டிருந்தன. இந் நூற்றாண்டின் நடுப்பகுதியில் துருக்கியர் தம்மை அறியாமலேயே ஐரோப்பாவிற்கு ஒரு நன்மை செய்தார்கள். இவர்கள் கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியதால் நேர்ந்த விளைவுகள் பல. 1492-ல் கொலம்பஸும் 1497-ல் காபெட்டும் இந்தியாவிற்குப் புதிய கடல்வழிகளைக் கண்டுபிடிக்க முயன்று அமெரிக்காவைக் கண்டுபிடித்தனர். வாஸ்கோடகாமா நன்னம்பிக்கைமுனையைக் கடந்து இந்தியா வந்தடைந்தார். கான்ஸ்டாண்டிநோபிள் தாக்கப்

[1] Morton
[2] Empson
[3] Dudley


பட்டதும், அறிஞர்கள் கிரேக்க அறிவுக் களஞ்சியங்களோடு மேற்குத் திசைநோக்கி ஓடி வந்தனர். மேற்கு ஐரோப்பாவில் கிரேக்க இலக்கியங்களைப் பரப்ப அச்சியந்திரங்கள் தயாராக இருந்தன. நாகரிகமடைந்திருந்த மனிதனை மாற்றியமைக்கக் கூடிய தற்காலத்திய வாணிகமும், குடியேற்றமும் இப்பொழுது வளரும் தருவாயில் இருந்தன. மறுமலர்ச்சி இயக்கம் பரவி வந்தது. இதையடுத்து, சமயச் சீர்திருத்த இயக்கமும் விரைந்து பரவியது. ஆங்கிலேயர்கள் இப்பொழுது போர்க் களக் காட்சிகளிலும், இரத்தம் சிந்துவதிலும் கவனம் செலுத்தாமல், கடல் கடந்து நோக்கிப் புது உலகத் தோற்றத்தின் விளைவுகளை ஆராய்ந்தார்கள்.

மூன்றும் எட்வர்டின் மரபினர்



நான்காம் எட்வர்டு
1461—1483
ஐந்தாம் எட்வர்டு
(1483)
ஜார்ஜ்
(கிளாரன்ஸ் ஆம் பிரபு)
எட்வர்டு வார்விக் பிரபு
ரிச்சர்டு, யார்க் பிரபு
ரிச்சர்டு பிரபு
1422—1461
மூன்றாம் ரிச்சர்டு
1422—1461
எட்வர்டு டெவல்ஸ்
இளவரசர்
எலிசபெத்
=
எட்டாம் ஹென்றி
ஆரம் ஹென்றி
1422—1461
மார்கரெட்
டேபோர்ட்
=
எட்மண்டு
டியூடர்
=
ஏழாம் ஹென்றி
1485—1509

டியூடர் குல மரபினர்



மேலும் கற்றற்குரிய நூல்கள்

K. Pickthorn	:	Early Tutor Government Henry VIII
A. P. Pollard	:	Reign of Henry VII, VIII
S. B. Crimes	:	English Constitution
Holds Worth	:	History of English Law
Elton	:	England under Tutors
Tanner	:	Constitutional Documents
Percy	:	Privy Council under the Tutors.

2. தற்கால ஆங்கில அரசாங்கத்தின் அடிப்படைகள்

ஆங்கில அரசாங்க வளர்ச்சியில் தொடர்ச்சி, முதன்மையான இயல்பாக இருந்து வந்திருக்கிறது. இதனுடைய நிறுவனங்கள் அரசியலமைப்புகளால் அல்லது அடிப்படையான சட்டங்களால் பாதுகாக்கப்படவில்லை. எனினும், வரலாற்றில் இவை ஒரேமாதிரியான தோற்றத்தைப் பேணி வந்துள்ளன. நிலையான கருத்துகளால் இவைகளின் செயற்பாடும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. அரசப்பதவி, பாராளுமன்றம், நீதிமன்றங்கள் ஆகியவைகளும், நீதிபதிகளும், உயர் அலுவலர்கள் ஆகியவர்களும் பல்வேறு சூழ்நிலைகளில் பல இயல்புகளைத் தக்கவைத்துக்கொண்டார்கள். இவைகளின் இடைக்காலத்திய தோற்றமும் தொடர்ந்தது. அரசியலமைப்பில் இவை பெருமளவு மரபுகளாக இருந்து வருகின்றன. ஆயினும், தொடர்ச்சியென்பது மாற்றமின்மையாக இருக்கவில்லை. பழங்காலத்திய நிறுவனங்கள் முற்றிலும் மாறுபட்ட கருத்துகளை ஏற்றுச் செயல்படுத்தும் நிலைக்குள்ளாயின. சமூகத்தின் புதிய தேவைகளுக்கேற்ப இவை புதிய நிறுவனங்களுடன் இணங்கிச் செயற்பட்டன. அரசியலமைப்பின் நெகிழும் தன்மை புதிய மாற்றங்களையும் திருத்தங்களையும் ஏற்க உதவியாக இருந்தது. கடந்தகாலத் தொடர்புகளைத் திடீரென இது அகற்றிவிடவில்லை. அவ்வப்போது சில நிறுவனங்கள் மறைந்தன. ஆனால், இவைகளின் மறைவு புதிய மரபுகளைப் புகுத்த உதவிய தெனலாம். அரசாங்கத்தின் செயல்படும் பிரிவுகள் மறைந்து விடவில்லை. இவைகளோடு எழுதப்பெறுத வழக்கங்களும் மரபுகளும் அரசியலமைப்பின் பிரிவுகளுக்குத் துணையாக நின்றன. அரசியலமைப்பைக் காலப் போக்கில் இவை பெருமாற்றம் செய்தன. சட்டமுறையிலோ செயல்முறையிலோ ஆங்கில அரசாங்கம் எந் நிலையிலும் இதன் வரலாற்றில் மரபுகளை வன்மையாகவும் நிலையாகவும் மறுதலிக்கவில்லை.

புதிய முடியாட்சி

டியூட்ர்கள் காலத்தில் முடியாட்சி நிலைப்பேற்றையும் நெகிழ்ச்சியையும் பெற்றிருந்தது. அரசாங்கச் செயற்பாட்டு எல்லைகளைப் பொறுத்தவரையில், இது ஒரு நிலைதிரிபான காலமாகும். இக் காலத்திய நிகழ்ச்சிகள் இடைக்கால இங்கிலாந்தைத் தற்கால இங்கிலாந்தாகவும், அரசாங்கத்தின் முறையைத் தீவிரமாக மாறுபட்டுச் செயல்படவும் தூண்டின. நான்காவது எட்வர்டின் காலத்தில் இவ் வுருநிலையில் மாற்றம் தோன்றியதென்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனல், இது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் மறுக்கப்பட்டாலும் டியூடர் களின் ஆட்சியும் 1641-வரையிலான ஸ்டுவர்டுகளின் ஆட்சியும் தன்னிகரில்லா அரசியலமைப்பியல்புகளைப் பெற்றிருந்ததால் இது "புதிய முடியாட்சி"யென விவரிக்கப்பட்டது. அரசாங்க அமைப்பிலும், செயற்பாட்டிலும் பல அடிப்படையான மாற்றங் களோடு புதிய முடியாட்சி தோன்றியதெனக் கூறப்பட்டது. இக் காலம்வரை பழமையான கருத்துகளெனக் கருதப் பட்டவைகளின் புறக்கணிப்பில் இதன் எழுச்சி சார்ந்திருந்தது.

புதிய முடியாட்சியின் முதன்மையான இயல்புகள் தனிச் சிறப்புடையனவாகவும், கவர்ச்சியாகவும் இருந்தன. இது அதிகாரத்தைத் குவிமையப்படுத்தியது. இடைக்காலத்தில் உலகியல் தலைவர்களிடமும், திருச்சபையினரிடமும் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அரசர் எல்லா அதிகாரத்தையும் பெற்றுச் செயல்படுத்தும் நிலையில் இருந்தார். நிலமானியப் பெருங்குடியினர், கத்தோலிக்கத் திருச்சபையினர் ஆகியோரின் சுதந்திரம் அழிக்கப்பட்டது. முந்திய காலத்திய அரசாங்கத்தின் வலிமையின்மையும் பயனுரமின்மையும்போய், இப்பொழுது கடுத்தமாகவும் கண்டிப்பாகவும் மாறிச் செயல்பட்டது. இடைக்காலத்தில் அரசாங்கம் இல்லாமல் இருந்த குறைபாடு காணப்பட்டது. புதிய முடியாட்சியில் அரசரின் அதிகாரம் வரம்பற்றதாக மாறித், தனி வல்லாட்சியாக உருப்பெறும் இடர் காணப் பட்டது. அதிகாரத்தைத் திரட்டிக்கொண்டதும் முடியாட்சி இடைவிடாது அதிகார எல்லையைப் பெருக்கிக் கொண்டது. இடைக்காலத்தில், அரசரிடமிருந்து நிலமானியம் பெற்றிருந் தாலொழிய குடிமகனுக்கு அரசரோடு நேரடித் தொடர்பில்லை. அல்லது குடிமகன் ஒருவன் அரச நீதிமன்றத்தின்முன் ஒரு கட்சிக்காரனாக இருந்தால், இவனை அரசரோடு தொடர்பு கொண்டவனாகக் கருதலாம். இத் தொடர்பை எவரும்

இப்பொழுது தவிர்க்கமுடியாது. நாட்டின் சமூக, பொருளாதார வாழ்க்கையில் அரசரின் கட்டுப்பாடு விரவி நின்றது. அரசரின் நுட்பமான கட்டுப்பாடுகளுக்குள் இவை பெருமளவில் கொண்டுவரப்பட்டன. மனிதனின் அறிவுத்திற உணர்வுகளும் மிக நெருக்கமான மனச்சான்றும் அரச ஆய்விற்கும் வன்கண்மைக்கும் உள்ளாயின. தேசிய வாழ்க்கையின் ஒவ்வொரு இயல்பும் அரசாங்கத்தின் புதிய செயற்பாடுகளுக்கு வழி செய்தது. அரசாங்க இயந்திரம் புதுப்பிக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டது. பழைய நிறுவனங்கள் செப்பனிடப்பட்டுப் புதிய நிறுவனங்களோடு வளர்ச்சி பெற்றன. அரசரது கவுன்சிலில் வலிமைமிக்க ஒரு நிருவாக முறையை அமைத்தது. சட்ட ஆக்கம், நீதி வழங்கல் ஆகிய பணிகளையும் இது பெற்றிருந்தது. தல ஆட்சியில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் வலியுறுத்தப்பட்டது. அரசரின் கவுன்சிலின் சார்பாக வடஎல்லைக் கவுன்சில், வேல்ஸ் கவுன்சில், மார்ச் கவுன்சில் ஆகியவை தம் அதிகார எல்லைக்குள் பெருமளவில் தல அலுவலர்களைக் கொண்டுவந்தன. இவர்களில் அரசரின் பதிலாளாக இருந்த ஷெரிபும், அமைதிகாண் நீதிபதிகளும் இருந்தனர். திறமையான அறிவுரையாளர்கள், ஆட்சியாளர்கள், சட்ட அறிஞர்கள் ஆகியோரின் பணியை அரசாங்கம் நாடியது. அரசாங்கத்தின் உள்துறையிலும், வெளி விவகாரங்களிலும் ஈடுபட்டுழைக்கும் தகுதிபெற்ற பணியாளர் தொகுதியொன்று அரசரின் சேவையில் ஈடுபட்டது. முதன்முறையாக அரச தந்திரப் பிரிவொன்றும் தோன்றி, பன்னாட்டு உறவுமுறை அமைப்பு ஒன்றை உருவாக்கும் தொழில்முறை பணியாள் தொகுதியொன்றும் இக் காலத்தில் வளர்ச்சியடைந்தது. திறமையானவர்கள் தம்மை அரசரின் பணியாட்களாகப் பதிவு செய்துகொண்டு இவ்வமைப்பைப் பெருக்கியதோடு இதன் கருவிகளாகவும் இருந்து செயல்பட்டனர்.

இறைமை பற்றிய புதுக்கருத்து

அரசரின் அதிகாரம் பற்றிய முழுமையான கருத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்யாமல் இத் தோற்ற மாறுபாடு வந்திருக்க முடியாது. மக்களுக்கு மேலாகப் பெரும் சிறப்போடிருந்த முடியாட்சி, இதற்குமுன் பெற்றிராத அளவில் மக்களின் பணிவை நாடியது. இடைக்கால அரசர்கள் பலதரப்பட்ட அதிகாரங்களைச் செயல்படுத்தினர்கள். ஒரு நிலமானிய அமைப்போடு பிரபுக்கள் இருந்தனர். லங்காஸ்

டரின் கோமகனுட்சிப் பிரிவைப்போல் பெருநிலக் குத்தகைக் காரர்கள் பலர் இருந்தனர். நிலக்கிழார்களாகவும் பெரு நிலக்கிழார்களாகவும் இருந்ததோடன்றி, முற்றிலும் தொடர் பில்லாத மக்களின்மீது இவர்கள் நேரடியாக அதிகாரம் செலுத்தினர்கள். இந் நிலையைப் புதிய முடியாட்சி ஒருங் கிணைத்து எளிதாக்கியது. அரசரின் நிலமானிய உறவுமுறைத் தகுதிகள் பெருமளவில் குறைந்தன. அரசரின் இறைமை வரம்பு கடந்து வலியுறுத்தப்பட்டது. அரசப்பதவியின் இவ் வியல்பு ரோமானியச் சட்டக்கருத்துகளால் வலிமை பெற் றது. இதை உரிமையியல் வழக்கறிஞர்கள் குறிப்பிடத்தவறிய தில்லை. ரோமானியச் சட்டவியலின் வளர்ச்சி இங்கிலாந்தின் அரசியல், சட்டம் ஆகியவை பற்றிய சிந்தனைகளைப் பாதித்தது. 16-ஆம் நூற்றாண்டின் திருச்சபைப் புரட்சிகளின் விளைவுகள் பெரும் சிறப்புடையனவாக இருந்தன. இடைக்கால அரசர் எவரும் செலுத்தாத அதிகாரத்தை இப்பொழுது அரசர் எல்லாச் சமூகப் பிரிவின்மீதும் செலுத்தினர். திருச் சபையின்மீது அரசரின் மேலாதிக்கம் நிலைநாட்டப்பட்டது. இக் காலத்திய இறைமைக் கோட்பாட்டிற்கு முடிவான மிகப் பெரிய வெற்றியாயிற்று. இக் காலத்தில் வலியுறுத்தப்பட்ட அரசரின் நிலை இயல்பாகவே அதிகார முற்றுரிமையைக் குறிப்பிட்டது.

இக் காலத்திய கருத்துகளைக்கொண்டு புதிய முடி யாட்சியை இயல்பு மீறியதெனவும் விதி விலக்கானதெனவும் கருதிவிடலாகாது. இதற்குமுன் இருந்த ஆட்சிமுறையி லிருந்து புதிய முடியாட்சி இயற்கையாக வளர்ந்தது. நிலையான சில மரபுரிமைகளை இது மக்களுக்கு வழங்கியது. டியூடர் மரபினர் அரியணையேறிய பொழுது தற்கால ஆங்கில அரசாங்கத்தின் அடிக்கல் நாட்டப்பட்டதெனக் கூறலாம்.

Henry VII :—

1485-ல் ஏழாம் ஹென்றி நடத்திய புரட்சி பெரும் அரசியல் சிறப்புடையதாகும். முதலாம் எட்வர்டின் காலத் திற்குப்பின் இங்கிலாந்து திறமைமிக்க ஒருவரின் ஆட்சியின் கீழ் வந்தது. ஆனால், இதனால் அரசியலமைப்பு மாற்றம் செய்யப்படவில்லை. அரசாங்கத்தின் அமைப்பு, மாற்றத்தால் பாதிக்கப்படாமல் இருந்தது. கடந்த முப்பதாண்டில் நாட்டைப் பெரும் கொந்தளிப்பிற்குள் ஆழ்த்திய லங்காஸ்டிரிய, யார்க்கிய மரபினருக்கிடையேயான போராட்டங்களின் ஒரு கட்டமாக இது அக் காலத்தவருக்குத் தோன்றியது. அரசரின் அதிகாரத்திற்கு ஆதரவாகப் புதிய கருத்துகள் எழவில்லை.

இதன் கோட்பாட்டு அடிப்படைகளும் உரிமைகளும் மாற்றப் படாமல் தொடர்ந்தன. தம் முன்னோர்களின் செயற்பாட்டின் அடிப்படையில் ஏழாம் ஹென்றி ஓர் அரசாங்க முறையை மரபுரிமையாகப் பெற்றார். பகைமைச் சூழ்நிலைகள் காரணமாக, லங்காஸ்டிரிய மரபினரின் கீழ் இம் முறை தகர்ந்தது. இச் சூழ்நிலைகளில் முதன்மையாக அரசரின் வறுமை, தொடர்ந்த வெளிநாட்டுப் போர்கள், ஆட்சிசெய்த மரபினரின் தனிப்பட்ட இடர்ப்பாடுகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இச் சூழ்நிலைகளில் லங்காஸ்டிரியர்களின் ஆட்சி ஒரு தன்னலக்கும்பல் ஆட்சியாக மாறியது. யார்க்கிய மரபினரில் மிக்க வலிமையான அரசர்கள் இதை முடிவிற்குக் கொண்டு வருவதில் வெற்றி பெற்றனர். 15-ஆம் நூற்றாண்டு ஒரு குழப்பமான அரசியல் காலமாக இருந்தாலும் தொடர்ச்சியான அரசியலமைப்பு வளர்ச்சிக் காலமாகவும் இது இருந்தது. அரசாங்கத்தின் முதன்மையான அங்கங்களாகிய அரசப்பதவி, கவுன்சில், பாராளுமன்றம், மத்திய தல ஆட்சிகள், நீதிமன்றங்கள் ஆகியவை தம் குணவியல்புகளைத் தொடர்ந்து பெற்றிருந்தன. இவைகளைப் புதுப்பித்துப் பயனுள்ள வகையில் செயல்படுத்த மனவுறுதியும், முன்னேக்கும், அறிவுநுட்பமும் கொண்ட அரச மரபினரை மக்கள் எதிர்பார்த்தனர். டியூடர்களின் ஆட்சி பயனுள்ள விளைவுகளை உறுதிப்படுத்தியது.

அரசரின் அதிகார வளர்ச்சிக்கான சூழ்நிலைகள்

டியூடர் மரபின் முதல் அரசர் கடுமையான ஆட்சிப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். இவருடைய அரசாங்கம் இந்நிலையில் வலிமையற்றிருந்தது. இதனுடைய பெருமையும் வலிமையும் இவருடைய முன்னோர்களின் தவறுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டன. இந் நூற்றாண்டின் இறுதிக்காலம் உயர்குடியினரின் ஆதிக்கத்திற்கும் அரசியல் கொந்தளிப்பிற்கும் உள்ளாயிற்று. வன்முறை, ஒழுங்கின்மை, நீதிப் பிறழ்வு ஆகியவை நாட்டின் எல்லாப் பிரிவினரையும் பாதித்தன. இருப்பினும், மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. முந்திய தலைமுறையினரின் உள்நாட்டுப்போர்கள் பெரும் நிலக்கிழார்களின் அதிகாரத்தையும் செல்வத்தையும் பெரிதும் பாதித்தன. செல்வாக்குள்ள பெருங்குடிகள் போர்க்களத்தில் அல்லது தூக்குமரத்தில் உயிரிழந்தனர். தோல்வியுறும் தரப்பில் இருந்தவர்களின் நிலங்கள் அடுத்தடுத்துப் பறிக்கப் பட்டதால் இவர்களின் நிலவுடைமைகள் குறைந்து நலிவுற்றன.

இப் போராட்டத்தில் அக்கறைப்படாத மற்ற வகுப்பினர் விரைந்து அரசியல் ஆதிக்கத்தை நோக்கி முன்னேறினர். பெருங்குடித் தொகுதியினரைத் தவிர இன்னொரு சமூகமும் இக் காலத்தில் இருந்தது. தெற்கிலும் கிழக்கிலும் இருந்த நகர்களிலும் துறைமுகங்களிலும் வசதிபடைத்த ஒரு வாணிகச் சமூகம் படிப்படியாகப் பொருள்வசதி பெற்று வந்தது. இப் புதிய சமூகத்திலிருந்து ஒரு புதிய சிறுநிலக்கிழார் வகுப்பு உருவாகியது. பழைய நிலக்குடிகளின் நிலங்களை இவர்கள் வாங்கிச் சேர்த்துக்கொண்டனர். இக் காலத்தின் வாணிகச் செழிப்பினால் பெரும் செல்வம் பெற்ற நிலக்கிழார்களோடும், நாட்டுப்புற வீரத் திருத்தகைகளோடும் இப் புதிய வகுப்பினர் விரைந்து கலந்து வலிமை பெற்றனர். நகரிலும் நாட்டுப் புறத்திலும் இருந்த உடைமையாளர்களுக்கிடையில் மிக நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. சமூகத்தில் இவ் விரு பிரிவினரும் பல பொதுவான குறிக்கோள்களை நாடினர். இவைகளில் ஒன்று, பயனுள்ள ஆட்சியையும், அமைதியையும் நிறைவையும் ஏற்படுத்துவதாகும். வலிமையையும் நல்லறிவையும் வெளிப்படுத்தும் அரசர்களுக்கு இவர்கள் ஒத்துழைக்க விரும்பினர்கள். உயர்குடியினரின் அரசியல் மரபுகளை இவர்கள் பெற்றவராதலால் மத்திய அரசாங்கத்தின் மீது முழுமையான கட்டுப்பாட்டை அரசருக்களிக்க இவர்கள் இணங்கினர்கள். அமைதிகாண் நீதிபதிகளாகவும், தல அலுவலர்களாகவும், கீழ்நிலை அலுவலர்களாகவும் செயலாற்றித் தலநிலையில் அரசருக்கு ஆதரவளித்தார்கள். இவர்களிலிருந்து திறமைமிக்க, நம்பிக்கையான பணியாட்களை டியூடர் மன்னர்கள் பெற்றார்கள். இவர்களிலிருந்து சிறிது சிறிதாக ஒரு புதிய பெருங்குடித் தொகுதி உருவாகியது. முற்காலத்திய உயர்குடியினரைவிட பற்றுறுதிப் பிணைப்புகளாலும், நலன்களாலும் இவர்கள் அரசரோடு மிக நெருங்கித் தொடர்பு கொண்டார்கள். இம் மரபினரோடு ஒத்துழைக்கக் கூடிய வர்கள் டியூடர்களின் பொதுமக்கள் சபையில் இடம் பெற்றனர்.

சொத்துடைய நடுத்தர மக்களின் ஒத்துழைப்பில் சார்புடைமை, டியூடர் ஆட்சியின் அடிப்படையான அரசியல் இயல்பாகும். டியூடர் ஆட்சியின் அரசியலமைப்புத் தன்மையை இது பெருமளவு பாதித்தது. டியூடர்களின் இயக்கத்திற்கும் ஆணைக்கும் முற்றிலும் இணக்கமுடைய வாழ்க்கைத் தொழில்முறையில் ஊதியம் பெறும் ஆளும் வகுப்பை இவர்கள் வளர்க்கவில்லை. ஊழியர்களின் நம்பிக்கை

யான, அயராத, திறமையான, நேர்மையான, பற்றற்ற சேவையை இவர்கள் பெற்றார்கள். 16-ஆம் நூற்றாண்டில் இச் சேவை மதிப்பிற்குரியதாயிற்று. ஆனால், இச் சேவை தன் விருப்பிலானதாக இருந்ததால் கண்டிப்பாகச் செயற்படுத்த முடியாமல் இருந்தது. தொழில்முறையில் அமைந்த படையினரிடமிருந்து டியூடர்களுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. படை முறையும் மக்களின் ஒத்துழைப்பு அடிப்படையில்தான் இருந்தது. சொந்த விருப்பில் வைத்துச் செயற்படுத்தக்கூடிய படைமுறை அல்லது ஆட்சிமுறைகளை உருவாக்க அரசரிடம் போதிய பண வசதியில்லை. இதனால், அரசாங்கத்தை அரசர் தம் பொறுப்பில் எடுத்துக்கொள்ளும் மனப்போக்கு இருந்தது. முடியாட்சி தன் பொறுப்புகளை நிதிவாய்ப்பு வளங்களைக் கொண்டே சமாளிக்க வேண்டுமென எதிர் பார்க்கப்பட்டது. நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டபொழுது சொத்துடைய வகுப்பினர் பாராளுமன்றத்தில் அரசருக்கு உதவிப்பணமளிக்கத் தயங்கினர். மற்ற வழிகளில் உதவவும் இவர்கள் மறுத்தனர். குடிமக்களின் இசைவின் அடிப்படையில் இவர்களின் உடைமைகளை அரசர் பயன் படுத்திக்கொள்ளும் கருத்து கடந்த காலத்திலிருந்து இவர்கள் மரபுரிமையாகப் பெற்றதாகும்.

டியூடர் மன்னர்களின் அரசுரிமையின் தன்மை

அரசுரிமையைப் பெறுவது இப் புதிய மரபினரின் முதன்மையான பணியாக இருந்தது. யார்க்கிய மரபினரின் மரபுவழிக் கோட்பாட்டை டியூடர் மரபினர் வலியுறுத்த வில்லை. மாறாக, சட்டப்படியிலான லங்காஸ்டிரிய வழிவழி யாட்சியுரிமையையும் இவர்கள் பற்றிநிற்கவில்லை. பாஸ்வொர்த் போரில் மூன்றாவது ரிச்சர்டு இறந்தவுடன் வெற்றியாளராகிய ஹென்றி அரசுரிமையை ஏற்றுக் கொண்டார். அதாவது, ஏழாம் ஹென்றி என்ற பெயரில் இவர் நடைமுறையில் அரசரானார். "அரசப் பெருமகனாகிய ஹென்றியிடமும் இவர் மரபுவழி வருகிறவர்களிடமும் மகுடம் வழிவழியாக நிலைபெறு"மென[1] இவருடைய முதல் பாராளு மன்றம் சட்டமியற்றியது. இங்கு மரபுரிமை வலியுறுத்தப் படவில்லை; உண்மையில் இத்தகைய கோரிக்கை யெதுவும் எழுப்பப்படவில்லை; பாராளுமன்றச் சட்டப்படி அரசுரிமை படைக்கப்படவுமில்லை; தேர்தல் பற்றியும் குறிப்பிடப்பட வில்லை; ஏழாம் ஹென்றியைப் பொறுத்தமட்டில் இச் சட்டம்

[1] A. P. Pollard, "Reign of Henry VII"

ஒரு நிலையை உறுதிப்படுத்தியது. அதாவது, இவருடைய அரசுரிமையை இவர் மரபுவழி வருகிறவர்கள் பிற்காலத்தில் பெறுவதற்கு உரிமை உள்ளவர்கள் என்பதை இது உறுதிப்படுத்தியதாகக் கூறலாம். மரபுரிமை அடிப்படையில் எழும் அரசுரிமையை இது விலக்கிற்றென்பதை உள்ளடக்கமாகக் குறிப்பிட்ட தெனலாம்.

டியூடர் அரசர்கள் சிறிதும் இரக்கமின்றி வன்மையான முறைகளைக் கையாண்டு உண்மையான போட்டியாளர்களையும், போலியாக எழுந்தவர்களையும் அடக்கியொடுக்கினர். பதவியேற்று முடிசூட்டிக் கொண்டவுடன் ஏழாம் ஹென்றி, யார்க்கிய மரபின எலிசபெத் என்பாரை மணந்து கொண்டதால் இவருடைய வழித்தோன்றல்களுக்குச் சட்டப்படியான வாரிசுரிமை கிட்டுவதோடு, வெள்ளை, சிவப்பு ரோசா மலர்கள் இணைக்கப்பட்டன. சிம்னல், வார்பெக் போன்றவர்களைத் தவிர இன்னும் பல போலிகள் தோன்றினர்கள். இவர்கள் அனைவரையும் ஹென்றி வென்று ஒடுக்கினர். பல பெரிய குடும்பத்தினர் யார்க்கியர்களோடு மிக நெருங்கிய உறவினராக இருந்தனர். வார்விக் கோமகனாகிய எட்வர்டு, வார்பெக் என்பாரோடு ஒரு துரோகியாகக் கருதப்பட்டு 1499-ல் கொல்லப்பட்டார். எட்டாம் ஹென்றியின் அரசுரிமைக்கு இடர் எதுவுமில்லையெனினும், சாலிஸ்பரிக் கோமகளும் வார்விக்கின் தங்கையுமாகிய மார்கரெட்[1] என்பாரும் 1541-ல் கொல்லப்பட்டார். மூன்றாண்டுகளுக்குமுன் இவரது மகனாகிய மான்டேகு பிரபுவாகிய[2] ஹென்றியும் இதே கதியை யடைந்தார். யார்க்கின் மற்ற மூன்று போன்களும் போரில் அல்லது தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் யார்க்கின் மகளாகிய எலிசபெத்திற்கும் இவரது கணவராகிய ஜான் டிலா போல் என்பவருக்கும் பிறந்தவர்கள். யார்க்கின் கொள்ளுப்பேரனாகிய எக்ஸ்டரின் மார்குவிசாகிய[3] ஹென்றி 1539-ல் வெட்டிக் கொல்லப்பட்டார். இன்னொரு கொள்ளுப் பேரனாகிய சர்ரேயின் கோமகன் (Earl of Surrey) ஹென்றியும் 1547-ல் இதே தண்டனையை அடைந்தார். முதலாவது எட்வர்டின் பெண்வழி வந்தவராகிய பக்கிங்ஹாம் கோமகன் கூட 1521-ல் விசாரணைக்குப்பின் கொல்லப்பட்டார். அரியணைக்குப் போட்டியாக வந்தவர்களை டியூடர்கள் விட்டு

[1] Margaret
[2] Montague Lord
[3] Marquis of Exster

வைத்தது கிடையாது. சட்டப்படி அல்லது மரபுரிமையின்படி டியூடர்கள் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். ஆற்றல், முன்மதி, பழியஞ்சாமை ஆகிய தகுதிகளைக் குறிப்பிடத்தக்க முறையில் அரசப் பதவிக்குரிய தகுதிகளாக ஏழாம் ஹென்றி பெற்றிருந்தார். இவர் அரசராக ஏற்றுக்கொள்ளப் பட்டதும் நிலை உறுதிப்பட்டு உயர்ந்தது. அரசருக்குரிய எல்லாச் சிறப்பதிகாரங்களையும் இவர் பெற்றார். அரசப் பதவியோடு தொடர்புடைய மாண்பும், வியத்தகு அதிகாரங்களும் இவரிடம் நிலைபெற்றிருந்தன. எல்லா உடைமைகளும் இவர் கைக்கு வந்தன. இவருக்குச் செலுத்தப்படவேண்டிய வரிப் பாக்கிகளும் இவருக்கு வந்து சேர்ந்தன. இவை எல்லாம் அரசுக்குச் சொந்தமாயின. இவைகளைத் தக்கவாறு பயன்படுத்தி, ஹென்றி தன் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார்.

அரசருடைய நிதிநிலையில் காணப்பட்ட மேம்பாடு, அதிகாரங்களைப் பயனுள்ள முறையில் செயற்படுத்த உதவியாக இருந்தது. 15-ஆம் நூற்றாண்டில் முடியாட்சி நலிவுற்றதற்குத் தீராத வறுமையே காரணமாக இருந்தது. ∴பிரான்சில் ஏற்பட்ட போர்ச்செலவுகளைச் சரிக்கட்ட அரசருக்குரிய நிலங்களை விற்றுப் பொருள் திரட்டவேண்டிய நிலையேற்பட்டது. உள்நாட்டில் கலகம் இல்லாமல் இருந்திருந்தால் 1453-ல் போர் நின்றவுடன் நிதிநிலையில் மீட்பு ஏற்பட்டிருக்கும். நான்காம் எட்வர்டின் காலத்தில் நிதித்துறையில் மேம்பாடு காணப்பட்டது. இரண்டாவது ரிச்சர்டின் காலத்திற்குப்பின், ஹென்றியின் காலத்தில் தேவைக்குமேல் கருவூலத்தில் கையிருப்பாகப் பணம் இருந்தது. நான்காம் எட்வர்டு மேற்கொண்ட முறைகளை ஏழாம் ஹென்றியும் ஏற்றுச் செயல்படுத்தியது இவருடைய முதன்மையான கடமைப் பொறுப்புகளில் ஒன்றாக இருந்தது. அரசரின் "இயல்பான" வருவாய்களிலிருந்து பெற்ற பணம் இவருக்குப் பெருமளவில் உதவியது.

அரசப் பதவிக்குரியதையும், அல்லது வேல்ஸ் இளவரசர் என்ற முறையில் அரசருக்குரியதையும், லங்காஸ்டர் கார்ன்வால் கோமகன் என்பவருக்குரியதையும், செஸ்டர், ரிச்மாண்ட் கோமகனுக்குரிய நிலங்களிலிருந்து பெற்ற வருவாய்களோடு, நில மீட்பினால் பெற்ற வருவாய்களையும் சேர்த்து ஹென்றி பெற்றுக்கொள்ள இவருடைய முதல் பாராளுமன்றம் இசைவளித்தது. மூன்றாவது ரிச்சர்டை

ஆதரித்தவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களும் இவை களோடு சேர்ந்தன. யார்க், லங்காஸ்டர் மரபினர் திரட்டிச் சேர்த்த சொத்துகள் அனைத்தையும் இப்பொழுது ஹென்றி யும் இவருடைய மரபினரும் அனுபவித்தனர். இவருடைய ஆட்சிக்காலத்தின்போது நிலப் பறிமுதல், மீட்பு ஆகியவற் றாலும் அரசரது நிலவுடைமை பெருகிற்று. எடுத்துக் காட்டாக, சர் வில்லியம் ஸ்டேன்லியின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன; 1495-ல் யார்க் கோமகனின் நிலங்கள் மரபற்றவர் உடைமையென்ற முறையில் அரசரை அடைந் தன. அரசரின் நிலங்கள் பரப்பில் பெருகியதோடன்றி, நல்ல பராமரிப்புக் காரணமாக மதிப்பில் மேம்பாடு அடைந்தன. எல்லாச் செலவுகளும் போக, அரச உடைமைகளில் இருந்து கிடைத்த வினாச்சலின் மதிப்பு 3764 பவுனிலிருந்து 1504-ல் 25,145 பவுனாக உயர்ந்தது. லங்காஸ்டரின் கோமகனுக்குரிய நிலங்களிலிருந்து வருமானம் 1488-ல் 666 பவுனாக இருந்தது. 1508-ல் 6566 பவுனாக உயர்ந்தது.[1]

இடர்காப்புதவிகளும், திருமணவினா ஆதாயங்களும், அரசரைச் சென்றடைந்தன. ஹென்றியின் முதல் மகளாகிய மார்கரெட்டை நான்காம் ஜேம்ஸிற்குத் திருமணம் செய்து வைத்தபொழுதும், அரசரின் மூத்த மகன் ஆர்த்தர் வீரத் திருத்தகையான பொழுதும், திரட்டப்பட்ட நிதி உதவி களின் பொழுதும் அரசருக்கு நிலமானியத் தீர்வை கிடைத்தது. அரசரிடமிருந்து நேரடியாக நிலம்பெற்றவர்கள் இத் தீர்வைகளிலிருந்து தப்பிவிடாமல் பார்த்துக்கொள்ளப் பட்டார்கள். வீரத் திருத்தகைப் பட்டங்களோ அடிக்கடி பறிமுதல் செய்ததால் தீர்வை செலுத்துவோரின் எண்ணிக் கையும் அதிகரித்தது. தலைமைக் குத்தகைக்காரர்கள் படை யுதவி யளிக்க வேண்டிய வழக்கம் மறுபடியும் மேற்கொள்ளப் பட்டது. காலியான மேற்றிராணியார் பதவிகளுக்கும், திரு மடத்தலைவர் பதவிகளுக்கும் ஆட்களை அமர்த்தும்பொழுது இத்தகைய நிதியுதவிகளை அரசர் பெற்றுக்கொண்டார். உணவுப்பொருள் தருவித்துக் கொடுக்கும் உரிமை அரசருக் குரியனவாதலால் ஒருதரப்பான விலைமதிப்பில் அரசருக்கான பொருள்களை வாங்க அரசாங்க அலுவலர்கள் அதிகாரம் பெற்றார்கள்.

நீதி வழங்கும் முறை, வருவாயின் இன்னொரு செல்வ மூல மாகும். கட்டணம் செலுத்துதல், தண்டம் விதித்தல், மன்னிப்

[1] F. C. Dictz, "English Government Finance."

பளித்தல், நீதிமன்ற முறையில் அரசரின் ஆதரவைப் பெறல் ஆகியவை வருவாய் வளமாகப் பயன்படுத்தப்பட்டன. பொதுச்சட்ட நீதிமன்ற நடவடிக்கைகளுக்குத் துணையாக இதேபோன்ற நீதிமன்றங்கள் அல்லது கவுன்சில்கள் அமர்த்தப்பட்டன. இவைகளிலிருந்தும் கணிசமான அளவு, நிதி ஆதாயம் அரசருக்குக் கிடைத்தது.

கம்பளம், துணி, பதனிட்ட தோல், [illegible] ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட சுங்க வரியும், இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் எடை, மதிப்பின் மீதான தீர்வைகளும் அரசருடைய நிலையான வருவாய்களாக இருந்தன. ஹென்றியின் முதல் பாராளுமன்றம் இச் சுங்க வரியை அரசரின் வாழ்நாள் முழுவதும் விதித்துத் திரட்டிக்கொள்ள இசைவளித்தது. ஹென்றிக்குப் பின்வந்த அரசர்கள் இவ் வரி திரட்டும் அதிகாரத்தை முதலாம் சார்ல்ஸ் அரசர் காலம் வரை பெற்றுவந்தார்கள். ஹென்றியின் அமைதி நாடும் வெளிநாட்டுக் கொள்கை, உள்நாட்டு அமைதி, வெளிநாடுகளுடனான உடன்பாடுகள், கடனுதவி, தொழில் முயற்சிகளுக்கு அளித்த ஊக்கம் ஆகியவைகளால் உருவான நிலைகள் சுங்க வருவாய்களை விரைந்து விரிவாக்கின. இவர் பட்டமெய்தியதற்குமுன், இவைகளிலிருந்து ஆண்டுதோறும் 20,000 பவுன்கள் கிடைத்தன. இவருடைய முதல் பத்தாண்டு ஆட்சிக் காலத்தில் இவ் வருவாய் 33,000 பவுனாக இருந்தது. பின் இது 40,000 பவுனுக்கதிகமாக உயர்ந்தது.

வரவும் செலவும்

ஒழுங்காக ஆண்டுதோறும் கருவூலம் பெற்ற வருவாய் 52,000 பவுனிலிருந்து 142,000 பவுனாக உயர்ந்தது. செலவினங்களை விழிப்புடனிருந்து கட்டுப்படுத்தியும், நிதியாட்சியில் மேம்பாடுகளைச் செய்தும் பதவியேற்றுக்கொண்ட ஐந்தாண்டுகளில் ஹென்றி கணக்குகளைச் சமன்செய்ததோடு, இதற்குப்பின், பத்தாண்டுகளில் ஆண்டு வருவாயில் உபரியையும் காணத் தொடங்கினர். அரசர் இந்நிலையில் முழுமையாக நிதிச் சுயேச்சை யடைந்தார். முற்றிலும் தம் சொந்தக் கட்டுப்பாட்டில் இவருடைய இயல்பான வருவாய்கள் இருந்தமையால் அரசாங்கத்தின் இயல்பான தேவைகளுக்கு இவை போதுமானவைகளாக இருந்தன. இந்நிலையைப் போர் அல்லது முறைகேடான ஆட்சி பாதிக்கும்பொழுது, பாராளுமன்ற நிதியளிப்பு, கடன் கொள்ளுதல், கட்டாயக் கடன்கள் என்ற

பெயரில் பொருள் திரட்டுதல், வலிந்து கடன் கொள்ளுதல், ஆகிய இயல்பு மீறிய வழிகளில் பொருள்திரட்ட வேண்டியிருக்கும்.

இவருடைய ஆட்சிக்காலத் தொடக்கத்தில், நிதிநிலை மேம்பாடு அடையாத பொழுதும், உள்நாட்டில் அமைதி கேடுற்ற பொழுதும் வெளிநாட்டில் பொறுப்புகளை நிலைநாட்ட முயன்றபொழுதும் இவர் நல்ல நிதி வளவாய்ப்புகளைப் பெற்றிருக்கவில்லை. புதிய மரபினர் நிலைப்பேறு எய்தாத பொழுது கடன் கொள்ளுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகும். 1486-லும் 1489-லும் சிறிய தொகைகளில் வலிந்து கடன்கள் திரட்டப்பட்டன. இவைகளைக் குறிப்பிட்ட காலத்தில் திருப்பியளித்ததால் இவர்மீது மக்களுக்கு நம்பிக்கை யேற்பட்டது. ஃபிரான்சிற் கெதிராக பிரிட்டனியின் தரப்பில் மக்கள் ஆதரவைத தேடிக்கொள்ளும் பொருட்டு இவர் 1491-ல் தலையிட்டு ஃபிரான்சின் அரசரிடமிருந்து கட்டாயக் கடன் கோரினர். 1495-ல் இப்படிப்பட்ட ஒரு முறையை மேற்கொள்ளப் பாராளுமன்றம் இசைவளித்தது. போரச்சத்தைத் தவிர்க்க அரசருக்கு நிதிஉதவி யளிப்பது இயல்பாக இருந்தது. 1487-ல் சிம்னெல்லின் கிளர்ச்சிக்குப்பின், நாட்டின் பாதுகாப்பிற்காகப் பாராளுமன்றம் அரசருக்கு வரிவிதித்துக்கொள்ள வழி செய்தது. பிரிட்டனியின் பாதுகாப்பிற்கும் இது நிதிஉதவியளித்தது. 1496-ல் ஸ்காட்டிஷ் போருக்காக 160,000 பவுன் அளிக்கப்பட்டது. இந்நிதியளிப்பு அரசருக்குப் பெரும் ஆதாயமாக அமைந்தது. பேச்சு வார்த்தைகள் நடத்தி அரச தந்திர முறைகளில் போரைத் தவிர்த்து இவர் வெளியுறவை வகுத்துக் கொண்டதால்போர்ச்செலவு மிகவும் குறைந்தது. லங்காஸ்டிரியர்களைப்போல் ஆதாயமில்லாப் போர்களில் ஈடுபடாமல் ஹென்றி வரவையும் செலவையும் சமன்செய்ததால் செலவின் அளவு மீறிவிடவில்லை. இவருடைய முறைகள் பின்பற்றப்படுகிறவரை டியூடர் முடியாட்சியின் நிதிநிலை உறுதியாகப் பேணப்பட வேண்டுமென்பது இவரது கருத்தாகும். வரவு செலவைக் கவனியாததும், திறமையின்மையும், ஊழலும், அரசாங்கத்தின் பெருகிவரும் பொறுப்புகளும், போரும், பணமதிப்புக் குறைவும் எட்டாம் ஹென்றியின் காலத்திலும், உல்சியின் காலத்திலும் கடன் தீர்வுத்திறத்தை அழித்தன.

பழக்கமான முறைகளைத் திறமையோடு பயன்படுத்தி நிதிநிலை மீட்கப்பட்டது. வருவாய்களைப் பொறுத்தவரையில் புதிய முறைகள் கையாளப்படவில்லை. முடியாட்சி பெற்ற

இந் நிலையை அரசிலமைப்பின் படி ஹென்றியின் முன்னோர்களும் பெற்றிருந்தார்கள். நான்காவது எட்வர்டு மெய்யாகவே இந் நிலையை எட்டியிருந்தார். அரசர் சொந்தச் செலவில் வாழ வேண்டுமென்ற இடைக்காலக் கருத்து நடைமுறையில் நிறைவேறியது. மக்களின்மீது விதிக்கப்படுகின்ற மற்றத் தீர்வைகள் அனைத்தும் பாராளுமன்ற இசைவிற்குட் பட்டதென்பதும் மறுக்கப்படவில்லை. எப்பொழுதாவது மேற்கொள்ளப்படும் வன்கடன்களும், கட்டாயக் கடன்களும் பாராளுமன்ற உரிமையை மீறிய செயல்களாகக் கருதப்படவில்லை. இதனால், பாராளுமன்றம் அடிக்கடி கூட்டப்படவில்லையென்றாலும், இச் செயல் அரசியலமைப்புக் கருத்துகளை மீறியதாகவும் கருதப்படவில்லை. பாராளுமன்றத்தைக் கூட்டி நிதியுதவி பெறுமல் அரசாங்கம் நடத்தும் ஓர் அரசர் அரசியலில் மக்கள் விருப்பத்திற்கும், அரசியலமைப்பிற்கும் இணங்கி நடந்துகொண்டதாகக் கருதப்பட்டார்.

வரம்பு மீறிய செலவுகளுக்குப் பாராளுமன்றத்தின் துணையை நாடுவது தவிர்க்க முடியாததாக இருந்தது. இத் தகைய குறையை தம் ஆட்சிக் காலத்தில் ஏழாம் ஹென்றி ஆறு தடவைகள்தாம் மேற்கொண்டாரெனினும், எட்டாம் ஹென்றி :பிரான்சுடனும் ஸ்காட்லாந்துடனும், போர் தொடுத்ததால் 1512, 1514, 1515, 1523-ல் நிதி உதவி பெற இம் முறையைக் கையாள வேண்டியதாயிற்று. பாராளுமன்ற நியளிப்புத் தொல்லை பெருத்த எதிர்ப்பையும் தாமதத்தையும் உண்டாக்கியதோடு, நிதியுதவியும் மெதுவாகவே கிடைத்தது. 1525-ல் உல்சிக்குத் தேவையான நிதியைப் பாராளுமன்ற வரம்பிற்குட் படாத வரிகளின் வாயிலாகத் திரட்ட முற்பட்டபொழுது பெரும் இடர் ஏற்பட்டது. இத்தகைய வரிவிதிப்பைத் திருச் சபையினரும் மற்றவர்களும் கடுமையாக எதிர்த்தார்கள்.

மிதமிஞ்சிய பணத்திற்குப் பாராளுமன்றத்தை நாடுதல் முற்றிலும் உகந்த ஏற்பாடாகத் தோன்றவில்லை. பத்தில் ஒரு பங்கையும், பதினைந்தில் ஒரு பங்கையும் வரியாகக் கோரிப் பெறுதல் வழக்கொழிந்த முறைகளாகும். ஒரு நகரில் அல்லது அரசரின் பண்ணை மனையைச் சேர்ந்த நிலத்தில் வசிப்பவரின் இயங்குடைமையின்மீது பத்தில் ஒரு பகுதியும், வேறிடங்களில் வசிப்பவரின்மீது பதினைந்தில் ஒரு பங்கும் வரிவிதித்துக்கொள்ள பாராளுமன்றம் அனுமதியளித்தது. இது 1334-ல் நிருணயிக்கப்பட்டதாகும். இவை குடியிருப்பு மனைகளின்மீதும் நிலங்களின்மீதும் விதிக்கப்பட்டதேயன்றி,

இயங்கு பொருள்களின்மீது விதிக்கப்படவில்லை. பின்னர், இந் நிதியளிப்பு வழக்கமாக அரசருக்குக் கிடைத்து வந்தது. இதிலிருந்து அரசருக்கு 40,000 பவுனுக்குக் குறையாமல் கிடைத்தது. இதைக் கூட்டவும் குறைக்கவும் இயலாதிருந்தது. படிப்படியாக, இத் தொகை 32,000 பவுனைக் குறைந்தது. இத் தொகைக்கும் நாட்டின் வரிவிதிப்புத் திறமைக்கும் தொடர் பில்லாது போயிற்று. அரசரால் நிப் பாராளுமன்ற உறுப் பினரால் அமர்த்தப்பட்டவர்களால் இத்தகைய வரிகள் திரட்டப்பட்டதால் ஆட்சிமுறையில் — வரி திரட்டலில் பல குறைபாடுகள் தோன்றின.

வரிவிதிப்பின் மாற்று முறைகளில் செய்யப்படவேண்டிய சோதனைகளுக்கான விருப்பத்தை இக் குறைபாடுகள் குறிப் பிட்டன. 15-ஆம் நூற்றாண்டில் பல சோதனை முறைகள் செய்துபார்க்கப்பட்டன. இவை அனைத்தும் தோல்வி யடைந்தன. 1489-ல் தம் ஆணையர்களைக்கொண்டு வருவாய்மீதும் இயங்குபொருள்மீதும் ஹென்றி வரி விதிக்க முற்பட்டபோது தோல்வி கண்டார். சமூக நிலைக் கேற்பத் தனிப்பட்டவர்களின்மீது 1512-ல் இவர் விதித்த பலகட்டத் தலைவரியும் தோல்விகண்டது. இருப்பினும், 1514-ல் ஒரு புதிய வரி தோன்றியது. இது 150 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தது. ஊதியங்கள், சொந்த உடைமைகள், வாடகைகள் ஆகியவைகளின் மீதான வரிவிதிப்பே "உதவித் தொகை" எனப்பட்டது. வரிதிரட்டும் அலுவலர் இதை மதிப்பீடு செய்தனர். முதலில் நெகிழ்ந்து காணப்பட்ட உதவித்தொகை படிப்படியாகக் கடினமாயிற்று. உதவித் தொகையின் அடிப்படையில் ஒரு நிலத்தின்மேல் ஒரு பவுனுக்கு நான்கு ஷில்லிங்கும், சொந்த உடைமையின்மேல் இரண்டு ஷில்லிங் 8 பென்சும் வரி விதிக்கப்பட்டது. ஒருதர மான மொத்த வருவாய் நிருணயிக்கப்படவில்லையெனினும், இது விரிவடையக் கடினமாக இருந்தது. முதலில் 100,000 பவுனுக்கும் அதிகமாக இருந்த இந்த உதவித் தொகை 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் 80,000 பவுனைக் குறைந்துவிட்டது.

திறமையான நிருவாகச் செயற்பாட்டிற்கு நிதிச் சுயேச்சை தேவையான ஓர் அடிப்படையாக இருந்தது. அரசின் உயர் அலுவலர்களையும், துறைகளையும், அரசரின் கவுன்சிலையும் திறமையாகப் பயன்படுத்தி ஏழாம் ஹென்றி பெரும் வெற்றி கண்டார். இந் நிறுவனங்கள் அனைத்தும் அரண்மனையின் புறவளர்ச்சியே யாகும். அரசரின் சொந்த

அலுவல்களையும் பொது அலுவல்களையும் இக் காலத்தில் வேறுபடுத்திப் பார்க்கவியலாது. ஆனல் சில அலுவலர் தனிப்பட்ட அரசாங்கத் தொடர்புள்ள பணிகளால் அரண்மனையிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கப்பட்டார்கள். அரண்மனைச் சார்புடைய பதவிகளில் மற்றவர்கள் இருந்து வந்தார்கள். முதல் வகையில், உயர்முறைமன்ற முதல்வரின் (Chancellor) தலைமையின்கீழ் உள்ள உயர்முறை மன்றம், முத்திரைக் காப்பாளரின் கீழுள்ள அரச முத்திரை அலுவலகம், ஒரு பொருளாளரையும் நிதித்துறை முதல்வரையும் கொண்ட கருவூலம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். கப்பற் படையும், படைவகை அமைப்புகளும் உயர் கப்பற்படைத் தலைவர், குதிரைப்படைத் தலைவர், படைக்கலத்தலைவர் ஆகியவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. பொருளாளரின் பதவியும், அரண்மனை அலுவலர், செயல்முகவர் ஆகியோரின் பதவிகளும் அரண்மனைத் தொடர்புடையன. இவர்கள் கவுன்சிலில் இடம் பெற்றிருந்தார்கள். பொதுப் பதவிகளுக்கும், அரண்மனைப் பதவிகளுக்கும் வேறுபாடு கிடையாதென்பது ஏழாம் ஹென்றியின் அவை வளர்ச்சியால் தெரிய வருகிறது. கடனகப்பெற்ற பெருந்தொகை, அரச நிலங்கள், நீதிமன்ற ஆதாயங்கள், சுங்க வரிகள், பாராளுமன்ற நிதியளிப்புகள் போன்றவைகளை நிதித்துறையிலிருந்து அகற்றி அவை (Chamber) யின் கட்டுப்பாட்டிற்கு விடப்பட்டன. கணக்குவைப்பு நோக்கங்களுக்காக நிதித்துறையின் பணிகள் அரசரின் சொந்த நடவடிக்கையால் மேற்பார்வையாளர் மன்றத்திற்கு மாற்றப்பட்டன.

அரசரின் தலைமை, துறைகளின் இயக்காற்றலாக இருந்தது. அரசரின் விருப்பத்தைத் துறைகள் நிறைவேற்றின. துறைத்தலைவர்கள் அரசரால் அமர்த்தப்பட்டார்கள்; நீக்கப்பட்டார்கள். ஒவ்வொரு துறைத்தலைவரும் தம் அதிகார எல்லைக்குள் நின்று அரசரின் விருப்பை நிறைவேற்றினர். அரசரின் விருப்பு, விதிமுறைக்குரியதாக வெளிப்பட்டது. நிதித்துறை முதல்வர் மன்றத்தில் சாசனங்கள், கட்டளைகள், அரசுப் பட்டயத் தனியுரிமைகள் போன்ற அரச நடவடிக்கைகளில் முத்திரைச் சின்னம் இடப்பட்டதால் இவை உறுதிப்பாட்டிற்குள்ளாயின. இடைக்காலத்தில் அன்றாட ஆட்சி நடவடிக்கைகளில் பெரும் முத்திரை[1] பயன் பட்டதுபோல் அரசரின் தனி இலச்சினை[2] ஓரளவிற்குப் பயன்

[1] பெரும் முத்திரை—Great Seal

[2] தனி இலச்சினை—Privy Seal

படும் முறைமை பெற்றது. நிதித்துறையிலிருந்து பணம் வழங்கிடுவதற்கான பற்றுணைச்சீட்டோடு குறிப்பாக, அரசரின் தனி இலச்சினை தொடர்புகொண்டது. அரசரின் சொந்தக் கருத்துகளை வெளியிடும் முறைகளில் ஒன்றுன "கட்டளை" இப்பொழுது விதிமுறைப் படுத்தப்பட்ட தெனலாம். அரசரின் தனிப்பட்ட செயல்களை உடனுக்குடன் கவனித்துச் செயல் படுத்துவதற்காக முதலில் தனி இலச்சினைமுறை பயன் படுத்தப்பட்டது. விதிமுறைப்படுவதில் பெருமுத்திரையைத் தனி இலச்சினை பின்பற்றியதால் இதற்குத் துணையாகச் சிறப்பு அரச முத்திரை பயன்பட்டது. பின்னர், அரசர் கையொப்பம் பயன்படுத்தப்பட்டது. அரசாங்கம் விரைந்து விரிவடையும் காலத்தில் நேரடியாக அரச கட்டளையைப் பெற்றவர்கள் பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கினர்கள். எல்லாச் செய்திப் போக்குவரத்துகளும், அரசரின் செயலர் வழியாக நடைபெற்றன. பழங்காலத் தொடர்புடைய நிதித் துறைத் தலைவர், பொருளாளர் போன்றவர்களைப் போலன்றி, வளர்ந்துவரும் ஆட்சித் துறையின் ஒவ்வொரு பிரிவிலும் அரசரின் செயலர் ஈடுபாடு கொண்டார். மேலும், அரசரின் நேர்முகப் பார்வையின் கீழ், அரச தந்திரப் பேச்சுவார்த்தைகள், வாணிகம், வியாபாரம், அரசிற்குள்ளெழும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவைகளின் மீது இவர் செயலாட்சி செய்தார். பதினேழும் நூற்றாண்டின் பிற்பாதியில், அரசரின் பணியாளர்களுக்குள் செயலர் முதல்நிலையாளரானர். ஏழாம் ஹென்றியின் காலத்தில் பெரும் சிறப்பிற்குரியவர்கள் இப் பதவியில் இருந்தார்கள்.

அவை (Council) யின் அமைப்பு

மூன்றும் எட்வர்டு காலத்திலிருந்து இந்த அவை பெரும் செல்வர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. லங்காஸ்டிரிய மரபினர் காலத்தில் உயர்குடியினர் இவ் வகையில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இடைக்காலத்தில் பெருங்குடியினரின் உண்மையான பெருஞ்சிறப்பை இது வெளிப்படுத்தியது. இவ்வாறு அமைந்த அவை, திறமையற்றும், பாழ்செய்யும் உட்குழுக்களையும் கொண்டிருந்ததோடு வெளிநாட்டுப்போரை வெற்றியோடு நடத்தும் திறமையின்றியும், உள்நாட்டில் அமைதியைப் பேணுவியலாதும் இருந்தது. உயர்குடியினர் இப்பொழுது செயல்திறமற்றும், வலுவின்றியும், நாணயமற்றுமிருந்தனர். நான்காம் எட்வர்டு அரச அலுவலர்களைப் பெரும் எண்ணிக்கையில் அவையில் அமர்த்தினர். யார்க்கியர்கள் சென்ற வழியில் டியூடர்களும்

சென்றுர்கள். டியூடர்கால அவையின் அமைப்பை வரைந் துரைப்பது கடினமாகும். 1460-க்கும் 1540-க்கும் இடைப்பட்ட காலத்திய அவை நடவடிக்கைகள் பற்றிய பதிவுகள் கிடைக்க வில்லை. ஏழாம் ஹென்றியின் காலத்திய பதிவுகளும் பிற் காலத்தில் மறைந்துவிட்டன. இதன் சில பகுதிகளிலிருந்து அவைபற்றிய சில செய்திகளை நாம் அறிகிறோம். அவையின் செயற்பாடுகள் பற்றிய முறையான குறிப்புகளோ விளக்க விரிவான சான்றுகளெதுவும் கிடைக்கவில்லை. உயர்குடி யினரின் ஆதிக்கத்தால் மெலிவுற்றிருந்த அவையை டியூடர்கள் ஏற்றுச் செயல்படுத்தியதாகத் தெரிகிறது. இதன் உறுப் பினர்கள் நடுத்தர வகுப்பினர்களாகவும், அரசாங்கப் பணி யாளர்களாகவும் இருந்தனர். ஏழாம் ஹென்றியின் அறிவுரை யாளர்களாகிய மோர்டன்[1], பாக்ஸ்[2], வார்டன்[3], பிரே[4], லோவெல்[5], பாய்னிங்ஸ்[6], எம்சன்[7], டட்லி[8] ஆகியோர் திருச்சபையினராகவும், வீரத் திருத்தகைகளாகவும், வழக் கறிஞர்களாகவும் இருந்தனர். அரசாங்கத்தின் இப் பிரிவின் அமைப்பில் அரசர் அதிகாரம் பெற்றிருந்தார். சமூக, பொருளாதார மாற்றங்களுக்கேற்பவும், பெருங்குடியினரின் இயல்பான நலிவிற்கிணங்கவும் இதன் உறுப்பினர் அமர்த்தப் பட்டனர். பழம்பெருங்குடியினர் அவையில் இடம்பெற வில்லை. புதிய படைப்பினராகிய பெருங்குடியினர் அவைக்கு அழைக்கப்பட்டார்கள். இடைக்காலத்தில் இருந்ததுபோல் திருச்சபையினர் அரசாங்கப் பணியில் பெரும் சிறப்புப் பெற வில்லையெனினும், புகழ்பெற்ற திருச்சபையினர் இக் காலத் தில் அரசாங்கத்தின் சிறப்பான உறுப்பினராக இருந்தனர். ஆனல், காலப்போக்கில் இவர்கள் சிறப்பிழந்தார்கள். புதிய முடியாட்சிக்குப் பெருமளவு ஈடுபாட்டையும், திறமையான ஆதரவையும் அளித்த புதிய வகுப்பினர் அவையின் அமைப் பில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். உறுப்பினரின் எண்ணிக்கை மாறிக்கொண்டே இருந்தது. ஆனல், அவையின் சரியான உருவளவு முக்கியமானதன்று. கலந்தாராய விரும்பியவர்களையும், சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ள

[1] Morton
[2] Fox
[3] Wardon
[4] Bray
[5] Lovell
[6] Poynings
[7] Empson
[8] Dudley

விரும்பியவர்களையும் அரசர் அவையின் உறுப்பினர்களாக அமர்த்திக்கொண்டார். அரசருக்கு அறிவுரை அளிப்பவர்களாக இவர்கள் மாறினர்கள். இவர்கள் கலந்தாராய்ந்தவைகளை இரகசியமாக வைத்துக்கொண்டார்கள். மேலும், பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளாதவர்களையும் அரசர் அவைக்கழைக்கலாம். உறுப்பினர்கள் அவையில் ஒழுங்காகக் கலந்துகொள்ளவில்லை. தாம் விரும்புகிறவர்களை அரசர் அழைக்கலாம். எங்கும் எப்பொழுதும் கூடுமாறும் இவர்களை அரசர் அழைக்கலாம்.

அவையின் செயற்பாடுகள்

அரசருக்கறிவுரை அளித்தல், அவையின் மிகத் தொன்மையான, முதன்மையான பணியாகும். அரசர் விரும்பும் நோக்கங்களுக்காக அவையின் அறிவுரையை நாடினர். பெற்ற அறிவுரையையொட்டி எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதை அரசர் முடிவு செய்து கொள்ளலாம். உல்சியின் நீண்டகால ஆதிக்கத்தின்போதும், பிற்காலத்தில் தாமஸ் கிரோம்வெல்[1]லின் காலத்திலும் ஒரு பெரும் அமைச்சரின் நடவடிக்கையால் அவையின் அறிவுரைப் பணிகள் பெருமளவில் ஒதுக்கி வைக்கப்பட்டன. இருப்பினும், அவையை அறிவுரையாளர்களின் கூட்டமெனக் கருதுவது தவறாகும். கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை கூடியும் குறைந்தும் இருப்பினும், இவர்கள் ஒரு குழுவாக இருந்து பலவகையான அலுவல்களைச் செய்து வந்தார்கள். அரசருக்கும் அமைச்சர்களுக்கும் அவை அறிவுரை மட்டும் அளிக்கவில்லை. இது நீண்டகாலமாகவே நீதி வழங்கும் அதிகாரங்களைப் பெற்று வந்துள்ளது. மேல் முறையீடுகளைக் கேட்டு முடிவு செய்யும் இதன் அதிகார வரம்பைப் பாராளுமன்றமும் பொதுச் சட்ட நீதிமன்றங்களும் ஏற்க மறுத்தன. எனினும், பாராளுமன்றம் இதைச் சில சமயங்களில் மறுத்தும், சில சமயங்களில் ஏற்றுக்கொண்டும் உள்ளது. அவசரச் சட்டங்களையும் போறிக்கைகளையும் வெளியிட்டு, இது சட்ட ஆக்கப் பணிகளையும் ஏற்றுச் செயல்படுத்திய தெனலாம். ஆட்சி விவரங்கள் பற்றியும் இது நிருவாகக் கட்டளைகளைப் பிறப்பித்துள்ளது. அரசர் இல்லாத பொழுது அவைக்கூட்டங்களுக்கு அவைத்தலைவர்[2] தலைமை தாங்கினர். இப் பதவியின் வரலாறு 1496-ல் இருந்து தொடர்

[1] Thamas Cromwell
[2] J, F. Baldwin, "King's Council with Middle Ages", 445

கிறது. அரசரின் வாய்மொழியால் இவர் அமர்த்தப்பட்டார் என்பதிலிருந்து இவர் அரசரின் சொந்தக் கட்டுப்பாட்டிற்குட் பட்டிருந்தது தெளிவாகிறது.[1] இதன் செயல் முறைகளை ஓர் எழுத்தர் பதிவு செய்தார். ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத் தொடக்கத்திலிருந்து இவர் இருந்து வருவதாகத் தெரிகிறது. இந்த எழுத்தர் பதவி 1405-ல் இருந்து தொடர்ந் திருந்து வருகிறது. வெஸ்டமின்ஸ்டர் அரண்மனைக்குள் இருந்த விண்மீன் அறையில் நீண்ட காலமாகவே இதன் தலைமையகம் இருந்து வந்தது.

அவையின் செயற்பாடுகள் அனைத்திலும் அரசரின் ஆதிக்கம் நிலவியது. அரசரின் அதிகாரத்தை இது செயல் படுத்தியதேயன்றி, இதன் அதிகாரத்தை இது செயல்படுத்திய தாகத் தெரியவில்லை. அரசர் இருந்த இடங்களில் எல்லாம் அவை இருந்ததெனலாம். இருந்தபோதிலும், அரசர் தங்கி யிருந்த் இடங்களில் எல்லாம் இதுவும் சென்று தங்கியிருந்த தென்பது நடைமுறையில் இயலாததாகும். ஏனெனில் இதற்கென ஒரு நிலையான இடத்தைப் பெற்று அரசாங்கப் பணிகளையும், நீதி வழங்கும் பணிகளையும் இது தவறாமல் ஏற்றுச் செயல்படுத்த வேண்டியிருந்தது. எனவே, குறிப் பிட்ட சில அவையினர் அரசரைப் பின்தொடர்ந்தனர். மற்ற வர்கள், பின் தங்கியிருந்து அன்றாடப் பணிகளை ஏற்றுச்செயல் படுத்தினர்கள். இடையறாது இடம் பெயர்ந்து கொண்டிருந்த அவைக்கு இத்தகைய ஏற்பாடு தேவையாயிற்று. ஏழாம் ஹென்றியின் காலத்திலும், முன்னரும், எட்டாம் ஹென்றியின் காலத்தில் 1526-லும் ஒரு குறிப்பிட்ட அளவிலான அவை யினர் அரசருடன் செல்ல வேண்டுமென்பதை வலியுறுத்தும் நோக்கத்தோடு, எல்த்தாம் என்னுமிடத்திலிருந்து அவசரச் சட்டமொன்று பிறப்பிக்கப்பட்டது.[2] அறிவுரையாளர்கள் என்ற முறையிலும், அரசக் கட்டளைகளை நிறைவேற்றுதற்கான கருவிகள் என்ற முறையிலும் இவர்கள் அரசருடனிருக்கும் பொழுது அரசாங்க அலுவலர்களாக இருந்து வந்திருப்பதை இதிலிருந்து அறிகிறோம். அவையின் இவ் வுட்பிரிவு பெருமளவு இயல்பானதாக இருந்தது. அவையின் இரு நிலையான பிரிவுகளாக அமையும் அளவிற்கு வேறுபாடுகள் தோன்ற வில்லை. ஒரு பிரிவிலிருந்து அவையினர் இன்னொரு பிரிவிற்குச் சென்றுவந்தனர். இரண்டும் ஒரேமாதிரியான பணிகளையே

[1] Lord President of the Council

[2] Newton, "Tudor Reforms in the Royal House Hold," 240-44

கவனித்து வந்தன. ஒன்று இன்னொன்றோடு தொடர்பு கொண்டிருந்தது. அரசர் வெஸ்டமின்ஸ்டருக்குத் திரும்பிய பொழுது அவையின் இரு பிரிவுகளும் ஒன்று சேர்ந்தன. அரசர் அவைக்குத் தலைமை தாங்கினர். இதற்குரிய அலுவலைக் கவனித்து முடிவுசெய்ய அவை விண்மீன் மன்றத்தில் அமர்ந்தது. இதன் பணிகள் நீதி சார்ந்தனவாக மட்டும் இருக்கவில்லை. அரசருடனிருந்தவர்கள் சில நன்மைகளைப் பெற்றனர். வெஸ்டமின்ஸ்டரில் அமர்ந்தவர்கள் இவர்களுடைய முடிவுகளையேற்றுச் செயல்பட்டு வந்தனர்.

அவையின் அதிகார வரம்பு

அவையின் இவ் விரு பிரிவுகளும் முறையாகப் பிரிந்து செயல்படவில்லை. அரசருடன் சென்றவர்கள் நடைமுறையில் அரசரின் கட்டளைகளைச் செயல்படுத்துவதையும், அரசியல் ஆய்வுகளை நடத்துவதையும் முதன்மையாகக் கருதினர்கள். விண்மீன் அவையில் இருந்தவர்கள் நீதியியல் பற்றியவைகளோடு தொடர்புகொண்டிருந்தார்கள். ஆனலும், அரசரோடிருந்த அவைக்கு நீதி வழங்கும் அதிகாரத்தோடு அதைச் செயல்படுத்தும் அதிகாரமுமிருந்தது. நீதி வழங்கும் பணிகளை அவை மேற்கொண்டது டியூடர் காலத்திய வளர்ச்சிகளில் ஒன்றாகும். அமைதியற்ற 15-ஆம் நூற்றாண்டிலும், இதற்கு முன்னும் பயனுள்ள முறையில்அமைதியைப் பேணலும், நீதிச் செயற்பாட்டை உறுதிப்படுத்தலும் தேவையாக இருந்தன. இதைப்பொறுத்தவரையில் பொதுச்சட்ட நீதிமன்றங்கள் பெரும் குறைபாடுடையனவாக இருந்தன. ஆனல், இக் குறைபாடுகளால் அவை பாதிக்கப்படவில்லை. பொதுச்சட்ட நீதிமன்றங்களைப் போலன்றி, குற்றங்கள் நிகழ்ந்த இடங்களில் அவை விசாரிக்கவில்லை. மத்திய கிலையில் இருந்துகொண்டு அவை குற்றங்களை விசாரித்து முடிவுசெய்தது. தலச்செல்வாக்குகளும் நெருக்குதல்களும் நீதியின் போக்கைத் தடை செய்யலாம்; அறங்கூறவையினரையும், சாட்சிகளையும், வழக்காடுகின்றவர்களையும், நீதிபதிகளையும் அச்சுறுத்தலாம் அல்லது கைக்கூலி கொடுத்து வசப்படுத்தலாம். அறங்கூறுநரை அவை நீக்கிவிட்டது. சித்திரவதைக் கெதிரான பொதுச்சட்டத்தை இது தட்டிக்கழித்தது. அவையின் கீழ்நிலை அலுவலர்களின் வழியாக இது தகவல் திரட்டியது. தனிப்பட்டு எழுதிக்கொடுத்த சான்றுகளை இது பயன்படுத்திக் கொண்டது. நீதிமன்றத்தில் வெளிப்படையாகக் கொடுக்கப்பட்ட சான்றுகளை இது பயன்படுத்திக்கொள்ளவில்லை.

பிரமாண அடிப்படையில் குற்றவாளிகளே இது குற்றம் சாட்டி விசாரித்தது. தமக்கெதிராகச் சாட்சி சொல்லும்படி இது குற்றவாளிகளே வற்புறுத்தியது. இந் நோக்கத்திற்காக அரச முத்திரையிட்டுக் கட்டளைகள் அனுப்பப்பட்டது ஒரு முக்கிய மான முறையாகும். இக் கட்டளைகள் பதிவுசெய்துகொள்ளப் படுவதுமில்லை, குறித்துக்கொள்ளப்படுவதுமில்லை, எடுத்துக் கொள்ளப்படுவதுமில்லை. எனவே, இவை இரகசியமாகவே இருந்தன. மேலும், இவை அரசியலமைப்புத் தடைகளுக் குட்படவுமில்லை. கட்டளையைப் பெறுநர் எத்தகைய குறிப் பிட்ட குற்றச்சாட்டுகளையும் எதிர்நோக்காமல் அவைமுன் தோன்றவேண்டும். இவர்களின்மீது சாட்டப்பட இருக்கும் குற்றங்களைப்பற்றி அறியாமலே இவர்கள் அவைமுன் வந்தார்கள். கட்டளைக்குப் பணிய மறுத்தவர்கள் அவையை அவமதித்த குற்றத்திற்குள்ளாவதோடு, அவையின் உசிதம் போல் தண்டிக்கப்படலாம். இந் நடைமுறை விதிகளின் சட்டத்தகுதி ஐயப்பாட்டிற்குரியதாகும். பொதுச்சட்டத்தை மீறி, அரச முத்திரையோடான கட்டளைகளைப் பிறப்பித்தல் முற்காலத்திய சட்டத்தால் தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனல், 1453-ஆம் ஆண்டுச் சட்டப்படி இது சட்டமுறையாக்கப் பட்டது. 1460-ல் இச் சட்டம் செயல்திறனற்றுப்போயிற் றென்றலும், நான்காம் எட்வர்டின் காலத்தில் இது செயற் பாட்டில் இருந்தது.[1]

இவ்வித அதிகாரங்களைப் பெற்றிருந்த அவை, கொடுங் தீமைகள் செய்து வந்தவர்களை அடக்குவதற்குப் பொறுப் பேற்கத் தயாராயிற்று. இதற்கான சட்டங்கள் போதிய அளவு வலிமையுள்ளனவாக இருந்தன. 15-ஆம் நூற்றாண்டின் வில்லேச்சேவக ஊழியர் பராமரிப்புக் கெதிரான சட்டங் களுக்கு 1504-ல் இயற்றப்பட்ட சட்டம் துணையாக இருந்தது. இச் சட்டம், பிரபுக்களுக்கும் தனிமுறையில் அமைந்த படை யினருக்கும் இடையிலான பிணைப்புகளைச் சட்ட முரணாக் கியது. புதிய சட்டங்களை இயற்றுவதைக் காட்டிலும் பழைய சட்டங்களைச் செயற்படுத்துவது அவசியமாயிற்று. இப் பணி களைச் செய்துமுடிக்க அவை பொருத்தமான நிறுவனமாக இருந்தது. இறையிலி நிலங்களின் உரிமைகள் பற்றிய வழக்குகளையும், அரசத் துரோகம், அடாப்பழிபோன்ற வழக்கு களையும் ஏற்று விசாரிப்பதைத் தடுப்பதில் பாராளுமன்றம் வெற்றிபெற்றதெனினும், உறுப்புக் குறைத்தல், சூடு போடு

[1] Boldwin—291. "King's Council with Middle Ages."

தல், சிறைவைத்தல், தண்டம் விதித்தல் போன்ற அதிகாரங்களை இது பெற்றுச் செயல்படுத்தியது. ஆயினும், இறையிலிநிலங்களைக் கவர்ந்துகொள்ளவும், மரணதண்டனை விதிக்கவும், இதனால் முடியாது. இதன் நீதிப் பணிகளை 1487-ல் ஒரு சட்டம் தெளிவாக வரையறை செய்தது. வில்லாட்சேவக வீரர்களைப் பேணுதல், கலம் செய்தல், சட்டம் ஒவ்வாக் கூட்டங்கள் கூடுதல், அறம் கூறுநர்களுக்குக் கையூட்டுக் கொடுத்தல், அரசப் பேராளரின் முறைகெட்ட செயலைக் கண்டித்தல் போன்ற வழக்குகளை ஆராயும் அதிகார வரம்பு நிதித்துறைத் தலைவர், பொருளாளர், அரச முத்திரைக்காப்பாளர், அவையின் மேற்றிராணியார், உலகியற் பிரபு ஆகியவர்களிடமும், அரச நீதிமன்றம், பொதுவழக்கு நீதிமன்றம் ஆகியவைகளின் முதன்மை நீதிபதிகளிடமும் நிலைபெற இச் சட்டம் வகைசெய்தது. முழு அவையின் அதிகார வரம்பைக் குறைக்கவோ, தள்ளி வைக்கவோ, இச் சட்டம் விரும்பவில்லை. குறிப்பிட்ட எண்ணிக்கையில் உறுப்பினர் அவைக்கு வருமாறு இச் சட்டம் வற்புறுத்தியது. அவையின் நடைமுறை விதிகளின் சட்டச் சார்புடைமையின் ஐயப்பாட்டினை இது அகற்றியது. இதன் செயல்தகுதியோடு தொடர்புடைய குற்றங்களை ஆராயும் பொது அதிகாரத்தை இச் சட்டம் பாதிக்கவில்லை. பொய்ச்சத்தியக் குற்றச்சாட்டுகளை ஆராய, அவையின் குறிப்பிட்ட உறுப்பினர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட பொழுது 1495-ல் இத்தகைய சட்டப்படியிலான ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இச் சட்டங்கள் அவையின் நீதியியல் அதிகாரங்களைக் குறைக்கவில்லை; சட்டத்தால் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் அவையை வைக்கவுமில்லை. இதன் அதிகார வரம்பு அரசரின் சிறப்பதிகாரத்திலிருந்து வளர்ச்சியடைந்தது. பாராளுமன்றச் சட்டத்தால் இதன் அதிகார வரம்பு படைக்கப்படவுமில்லை.

விண்மீன் நீதிமன்றமாக அமர்ந்த அவையும், அரசரோடு அமர்ந்த அவையும் வேறுவேறு இல்லையெனினும், இங்கு நடைபெற்ற பணிகளின் சிறப்பான தன்மையும், வேலை ஒழுங்கும் அவையின் இரு நீதியியலுக்கிடையில் ஒரு வேறுபாட்டை உருவாக்கின. 1494-ல் அவையின் கூட்டத் தொடர்களுக்கும் விண்மீன் மன்றத்தின் கூட்டத் தொடர்களுக்கும் இடையேயுள்ள ஒரு வேறுபாடு கண்டுணரப்பட்டது. 1500-ல் சட்ட நடவடிக்கைகளில் விண்மீன் நீதிமன்றம் முதன்முறையாகக் குறிப்பிடப்பட்டது. 1504-ல் சட்டத்தில் இதன் பெயர் இடம் பெற்றது. அரசரோடிருந்த அவை, நீதி யதிகாரங்களை

வைத்துக்கொண்டு செயல்படுத்தியதென்றாலும், இது சிறிதளவு விண்மீன் மன்றத்திலிருந்து வேறுபடத் தொடங்கியது. விண்மீன் மன்றத்தில் இருந்ததைப் போலன்றி, இதில் நீதிபதிகள் இடம்பெறவில்லை. விண்மீன் நீதிமன்றத்தைப்போல் குறிப்பிட்ட காலத்தில் பகிரங்கமாக அமராமல், இது ஆண்டு முழுவதும் தனிப்பட்ட முறையில் கூடியது. விண்மீன் மன்றம் நீதிச் சார்புடையதாக இருந்தமையால் அரசியல் தொடர்புடையவைகளைப்பற்றி அரசர் இதன் அறிவுரையைப் பெறுவதில்லை. ஆனால், இதன் சட்டத்தொடர்புடைய அறிவுரையை அரசர் உவந்தேற்றுக்கொண்டார். சிறிது சிறிதாக, "சாதாரண உறுப்பினர்" எனப் பெயர்பெற்ற உறுப்பினர் தொகுதியொன்று எட்டாம் ஹென்றியின்கீழ் முதன்முறையாகத் தோன்றியது. அரசரோடுள்ள அவையின் கூட்டத்திற்கு இவர்கள் அழைக்கப்படுவதில்லையெனினும், இவர்கள் அவையில் பிரமாணம் எடுத்துக்கொண்ட உறுப்பினர்களாக இருந்தார்கள். இவர்களின் உறுப்பினர் பதவி பெருமைக்குரியதாகக் கருதப்பட்டதெனலாம். திறமையுடையவர்களாக இருந்தவரையில் விண்ணப்பங்களைப் பெறுதல், விசாரணை நடத்துதல், வழக்கமான கடமைகளைச் செய்தல் போன்ற நுட்பத் திறமுடைய கடமைகளை இவர்கள் செய்ததாகத் தெரிகிறது.

எவ்வளவு குறைபாடுடையதாக இருந்தாலும், அவைக்கும் விண்மீன் மன்றத்திற்கும் இடையில் தோன்றிய வேறுபாடு, டியூடர்களின் தொடக்க காலத்திய அவை அமைப்பின் பெரும் வளர்ச்சியின் ஒரு பகுதியாக இருந்தது. 1487, 1495-ல் அமைக்கப்பட்ட குழுக்கள் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. அரசரின் சொந்த அதிகாரத்தாலும், சட்டத்தாலும் இவை தொடர்ந்து செயல்பட்டன. ஏழைமக்களின் குறைகளைக் கேட்டறிய 1493-ல் ஹென்றி ஒரு குழுவை அமைத்தார். நிதித்துறைத் தலைவர் இவைகளைக் கேட்டறியும் முறைகளைவிட இம்முறை எளிதாக இருந்தது. இக் குழுவின் பணிகள் அரசமுத்திரைக் காப்பாளரின் வழியாக அரசரின் மேற்பார்வையில் செயல்பட்டது. அரசருடன் இருந்து பணியாற்றிய இக் குழு, ஒரு நிலையான நீதிமன்றமாக மாறியது. வெஸ்டமின்ஸ்டர் அரண்மனையில் ஓர் அறையில் அரசரின் அலுவலர்களால் நடத்தப்பட்ட இக் கூட்டம் முறைவேண்டு நீதிமன்றம் (Court of Requests) என்ற பெயரில் இயங்கிற்று. இந் நூற்றாண்டின் மத்தியில் தொழில்முறை நீதிபதிகள் இதன் அலுவல் கட்டுப்பாட்டை மேற்கொண்டனர்.

வேல்ஸின் எல்லைப்புறங்கள்

வடக்கிலும் மேற்கிலும் இருந்த அமைதியற்ற மாவட்டங்களின் ஆட்சிப்பணியை மேற்கொண்ட நிறுவனங்கள் அவையின் நடவடிக்கைகளே இங்கெல்லாம் நீட்டித்தன. இந் நிறுவனங்கள் அவையின் கீழ் செயல்பட்டன. ஆங்கிலேயர்களின் அதிகாரம் எல்லைப்புறங்களே எட்டியபொழுது, வேல்ஸின் எல்லைப்புறங்களில் அமைக்கப்பட்ட அரைகுறை சுயேச்சையான நிலமானிய அமைப்புகள் பயனற்றுப் போயின. எல்லைப்புறப் படையமைப்புகள் வழக்கொழிந்து சிறப்பிழந்து போயின. தெற்கு வேல்ஸின் அரண்கள் ஏற்கனவே நலிந்து சிதைந்து காணப்பட்டன. இங்கு அரசரின் அதிகாரங்கள் சென்று செயல்படவில்லை. "எல்லைப்புறங்களின் வழக்கங்கள்" பொதுச்சட்டங்களின் நிலையையேற்றுச் செயல்பட்டன. இருப்பினும், இங்கிலாந்தோடு வேல்ஸ் இணைவதன் ஒரு முன்னறிவிப்பாக, பதினைந்தாம் நூற்றாண்டில், அரசரோடு எல்லைப்புறங்கள் கொண்டிருந்த உறவுமுறை ஒரு பெருமாற்றத்தை ஏற்படுத்தியது. எல்லைப்புறப் பிரபுக்கள் அவையின் அதிகாரத்திற்குள் வந்தார்கள். லங்காஸ்டிரியர் அரியணையேறியதும், லங்காஸ்டர் பிரபுக்கள் அரசர் சார்பில் வந்தனர். 1485-ல் மூன்றாம் ரிச்சர்டு இறந்ததும், இவரது கோமகனுட்சிப் பகுதிகள் ஹென்றிக்கு வந்துசேர்ந்தன. ஜாஸ்பர் டியூடர் 1495-ல் இறந்ததும், பெம்புரோக் ஹென்றிக்குக் கிடைத்தது. வார்பெக்கின் ஆதரவாளராகிய ஸ்டேன்லியைக் கைப்பற்றியதும், இவருடைய நிலமாகிய செஸ்டர் அரசருக்குக் கிடைத்தது. பின்னர், 1521-ல் பிரிகோன்,[1] நியூபோர்ட்[2] கோமகனுட்சிப் பகுதிகள் அரசருக்குக் கிடைத்தன. 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எல்லைப்புறப் பகுதிகளில் பெரும்பாலானவை அரசரை வந்தடைந்தன. இக் காலத்தில் வாழ்ந்துவந்த எல்லைப்புறக் குடும்பங்கள் சிறப்புக் குன்றி வாழ்ந்தன. நான்காம் எட்வர்டினால் அமைக்கப்பட்ட புதிய அரசாங்க அமைப்பு நன்கு வரையறை செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நோக்கத்திற்காக எல்லைப்புறப் பகுதிகளுக்குள் அதிகாரம் செலுத்த இளவரசர் ஆர்த்தருக்கும், இவரது குடும்பத்தினர்களுக்கும் அரசர் உரிமை அளித்தார். இவைகளோடொட்டியிருந்த நான்கு ஆங்கில மாவட்டங்களாகிய சலோப் (Salop), ஹெர்.:போர்டு, (Hereford), வொர்செஸ்டர் (Worcester), கிளெவ்செஸ்டர் (Glovcester) ஆர்த்தரின் அதிகாரத்தில் விடப்

[1] Brecon
[2] Newport

பட்டன. இவர் இறந்தபின் 1502-ல் இவ் வமைப்பு, எல்லைப் புறங்களின் அவை (Council of the Marches) யாக மாற்றி யமைக்கப்பட்டது. தம் மகள் மேரியைக் கவனித்துக் கொள்ளவும், நிருவாகம் செய்யவும், நீதி வழங்கவும் 1525-ல் எட்டாம் ஹென்றி பலரை ஆணையர்களாக இங்கு அமர்த்தினர். முக்கிய கேந்திரமாகிய லட்லோவ் (Ludlow) அரசியல் தலை நகராக வளர்ச்சியடைந்தது. பலதரப்பட்ட அலுவலர்கள் இங்குக் குடியிருந்ததோடு வழக்காடுபவர்களும் வழக்குரைஞர் களும் இங்கு வந்து பெருமளவில் கூடினர்.

வடபகுதிகள்

வடக்கே ஆட்சிப் பிரச்சினை கடினமாக இருந்தது. வேல்ஸ் எல்லைப்புறங்களைப்போல் வடபகுதியும் மலைநாடாக இருந்தது. இங்குப் போக்குவரத்து வசதிகள் குறைவாகவும் கடினமாக வும் இருந்தன. வறிய, முன்னேற்றமில்லாத மக்கள் குறைந்த எண்ணிக்கையில் இங்கு வசித்து வந்தனர். பழமையான வழக்கங்களுக்கும் பற்றுகளுக்கும் இவர்கள் கட்டுப்பட்டிருந் தார்கள். படைமுறை வாழ்க்கையை ஏற்றுக்கொண்டிருந் தார்கள். இங்கிலாந்தில் இருந்ததைப்போல் அமைதியை விரும்பும் நடுத்தர வகுப்பினர் இங்கு வசிக்கவில்லை. பெருங் குடியினர், தொலைவில் தாழ்வெளிகளில் வசித்த படைத்திற முடைய குடிகள், மலைச்சாரல்களில் வசித்தவர்கள் போன் றோருக்கு ஈடுகொடுக்கக்கூடியவர்களாக நடுத்தர வகுப்பினர் அமையவில்லை. இருப்பினும், வேல்ஸ் எல்லையிலிருந்து வடக்கெல்லையை வேறுபடுத்தியது, ஸ்காட்டிஷ் மக்களுக் கெதிரான செயலாக அமைந்ததாகும். நார்த்தம்பர்லாந்து, கம்பர்லாந்து, வெஸ்ட்மோர்லாந்து ஆகிய மூன்று வடக்கத்திய மாவட்டங்களும் எல்லைப்புறக் காப்பாளரின்கீழ் ஒரு படைத் தளமாக உருவாகியது. இது 1309-ல் நிறுவப்பட்டது. வட பகுதியின் பாதுகாப்புப் பிரச்சினைகளால் இம் மாவட்டங்களை முற்றிலும் அரசரின் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர முடியாமல் போயிற்று. இம் முக்கியமான வடமாவட்டங்களை அரசருக் குரியனவாக்க எத்தகைய நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. இடைக்காலத்திய பெருமைகளும் உரிமைகளும் மறைந்தன வென்றாலும், வடபகுதியின் பாதுகாப்பிற்கும் நிருவாகத் திற்கும் அரசரால் படைக்கப்பட்ட பதவிகள் தலச்செல்வர் களிடமே சிக்கின. வேல்ஸின் எல்லைப்புற அமைப்பைப்போல், வடபகுதியின் விவகாரங்களைக் கவனிக்க, மூன்றாம் ரிச்சர்டு ஒரு நிறுவனத்தைப் படைத்தார். இவர் உருவாக்கிய ஆட்சி

முறை அடிப்படையில் டியூடர்கள் உடனடியாகச் செயல்பட இயலவில்லை. வடபகுதிகள் முழுமையாக யார்க்கியர்களை ஆதரித்தன. ஏழாம் ஹென்றியை எதிர்த்து 1487, 1489-ல் இவை கலகம் செய்தன. 1489-ல் நடந்த கலகத்தில் அரசரின் உதவியாளராக வடக்கே இருந்த நார்த்தம் பர்லாந்து கோமகன் கொல்லப்பட்டார். இதற்குப்பின், வடபகுதியின் நிருவாகத்திற்கென சிவில், இராணுவமுறை களை அரசர் மேற்கொண்டார். 1525 வரையில் அரசரின் உதவியாளர் ஒருவர் வடபிராந்திய அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார். இவருக்குதவியாக ஓர் அவை இருந்தது. இது சிவில், கிரிமினல் அதிகாரம் பெற்றுச் செயல் பட்டது. எல்லைக்காப்புத் தலைவரின் மேற்பார்வையில், படையமைப்பு இருந்து வந்தது. இம் முறையில் அமைந்த ஆட்சி பின்னர் குலைந்தது. எட்டாம் ஹென்றியின் மகன் ஹென்றி ஃபிட்ஜ்ராய் (Henry Fitzroy) என்பவரின்கீழ் இப் பகுதி விடப்பட்டது. இவருக்கு உதவிய அவை, டர்ஹாம் (Durham) தவிர மற்ற ஐந்து மாவட்டங்களில் நீதி, நிருவாக அதிகாரங் களைச் செயல்படுத்தியது.[1] இம்முறையும் வெற்றி பெறவில்லை. சிவில், இராணுவ ஆட்சி மீண்டும் நலிவுற்றது. அவையின் அதிகாரவரம்பு யார்க் மாவட்டத்தோடு நின்றுவிட்டது. சமயச் சீர்திருத்த இயக்கத்தின்போது இப் பிராந்தியத்தின் அரசாங்கம் தீர்க்கப்பெறுத பிரச்சினையாகத்தான் இருந்தது.

சான்சரி நீதிமன்றம் (பொதுநேர்மை நீதிமன்றம்)

அரசவையின் அதிகார வரம்போடு ஒத்த அதிகாரத்தை நிதித்துறை முதல்வர் செயல்படுத்தினர். அரசரின் செயலகத் தலைவராக முதலில் இருந்த இவர் அரசரின் கட்டளைகளைச் சட்டப்பூர்வமாக்கும் பெருமுத்திரை நாயகமாகவும் இருந்தார். நீதி நடவடிக்கைகளையும் தொடக்கக் கட்டளைகளையும் பிறப் பிப்பதில் இவர் பங்குபற்றிக்கொண்டார். அரச நீதிமன்றங்க ளால் பயன்படுத்தப்படும் சட்டங்கள் எந்த அளவிற்குத் திறமையாகவும் திருப்தியாகவும் செயல்படுகின்றன என்ப தோடு, இவர் பெருமளவு தொடர்புகொண்டிருந்தார். பொதுச் சட்ட நீதிமன்றங்களில் முறைபெற முடியாதவர்கள் அரசருக் குக் கொடுத்த விண்ணப்பங்களை ஆராய்ந்து முறைசெய்ய வேண்டியது இவர் பணியாயிற்று. திருச்சபையினராக இருந்துகொண்டு அரசருக்கு அறவுரை தரும்பொழுது இவரது கடமைப் பொறுப்புகள் மேலும் அதிகரித்தன.

[1] Reid, R.R., "The king's council," 108

மக்களின் தவறுகளை நீதிமன்றங்கள் தண்டிக்க முடியாத பொழுதும், அரசரின் மனம் நொந்தபொழுதும் இவர் அரசருக்கு அறிவுரை யளித்தார். குறைநீக்கும் பணியை சான்சலர் தனித்தோ அவையோடு சேர்ந்தோ செய்தார். நிதித்துறை முதல்வர் தாமாகவே செயல்பட்டதால் செயலக மாக முதலில் இருந்த இவருடைய துறை, நீதிமன்றத்தின் சில இயல்புகளோடு வளரத் தொடங்கியது. 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பொதுநேர்மை நீதிமன்றம் என்ற முறையில் இது அவையிலிருந்தும், பொதுச்சட்ட நீதி மன்றங்களிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டு விளங்கிற்று. இந் நீதிமன்றத்திற்கான விதிகளை நிதித்துறை முதல்வர் உருவாக்கினர். இவைகளுக்குப் "பொது நேர்மை"[1] எனப் பெயரிடப்பட்டது. தன்னிலையான விதிகளின் வளர்ச்சியோடு திட்டவட்டமான விதிமுறைகளும் தோன்றின. அவையின் விதிமுறைகளைப்போல் இவைகளும் நெகிழ்ந்து காணப்பட்டன.

நீதிமன்ற முறையின் உட்சிக்கல் நிலை

டியூடர் ஆட்சிக்காலத் தொடக்கத்தில் அவையும் அதன் கிளைகளும் பெரும் வளர்ச்சியடைந்தன. இவைகளின் விசாரணை அதிகார வளர்ச்சியின் விளைவுகளையும் சிறப்பையும் விரித்துக் கூறுவது கடினமாகும். ஆங்கிலச் சமூக நடவடிக்கைகளில் அவையின் கட்டுப்பாடு பெருகியது. ஆயினும், நாட்டின் நீதிமன்ற அமைப்பில் இது ஒரு பகுதியாக இருந்தமையால், மற்றச் சட்டச் செயலாட்சி முறைகளை இது அழித்துவிடவில்லை. இங்கிலாந்தின் சட்டவியல் வரலாற்றில் இவைகளின் பல தரங்களையும், உட்சிக்கல் நிலைகளையும் காணமுடிகிறது. இங்கிலாந்தின் நீதிமன்ற அமைப்புமுறையில் பலவகையான நீதிமன்றங்கள் இடம்பெற்றுள்ளன. மத்திய, தல நீதிமன்றங்களும், தனிச்சிறப்பு அதிகார வரம்புள்ள நீதிமன்றங்களும் இவைகளில் அடங்கும். நீதிமன்றமென்ற முறையில் அவை செயல்பட்டதால், இந்த அமைப்பில் எளிதாக இடம்பெற்று விட்டது. அவையின் நீதிவழங்கும் பணி விரிவடைந்தபொழுது மோதல்கள் இருந்தன என்றாலும், இதன் கிளை மன்றங்களுடன் இது மோதிக்கொள்ள உடனடியான காரணமெதுவும் எழவில்லை.

பொதுச்சட்ட நீதிமன்றங்கள்

பொதுச்சட்ட நீதிமன்றங்களாகிய அரச நீதிமன்றம், பொதுவழக்கு மன்றம், நிதித்துறை நீதிமன்றம் ஆகிய

[1] Equity

மூன்றும் அவைக்குப் பெரும் போட்டியாக வர இருந்தன. இடைக்காலத்தில் மற்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்ததைக் காட்டிலும் நீதியை அரசரிடம் நிலைபெறச் செய்வதில் இந் நீதிமன்றங்கள் பெரும் வெற்றிபெற்றன. இவைகளின் அதிகாரம் நாடு முழுவதும் நிலவியது. கீழ்நிலைச் சட்டச் செயலாட்சியை இவைகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தன. செயற்பரப்பில் கட்டுப்படுத்தப்பட்டிருப்பினும், நடைமுறையிலும் பொருளிலும் மிக நுட்பமுடையதாக இருப்பினும், விதிகளைச் செயல்படுத்திய நீதிபதிகள், விரைவாக மாறிக்கொண்டிருந்த டியூடர் காலத்திய சமூகத் தேவைகளுக்கேற்பப் பொதுச்சட்டத்தை வளர்க்க முடிந்தது. இதனுடைய தீர்ப்புகள், சட்ட அறிக்கைகள் என்ற பெயரில் தொடர்ச்சியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இரண்டு நூற்றாண்டிற்கு மேற்பட்ட காலத்திற்கு இதனுடைய விதி முறைகளையும் கருத்துகளையும் ஆண்டறிக்கை நூல்[1] வெளிப்படுத்தியது. இதனுடைய மரபுகளை வலிமைமிக்க கூட்டு நிறுவனங்கள் பாதுகாத்தன. வழக்கறிஞர்கள் இதனை நன்முகப் பயன்படுத்திக்கொண்டனர். இடைக்காலத்தில் ஐரோப்பாவிலும் மற்ற இடங்களிலும் மாறுகின்ற நிலைக் கேற்பச் சட்டவியல் செயல்பட இயலாமல் இருக்கும் பொழுதும், ரோமானியச் சட்டத்தை விரைந்தேற்க விரும்பிய பொழுதும், பொதுச்சட்டமும் அதனை விளக்கம் செய்தவர் களும் தனித்து நின்று செயல்பட முடிந்தது.

சமீபக் காலத்தில் பொதுச்சட்ட நீதிமன்றங்களின் நலிவை இவைகளின் செயற்பாட்டிலிருந்து காணமுடிந்தது. பதினைந் தாம் நூற்றாண்டில் இவை முறைசெய்யத் தவறியதே, முதலிரண்டு டியூடர்களின் ஆட்சிக்காலத்தில் (கவுன்சில்) அவை நீதிவழங்கும் அதிகாரத்தை மேற்கொள்ளக் காரணமாக இருந்தது. மேலும், இடைக்காலத்தில் பொதுச்சட்டம் வளர்த்துக்கொண்ட நுட்பமுறை, இதன் குறைபாடுகளை அகற்றவும் சரிசெய்யவும் உதவியது. நிதித்துறை முதல்வர் சிவில் வழக்குகளில் அளித்த பொதுநேர்மைத் தீர்ப்பு, விண்மீன் மன்றம் அளித்த குற்றவியல் பொதுநேர்மைத் தீர்ப்பைப்போல் இருந்ததால், பொதுச்சட்ட நீதிமன்றத்தின் போட்டியாக இதைக் கருதலாம். ஆனால், வெஸ்டமின்ஸ்டரில் நிறுவப்பட்டுள்ள பெரிய நீதிமன்றங்கள் மிக உயர்ந்த அமைப் பிற்கும் அதிகாரத்திற்கும் சின்னமாக இன்றும் இருந்து

[1] Year Book

வருகின்றன. இடரான காலங்களில்கூட கற்றறிந்த நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் இவைகளுக்குத் துணையாக இருந்து வந்துள்ளனர். பொதுச்சட்டத்தின் விதிகள் ஆங்கில மக்களின் வாழ்க்கையில் பரவி நிற்கின்றன. வருங்காலச் சட்ட வளர்ச்சிக்குப் பொதுச்சட்டத்தின் செயலாட்சி முதன்மையா? அல்லது அவையின் அதிகார வரம்பு முதன்மையா? என்பது ஒரு வினாவாகிக்கொண்டிருந்தது.

பொதுச்சட்ட நீதிமன்றங்களும் அரசரும்

அரச நீதிமன்றம், பொதுவழக்கு நீதிமன்றம், நிதிவழக்கு மன்றம் ஆகியவை நீண்ட காலமாகவே தனிப்பட்ட நீதிமன்றங்களாக இருந்து வந்துள்ளன. இவைகளுக்கெனத் தனிப்பட்ட நீதிபதிகளும் பதிவுகளும் இருந்தன. அரச நீதிமன்றத்திலும், பொதுவழக்கு மன்றத்திலும் தனித்தனியே ஒரு பிரதம நீதிபதியும் மூன்று துணை நீதிபதிகளும் பணியாற்றினர். நிதிவழக்கு மன்றத்தில் ஒரு பெருமகனும் (Baron) மூன்று சாதாரணப் பெருமக்களும் இருந்து பணியாற்றினர்கள்.

அரசரின் நல்விருப்பின்பேரில் நீதிமன்ற நீதிபதிகள் அரசரால் அமர்த்தப்பட்டார்கள். நிதிவழக்கு மன்ற நீதிபதிகள் நல்லொழுக்கத்தின்பேரில் அரசரால் அமர்த்தப் பெற்றார்கள். இவர்களின் பதவிக்காலம் நிலையானதாகும். ஊதியத்தையும் சுயேச்சையாகப் பெற்றுக்கொண்டார்கள். நீதிபதிகளின் ஊதியத்தில் பெருமளவு கட்டணங்களாகும். எவ்வாறுயினும், நீதிபதிகள் பொதுச்சட்டத்தில் வளர்ந்து, உயர்நீதி மன்றத்தில் அமர்த்தப்படுவதற்கான தகுதித்திறம் பெற்றார்கள். சட்டத்தின்படி அரசாங்கம் நடக்கவேண்டுமென்னும் கருத்தில் ஊறிய இவர்களின் சுயேச்சையான மனப்போக்கு, தேவைக்குமேல் நிருவாகத்திற்குப் பணிவதைத் தடைசெய்தது. இருப்பினும், அரசப் பதவிக்கும் நீதிபதிகளுக்குமிடையில் நெருங்கிய உடன்பாடு காணப்பட்டதால் பணியாள் நிலையை இவர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். சட்டங்களை வரைதல்பற்றியும் விளைவுகள்பற்றியும் இவர்கள் அரசருக்கு அறிவுரை யளித்தார்கள்; நிருவாகத்தின் கேள்விகளுக்குப் பதிலுரைத்தார்கள்; ஆணையாளர் மன்றத்தில்[1] மத்திய அரசாங்கத்தின் அரசியல், நீதியியல் பிரதிநிதிகளாகவும் இவர்கள் நடந்துகொண்டார்கள்.

[1] Assize Court

மேல்நிலை நீதிமன்றங்களின் கடமைகளை நிறைவேற்றிய தோடு, அரச நீதிமன்றம், பொதுவழக்கு மன்றம் ஆகியவை களின் நீதிபதிகள் கால இடைவேளைகளில் நாடு முழுதும் சுற்றிவந்தார்கள். இந் நோக்கத்திற்கெனப் பலதரப்பட்ட ஆணைகளை இவர்கள் பெற்றிருந்தார்கள். வெஸ்டமின்ஸ்டர் நீதிமன்றங்கள் செயல்படுத்திய அதிகாரங்களுக்கொப்பான அதிகாரங்களை இவர்கள் பெற்றுச் செயல்படுத்தினர்கள். உலாமுறை மன்றக் கேள்விமுறை, சிறைக்கைதிகள் விடுதலை, அமைதி ஆகியவைகளுக்கான ஆணைக்குழுக்களுக்குக் குற்ற விசாரணை அதிகாரம் அளிக்கப்பட்டது. பன்னிரண்டாம் நூற்றாண்டில், பொதுச் சுற்றுலா நீதிமன்ற ஆணைக்குழுக்களி லிருந்து சுற்றுலா நீதிமன்றம் தோன்றியது. இப்பொழுது இவை வழக்கொழிந்து போயின. ஆயினும், நீதிமுறைக் கும் ஆட்சி இயலுக்குமிடையே பொதுச்சுற்றுலா நீதிமன்றங் களால் ஏற்படுத்தப்பட்ட தொடர்பு தொடர்ந்திருந்து வந்துள்ளது. மேல்நிலை நீதிமன்றங்களிலும், இவைகளின்கீழ் செயல்பட்ட சுற்றுப்பயண நீதிமன்றங்களிலும் ஒரேமாதிரி யான சட்டங்களைச் செயல்படுத்தி மாவட்ட நீதிமன்றம் பணியை நிறைவேற்றியது. இத்துடன், கீழ்நிலை அரசாங்கச் செயற்பாடுகள் இவைகளை மேற்பார்வை யிட்டன. சட்டத் திற்கும் ஆட்சிக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பை மாவட்ட நீதிமன்றங்கள் பேணின. தல நிறுவனங்களின் மீது அவையும் அதன் கிளைகளும் சில தடைகளை விதித்திருந்த போதிலும், அரசாங்க அதிகாரச் செயற்பாட்டையொட்டி யெழும் பிரச்சினைகள்பற்றிய வழக்குகளை பொதுச்சட்ட நீதிபதிகள் ஆராய்ந்தனர்.[1] டியூடர்களின் வல்லாட்சிக் காலத்திலும் அரசாங்க நடவடிக்கைகள் சட்டத்தால் ஒழுங்கு படுத்தப்பட வேண்டுமென்னும் கருத்து மறுக்கப்படவில்லை. எழுத்துருவில் இருந்த சட்டங்களும், பொதுச்சட்டங்களும், டியூடர்களின் ஆட்சிக்கு இன்றியமையா அடிப்படையாக இருந்தன.

நீதிமன்றங்களின் தவறுகளைத் திருத்திக் கொள்வதில் பின்பற்றப்பட்ட நடைமுறை சில கருத்துகளைக் குறிப்பிட்டது. ஒரு வழக்கில் தீர்ப்பளிக்குமுன் மூன்று மேல்நிலை நீதிமன்றங் களில் ஏதாவதொன்றின் நீதிபதிகள் மற்ற நீதிபதிகளின் பொதுச்சபை ஒன்றின் ஆய்விற்கு விடவேண்டும். இச் சபை நிதிவழக்குமன்ற அவையில் கூடுகிறது. இச் சபையின்

[1] Holdsworth, "History of English Law", 231

பணி, கலந்தாராயும் பணியே யாகும். இச் சபை எந்த முடிவையும் வெளியிடாதெனினும், குறிப்பிட்ட நீதிமன்றத்திற்கு இது அறிவுரை அளிக்கிறது. நிதிவழக்கு அவை[1] எதையும் மறுஆய்வு செய்வதில்லை. இருப்பினும், இதே பெயரில் ஒரு நீதிமன்றத்தை மூன்றும் எட்வர்டு நிறுவி, நிதிவழக்கவையின் தவறுகளை மறுஆய்வு செய்யும்படி பணித்தார். அரச நீதிமன்றம் முடிவுகளை மாற்றி வழங்கும் அதிகாரம் இதனால் மறுக்கப்பட்டது. வேறு வழக்குகளில் அரச நீதிமன்றத்திற்கு நீதியை மறுஆய்வு செய்யும் முழு அதிகாரம் இருந்தது. பொது வழக்கு நீதிமன்றத்தின் முடிவுகளும், கீழ்நிலை நீதிமன்றத்தின் முடிவுகளும் இதன் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டன. அரச நீதிமன்ற முடிவுகளை மறு ஆய்வு செய்ய ஒரு நியாயச் சபையை உருவாக்க வேண்டுமென்பதும் உணரப்பட்டது. இதைச் செய்யப் பாராளுமன்றத்திற்குள்ள முழுமையான அதிகாரத்தை நிலைநாட்டப் பாராளுமன்றத்தோடு பொதுச் சட்ட நீதிபதிகளும் சேர்ந்துகொண்டனர். அவை செயல் படுத்தும் மேல் முறையீட்டதிகாரத்தை நீதிபதிகள் மறுதலித் தனர். 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 16-ஆம் நூற்றாண்டின்போதும் பாராளுமன்றம் அடிக்கடி கூட்டப் படாதது நடைமுறைச் சிரமங்களை உண்டாக்கியது. ஆனால், இதற்கான கருத்து கைவிடப்படவில்லை. சட்டங்களைச் செயல் படுத்திய மேல்நிலை நீதிமன்றங்களும், சட்டத்தை மாற்றி யமைக்கக்கூடிய பாராளுமன்றமும். நீதிமன்ற முறையில் அவையின் மேலதிகாரத்தைத் தடுப்பதற்கும், பொதுச்சட்ட நீதிமன்றங்களை இதன் கீழ்நிலை மன்றங்களாக நடத்தவும் இவை இணைந்து செயல்பட்டன.

தல நீதிமன்றங்கள்

பொதுச்சட்ட நீதிமன்றங்களின் மேலாதிக்க நிலை, பழமை யான தல நீதிமன்றங்களின் செயற்பாட்டை பெரிதும் பாதித்தது. மாவட்ட நீதிமன்றங்கள், பல ஆண்டுகளுக்கு முன்னரே நலிவுற்றன. 1444-க்குப்பின் அரசப் பேராள் (Sheriff) ஆண்டு அலுவலராக மட்டுமே இருந்து வந்தார். தல கிரிமினல் அதிகார வரம்பைப் பொறுத்தவரையில், சுற்றுலா நீதிபதி களுக்கு ஒதுக்கப்பட்ட சாதாரண வழக்குகள் திறமைமிக்க அமைதிகாண் நீதிபதிகளிடம் விடப்பட்டன.[2] 14-ஆம்

[1] Exchequer Chamber

[2] C. A. Beard, "The office of the Justice of Peace in England," 52-70

நூற்றாண்டின் சட்டங்கள் இவர்களின் கடமைகளைக் குறிப்பிட்டு வளர்த்தன. அமைதியையும் ஒழுங்கையும் பேணுவதில் இவர்கள் முதன்மையாக ஈடுபட்டிருந்தார்கள். நாட்டுத் துரோகக் குற்றத்தைத் தவிர மற்றக் குற்றவாளிகளை விசாரித்துத் தண்டிக்கும் கருத்தாழமான வழக்குகள் மாவட்ட குற்றவியல் நீதிபதிகளிடம் விடப்பட்டன. நகர முதல்வர்கள், காவலர்கள், சிறையதிகாரிகள், அரசப் பேராட்கள் போன்ற கீழ்நிலை அலுவலர்களோடு இவர்கள் செயல்தொடர்பு கொள்ளலாம். இரண்டு அல்லது மூன்று நீதிபதிகள் கலந்து கொண்ட சிறிய நீதிமன்றங்கள் சிறு குற்றங்களைத் தண்டித்தன. தனிப்பட்ட நீதிபதிகள் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் கடமையை ஏற்றுக்கொண்டு, காவலர்களுக்குக் கட்டளையிடும் அதிகாரமும் பெற்றிருந்தனர். நிதித்துறை முதல்வரால் நியமனம் பெற்று இவர்கள் அரசரால் அமர்த்தப் பட்டார்கள். பதவி விலக்கப்பட்டார்கள். 20 பவுன் மதிப் பிற்கு நில உடைமை உள்ளவர்களாக இவர்கள் இருக்க வேண்டும். இவர்களுக்கு ஊதியமளிக்கப்படவில்லை. ஆயினும், சில கட்டணங்களை இவர்கள் பெற்றுக்கொண்டார்கள். அமைதி ஆணைக்குழு நாட்டுப்புறத்தவர்களையும், சொத்துடைய வர்களையும் நீதிவழங்கும் பணிக்குப் பதிவுசெய்துகொண்டது. பொதுமக்கள் சபைக்குப் பெரும்பாலான உறுப்பினர்களை அனுப்பிய வகுப்பினரிலிருந்து இவர்கள் தெரிவுசெய்யப் பட்டார்கள். பாராளுமன்றம் சட்டத்தால் இவர்களின் கடமை களைப் பெருக்கியது. அவையாலும் பொதுச்சட்ட நீதிமன்றங் களாலும் இவர்கள் இரட்டைக் கட்டுப்பாட்டிற்குள்ளானார்கள். இவர்கள்மீதான அவையின் கட்டுப்பாடு குறைவே. ஏனெனில், இவர்கள் அரசாங்கப் பணியாளர்கள் அல்லர். ஆனால், இவர்கள் ஊதியம் பெற்றுக்கொள்ளாத நீதிபதிகளாகவும் ஆட்சியாளர் களாகவும் இருந்தார்கள். இவர்களின் சேவை தன் விருப்பி லானது; செயல்படுத்த இயலாது. மேலும், இவர்கள் நிருவாகத்தின் பதிலாட்கள் அல்லர். ஆனால், இவர்கள் சட்டத்திற்கிணங்கிச் செயல்படவேண்டிய நிருவாக அதி காரிகள் ஆவர்.

குடிமை உரிமை நீதிமன்றங்கள்

இடைக்காலத்திய பெருமைக்குரிய குடிமை உரிமைகளும், காப்புரிமைகளும் நலிவுற்ற வரலாற்றைக் காணலாம். அரசரின் அதிகாரத்தால் பொதுச்சட்ட நீதிமன்ற அதி கார எல்லைகளுக்கு வெளியே, குடிமைஉரிமை நீதிமன்றங்

களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. வனநீதி மன்றங்களில் பொதுச்சட்டத்திலிருந்து காப்புரிமையை அரசரே பெற்றிருந்தார். 1327-ஆம் ஆண்டுச் சட்டமொன்று அரச வனங்களின் எல்லைகளை நிருணயித்தது. இந்த எல்லைகளுக்குள் இந்நீதிமன்றங்கள் இருந்து வந்தன. இந்நீதிமன்றங்களின் கடுமையான வெறுக்கத்தக்க அதிகாரவரம்புகள் சட்டத்தால் குறைக்கப்பட்டன.[1] லங்காஸ்டர் கோமகனுட்சி, செஸ்டர் கோமகனுட்சி போன்ற தனியார் பெற்றிருந்த குடிமை உரிமைகள் அரசரிடம் சென்றடைந்தன. இவர்களின் சொந்த அமைப்புகளை அழியாது பாதுகாத்துக் கொண்டனரெனினும், அரச அமைப்புகள் எத்தகைய சுயேச்சையையும் பெற்றிருக்கவில்லை. லங்காஸ்டர் கோமகனுட்சி நிலங்கள் அரசரின் நிலவுடைமைகளிலிருந்து தனிப்பட்டுக் காணப்பட்டது. இவைகளுக்கெனத் தனிப்பட்ட சிவில், கிரிமினல் அதிகாரவரம்பு இருந்தது. கோமகனுட்சி நீதிமன்றமென்ற ஒரு பொதுநேர்மை நீதிமன்றத்தோடு இவைகளை ஏழாம் ஹென்றி மேலும் உறுதிப்படுத்தினர். ஆனால், ஆட்சியுரிமை நீதிமன்றங்களின் தவறுகளை வெஸ்டமின்ஸ்டரில் இருந்த நீதிமன்றங்கள் திருத்தியமைத்தன. மேற்றிராணியாருக்குரிய டர்ஹாம் நிலப்பகுதி இதேபோல் தனிப்பட்ட நீதிமன்ற அமைப்பைப் பெற்றிருந்தது. ஆனால், இது முடியரசோடு மிக நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. அரச நீதிமன்றங்கள், பாராளுமன்றம் ஆகியவற்றின் அதிகாரத்திற்குட்பட்டு டர்ஹாம் நீதிமன்றங்கள் இயங்கின. வேல்ஸ் எல்லைப்புறப் பகுதிகளைப் போலன்றி, கோமகனுட்சி நிலப்பகுதிகள் முடியரசின் சட்டங்களைப் போன்ற சட்டங்களை உருவாக்கிக் கொண்டிருந்தன.

பெரும் குடிமையுரிமை ஒருபுறம் இருந்தாலும், சிறிய காப்புரிமைப் பகுதிகளும் நாட்டில் நிறைந்திருந்தன. இப்பகுதிகளின் சொந்தக்காரர்கள் நூற்றுவர் மன்றங்களைக் கூட்டும் உரிமை பெற்றிருந்தார்கள். சிறிய நீதிமன்றம் எனப்பட்ட அரசப் பேராள் மன்றத்தின் அதிகாரத்தை இவர்கள் செயல்படுத்தினர்கள். மாவட்ட நீதிமன்றத்தையும் நூற்றுவர் மன்றத்தையும்விட இவை உயிர்த்துடிப்புள்ளவைகளாக இருந்தன. இருப்பினும், இவைகளின் சிறப்பு, ஆட்சித்துறையில் இருந்தது. அரச நீதிமன்றங்களுக்கும் அமைதிகாண் நீதிபதிகளுக்கும் இவை தம் அதிகார

[1] Holdsworth, I, 103-04

எல்லையை விட்டுக்கொடுத்தன. தலக்கிராம அமைப்புகளோடும், பண்ணை மேலாண்மையோடும் இந் நீதிமன்றங்கள் செயல்தொடர்பு கொண்டிருந்தன. தாக்குதல், உடைமை மீச்செலவுகள், சிறிய தீர்வைகள், கடன்களை வசூலித்தல், நிலமாற்றம், நகர ஆட்சிமுறைக்கு வகைசெய்தல் ஆகிய பணிகளையும் இவை ஏற்றுச் செய்து வந்தன.

சிறப்புரிமை பெற்றிருப்பவர்களோடு பொதுவாக நகர்ப் பகுதிகளை வகைப்படுத்த வேண்டும். சில வேளைகளில் நகரங்கள் சிறு நீதிமன்றங்களை வைத்து நடத்தும் உரிமை பெற்றிருந்தன. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இவைகளின் இடத்தைச் சிறு நீதிமன்றங்களும், சிறிய குற்றவியல் நீதிமன்றங்களும் எடுத்துக்கொண்டன. சில சமயங்களில், மாவட்ட நீதிபதிகளுக்குக் கீழ்ப்பட்டும், சுயேச்சையாகவும் இவை நடந்துகொண்டன. சாசனங்களின் வாயிலாக நகரங்கள் சிவில் விசாரணை அதிகாரத்தைப் பெற்றன. எத்தகைய நீதிமன்ற அமைப்பைப் பெற்றிருந்தாலும், ஒவ்வொரு நகரும் தொடக்கத்திலிருந்தே பொதுச் சட்ட நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்குள் இருந்தே செயல்பட்டு வந்தன.

தேவேன், கார்ன்வால் பகுதிகளின் வெள்ளீயச் சுரங்கச் சொந்தக்காரர்கள் ஸ்டானெரி (Stannary) நீதிமன்றங்கள் எனப் பெயருள்ள மன்றங்களைப் பெற்றிருந்தார்கள். இவர்களின் பழக்கங்களைச் செயல்படுத்துவதற்காக இந்நீதிமன்றங்களை அமைத்துக்கொண்டார்கள். உயிரை, உடலை, அல்லது இவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடங்களில் இருந்த நிலத்தைப் பாதிக்கின்றவை நீங்கலாக, மற்ற அதிகார வரம்பை இந் நீதிமன்றங்கள் பெற்றிருந்தன. இவை பொதுச் சட்ட நீதிமன்றங்களின் கட்டுப்பாட்டிற்குட்பட்டுச் செயல் பட்டன.[1]

இத்தல நீதிமன்றங்களைத் தவிர, பொதுச்சட்ட எல்லைகளுக்கு வெளியேயுள்ள வழக்குகள்மீது, சிறப்பு அதிகார வரம்பைச் செயல்படுத்தும் பல நீதிமன்றங்கள் இருந்தன. வாணிக விவகாரங்களுக்கான சட்டங்கள் தோன்றின. கடலோடு தொடர்புடைய வழக்குகளை விசாரிக்கப் பதினான்காம் நூற்றாண்டில் கப்பல் துறை நீதிமன்றம் ஒன்று தோன்றியது. 15-ஆம் நூற்றாண்டில் நலிவுற்றிருந்தாலும், டியூடர்களின்

[1] G. R. Lewis, The Stannaries, 87

காலத்தில் அதிகார வளர்ச்சியாலும் கடல்சார்ந்த விவகாரங்களில் இவர்களின் அக்கறையாலும் இந் நீதிமன்றங்கள் வளர்ச்சியடைந்தன. எனினும், இவைகளின் அதிகார எல்லை மெதுவாக விரிவடைந்தது. பாராளுமன்றத்தாலும் பொதுச் சட்ட நீதிமன்றங்களாலும் இது நன்றுகக் கவனிக்கப்பட்டது: தல வாணிக நீதிமன்றங்களிடமிருந்து உள்நாட்டு வாணிக விவகாரங்களை இவை கவர்ந்துகொண்டிருந்தன. இவைகளின் ஆட்சி எல்லைகளிலிருந்து வெளிநாட்டு வாணிகம் அகற்றப்படுவதை இவை வெறுத்தன.

படைத்துறை அதிகாரிகள் செயல்படுத்திய நீதி அதிகாரங்களுக்கும் இதே மனப்பான்மைதான் காட்டப்பட்டது. படையினரிடையே ஒழுங்குணர்வைப் பேண அரசரின் உயர் படையலுவலர்கள் அதிகாரமேற்றனர். தீவிரமாகவும் கடுத்தமாகவும் இருந்த சட்டச் செயலாட்சியை இடைக்காலச் சட்டங்கள் குறைக்க முற்பட்டன. நாட்டிற்குள் போர் நடந்துகொண்டிருக்கையில் பொதுமக்களின்மீது இந்த அதிகாரிகள் எந்த அளவிற்கு அதிகாரம் செலுத்தினர்கள் என்பது உறுதியற்றதாக இருந்தது. இத்தகைய அதிகார வரம்பு சட்டத்திற்கு மாறுனதாக இல்லாதிருப்பின், பொதுச் சட்டத்தின் விதிமுறையினல் கொடுக்கப்பட்ட பாதுகாப்புகள் இத்தகைய முறையில் ஒடுக்கப்படுவதற்குப் போரும், நீதி முறையின் தலையீடும் காரணங்களாக இருந்திருக்கலாம்.

பொதுச்சட்ட நீதிமன்றத்தின் மேதகு நிலை இக்காலத்திய நீதிமன்ற முறையின் அடிப்படையான குணவியலாக இருந்தது. இவைகளின் அதிகார எல்லை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவிநின்றது. தல, சிறப்பு நீதிமன்றங்கள் இருந்ததால், இவை நேர்முகமாகத் தம் அதிகார வரம்பைச் செயல்படுத்த இயலவில்லையெனினும், மற்ற நீதிமன்றங்களின் குற்றங்களை மறுஆய்வு செய்யவும், வரையறை செய்யவும்கூடிய உயர்நிலையில் இவை இருந்தன. இவைகளுக்குப் போட்டியாக இருக்கக்கூடியவை, அவையும் அதன் கிளைகளுமே யாகும். ஐரோப்பிய அரசுகளில் இருந்ததைப் போல் ஆங்கிலச் சட்டமும் இருவகையாகப் பிரியக்கூடிய வாய்ப்பு இருந்தது. அரசாங்கத்தின் நலன்களோடு, சிறப்பாகத் தொடர்புடைய வழக்குகளை அவைசார்ந்த நீதிமன்றங்கள் ஆய்ந்தன. தனிப்பட்ட தன்மையுடைய வழக்குகளைப் பொதுச்சட்ட நீதிமன்றங்கள் ஆய்ந்தன. இருப்பினும், அரசாங்க நடவடிக்கைகள்பற்றிய வழக்குகள்

பொதுச்சட்ட நீதிமன்றங்களின் பார்வையில் இருந்தன. அரசாங்கம் செய்யத் தவறியவை பற்றிய வழக்குகள், தொடர்ந்து இவைகளின் செயல் வரம்பிற்குள்ளும் அவையின் அதிகார வரம்பிற்குள்ளும் இருந்தன. இவைகளுக்குப் போட்டியாக இருந்தவைகளிடமிருந்து பாராளுமன்றம் அவைகளின் ஆட்சியெல்லையைப் பாதுகாத்தது. எனினும், பொதுச் சட்ட நீதிமன்றங்களின் வருங்காலப் பங்குப்பணியைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. பதினேழும் நூற்றாண்டில் அரசரின் செயல்களைச் சட்டத்தின் ஆட்சியின்கீழ் கொண்டு வருவது பழைய கருத்தாகத் தோன்றியது. அரச அதிகாரத்தின் கட்டற்ற வளர்ச்சி, சமூகத்தின் முதல் தேவையாக இருந்திருக்கவேண்டும். ரோமானியச் சட்ட அறிஞர்களால் எடுத்துரைக்கப்பட்ட இறைமைக் கோட்பாடு, சட்டத்தால் வரையறை செய்யப்பட்ட முடியாட்சியைக் காட்டிலும் இக்காலத்திய நிலைகளோடு இணக்கமாய் இருந்தது. இதுவே இடைக்கால அரசியல் அறிவின் மரபெச்சமாக இருந்ததெனலாம்.

டியூடர் காலத்திய இங்கிலாந்தின் தல ஆட்சி, நீதிமன்ற அமைப்பின் பணியாக இருந்தது. விளக்கியுரைக்கும் பொருட்டு இவைகளைப் பிரிவினை செய்வது இவைகளின் தன்மையை அழிப்பதுபோல் தோன்றும். ஆனால், ஆட்சிப் பணிகளையும், நீதிவழங்கும் பணிகளையும் தல ஆட்சி நிறுவனங்கள் நிறைவேற்றின. மாவட்ட, மேனர் (Manor) நீதிமன்றங்கள் ஆட்சிப் பணிகளையும், நீதிவழங்கும் பணிகளையும் செய்து வந்தன. இவைகளின் செயல்கள் சிறப்பின்றி இருந்ததால் நீதிவழங்கும் அதிகார இழப்பு இவைகளை ஆட்சிப் பணியில் ஆழ்த்தியது. அமைதிகாண் நீதிபதிகள் தம் நீதிப் பணிகளோடு பெருமளவிலான ஆட்சிப் பணிகளைச் சேர்த்துக் கொண்டனர். ஊதியங்கள், விலைகள்மீது இவர்கள் சில கட்டுப்பாடுகளை விதித்தார்கள்; உணவுப் பொருள்களிலும், மற்ற அவசியப் பொருள்களிலும் ஆதாயம் செய்வதைத் தடை செய்ய முயன்றனர்; வாணிகக் கழகங்களின் துணை விதிகளை ஆராய்ந்தனர்; எடைகளையும் நிறைகளையும் மேற்பார்வையிட்டனர்; தொழிற் பயிற்சியையும், வேளாண்மைத் தொழிலாளர் தரவையும் ஒழுங்குபடுத்தினர்.[1] நாட்டின் பொருளாதார, சமூக வாழ்க்கையின் மீதான அரசக் கட்டுப்பாட்டிற்கு இவர்கள் கருவிகளாக இருந்தார்கள். அமைதி

[1] Beard, "Office of the Justice of Peace in England". 38

யைப் பேணும் பணி இவர்களின் பொறுப்பாயிற்று. ஒவ்வொரு சிறு உட்பிரிவிலும் (Hundred) ஓர் உயர் காவலதிகாரியும் ஒவ்வொரு திருச்சபை வட்டத்திலும் (Parish) ஒரு சிறிய காவலதிகாரியும் அமர்த்தப்பட்டிருந்தார்கள். இவர்கள் ஊதிய மின்றிப் பணிபுரிந்தார்கள். இவர்கள் சேவையும் கட்டாயச் சேவையாக இருந்தது. இவர்களே அமைதிகாண் நீதிபதிகள் அமர்த்தினர்கள்.

அமைதிகாண் நீதிபதிகளாகப் பணியாற்றிய வசதியான நிலக்கிழார்களைவிட, கீழ்நிலையில் இருந்தவர்களின் மீது தல அரசாங்கம் அதன் கடமைப் பொறுப்புகளைச் சுமத்தியது எந்த மனிதரும் இத்தகைய கீழ்நிலைப் பதவிகளை ஏற்குமாறு கட்டாயப்படுத்தப்படலாம். அறங்கூறுயத்தில் பணியாற்று மாறு எவரும் அழைக்கப்படலாம். குற்றவாளிகளை முறை காண் அறங்கூறுயத்தினர் குற்றஞ்சாட்டினர். குற்றத்தையும் குற்றமற்ற தன்மையையும் ஆராய்ந்து தீர்ப்புக்கூறும் பணி ஆயத்திடம் விடப்பட்டது. இக் காலத்திய அறங்கூறுயத் தைப் போலன்றி, விசாரணையின் போது கொடுக்கப்பட்ட சான்றுகளையொட்டி இது முடிவு செய்தது. எனவே, நீதிமன்ற நெருக்குதலுக்கு இது உட்பட வேண்டியிருந்தது. இருப்பினும், இந் நிலையில் அறங்கூறுய முறையின் தக்க செயற்பாட்டினை நிலைநிறுத்துவதற்கு இது தேவைப்பட்டது. தண்டிக்கத் தவறும் அறங்கூறுயம் பெரும் கண்டனத்திற்கும் அபராதத் திற்கும் உள்ளாக வேண்டியிருக்கும். அரசர் மட்டுமின்றி, வழக்கில் தோற்றவர்களும் இவ் வாயத்தைக் கண்டனம் செய்யலாம். இழிவுபடுத்தப்படுவதோடு, அறங்கூறுயம் நீதிபதிகளால் தண்டிக்கப்படலாம்; இறுதியாக இதை அவை அடக்கியாளலாம்.

நிதியியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக்கொண்ட நிறுவனங்களை அமைதிகாண் நீதிபதிகள் ஆட்சிப் பணிகளைச் செய்யப் பயன்படுத்திக்கொண்டார்கள். அமைதியைக் குலைத் தவர்களைத் தண்டித்தல், இவர்களின் தலையாயக் கடமையாகும். சட்டத்தைச் செயல்படுத்துவது அவ்வளவு முக்கியமான பணியாகக் கருதப்படவில்லை. சட்டத்தைச் செயல்படுத்தத் தவறிய குற்றத்திற்கு நீதிமன்ற முறைகளைப் பயன்படுத்திக் கொண்டு செயலாட்சி நடைபெற்றது. பயிற்சியற்ற, ஊதிய மற்ற அலுவலர்களைக் கொண்டு தல ஆட்சி நடந்தது. இதன் முதன்மையான நோக்கம் சட்ட நிறைவேற்றமேயன்றி, மத்திய அரசாங்கத்தின் கட்டளையை நிறைவேற்ற வேண்டிய

தில்லை. பொதுச்சட்ட நீதிமன்றத்தோடும், பாராளுமன்றத்தோடும் இது தொடர்புகொண்டிருந்தது. டியூடர்களின் ஆட்சி இவைகளின் ஒத்துழைப்பை நாடியிருந்தது.

படைச்சேவையும் முதன்மையாகத் தல அடிப்படையில் அமைந்திருந்தது. தொழில்சார்ந்த படையின் ஆதரவில் டியூடர்களின் ஆட்சி இருக்கவில்லை. வெளிநாட்டுப் போர்கள் எழுந்தமையால் கூலிப்படைகளைச் சேர்க்க வேண்டியதாயிற்று. நாட்டிற்குள் ஒப்பந்த அடிப்படையில் படைதிரட்டுவதும், அலுவலர்களை அமர்த்துவதும், ஊதியமளிப்பதும், படைக்கலன்களைத் திரட்டுவதும் வழக்கமாயிற்று. கலே (calais), பெர்விக் (Berwick) போன்ற அரண்களில் அரசர் படைகள் வைத்திருந்தார். ஒரு சிறிய குதிரைப் படையையும், காலாட் படையையும் அரசர் பெற்றிருந்தார். மாஸ்டர் ஜெனரல் என்பவரின்கீழ் ஆயுதப் படையுமிருந்தது. இந்த அடிப்படையில் வல்லாட்சியொன்றை நிறுவும் முயற்சியெதுவும் எடுக்கப்படவில்லை. மற்றப்படி, இங்கிலாந்தின் படைவலிமை இருவகைகளில் இருந்தனவெனலாம். ஒன்று, பழைய பயனில்லா நிலமானியப் படையாகும். ஆங்கிலோ சாக்சானிய கருத்தின்படியமைந்த மாவட்டப்படை இன்னொன்றாகும். நாட்டைக் காக்கப் படைக்கலன் தரிக்க வேண்டுமென்ற பொதுச் சட்டக் கருத்தையொட்டி, குடிமக்கள் இப் படையில் சேர்ந்து பணியாற்றினர். கட்டளைகளைப் பிறப்பித்து இத்தகைய சிறிய படைகளை அரசர் திரட்டிக்கொள்வது வழக்கம். மேலும், உடல் வலிமையுடன் ஆயுதம் தாங்கவும் தயாராக உள்ளவர்களைப் படையில் சேர்க்க வேண்டியது ஒவ்வொரு மாவட்டப் பிரமுகர்களின் கடமையாகும். போரில் பயிற்சி இல்லாதவர்களைக் கொண்ட இப்படிப்பட்ட படையொன்று எப்பொழுதும் திறமையுடையதாக இருந்ததில்லை. சில வேளைகளில், இதை நம்பவும் முடியாது. இத்தகைய படை நாட்டிற்கு வெளியே சென்று போரிட இயலாதென்பது இதன் பயனுடைமையை மேலும் குறைத்தது.

நாட்டின் கப்பற்படை ஓர் அளவில் தலச் சார்புடையதாக இருந்தது. இடைக்காலத்தில் கப்பற் படைகளை அரசருக்குத் தந்துதவுவது நிலமானிய முறையாக இருந்தது. 16-ஆம் நூற்றாண்டில் அரசருக்குச் சொந்தமான கப்பற்படையொன்று உருவாயிற்று. போர்க்கப்பல்களைக் கட்டுவதில் எட்டாம் ஹென்றி அக்கறை செலுத்தினர். ஆனால், அரசருக்குச் சொந்தமான கப்பல்கள் குறைவாகவே இருந்தன. கப்பற்

போர்களுக்குத் தல வாணிகக் கப்பற் படையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று. மக்கள் இதில் அரசரோடு ஒத்துழைக்கவில்லையென்றால், அரசர் பெரும் இடருக்குள்ளாக வேண்டியிருந்திருக்கும்.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

S. B. Crimes	:	English Constitution
A. P. Pollard	:	Reign of Henry VII
K. Pickthorn	:	Early Tudor Government
Tanner	:	Constitutional Documents
Holdsworth	:	History of English Law
K. Pickthorn	:	Henry VIII
H.A.L. Fisher	:	History of England (1485—1547)

3. டியூடர் முடியாட்சியின் உச்சநிலை

1529-க்குப்பின், டியூடர் அரசாங்கம் வெற்றியுணர்வு களாலும் நெருக்கடி நிலையாலும் வளர்ச்சிபெற்றது. நெருக்கடி நிலை பெருமளவிற்குச் சமயப்புரட்சியின் விளைவாகும். ரோமானியத் திருச்சபையோடு இருமுறை உறவை முறித்துக் கொண்டபோது இங்கிலாந்து கத்தோலிக்க ஐரோப்பாவி லிருந்து தள்ளிவைக்கப்பட்டது. 1535-ல் எட்டாம் ஹென்றிக்கு எதிராகப் போப்பாண்டவரின் சமயவிலக்குக் கட்டளை வெளி யாயிற்று. இவருடைய நாட்டைத்தாக்கி இவரை ரோமானியச் திருச்சபைக்குப் பணியச்செய்யக் கத்தோலிக்க அரசர்களின் ஒத்துழைப்பைப் போப்பாண்டவர் நாடினார். 1570-ல் எலிசபெத் அரசியாரும் இத்தகைய கட்டளைக்குள்ளானார். ஆனால், கத்தோலிக்க அரசர்களிடம் காணப்பட்ட உட்பகை இங்கிலாந்தைத் தாக்குதலிலிருந்து காப்பாற்றியது. ஆக்கிர மிப்புப் படையெதுவும் ஸ்பெயினிலிருந்து இங்கிலாந்தில் அடியெடுத்து வைத்தது கிடையாது. இச் சமயம் ∴பிரான்சு இங்கிலாந்திற்குப் பெருந்தொல்லை கொடுக்கும்போல் தோன்றியது. 1560 வரையில் ∴பிரான்சிற்கு இங்கிலாந்தில் ஒரு கண் இருந்தது. 1548-ல் ஸ்காட்லாந்தின் அரசியார் மேரியை ∴பிரெஞ்சு அரசர் ∴பிரான்சிஸ் மணந்து கொண்டதி லிருந்து இவருக்கு ஆங்கில நாட்டின் ஆட்சி உரிமையில் நாட்டம் இருந்தது. மேரி, ஏழாம் ஹென்றியின் கொள்ளுப் பேத்தியாவார். ஆகவே 1559-ல் எலிசபெத்தின் அரியணைக்கு இவர் வலிமைமிக்க கத்தோலிக்க வாரிசாக இருந்தார். எட்டாம் ஹென்றியின் காலத்தில் இருந்ததுபோல் இங்கிலாந் திற்கெதிரான படை நடவடிக்கைகளுக்கு ஸ்காட்டிய முடியரசு ஒரு தளமாக இருந்தது. ஆனால், சொந்த உரிமையை ∴பிரான்சின் அரசரின் மரணம் முடிவிற்குக் கொண்டுவந்தது. மேரி இங்கிலாந்திற்குத் திரும்பியபொழுது, தேசிய பிராடெஸ்டண்டு எதிர்ப்பு இவரை எதிர்கொண்டது. (1561) 1567-ல் இவர் இங்கிலாந்தில் புகலிடம் பெற்றபொழுது

இவருடைய ஆட்சியுரிமைக் கோரிக்கை வெளிநாட்டுக் கத்தோலிக்கர்களுக்கு அக்கறை ஊட்டவில்லை. 1567-லிருந்து 1581 வரை தம் மகனின் சார்பில் ஆங்கில அரசாங்கத்தோடு தொடர்புகொண்டிருந்த பிராடெஸ்டண்டு பாதுகாவலர்கள் ஸ்காட்லாந்தை ஆட்சிசெய்து வந்தார்கள். இவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் இங்கிலாந்தின் கத்தோலிக்கப் பகைவர்களோடு நெருங்கி உறவாடி ஆங்கில அரியணைக்கான தம் உரிமையைக் கெடுத்துவிடாமல் பார்த்துக்கொண்டார். இங்கிலாந்து ரோமிலிருந்து சமயத் தொடர்பை முறித்துக்கொண்டபின், ஆங்கில அரசருக்குச் சொந்தமான அயர்லாந்தின் பகுதிகள் மட்டுமே வெளியார் படையெடுப்பிற்குள்ளாயின. ஆயினும், வெளியார் படையெடுப்புப் பற்றிய பேரச்சம் ஆங்கில அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இருந்து வந்தது. பொதுப் பாதுகாப்பிற்கென அரசாங்கம் இயல்புமீறிய மிக மோசமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சட்ட முரணான இந் நடவடிக்கைகளை மக்கள் ஏற்றுக்கொண்டு வாழவேண்டியிருந்தது.

வெளியிலிருந்து வந்த இடர்கள் உள்நாட்டில் இருந்த தொல்லைகளோடு சேர்ந்துகொண்டன. பழமையான திருச்சபையின்மீது மக்கள் பரவலான பற்றுக்கொண்டிருந்தார்கள். சிலசமயங்களில், இது வலிமைமிக்க ஆயுதப் புரட்சியின் உருவில் வெளிப்பட்டது. இப்படிப்பட்ட புரட்சிகள் 1536-ல் நடந்தன. பின் 1540-ல் டெவானிலும் கார்ன்வாலிலும் கிளர்ச்சிகள் நடந்தன. அரசியார் எலிசபெத்தை நீக்கிவிட்டு ஸ்காட்டிய மேரியை அரியணையேற்றும் நோக்கத்தோடு 1569-ல் வடக்கத்திய கோமான்கள் கலகம் செய்தார்கள். இந்தக் கலகமும் தோல்வியடைந்தது. மேரியை நார்போல்க் கோமகனுக்கு மணமுடித்து இவரை அரசியாக்குவதும் அல்லது இவர்களின் குழந்தைக்கு அரசப்பதவி அளிப்பதும் வடக்கத்திய கோமான்களின் நோக்கமாக இருந்தது. எலிசபெத் அரசியாரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு மேரியை அரியணையில் அமர்த்தும் நோக்கத்தில் 1571-ல் ரிடோல்ஃபியில்[1] சதி நடந்தது. எண்பதின் தொடர் ஆண்டுகளில் பயங்கர ஆட்சி நடந்தது. மேரியை விடுதலை செய்யவும், அரசியாரைக் கொலை செய்யவும் சதிகள் பல நடந்தன. இவைகளிலிருந்து அரசியாரைக் காப்பாற்றத் தன் விருப்பில் 1584-ல் கழகங்கள்

[1] Ridolfi

அமைக்கப்பட்டன. அடுத்த ஆண்டில் பாராளுமன்றம் இக் கழகத்தைச் சட்டப்பூர்வமாக்கியதோடு, சதித்திட்டங்களில் பங்குபற்றுவதையும் அல்லது படையெடுப்பில் ஈடுபடுவதையும் கண்டனம் செய்யத் தனிப்பட்ட ஆணைக்குழுக்கள் அமைக்கப் பட்டன. சதித்திட்டங்களில் கலந்துகொண்டவர்களையும், இவைகளை உருவாக்கக் காரணமாக இருந்தவர்களையும் விலக்கி விடச் சட்டம் வகைசெய்தது. பாபிங்டன் சதியில் கலந்து கொண்டதற்காகச் சிறப்பு நீதிமன்றத்தால் மேரி விசாரிக்கப் பட்டுத் தண்டனை பெற்றதும், அடுத்த ஆண்டில் ஸ்பானியக் கப்பற்படை தோல்வியடைந்ததும் பெரும் புரளியைக் குறைக்கவில்லையென்றாலும், ஆபத்தைக் குறைத்ததெனலாம். அரசியாரின் ஆட்சியின் இறுதிக்காலத்தில் கத்தோலிக்கக் குடிமக்களிடம் சதியுணர்வும் நாட்டுத்துரோக உணர்வும் சிறிதளவு பற்றிக்கொண்டிருந்தது.

இக் காலத்தில் மக்களை வருத்திய பாதுகாப்பின்மைக்குச் சமயம் மட்டும் காரணமாக இருக்கவில்லை. விரைவான, மட்டில்லாச் சமூக, பொருளாதார மாற்றங்களை இக் காலம் கண்டது. விலைவாசிகளும் புரிந்துகொள்ள முடியாத வகையில் உயர்ந்தன. இதற்குத் தென் அமெரிக்காவிலிருந்து ஐரோப் பாவில் நுழைந்த பொன், வெள்ளி உலோகங்கள் காரணமாக இருந்தன. தொழிற்சாலைகளில் மிதமிஞ்சிய முதலீடு செய்ததன் காரணமாக நகரமக்கள் இடப்பெயர்ச்சிக் குள்ளானார்கள். வேளாண்மைத்துறையில் இத்தகைய ஒரு நடவடிக்கையால் நாட்டுப்புறத்தினரும் இடர்ப்பட்டனர். நில அடைப்பு முறையும் கிராம மக்களை வீடுகளிலிருந்து வெளி யேற்றியது. மக்களின் துயர்துடைத்து வந்த அறநிலையங் களும் பறிமுதல் செய்யப்பட்டன. இதுவரை திருச்சபையின் பார்வையில் இருந்த சமூகமும் இப்பொழுது கொடிய வறுமையை எதிர்நோக்கியது. சொத்துடையவர்களின் பிரதி நிதிகளைக் கொண்டிருந்த பாராளுமன்றமும் சமூகத்தைப் பரிவுடன் நடத்தவில்லை. தல அமைதியை "வலிமையுள்ள இரவலர்கள்" அழிக்க முயன்றனர். 1549-ல் ஆரும் எட்வர்டின் அரசாங்கம், நார்ஃபோல்க்கில் ராபர்ட் கெட் (Kett) என்பவரின் தலைமையில் நடந்த வேளாண்மைக் கலகத்தை ஒடுக்கியது. சமூகக் குறைபாடுகளும் இத்தகைய கலகங் களுக்குக் காரணமாக இருந்தன. பழமையான சொத்துமுறை, தனிநலன்கள் ஆகியவைகளுக்கு ஆதரவளித்த அரசாங்கம் சிலவேளைகளில் மக்களின் குறைகளுக்குச் செவிசாய்க்காமல் இருந்தது, இதை இடையரு இடர்களுக்குள்ளாக்கியது.

இக் காலத்திய இங்கிலாந்து வெளிப்பகைவர்களால் சூழப் பட்டுச், சமய, சமூக மனக்குறைகளால் அச்சுறுத்தப்பட்டு, ஒரு முற்றுகைக்குள்ளான நகரத்தைப்போல் காட்சியளித்தது. இந்த உண்மையான நிலையை நம்பாமலிருத்தல் கடினமாகும். ஆனல், நாடு தாக்குதலுக்குள்ளாகாமல் இருந்தது. எலிசபெத் அரசியாரின் காலத்திலிருந்து ஆர்மெடா கப்பல்போர் வரையில் இங்கிலாந்தின் செல்வம் வெளிநாட்டுப் போர்களால் கரைந்து போகவுமில்லை ; தொழில் திட்டங்களும் வளர்ச்சியில் குன்றிவிடவுமில்லை. பெருமளவிற்குப் பதினேரும் நூற்ருண்டில் வாணிகம் வளர்ச்சியடைந்தது. துணிச்சல் வாணிபம் செய் வோர் ஜெர்மானிய ஹன்சா வாணிகர்களிடமிருந்து வடக்கு ஐரோப்பிய வாணிகத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். பாஸ்கோவோடு வாணிகத்தொடர்பு கொள்ள அரசியார் புதிய கம்பெனிகளை 1555-ல் நிறுவினர். பால்டிக் (1579), லெவெண்ட், (1581) கிழக்கிந்தியக் கம்பெனி (1600) ஆகிய கம்பெனிகள் நிறுவப்பட்டன. கடல் வாணிகம் துணிச்சல்மிக்க கடலோடிகளை உருவாக்கியது. இதனல் நாட்டின் வளமும் பெருகியது. குறுகிய கடற்பகுதிகள் நல்ல மீன் பண்ணைகளாக மாறின. ஆர்டிக் பெருங்கடல் பகுதிகள் கடலோடிகளின் ஆட்சியெல்லைக்குள் வந்தன. ஆனல், 16-ஆம் நூற்ருண்டின் கடலோடிகளின் சிந்தனையை எல்லையில்லா மாக்கடல்கள் கிளறின. வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகள் வழியாக இந்தியா போய்ச்சேரும் எண்ணங்கள் மறைந்தன. அமெரிக்கா எனப்பட்ட புதிய உலகத்தோடு போர்ச்சுக் கீசியரும் ஸ்பானியரும் கொண்டிருந்த வாணிகத் தனியுரிமை யைத் தட்டிக்கொண்டுவிட ஆங்கிலேயர்கள் ஆயத்தமானர்கள். விரும்பத்தக்க கடல்கடந்த குடியேற்றங்களை விரும்பாமல் இவர்கள் கடற்கொள்ளை, அடிமை வாணிகம் ஆகியவற்றில் ஈடுபட முயன்ருர்கள். முதன்முதலில் அமெரிக்கத் தலை நிலத்தில் ஆங்கிலேயர்கள் எலிசபெத் அரசியாரின் காலத்தில் குடியேற்றத்தை நிறுவி, வெர்ஜீனியா எனப் பெயரிட்டனர்.

புதிய செல்வம் இங்கிலாந்தில் குவிந்தது. லண்டன் ஒரு பணச்சந்தையாக மாறிக்கொண்டிருந்தது. அரசாங்கச் செயற்பாடுகளுக்கு இந் நகர் நிதியளித்தது. புதிய தொழிற் சாலைகள் திட்டமிடப்பட்டன. ஐரோப்பாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்த (சமய) அகதிகள் இப் புதிய தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டார்கள். சோப்பு, கண்ணுடி, உப்பு, படிகாரம், வெடியுப்பு ஆகிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கு அர சாங்கத்தின் நேரடி ஆதரவு கிடைத்தது. வகுப்புகளுக்

கிடையே நிலஅடைப்பு, ஏற்றத்தாழ்வை உண்டாக்கிய தெனினும், நாட்டின் மொத்த உற்பத்தித்திறனை அதிகரித்தது. புதிய நிலச்சொந்தக்காரர்கள் நிலத்தை நல்ல முறையில் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கினர்கள். கம்பளிப் பொருள்கள் பெருமளவில் விலையாயின. நில வருவாயைப் பெருக்கும் நோக்கத்தில் சில நிலக்கிழார்கள் நிலம் திருத்திப் பண்படுத்தி, வடிகாலமைத்து, நிலமீட்புப் பணியில் ஈடுபட்டுப் பெரும்பொருள் திரட்டினர்கள். நகரக் குடியிருப்புப் பகுதிகளும், மனைகளும் பொருள்வளத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்தன. இங்கிலாந்தின் ஆளும் இனத்தின் பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்தினர். இங்கிலாந்தில் டியூடர்கள் காலத்தில் நிலவிய அமைதி கலை, இலக்கியம் ஆகியவைகளை வளர்த்ததோடு, அறிவு வளர்ச்சிக்கும் உதவியது. ஆங்கில மறுமலர்ச்சிக்கு கோலெட்[1] மோர்[2] குரோசின்[3] லினக்கர்[4] ஆகியோர் வித்திட்டனர். இவர்களுக்குப்பின், ஸ்பென்சர்[5] சேக்ஸ்பியர், வியாட்[6] போன்றோர்களின் காலத்திலும், எலிசபெத்தின் காலத்திய நாடக ஆசிரியர்களின் காலத்திலும் மறுமலர்ச்சி இயக்கம் பூத்துக் குலுங்கியதெனலாம். கலை, இலக்கியத் துறைகளில் கருத்துகள் தெளிவாக வெளியிடப் பட்டதோடன்றி, தனிச்சிறப்பிற்குரிய கிறித்துவக் குணநலப் பண்பினை வெளிப்படுத்தியது. மனிதனின் இயல்பான தொழில் வாழ்வை இது சிறப்புச் செய்ததோடு மனிதப்பண்பு பற்றியதொரு புதிய கருத்தை உருவாக்கவும் இது உதவியது. பழங்கால வீர மரபுகளைக் கல்வி இயக்கங்களின் வழியாக இது வெளிக்கொணர்ந்தது. தோற்றத்தில் இணக்கவணக்கமும், உடற்பயிற்சியும், நன்னடத்தையும் சேர்ந்து அரசிடம் ஒரு கடமைப்பண்பை மக்களிடம் இது உருவாக்க உதவியது. புதிதாக உருவாகிய இச் சமுதாயத்தில் இப் பண்புகள் வளர்க்கப்பட்டன. குடிமக்கள் அரசரோடு ஒத்துழைத்தனர். இந்த ஒத்துழைப்பில் டியூடர் அரசாங்கம் நிலைபெற்றிருந்தது. அரசரின் அலுவலர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், நிருவாகிகளாகவும் இருந்த மக்கள் ஒரு புதிய இனமாகிய உயர்குடியினராக வளர்ச்சிபெற்றுச் சிறந்தனர்.

[1] Colet
[2] More
[3] Grocyn
[4] Linacre
[5] Spenser
[6] Wyatt

இந்த ஆட்சிமுறையின் சிறப்பியல்புகளை ஆராய முற்படுவோர் டியூடர்களின் ஆட்சியை எதிர்நோக்கிய நெருக்கடிகளையும், இந்த ஆட்சியால் மக்கள் பெற்றிருந்த சீரையும் சிறப்பையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். ஏழாம் ஹென்றியும் இவரது குழந்தைகளும் சட்டம் மீறிய வல்லாட்சியாளர்கள் அல்லர். இவர்களின் ஆட்சியை, "டியூடர்களின் வல்லாட்சி" எனக் குறிப்பிடுவது இவர்களின் ஆட்சிமுறையை அறிந்து கொள்ளமுடியாமல் செய்துவிடலாம். இவர்களுடைய காலத்தில் அரசாங்கம் பெரும் வலிமையோடு செயல்பட்டதென்பது தெரிந்ததேயாகும். பொதுநலன் கருதி மேற்கொள்ளப்பட்ட அரசாங்க நடவடிக்கைகள் சட்டத்தின் எல்லைகளைக் கடந்து செயல்பட்டன. அவையும் இதன் வழிக்கிளைகளும், உயர் ஆணை நீதிமன்றமும், இதற்கு உதவியாக எழுந்த சிறப்பு நியாயச் சபைகளும், பரந்துகிடந்த நிருவாக முறையும் அரசாங்கத்தின் உயிர்நாடிகளாகச் செயல்பட்டன. அரசரின் பேரறிக்கையால் பல சட்டங்கள் உருவாயின. இச் சட்டங்களின் எல்லைகளையும், பாராளுமன்றச் சட்டங்களின் எல்லைகளையும் பொதுச்சட்ட நீதிமன்றங்கள் சரிநுட்பமாக வரையறை செய்ய முடியவில்லை. அரசரின் பேரறிக்கைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சட்டத்தின் செயல்திறனைப் பெற்றியங்கின. அரசருக்கென்ச் சில சிறப்பதிகாரங்கள் இல்லையெனினும், சட்டங்களைத் தள்ளிவைக்கவும், சட்ட வாசகங்களைத் தள்ளிவைக்கவும் அரசருக்குச் சட்டங்கள் அதிகாரமளிக்கின்றன. வாணிகம், தொழில், பத்திரிகைகள் ஆகியவை அரசப்பதவியின் கட்டுப்பாட்டுக்குள்ளாயின. சில வரையறைகளுக்குட்பட்டு, குடிமக்களின் சொத்துகளைப் பாதிக்கும் வகையில் அரசர் நடவடிக்கை எடுக்கலாம். எடுத்துக்காட்டாக, கட்டாயக் கடன்கள், கப்பற்பணம், சாசனங்கள் வழங்குதல், வாணிகத் தனியுரிமைகள் ஆகியவைகளைக் குறிப்பிடலாம். காவலில் வைத்தல், காரணமின்றிக் கைது செய்தல், ஐயத்திற்கிடமானவர்களை விசாரணை செய்தல் போன்றவை அரசாங்கத்தின் காவல் சம்பந்தப்பட்ட அதிகாரங்களாகும். மனிதர்களின் சொந்த விவகாரங்களைக் கண்காணித்துச் செய்திதர ஒற்றர்முறை இருந்தது. குற்றம் செய்தவர்களிடமிருந்து உண்மையைப் பெறச் சித்திரவதை கையாளப்பட்டது. பொதுச்சட்டத்திற்கு ஒவ்வாத வகையில் சில நீதிமன்றங்கள் கடுமையான ஆய்வுமுறைகளைப் பின்பற்றி விசாரணை செய்தன. நெருக்கடி காலத்தில் குடிமக்கள் சட்டப்படியிலான உரிமைகளை முற்றிலும் இழந்து, போர்க்காலச் சட்டத்தைச் செயல்படுத்தும் படைத்துறையினரின் கட்டுப்

பாட்டிற்குள்ளானார்கள். தல ஆட்சியில் நிருவாகம், ஆதிகமம் செலுத்தியது; பாராளுமன்றத்தில் செல்வாக்கைப் பயன்படுத்தியது; புதிய தொகுதிகளைப் படைத்தது; தேர்தல்களைச் சாதகமாக மாற்றிக்கொள்ள முயன்றது; தேர்தல் முடிவுகளைப்பற்றிய அறிக்கைகளை ஆராய்ந்தது; பாராளுமன்ற நடைமுறை விதிகளைச் சூழ்ச்சித் திறமுடன் கையாண்டது; இதன் விருப்பத்திற்கு மாறான விவாதங்களை ஒடுக்கியது; கீழ்ப்படியாத உறுப்பினர்களை மிரட்டியது. அரசரின் பகைவர்களெனக் கருதப்பட்டவர்களை ஒடுக்கவும், பயனில்லாத அலுவலர்களை மரணதண்டனைக்குட்படுத்தவும், கடன்களை திருப்பித்தர மறுக்கவும், சட்டத்திற்கு முரணான அரச நடவடிக்கைகளுக்குச் சட்ட ஒப்புதல் அளிக்கவும் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் பணி கேவலமாகப் பயன்படுத்தப்பட்டது. வல்லாட்சியாகவும், கொடுமையாகவும், இரக்கமற்றதாகவும் டியூடர்களின் ஆட்சி தோற்றமளித்ததென்பதை மறுக்கவியலாது. சட்டத்திற்கு மேலான நிலையை இது அரசிற்களித்தது. பொதுநலனைக் குடிமக்களின் தனிநலனிற்குமேல் வைத்தது. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வல்லாட்சியை விரைந்தேற்றுக் கொண்டனரெனக் கூறுவதால் நிலையில் மாற்றமேற்படவில்லை. எல்லாவகையான அதிகாரங்களையும் டியூடர் அரசாங்கம் பெற்றிருந்ததெனினும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட நிறுவனங்களின் வழியாக இவைகளைச் செயல்படுத்தியதெனக் கூறவியலாது. அவையையும் அதன் கிளையுறுப்புகளையும் டியூடர்களின் அரசாங்கம் வளர்க்க விரும்பியதோடன்றி, பாராளுமன்றத்தையும் வளர்க்க விரும்பியது; இதன் செயற்பாடுகளை அதிகரித்தது; செயல்திறனை விரிவாக்கியது; சிறப்புரிமைகளை அதிகரித்தது; நடைமுறை விதிகளை முறைப்படுத்தியது. அமைதிகாண் நீதிபதிகளிடம் இது தல ஆட்சி வளர்ச்சியை ஒப்படைத்தது. சுருங்கக்கூறின், அரசரின் தனிப்பட்ட அதிகாரத்தையும் மன்றச் சார்புடைய அதிகாரத்தையும் இது வலியுறுத்தியதோடு, குடிமக்களின் ஒத்துழைப்பையும் நாடியது. படைபலமும் போதிய அளவு பொருளாதார வசதியுமில்லாத டியூடர் அரசர்கள் மக்களின் ஒத்துழைப்பை நம்பியிருந்ததோடு, இதைப் பயனுள்ள முறையில் வளர்க்கவும் கடமைப்பட்டிருந்தார்கள். அரச அதிகாரமும் மக்கள் இசைவும் ஆங்கில அரசின் அடிப்படைக் கருத்துகளாக இருந்தன. இதன் அமைப்பில் இக் கருத்துகள் செயற்படுத்தப்பட்டன. ஒரு தனியாட்சிமுறையை உருவாக்குவதற்காகப் பழமையான அரசியலமைப்பு ஏற்பாடுகள் அழிக்கப்படவில்லை.

இடைக்காலத்தின் பிற்பகுதியில் அரசப்பதவிக்குப் பாராளுமன்ற, சட்ட, தடைகள்பற்றிய கருத்துகள் இருந்து வந்துள்ளன. பதினேழும் நூற்றாண்டில் நிலவிய மரபுகள், அரசாங்கத்தில் அரசப்பதவியின் மேலாதிக்கத்தை ஆதரித்தன. ஆயினும், அரசப்பதவி தனிப்பட்டு நின்று செயல்படலாமென இவை குறிப்பிடவில்லை. அரசப்பதவியின் நடவடிக்கைகள் பல, சட்டப்படி ஐயப்பாட்டிற்குரியனவாக இருந்ததால், சட்டம், உசித அதிகாரம் ஆகியவைகளின் எல்லைகளும் சரி நுட்பமாக வரையறை செய்யப்படாமல் இருந்ததையே அவை குறிப்பிடுகின்றன.

மக்களின் இசைவையும் ஒத்துழைப்பையும் டியூடர் அரசு அடிப்படையாகக் கொண்டு இயங்கிற்று. நெருக்கடி காலத்தில் ஆங்கிலேயர்கள் அரசப்பதவியைப் பற்றிநின்றார்கள். இப் பற்றுறுதி பணிவாக உருப்பெற்றதெனினும், இவர்கள் வல்லாட்சிக்கு அடிபணிந்துவிடவில்லை. மரபுரிமையாக இவர்கள் பெற்றுவந்த அரசாங்க முறையைப் பேணிக் காத்தனர். இந்த அரசாங்கமுறை நலிவின்றி வலுப்பெற்றுத் தொடர்ந்திருந்து வந்தது. ஆயினும், ஐரோப்பாவில் பலவிடங்களில் இதேபோல் உருவான அரசாங்க முறைகள் நலிவுற்றுப் பிறகு மறைந்து போயின. இதனால் அதிகாரத்தைச் செயல்படுத்தும் அரசியல் அதிகாரம் முடியாட்சிகளிடம் முழுமையாகச் சென்றடைந்தது.

விரிவாக விவரிக்கப்படும் அரசியலமைப்பு, அரசரின் சொந்த அதிகாரத்தைப் பெரிதும் வலியுறுத்துவதால் அரசரின் நிலைபற்றித் தொடங்குவது இயல்பாகும். அரசரிடமிருந்து அரசாங்கத்தின் அதிகாரங்கள் பெறப்பட்டன. சட்டப்படி பார்த்தால் அரசப்பதவி நிலையானதாகும். அரசர் இறப்பதில்லை. அதாவது, அரசப்பதவி இறப்பதில்லை. ஓர் அரசரின் மறைவு இதன் தொடர்பைத் துண்டிப்பதில்லை. அரசர் செயல்பட்டு முடியாத அளவிற்கு உடல்நலிவு ஏற்படும் பொழுது, சட்டத்தால் நிலை சமாளிக்கப்படுகிறது. ஏனெனில், இதுபற்றிப் பொதுச்சட்டம் எதையும் குறிப்பிடவில்லை. நடைமுறையில் இக் கருத்து நிறைவேறுவதில்லை. 16-ஆம் நூற்றாண்டிலும் இதற்குப் பிறகும் அரசரின் மரணம் அரசாங்கத்தை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவந்துவிடும். பாராளுமன்றம் கூட்டப்பட்டிருந்தால் கலைக்கப்பட்டுவிடும். அலுவலர்கள், நீதிபதிகள் போன்றவர்களும், (ரோமிலிருந்து தொடர்பை விலக்கிக்கொண்டபின்) மேற்றிராணியார்களும்

தம் அதிகாரம் முடிவிற்கு வந்ததைக் கண்டார்கள். புதிய அதிகாரத்தைப் பிறகு இவர்கள் நாடவேண்டியிருந்தது. பதவியமர்த்துவதில் அரசர் கட்டற்ற அதிகாரம் பெற்றிருந்தார். அரசாங்க அலுவல்களில் பெருமளவை அரசரே ஏற்றுச் செயல்படுத்தினர். தம் விருப்பை நிறைவேற்றத் தாம் விரும்பும் வழியைப் பின்பற்றும் உரிமையை அரசர் பெற்றிருந்தார். அரசர் விரும்பினால் அவையைக் கலந்தாராயலாம். அரசருடைய சொந்தச் செயற்பாடு மிக முக்கியமானதாகும். ஆரும் எட்வர்டு சிறுவராக இருந்தபொழுது, சாமர்செட் வலிவற்றிருந்தமையால் அவையைக் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. வார்விக் பாதுகாவலராக அமர்த்தப்பட்டபின், அரசர் அவையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டார்.

தனிமுறையில் அரசாங்கத்தை அரசர் நடத்தி வந்ததால் பதவியை விழிப்புடன் பேணிக்கொள்ளவும், சட்டம் பாதுகாப்பை உறுதியாகப் பெறவும், குடிமக்களுக்குதவியாக இருக்கும்பொருட்டு அரசப்பதவியைத் தக்கவைத்துக் கொள்ளவும் இவர் பாடுபட வேண்டியதாயிற்று. டியூடர் காலத்தில் அரசப்பதவியை வழிவழியாகப் பெறுதல் என்பது எளிதாக இருக்கவில்லை. வேல்ஸ் இளவரசர் ஆர்த்தர் 1502-ல் இறந்தபின், அரச மரபில், பிற்காலத்தில் எட்டாம் ஹென்றியெனப் பெயர்பெற்ற ஒருவர்தான் ஆண் வாரிசாக இருந்தார். எட்டாம் ஹென்றியின் மூன்று வாரிசுகளும் குழந்தைகளின்றி இறந்துபோயினர். எலிசபெத் அரசியாரின் நீண்ட ஆட்சிக் காலத்தில் அரியணை, அடிக்கடி இடருக்குள்ளான ஒருவரையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. அரியணைக்கு உரிமை கொண்டாடியவர்கள் தம் மரபுரிமையை யார்க், பிளாண்டாஜெனெட் மரபினர்வரை பின்சென்று நிலைநாட்ட முற்பட்டனர். எலிசபெத்தின் தந்தைக்கு இது பெருங்கவலையளித்தது. டியூடர் மரபுவழி வந்தவர்களோ எலிசபெத்தும் மேரியும் சமாளிக்க வேண்டியிருந்தது. மேரியின் அரசுரிமையை ஜேன் கிரே[1] என்பவர் மறுத்தார். இவர் ஏழாம் ஹென்றியின் கடைசி மகளின் மகளாவார். சஃபோல்க் கோமகனாகிய சார்லஸ் பிராண்டன்[2] இவரை மணந்துகொண்டிருந்தார். எலிசபெத் அரசியாரின் ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் ஜேன் கிரேயின் தமக்கையும் அரசுரிமைக்குப் போட்டியிட்டார். ஆனால், இவர் இதை வற்புறுத்தவில்லை. ஏழாம் ஹென்றியின்

[1] Jane Grey
[2] Charles Brandon

மூத்த மகளாகிய மார்கரெட் டியூடர் ஸ்காட்லாந்தின் அரசராகிய நான்காம் ஜேம்ஸ் என்பாரை மணந்துகொண்டிருந்தார். இங்கிலாந்தின் அரியணைக்கு இவர் தீவிரமாக உரிமை கொண்டாடினர். இவர் வழிப்பிறந்த மேரி (ஸ்காட்லாந்திய அரசி) அரசப்பதவிக்கு உரிமை கொண்டாடினர். பின்னர், மேரி டார்னலி[1] பிரபுவாகிய ஹென்றியை மணந்துகொண்டார். இவர்கள் இருவரின் மகனாகிய ஜேம்ஸ் இங்கிலாந்தின் அரசுரிமை கொண்டாடினர். இவர் ஸ்காட்லாந்தின் ஆறாம் ஜேம்ஸ் மன்னராவார். பின்னர், இவர் இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் மன்னரானார். 1587-ல் மேரி தூக்கிலிடப்பட்டபின், அரபெல்லா ஸ்டூவர்ட்டு அரசுரிமை கொண்டாடினர். இவர் திருமணம் செய்துகொள்ளாதவாறு எலிசபெத் அரசியார் பார்த்துக்கொண்டார். முதலாம் ஜேம்ஸ் மன்னர் காலத்தில் இவர் வில்லியம் செய்மூர்[2] என்பாரை மணம்புரிந்து கொண்டார். இவர் சார்ல்ஸ் மரபுவழி வந்தவராவார். இத் திருமணத்திற்குப் பின்னரும் அரபெல்லா ஸ்டூவர்டு ஆயுட் காலம்வரை சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

அரசுரிமைத் தகுதி

டியூடர்கள் மரபுவழியை மட்டும் பற்றிநிற்பது இயலாத தாயிற்று. இக் கருத்தின்படி அரசுரிமையை அல்லது வாரிசு உரிமையை வரையறை செய்வதும் கடினமென மக்கள் உணர்ந்தார்கள். ஜேன் செய்மூரை ஹென்றி மணந்து கொண்டபொழுது அரகானின் காதரினும் அன்னிபொலினும் உயிரோடில்லை. எனவே, ஆறாம் எட்வர்டின் அரசுரிமையும் இவரது தந்தையின் அரசுரிமையைப்போல் மறுக்க முடியாத தாக இருந்தது. ஆனால், எட்வர்டின் ஒன்றுவிட்ட உடன்பிறந்தாராகிய மேரி, எலிசபெத் ஆகியவர்களின் நிலை தெளிவற்றுக் காணப்பட்டது. இந் நிலையைச் சட்டம் தெளிவாக்க வேண்டியிருந்தது. 1534-ஆம் ஆண்டின் வாரிசுரிமைச் சட்டம், வாரிசு உரிமையை ஹென்றி, அன்னிபொலின் ஆகிய இருவரின் குழந்தைகளுக்கு அளித்தது. இதனால், மேரிக்கு அரசுரிமை மறுக்கப்பட்டது[3]. 1536-ல் மற்றொரு சட்டம், காதரின், அன்னி ஆகிய இருவரின் திருமணங்களும் செல்லாதென அறிவித்தது. இவர்களின் குழந்தைகளை முறைகேடாகப் பிறத்தவர்களென

[1] Darnely
[2] Scymour
[3] Tanner, Tutor Constitutional Documents, 382-8

இச் சட்டம் குறிப்பிட்டது. ஆகவே, அரசுரிமையை இச் சட்டம் ஹென்றி, ஜேன் ஆகிய இருவரின் குழந்தைகளுக்கு உரியதென அறிவித்தது. இவர்களுக்குக் குழந்தைகள் இல்லாதிருந்ததால், ஹென்றி தம் வாரிசை உயிலில் (Will) குறிப்பிட அதிகாரம் பெற்றார். இதன்படி அரசுரிமையைப் பெறுபவர் வயது வராதவராக இருந்தால் அவருக்கு வழிகாட்ட ஓர் அவையை நியமிக்கவும் அரசர் அதிகாரம் பெற்றார். 1544-ல் இறுதியாக இயற்றப்பட்ட வாரிசுரிமைச் சட்டம், உயில் அடிப்படையில் அரசப்பதவியை (அரசர்) உருவாக்கும் அதிகாரத்தை வலியுறுத்தியது. மேலும், ஹென்றிக்கு அல்லது ஆரும் எட்வர்டுக்குக் குழந்தைகள் இல்லையென்றால், ஹென்றி குறிப்பிடும் நிபந்தனைகளின்கீழ் அரசுரிமை, முதலில் மேரிக்கும் இவருடைய வாரிசுகளுக்கும், பின் எலிசபெத்திற்கும் இவருடைய வாரிசுகளுக்கும் செல்லவேண்டும். 1546-ல் ஹென்றி உயிலைத் தயாரித்தார். இதன்படி மகுடம் எட்வர்டுக்கும் அவருடைய வாரிசுகளுக்கும், பின் ஹென்றியின் அப்பொழுது செய்து கொண்டிருந்த திருமணத்தின் அல்லது இனிமேல் செய்து கொள்ளும் திருமணத்தின்வழி பிறக்கும் வாரிசுகளுக்கும் செல்லவேண்டும். பின், எட்வர்டிற்கு உதவியாக அமர்த்தப்பட்ட அவையின் இசைவோடு திருமணம் செய்துகொண்டிருந்தால் மேரிக்கும், பின் இதேபோல் எலிசபெத்திற்கும், பின் ச.:போல்க் மரபு வழியினருக்கும், அதன்பின் உரிமைபெற்ற அடுத்த வாரிசுகளுக்கும் அரசுரிமை செல்ல வேண்டும்[1] ஸ்காட்டிய மரபினரை அரசுரிமை பெறுவதிலிருந்து விலக்கியுள்ளதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். வாரிசுரிமை பற்றிய சட்டப்படியிலான ஏற்பாடுகள், உயிலால் அரசுரிமையை நிருணயிக்க எட்டாம் ஹென்றிக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள், அரியணையேறும் உரிமையைப் பாராளுமன்றம் சட்டத்தால் வலியுறுத்தும் தகுதித்திறன் பெற்றிருந்ததென்பதையும், ஆட்சியுரிமையை நிலை நாட்டியதென்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

எட்டாம் ஹென்றியின் உயில், சட்டத்திறன் பெற்றிருந்தாலும், ஆரும் எட்வர்டின் ஆட்சிமுறையில் அல்லது வாரிசுரிமையில் எத்தகைய பயனையும் உண்டாக்கவில்லை. ஹென்றி இறந்ததும், இவருடைய அவை உருவாக்கிய அரசாங்கம் எட்வர்டின் உறவினரான ஹெர்ட்போர்டு[2] என்பாரை

[1] Pickthorn, "Henry VIII", 534-37

[2] Hertford

சோமர்செட் கோமகனுக்கு, அரசின் காவலராக அமர்த்தியது. இளம் அரசர் அவையை மாற்றியமைத்தார். ஹென்றியின் விரிவான ஏற்பாடுகள் பயனற்றுப் போயின. இவருடைய குழந்தைகளைப் பொறுத்தவரையில் வாரிசுரிமை இவர் குறிப்பிட்டபடியே இருந்தது. தந்தையைப் பின்பற்றி எட்வர்டும் எழுதிவைத்த ஓர் உயில் வாயிலாக ஜேன்கிரே என்ற பெண்ணிற்கும் இவருடைய வாரிசுகளுக்கும் அரசுரிமை அளிக்கும் திட்டம் சட்ட இசைவு பெறுதலோடு, பலத்த கண்டனத்திற்கும் உள்ளாயிற்று.

சட்டத்தால் வாரிசுரிமை நிருணயிக்கப்பட்டதென்பதை விட, மரபுரிமை வழிக்கருத்தையொட்டி இது முடிவுசெய்யப்பட்டதென்பது தெளிவு. எலிசபெத் அரசியாரின் பட்டத்து உரிமைக்குப் பாராளுமன்றம் சட்ட ஒப்புதல் அளித்தது. 1571-ல் சட்டப்படியிலான அரசுரிமைக்குப் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்தது. வாரிசுரிமையை மாற்றியமைக்கும் போப்பாண்டவரின் அதிகாரத்தை மறுக்கப் பாராளுமன்றம் பயன்படுத்திக்கொள்ளப்பட்டதெனினும், பாராளுமன்றத்தின் செயல்தகுதி அல்லது அரசரின் அனுமதியின்றித் தலையிடும் அதிகாரத்தை இது மெய்ப்பிக்கவில்லை. 1563-ல் அரசியாரின் திருமணம்பற்றிய விண்ணப்பம் ஒன்று பொதுமக்கள் சபையால் வரையப்பெற்றுப், பொதுமக்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியாரிடம் கொடுக்கப்பட்டது. சிறிது தாமதத்திற்குப்பின், இதற்கு விடைகொடுக்காமல் அரசியார் இதைத் தட்டிக்கழித்துவிட்டார். 1566-ல் இப் பாராளுமன்றம் மறுபடியும் இப் பிரச்சினையை எடுத்துக்கொண்டது. ஹென்றியின் ஏற்பாடுகள் இன்னும் தொடர்ந்திருக்குமானால், ச.போல்க் மரபினர் அரசுரிமை பெறும் தகுதியைப் பெற்றிருப்பர். இவர்களுடைய அரசுரிமைக் கோரிக்கையை ஆராய அரசியார் மறுத்துவிட்டார். இறுதியாக, வாரிசுரிமை பற்றிய விவாதங்களைக் கைவிடுமாறு இவர் ஆணையிட்டார். இங்கிலாந்தில் கைதியாக இருந்த ஸ்காட்லாந்திய அரசி மேரியை நார்.போல்க்[1] என்பவருக்குத் திருமணம் செய்விக்க வேண்டுமென்ற அவையினரின் திட்டத்தை 1568-ல் அரசியார் ஏற்க மறுத்துவிட்டார். இத்தகைய விவகாரங்களில் தம் சொந்தக் கொள்கையை உருவாக்கிக்கொள்ள விரும்புவதாக அரசியார் தெரிவித்தார். மக்களின் வெறுப்புக்கிடையில் 1578-லும் 1581-லும் அரசியார் பிரான்சின் இளவரசர்

[1] Norfolk

∴பிரான்சிஸ் என்பவரோடு காதல் நாடகமாடினர். இப்பொழுது இவருடைய திருமணத்தால் வாரிசுரிமையில் மாற்றமெதுவும் ஏற்படப்போவதில்லை. தமக்கிருந்த போட்டியாளராகிய மேரியும் தூக்கிலிடப்பட்டார். அரசியாரின் வாரிசுரிமையை முறைப்படுத்தும் நோக்கத்தில், பாராளுமன்ற உறுப்பினர்கள் கொணர முற்பட்ட மசோதாக்களுக்காக இவர்களைத் தண்டிக்கவேண்டுமென அரசியார் வலியுறுத்தினர் (1593). எனவே, இவருடைய ஆட்சிக்காலம் முழுவதிலும் இத்தகைய மசோதா எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இது பாராளுமன்றத்தின் அதிகார எல்லைக்குட்படாததென்று அரசியார் கருதினர். இவருக்குப்பின், ஸ்காட்லாந்தின் ஆரும் ஜேம்ஸ் இங்கிலாந்தின் அரியணையேற வேண்டுமென இவர் விரும்பினர். இவ்விருப்பும் பின் நிறைவேறியது. ஆனால், எட்டாம் ஹென்றி இவரைத் தவிர்க்கவே முயன்றார்.

இராசத் துரோகச் சட்டம் Act of Treason

வாரிசுரிமைத் தொல்லைகளைக் காட்டிலும் அரசரின் பாதுகாப்புப் பிரச்சினைகள் பெரும் கவலைக்குரியனவாக இருந்தன. தனிமுறையிலான அரசாங்கத்தில் அரசின் பாதுகாப்பும் அரசரின் பாதுகாப்பும் ஒன்று மற்றொன்றோடு தொடர்புடையதாக இருந்தது. ஒன்றிற்கெதிரான குற்றங்களை மற்றொன்றிற்கெதிரான குற்றங்களாகக் கருதவேண்டும். ஆயினும், அரசரின் காப்பரணான இராசத் துரோகச் சட்டம் டியூடர்களின் காலத்திற்கு ஏற்றதாக அமையவில்லை. இது நிலமானிய முறை கோட்பாடுகளையொட்டி அமைந்திருந்தது. இச்சட்டம் உருவாக்கப்பட்ட காலத்தின் குழப்பநிலையை இது எடுத்துக்காட்டியது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனில், அரசியல் குற்றத்தைவிடத் தனிமுறையிலான குற்றத்தையே இது குறிப்பிட்டதெனலாம். 1352-ல் இத்தகைய குற்றங்களுக்கான செயல்களை ஒரு சட்டம் வரையறை செய்தது. இராசத் துரோகம்பற்றிய மூன்று முதன்மையான செயல்களையும், இவைகளையொட்டிய சிறு செயல்களையும் இச் சட்டம் குறிப்பிட்டுரைத்தது. அரசரின் மரணத்திற்குச் சூழ்ச்சி செய்தல் அல்லது திட்டமிடல், அரசரின் பகைவர்களோடு சேர்ந்து கொள்ளுதல், அரசருக்கெதிராகப் படைதிரட்டுதல் ஆகிய மூன்றும் முதன்மையான குற்றங்களில் அடங்கும். இச்சட்டம் குறிப்பிடாத குற்றமெதையும் இராசத் துரோகமென முடிவுசெய்யலாகாது. இம் முடிவைப் பாராளுமன்றமும், அரசரும் ஒருங்கிருந்து செய்யலாம். இந்தச் சட்டத்தில்

குறிப்பிடப்படாத குற்றங்கள் பல இருந்தன. அரசரைச் சிறைப்படுத்தலும் பதவி நீக்கலும் இராசத்துரோகக் குற்றங்கள் ஆக்கப்படவில்லை. அரசருக்கெதிராகப் படை திரட்டச் சதிசெய்தலும் குற்றமாகக் கருதப்படவில்லை. உண்மையில் படைதிரட்டலில் ஈடுபட்டுப் போரிட்டால்தான் குற்றமெனக் கருதப்பட்டது. ஓரளவிற்கு, இச் சட்டத்தின் நோக்கெல்லை நீதிமன்ற விளக்கங்களினால் விரிவாக்கப் பட்டது. இதில் குறிப்பிடப்படாத செயல்களைச் சதிசெய்தல் அல்லது சதிசெய்யத் திட்டமிடல் எனவும் கொள்ளலாம்.

பல துணைச்சட்டங்களால் இச் சட்டத்தை விரிவாக்குவது ஒரு முறையாகும். சில வேளைகளில், இடைக்காலத்தில் இம் முறை பயன்படுத்தப்பட்டது. 16-ஆம் நூற்றாண்டில், அரசரின் தனிமுறைப் பாதுகாப்பிற்கெதிராக மட்டுமின்றி, அரசரின் நிலைக்கெதிரான குற்றங்களுக்கும் இச் சட்டம் நீடிக்கப்பட்டது. 1534-ஆம் ஆண்டின் வாரிசுரிமைச் சட்டத்தின்படி, அன்னி பொலினை அரசர் மணந்துகொண்டதுபற்றி அல்லது இவர் களுடைய குழந்தைகளின் அரசுரிமைபற்றி எழுதுவதும் பேசுவதும் இராசத்துரோகக் குற்றமாகும். இதே ஆண்டில் நிறைவேறிய இராசத் துரோகச் சட்டம், அரசர் அல்லது அரசி யாருக்குச் சொல்லாலும் செயலாலும் உடல்தீங்கு செய்யக் கூடிய செயல்களைக் குற்றங்கள் எனக் குறிப்பிட்டது. இவர் களின் அரச மாண்பை அகற்றலும் அல்லது இவர்களைக் கொடுங்கோலர், சமய நிந்தனையாளர்கள், தகாத முறை யாளர்கள் எனக் குறிப்பிடுவதும் இச் சட்டத்தின்படி குற்ற மாகும். இவர்களுடைய கட்டுப்பாட்டிலிருந்து ஆயுதப் படைகளை எடுத்துக்கொள்ளும் நோக்கம் முடிய, எச்செயலும் இராசத்துரோகக் குற்றமாகுமெனச் சட்டம் குறிப்பிடுகிறது. அரசருக்குத் தீங்குசெய்யும் செயல்கள் அல்லது செய்வோர் திருமணத்தை மறுத்தல் அல்லது இதன் அடிப்படையிலான வாரிசுரிமையை மறுத்தல், முந்திய திருமணங்களைப் பற்றி நிற்றல், பிரமாணம் எடுத்துக்கொள்ள மறுத்தல் ஆகியவை களும், அரசரின் வாரிசின் அவையை ஒழுங்குபடுத்தும் அதி காரத்திற்கெதிரான சொத்துகளும் செயல்களும் இராசத் துரோகக் குற்றங்களாகுமென 1536-ஆம் ஆண்டுச்சட்டம் குறிப்பிட்டுச், சில தண்டனைகளையும் இதில் சேர்த்தது. போப்பாண்டவரின் தனி முதன்மைநிலையை மறுத்து, அரசரது நிலையைப் பற்றிநிற்க மறுக்கும் குடிமக்கள், அலுவலர், திருச் சபையினர் ஆகியோர் ரோமானிய ஆதிக்க ஒழிப்புச் சட்டப்படி இராசத்துரோகக் குற்றத்திற்குட்படுவர். இச் சட்டத்தின்படி

ஃபிசர்[1] என்பவரும், மோர்[2] என்பவரும் தண்டிக்கப்பட்டார்கள். 1538-ல் எக்ஸெடரும்[3] மாண்டேகும், 1540-ல் கிராம்வெல்லும், 1541-ல் சாலிஸ்பரி[4] கோமகளும் இராசத் துரோகக் குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார்கள். அரசின் இசைவில்லாமல் அரசரின் தங்கை, அத்தை, சிற்றன்னை, உடன்பிறந்தாரின் மகன் ஆகியவர்களை மணம்செய்துகொண்டவர்கள் 1536-ல் இராசத்துரோகக் குற்றத்திற்குள்ளானார்கள். இச் சட்டத்தை முன்தேதியிட்டுச் செயல்படுத்தியதால், ஹென்றியின் உடன்பிறந்தார் மகளை மணம்செய்து கொண்ட தாமஸ் ஹோவர்டு பிரபு இராசத் துரோகக் குற்றத்திற்குள்ளானார். கூடா ஒழுக்கம் காரணமாக அன்னிபொலின், காதரின், ஹோவர்டு ஆகியோரும் இராசத்துரோகக் குற்றத்திற்குள்ளானார்கள். அரசரை மணந்துகொள்வதற்கு முன் ஒரு பெண் கற்புநெறி தவறியதை வெளியிடத் தவறினால் அப் பெண் இராசத்துரோகக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்படலாம். போப்பாண்டவரின் அதிகாரத்தை மறுக்கும் வகையில் ஒரு புதிய பிரமாணத்தை 1536-ஆம் ஆண்டு வாரிசுரிமைச் சட்டம் குறிப்பிட்டுரைத்தது. அரசின் அலுவலர்களும், திருச்சபையினரும், பிரமாணம் எடுத்துக்கொள்ளுமாறு அழைக்கப்படுபவர்களும் இப் பிரமாணத்தை எடுக்க மறுத்தால் இராசத் துரோகக் குற்றத்திற்காகத் தண்டனைக்குள்ளாவார்கள். சட்டங்களைத் தவறென விளைவெழுப்பித் தடை செய்தலும், இதை யொட்டி எழுதும் அல்லது அச்சிடும் செயல்களும் இராசத் துரோகக் குற்றமாக்கப்பட்டன. இத்துடன், எட்டாம் ஹென்றியின் இராசத் துரோகச் சட்டத்தின் துயர்மிகு விளைவின் பயன்களை முடிவிற்குக் கொண்டுவரலாம்.

ஆரும் எட்வர்டு, மேரி ஆகியவர்களின் அரசாங்கம் 1352-ஆம் ஆண்டின் இராசத்துரோகச் சட்டத்தின் தேவைக்குக் குறைந்த அடிப்படைகளை நோக்கிச் சென்றது. இருவரும் இதில் வெற்றிபெறவில்லை. கடந்த பதினைந்தாண்டுகளாக சட்டத்தொகுப்பை இழிவுபடுத்திய இரத்தவெறி கொண்ட சட்டங்களை 1547-ஆம் ஆண்டில் ஒரு புதிய இராசத்துரோகச் சட்டம் நீக்கியது. எட்டாம் ஹென்றியின் உயிலை அல்லது சட்டப்படியிலான வாரிசுரிமை முறைகளை எதிர்த்தலும், அரசத் தனி முதன்மைநிலைக் கெதிராகச் செயல்படலும் எழுதலும்

[1] Fisher
[2] More
[3] Exeter
[4] Salisbury

தொடர்ந்து இராசத்துரோகக் குற்றங்களாகவே இருந்து வந்தன. சட்டங்களை மாற்றுவதற்காகக் கிளர்ச்சிகளும், அவையினரைச் சிறைப்பிடிப்பதற்கான சதிகளும் 1549-ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சியால் இராசத்துரோகக் குற்றங்களாயின.[1] அரசரின் தனிமுதன்மையை எதிர்த்துத் தாக்குவதும், பேசுவதும் 1552-ல் குற்றமாக்கப்பட்டன. மேரியின் முதல் இராசத்துரோகச் சட்டம் (1553), இயல்பாகவே இக்காரணங்களைக் கைவிட்டது. அரசியாரின் ஆயுட்காலத்தைக் குறைக்கவேண்டுமென வழிபடுவதும் இராசத்துரோகக் குற்றமாக்கப்பட்டது. அரசியாருக்கு எதிராகப் பேசுவதும் இராசத்துரோகமாக்கப்பட்டது. அரசரின் வாழ்க்கைத் துணைவிக்கெதிரான குற்றங்களும் இராசத் துரோகச் சட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டன.

எலிசபெத்தின் ஆட்சிக்காலத்தில் இராசத்துரோகக் குற்றச்சட்டங்கள் மறுபடியும் இயற்றப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. ஆனால், இவருடைய தந்தையைப்போல் இச்சட்டத்தை இவர் பரவலாகவும் கடினமாகவும் செயல்படுத்தவில்லை. வெளியாரின் ஆட்சியெல்லையைச் சொல்லாலும், செயலாலும் ஏற்றுப் பேணுதலைத் தனிமுதன்மைச் சட்டம் இராசத்துரோகக் குற்றமாக்கியது. அரசியாரை ஒழிக்க அல்லது பதவிநீக்க முயல்தல், அரசிக்கெதிராகப் படை திரட்டுதல், அரசுரிமையை மறுத்தல், மற்றொருவரின் பட்டத்து உரிமையை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற குற்றங்களை இரண்டாவது தடவை செய்தல் இராசத்துரோகக் குற்றமாக்கப்பட்டது (1559). அரசியாரின் பட்டத்து உரிமையை வெளிப்படையாக எதிர்த்துப் பேசுதல், முதல் தடவையிலேயே இராசத்துரோகக் குற்றமாக்கப்பட்டது.[2] ரோமானிய (திருச்சபை) அதிகாரத்தை ஏற்றுப் பேணும் குற்றத்தை இரண்டாவது தடவையாகச் செய்தலும், தனிமுதன்மைப் பிரமாணத்தை எடுக்க இரண்டாவது தடவை மறுத்தலும், 1563-ல் இராசத்துரோகக் குற்றமாயின. போப்பாண்டவரின் 1570-ஆம் ஆண்டுக்கட்டளை இச் சட்டத்திற்கு மேலும் வலியூட்டியது. அரசியாரைக் கொல்லச் சதிசெய்தல், உடலை ஊனப்படுத்தல், பதவிநீக்குதல், அரசியாருக்கெதிராகப் படைதிரட்டுதல், வெளியாரைத் தாக்கும்படி தூண்டுதல், அரசுரிமையை மறுத்தும் எதிர்த்தும் எழுதுதல், அரசியாருக்

[1] Holdsworth, IV. p. 497.

[2] Act of Supremacy, Cl. XIV, Tanner, 417-23.

கெதிராக அரசுரிமை கோருபவரை ஆதரித்தல், அரசியாரைச் சமயநிந்தனை செய்பவராகக் கூறுதல், இவருக்கடுத்துப் பதவிக்கு வருபவருக்கு உறுதியளித்தல், வாரிசு உரிமைச் சட்டத்தை ஏற்க மறுத்தல் ஆகிய குற்றங்கள் இராசத் துரோகக் குற்றச்சட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டன. போப்பாண்டவரின் கட்டளைகளைப் புகுத்துவதும் மற்றொரு சட்டத்தால் இராசத்துரோகமாக்கப்பட்டது. ஆயுதப் படைகளை அரசியாரிடமிருந்து அகற்ற முற்படுதல், இராசத் துரோகக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய முயல்தல் ஆகிய குற்றங்களுக்கு இராசத்துரோகக் குற்றங்களுக்கான தண்டனைகள் அளிக்கப்பட்டன. அரசியாரின் குடிமக்களை ரோமானியத் திருச்சபையோடு இணக்க முறச் செய்தலை 1581-ல் ஒரு சட்டம் இராசத்துரோக மாக்கியது. வெளிநாடுகளில் வசிக்கும் அரசியாரின் குடி மக்கள் நாடு திரும்புமுன் தனிமுதன்மையைப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும். பிரமாணம் எடுத்துக்கொள்ளா மல் திரும்புபவர்கள் துரோகிகளெனக் கருதப்படுவர். இராசத்துரோகக் குற்றங்களை அடுத்தடுத்துச் செய்த வர்கள் எலிசபெத் அரசியார் காலத்தில் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். முதல்முறையாகக் குற்றம் செய் தவர்கள் சிறு தண்டனைக்குள்ளானார்கள். அரசியாருக் கெதிராகப் பழிதூற்றுகின்றவர்கள் முதல் குற்றத்திற்குத் தண்டம் விதிக்கப்படலாம் அல்லது சிறைவைக்கப் படலாமென 1581-ல் விதி செய்யப்பட்டது. இதே குற்றத்தை இரண்டாம் முறையாகச் செய்பவர்கள் அடாப்பழி செய்பவர் களாகக் கருதப்பட்டு, இதற்கான சட்டத்தால் தண்டிக்கப் பட்டார்கள். அரசர் அல்லது அரசியார்பற்றி அவதூறுகளை வெளியிடல், அடாப்பழியாகக் கருதப்பட்டது. எனவே, இராசத் துரோகக் குற்றச்சட்டத்தை ஆட்சிஎதிர்ப்புக் குற்றச் சட்டத்திலிருந்து வேறுபடுத்தும் வகையில் சட்டம் செய்யப் பட்டது சட்டக்கருத்தின் இத்தகைய வகைப்பாடு மெதுவாக வளர்ச்சியடைந்தது. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரையில் இது முழுமையாக நிறைவேறவில்லை.

டியூடர்களின் அரசையும் அரசரையும் எதிர்த்தவர்கள் வன்மையாகத் தண்டிக்கப்பட்டார்கள். ஐயப்படுவதற்குரிய வர்கள் குற்றவாளிகளென மெய்ப்பிக்கப்படுகிறவரை குற்றம் சாட்டப்பட்டவரெனக் கருதப்படாமல் பொது விரோதிகளாகக் கருதப்பட்டார்கள். சிறைப்பட்டவர்களுக்கு வழக்குரைஞர் களின் உதவி மறுக்கப்பட்டது. குற்றச்சாட்டுகளின் விவர

அறிக்கை இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இவர்களுக்கு எதிரான சாட்சிகள்பற்றியும் இவர்கள் அறிந்துகொள்ள முடியாது. இவர்களுக்கெதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு கூப்பற்றியும் இவர்கள் அறியமாட்டார்கள். அறங்கூறுநர் பற்றியும் இவர்களுக்கொன்றும் தெரியாது. சாட்சிகளை வருமாறு அரசு கட்டாயப்படுத்தலாம். ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு இந்த உரிமை கிடையாது. குற்றத்தை மெய்ப்பிக்க ஒரு சாட்சி இருந்தால் போதுமெனப் பொதுச் சட்டம் குறிப்பிட்டது. அரசின் சாட்சிகள் பிரமாணத்தின் பேரில் சாட்சி சொன்னார்கள். ஆனால், எதிர்வாதித் தரப்பில் சாட்சிகள் பிரமாணத்தின்பேரில் சாட்சியமளிப்பதில்லை. உடந்தையாக இருப்பவர்களின் சாட்சியத்திற்குப் பெருமதிப் பளிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்முன் சாட்சிகள் கொண்டுவரப்படுவதுமில்லை ; இவர்கள் குறுக்குவிசாரணைக் குள்ளாவதுமில்லை. அரசின் சார்பில் நீதிமன்றம் வழக்கை நடத்தியது. ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர் சமயத்திற் கேற்பத் தம்மால் இயன்றவரை தமக்காக வாதாடினர். இந்தக் கடினமான நிலையை எட்டாம் ஹென்றியின் சட்டங்கள் மேலும் கடினமாக்கின. வழக்கை, அரசு எந்த நீதிமன்றத்தில் எங்கு வேண்டுமானாலும் நடத்தலாம். பெருமக்களின் வழக்கு விசாரணையைப் பெருமக்களே செய்யும் உரிமை பெற்றிருந்தார்கள். தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் தூக்கிலிடப் பட்டார்கள்.

ஆயுதம் தாங்கிய கலகக்காரர்கள் வன்மையாக ஒடுக்கப் பட்டார்கள். போதிய காவற்படையின்மையாலும் நிலைப்படை இன்மையாலும் நெருக்கடி காலங்களில் அரசர், கலகம் செய்பவர்களையும், கலகத்திற்குடந்தையாக இருந்தவர்களையும் போர்க்காலச் சட்டத்தைப்பயன் படுத்தி ஒடுக்கினர். படையில் ஒழுங்குமுறையைப் பேண இச் சட்டம் முதலில் பயன் படுத்தப் பட்டது. இச் சட்டத்தின் படி அமைந்த நீதிமன்றங்கள் விதி முறையில்லா விசாரணைகளைப் பயன்படுத்திப் பொதுமக்களைத் தண்டிக்கவும் பயன் படுத்தின. இச் சட்டத்தை மேரி அரசியார் 1557-லும், எலிசபெத் அரசியார் 1589, 1595-லும் பயன் படுத்தினர்கள்.

பிரிவி கவுன்சில்

அரசரின் முதன்மையான கருவியாக அவை (கவுன்சில்) இருந்தது. இதன் அமைப்பும் செயலும் திட்டவட்டமாகத்

தெரியவில்லை. அவையின் செயலும் அமைப்பும் அரசரைச் சார்ந்து இருந்தன. இவ் வவையைச் சில அரசர்கள் பயனுள்ள முறையில் அடிக்கடி பயன்படுத்திக்கொண்டது இதன் உண்மை நிலையை உணர்த்தியது. அவையின் தலைமைப்பதவி சட்டப் படியிலானது. அரசர் அவையில் இல்லாதபொழுது அவை வழக்கமான அலுவல்களைச் செயல்படுத்தலாம். இதன் நடவடிக்கைகளை இது 1510-லிருந்து பதிவுசெய்துகொள்ளத் தொடங்கியது. அரசர் அவையில் இருக்கும்பொழுது சில முக்கியமான அலுவல்கள் நிறைவேறின. இவைபற்றிய குறிப்புகள் பதிவுசெய்துகொள்ளப்பட்டன. கிராம்வெல் ஆட்சியாளராகச் செயலாற்றியபொழுது அவை பெரும்பங்கு பற்றிச் செயல்பட்டது. அரசின் அலுவலர்களின் ஆணையின்றிச் சொந்த அதிகாரத்தையொட்டி அரசாங்கச் செயற்பாடுகளை இயக்கத்தொடங்கியது. இதன் கட்டளைகளும் கடிதங்களும் பெருகின. இதற்கெனச் சொந்தமான முத்திரையொன்றையும் இது பெற்றிருந்தது. சுற்றுப்பயணம் செய்யும் பொழுது அவையினரை அரசர் உடன் அழைத்துச்சென்றார். ஆனல், விண்மீன் நீதிமன்றத்திலிருந்து மாறுபட்ட ஓர் அவை லண்டனில் இருந்து செயல்பட்டது. அரசத்தூதுவர்கள் இதனேடு பேச்சுவார்த்தை நடத்தினர்கள். நாட்டுப்பாதுகாப்பு, இடர்க்காப்பு, ஆட்சி மேற்பார்வை போன்ற மற்றச் சில பணிகளும் இதன் அதிகார வரம்பிற்குட்பட்டன. ஆனல், அரசரின் ஒரு சொல் அல்லது ஒரு கடிதம் இதன் நடவடிக்கைகளை இடையில் நிறுத்திவைக்கலாம். அரசர் அனுமதிக்கும் அல்லது இயக்கும் முறையில் அவை செயல்பட்டது. அரசர் அவையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் போதிய அளவு தெளிவாகவும் முறையாகவும் செயல்பட்டது. இதனுடைய அலுவல்களில் இது ஈடுபாடு கொண்டிருந்தது. யார்க்கியர் காலத்தில் நலிவுற்றிருந்த இதன் பெருமை, டியூடர்களின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் மீண்டும் வளர்ச்சியடைந்தது. உண்மையில் அவை இப்பொழுது பிரிவி கவுன்சிலாகியது. இச் சொல் தெளிவற்றதெனினும், இது அடிக்கடி "கவுன்சில்" என்று வழங்கப்பட்டது.

இதன் நிலை தெளிவானதும், பிரிவி கவுன்சிலிலிருந்து சாதாரண உறுப்பினர்கள் பின்னணிக்குத் தள்ளப்பட்டனர். சாதாரண கவுன்சில் எனும் நிறுவனம் இருந்ததாகத் தெரியவில்லை. சாதாரண கவுன்சிலர்கள் அரசரின் "சட்டந்தெரிந்த ஆலோசகர்களாக"க் கருதப்பட்டனர். நாட்டின் அரசாங்க அமைப்பில் இவர்கள் இடம்பெற்றார்கள் என்பதைவிட,

சட்டத்தின்படி நிலை அமைப்பில் இடம்பெற்றார்கள் எனக் கூறலாம். விண்மீன் நீதிமன்றம், வேண்டுகோள் நீதிமன்றம் வடக்கெல்லைக் கவுன்சில், வேல்ஸ் கவுன்சில் ஆகியவைகளின் பணியாட்கள், அரசத் தூதுவர்கள், நீதிபதிகள், மேற்றிராணியார்கள், கவுன்சிலர்களாகப் பிரமாணம் எடுத்துக்கொள்ளத் தக்க மேல்நிலையாளர்கள் ஆகியோர் பிரிவி கவுன்சிலின் உள்வட்டத்திலிருந்து விலகி வெளியேறினர்கள். மேலும், பிரிவி கவுன்சிலில் இவர்கள் எத்தகைய பயனுடைய பணிகளையும் மேற்கொள்ள இயலாதவர்களாகவும் இருந்தார்கள். தல ஆட்சியின் தேவையைக் கருதி, மாவட்டங்களின் சான்றோர்கள் கவுன்சிலில் இடம்பெறல் வசதியாகக் கருதப்பட்டது. சான்றோர்களின் அதிகாரத்தையும் பொறுப்பையும் இது வளர்த்தது. நாட்டின் அமைதியைப் பேணவும், அரசக் கட்டளைகளைச் செயற்படுத்தவும் இவர்கள் உதவினர்கள்.

கவுன்சிலின் (அவையின்) அமைப்பும் உருவளவும்

உறுப்பினராகப் பிரமாணம் எடுத்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை பெரிதும் மாறுபட்டுக் காணப்பட்டது. இதன் கூட்டாண்மைச் சிறப்பு வளர்ச்சியடைந்தபொழுது உறுப்பினரின் எண்ணிக்கை குறைந்தது. ஆட்சியலுவல்களை அரசர் பயன்படுத்திச் செய்துகொள்ளவும், மாறுபட்ட அரசியல், சமயக் கருத்துடையவர்களோடு தொடர்புகொண்டு கருத்துகளை அறிந்துகொள்ளவும் கவுன்சில் வகைசெய்தது. ஹென்றியின் பிரிவி கவுன்சிலில் பத்தொன்பது உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆரும் எட்வர்டிற்குப் பதினாறு உறுப்பினரைக் கொண்ட ஒரு நிறுவனத்தை அமைத்துக்கொள்ள ஹென்றியின் உயிலில் வகைசெய்யப்பட்டது. இவர்களோடு பன்னிரண்டு உதவியாளர்களுமிருந்தனர். எட்வர்டின் ஆட்சிக்காலத்தில் உறுப்பினரின் எண்ணிக்கை நாற்பதாக உயர்ந்தது. இவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களை மேரி அகற்றினர். பலதரப்பட்டவர்களின் ஆதரவோடு இவர் பிரிவி கவுன்சிலை விரிவாக்க முனைந்தார். இவர் இறக்கும்பொழுது கவுன்சிலில் 40 உறுப்பினர்கள் இருந்தனர். எவ்வாறாயினும், எலிசபெத் அரசியாரின் ஆட்சிக்காலத்தில் உறுப்பினர்கள் பதினெட்டிற்குமேல் உயரவில்லை. 1588-க்குப்பின், உறுப்பினரின் எண்ணிக்கை பதினைந்து அல்லது பன்னிரண்டாகக் குறைந்தது. போகப்போக, அரசின் அலுவலர்களின் நிறுவனமாக கவுன்சில் மாறியது. இவர்கள் வகித்த பதவிகளின் காரணமாக இவர்கள் அனைவரும் ஊதியம் பெற்று வந்தார்கள்.[1]

[1] Gladish, "Tutor Privy Council", 29

கிராம்வெல்லின் மரணத்திற்குப்பின், துறைத்தலைவர்களிடமிருந்து துறைகள் தொடர்பை அறுத்துக்கொண்டன. பழைய துறைகளின் பணிகளுக்கு அப்பாற்பட்ட புதிய அலுவல்கள் செயலரைச் சென்றடைந்தன. நிதிமன்றப் பதிவுகள், கருவூலக் கணக்குகள், கட்டளைகள், முத்திரை நாயகக்கட்டளைகள் போன்ற பழமையான துறையைச் சேர்ந்த பத்திரங்களோடு பெருமளவில் கடிதங்களும் பத்திரங்களும் தோன்றின. வேல்ஸ், அயர்லாந்து ஆகிய நாடுகளின் வெளி விவகாரங்கள், பாதுகாப்பு, பொது அமைதி போன்றவைகளனைத்தும் செயலரின் அதிகார வரம்பிற்குள் வந்தன. வேலைப்பளுவினால் 1539-ல் இரண்டாவது செயலர் அமர்த்தப்பட்டார். முழு உறுப்பினர்களாக அவையில் (கவுன்சில்) நுழைந்த செயலர்கள் முதன்மையான நிலைக்கு உயர்ந்தார்கள். எலிசபெத் அரசியாரின் ஆட்சியின் கீழ் செயலர்களாகிய செசிலும்[1] வால்சிங்ஹாமும்[2] முதல் அமைச்சரின் நிலைக்கு உயர்ந்தனர்.

கவுன்சிலின் பணிகள்

இதன் தனியுறுப்பினர்களின் பணியைத்தவிர, கவுன்சில் இடையருமல் தன் சொந்தமான பணிகளில் ஈடுபட்டது. இதன் பலவகையான பணிகள் அரசாங்கத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஊடுருவின. அரசின் துறைகளை இணைத்து, இவைகளின் பணிகளை இது இயக்கியது. இதன் செயற்பாட்டில் "அதிகாரப் பிரிவினை"க் கோட்பாடு வலியுறுத்தப்படவில்லை. சட்ட ஆக்கத்திற்கும் வரிவிதிப்பிற்கும் இது ஒரு கருவியாக இருந்தது. செயலாட்சி செய்ததோடு, மற்றத் துறைகளின் ஆட்சியை இது மேற்பார்வை செய்தது. திருச்சபையையும் பொதுவாக இது கண்காணித்தது. இதன் சொந்த அதிகாரத்தைச் செயல்படுத்தியதோடு, வேறு இடங்களில் செயற்படுத்தப்பட்ட அதிகார எல்லைகளை இது மேற்பார்வை செய்தது. தேர்தல்களில் தலையிட்டும், தேர்தல் முடிவுகளை ஆராய்ந்தும், பாராளுமன்ற அலுவல்களைச் செயல்படுத்தியும் பாராளுமன்றத்தை இது அடக்கியாண்டது. டியூடர் அரசின் இயல்பான பணிகளைச் செயல்படுத்திய முறையான இயந்திரமாக இது இருந்து வந்தது. பாராளுமன்றம் தலையாய நிறுவனமாக இருந்தது. ஆனால், குறுகிய,

[1] Cecil

[2] Walsingham

நீண்ட தொடர்க்கூட்டங்களோடும், இடைவெளிகளோடும், பலதரமான, பொதுவான திறமையற்றவர்களோடும் பாராளுமன்றம் கூடிக் கலைந்துகொண்டிருந்தது. ஆனால், கவுன்சில் எப்பொழுதும் தொடர்ந்து கூட்டத்தில் இருந்து வந்தது; இடையறாமல் பணியாற்றி வந்தது; நெருக்கடி காலத்தில் இங்கிலாந்து உருவாக்கியளித்த அறிஞர்களோ இது அரசரின் பணிகளுக்கு அளித்தது.

அதிகரித்து வந்த அரசாங்கப் பணிகளோ நிறைவேற்ற அரசர், தொழில்முறை சான்ற ஆட்சியாளர்களோப் பெற, நடுத்தர வகுப்பினரை நம்பியிருக்க வேண்டியிருந்தது. லண்டனில் அல்லது நீதிமன்றத்தில் அவையினர் கூடவேண்டி யிருந்ததோடு, இவர்களுக்குச் சட்டப்பயிற்சியும் தூதரக அனுபவமும் தேவையாக இருந்தன. இத்தகைய அவையில் பழைய பெருங்குடியினரும் திருச்சபையினரும் பங்கு பற்ற வில்லை. எட்டாம் ஹென்றியின் ஆட்சிக்கால இறுதியில் பத்தொன்பதில் ஆறு பேர்கள் மட்டுமே சிறப்புப்பட்டம் பெற்றவர்களாக இருந்தனர். இவர்களில் அருண்டேல்[1] மட்டுமே பிரபுவிற்குரிய பட்டம் பெற்றவராக இருந்தார். ஆரும் எட்டுவர்டு, மேரி ஆகியோரின் - ஆட்சிக்காலத்தில் உயர்குடியினர் அதிகரித்தனர். ஆனால், இது எலிசபெத் அரசியாரின் காலத்தில் மறுபடியும் தேய்ந்தது. பிரிவி கவுன் சிலில் திருச்சபையும் முன் பெற்றிருந்த மிகையான பிரதிநிதித் துவத்தை இழந்தது. எட்டாம் ஹென்றியின் இறுதிக் காலத்தில் கவுன்சிலில் மூன்று திருச்சபையினர் மட்டுமே இருந்தனர். மேரியின் காலத்தில் இவர்களின் எண்ணிக்கை எட்டாக உயர்ந்தது. ஆனால், எலிசபெத் அரசியாரின் காலத்தில் இவர்கள் கவுன்சிலிலிருந்து மறைந்துவிடும் நிலையில் இருந்தார்கள். 1567-ல் வூட்டன்[2] இறந்ததிலிருந்து 1586-ல் விட்கிஃப்ட்[3] பிரிவி கவுன்சிலராக அமர்த்தப்பட்டதுவரை திருச் சபையினர் எவரும் கவுன்சிலில் அமரவில்லை. பொது ஆட்சி நிபுணர்களின் நிறுவனமாக இது விளங்கியது. கவுன்சிலின் வரம்பிற்குட்பட்ட பணிகளைச் செய்துமுடிக்க இப் புதுவகை யான மனிதர்கள் தேவைப்பட்டார்கள். தேசிய விவகாரங்கள் பற்றிய எல்லா விவரங்களையும் முறைப்படுத்துதல் இப்பொழுது அரசரின் கொள்கையாயிற்று. இக் கடமைப் பொறுப்பைக் கவுன்சில் ஏற்று நடத்தியது. இதன் பலதரப்

[1] Arundel
[2] Wotten
[3] Whitgift

பட்ட பொறுப்புகளை முழுமையாக வரைந்துரைப்பது இயலாத தாகும். அரசருக்குத் தகவல் அளித்தல், அறிவுரை வழங்குதல் போன்ற பணிகளைத்தவிர, இதன் பல்வேறு பணிகளைச் சிறிது எடுத்துரைக்க முயல்வோம்.

கவுன்சிலின் சட்ட ஆக்கப்பணி அரசப் பேரறிக்கைகளையும் அவசரச் சட்டங்களையும் பிறப்பிக்க, கவுன்சில் தக்க சாதனமாக அமைந்தது. இது அரசருடைய சிறப்பதிகாரத்தின் மறுக்கவியலாத மரபுரிமையாகும். இவை முத்திரை நாயகங்களால் பிறப்பிக்கப்பட்டன. அரசருடைய கட்டளைகளை அறிவிக்க இத்தகைய கருவிகள் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்தன. தேசிய விவகாரங்களில் அரசரின் கட்டுப்பாடு வலியுறுத்தப்பட்டபொழுது இத்தகைய விதிமுறைகள் பிறப்பிக்கப்பட்டன. இது வசதியாகவும் தேவையான முறையாகவும் இருந்தது. பொதுச்சட்டம், எழுத்துருவில் இருந்த சட்டம் ஆகியவைகளின் விதிகளால் பயன்படுத்தப்பட்ட கட்டுப்பாடு மிகக் குறைவேயாகும். இருக்கும் சட்டங்களின் குறைகளை நிறைவுசெய்வதும், சட்டங்கள் இல்லாதபொழுது சட்டங்களைப் படைப்பதும் அரசரின் அலுவலாகவும் கவுன்சிலின் அலுவலாகவும் இருந்தது. வெளியுறவுகள், வாணிகம், வெளியார், சுங்கம், படை, கப்பற்படை, சப்ளைகள், தொழில், கூலிகள், விலைகள், நாணயம், எடைகள், அளவுகள், வாணிகக்குறிகள், தனியுரிமைகள், சாசனங்கள், நில அடைப்புகள், சமயச்சடங்குகள், அவதூறுகள் போன்றவைபற்றிய பல பேரறிக்கைகள் வெளியிடப்பட்டன. அச்சிடுவதையும் நூல்கள் வெளியிடுவதையும்பற்றிய அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. பொது அமைதி, உடை, உணவு, விளையாட்டுகள் ஆகியவை பற்றியும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. தேசியச் செயற்பாட்டின் புதிய உருவங்கள், தேசிய ஒழுங்குமுறையின் புதிய பிரச்சினைகள் அரசரின் சிறப்பதிகார எல்லைக்குள் வந்தன. அச்சிட்டு வெளியிடும் புதிய தொழிலின்மீது அரசர் செலுத்திய கட்டுப்பாடு, பொதுக்கருத்து வெளியீட்டையும், அரசியல், சமயத் திறனாய்வையும் மறைமுகமாகப் பாதித்தது.

வெளியீடுகள் வெளியானவுடன் அரசரின் சிறப்பதிகார எல்லைக்குள் வந்தன. இவைகளைச் சட்டங்கள் உறுதிப்படுத்தினாலும், பத்திரிகைத் தணிக்கையும், அச்சடிப்பாளர் இசைவினைக்கும் சட்டத்தால் உண்டாக்கப்படவில்லையெனலாம். பேரறிக்கையால் பத்திரிகைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

வெளிநாடுகளில் அச்சிடப்பட்ட ஆங்கில நூல்களை அல்லது பிரிவி கவுன்சிலால் அல்லது இதனால் அமர்த்தப்பட்ட ஒருவரின் ஒப்புதலாலன்றி அச்சிடப்பட்ட நூல்களை 1538-ல் ஒரு பேரறிக்கை தடைசெய்தது. அரசின் நலன் கருதிப் பிற் காலத்திய பேரறிக்கை இக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத் தியது. எழுதப்பட்ட சொற்களுக்குச் சட்டங்கள் இராசத் துரோகக்குற்றத்தை நீட்டித்தன. இராசத்துரோக, ஆட்சிக் கெதிரான, அவதூறான நூல்களை இறக்குமதி செய்தல் அல்லது அச்சிடுதலைப் பேரறிக்கை குற்றமாக்கியது. இத்தகைய நூல்களை அழிக்கவும், இசைவிணக்கம் பெறுத வெளியீடுகளைத் தவிர்க்கவும் அரசாங்கம் கட்டளையிட்டது. அச்சுத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரை ஒரு தனியுரிமைக் கம்பெனியாக அரசாங்கம் அமைத்தது. இசைவிணக்கம் பெறுத அச்சகங்களைச் சோதனைசெய்ய அரசாங்க அலுவலர்கள் அனுமதி பெற்றார்கள். லண்டன், ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்கள் அச்சிடும் தொழிலில் உரிமைபெற்றன. இசைவிணக்கம் அளிக்க உயர் ஆணைக்குழு அதிகாரம் பெற்றது.

பேரறிக்கைகளின் சரியான சட்ட இயல்பை வரையறை செய்வது எளிதன்று. சட்டங்கள், பொதுச்சட்டங்கள் ஆகிய வற்றைக்காட்டிலும் இவை செயல்திறம் குறைந்து காணப் பட்டன. ஆயினும், இவை பொதுச்சட்டங்களின் குறைகளை நிறைவுசெய்தன. இவை மிக நெகிழ்ச்சியாக இருந்ததால், எந்த நுட்பக் கூறுகளோடும் செயல்தொடர்பு கொள்ள முடிந்தது. இவை தற்காலிக இயல்புடையனவாக இருந்தன. அரசரின் மறைவோடு இவையும் மறைந்துவிடுதல் இயல்பாக இருந்தது.

இவை கவுன்சிலின் இசைவைப் பெற்றிருக்கமுடியாது. எட்டாம் ஹென்றியால் பிறப்பிக்கப்பட்ட 200-க்கும் அதிக மான பேரறிக்கைகளில் 36 மட்டுமே கவுன்சிலின் இசை வோடு வெளியிடப்பட்டன. இவை வரைவு நிலையில் கவுன்சிலின் பார்வைக்கு வந்திருக்கலாம்; விவாதிக்கப்பட் டிருக்கலாம்; ஆனால், இவைகளின் தன்மை ஐயப்பாட்டிற் குரியதாகவே இருந்தது. இவை விரைவில் பெருகியதும் இவை செய்யப்பட்ட முறையின் உறுதியற்ற தன்மையும், இவைகளோடு தொடர்புடைய அதிகாரமும் சில ஐயப் பாடுகளை எழுப்பின. ஐயப்பாட்டிற்குரிய கருத்துகளை முடி விற்குக் கொண்டுவர 1539-ல் ஒரு துணிச்சலான முயற்சி

மேற்கொள்ளப்பட்டது. பேரறிக்கைகளுக்கு மக்கள் கீழ்ப் படியாததால், கவுன்சிலைக் கலந்துகொண்டு அரசர் பேரறிக்கைகளைப் பிறப்பிக்கவேண்டுமென வகை செய்யப் பட்டது. இப் பேரறிக்கைகள் சட்டத்தின் முழு ஆற்றலோடு செயல்படும். குறிப்பிடப்பட்ட முறையில் இவை வெளி யிடப்படவேண்டும். அமைதிகாண் நீதிபதிகள் இவைகளைச் செயல்படுத்த வேண்டுமென அரசர் விதிசெய்தார். ஆனால், பேரறிக்கைகள் எழுத்துருவில் உள்ள சட்டங்களையும், பொதுச் சட்டங்களையும் மீறமுடியாது. பேரறிக்கைகளின் செல் திறன் பற்றி ஐயப்பாடுகள் இருக்கலாம். ஆனால், எழுத் துருவில் உள்ள சட்டங்களுக்கு இத்தகைய ஐயப்பாடுகள் எழவில்லை. பாராளுமன்றத்திற்கு வெளியே ஆக்கப்பட்ட சட்டங்களின் குறைபாடுகளை அகற்றுவது பாராளுமன்றத் தின் கடமையெனக் கருதப்பட்டது.

கவுன்சிலைக் கலந்துகொண்டு அரசர் வரிவிதிக்கும் அதிகாரம் ஒரு வரம்பிற்குட்பட்டே காணப்பட்டது. குடி மக்களின் இசைவின்றி வரிவிதிக்கலாகாதென்பதும், இவ் விசைவைப் பாராளுமன்றத்தில் தான் கேட்டுப் பெறவேண்டு மென்பதும் பொதுச்சட்டமாகும். இதையே எழுத்துருவில் அமைந்த சட்டங்களும் வலியுறுத்தின. எது வரியை உரு வாக்கியதென்பதில் ஐயப்பாடு இருக்கலாம். இது பொருளா தார, அரசியல் பிரச்சினையாக இருந்தது. நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு அரசர் வெளி வாணிகத்தை ஒழுங்கு படுத்துவது அரசரின் சிறப்பதிகாரமாகும். சில நாடுகளோ டான வாணிகத்தை முழுமையாக அல்லது அரைகுறையாக அரசர் விலக்கி வைக்கலாம். வெளிநாட்டு வாணிகத்தில் பங்கு பற்றுவதை அரசர் ஒரு சில குழுவினருக்களிக்கலாம். உரிமை யற்ற வணிகர்கள் இதில் கலந்துகொள்வது தடைசெய்யப் பட்டது. வாணிகத்தை அரசாங்கம் கண்காணித்தது. இது அரசாங்கத்தின் முறைப்படுத்தும் அதிகாரத்தை வெளிப் படுத்தியது. பலதரப்பட்ட ஒழுங்கு முறைகள் இருந்தன. பொருள்கள் வந்து குவிதலைக் கட்டுப்படுத்தக், கூடுதல் தீர்வைகள் விதிக்கப்படலாம். இவைகளை விதிக்க எட்டாம் ஹென்றி சட்டத்தால் அதிகாரம் பெற்றிருந்தார். இதற்கான சிறப்பதிகாரமும் அரசரிடம் இருந்தது. ஏற்றுமதியான துணியின்மீதும், இறக்குமதியான மதுவின்மீதும் மேரி 1557-ல் வரி விதித்தார். இறக்குமதியான பிரெஞ்சு மதுவின் மீதும், ஏற்றுமதியான பீரின்மீதும் நிலையான வரியையும் மற்றப் பொருள்களின்மீது உசிதமான வரிகளையும் 1558-ல்

மேரி விதித்தார். எலிசபெத் வரிகளை மேலும் அதிகரித்தார். இவ் வரிவிதிப்புகளாலும், வாணிகத் தனியுரிமைகளாலும் பெரும்பணம் அரசர்களை வந்தடைந்தது.

1525-லும், 1528-லும் மேற்கொள்ளப்பட்ட கட்டாயக் கடன்கள் பிற்காலத்தில் அடிக்கடி திரட்டப்பட்டன. திருப்பிக் கொடுப்பதாக உறுதி கூறி 1542-ல், 112,000 பவுனுக்கு அதிக மாகத் திரட்டப்பட்டது.[1] இக் கடன்களைத் திருப்பிக் கொடுத்து விடுவதாக அரசர் கூறியதால் இவைகளை வரிகளாகக் கருத முடியாது. நிதி நெருக்கடியைத் தவிர்க்கவும், தேசிய இடரை அகற்றவும் செல்வர்களிடமிருந்து நிதி திரட்ட அரச முத்திரை யோடு கூடிய கட்டளைகளை அரசர் பிறப்பித்தார். வழக்கமாக இவைகளைப் பொதுமக்கள் விரும்புவதில்லை. 1557-ல் மேரி விதித்த கட்டாயக் கடன்கள் பெருத்த எதிர்ப்பை உண்டாக் கின. பெருந்தொகையைத் திரட்டத் தவறியவர்கள்மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கடுமையான முறைகளைப் பின்பற்றி 1558-ல் 109,000 பவுன் திரட்டப்பட்டது. நன்கொடை என்ற பெயரில் திரட்டப்பட்ட கடன்களை (Benevolences) டியூடர்கள் அடிக்கடி திரட்டினர்கள். எடுத்துக்காட்டாக, 1545-லும், 1546-லும் எட்டாம் ஹென்றி இரண்டு தடவைகள் 120,000 பவுன் திரட்டினர். ஆனல், இவை வரிகளின் வகையில் சேரவில்லை. ஏனெனில், இவை செல்வர்களால் அரசருக்குக் கொடுக்கப்பட்ட தன்விருப்பிலான கொடைக ளாகக் கருதப்பட்டன.

நாட்டுப் பாதுகாப்பிற்கென இக் கொடைகளையும் கட்டாயக் கடன்களையும் திரட்டவேண்டியதன் அவசியம் எடுத் துரைக்கப்பட்டது. இராணுவச் சேவையிலிருந்து விலக்குப் பெறவும், வழக்கொழிந்துபோன வீரத் திருத்தகைப் பட்டத்தை மீண்டும் பெறவும் பணம் திரட்டப்பட்டது. கப்பற் படை பணிக்கும் இதேபோல் பணம் திரட்டப்பட்டது. முதலில் இத்தகைய வரியைத் துறைமுக நகரங்கள் கொடுத்து வந்தன. பதினைந்நூற்றாண்டில் இவ் வரி கடற்கரை மாவட்டங்களில் வசூலிக்கப்பட்டது. கடற்கரையையொட்டிய உள்நாட்டுப் பகுதிகளிலிருந்தும் இவ் வரி திரட்டப்பட்டது. கடற்கரையி லிருந்து தொலைவில் இருந்த நகரங்களாகிய சிரூஸ்பரி,[2] ஹாலி.ஃபாக்ஸ் போன்றவைகளிடமிருந்து பணம் திரட்டப்பட் டது. இப் பணத்தை யார் கொடுப்பது? எப்படிக் கொடுப்பது?

[1] Dietz, "English Govt. Finance," 164-65.
[2] Shrewsbury

இதை எப்படி நிறைவேற்றுவது? என்பதெல்லாம் கவுன்சிலின் அலுவலாகும். கவுன்சிலின் மேற்பார்வையால் இவ்வாறு கப்பற்பண முறையொன்று வளர்ச்சியடைந்தது.

சட்ட ஆக்கமும் வரி விதிப்பும் இடையிடை நிகழ்கின்ற செயல்களாகும். ஆனால், ஆட்சியியலோ அன்றுடப் பணியாகும். சட்டத்தைச் செயல்படுத்துவதும், மற்ற அலுவலர்கள் இதை உறுதியாகச் செயல்படுத்தும்படி பார்த்துக்கொள்வதும் கவுன்சிலின் கடமையாக இருந்தது. இது செயல்படுத்திய விதிகள், ஓரளவு சட்ட நூலிலிருந்தும், ஓரளவு அரசரின் நேரடிக் கட்டளையிலிருந்தும், அதிகாரத்திலிருந்தும் பெறப்பட்டவைகளாகும். அரசின் தலையீடு அதிகரித்ததும் போரிக்கைகளின் செயற்பாட்டைப்போல் எழுத்துருவில் இருந்த சட்டங்களும் காலப்போக்கில் விரிவடைந்தன. வாணிகம், தொழிற்சாலை, வேளாண்மை, தொழில் பயிற்சி, வேலைநிலை, உணவு சப்ளை, விலைவாசி, வறுமை நொடிப்பு, ஒழுங்கீனத்தை ஒழித்தல், சமய ஒருமைப்பாட்டைப் பேணுதல் ஆகியவை கவுன்சிலின் மேற்பார்வைக்குள் வந்தன. புதிய சமூகத்தின் வளர்ச்சிச் சிக்கலை வெளிப்படுத்தும் எல்லாச் செய்திகளும் கவுன்சிலின் பார்வைக்குள் வந்தன.

வேலை செய்யாதவர்களும், வேலைசெய்ய விரும்பாதவர்களும் ஒரு தனிப் பிரச்சினையை உண்டாக்கினர்கள். மருத்துவமனைகளும், இரவலர் விடுதிகளும், மடங்களும், தொழிற் கழகங்களும் பழங்காலத்தில் திக்கற்றவர்களுக்குப் புகலிடம் அளித்துப் பேருதவி செய்தன. இப்பொழுது இவ் வமைப்புகள் எல்லாம் அழிக்கப்பட்டு, இவைகளின் அறக்கட்டளைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அரசு உருவாக்கிய ஒரு பிரச்சினையை இப்பொழுது அரசே சமாளிக்கவேண்டியிருந்தது. சுற்றித் திரிபவர்களை டியூடர்கள் காலத்திய சட்டங்கள் தண்டித்தன. ஆனால், இரவலர்கள் புகலிடம் நாடி அலைந்தார்கள். இரவலர் துயர்துடைக்க மக்கள் நன்கொடையாகப் பொருளுதவியளிக்க வேண்டியதன் அவசியத்தை அரசு வலியுறுத்திச் சட்டமியற்றியது. இரவலர்களின் குழந்தைகளுக்குத் தொழிற்பயிற்சி அளித்து, வேலைதேடித் தரவேண்டிய பொறுப்பைத் தல நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமெனச் சட்டமியற்றப்பட்டது. இரவலர்களின் உதவிக்காக 1572வரையில்கட்டாய வரிவிதிப்பு இருக்கவில்லை. நன்கொடை, அன்பளிப்பு ஆகியவைகளே இருந்து வந்தன. இவைகளும் பயனுடையவனவாக இல்லை. 1576 வரையில் உடல் வலிமை

யுள்ள இரவலர்கள் வேலையில் ஈடுபடுவற்கேற்ற பொருள்களை அமைதிகாண் நீதிபதிகள் திரட்டவேண்டுமென்பதற்கான சட்டமியற்றப்படவில்லை. உடல்திறமிக்க போக்கிரிகளுக்குக் கடுமையான தண்டனை யளிக்கப்பட்டது. அடுத்தடுத்து மூன்றுவது முறையாகக் குற்றம் செய்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது அல்லது அடிமை நிலை அளிக்கப் பட்டது. 1601 -ல் முழுமையான இரவலர் சட்டமொன்று இயற்றப்பட்டது. செயலுரமற்றவர்களுக்கு உதவியும், செயல்திறமிக்கவர்களுக்கு வேலையும் அளிக்கப்பட்டது. இவைகளின் நிவாரணப்பொறுப்பு திருச்சபை வட்டங்களுக்கு அளிக்கப்பட்டது. இதற்காகத் தீர்வை வரிகள் விதிக்கப் பட்டன. சுற்றித்திரிவதும், இரப்பதும் தண்டனைக்குரிய குற்றங்களாயின. வரிப்பணத்தில் இரவலர் இல்லங்களை அமைதிகாண் நீதிபதிகள் வைத்துப் பேணினர்கள்.

இத்தகைய சட்டங்கள் ஆட்சியாளர்களுக்குப் போதிய அளவு வேலை கொடுத்தன. இத்தகைய சட்டங்களை இயற்று தல் ஒருபுறமிருக்க, இவைகளைச் செயல்படுத்தவும் வேண்டும். இதன் பொறுப்பு கவுன்சிலுக்குரியதாயிற்று. இப் பொறுப்பை நிறைவேற்றுவற்காகக் கவுன்சில் கழகமாகவும் குழுவாகவும் ஆணைக்குழுவாகவும் அமர்ந்து செயல்பட்டது. கவுன்சிலின் செயலக அலுவலர்களுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்துக் கடிதங்கள் எழுதின. தலக் குறைபாடுகள் அல்லது நுட்பப் பிரச்சினைகளை ஆராயச் சிறப்புக் குழுக்கள் அமர்த்தப்பட்டன.

ஆட்சிப் பொறுப்புகளோடு பொது அமைதியைப் பேணுவ தற்குக் காவல் அதிகாரங்கள் செயல்படுத்தப்பட்டன. ஐயப் பாட்டிற்குரிய ஆட்களைக் கண்காணித்தல், பிடித்தல், விசாரித் தல், செய்திகளைக் கேட்டறிதல் ஆகியவை கவுன்சிலின் அலுவல்களாக இருந்தன.சந்தேகத்திற்குரியவர்களை விசாரணை யின்றிச் சிறையிடுதல், கவுன்சிலின் முறையான நடைமுறை களாகும். இவ்வாறு சிறையிடப்பட்டவர்களுக்குச் சட்டப் பாதுகாப்புகள் கிடையா. சதிச்செயல்களை ஒடுக்க இவ் வதி காரம் பயன்படுத்தப்பட்டது.

எட்டாம் ஹென்றியின் காலத்தில் வேல்சின் அரசாங் கத்தில் பெரும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. இம் மாறுதல்கள் வேல்சின் கவுன்சிலைப் பயனற்றதாக்கின. இங்கிலாந்து முடியரசோடு வேல்ஸ் இணைந்தது. ஏற்கனவே உள்ள மாவட்டங்களோடு இப்பொழுது ஐந்து மாவட்டங்கள்

சேர்க்கப்பட்டன. இம் மாவட்டங்களும் வேல்சும் ஆங்கில மாவட்டங்களோடு ஒரு சட்டத்தால் இணைக்கப்பட்டன. வேல்சின் குடிமக்களும் ஆங்கிலக் குடிமக்களும் ஒரே சட்டத் திற்குட்பட்டார்கள். வேல்சின் எல்லைப்புறப் பகுதிகளின் வழக்கங்களை அகற்றி, ஆங்கிலத்தை இங்கு நீட்டித்தனர். பாராளுமன்றத்தில் வேல்சிற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப் பட்டது. மற்றொரு சட்டத்தால் வேல்சின் மாவட்டங்கள் ஒவ் வொன்றிலும் மாவட்ட நீதிமன்றங்கள், அரசப்பேராள், அமைதிகாண் நடுவர்கள், தல நீதிமன்றங்கள் ஆகியவை நிறுவப்பட்டன. நீதி வழங்கும் பணிகளுக்காக வேல்ஸ் மூன்று வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இவை ஒவ்வொன்றிலும் ஒரு குற்றத்தண்டனை நீதிமன்றம் இருந்து செயல்பட்டது. இந் நீதிமன்றங்களிலிருந்து மேல்முறையீடுகள் அரச நீதி மன்றத்திற்கும் வேல்ஸ் கவுன்சிலுக்கும் சென்றன.

வேல்ஸ் கவுன்சில்

1543-ஆம் ஆண்டுச்சட்டம் வேல்ஸ் கவுன்சிலையும் இதுவரை இது செயல்படுத்தி வந்த அதிகார வரம்பையும் ஏற்றுக்கொண்டது. இங்கிலாந்தில் இருப்பதுபோல் வேல் சிலும் பொதுச்சட்ட நீதிமன்றங்களும், எழுத்துருவில் இருக்கும் சட்டங்களின் நீதிமன்றங்களும் ஒருங்கிருந்து செயல்பட்டன. மேலும், சிறப்பு அதிகார நீதிமன்றங்களுமிருந்து செயல்பட்டு வந்தன. இதுவரையில் அரச நீதிமன்றங்களுக்குப் பெரும் போட்டியாக இருந்த நிலமானிய, நிதிபற்றிய நீதிமன்றங்கள் பெருமை குன்றிச் சிதைந்தன. முதலில் வேல்சில் பொதுச் சட்டம், சிறப்பதிகாரச் சட்டங்களின் அதிகார வரம்பைப் பெற்றிருந்தது. இவ் விருவகை நீதிமன்றங்களில் பணிபுரிந் தோர் ஒரே பணித்தொகுதியினராயினும், இவை ஒன்று மற் றொன்றிற்குப் போட்டியாக அமையவில்லை. ரோலண்டு லீ,[1] செஸ்டரின் மேற்றிராணியார் ஆகியவர்களின் தலைமையில், வேல்ஸ் கவுன்சில் அமைதியை நிலைநாட்டியது. எனவே, அதிகார வரம்புபற்றிய மோதல் ஏற்படுவது உறுதியாகத் தோன்றியது. இங்கிலாந்தின் எல்லைப்புற மாவட்டங்கள் இயல்பு மீறிய ஓர் அதிகாரத்திற்குப் பணியவேண்டியதை வெறுத்தன.

1539-லிருந்து 1547 வரை தெற்கு வேல்சில் ஒரு சிறிது காலத்திற்கு மேற்குக் கவுன்சில் என்ற பெயருடன் ஒரு நீதி

[1] Rowland Lee.

மன்றம் செயல்பட்டு வந்தது. விண்மீன் நீதிமன்றத்தைப் போல் அதே அதிகாரங்களுடன் இந் நீதிமன்றமும் செயற் பட்டுவந்தது. ஆனல், மற்ற மாவட்ட நீதிமன்றங்களைப்போல் உறுதியான அடிப்படையில் இந் நீதிமன்றம் அமையவில்லை. தல எதிர்ப்புகளை இதனல் சமாளிக்க முடியவில்லை. எனவே, இது செயல்குன்றிப்போவதை அரசர் தடுக்கவில்லை. அமைதி யாக இருந்த தென்மேற்கு வேல்ஸ், விண்மீன் நீதிமன்றம், பொதுச்சட்ட நீதிமன்றம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது.

வடக்குக் கவுன்சில்

வலிமைமிக்கதும் நிலையானதுமான மாவட்ட நீதிமன்றத் தின் தேவையை வடக்கில் காணலாம். காருண்ய யாத்திரைக்கு முற்பட்ட காலம் பல சோதனைகளைக் கண்டது. இவைகளில் எதுவும் வெற்றிபெறவில்லை. இப் பிராந்தியம் தொலைவிலும், எட்டமுடியாமலும் இருந்தது. இது இங்கிலாந் தின் அரசியல் ராணுவ எல்லையாக இருந்தது. காருண்ய யாத்திரையினல் வடக்குப்பகுதி ஆட்சி அதிகாரமற்றிருந்தது. இதன் உறுப்பினர் சிலர் இந்த யாத்திரையில் கலந்துகொண்டு தம் தலப்பற்றை வெளிப்படுத்தினர்கள். கலகம் ஒடுக்கப் பட்டவுடன் வடபகுதியின் அரசாங்கம் மாற்றியமைக்கப்பட வேண்டியிருந்தது. வட மாவட்டங்களாகிய யார்க், டர்ஹாம், நார்த்தம்பர்லாந்து, வெஸ்ட்மோர்லாந்து, கம்பர்லாந்து ஆகியவைகளில் இது தலையாய ஆட்சி நிறுவனமாகவும் நீதி மன்றமாகவும் இருந்து வந்தது. இக் கவுன்சிலின் வழியாகச் செய்திப் போக்குவரத்து நடந்துகொண்டிருந்தது. வட பகுதி யின் அமைதிக்கு இக் கவுன்சில் பொறுப்புடையதாகும்.

மேற்கிலும், மத்தியிலும், கிழக்கிலும் இராணுவ அடிப் படையில் எல்லை அமைந்திருந்தது. 1541-லிருந்து போர்க் காலத்தில் எல்லைப்புறம் ஒரு படைத்தலைவரின் கட்டுப் பாட்டில் இருந்தது. அமைதிக் காலத்தில் பிரிவி கவுன் சிலுக்குப் பொறுப்புடைய காப்பாளர்களால் இப் பகுதி ஆட்சி செய்யப்பட்டது. இக் காப்பாளர்கள் மாவட்டங்களின் பாதுகாப்பிற்காக அரசரால் அமர்த்தப்பட்டார்கள். அமைதி யைப் பேணஸ்காட்லாந்தியக் காப்பாளர்களோடு இவர்களும் இணைந்து பணியாற்றினர். காப்பாளர் நீதிமன்றத்தில் குற்ற வாளிகள் விசாரித்துத் தண்டிக்கப்பட்டார்கள்.[1] காப்பாளர்

[1] D. L. W. Towgh, "Last years of a frontier." 160-3.

நீதிமன்றங்களில் காப்பாளர், படைத்தலைவர் ஆகியவர்களின் அவசரச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. "போர் ஒய்வு" நாட்களில் ஆங்கில, ஸ்காட்லாந்தியக் காப்பாளர்கள் கலந்திருந்து தனிப்பட்ட தேசத் தகராறுகளைத் தீர்க்க முயற்சி மேற்கொண்டார்கள். காப்பாளர்களின் அதிகார வரம்பு இதற்குமுன் இவ்வளவு பயனுள்ளதாக இருந்ததில்லை. ஆயினும், வடபகுதியின் பொதுச்சட்டச் செயலாட்சியைவிட இது சற்று அதிகமாக இருந்தது.

தனிச்சிறப்பியல்புடைய வடக்கு எல்லைப்புறமும், தம் சிறப்பியல்பை இழந்துகொண்டிருந்த வேல்ஸ் எல்லைப்புறமும் டியூடர் ஆட்சியின் தனிப்பகுதிகளாக அமைந்தன. பிரிவி கவுன்சில் இங்குச் சிறப்பான அதிகாரத்தைச் செயற்படுத்தியது. ஆனால், இதன் பணியைத் தலைக் கவுன்சிலுக்கு மாற்றியது. இங்கிலாந்தின் மற்றப் பகுதியில் இது மாவட்ட, நகர, ஆட்சியோடு நேர்முகத் தொடர்புகொண்டிருந்தது. இவை தொடர்ந்து தன்னியக்க நிறுவனங்களாக இருந்து வந்தன. அரசாங்கத்தின் நிருவாகக் கட்டளைக்குப் பணிவதைவிட இவை சட்டத்திற்குப் பணியக் கடமைப்பட்டிருந்தன. ஆயினும், இவைகளின் நடைமுறைகளைப் பிரிவி கவுன்சில் நெருங்கிக் கவனித்து வந்தது. ஆணையர் நீதிமன்றம், அரச ஆட்பேர் ஆகியவை வழியாக இது தலைக் கவுன்சில்களோடு இணைக்கப்பட்டிருந்தது. நாட்டின் தலைப்படை அமைப்புகளை மேற்பார்வையிட எட்டாம் ஹென்றி அரசப் போராட்களை அமர்த்தினார். இவர்களுடைய நிலை ஆரும் எட்வர்டு, மேரி, எலிசபெத் ஆகியவர்களின் ஆட்சிக்காலத்தில் சட்டத்தால் உறுதி செய்யப்பட்டது. இந்த நூற்றாண்டின் இறுதியில் இவர்களுடைய பதவி நிரந்தரமாக்கப்பட்டது. இவர்கள் பிரிவி கவுன்சிலர்களே. படைப் பணிகளை நிறைவேற்றியதோடு, இவர்கள் தலை அலுவலர்களை அமர்த்துவதில் கவுன்சிலுக்கு உதவினர்கள். தலை அலுவலர்களின் செயல்களை இவர்கள் கவனித்தார்கள். தலை விவகாரங்கள்பற்றிய தகவலைக் கவுன்சில் பெற்றுக்கொண்டது. ஆட்பேர் (Sheriffs), அமைதி காண் நடுவர், நகர முதல்வர்கள் ஆகியோருக்கெதிரான முறையீடுகளை பிரிவி கவுன்சிலர்கள் விசாரித்தார்கள்; இவர்களைப் போற்றினர்கள் அல்லது கண்டித்தார்கள்; இவர்களின் தேர்தல்பற்றியும் பதவிவிலகல்பற்றியும் ஆராய்ந்தார்கள்: இவர்களின் அமர்வை ஒழுங்குபடுத்தினர்கள்; நடைமுறை விதிகளை முறைப்படுத்தினர்கள்; தேவையான போது இவர்களின் அதிகாரத்திற்கு உரமூட்டினர்கள்; ஒரு

நிறுவனத்திற்கும் இன்னொரு நிறுவனத்திற்குமிடையேயான தகராறுகளை முடிவுசெய்தார்கள்.

அமைதிகாண் நடுவர்கள்

இவர்களின் பணியில் கவுன்சில் கவனம் செலுத்தியது. இவர்களுடைய நீதி வழங்கும் பணிகளையும் காவற் பணிகளையும் டியூடர் காலத்திய சட்டங்கள் பெருக்கின. மேரி, எலிசபெத் ஆகியோரின்கீழ், இவர்கள் தனிப்பட்ட முறையில் கலகக்காரர்களைக் கலைந்துசெல்லக் கட்டளையிடுவர்; பணிய மறுத்தால் சிறைப்படுத்துவர். சந்தேகத்தின்பேரில் சிறைப் படுத்தும்படி ஆணையிட இவர்கள் அதிகாரமேற்றிருந்தார்கள். எந்தச் சட்டத்தின் அடிப்படையில் இவர்கள் இந்த அதிகாரத் தைப் பெற்றார்கள் என்பது தெரியவில்லை. இரண்டு மூன்று நடுவர்கள் கலகக்காரர்களைத் தண்டிக்கலாம். வரி செலுத்து வதைத் தவிர்க்க முயன்றவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். அமைதிகாண் நடுவர்களின் கூட்டு அமைவினால் அமைப்பில் கணிசமானதொரு மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஆட்சி அலுவல்களிலிருந்து நீதி வழங்கும் பணிகள் தனியாக வகைப் படுத்தப்பட்டன. குற்றஞ்சாட்டுதலும், குற்றவாளியைப் பிடித்துக்கொடுத்தலும் மக்கள் பொறுப்பாக இருந்தது மறைந்து இப்பொழுது காவலர்களின் பணியாயிற்று. ஆட்சி அலுவல்கள் சான்றுயத்தின் துணையின்றி நடுவர்களால் செயற்படுத்தப்பட்டன.[1]

நடுவர்களின் முதன்மையான பணிகளில் ஆட்சியும் ஒன்றாகும். சட்டங்களையும் கட்டளைகளையும் செயற்படுத்து தல் இவர்களின் பொறுப்பாயிற்று. சாலைகளைப் பேணுதல் பற்றிய குறைபாடுகளை ஒரு தனிப்பட்ட நடுவர் ஏற்றுக் கொள்ளலாம். அலுவலர்கள் செய்யத்தவறிய தீர்வை மதிப்பீடு இவரால் செய்யப்படுகிறது. வேலைசெய்ய மறுப் பவர்களைத் திருத்தகத்திற்கு இவர் அனுப்பலாம்; இரத்தற்கு அதிகாரமளிக்கலாம்; தானியம் ஏற்றுவதையும் இறக்கு வதையும் அனுமதிக்கலாம்; தொழிற்சாலைகளின் விதிகள் நிறைவேற்றத்தைக் கண்காணிக்கலாம்; திருச்சபைக்கு வராமையைத் தண்டத்திற்குட்படுத்தலாம்; இரவலர்களைக் கண்காணிக்க மேற்பார்வையாளர்களை இரண்டு அல்லது மூன்று நடுவர்கள் நியமிக்கலாம்; மேற்பார்வையாளர்கள், திருச்சபைக் காப்பாளர்கள் ஆகியோரின் செலவினங்களை மேற்பார்வையிடலாம்; தீர்வைகளை மதிப்பிடலாம்; தொழில்

[1] Holdsworth, IV, 148.

பயிற்சியாளர்களைக் கட்டுப்படுத்தலாம்; மதுக்கடைகளுக்கு இசைவாணை அளிக்கலாம்; பிளேக் நோய் பீடிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குப் பொழுது விதிகளை வகுக்கலாம். பாலங்கள், மருத்துவமனைகள், சிதைகள், கழிவுநீர் நிலைகள், எடைகள், அளவைகள், பொருள்கள், பேரப்பாதரவு நூல்கள் ஆகியவைகளைப்பற்றிய அதிகாரம் மூன்றுக்கு மேற்பட்ட நடுவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவர்களின் கூட்டமைவுகளில் நடுவர்கள் இன்னும் விரிவான அதிகாரம் பெற்றிருந்தனர். தீர்வை விதிப்புபற்றிய வழக்குகளை ஆராய்தல், கூலி நிருணயித்தல், இரவலர் துயருதவி, இசைவாணை யளிப்பு ஆகியவைபற்றிய அதிகாரங்களையும் இவர்கள் பெற்றிருந்தார்கள். இப் பணிகளின் பெருக்கம் நீதி வழங்கும் பணியையும் ஆட்சிப் பணியையும் பிரித்தது. இவைகளின் தனித்தனி அமர்வுகளை 1541-ஆம் ஆண்டுச்சட்டம் முறைப்படுத்த முற்பட்டது. 1545-ல் இச் சட்டம் நீக்கப் பட்டது. இவர்களுடைய சட்டப்படியிலான ஆட்சிப் பொறுப்புகளை நிறைவேற்ற அவ்வப்போது கூட்டங்களை அழைக்கும் விதிகளை வகுக்கும் பொறுப்பு நடுவர்களுக்கே விடப்பட்டது. ஆட்சிப் பணிகளை இன்னும் நீதித்துறையினரே ஏற்றுச் செயல்படுத்தி வந்தார்கள். இவர்கள் ஆட்சிப் பணிக்கு உயர்மாண்பைத் தேடித் தந்தார்கள்.

திருச்சபை வட்டம்

இதன் அமைப்பு வளர்ச்சியடையாத நிலையிலேயே இருந்தது. அமைதி பேணும் எழுத்தர் இதற்கு உதவியாக இருந்தார். ஒரிரு எழுத்தர்கள் உதவியாளராக அமர்த்தப் பட்டார்கள். திருச்சபை வட்டங்களின் கட்டளைகளைச் செயல் படுத்தும் இவர்கள், நகராட்சிகள், நூற்றுவர் வட்டங்கள், தல ஆட்சியின் உட்பிரிவுகள் ஆகியவைகளின் அலுவலர்களாக இருந்தனர். இருந்தபோதிலும், 16-ஆம் நூற்றாண்டின் இரவலர் சட்டத்திற்குத் தேவையான இன்னொரு பிரிவும் சேர்க்கப்பட்டது. அரசாங்கத்தின் சிறிய ஆட்சிப் பிரிவான திருச்சபை வட்டம் சமயச் சீர்திருத்த இயக்கத்திற்குப்பின், இதனுடைய வரலாற்றைத் தொடங்கியது. இடைக்காலத்திய திருச்சபை வட்டம் கலப்பற்ற சமய அமைப்பாக இருந்திருக்கிறது. இதன்மீது அரசு எத்தகைய கடமைகளையும் சுமத்த வில்லை. இவ் வட்டத்தில் வசித்தவர்கள் திருச்சபையில் கூடித் திருச்சபைக் காப்பாளர்களை அமர்த்தினர்கள்; திருச்சபை வட்டத்தின் விவகாரங்களை மேற்பார்வையிட்டார்கள்; திருச்

சபைக் கட்டணமொன்றை விதித்தார்கள். இதற்குமேல் திருச்சபைச் சார்புடைய நீதிமன்றங்கள் இருந்தன. சொத்துகளைப் பாதுகாத்தல், கட்டடங்களைப் பேணல், பொருள்களை விற்றல் ஆகிய உலகியல் தொடர்புடைய பொருள்கள் பற்றியதாக இது இருந்தது. ஆனால், இது திருச்சபை நீதிமன்றமாக இருந்ததால், பொதுச்சட்ட நீதிமன்றங்கள் இதன் சிறப்பியல்பைக் குறைத்துவிடவில்லை. இது செயல்திறனேடும் வீரியத்தோடும் செயல்பட்டு வந்தது. இரவலர் துயரகற்றும் கருவியாக டியூடர்களின் சட்டம் இதை மாற்றியது. இதன் வரிவிதிப்பு முதலில் அன்பளிப்பு அடிப்படையில் இருந்தது. இது பிற்காலத்தில் கட்டாயமாக்கப்பட்டுத் திருச்சபை நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டது. இறுதியாக, 1572-ல் இது கட்டாய வரிவிதிப்பாக்கப்பட்டது. பிற்காலத்திய சட்டங்கள் மேற்பார்வையாளர்களை அமர்த்தியது. ஆகவே, நெடுஞ்சாலைகளைப் பேணுதல் போன்ற நோக்கங்களுக்கான பொது அமைப்பாக இது வளர்ச்சியடைந்தது. திருச்சபை வட்டக் கட்டணங்கள் இந்நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. முன்னாள்ய தல அமைப்புகளிலிருந்து அலுவலர்கள் திரட்டப்பட்டார்கள். திருச்சபை வட்ட அலுவலர்களுக்கு மேல், திருக்கோயில் வாரியக் கணக்கர்கள் அமைதிகாண் நடுவர்களின் தணிக்கைக்குட்பட்டுத் திருச்சபை வட்ட விவகாரங்களை மேற்பார்வையிட்டனர்.

சமயச் சார்பில்லாத ஆட்சியோடு நெருங்கித் தொடர்பு கொள்ள திருச்சபை வட்டம் மட்டும் விரும்பவில்லை. மக்களின் ஆதரவைப் பெறுத திருச்சபை நடவடிக்கையால் சமய ஒருமையைப் பேணுதல் இயலாதெனக் கருதப்பட்டது. மேலும், சமய ஒற்றுமை அரசின் காப்பிற்கு இன்றியமையாததெனவும் கருதப்பட்டது. மேற்றிராசனப் பிரிவுகள்பற்றி பிரிவி கவுன்சில் மேற்றிராணியார்களின் கவனத்தை ஈர்த்தது; திருச்சபை நீதிமன்றங்களை மேற்பார்வையிட்டது. அரசின் நோக்கங்களுக்காகத் திருச்சபையின் அமைப்புகளைப் பயன்படுத்துவது திருச்சபைக்குப் பழக்கமாகிவிட்டது. மக்களும் திருச்சபையினரும் இணைந்து தல ஆட்சித்துறையில் ஈடுபடத் தொடங்கினர்.

தன்னுடைய செயல்களைப் பயனுடையனவாக்க, கவுன்சில் சுயேச்சையான, வலிமையான நிறுவனத்தைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. பொதுச்சட்ட நிறுவனத்தை இது பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. இத்தகைய நீதியியல்

அதிகாரத்தைக் கவுன்சில் மரபுரிமையாகப் பெற்றது. பதினைரும் நூற்ரூண்டில் இது முழுமையாக வளர்க்கப்பட்டது. விண்மீன் நீதிமன்றம் இத் துறையில் தனிப்பயிற்சி பெற்றது. இத்துடன், தேவையானபோது கவுன்சில் நீதி வழங்கும் பணியையும் நிறைவேற்றியது. நீதிஇயல் தொடர்பற்ற பணிகள் அதிகரிக்கவே கவுன்சில் இயற்கையாகவே இப் பணிகளைக் கைவிட்டது. வழக்கமான நீதித் தொடர்பில்லாப் பணிகளை விண்மீன் நீதிமன்றம் ஏற்றுச் செயல்படுத்தியது. இது ஓர் உண்மையான நீதிமன்றத்தைப்போல் இயங்கத் தொடங்கியது. வழக்குரைஞர்கள் இம் மன்றம் விசாரித்த வழக்குகளைத் தொகுத்தளிக்கத் தொடங்கினர். கவுன்சிலுடனை இதன் தொடர்பை எளிதாக வரையறுக்க இயலாது. நீதித் தொடர்பில்லாத பணிகளைச் செயல்படுத்துவதற்காகக் கவுன்சில் விண்மீன் நீதிமன்றத்தில் கூடியபொழுது இதன் நிலையில் மேலும் குழப்பமுண்டாயிற்று. கவுன்சிலர்களுக்கும் நீதிபதிகளுக்கும் அரசர் அல்லது சான்சலர் கொள்கை விளக்கம்செய்து, கட்டளை பிறப்பித்தார். பொற்கொல்லர் கழகத்தால் நடத்தப்படும் நாணயப் பரிசோதனையை இது நடத்தியது. அரசரால் அழைக்கப்பெற்ற பிரபுக்கள், நீதிபதிகள், மேற்றிராணியார்கள் ஆகியோரோடு பிரிவி கவுன்சிலின் உறுப்பினர் ஒருவர் நீதிமன்றமாகச் செயல்படும் விண்மீன் நீதி மன்றத்தில் அமரலாமென்பது 16-ஆம் நூற்ரூண்டின் இறுதியில் ஒரு விதியாயிற்று. இந் நீதிமன்றத்தில் அரசர் அமர்ந்ததில்லை. நீதிபதிகளே இதில் அமர்ந்து செயல்பட்டனர். 1487-ஆம் ஆண்டுச்சட்டம், இதன் அதிகாரங்களையோ அமைப்பையோ வரையறை செய்ததாகத் தெரியவில்லை.

பொதுவான உருவில் சில நடைமுறைகள் வளர்ச்சியடைந்தன. இந் நீதிமன்றத்தின் செயலாட்சிக்குள் சில வழக்குகளை ஒரு மசோதா கொண்டுவந்தபொழுது நடைமுறை தொடங்கியது. மன்ற அழைப்பாணையால் அழைக்கப்பட்ட எதிர்வாதி நீதிமன்றத்திற்குப் பதில் அளிக்கவேண்டியிருந்தது. இவருடைய பதிலிலிருந்து வாதி பல கேள்விகளைப் புனையலாம். இதேபோல் சாட்சிகள் பின் விசாரிக்கப்பட்டார்கள். இதுவரையில் நீதிமன்ற அலுவலர்கள் வழக்கை நடத்தினர்கள். பிரமாணத்தின்மேலன்றி ஒரு சாட்சி, ஓர் எதிர்வாதியின் குற்றத்தை நீதிமன்ற அலுவலர்முன் ஒத்துக் கொண்டால் இவரை நேராக விண்மீன் நீதிமன்றத்திற்கு எதிர்த்து வாதிக்கவும், தண்டனையை ஏற்கவும் கொண்டு

வரலாம்; சில சமயங்களில், சட்டப்படியான தண்டங்களும் இருந்தன. இப்படியொன்றும் இல்லையென்றால் நீதிமன்றம், தண்டம், இழப்பீடுகள், சிறைவைப்பு, அங்கச் சிதைவு, கசையடி போன்ற கேவலப்படுத்தும் தண்டனைகளை வழங்கியது.

விண்மீன் நீதிமன்றத்தில் இருந்ததுபோல் 16-ஆம் நூற்றாண்டில் கோரிக்கை நீதிமன்றத்தில் பெரும் செயற்பாடுகள் இருந்தன. சொத்து மீட்பளிப்பு, ஒப்பந்த நிறைவேற்றம், கடன் திருப்பிக்கொடாமை, தகராறுக்குள்ளான கணக்கு, நிலஅடைப்புச் சண்டை போன்றவை கோரிக்கை நீதிமன்ற முறைவர்கள்முன் கொண்டுவரப்பட்டன. அமைப்பின்படி இந் நீதிமன்றம் விண்மீன் நீதிமன்றத்தைப்போல் வலிமையுடையதன்று. இதன் உறுப்பினர் பிரிவி கவுன்சிலர்களல்லர்; இதனுடைய அதிகாரங்களும் சட்ட ஏற்புப் பெறவில்லை. ஆயினும், இவைகளின் செயல்முறைகள் சட்டமுறையில் தாக்குதலுக்குள்ளாகவில்லை. விண்மீன் நீதிமன்றத்தைப் போல் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட மக்கள் விருப்பத்திற்குரிய நீதிமன்றமாக இருந்தது.

கவுன்சிலோடு நெருங்கித்தொடர்புகொள்ளாத—ஆனலும் அதன் பொதுவான வரம்பிற்குள் நிதித்துறை நீதிமன்றம், நாவாய் நீதிமன்றம் ஆகியவை இருந்தன. முன் குறிப்பிட்ட நீதிமன்றம் வெஸ்டமின்ஸ்டரில் அமர்ந்திருந்தாலும், இது பொதுச்சட்ட நீதிமன்றமன்று. இதன் செல்வாக்கு, பொதுச்சட்ட நீதிமன்றங்களைக் காட்டிலும் கவுன்சிலின் சிறப்பதிகார நீதிமன்றங்களுக்குச் சிறப்புச் செய்தது. இதற்கும் பொதுச்சட்ட நீதிமன்றத்திற்கும் இடையறுதமோதல்கள் இருந்து வந்தன. ஆனல், சான்சலர் பதவியின் பெருமையும் மரபுகளும் பொதுச்சட்ட நீதிபதிகளோடு சான்சலரின் தொடர்புகளும் பெரும் வேற்றுமையைத் தடுத்தன. வெஸ்டமின்ஸ்டரில் அமராத ஆனல், சவுத்வார்க்கில் கூடிய கப்பல்துறை நீதிமன்றம், கப்பல்கள்பற்றிய வழக்கு, பொருள்கள், கடற்கொள்ளை, கள்ளக்கடத்தல், கடல்மீதான தாக்குதல், கடல்கடந்த நாடுகளில் நடந்த தாக்குதல்கள் போன்ற வழக்குகளில் அதிகார எல்லையைப் பெற்றிருந்தது.

ஆகவே, நீதியியல் முறை மிகச் சிக்கலாகிவந்தது. இவைகளோடு பொதுச்சட்ட நீதிமன்றங்களும் வளர்ச்சியடைந்தன. ஒருங்கிணைப்பு நிறுவனம் ஒன்று தேவைப்பட்டது. இதைக் கவுன்சில் அளித்தது. வேல்ஸ் கவுன்சில்களோடு சார்புடைய

நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துவதோடு பொதுவாக, நீதிமன்றங்களுக்குள் அலுவல்களை வடக்கெல்லைக் கவுன்சில் பகிர்ந்தளித்தது. இவைகளின் விசாரணைகளுக்கு விதிவகுத்தது; தவறுக நடந்துகொண்ட நீதிபதிகளை இது கண்டித்தது. சான்றுயங்களின் நடத்தையை இது கண்காணித்தது.

பல ஆதாரங்களிலிருந்து ஆங்கிலச் சட்டம் உருவாகியது. எழுத்துருவிலான சட்டத்தாலும், தனியாணை அறிக்கைகளாலும், பல்வேறு நீதிமன்றங்களின் நீதிபதிகள் செய்த முடிவுகளாலும் சட்டம் வளர்ச்சியடைந்தது. இவைகளைப் பாராளுமன்றமும், பொதுச்சட்ட நீதிமன்றங்களும் தனியுரிமையாக வளர்க்கவில்லை. இவைகளின் வளர்ச்சி இக் காலத்தில் இடருக்குள்ளாகியது. சட்டங்களுக்குட்பட்ட எல்லைகளுக்கப்பால் தனியாணை அறிக்கைகள் நுட்பமான விதித் தொகுப்பு ஒன்றை வகுத்தளித்தது. பொதுச்சட்ட நீதிமன்றங்களோடு சிறப்பதிகார நீதிமன்றங்களின் முடிவுகளும் நீதிபதிகள் செய்யும் சட்டவியல் துறையை உருவாக்கின.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Holdsworth	:	History of English Law.
Crimes	:	English Constitution.
K. Pickthorn	:	Early Tuder Government.
Tanner	:	Constitutional Documents.
Gardiner	:	History of England.
D. L. Keir	:	Consititutional History of Modern Britain.
Baskerville	:	The English Monasteries.

4. டியூடர்களும் பாராளுமன்றமும்

அவையும் அதன் கிளைகளும், பொதுச்சட்ட நீதிமன்றங்களும் அமைதிகாண் நீதிபதிகளும் டியூடர் அரசாங்கத்தின் செயல்படும் அங்கங்களாக இருந்தனர். இவைகளிடம் அரச அதிகாரச் செயற்பாடும் நிலைபெற்றிருந்தது. ஆனல், அரசரின் அதிகாரம் இன்னும் சிறந்த முறையில் வேரொரு உருவில் செயல்படவேண்டியிருந்தது. பாராளுமன்றத்தில் இவர்கள் அதிகாரத்தின் உச்சநிலையைக் கண்டார்கள். இதன் வழியாக அரசர் இயல்பு மீறிய வரிகளை விதிக்க முடிந்தது; அல்லது மக்களின் உரிமைகளைப் பாதிக்கும் மாற்றங்களைச் சட்டத்தால் செய்யமுடிந்தது. முதல் இரண்டு டியூடர் மன்னர்கள் பாராளுமன்றத்தை வெகுவாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. தம் ஆட்சிக்காலத்தின் முதல் பதின்மூன்றுண்டுகளில் ஏழாம் ஹென்றி பாராளுமன்றத்தை ஆறு தடவைகள் கூட்டினர். அதன்பின் ஒரே ஒரு தடவைதான் இதைக் கூட்டினர். இவருடைய கடைசிப் பாராளுமன்றத்திற்கும் இவருடைய மகனின் முதல் பாராளுமன்றத்திற்கும் இடைவெளி ஆறுண்டுகளாகும். 1510-க்கும் 1515-க்கும் இடையில் எட்டாம் ஹென்றி ஆறு பாராளுமன்றங்களை அழைத்தார். அடுத்துப் பாராளுமன்றத்தை 1523-ல் கூட்டியபொழுது எட்டாண்டுகள் ஓடிவிட்டன. இவருடைய ஆட்சி முடிவிற்கு வந்த பொழுது பாராளுமன்றம் ஆறு ஆண்டுகளாகக் கூட்டப்படவில்லை. தனிப்பட்ட பாராளுமன்றக் கூட்டங்கள் நீண்டகாலம் கூடியிருக்கவில்லை. நான்காம் எட்வர்டின் கடைசிப் பாராளுமன்றம் ஏழு தடவைகள் கூடியதென்றாலும், ஒரு தொடர்க் கூட்டத்திலிருந்து இன்னொரு தொடர்க்கூட்டத்திற்குத் தொடர்வது அரிதாகும். இரண்டு வாரங்களிலிருந்து இரண்டு மாதங்களுக்குச் சற்று அதிகமாகப் பாராளுமன்றக் கூட்டங்கள் தொடர்ந்து கூடின. சிறிது காலத்திற்கே தொடர்க்கூட்டங்கள் கூடி இருந்தன. இவைகளின் சராசரி அமர்வுக்காலம் நான்கு வாரங்களேயாகும். இந்நிலையில் பாராளுமன்றம் தன் நிலையை வலியுறுத்தவோ அரசாங்கச் செயற்பாடுகளின்

முறையான இடத்தைப் பெறவோ இயலவில்லை. எப் பொழுதோ ஒருமுறை பயன்படுத்தக்கூடிய கருவியாக இது இருந்ததென்று கூறினாலும், இதன் அதிகாரத்தையும் மேதகு நிலையையும் குறைத்து மதிப்பிடுவதாகக் கருதிவிடலாகாது; பாராளுமன்றத்தில் அரச அதிகாரம் அடைந்துள்ள நிலைக்கு இதை அடிக்கடி உயர்த்தத் தேவையில்லை. அடிக்கடி கூட்டப் படவேண்டிய நிலையை நாட்டினர் விரும்பவில்லை. அதுவும் அறிவுரை யளிக்கவும் அரசரின் பொருளகத்தைத் தம் பொருளாக்கொண்டு நிரப்பவும் இவர்கள் விரும்பவில்லை ஆண்டுக்கொருமுறை பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டு மென்னும் சட்டம் எழுத்தளவில்தான் இருந்தது. இதைத் தவருகவும் மக்கள் கருதவில்லை. இத்தகைய சட்டம் இருப்பது போலவே அரசர் காட்டிக்கொள்ளவில்லை.

தொடர்ந்து கூடியிராமையும் உறுப்பினர்கள் மாற்றமும் சுயேச்சையான மரபுகளைப் பாராளுமன்றம் வளர்த்துக் கொள்வதைத் தடைசெய்தன. இதனால் பாராளுமன்றம் இடையருமல் அரசரை ஆதரிக்கவோ எதிர்க்கவோ முடிய வில்லை. புதிய வரிகளை விதிப்பதில் இதன் இசைவை வலி யுறுத்துகையில், சட்டத்தால் ஒதுக்கி வழங்கப்பட்டவைகளை அரசருக்களிப்பதை இசைந்தேற்றுக்கொண்டது. அரசரின் இயல்பான வருவாயிலிருந்து பணத்தைப்பெற்று இவர் விருப்பம்போல் செலவிடலாம். இதன் அதிகாரத்தால் அளிக்கப்பட்ட வரிகளின் வருவாய்களிலிருந்து அரசர் செல விடுவதைக்கூடக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பாராளு மன்றம் அடிக்கடி பயன்படுத்தியதில்லை. விண்ணப்பங் களின் உருவில் பாராளுமன்றத்திலிருந்து புதிய சட்டங்கள் தோன்றினாலும் இவைகளில் பெரும்பாலானவை அரசரால் அல்லது அரசருடைய அறிவுரையாளர்களால் உருவாக்கப் பட்டவைகளாகும். தேவையானால் சட்டங்களைக் கொணர்வ தையும், அறிவுரை வழங்குவதையும் இசைவளித்தலையும் பேணிக்கொள்ளப் பாராளுமன்றம் விரும்பினாலும், பாராளு மன்றம் விரும்பாத சட்டங்களுக்கு அரசர் இசைவுதர மறுப் பதைப் பாராளுமன்றம் எதிர்த்திருக்காது. இருப்பினும், இம் முறையை அரசர் பின்பற்றவில்லை. பேரறிக்கையால் விதி களைச் செய்வதற்கும், சட்டத் தேவைகளைத் தள்ளிவிடுவ தற்கும், குற்றங்களை மன்னிப்பதற்கும் அரசருக்குள்ள சிறப் பதிகாரங்களைப் பாராளுமன்றம் எதிர்க்கவில்லை. அரசர் உருவாக்கிக்கொண்ட கொள்கையின் தகவில் பாராளுமன்றம் பெரும்பாலும் அக்கறை காட்டியதில்லை. அரசாங்கம் நடத்து

வதை அரசரிடமிருந்து பறித்துக்கொள்ள இது விரும்பிய தில்லை. நாட்டை ஆள்வது அரசரின் பணியெனப் பாராளு மன்றம் கருதியது. இதற்கு வசதியாகப் பாராளுமன்றம் விரும்பினால் தேவையான நிதியுதவியளிக்கலாம் அல்லது சட்ட வரம்புகளை விரிவுபடுத்தலாம்; இது அறிவுரை யளிக்க லாம்; எப்போதாவது குறைகூறலாம்; மனநிறைவின்மையை வெளிப்படையாகவும் கூறலாம். ஸ்காட்லாந்தின் எல்லைப் புறங்களைப் புறக்கணித்துவிட்டு, ∴பிரான்சில் போர் நடத்திய தற்கு இது 1523-ல் வருத்தம் தெரிவித்தது. சிறிது காலத் திற்குமுன், பயனற்ற விரும்பத்தகாத அமைச்சர்களை கடுங் குற்ற விசாரணை செய்து தண்டிக்கும் அதிகாரத்தைப் பாராளு மன்றம் பெற்றிருந்ததெனினும், இதற்குமேல் இதன் அதிகாரம் செல்லவில்லை. அமைச்சர்களை நாட்டிற்கும், அரசப்பதவிக்கும் பொறுப்புடையவர்களாக்கும் முயற்சி டியூடர்களின் காலத்தில் வழக்கொழிந்து போய்விட்டது. இதை உயிர்ப்பிக்க அரசாங்கம் விரும்பவில்லை. எம்புசன்,[1] டட்லி[2] போன்ற அமைச்சர்கள் பதவியிழந்தபோது இவர் களுக்களிக்கப்பட்டிருந்த அரசப் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. எட்டாம் ஹென்றி பதவியேற்றபின், அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டுப் பின் தண்டிக்கப்பட்டார்கள். மரண தண்டனையும் விதிக்கப் பட்டது.

பாராளுமன்றத்தின் அமைப்பு

அரசவையின் விரிவாக்கமே பாராளுமன்றமாகும். பல நோக்கங்களுக்காக விரிவான உருவில் அவை கூடிற்று. நாட்டின் பொது விவகாரங்களை விவாதிப்பதும், கூடுதலான நிதியுதவியை அரசருக்களிப்பதும் இந் நோக்கங்களில் அடங் கும். நிரந்தரமான உறுப்பினரும் உயர் அலுவலர்களுமட்டு மின்றி, பெருங்குடியினரும், திருச்சபையினரும், பொது மக்களும் அரசவையில் கூடினர். சட்டமியற்றவும் வரிவிதிக் கவும். நீதியளிக்கவும் அதிகாரம்பெற்ற அவையோடு முப் பேராயங்களும் கூடியது, இடைக்காலத்தின் பிற்பகுதிப் பாராளுமன்ற வளர்ச்சியில் ஒரு நிலையாகும்.

இரு சபைகள்

ஏற்கனவே பாராளுமன்றம் இரு சபைகளாகப் பிரிந்து விட்டது. அரசரின் அலுவலர்களும், அவையினரும், நீதிபதி

[1] Empson.
[2] Dudley.

களும், "நாட்டின் பெருங்குடியினர்" என்ற முறையில் தனியாக அழைக்கப்பட்ட செல்வர்களும், அதிமேற்றிராணியார்களும், இராணியார்களும், திருமடத் தலைவர்களும் ஒரு சபையில் அமர்ந்தனர். மாவட்ட, நகர, நகரத் தொகுதிகளின் பொதுமக்கள் பிரதிநிதிகள் இன்னொரு சபையில் இருந்தனர். இவ் விரு சபைகளும் தனித்தனியே கூடின. வெஸ்டமின்ஸ்டர் அரண்மனையில் உள்ள பாராளுமன்ற மாளிகையில் மேல்சபை கூடியது. அரண்மனைக் கட்டடங்களுக்கு வெளியே கீழ்சபை கூடியது. வெஸ்டமின்ஸ்டர் அபேயின் துறவி மட உணவுக் கூடத்திலும் குருக்கள் கூடுமிடத்திலும் இச் சபை கூடியது. சபை (House) என்னும் சொல் ஒரு நிறுவனத்தைக் குறிப்பிடத் தொடங்கியது; ஒரு பேரவையைச் சபை குறிப்பிடுவதோடன்றி, இங்குக் கூடும் வழக்கமுள்ள ஓரவையையும் குறிப்பிட்டது. இச் சபைகளின் நடவடிக்கைகள்பற்றிய பதிவுகள் எதுவுமில்லை. இத்தகைய பதிவுகளை எழுதிவைத்துக்கொள்ள எழுத்தர்கள் இருக்கவில்லை. பாராளுமன்றக் குறிப்புப் பட்டியலைப் பாராளுமன்ற எழுத்தர் ஒருவர் வைத்திருந்தாலும், இவை 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெருமக்கள் சபையின் அன்றாட நடப்புக் குறிப்புகளோடு கலந்துவிட்டன. இக் காலத்திலும் பொதுமக்கள் சபைக்கென அன்றாட நடப்புக் குறிப்புகள் கிடையா. ஓர் எழுத்தர் சபையில் அமரப் பணிக்கப்பட்டார். இவருடைய பதவி இறுதியில் சபையின் எழுத்தர் பதவியாக வளர்ச்சியடைந்தது. இவர் வருகைப் பதிவேடுகளைத் தயாரித்தார்; விண்ணப்பங்களை வரைய உதவினர். மேலும், பலர் தேவைப்படவில்லை. ஏனெனில், பொதுமக்கள் சபையின் நடவடிக்கைகள் பாராளுமன்ற நடவடிக்கைகளாகக் கருதப்படவில்லை. பாராளுமன்றத்தின் அலுவல்கள் நிதித் துறைத் தலைவரால் விளக்கப்படும்பொழுதும், பொதுமக்கள் சபைக்குச் சபாநாயகரை அளிக்கும்பொழுதும், பாராளுமன்றத்தின் தொடக்கநாளின்போதும் பொதுமக்கள் சபையினர் பெருமக்கள் சபைமுன் தோன்றுகின்றனர். பொதுமக்கள் சபையின் கருத்துகளை சபாநாயகர் அரசருக்கு எடுத்துரைப்பவராகவும் சபையின் கூட்ட இறுதியில் முடிவுகளை வெளியிடுபவராகவும் இருந்தார். மாவட்ட, நகரப் பிரதிநிதிகள் சேர்ந்து வாக்களித்ததும் கிடையாது. இருந்தபோதிலும், பொதுமக்கள் சபை வளர்ச்சிபெறுத ஒரு நிலையில் இருந்து வந்திருக்கிறதெனலாம்.

எனவே, "இச் சபைகளை" வெறும் கூட்டமாகக் கருதுவதற்கில்லை. இவை அமைவுபெற்ற நிறுவனங்களாக

இருந்தன. இவைகளின் அமைப்புபற்றியும் செயல்கள் பற்றியும் ஆராய முற்படலாம். டியூடர் காலப் பாராளு மன்றத்திற்கு அழைக்கப்பட்ட திருச்சபைப் பிரபுக்களும் உலகியற் பிரபுக்களும் சேர்ந்து நூற்றுக்குக் குறைவாகவே இருந்தனர். சமயத்துறை சார்ந்த பிரபுக்களின் எண்ணிக்கை ஒரே மாதிரியாக இருந்து வந்தது. இரண்டு அதிமேற்றி ராணியார்களும், பத்தொன்பது மேற்றிராணியார்களும் முப்பது அல்லது சற்றுக் குறைவான திருமடத்தலைவர் களும் மேல்சபையில் இருந்தனர். உலகியற் பிரபுக்களின் எண்ணிக்கையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது. ஆனால், இவர்களின் எண்ணிக்கை 40-க்கும் 50-க்கும் இடைப்பட் டிருந்தது. சமயத்துறையினர் ஓரளவு சபையில் பெரும் பான்மை பெற்றிருந்தனரெனினும், பாராளுமன்றத்தில் அமர்ந்த திருமடத்தலைவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வந்தது. பதினேழும் நூற்றாண்டில் சமயத்துறையினர் சிறுபான்மையை அடைந்தது ஒரு பெரும் சிறப்பாகும். திருச் சபைப் பிரபுக்களும் உலகியற் பிரபுக்களும் இணைந்து ஓர் அவையாக அமைந்திருந்ததும், இச் சபையில் பெரும்பான்மை விதி நிலவியதும் பெரும் சிறப்பெனலாம்.

பாராளுமன்றத்திற்குத் திருச்சபையினர் அழைக்கப்படு வதற்கான தகுதிப்பாடுகளின் தன்மைகள் தெளிவாகக் குறிப் பிடப்படவில்லை. பெருங்குடியினர் என்ற முறையில் இவர்கள் சபைக்கு அழைக்கப்படவில்லை. ஆனால், திருச்சபையினர் என்ற முறையில் இவர்கள் சபையில் இடம்பெற்றனர். பெரும் நிலக்கிழார்கள் சபைக்கு அழைக்கப்படுதற்கான உரிமை உடையவர்களென்பதும் இந்த உரிமை மரபுவழிச் சார்புடையதென்பதும் வலியுறுத்தப்பட்டது. பாராளுமன்ற வரலாற்றின் தொடக்கத்தில் அரசர் எவரையேனும் அழைக் கலாம். இதனால் இடைக்காலத்தில் பெருங்குடிமக்கள் தம் உரிமையை வலியுறுத்தும் வாய்ப்பினைப் பெற்றதோடு, தம்மையே அரசர் ஆலோசகர்களாக ஏற்கவேண்டுமெனவும் வாதித்தனர். பிரிவி கவுன்சிலைப் பொறுத்தவரையில் நான்காம் எட்வர்டும் எட்டாம் ஹென்றியும் இவ் வாதத்தை ஏற்க மறுத்தனர். கவுன்சிலின் உறுப்பினர் அல்லாதாரைப் பாராளுமன்றத்திற்கு அரசர்கள் இக்காலத்தில் அழைத்தனர். படிப்படியாக, அரசரைச் சுற்றி நிரந்தரக் கவுன்சிலர்கள் வழி வழியாக வந்தமர்ந்தனர். நிரந்தரமாகக் கவுன்சிலுக்கு அழைக்கப்படுவதற்கான உரிமையையும் இவர்கள் பெற் றார்கள். இத்தகைய தகுதியைப் பெற்றிராதவர்கள் கவுன்

சிலில் கலந்துகொள்ள முடியாமல் போயிற்று. இதன் விளைவாகப் பெருமக்கள் சபை தோன்றியதெனலாம். இருப்பினும், புகழ்பெற்ற பழம்பெருங்குடிகள் நலிந்துகொண்டிருந்ததால் சபை குறிப்பிடத்தக்க சிறப்பைப் பெறவில்லை, அரசர் புதிய பிரபுக்களைப் படைத்தார். இவர்கள் பற்றுறுதியாலும் நலன்களாலும் அரசரோடு நெருங்கி இணைப்புப் பெற்றார்கள். மேலும், திருச்சபைப் பிரபுக்கள் பெரும்பாலும் அரசரால் அமர்த்தப்பெற்றார்கள். சமயச் சீர்திருத்த இயக்கத்தால் மடாலயங்கள் ஒழிக்கப்பட்டபின், திருச்சபையினரைத் தெரிவு செய்வதில் அரசர் முழு அதிகாரத்தையும் பெற்றார்.

பொதுமக்கள் சபையின் அமைப்பு

இக்காலத்திய பொதுமக்கள் சபையின் அமைப்பை வரையறை செய்வது எளிதன்று. 1477–லிருந்து 1529-க்கும் உட்பட்ட காலத்திற்கு ஒரே ஒரு பட்டியல்தான் கிடைத்துள்ளது. இது 1491-ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் பட்டியலாகும். மாவட்டம் ஒன்று, இரு பிரதிநிதிகளைச் சபைக்கு அனுப்பவேண்டும். இதன்படி மாவட்டங்களின் எண்ணிக்கை 37-ஆகத் தொடர்ந்திருந்து வந்துள்ளது. நகரத் தொகுதிகளும் இருவரை அனுப்பவேண்டும். இதன்படி தொகுதிகளின் எண்ணிக்கை ஏறியும் இறங்கியும் இருந்துகொண்டிருந்தது. இவைகளின் எண்ணிக்கை 100-க்குச் சற்று அதிகமாக இருக்கலாம். அரசர் அல்லது அவரது அலுவலராகிய பேராள் சபைக்குப் பிரதிநிதிகளை அழைப்பதையொட்டிச் சபை அமைகிறதெனலாம். ஆகவே, எல்லாம் சேர்ந்து பொதுமக்கள் சபையின் உறுப்பினர் 300-க்குச் சற்றுக் குறைவாக இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

வாக்காளர் தொகுதியும் தேர்தல்களும்

1430-ல் சட்டத்தால் வாக்காளர் தொகுதி வரையறை செய்யப்பட்டது. 40 சில்லிங் ஆண்டு மதிப்புடைய குடியிருப்பு மனையுடைய இறையிலி மானியத்தார்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தது. நகர்த் தொகுதிகளில் வாக்குரிமை பெருமளவு மாறுபட்டிருந்தது. ஒவ்வொரு நகரும் தன் வாக்காளர் தொகுதியைப் பெற்றிருந்தது. சில சமயங்களில், வாக்குரிமை நகராட்சிக்குட்படுத்தப்பட்டிருந்தது. சில நகர்த் தொகுதிகளில் நிலச் சொந்தக்காரர்கள் வாக்குரிமை பெற்றிருந்தார்கள். சில இடங்களில், மனைகளில் குடியிருந்தவர்களுக்கு அல்லது நகராட்சிக்கு வரி செலுத்துகிறவர்களுக்கு

வாக்குரிமை யளிக்கப்பட்டிருந்தது. வசதியுள்ள வணிகர்கள் அடங்கிய குழுவினருக்கு நகராட்சி வரையறைப்படுத்தப்பட்டிருந்ததுபோல் வாக்குரிமையைக் கட்டுப்படுத்தி வழங்குவதே பொதுவான போக்காக இருந்தது. சாசன உரிமைபெற்ற நகரங்கள் பொதுமக்கள் சபைக்குப் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமையைப் பெற்றன. எனினும், வாக்களிக்கும் உரிமை குறிப்பிட்ட ஒரு சிறு பிரிவினருக்கே அளிக்கப்பட்டது. மாவட்டங்களிலும், நகரங்களிலும், சட்டத்தால் செய்யப்பட்ட ஒருசில விதிமுறைகளைத்தவிர, தேர்தல்முறை தல ஆட்சி நிறுவனங்களின் உசித அதிகாரத்திற்கு விடப்பட்டு இருந்தது. தேர்தல்கள் அரசப் பேராளின் வழியாகத்தான் நடைபெற்றன. தேர்தலுக்கான கட்டளைகள் இவருக்குத்தான் சென்றன. தேர்தல் தகராறுகளை அரசர், பிரபுக்கள் அல்லது நீதிபதிகளின் துணைகொண்டு தீர்த்துவைத்தனர். அரசரும் தலப் பிரபுக்களும் தேர்தல்களில் தலையிட்டுத் தம் செல்வாக்கைப் பயன்படுத்தியதற்குச் சில சான்றுகள் இருக்கின்றன. ஆயினும், தேர்தல் தொகுதிகள் பிரதிநிதித்துவத்தில் அக்கறை காட்டத் தவறியதில்லை; அரசக் கொள்கையின் கருவியாக அல்லது உயர்குடியினரின் அதிகாரத்தின் கருவியாகப் பொது மக்கள் சபையைக் கருதிவிடலாகாது.

உறுப்பினரின் தகுதிகள்

எந்தத் தொகுதியிலிருந்து வீரத்திருத்தகைகளும் நகரினரும் தேர்தெடுக்கப்பெற்றார்களோ அதே தொகுதிகளில் அவர்கள் வசிக்கவேண்டுமெனச் சட்டம் வலியுறுத்தியது. ஆனல், இத் தகுதி வழக்கற்றுப் போய்க்கொண்டிருந்தது. மாவட்ட உறுப்பினர்கள் "நிலக்கிழார்களாகவும் சான்றாளர்களாக"வும் இருக்கவேண்டுமெனும் விதியும் வலியுறுத்தப்படவில்லை. சபையில் நிலக்கிழாரும் வணிகருமிருந்தனர். இவர்களோடு வழக்கறிஞர்களுமிருந்தனர். உறுப்பினர் பதவி இவர்களுக்குத் தொழில்முறையில் உதவியாக இருந்தது. ஆயினும், சபையில் இடம்பெற மக்கள் பேரார்வம் கொள்ளவில்லை. போட்டியிருக்குமாயின் இங்கும் அங்கும் சிறிது ஆர்வம் காணப்படும்.

அரசியல் சேவை மரபாலும் உயர் தன்மதிப்பு நிலையாலும் மாவட்ட உறுப்பினர் சபையில், நகர உறுப்பினரைக் காட்டிலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். 1533வரை நகரினர் எவரும் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இவர்களின்

பணியை ஒப்புநோக்குதல் மீக்கூறலாக முடியும். பாராளுமன்றத்தில் பொதுமக்கள் சபைக்குக் குறிப்பிட்ட பணிகள் உண்டு. சட்டமியற்றியலில் இதன் பங்கு இன்றியமையாததாகும். 1485-லிருந்து இதன் இசைவையும் பெருமக்கள் சபையின் இசைவையும் சட்டங்களின் முகப்பு கொண்டிருந்தன. இருப்பினும், மசோதாக்கள் பெரும்பாலும் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டன. சில வேளைகளில் சட்டமியற்றற்கான தொடக்கத்தைப் பொதுமக்கள் சபைவிண்ணப்பத்தால்சுட்டிக் காட்டலாம். மசோதா உருவிலும் விண்ணப்பம் வரைந்து சபைக்குக் கொடுக்கப்படலாம். எனினும், அரசாங்கமே இத்துறையில் முந்திச் செயல்படுவது வழக்கமாக இருந்தது. பாராளுமன்றத்தில் ஒரு மசோதா நிறைவேறியபின், சில பிரிவுகளே இதில் சேர்த்து மசோதாவைச் சில சமயங்களில் அரசர் திருத்தியுள்ளார்.[1] ஏழாம் ஹென்றி மசோதாவிற்கு இசைவளிக்க மறுத்ததில்லையென்பதிலிருந்து பாராளுமன்றத்தின் மீது இவரது கட்டுப்பாடு வெளிப்படுகிறது. நிதித் தொடர்புடையவைகளில் பொதுமக்கள் சபை மிகச் சிறப்பாகப் பங்கு பற்றியது. நான்காம் ஹென்றியின் காலத்திலிருந்து அரசாங்கத்திற்கு நிதியுதவி செய்வதில் சபையின் முன்னுரிமை வலியுறுத்தப்பட்டது. நிதி மசோதாக்கள் இச் சபையில் முதலில் கொண்டுவரப்படவேண்டும். நிதியளிக்கும் சட்டங்கள் ஒவ்வொரு ஆயத்தாலும் (Estate) இயற்றப்பட வேண்டுமென்பது மாறி, திருச்சபை உடைமைகளைத் தவிர மற்றச் சொத்துக்களைப் பாதிக்கும் வகையில் மொத்தமாகச் சட்டங்கள் இயற்றப்பட்டன. சட்டமியற்றலிக்காட்டிலும் வரிவிதிப்பில் பொதுமக்கள் சபையின் அதிகாரமும் அரசரின் (Crown) செல்வாக்கும் பொதுமக்கள் சபையில் சிறிதளவே பயன்பட்டனவெனச் சொல்லலாம்.

பாராளுமன்றச் சிறப்புரிமைகள்[2]

பொதுக்கள் சபையின் முதிராநிலையை இன்னொரு வழியில் எடுத்துக்காட்டலாம். அரசக் காரியங்களில் ஈடுபட்டிருந்த இச் சபையின் உறுப்பினர்கள் அரசரின் பாதுகாப்பில் இருந்ததோடு, சில காப்புரிமைகளையும் பெற்றிருந்தார்கள். இவர்கள் மற்ற நீதிமன்றங்களின் அதிகார வரம்புகளிலிருந்து விலக்குப் பெற்றிருந்தார்கள். வெள்ளீயச் சுரங்கம்பற்றிய நீதிமன்றத்தின் தீர்ப்பையொட்டிக் காவலில் வைக்கப்பட்

[1] Pollard, Evolution of Parliament, 130.

[2] *இதே நூலின் 14-ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.*

டிருந்த ஸ்டிரோடு (Strode) என்ற பெயருடைய ஓர் உறுப்பினர் 1512-ல் விடுதலைகோரிப் பெற்றார். கடன் கொண்டதற்காகக் கைதுசெய்யப்படுவதிலிருந்தும், மற்ற சிவில் வழக்கு நடவடிக்கைகளிலிருந்தும் உறுப்பினர்களும் இவர்களுடைய பணியாட்களும் காப்புரிமை பெற்றார்கள். குற்றவியல் வழக்குகளில் ஈடுபட்டவர்களுக்கு இக் காப்புரிமை கிடைக்கவில்லை. எத்தகைய சிறப்புரிமையையும் தன் செயலால் சபை செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தது. இதற்கெனச் சொந்தமான பணியாட்கள் இல்லை. இது செயல்படக்கூடிய அதிகார எல்லையுமில்லை. பிற்காலத்தில் சபாநாயகரின் வழியாகச் சபையின் உரிமைகள் வலியுறுத்தப்பட்டனவெனினும், இவர் சபையின் பணியாள் என்பதைவிட அரசரின் பணியாளாகவே இருந்தார் என்பதை மறக்கலாகாது. பாராளுமன்றக் கட்டடத்திற்கு வெளியே பொதுமக்கள் சபையின் நடவடிக்கைகள் நிகழ்ந்ததிலிருந்து பேச்சுரிமையை ஊகித்து அறியலாம். வேறெந்த இடத்திலும் பொதுமக்கள் சபை அமராது. 15-ஆம் நூற்றாண்டில் சில மீறல்கள் காணப்பட்டன. இதன் உரிமைகளை அரசர் ஏற்பிணல்தான் வலியுறுத்தமுடியும். 1523-ல் சபாநாயகர் மோர் (More) என்பார் உரிமைகள் வேண்டினாரென்றாலும், முறையாகச் சபை இவைகளைக் கோரவில்லை. சபையும் தன் சொந்த அதிகாரத்தால் இவைகளைக் காத்துக் கொள்ள இயலவில்லை.

பெருமக்கள் சபை தனக்கென அதிகார வரம்புடையதாக இருந்தது. முன் குறிப்பிட்டதுபோல் பெரும் குற்ற விசாரணை இப்பொழுது நலிவுற்றுப் போய்விட்டது. நாட்டுத் துரோகக் குற்றம் சாட்டப்பட்ட அல்லது அடாப்பழிச் செயலில் ஈடுபட்ட பெருமக்களை விசாரணை செய்யும் சிறப்பதிகாரத்தைப் பெருமக்கள் சபை பெற்றிருந்தது. பொதுச்சட்ட நீதிமன்றங்களின் தவறுகளை மறுஆய்வு செய்யும் நியாயச் சபையாகச் செயல்படப் பெருமக்கள் சபை உரிமை பெற்றிருந்தது. மேலும், இதனுடைய சிறப்புரிமைகளை இதன் நடவடிக்கைகளால் இது செயல்படுத்தலாம்.

டியூடர் அரசாங்கத்தில் அரசப் பதவி

அரசாங்கம் அரசரால் நடைபெற்றது. இருப்பினும், இத்தகைய ஆட்சிமுறை அரசியலமைப்பு விதிமுறைகளுக்கு முரணாக அமையவில்லை. அரசரின் செயல்கள் அனைத்தும் அரசருக்குரியவைகளே. இவைகளைச் சட்ட அதிகாரத்தோடு

அரசர் செய்தார். அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப் படுத்தும் கருத்துகள் இக் காலத்தில் ஆராயப்படவில்லை. இதன் நடவடிக்கைகள் லங்காஸ்டிரிய அரசர்களின் செயற் பாடுகளைப்போல் வலிமைகுன்றி இருக்கலாகாதென்பதுதான் முதன்மையானதாகும். டியூடர் அரசர்கள் ஏற்றுக்கொண்டு செயல்படுத்திய அரசாங்கத்திற்கும் சில தடைவரம்புகள் இருந்தன. அரசாங்கத்தின் எல்லா அங்கங்களையும் இவர் களின் வலிமை வாய்ந்த ஆட்சி ஏற்றுக்கொண்டது. இவர்கள் எதையும் அழிக்க முற்படவில்லை. இருப்பினும், அரச அதி காரங்கள் பல்வேறு உருவங்களில் தோன்றின. பெரும்பாலும் இது சொந்த அதிகாரங்களையும், உரித அதிகாரங்களையும் கொண்டிருந்தது. அமைச்சர்களையும், அரச அலுவலர் களையும் அரசர் அமர்த்தவும் நீக்கவும் அதிகாரம் பெற்றிருந் தார். இவர் பிறப்பிக்கும் கட்டளைகளை ஏற்றுச் செயல்படுத்த இவர்கள் கடமைப்பட்டிருந்தார்கள். வருவாயைச் செல விடவும் இவர் ஆணையிட்டார். விலக்கு அதிகாரத்தையும், மன்னிக்கும் அதிகாரத்தையும் பயன்படுத்தி இவர் நீதிவழங்கு வதில் குறுக்கிடலாம். இத்தகைய அதிகாரங்களை இவர் சொந்த முறையில் உரிமையாகப் பெற்றிருந்தார். அரசரால் அமர்த்தப்படுகிறவர்களைக் கொண்டதாக அரசவை உருப் பெற்றது. இவர்கள் அரசருக்கு அறிவுரை கூறியும், அரச ருடைய காரியங்களைச் செயல்படுத்தியும், அரசர் விருப்பிற் கேற்றவாறு நடந்துகொண்டும் தம் பணிகளை நிறைவேற்றி னர்கள். சட்டமியற்றவும், ஆட்சியை மேற்பார்வையிடவும், தேசியப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவும், சமூக, பொருளாதார விவகாரங்களை ஒழுங்குபடுத்தவும், பொதுச் சட்ட நீதிமன்றங்களுக்குத் தம் அதிகார வரம்பை நீட்டிக்கவும் அரசவை அதிகாரம் பெற்றிருந்தது. இந்த அளவிற்கு டியூடர் களின் அரசாங்கம் தனி வல்லாட்சியின் அடிப்படையில் இயங்கிற்றெனலாம். சொத்துரிமை குடிமக்களுக்குரியதென் ரூல் ஆளும் உரிமை அரசருக்குரியதென்பது தெளிவாக்கப் பட்டது.

ஆயினும், இது முற்றிலும் உண்மை அன்று. தம் சொந்தச் செயலால் மாற்றமுடியாத விதிகளுக்கு இசைந்து அரசரது அதிகாரம் செயல்பட வேண்டுமென்பதும் உறுதியாயிற்று. இவருடைய நீதிவழங்கும் அதிகாரத்தின் எச்சம் அரசவையில் நிலைபெற்றிருந்ததெனினும், இவ் வதிகாரம் பொதுச்சட்ட நீதி மன்றங்களுக்கு மாற்றப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது. பொதுச்சட்ட விதிகளும் எழுத்துருவில் இருந்த சட்டவிதி

களும் ஒரு சட்டத் தொகுப்பாக இருந்துவந்தன. அரசரின் அதிகாரம் இதற்குட்பட்டுச் செயல்படவேண்டுமென்பதும் மரபாகும். விரிவான உசிதமான விளக்கங்களோ இச் சட்டங்கள் அனுமதித்தனவெனினும், இவை அரசின் உண்மையான அடிப்படைகளாக அமைந்தன. இது பாராளுமன்றத்திற்கு ஒரு சிறப்பை அளிக்கிறது. பாராளுமன்றம் அடிக்கடி கூடாததையும், அரச அதிகாரத்திற்கு இதுகட்டுப்பட்டிருப்பதையும், இதன் நடைமுறை விதிகளின் வளர்ச்சியற்ற தன்மையையும் கருத்தில்கொண்டு எதையும் முடிவுசெய்துவிடலாகாது. சட்டமியற்றும் அதிகாரம் அரசருக்குரியதென்பதை மறுக்க முடியாது. இதைப் பொதுமக்கள் சபையும், பெருமக்கள் சபையும் ஏற்றுகவேண்டும். ஆயினும், இவ் விசைவைப் பெறுமல் அரசர் சட்டமியற்ற முடியாது. சட்டம் குறிப்பிடுகின்றவைகளுக்கான இசைவைப் (பாராளுமன்றத்தின்) பெறுமல் அரசர் எதையும் செய்ய இயலாது.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Child	:	Church and State under Tutors
Tanner	:	Constitutional Documents (Tudor)
Pollard	:	History of England
Lindsay	:	History of Reformation
Weale	:	Queen Elizabeth
Pickthorn	:	Early Tutor Governments
Pollard	:	Evolution of Parliament
Diecey	:	The Privy council

5. டியூடர்களும் திருச்சபையும்

இடைக்காலத்தின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் பெரு மக்களின் அதிகாரச் சின்னங்கள் சிதைந்துகொண்டிருந்தன. ஆனால், கத்தோலிக்கத் திருச்சபை பெருஞ்சிறப்போடு செழித் தோங்கி நின்றது. இதன் செழிப்பைப் பறைசாற்றும் வகை யில் திருச்சபைகளும், திருமடங்களும், கல்லூரிகளும், மருத்துவமனைகளும் நாடுமுழுவதும் வளர்ச்சியடைந்திருந்தன. குறைவற்ற வருவாய் திருச்சபைகளின் வளத்திற்கும், வனப் பிற்கும் உதவியது. அரசரின் குடிமக்களுள் திருமடத் தலைவர்கள் பெருஞ்செல்வர்களாக இருந்தார்கள். உலகியல் பெருமக்களுக்கு ஒப்பாகச் சீரும் சிறப்போடும் இவர்கள் வாழ்ந்தார்கள். 600-க்கு மேற்பட்ட மடங்கள் இங்கிலாந்தின் நிலப்பரப்பில் பத்தில் ஒரு பகுதியைத் தமக்குச் சொந்தமாகக் கொண்டிருந்தன.[1] சில மாவட்டங்கள் முழுமையாகச் சமயத் துறைப் பெருமக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததைப்போல் தோன்றியது. திருச்சபைகள் சில நிலமானியத் தீர்வைகளை வருவாயாகப் பெற்றிருந்தன. உலகியற் குருமார்கள் ஏழ்மை யான நிலையில் இருந்தாலும், சட்டத்தின்படி தமக்குரிய பத்தில் ஒரு பங்கு வரிப்பொருளை (tithes) வழக்கமாக இவர்கள் அனுபவித்தார்கள். ஆண்டாண்டுக்காலமாகப் பக்தர்கள் செலுத்திய காணிக்கைப் பொருள்கள் திருச்சபை யின் கருவூலங்களாகக் காட்சியளித்தன. பொருட்செல் வத்தைவிடத் திருச்சபை மக்கள் மனத்தில் செலுத்திய அருளாதிக்கம் அளவற்றதெனலாம். அருளையும் பொருளை யும் பயன்படுத்திக்கொண்டு திருச்சபையினர் மக்கள்மீது இடைக்காலத்தில் பெரும் செல்வாக்கை நிலைப்படுத்திக் கொண்டனர். இளைஞர்களுக்குக் கல்வி புகட்டியும், வறியவர் களுக்கும் எளியவர்களுக்கும் அறப்பணிகளாற்றியும், பிணியுற் றோரைக் காப்பாற்றியும், பயணிகளுக்கு விருந்தோம்பியும் திருச்சபை அரும்பணியை அன்போடு செய்தது.

[1] A. Savine, "English Monasteries on the Free of the Dissolution" 83. 97.

திருச்சபையினரும் மற்றவர்களைப்போல் அரசரின் குடிமக்களே. கற்றறிந்த வகுப்பினர் என்ற முறையில் நீண்டகாலமாகவே இவர்கள் நீதிபதிகளாகவும் ஆலோசகர்களாகவும் இருந்து அரச சேவை செய்துவந்தார்கள். இடைக்கால இறுதியில் நிதித்துறை முதல்வர் பதவியைத் திருச்சபையினரே வகித்து வந்தனர். திருமடத்தலைவர்கள் அரசவையில் இடம்பெற்றிருந்ததோடு, பாராளுமன்றத்தின் மேல்சபையில் சில சமயங்களில் பெரும்பான்மையினராகவுமிருந்தனர். நிலக் குத்தகைக்காரர்கள் என்ற முறையில் இவர்கள் தல ஆட்சியில் பங்கு பற்றினர்கள். நிலமானியதாரர்கள் என்ற முறையில் உலகியல் தலைமைக் குத்தகையாளர்களைப்போல் இவர்கள் அரசருக்குப் படை தந்துதவும் கடமைப் பொறுப்புடையவர்களாகவும் இருந்தார்கள். இயல்பு மீறிய நிதியுதவிகளை அரசர் திருச்சபைகளிடமிருந்து கேட்டபொழுது இவை வருவாயின்மீது குருமார்களின் கூட்டத்தில் வரி விதித்து, வரியைத் திரட்டி அரசருக்களித்தது. ஆயினும், திருச்சபையினர் மற்றக் குடிமக்களைப் போன்றவர்கள் அல்லர். இவர்களின் பற்றுறுதி இருதலையானது. ஆங்கில அரசுக்கு மட்டுமின்றிப் பன்னாட்டு அமைப்பிற்கும் இவர்கள் பற்றுறுதி செலுத்தினர்கள். நாடுகளைக் கடந்து ரோம் நகரில் நிலை கொண்டிருந்த திருச்சபைக்கும் இவர்கள் கடமைப்பட்டிருந்தார்கள். அமைப்பால் இவர்கள் உலகியல் தொடர்பிலிருந்து விலகிநின்ற ஒரு நிறுவனத்தினராக இருந்தார்கள். அரசப் பதவியிலிருந்து பெருத அதிகாரத்தை இவர்கள் செயல்படுத்தியதோடு, இதற்குப் பணியவும் செய்தார்கள். சொந்த அதிகாரத்தால் திருச்சபை சமயப் பணித்தரங்களை அமைத்து அவைகளுக்குத் திருமடப் பிரமாணங்களைச் செய்துவைத்தது. மக்கள் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றவும் திருச்சபைகள் வரைந்தளித்த ஒழுங்குமுறைகளைச் செயல்படுத்தின. இதே அதிகாரத்தால் சமய நம்பிக்கையையும் சமய நிந்தனையின் தன்மையையும் இது வரையறுத்தது. சடங்குமுறைகளின் வகைகளையும், உலக மக்களின் ஆன்மீக, லோகாய நல்வாழ்விற்கான விதிமுறைகளையும் வகுத்தளிக்க இது அதிகாரம் பெற்றிருந்தது. தனிப்பட்ட நியாயச் சபைகளைப் பயன்படுத்திக்கொண்டு இகத்தவர்களையும் பரத்தவர்களையும் இது பயனுள்ள முறையில் கட்டுப்படுத்தியது. ஒவ்வொரு திருச்சபை வட்டமும் ஒரு நீதிமன்றத்தைப் பெற்றிருந்தது. யார்க்கிலும் கான்டர்பரியிலும் இருந்து செயல்பட்ட நீதிமன்றங்களிலிருந்து மேல் முறையீடுகள் போப்பாண்டவரின் நீதிமன்றத்திற்குச் செல்லலாம். போப்பாண்டவராலும்,

கான்டர்பரி, யார்க் ஆகியவற்றின் குருமார் திருக்கூட்டத் தாலும் இயற்றப்பெற்ற சட்டங்கள் கிறித்துவச் சமயச் சட்டங் களாகச் செயல்பட்டன. இவை இங்கிலாந்தின் சட்டங் களாகா. இச் சட்டங்களின் செல்திறனுக்கு அரசரின் நடவடிக்கையோ, இசைவோ தேவையில்லை. சில நிகழ்வு களிலும் சூழ்நிலைகளிலும் அரசரால் இச் சட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயல்படுத்தப்படலாம். திருச்சபையின் நிருவாகப் பொறுப்பு திருச்சபையால் அமர்த்தப்பட்ட நிருவாகிகளுக்கொண்ட ஓர் அமைப்பிடம் இருந்தது. இவர்கள் முதலில் போப்பாண்டவருக்கும் பின் அரசருக்கும் பொறுப் புறுதியேற்றுக்கொண்டிருந்தனர். திருச்சபை இங்கிலாந்தில் ஒரு தேசிய நிறுவனமாக இருந்ததில்லை. கத்தோலிக்கத் திருச் சபையின் யார்க், கான்டர்பரி ஆகிய இரு பிரிவுகளும் இங்கி லாந்தின் திருச்சபை கொண்டிருந்தது. இதன்மீதான நிரந்தர மானதும் வெளிப்படையானதுமான போப்பாண்டவரின் தலைமுதன்மை, திருமடத் தலைவரிடம் நிலைபெற்றிருந்த தினலாம். போப்பாண்டவரின் அதிகாரங்கள் முறையாக இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. கான்டர்பரியின் அதிமேற்றிராணியாரும், யார்க்கின் அதிமேற்றிராணியாரும் இவ் வதிகாரத்தை ஏற்றுச் செயல்படுத்தி வந்தனர். இடைக் காலத்தில் வரலாற்றுசிரியர்களால் குறிப்பிடப்பட்ட "இங்கி லாந்தின் திருச்சபை" (Ecclesia Anglicana) ஏட்டளவில் நின்று விட்ட ஒரு சொல்லேயாகும். தலையாயச் சட்டமியற்றுநராக வும், ஆட்சியாளராகவும், முறைவராகவும் போப்பாண்டவர் இருந்தார். இங்கிலாந்தின் திருச்சபையின் சுயேச்சை யென்பது முற்றிலும் ரோமானியச் திருச்சபைக்குக் கீழ்ப்பட் டிருந்ததைக் குறிப்பிடும்.

சமயச் சீர்திருத்த இயக்கத்திற்குமுன், பல ஆண்டுகளா கவே போப்பாண்டவரின் கோரிக்கைகளுக்கெதிராகப் பாராளு மன்றம் பல சட்டங்களை இயற்றியது. இடைக்காலத்தில் நிலவிய உரிமைக் கருத்துகளால் உந்தப்பட்ட பாராளுமன்றம் போப்பிற்கெதிராக இச் சட்டங்களை இயற்றியதெனினும், பெருங்குடிமக்கள், அரசர் ஆகியோரின் உரிமைகளைத் திருச் சபையின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் தான் பாராளுமன்றம் இத்தகைய நடவடிக்கைகளை மேற் கொண்டதெனலாம். தேசிய வளர்ச்சியின் வேகம் வெளி யாராகிய போப்பாண்டவருக்கெதிராக மக்களைத் திரட்டியது. புதிய தேசிய அரசின் கோரிக்கைகளுக்கெதிராக நாட்டுக்கு வெளியேயிருந்து செயல்பட்டுவந்த போப்பாண்டவர் உரிமை

கொண்டாடினர். வெளியாரின் நடவடிக்கைகள் நாட்டுப் பற்றை வளர்க்க உதவின.

இடைக்காலத்தில் மக்களும் குருமார்களும் இணக்கத்துடன் செயல்பட்டுவந்தனர். திருச்சபையின் அமைப்பு, சடங்கு, மொழி, சட்டம் ஆகியவை வெளியே இருந்து வந்தவை என்பதால் மக்களிடையே தேசிய உணர்ச்சியைத் தூண்டின. திருமடத் தலைவர்களும், கடுந்துறவிகளும் பல மேற்றிராணியார்களும் வெளிநாட்டவர்களாகவே இருந்தனர். மேலும், இடைக்கால உரிமைகளின் அரணாக திருச்சபைகள் இருந்தன. இவைகளின் சிறப்புரிமைகளும் நிலையும் தேசிய அரசின் இறைமைக்கு ஓர் அறைகூவலாக இருந்தன. கீழ்நிலைக் குருமார்கள் பாராளுமன்றத்தில் கலந்துகொள்ளவில்லை. குருமார்களின் திருக்கூட்டங்களும் அரசரின் இசைவின்றிக் கூடின. இவை இயற்றிய சமயச் சட்டங்களும் அரசரின் இசைவு பெறுமலே செயல்பட்டன. குருமார்களிடமிருந்து பலவகையான தீர்வைகளைத் திரட்ட, திருச்சபை உரிமை பெற்றிருந்தது. திருச்சபைக்கெனத் தனிப்பட்ட நீதிமன்றங்கள் இருந்தன. இவை சாதாரண மக்களை விசாரிக்கவும் அதிகாரம் பெற்றிருந்தன. ஆனல், திருச்சபையின் சட்டங்கள் எல்லோரையும் பாதிக்கவில்லை. ஆயினும், ஆங்கிலேயரின் மனப்போக்கு குருமார்களை வெறுக்கும் அளவிற்கு இருக்கவில்லை.

குருமார்களிடையே காணப்பட்ட சீரழிவு மக்களின் வெறுப்பை வளர்த்தது. திருச்சபையின் சில கோட்பாடுகளைப் பல சிந்தனையாளர்கள் ஏற்கவில்லை. வினவும் ஒரு மனப்போக்கை மறுமலர்ச்சி இயக்கம் வளர்த்துக்கொண்டிருந்தது. பைபிள் குறிப்படும் கிறித்துவத்தையும் திருச்சபை குறிப்பிடும் கிறித்துவத்தையும் மக்கள் ஒப்புநோக்க முற்பட்டனர். அரசரே சில சீர்திருத்தங்களைக் கொண்டுவரவில்லையென்றலும், சீர்திருத்தங்களின் தேவையைச் சமயச் சீர்திருத்த இயக்கம் வற்புறுத்தியதை நாம் காணலாம். அரசர் (எட்டாம் ஹென்றி) தம் மனைவியாரை விவாகரத்து செய்ய விரும்பியது ஒரு புதிய நெருக்கடியை உருவாக்கியது. அரசர் காத்தரினை விவாகரத்து செய்வதைப் போப்பாண்டவர் விரும்பாதபொழுது அரசர் அவருக்கெதிராக மாறினர். கோட்பாட்டு மாற்றங்களைச் செய்ய போப் விரும்பவில்லை. சமயச் சீர்திருத்த இயக்கம் ஐரோப்பாவில் சமயத்துறையில் சில மாற்றங்களைச் செய்தது. ஆனல், இங்கிலாந்தில் சமயச்

சீர்திருத்தம் ஓர் அரசியல் இயக்கமாக உருப்பெற்றது. எனவே, இந்த இயக்கம் அரசரிடமிருந்து தோன்றி, மக்களிடையே பரவியது. இதனால் முடியாட்சி வலுப்பெற்றதெனலாம். சமயச் சீர்திருத்தம் எட்டாம் ஹென்றியின் கைவினையேயாகும். இதன் நிறைவை அரசர் திட்டமிட்டு உருவாக்கவில்லையென்றாலும், அரசரின் கொள்கை இதற்குதவியாக அமைந்தது.

Cardinal Wolsey.

எட்டாம் ஹென்றி ஆட்சிக்கால முற்பகுதியில் (1529-39) மாற்றங்கள் கோட்பாட்டடிப்படையில் இல்லாமல் அரசியல் சார்பில் இருந்தன. அரசர் உல்சியின்மீது சினம்கொண்டார். உல்சி யார்க்கின் அதிமேற்றிராணியாராகவும், பின் கார்டினலாகவும், பின் போப்பாண்டவரின் உயர்நிலைத் தூதுவராகவும் இருந்தார். இவர் அரசரின் நிதித்துறை முதல்வராகவும் இருந்து பணியாற்றினர். எனவே, இவர் அரசிலும், திருச்சபையிலும் தலைசிறந்தவராக இருந்தார் எனலாம். ஆனால், இவருடைய அதிகாரம் அரசரைச் சார்ந்திருந்தது. திடீரென உயர்நிலை எய்தியவரெனப் பெருங்குடியினர் இவரை வெறுத்தனர். திருச்சபையில் காணப்பட்ட ஊழல்களை இவர் அகற்ற முற்பட்டபொழுது மரபுக் கோட்பாட்டில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தவர்கள் இவர்மீது ஐயம்கொண்டார்கள். இவருடைய கொள்கையையொட்டி இயங்கிய நீதிமன்றங்கள் அரசின் சட்டப்பணிகளைக் கவரமுற்பட்டபொழுது பொதுச் சட்ட அறிஞர்கள் இந் நீதிமன்றங்களின் சிறப்பதிகாரங்களைக் கண்டு பொறுமைகொண்டார்கள். இவருடைய இறுமாப்பையும் பகட்டையும் கண்டவர்கள் இவரை வெறுத்தார்கள். எனவே, அரசர் இவரை ஆதரிக்காதபொழுது, இவரது வீழ்ச்சியும் உறுதியாயிற்று. இங்கிலாந்தில் போப்பாண்டவரின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதாக இவர்மீது சாட்டப்பட்ட குற்றம் நியாயமாகாது. ஏனெனில், அரசரின் இசைவோடுதான் இவர் போப்பாண்டவரின் கட்டளைகளை இங்கிலாந்தில் வரவேற்றுச் செயல்படுத்தினர். போப்பாண்டவரின் அதிகாரத்தை இங்கிலாந்தில் நிலைநாட்டியதற்கான தண்டனை, சிறைத்தண்டனையாகும்; இத்துடன், தண்டனைக்குள்ளானவரின் உடைமைகளும் சட்டப்படி பறிமுதலாகும். குற்றத்தை ஒத்துக்கொண்டு தண்டனையை ஏற்பது அறிவுடைமையாகுமென உல்சி கருதினர். இவருடைய உடைமைகளைப் பறிமுதல் செய்தபின், இவரும் மன்னிப்புப் பெற்றார். இவரைப் போப்பாண்டவரின் உயர்நிலைத் தூதுவராக ஏற்றுக்கொண்ட குற்றத்திற்காகக்

குருமார்கள் விசாரிக்கப்பட்டார்கள்.[1] இந்த விசாரணையைக் குருமார்கள் எதிர்க்கத் துணியவில்லை. குற்றத்தின் கழிவிரக்கமாகக் கான்டர்பரி, யார்க் ஆகிய திருச்சபைகளின் குருமார்கள் சார்பில் முறையே 100,000 பவுன், 18,000 பவுன் தண்டமாகச் செலுத்தப்பட்டது. இருப்பினும், அரசர் இதை ஒரு நிபந்தனையின் பேரில்தான் ஏற்றுக்கொண்டார். அரசரைக் குருமார்கள், "ஒரு தனிக்காவலராகவும், உயர் தனித்தலைவராகவும், கிறித்துவின் சட்டம் அனுமதிக்கும் வகையில் ஆங்கில திருச்சபைக்கும் குருமார்களுக்கும் உயர்தனித் தலைவராகவும்" ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது நிபந்தனையாகும்.[2] உடன்பாட்டின் அடிப்படையில் உருவான வழக்கத்தினால் அரசருக்கும் போப்பிற்குமிடையேயான செல்வாக்கு நிலையை வரையறை செய்ய இயலவில்லை. திருச்சபை அரசருக்கு அடங்கிப்போக வேண்டுமெனச் சில முற்போக்கு வாதிகள் கருதினர். ஆயினும், குருமார்களின் உலகியற் காரியங்களில் அரசரின் தனி உயர்நிலையை வரையறை செய்யவே இவர்கள் விரும்பினர்கள். இருப்பினும், அரசரின் சரிநுட்பமான தலைமையைப்பற்றி எவரும் தொடர்ந்து விவாதிக்க விரும்பவில்லை. மேலும், இப்பொழுது திருச்சபையின் எதிர்ப்பும் எதிர்பார்க்கப்படவில்லை. போப்பாண்டவரின் தூதுவருக்கான கடமைகளை அரசரின் இசைவோடு செயல்படுத்தியது சட்ட மீறலாகக் கருதினால், வருங்காலத்தில் அரசர் எதைக் குற்றமெனக் கருதுவாரோ அதுவே குற்றமாகுமென்னலாம். எனவே, குருமார்களை அடக்கிவிட்டுப் போப்பாண்டவருக்கு எதிராக நடவடிக்கைகளில் அரசர் இறங்கினர். கான்டர்பரி, யார்க் ஆகிய இரு திருச்சபை வட்டங்களின் குருமார்கள் திருக்கூட்டங்களும் அரசரின் அச்சுறுத்தல்களுக்கு அடங்கிப் பணிந்தன. ஹென்றியின் சட்டத்தை இவை ஏற்றுக்கொண்டன.

ஏழாண்டுகள் கூடியிருந்த பாராளுமன்றம் சமயச் சீர்திருத்தப் பாராளுமன்றமெனப் பெயர்பெற்றது. 1529-லிருந்து 1536 வரை ஆண்டுதோறும் இப் பாராளுமன்றம் கூடியது. போப்பாண்டவரின் தனிமுதன்மை நிலையை அகற்றவும், திருச்சபையை ஒருங்கமைக்கவும், அரசரின் தனிமுதன்மையை நிறுவவும் இப் பாராளுமன்றம் பயன்படுத்தப்பட்டது. போப்பாண்டவரை எதிர்க்கும் வகையில் பாராளுமன்றம்

[1] Pickthorn, "Henry" VIII, 157.
[2] G. R. Etton, "King or Minister," 39 His. 225—8.

இயற்றிய சட்டம் முதலாண்டு வருவாய்ச் சட்டமாகும் (1532). புதிதாக அமர்த்தப்பட்ட அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் ஆகியவர்களின் முதலாண்டு வருமானத்தைப் போப்பாண்டவருக்கு அளிக்கவேண்டுமென்பதை இச் சட்டம் எதிர்த்தது. முதலாண்டு வருவாயைப் போப்பிற்களிக்க வேண்டுமென்பது மிகப்பழைய வழக்கமன்று. நான்காம் ஹென்றியின் சட்டமொன்று இத்தகைய நிதியளிப்பை கட்டுப்படுத்த முயன்றது. இதை "ஒரு கொடுமையான வழக்க" மென இச் சட்டம் குறிப்பிட்டது. வருங்காலத்தில் இவ்வாறு நிதியளிப்பதை இச் சட்டம் ஒழித்தது. இந்த முதலாண்டு வருவாய் போப்பாண்டவருக்கு அளிக்கப்படவில்லையென்றும், அதிமேற்றிராணியார்களும், மேற்றிராணியார்களும் பதவியேற்றுக்கொண்டது செல்லுமென இச் சட்டம் குறிப்பிட்டது.[1] இச் சட்டம் நிறைவேறிய முறையிலிருந்து பாராளுமன்றம் அரசருக்கு அடிபணிந்துவிட்டதோ எனும் ஐயப்பாடு ஏற்பட்டது. பெருமக்கள் சபையில் சமயச் சார்புடைய பிரபுக்களோடு ஒரு உலகியல் பிரபு மட்டுமே சேர்ந்துகொண்டு இம்மசோதாவை எதிர்த்தனரெனினும், பொதுமக்கள் சபையில் இதற்கு எதிர்ப்புக் குறைந்தே காணப்பட்டதால், வாக்கெடுப்பு நடந்தது. போப்பாண்டவரின் அதிகாரத்திற்கிருந்த அச்சுறுத்தலை இம்மசோதா வெளிப்படுத்தியது. பல உறுப்பினர்களுக்கு இது அச்சமுண்டாக்கியது.

போப்பாண்டவரோடு பேச்சுவார்த்தைகள் நடத்த இம் முதலாண்டு வருவாய்ச் சட்டம் அரசரின் கரங்களை வலுப்படுத்தப் பெரிதும் உதவியது. போப்பாண்டவரின் வருவாயை இச் சட்டம் ஒழித்தது. போப்பாண்டவரை நெருக்க இச் சட்டம் அரசருக்கு உதவியது. உடன்பாடு காணும்வரை இச் சட்டத்தின் செயற்பாட்டை ஓராண்டிற்குத் தள்ளிவைக்கும் அதிகாரத்தையும் அரசர் பெற்றிருந்தார்.

காத்தரினை விலக்கிவைத்துவிட்டு, அரசர் மறுமணம் செய்துகொள்வதை 1532 நவம்பரில் போப்பாண்டவர் தடை செய்தார். இத் தடையை அரசர் மீறினார். 1533-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசர் அனிபொலினை இரகசியமாக மணந்து கொண்டார். செப்டம்பரில் இவர் ஒரு பெண் குழந்தையை (எலிசபெத்) ஈன்றார். எனவே, முன்னைய திருமணத்தைச் செல்லுபடியாகாதென அறிவிக்கும் தகுதிபெற்ற ஒரு

[1] Tanner, "Tudor Constitutional Documents," 26-9.

நிறுவனத்தை நாட்டில் உருவாக்கவேண்டிய நிலையேற்பட்டது. இந்த ஏற்பாடுகளையெல்லாம் வன்மையாகக் கண்டித்த அதிமேற்றிராணியாராகிய வார்ஹாம் (Warham) என்பாரும் 1532 ஆகஸ்டில் இறந்தார். ஹென்றியின் நோக்கத்தை உறுதியாகத் தெரிந்துகொள்ள இயலாத போப்பாண்டவர், தாமஸ் கிரான்மர்(Thomas Cranmer) என்பாரைத் தம் வாரிசாக அமர்த்துவதற்குத் தேவையான கட்டளையைப் பிறப்பித்தார். 1533-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் இவர் தீக்கை பெற்றார். போப்பாண்டவருக்குச் செய்துகொடுத்த பிரமாணமெதுவும் அரச சேவைக்குத் தடையாக இராதென்பதை இவர் உறுதிப்படுத்தியதோடு, பதவித் தொடர்புடைய போப் பாண்டவரின் கட்டளைகளை அரசரிடம் ஒப்படைத்தார். மேலும், சமயச் சீர்திருத்தம் அல்லது திருச்சபையின் ஆட்சிமுறை ஆகியவைகளுக்குத் தாம் தடங்கலாக இருக்கப்போவதில்லை யென்றும் இவர் அரசருக்கு உறுதியளித்தார். 1533-ஆம் ஆண்டு மேமாதத்தில், காத்தரினோடு செய்துகொண்ட திருமணத்திற்கெதிரான (ஹென்றியின்) வழக்கை விசாரிக்கும் பொருட்டுப் புதிய அதிமேற்றிராணியார், சமயத்துறையின் ஆட்சி எல்லைக்குட்பட்டு அரசரின் தலையாய அமைச்சராக டன்ஸ்டேபிலில் (Dunstable) அமர்ந்தார். திருமணம் செல்லாதென்றும், பின் அனிபொலினோடு செய்துகொண்ட திருமணம் செல்லுமென்றும் இவர் முடிவு கூறினார்.[1] ஜூலை மாதத்தில் இரண்டு முடிவுகளையும் போப்பாண்டவர் கண்டனம் செய்தார். கிரான்மரையும் அவருக்குதவியாக உடன் பணியாற்றியவர் களையும் போப்பாண்டவர் சமயவிலக்குச் செய்தார். அரசரையும் சமயவிலக்குச் செய்துவிட்டதாக நவம்பர் மாதம் ஒரு கட்டளையைப் போப் வெளியிட்டார்.

இரண்டாவது முதலாண்டு வருவாய்ச் சட்டம் (1534) குருமார்களைக் கீழ்ப்படியச் செய்தது. மேல் முறையீடுகள் அனைத்தையும் இச் சட்டம் தடுத்து நிறுத்தியது. 1533-ஆம் ஆண்டுச்சட்டம் அதிமேற்றிராணியாரிடம் இறுதியான முறையீடுகளை நிலைபெறச்செய்தது. இச் சட்டம் (1534) இறுதி முடிவை அரசரிடம் விட்டது. வகையாட்கள் அடங்கிய ஒரு நீதிமன்றத்தை அரசர் தனி ஆணைக்குழுவாக அமர்த்திச் சமயத் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்கச் செய்தார். இந் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் பிரிவி கவுன்சிலின் நீதித் தொடர்புடைய குழுவிற்கு 1833-ல் மாற்றப்படும்வரை

[1] Pickthorn, "Henry" VIII, 208-9.

தொடர்ந்து பணியாற்றி வந்தது. இச் சட்டத்தின்படி குருமார்களின் திருக்கூட்டத்தில் இயற்றப்படும் சட்டங்களுக்கு அரசரின் ஒப்புதல் வலியுறுத்தப்பட்டது. அதிமேற்றிராணியாரின் விருப்பப்படியின்றி அரசரின் விருப்பப்படியே இக் கூட்டம் கூடியது. இதன் சட்டங்களோடு எழும் முறையீடுகள் பொதுநேர்மைத் தனிமன்றத்திற்குக் (Chancery court) கொண்டுசெல்லப்படுகின்றன.

இரண்டாவது முதலாண்டு வருவாய்ச் சட்டம் அல்லது திருச்சபையினரின் வேலை அமர்வுச் சட்டம் முதலாம் ஆண்டு வருவாய்ச் சட்டத்தை உறுதிப்படுத்தியது. இச் சட்டத்தால் அரசர் எடுத்துக்கொண்ட முதலாண்டு வருவாய் 1704-ல் ஆன் அரசியாரால் வறிய நிலையில் இருந்த குருமார்களுக்கு அளிக்கப்பட்டது. இச் சட்டத்தின் மற்றப் பிரிவுகள் மேற்றிராணியார்களின் தேர்தலுக்கு வகைசெய்தன. தேர்தலில் அரசர் தலையிடும் பழைய வழக்கம் உறுதியடைந்தது. அரசர் நியமனம் செய்பவரைக் குருமார்கள் தேர்ந்தெடுக்கத் தவறினால் போப்பாண்டவரின் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயன்ற குற்றத்திற்கான தண்டனைக்குள்ளானார்கள். புதிய அலுவலர்கள் இங்கிலாந்தில் தீக்கை பெறுவதற்கான நடைமுறைகளை இச் சட்டம் குறிப்பிட்டது. குருமார்கள் தேர்தலை நடத்த 12 நாட்களுக்கு மேல் தாமதித்தால் அல்லது தள்ளிவைத்தால் அரசர் அலுவலர்களை அமர்த்தும் அதிகாரம் பெற்றார். ஆங்கில மேற்றிராசனங்களைத் தோற்றுவித்ததாக அரசர் கூறிக் கொண்டார். திருமடத் தலைமைப்பதவி காலியானால் அரசரின் இசைவுபெற்று, அப் பதவிக்கான தேர்தலை நடத்தவேண்டும். எனவே, குருமார் தொகுதியினர் மேற்றிராணியாரைத் தேர்ந்தெடுக்க அரசரிடமிருந்து ஆணை பெறவேண்டும். தேர்ந்தெடுக்கப்படவேண்டியவரையும் அரசர் ஒரு கடிதத்தின் வழியாகக் குறிப்பிடுவார். இவைகளைப் பற்றிநிற்கத் தவறினால் குருமார்கள் தண்டனைக்குள்ளாவார்கள். ஆகவே, திருச்சபைப் பதவிக்கானவர்களை அமர்த்துவதில் அரசர் செயலாட்சியுரிமை பெற்றார். முதல்விளைவுக் காணிக்கை, பத்தில் ஒரு பகுதி வரி ஆகிய வருவாய்களை ஏற்றுச் செயல்படுத்த 1540-ல் ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. போப்பாண்டவர் வழக்கமாகத் திரட்டிய பீட்டர் பென்னி போன்ற பல சிறிய காணிக்கைகளை அகற்ற அரசர் உடனடியாகச் சட்டமியற்றிச் செயல்படுத்தினர். law of succession.

பின்னர், வாரிசுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஹென்றி காத்தரினை மணந்துகொண்டதை இச் சட்டம்

செல்லுபடியாகாதென அறிவித்து, அரசர் அனிபொலினை மணந்துகொண்டதைச் செல்லத்தக்கதெனக் குறிப்பிட்டது. இத்தகைய ஒரு முடிவை கிரான்மர் முன்னமேயே அறிவித்திருந்தார். இம் முடிவை மறுப்பது அரசத் துரோகமாகுமென இச் சட்டம் அறிவுறுத்தியது. இப்பொழுது போப்பாண்டவர், கிரான்மர் செய்த முடிவை கடைமுறையிலிருந்து நீக்கிவைத்தார். பின், 1534-ல் தனிமுதன்மைச் சட்டம் (Act of Supremacy) உருவாகியது. இங்கிலாந்தின் சுதந்திர நிலையை மேல்முறையீட்டுச் சட்டம் உறுதிப்படுத்தியது. அனைத்து மக்களின்மீதான அரசரின் தனிமுதன்மை நிலையை இச் சட்டம் இப்பொழுது வெளிப்படுத்தியது. ஏற்கனவே, குருமார்களின் திருக்கூட்டம் அரசரின் தனிமுதன்மை நிலையை ஏற்றுக்கொண்டது. இப்பொழுது மக்களும் அரசரின் சிறப்புநிலையை ஏற்றுக்கொண்டனர். அரசருக்கும், அவர் வழித்தோன்றல்களுக்கும், "நிலவுலகில் ஆங்கிலத் திருச்சபையின் தனிப் பெருந்தலைவ"ரென்ற பட்டம் அளிக்கப்பட்டது. இந்த உரிமை அரசருக்கு உள்ள உரிமையென இச் சட்டம் வலியுறுத்தியது. இச் சட்டத்தின் ஒரு சிறந்த இயல்பு என்னவென்றால், திருச்சபை கண்காணிப் பதிகாரத்தை அரசருக்கு ஒதுக்கியளித்ததாகும். பிற்காலத்தில் மடாலயங்களை ஒழிப்பதற்கு இந்த அதிகாரம் அரசருக்குப் பயனளித்தது.

தாமஸ் கிராம்வெல்லைப் பயன்படுத்திக்கொண்டு குருமார் தொகுதியை அரசர் தாக்கினர். இவர் சமயச் சீர்திருத்தத்தின் ஒரு விளைபயனாவார். திருச்சபைத் தொடர்புடையவைகளுக்கு இவரை அரசர் ஆட்பேராக அமர்த்தினர். இவருடைய அறிவுரையின்பேரில் மடாலயங்களை மேற்பார்வையிட ஆணையர்கள் அமர்த்தப்பட்டார்கள். குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காக அமர்த்தப்பட்ட இப் பார்வையாளர்கள் நாட்டின் மூன்றில் ஒரு பகுதியைத்தான் பார்வையிட்டார்கள். இப் பணியை இவர்கள் விரைந்து செயலாற்றியதிலிருந்து இதை ஒரு முறைமன்ற நடவடிக்கையாகக்கூடக் கருத இயலாது. இருப்பினும், வெறுக்கத்தக்க பழக்கங்களுக்காகக் குருமார்களின்மீது கடுமையான குற்றச்சாட்டுகளைக்கூறிப், பெரிய, சிறிய, மடங்கள்மீது குற்றஞ்சாட்டி ஓர் அறிக்கையைத் தயாரித்து அரசருக்களித்தார்கள். எவ்வாறாயினும், மடங்களின் நலிவுற்ற நிலையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். மடங்களின் ஒழிப்பிற்கு முன்னிகழ்வுகள் இல்லாமலில்லை. 15-ஆம் நூற்றாண்டில் அயல்நாட்டுத் துறவிமடங்கள் ஒடுக்கப்

பட்டன. போப்பாண்டவரின் இசைவாணையோடு கார்டினல் மோர்டன் (Morton) சிறிய மடங்களை ஒடுக்கினர். உல்சியும் சில சிறிய மடங்களை ஒழிப்பதில் முன்னோடியாக இருந்தார்.[1] 1536-ல் ஒரு சட்டம் சிறிய மடங்களை ஒழித்தது. பார்வையாளர்களின் அறிக்கையையொட்டி இச் சட்டம் இயற்றப்பட்டது. பணம் திரட்டுவதற்குக் குருமார்கள் பொருள்களை விற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டார்கள். இதனால் மடங்களின் சொத்துகள் வீணழிவிற்குள்ளாயின என்று கூறப்பட்டது. ஆயினும், பெரிய மடங்கள் பாராட்டப்பட்டன. பெரிய மடங்களின் தலைவர்கள் பெருமக்கள் சபையில் உறுப்பினர்களாக இருந்ததால் இவை தனிப்பட்டவைகளாகக் கருதப்பட்டன. எனவே, வெளிப்படையாக இவைகளைக் கொள்ளையடிப்பது நேர்மையாகாதெனக் கருதப்பட்டது. ஆனால், தொலைவில் இருந்த சிறிய மடங்கள் தாக்குதலுக்குள்ளாயின. பார்வையாளர்களால் மடங்களின் ஊழல்களைக் குறைக்க முடியாதபொழுது பாவச்செயல்களை ஒடுக்கவும், பெரிய மடங்களின் உறுப்பினர்களை அதிகரிக்கவும் 200 பவுனுக்குக் குறைந்த ஆண்டு வருமானம் பெறுகின்ற மடங்களை ஒழிக்கும் நோக்கத்தில் சட்டமியற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி ஒழிக்கப்பட்ட மடங்களின் எண்ணிக்கை 376 ஆகும். இதற்கு முந்திய ஆண்டுகளில் ஒடுக்கப்பட்ட மடங்களும் இதில் அடங்கும். இவைகளின் சொத்துகள் அரசருக்கும் அரசருடைய வழித்தோன்றல்களுக்கும் ஒதுக்கப்பட்டன. ஒழிக்கப்பட்ட நிறுவனங்களை ஏற்றுச் செயல்படுத்தியவர்கள் விருந்தோம்பலையும் வேளாண்மையையும் தொடர்ந்து நடத்திவரவேண்டுமென இச் சட்டம் விதித்தது. இதற்கு உட்படாதவர்கள் தண்டனைக்குள்ளானார்கள்.

சிறிய மடங்களைத் தகர்த்தபின், பெரிய மடங்களுக்கெதிராகக் கடுத்தமான நடவடிக்கை எடுக்க, ஹென்றி உறுதி கொண்டார். இம் மடத் தலைவர்களை கிராம்வெல் தனித்துச் சந்தித்து மடங்களைத் தம் விருப்பில் விட்டுக்கொடுப்பதாகக் கையெழுத்திட வற்புறுத்தினர். பார்வையாளர்களின் கண்டனத்திற்குள்ளான மடங்களின் சொத்துகளை அரசர் 1539-ல் பறிமுதல் செய்தார். நடந்தவைகளை ஒரு சட்டத்தால் அரசர் முறைப்படுத்தினர். 200 பெரிய மடங்களும் 200 சிறிய மடங்களும் இப்பொழுது அரசர் வசமாயின. உயர் மதிப்புள்ள சில பொருள்களைக் குருமார்கள் விற்க முயன்றாலும், திருச்சபையின் பூசனைப் பொருள்களையும், கட்டடப்

[1] Taswell—Langmead, "English Constitutional History" P. 316.

பொருள்களையும் அரசர் பெற்றார். வாடகைகள், விளையுளில் பத்தில் ஒரு பகுதி, தாதுப் பொருள்கள், ஆலைகள், அங்காடிகள், மீன் பண்ணைகள், மேய்ச்சல் தரைகள் ஆகியவை களையும் அரசர் பெற்றார். பாராளுமன்றத்தில் திருமடத் தலைவர்கள் பலர் வழக்கமாக வராதிருந்தது அரசரின் செயல் களுக்குப் பெரும்பான்மை பலம் கிட்டியது. எடுத்துக் கொண்ட உடைமைகளிலிருந்து அரசர் ஆறு புதிய மேற்றி ராசனங்களை நிறுவினர். இவைகளில் ஒன்றாகிய வெஸ்ட மின்ஸ்டரை ஆரும் எட்வர்டு ஒழித்தார். இப் புதிய மேற்றி ராசனங்கள் பறிமுதல் செய்த நிலங்களின் ஒரு சிறிதளவான நிலங்களை மட்டுமே தமதாக்கிக்கொண்டன. மடங்கள் ஒழிப்பின் அரசியலமைப்புச் சார்புடைய விளைவுகள் பெரும் சிறப்பிற்குரியனவாகும். திருச்சபையின் தேசிய நிலைக்கு இது ஒரு பேரிடியாகும். மடாலயங்கள் தொடர்ந்து செயல் பட அனுமதிக்கப்பட்டிருந்தால் இவை ஹென்றியின் புதிய சமய ஏற்பாடுகளுக்கு எதிராக சதிச்செயல்களில் ஈடுபட் டிருக்கும். பெருமக்கள் சபை அரசரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தமையால் அரசரின் நிலை வலிமைபெற்றது. இதற்குப் பின், சமயச் சார்புடைய பிரபுக்களின் எண்ணிக்கை 26 ஆகக் குறைந்தது. மேலும், அரசர் மிக அதிகமான நிதி வசதிகளையும் இப்பொழுது பெற்றிருந்தார். பறிமுதல் செய்யப்பட்ட மடங் களின் சொத்துகளை வைத்துப்பேண வளர்ச்சி நிதிமன்றங் களை ஹென்றி நிறுவினர். மடங்களின் நிலங்களைப் பெற்ற நிலச் சொந்தக்காரர்கள் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்களானார்கள். நாட்டுப்புறங்களில் புதிய பணக்காரர்களின் எண்ணிக்கை பெருகிற்று. புதிய சட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி அரசர் நில உடைமைகளை எளிதாக மாற்றிக்கொடுத்தார். மடங்களின் நிலங்களை மேய்ச்சல் தரைகளாக மாற்றியதால் பண்ணையாள் முறை விரைவாக மறைந்தது. திருமடத் தலைவர்கள் செய்துவந்த தர்மங்கள் நிறுத்தப்பட்டதால் இரவலர் பிரச்சினை அதிகரித்தது.

குருமார்கள் வாணிகம், பண்ணைத்தொழில் ஆகியவற்றில் ஈடுபடுதல், ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளை வகித்தல், ஓரிடத்தில் தங்கி வசிக்காதிருத்தல் ஆகியவை 1529-லிலேயே தடைசெய்யப்பட்டன. டியூடர் காலத்திற்கு முன்னரே கொள்ளையிடல், தீவைத்தல் போன்ற குற்றங்களுக்கு நீதி மன்றத்தில் குருமார்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகை களைப் பெற முடியாமல் தடைவிதிக்கப்பட்டது. ஏழாம் ஹென்றியின் சட்டம் ஒன்று, குற்றம் சாட்டப்பட்டவர் திருச்

சபையினராக இருந்தாலன்றி இச் சலுகைகளைக் கொலைக் குற்றத்திற்கும் அளிக்க மறுத்தது. இக் கோட்பாட்டை அழிக்கும் நோக்கத்தில் ஆங்கிலச் சட்டங்கள் 1827வரை இயற்றப்படவில்லை. பல்வேறு குற்றங்களுக்கு மதிப்புத் தரம் கருதி நீதிமன்றம் குருமார்களுக்கு அளித்துவந்த விலக்கை 1531-ஆம் ஆண்டின் சட்டமொன்று நீக்கியது. சட்டத்தில் குறிப்பிடப்பட்ட இடங்களையும் திருச்சபைகளையும் தவிர, புகலிடங்கள் 1539-ல் ஒழிக்கப்பட்டன. கடுமையான குற்றங்களுக்கு இந்த இடங்கள்கூட புகலிடம் அளிக்க முடியாது.

எட்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதி எதிர் விளைவுகளைப் பொதுவாக எடுத்துக்காட்டியது. ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் கோட்பாடுகளில் கட்டாய நம்பிக்கையைப் புகுத்தியதன் விளைவாகத் தம் கொள்கைப் பிடிப்பை வெளிப்படுத்தினர். ஆறு விதிச்சட்டம் (Statute of Six Articles) முரண்சமயக் கருத்திற்கு எதிராக உள்ள சட்டத்தைத் திருத்தியமைத்ததும் ஒருங்கமைத்ததும் அரசிய லமைப்புச் சிறப்புடையதாகும். முரண்சமயவாதிகளை விசாரித்துத் தண்டனை வழங்கச் சிறப்பு விதிமுறைகள் வகுக்கப்பட்டன. இவர்களை ஆணையர்கள் அறங்கூறுநர்களின் துணையோடு விசாரணை செய்தார்கள். இச் சட்டத்தின் ஒரு பிரிவு குருமார்களின் மணவினைகளைச் சட்டவிரோதமெனக் குறிப்பிட்டது. பாவமன்னிப்புக் கேட்க அல்லது புனிதச்சடங்கை ஏற்க மறுப்பதற்கான முதற் குற்றத்திற்குத் தண்டமும் சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டன. இரண்டாந்தடவையாகச் செய்யும் குற்றத்திற்குக் கொடிய குற்றத்திற்கான தண்டனை அளிக்கப்பட்டது. எழுத்துருவில் இருந்த குற்றங்களை விசாரிக்க அவ்வப்போது தனிப்பட்ட ஆணைக்குழுக்கள் அமர்த்தப்பட்டன. ஆரும் எட்வர்டு நிறைவேற்றிய நாட்டுத் துரோகச் சட்டத்தினால் இச் சட்டம் நீக்கப்பட்டது. பொதுச் சட்டமும் எழுத்துருவில் இருந்த சட்டமும் முரண்சமயக் கருத்துகளுக்கான தண்டனைக்கு வகைசெய்தன. இந்த மசோதாவை விளக்கியுரைக்கப் பெருமக்கள் சபைக்கு அரசர் வரவேண்டியதாயிற்று. இல்லையெனில் மசோதா நிறைவேறி யிருக்காது. மசோதாவின் மூன்றாவது பிரிவு இதைக் குறிப் பிடுகிறது. அரசர் பாராளுமன்றத்திற்கு வருகையளிப்பதை இடைக்காலத்திய வழக்கம் உறுதிப்படுத்துகிறது. ஹென்றி யின் செயலுக்கு முன்னிகழ்வுகள் இருந்தன. இச் செயலும் அரசியலமைப்பு விதிகளுக்கு முரணாக அமையவில்லை. இச்

சட்டத்தாலும் தனிமுதன்மைச் சட்டத்தாலும் பெற்ற அதிகாரத்தால் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகளை ஹென்றி கட்டுப்படுத்த முயன்றார். மரபுக் கோட்பாட்டை ஹென்றி பற்றிநின்றது கிராம்வெல்லின் செல்வாக்கைக் குறைத்ததோடு அவருடைய வீழ்ச்சிக்கும் வழிகோலியது. ஜெர்மனியில் பிராடெஸ்டண்டு சமயத்திற்கு ஆதரவாக ஹென்றியைத் திருப்பக் கிராம்வெல் முயன்றார். இதில் வெற்றி காண, ஹென்றிக்கும் கிலிவின் அன்னிக்கும் (Anne of Cleves) திருமண ஏற்பாட்டிற்குக் கிராம்வெல் வழிவகுத்தார். ஆனால், ஹென்றி மணமகளை விரும்பவில்லை. 1542-ல் முரண்சமயக் கருத்துகளை வரையறை செய்து வெளியிடும் அதிகாரத்தைப் பாராளுமன்றம் ஹென்றிக்களித்தது. போப்பாண்டவருக்கு ஆதரவானவர்களையும் சீர்திருத்தக்காரர்களையும் தண்டிக்க இவர் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தினர். பைபிளின் (Bible) ஆங்கில மொழிபெயர்ப்பு மட்டுமே கோட்பாட்டு மாற்றமாக அமைந்தது.

ஆரும் எட்வர்டு (1547—53)

1547-ல் ஹென்றி இறந்ததும் அரசரின் தனிமுதன்மை யதிகாரம் ஒன்பது வயதான அரசரிடம் கிலேபெற்றது. சோமர்செட் (Somerset) என்பாரிடம் அதிகாரச் செயற்பாடு உண்மையில் இருந்தது. இவர் அரசரின் பாதுகாவலராக அமர்த்தப்பட்டிருந்தார். உலகியல் தொடர்புடைய அதிகாரங்களைப் பாதுகாவலர் செயல்படுத்துவதில் இடர் எதுவுமில்லை. ஆனால், அரசருக்குரிய இயல்புகள் எதுவுமில்லாத அலுவலர் ஒருவர் திருச்சபையின்மீது தனிமுதன்மை அதிகாரத்தைச் செயல்படுத்துவது சர்ச்சைக்குள்ளாகியது. இந்த அதிகாரத்தை அரசர் மட்டுமே செயல்படுத்தலாமென வாதிக்கப்பட்டது. தாமே மேற்கொள்ளாத திருச்சபை மாற்றங்களுக்கான நடவடிக்கைகள் செல்லாதெனவும், வயது வரும்வரை முன்னேற்றம் காண இயலாதெனவும் வாதிக்கப்பட்டது. இத்தகைய வாதங்கள் கவனிக்கப்படவில்லை. அரசர் இளம் வயதினராக இருந்தாலும் திருச்சபையின் தனிமுதன்மை அரசருக்குரியதெனவும் இதை அரசரின் பெயரில் உடனடியாகச் செயல்படுத்தலாமெனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.[1]

ஆரும் எட்வர்டின் ஆட்சிக்காலத்தில் உண்மையில் சமயச் சீர்திருத்தம் ஏற்பட்டதெனலாம். பிராடெஸ்டண்டு சார்

[1] Pollard, "Political History of England," 15

புடைய சோமர்செட், ஆறு விதிகள் சட்டத்தையும் முரண் சமயவாதிகள்பற்றிய சட்டத்தையும் தள்ளுபடி செய்தார். இதனால் நாடுகடத்தப்பட்ட பிராடெஸ்டண்டுகளும் சமயப் பிரசாரகர்களும் நாட்டிற்குள் வந்து குழுமினர். இவர்களுடைய செல்வாக்கும் பிரீபுக்களின் பேராசையும் சமயச் சீர்திருத்தத்தை மேலும் தூண்டின. மானியம் பெறும் துணைக்கோயில்களை ஒரு சட்டம் ஒடுக்கியது, கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள் தவிர, சமய விளைகளுக்காக வாணிகக் கழகங்களும் கூட்டு நிறுவனங்களும் ஒதுக்கியளித்த நிதியின் ஒரு பகுதியை இச் சட்டம் பறிமுதல் செய்தது. கல்வி, வறியோர் இடர் உதவி, மக்கள்தொகை மிகுதியாக உள்ள இடங்களுக்குக் கூடுதலாகக் குருமார்களை அனுப்புதல் போன்றவைகளுக்கான பணத்தேவைபற்றி இச் சட்டத்தின் முகப்பு குறிப்பிட்டுள்ளது. ஆனால், பணத்தின் பெரும்பகுதியை இளம் அரசரைச் சுற்றியிருந்த பெருமக்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். முதல் வழிபாட்டுநூலை வரைந்ததில் கிரான்மர் உண்மையான பரிவுகளைத் துணிச்சலுடன் வெளிப்படுத்தினர். மூன்று புரட்சிகரமான மாற்றங்களை இது குறிப்பிட்டது. நாடு முழுவதற்குமாக வகுத்த ஒரு வழிபாட்டுநூல் பல்வேறு தல வழிபாட்டு வழக்குகளை அகற்றியது. அன்று இருந்த பொது வழிபாட்டு முறை வாசகச் சுவடிகளைக் கிரான்மர் ஆழ்ந்து ஆராய்ந்தார். எனவே, பல்வேறு வகையான மூலங்களிலிருந்து முதல் ஆங்கில வழிபாட்டுநூல் உருவாகியது. வழிபாடுகள் வட்டாரப் பேச்சுமொழியில் இருந்தன. லூத்தரன் (சமய) வழிபாட்டுமுறையையொட்டியதாகச் சமயம் இருந்தது. முதன் முறையாக வழிபாடுகள் ஆங்கிலத்தில் இருந்தாலும் இது கத்தோலிக்க வழக்காறுகளிலிருந்து முற்றிலும் விலகிச் சென்றுவிடவில்லை. முதல் ஒருமைச் சட்டத்தால்[1] எல்லாத் திருச்சபைகளிலும் இவ் வழிபாட்டுநூல் புகுத்தப்பட்டது. திருச்சபைக் குருமார்கள் இந்நூலைப் பயன்படுத்தவேண்டுமென இச் சட்டம் குறிப்பிட்டது. இந் நூலைப் பயன்படுத்த மறுத்தல், அல்லது வேறு நூலைப் பயன்படுத்தல் அல்லது இந் நூலைக் கேவலப்படுத்தல் ஆகியவைகளுக்கு முறையே தண்டம்விதித்தல், சிறைவைத்தல், உடைமைகளைப் பறித்துக்கொண்டு ஆயுட்காலச் சிறை ஆகிய தண்டனைகள் அளிக்கப்பட்டன. ஹென்றியின் சமய ஏற்பாடுகளும் எட்வர்டின் சமய ஏற்பாடுகளும் மாறுபட்ட அரசியலமைப்புக் கருத்துகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன.

[1] Act of Uniformity

அரசரின் தனிமுதன்மை அதிகாரத்தை ஹென்றி பயன்படுத்திக்கொண்டார். ஆனால், சமயத்தில் மாற்றங்களைச் செய்ய அரசரின் தனிமுதன்மையைப் பயன்படுத்தப் பாதுகாவலர் முனைந்தார்.

கெட்[1] கிளர்ச்சிக்கு ஆதரவு காட்டியதாலும், ∴பிரான்சு, ஸ்காட்லாந்து ஆகிய நாடுகளுடனை போரில் தோல்விகண்டதாலும், சமயப்பூசல் காரணமாக நாட்டில் அமைதிக்குலைவு ஏற்பட்டதாலும் சோமர்செட் செல்வாக்கிழந்தார். எனவே, இவருக்குப் பதிலாக நார்த்தம்பர்லாண்டு அமர்த்தப்பெற்றார். அரசர்மீது இவர் செலுத்திய செல்வாக்கின்பேரில் இவருடைய அதிகாரம் நிலைத்திருந்தது. மேலும், பெருங்குடிமக்களில் ஒரு பிரிவினரின் ஆதரவையும் இவர் தேடிக்கொண்டார். இரண்டாவது வழிபாட்டுநூல் ஒன்று வரையப்பட்டது. இது சுவிங்கிலியச்[2] சமயச் சார்புடையதாகத் தோன்றியது. இந்நூல் கிரான்மரின் படைப்பாகும். இந்நூலை எழுதுவதில் இவருக்கு ரிட்லி[3] துணையாக இருந்தார். இரண்டாவது வழிபாட்டுச் சட்டத்தால் இந்நூல் குருமார்களின்மீது திணிக்கப்பட்டது. குருமார்கள் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். மேற்றிராணியார்கள் நேரடியாக அமர்த்தப்பட்டார்கள். தூயவர்களின் சிலைகளும் உருவப் படங்களும் அழிக்கப்பட்டன. சமயச் சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்த பெருங்குடியினரின் பேராசையும் உலகியற் பண்புகளும் மக்களுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தன. பிராடெஸ்டண்டு சமயம் நார்த்தம்பர்லாண்டின் பழிப்பிற்குள்ளாயிற்று. தம் குடும்ப நலனை வளர்த்துக்கொள்ள இதை ஒரு கருவியாக இவர் பயன்படுத்தினர். எனவே, நாடு எதிர்விளைவுகளுக்குத் தயாராயிற்று.

மேரி (1553—58)

சொந்தமுறையில் மேரி அரசியார் மக்களின் செல்வாக்கிற்குரியவராக இருந்தார். இவருடைய சமயக் கொள்கை எதுவாயினும் மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். ஸ்பானிய நலன்களுக்காக இவர் ஆங்கில மக்களின் நலன்களை விட்டுக் கொடுத்ததாகத் தோன்றியது. ஏனென்றால், இவர் கத்தோலிக்கச் சமயச் சார்புடையவராகத் தோற்றமளித்தார். இங்கிலாந்

[1] Ket
[2] Zwingle
[3] Ridley

தின் பழைய சமயத்தை நிலைநாட்ட இவர் மனப்பூர்வமாக விரும்பினர். சமயச் சீர்திருத்தத்தின் அவசரப்போக்கும் இவருடைய கருத்தை வரவேற்பதாக இருந்தது. அரசரின் தனிமுதன்மை அதிகாரத்தால் மட்டும் சமயத்தின் முன் நிலையைக் கொண்டுவந்துவிடலாமென்பதில் இவர் நம்பிக்கை கொள்ளவில்லை. மாறாக, சமயப் புரட்சியைப் பாராளுமன்றம் பயனற்றதாகச் செய்துவிட முடியுமென்பதையும் இவர் உணர்ந்திருந்தார். கொள்கைச் சார்புடைய மாற்றங்களை மேரி செய்யமுயன்றார். கிரான்மர் செய்த முடிவுகளின் விளைவுகளை விலக்கும் நோக்கில் இவர் முதல் நடவடிக்கை மேற்கொண்டார். இதன்படி, எட்வர்டு நிறைவேற்றிய ஒன்பது சட்டங்களை இவர் ஒழித்தார், எட்டாம் ஹென்றியின் மரணத்தின்போது இருந்தநிலைக்குச் சமயத்தைக் கொண்டு போனார். இச் சட்டம் செயற்பாட்டிற்கு வரும்வரை எட்வர்டின் காலத்தில் இருந்தநிலை இருந்துவருமென அறிவித்தார். மேரியின் ஆட்சிக்காலத்தின் முற்பகுதியில் கார்டினரின் செல்வாக்கு மேலோங்கி நின்றது. போப்பாண்டவரின் அதிகாரத்தாலன்றி அரசரின் தனிமுதன்மை நிலையாலும் பாராளுமன்றத்தின் செயலாலும் எட்வர்டின் பணிகள் குலைக்கப்பட்டன.

ஸ்பானிய அரச மரபினரின் துணையோடு மேலும் முன்னேற மேரி அரசியார் விரும்பினர். கிரான்மருக்குப்பின் கார்டினர், போல்[1] ஆகியோர் கான்டர்பரியின் அதி மேற்றிராணியாராகப் பதவியேற்றார்கள். இதற்குப்பின், இவரது செல்வாக்கு மேலோங்கிவந்தது. அரசி மேரியும் இப்பொழுது பல மாற்றங்களைச் செய்யமுனைந்தார். இவருடைய இரண்டாவது நீக்கல் சட்டம்[2] எட்டாம் ஹென்றியின் 18 சட்டங்களையும் ஆரும் எட்வர்டின் ஒரு சட்டத்தையும் நீக்கியது. போப்பாண்டவரின் அதிகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு 1528-க்குப்பின், போப்பாண்டவருக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன. ஆயினும், மடாலயங்களின் ஒழிப்புபற்றிய சட்டங்களுக்கு விலக்களிக்கப்பட்டது. 1554-ல் போப்பாண்டவரின் பிரதிநிதியாக இங்கிலாந்து வந்த போல் ஆங்கில மக்களுக்கு மன்னிப்பளித்தார். 1555-ல் மேற்றிராணியாராகிய கார்டினர் (Gardiner) இறந்தபின், மேரி அடக்குமுறை அட்டூழியத்தில்

[1] Pole

[2] Repeal Act

ஈடுபட்டார். லங்காஸ்டிரியக் காலத்திய பழைய சட்டங்கள் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டன. மற்ற நாடுகளோடு ஒப்பு நோக்கும்பொழுது மேரியின் சமய ஒழிப்பு தவருகத் தோன்றுது. ஆனல், அரசியார் இத் துறையில் வரம்புகடந்து செயல்பட்டது, சீர்திருத்தத்திற்கான மற்றொரு எதிர்வினை விற்கு ஊக்கமளித்தது. இச் சமய ஒறுப்புக்கொள்கை ரோமின்மீது வெறுப்பைத் தூண்டியதோடு, ஸ்பெயின் நாட்டின்மீது அச்சம்கொள்ளவும் உதவியது. மேரிக்குக் குழந்தைகள் இல்லாததால் இவருடைய பணிகள் தள்ளுபடியாவது உறுதியாயிற்று.

எலிசபெத் (1556—1603)

இருபத்தைந்து வயதினரான எலிசபெத் அரசியார் பல இடர்களைக் கடந்து ஆட்சிப்பொறுப்பேற்றார். தன்னடக்கப் பயிற்சியோடு அறிவாற்றலையும் பழிபாவங்களுக்கு அஞ்சாத் தன்மையையும் இவர் பெற்றிருந்தார். இயற்கையாகவே சமய உண்மைகளில் இவர் ஐயுறவு கொண்டவர். எனவே, சமயப் பூசல்களிலிருந்து ஒதுங்கி இருக்கும் திறமைபெற்றவராக இருந்தார். எதிர்ச்சமய இயக்கம் உச்சநிலையில் இருந்ததால் நிலைமை துயரம் நிறைந்ததாகவே இருந்தது. ஆயினும், அரசியாரின் நடுநிலைக்கொள்கை தற்கால ஆங்கிலிக்கன் திருச்சபையை நிறுவ உதவியாக இருந்தது.

ஆங்கிலேயர்களின் வழிபாட்டுநூல் மறுபடியும் பயன்பாட்டிற்கு வந்தது. அரசியாரின் தனிமுதன்மைச் சட்டம் மறுபடியும் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது.

வழிபாட்டுநூலில் சிறு மாற்றங்கள் செய்து அதன் வாசகங்களை 39-ஆகக் குறைத்தார். தேசியத் திருச்சபை எலிசபெத் காலத்தில் தெளிவாக வரையறை செய்யப்படவுமில்லை. இதுபற்றிய சட்டமும் இயற்றப்படவில்லை. ஆயினும், 1558-ல் இயற்றப்பட்ட சட்டம் முந்திய சட்டக்கூறுகளை ஏற்றுக்கொண்டு மேரி அரசியாரின் சட்டங்களை தள்ளுபடி செய்தது. எட்டாம் ஹென்றி, ஆரும் எட்வர்டு ஆகியோரின் சட்டங்கள் 22 மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. மேரியின் காலத்தில் இயற்றப்பட்ட முரண்சமயக் கருத்துச் சட்டமும் நீக்கப்பட்டது. ஆகவே, மேரியின் பிற்போக்குச் சட்டங்களை நீக்கிவிட்டு எட்டாம் ஹென்றியின் போப்பாண்டவருக்கெதிரான சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டன. அரசப்

பதவிக்குரிய அதிகாரமும் அதிகார வரம்பும் மீட்சி பெற்றன. எலிசபெத் அரசியாரின் சட்டம் அரசரின் தனிமுதன்மையை மிகப் பழமையான அதிகாரமாகக் காட்டியது. ஆனால், அரசப் பதவிக்குப் போப்பாண்டவரின் அதிகாரத்தைக் கொடுக்கவோ, அல்லது அதைத் தலையாயதாகச் செய்யவோ முயலவில்லை. தனிமுதன்மையின் பயனைப் பெற விரும்பினரேயன்றித் தனித் தலைமையைப் பெற விரும்பவில்லை. தலையாய ஆளுநரென்று தம்மைக் கூறிக்கொண்டாரேயன்றித் தனித்தலைவரென்று கூறிக்கொள்ளவில்லை. எட்டாம் ஹென்றியைப்போல் அரசத் தனிமுதன்மையை இவர் வலியுறுத்தவில்லை. ஆன்மீகப் பணிகளைச் செயல்படுத்தும் அளவிற்கு இவர் தம் தனி முதன்மையை உட்படுத்தவில்லை. தனிமுதன்மைச் சட்டத்தின் 17, 18-ஆம் பிரிவுகள் திருச்சபைக்குரிய அதிகார வரம்பை வரையறை செய்திருப்பினும், இவ் வதிகாரத்தை அரசப் பதவிக்குரியதாக்கின. அரசுப்பட்டயத் தனியுரிமையால் இதை அரசர் ஆணையர்களுக்களிக்க இச் சட்டம் இசைவளித்தது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியே பிற்காலத்தில் சமய உயர் ஆணை நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. இருப்பினும், அரசத் தனிமுதன்மையைப் பேணிக்கொள்ளப்போதிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. திருச்சபையினர், முறைவர்கள், நகர முதல்வர்கள் ஆகியோர் தனிமுதன்மைப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தப் பட்டது. தவறினால் பதவிகள் பறிமுதலாகும் (பிரிவுகள் 19, 22–25). 19-வது பிரிவு பிரமாணத்தின் உருவடிவைக் கொடுக்கிறது. பெரும் புரட்சிக்காலம்வரை இப் பிரமாணம் மாறுதலின்றி இருந்துவந்துள்ளது. முதலில் பிரமாணம் எடுக்க மறுத்தவர்கள் பின் பிரமாணம் செய்யும் வழிமுறையைப் பிரிவு 26 குறிப்பிடுகிறது. அரசியாரின் தனிமுதன்மையில் பாராளுமன்றம் குறுக்கிடுவதை எலிசபெத் விரும்பவில்லை.

தண்டனைகளின் கடுமையைப் பொறுத்தவரை அரசியாரின் சமய ஒருமைச்சட்டம் மற்றவைகளிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. இத் தனிமுதன்மைச்சட்டம் ஆரும் எட்வர்டின் சட்டத்தைப்போல் இருந்தது. இச் சட்டம் இங்கிலாந்தை உறுதியாகச் சமயச் சீர்திருத்தப் பாதையில் இட்டுச்சென்றது. பலரை வசப்படுத்தும் எண்ணத்தோடு ஆரும் எட்வர்டின் இரண்டாவது வழிபாட்டுச்சட்டம் நிதானமாக மாற்றியமைக்கப்பட்டது. ஆங்கிலக் குருமார் தொகுதியின் பெரும்பான்மையோர் இப்பொழுது பொதுவாக வழிபாட்டு நூலை ஏற்றுக் கொண்டார்கள். அரசின் ஒருமையை விட்டுக்கொடுக்காமல்

சமயச் சுதந்திரம் அளிக்க முடியுமென்பதை இங்கிலாந்தில் எவரும் நம்பவில்லை. ஆகவேதான் சமய ஒருமைச்சட்டமும் தேவையாயிற்று.

சமயத்தின் 39 கோட்பாடுகள், கொள்கை விளக்கத்தை நிறைவுசெய்தது. இக் கோட்பாடுகள், குருமார்கள், அரசாங்க அலுவலர்கள், பல்கலைக்கழகப் பட்டதாரிகள், வழக்கறிஞர்கள் ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கத்தோலிக்க, பிராடெஸ்டண்டு வழிபாட்டுநூல்களை எலிசபெத்தின் வழிபாட்டுநூல் இணைத்துருவாக்கியது. வழிபாடுகள் ஆங்கிலத்தில் இருந்துவந்ததால் பழைய பொது வழிபாட்டுமுறை வாசகச் சுவடியை இந் நூல் பற்றிநின்றது. பெரும் சர்ச்சைக்குரிய பொருள் விளக்கங்கள் தனியாருக்கே விடப்பட்டன. குருமார்களின் திருமணம் கண்டிக்கப்படவில்லையெனினும், மேரியின் சட்டம் முதலாம் ஜேம்ஸ் காலத்தில்தான் நீக்கப்பட்டது. மேற்றிராணியார்கள் அமர்த்தப்படும் முறை ஹென்றியின் காலத்தில் இருந்ததைப்போலவே இருந்துவந்தது. எலிசபெத் அரசியாரின் உறுதியற்ற சமய ஏற்பாடு ஒரு பெரிய சமயப் போராட்டத்தைத் தவிர்த்தது. காலப்போக்கில் ஆங்கிலேயர்கள் இவ் வேற்பாட்டை ஒரு தேசியச் சமயமாக ஏற்றுக்கொண்டார்கள். இடைக்காலத்திலிருந்து தொடர்ந்து வந்துகொண்டிருந்த திருச்சபைக்கும் அரசுக்கும் இடையேயான பூசல் இந்த ஏற்பாட்டினால் தவிர்க்கப்பட்டது. இறைமை பகுக்கப்படாத ஒன்று என்னும் எட்டாம் ஹென்றியின் கோட்பாடு, இங்கிலாந்தில் நிலைபெற்ற ஓர் அரசியலமைப்புக் கருத்தாக உருவாகியது.

திருச்சபைத் தனிமுதன்மையையும் இதன் பயனாக உருவாகிய கோட்பாடுகளையும் விதிமுறைகளையும் பேண, உயர் ஆணை நீதிமன்றமென்ற சிறப்பு நிறுவனமொன்று உருவாக்கப்பட்டது. 1559-க்கும் 1601-க்கும் இடைப்பட்ட காலத்தில் பல கட்டளைகளால் பல நீதிமன்றங்கள் அமர்த்தப்பட்டன. இவைகளை மொத்தமாக உயர் ஆணை நீதிமன்றமென வழங்குகின்றனர். எட்டாம் ஹென்றியின் காலத்தில் திருச்சபைச் சார்புடைய வழக்குவிசாரணை அதிகாரங்கள் கிராம்வெல் என்பவருக்கு ஒப்படைக்கப்பட்டன. ஒருவரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும் வழக்கம் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படவில்லை. ஆணையர்களைக்கொண்ட நிறுவனங்கள் ஆரும் எட்வர்டு காலத்திலும் மேரியின் காலத்திலும் 1547, 1551, 1557-ல் அமைக்கப்பட்டன. ஆணையர்களின் பணிகள் சட்டத்

தால் வரையறை செய்யப்படவில்லை; ஆனால், 1559-ல் எலிசபெத் அரசியாரால் அமர்த்தப்பட்ட ஆணைக்குழு சட்டத்தின் அடிப்படையில் இயங்கியது. பத்தொன்பது ஆணையர்கள் அமர்த்தப்பட்டார்கள். இவர்களில் அறுவர் கூடினால் செயல்படலாம். ஆணைக்குழு செயல்படக் குறைந்தது ஒருவராவது இருக்கவேண்டும். இவரோடு இரு மேற்றிராணியார்களும், அரசு அலுவலர் ஒருவரும், இரண்டு வழக்கறிஞர்களும் இடம் பெறவேண்டும். இத்தகைய ஆணைக்குழுக்கள் 1562, 1572, 1576-ல் அமர்த்தப்பட்டன.

இக் குழுக்கள் ஆட்சி அதிகாரங்களைச் செயல்படுத்தி வந்தன. கீழ்ப்படிய மறுக்கும் குருமார்களை அகற்றுவதும், எதிர்க்கும் மக்களை வழிக்குக் கொண்டுவருவதும், சமயக் கோட்பாடுகளுக்கு எதிரான குற்றங்களைத் தண்டிப்பதும், பத்திரிக்கைகள்மீது கட்டுப்பாடு விதிப்பதும் இவைகளின் பணிகளாக இருந்தன. தனிப்பட்ட அதிகாரங்களுக்கும் ஆட்சி அதிகாரங்களுக்கும் இடையே வேறுபாடு காண்பது அரிதாகி விட்டது. ஆணையர்கள் தகராறுகளையும் விண்ணப்பங்களையும் ஆராயத் தொடங்கினர். இவைகளை ஆராய ஒரு நடைமுறையைப் படைக்கத் தொடங்கினர். அறியாமலேயே இவர்கள் நீதிமன்ற நடைமுறைகளை வளர்த்தனர். 1570-லிருந்து இவர்கள் உயர் ஆணை நீதிமன்றமெனப் பெயர்பெறத் தொடங்கினர். பிரிவி கவுன்சிலிலிருந்தும் மற்ற நீதிமன்றங்களிலிருந்தும் தனிப்பட்டுச்சுயேச்சையான நியாயச்சபையாக இது மாறியது. 1583-ல் உயர் ஆணை நீதிமன்றம் மாற்றியமைக்கப்பட்டது. தண்டனை அளிக்கும் பணியில் இந் நீதிமன்றம் திருச்சபை நீதிமன்றங்களின் பணிக்குத் துணை நின்றது. திருச்சபையின் அதிகாரங்களை அரசப் பதவியின் சார்பில் ஏற்றுச் செயல்படுத்தியதால் இது அரசின் ஒரு கருவியாக இருந்தது. திருச்சபை நீதிமன்றங்களிலிருந்து வரும் மேன்முறையீட்டு வழக்குகள் ஆட்பேர் உயர்நீதிமன்றத்திடம் விடப்பட்டன. துருவி ஆராயும் இந் நீதிமன்றத்தின் நடைமுறை பெரும் எதிர்ப்பிற்குள்ளாகியது. குற்றச்சாட்டில் சிக்கவைக்கும் வினாக்களை நீதிபதிகள் குற்றவாளிகளைக் கேட்டனர். இந் நடைமுறைக்கு செசில், அதிமேற்றிராணியாராகிய விட்கிப்ட் (whitgift) என்பவரிடம் எதிர்ப்புத் தெரிவித்தார். ஆனால், இதை விட்கிப்ட் பொருட்படுத்தவில்லை.[1]

[1] Prothero, 213, 214 Tanner, 373—4

உரிமை இழந்த குருமார்களின் சார்பில் பொதுமக்கள் சபை 1584-ல் அரசியாரிடம் விண்ணப்பம் செய்தது. பின், திருச்சபையின் சடங்குமுறையைச் சட்டத்தால் மாற்ற சபை முற்பட்டபொழுது அரசியாரின் அச்சுறுத்தலைப் பெற்றது.[1] 1587-ல் வழிபாட்டையும் ஒழுங்குமுறையையும் மாற்றியமைக்கத் தீவிரவாதி கோப்[2] என்பவரால் கொண்டுவரப்பட்ட மசோதாவையொட்டிய விவாதங்களை அரசியார் தடை செய்து ஒடுக்கியதோடு திருச்சபையைத் திருத்தியமைக்கும் அதிகாரம் தமக்கும் குருமார்களுக்கும் மட்டுமே உண்டென வலியுறுத்தினர். இப்பொழுது அரசியார் குருமார்களையும் மேற்றிராணியார்களையும் வசப்படுத்திக் கொண்டிருந்தார். தீவிரவாதம் திருச்சபைக்குள் குறைந்துகொண்டுவந்தது. திருச்சபைக்கு வெளியே, அரசத் தனிமுதன்மையை எந்த உருவிலும் வடிவிலும் வன்மையாக எதிர்க்கும் கருத்துகள் வளர்ந்தன; திருச்சபை விவகாரங்களில் உலகியல் அதிகாரங்கள் மறுக்கப்பட்டன; ஒரே தேசியத் திருச்சபைபற்றிய கருத்தும் மறுதலிக்கப்பட்டது. பாராளுமன்றம் ஆதரிக்க இயலாத வகையில் இத்தகைய கருத்துகள் வரம்பு மீறிக் கொண்டிருந்தன. பிரிந்துசெல் விருப்பமும், சில நடவடிக்கைகளின் காரணமாக ஆதரவிழந்தது. நிறுவப்பெற்ற திருச்சபையை ஏற்க மறுப்பவர்களுக்கெதிராக 1592-ல் பாராளுமன்றம் சட்டமியற்றியது. சமயத் தனிக்குழுத் தலைவர்களாகிய பாரோ[3], கிரீன்வுட்[4], பென்ரி[5] போன்றோர் இச்சட்டத்தால் மரணதண்டனைக்குள்ளானார்கள். இவர்களைப் பின்பற்றிய பலர் ஓடிமறைந்து தண்டனையிலிருந்து தப்பினர். திருச்சபைக்குள்ளிருந்த தீவிரவாதிகளின் வளர்ச்சிபற்றிய பொதுமக்கள் சபையின் அக்கறையும் குறைந்தது. இவர்கள் சார்பில் 1589, 1593, 1597, 1601-ல் பொதுமக்கள் சபை நடவடிக்கை மேற்கொள்ள முயன்றபோது, திருச்சபையின் தனிமுதன்மையைப் பாதிக்கும்செயல்களைச் சபை மேற்கொள்வதை அரசியார் அனுமதிக்கக் கண்டிப்பாக மறுத்துவிட்டார். பிராடெஸ்டெண்டுகளின் மிக நெருங்கிய ஆதரவாளர்கள் பயனுரமில்லாச் சிறுபான்மையினராகவே இருந்துவந்தனர்.

[1] Prothero, 215 Tanner, 191-4

[2] Cope

[3] Barrow

[4] Greenwood

[5] Penry

நீண்ட ஆட்சிக்கால இறுதியில் நிலை ஒருவாறு திருந்தியது. வன்கண்மை தன் பணிகளைச் செய்துமுடித்ததாகத் தோன்றியது. அரசப்பதவி, படிநிலையமைப்பு, குருமார் திருக்கூட்டம் ஆகியவை இணைந்து செயல்பட்டன. பாராளுமன்றம் எதையும் செய்துவிடவில்லை. ஆயினும், இணக்கம் வன்கண்மையினால் தான் உருவாகியது என வாதிப்பது நேர்மையாகாது. இப்பொழுது வளர்ந்துகொண்டிருந்த தலைமுறைக்கு, எலிசபெத்தின் திருச்சபை அரசியல் நோக்கத்திற்காகச் செயல்படுத்தப்பட்ட ஓர் இணக்கமட்டுமின்றி, அரசின் வன்கண்மையால் பேணப்பட்டதாகவும் இருந்தது. ஆயினும், நாட்டில் நிலவிய உண்மையான சமயக் கருத்துணர்வாகவும் இது இருந்தது. சமயநூலுக்கு ஓர் ஆதாரத்தைக் கிறித்துவ வரலாற்றிலும் மக்கள் சமூக இயலிலும் காண இத் தலைமுறையினர் தொடங்கினர். ஹூக்கர்[1] என்பாரின் "திருச்சபை அமைப்பு முறை" என்னும் நூலில் இத்தகைய கருத்துகள் மிகத் தெளிவாக்கப்பட்டுள்ளன. ஆகவே, இதன் நிலைபற்றிய ஒரு கருத்தாக்கத்தை இது ஆங்கிலிக்கன் திருச்சபைக்கு ஊட்டியது. கடந்தகாலத்தைக்கொண்டு இதை மெய்ப்பிக்க முடியாதென்றாலும், இதன் வருங்காலத்தை இதனால் உருவாக்கிக் கொள்ளவியலும். இதன் தேசிய நிலையும் அகல் விரிவான தன்மையும் இயல்பானதேயாகும். எலிசபெத்தின் காலத்தில் மலர்ந்த நாட்டுப்பற்று, ஒற்றுமை ஆகிய உணர்ச்சிகளை இது வெளிப்படுத்தியது. வழக்கமான அழகான வழிபாட்டு முறைகள், வழிபாட்டை நடத்தியவர்களின்மீதும், கேட்டவர்கள்மீதும் அன்புகொள்ளச் செய்தன. திருச்சபை பேணப்பட்ட முறை குருமார்களுக்கும், நாட்டுமக்களுக்கும் உகந்ததாக இருந்தது. அரசத் தனிமுதன்மை நன்முகப் பேணப்படுமாயின் வெற்றிகரமாகப் பாதுகாக்கப்படலாம்.[2]

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Pickthorn	:	Henry VIII
A. Savine	.	English Monasteries on the eve of the Dissolution
Tanner	:	Constitutional Documents.

[1] Hooker

[2] F. J. Shirley, "Richard Hooker and contemporary Political Ideas"

Powicke	:	Reformation in England.
Fisher	:	Political History of England.
Child	:	Church and state under the Tudors.
Gardiner	:	History of the English church from Henry VIII to Mary.
Pollard	:	History of England.
Bayne	:	The First House of Commons.
Neale	:	Elizabethan Acts of Supremacy and Uniformity.
Prothero	:	Documents.

6. அரசப் பதவிபற்றிய ஸ்டூவர்ட்டுகளின் கோட்பாடு

பதினேழாம் நூற்றாண்டின் அரசியலமைப்பு வரலாறு, "இறுதியான இறைமை" பற்றியதாக இருந்தது. தேசியக் கொள்கைபற்றிய இறுதியான முடிவை யார் செய்வது? அல்லது பாராளுமன்றத்தின் வழியாக இறைமை அதிகாரம் உருவாகிறதா? எனவும் கேட்கலாம். அரசரின் சட்ட ஆக்க அதிகாரம் பாராளுமன்றத்தின் வழியாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்பது இக் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அரசியலமைப்புக் கருத்தாக இருந்தது. ஆனால், அரசரின் நிருவாக அதிகாரம் பெரும்பாலும் பாராளுமன்றத்தின் கட்டுப் பாட்டிற்கு உட்படாமலிருந்தது. நிதியதிகாரத்தைச் செயல் படுத்தியே பொதுமக்கள் சபை அரசரின் கொள்கைமீது கட்டுப்பாடு செலுத்தமுடிந்தது. ஆகவே, இக் காலத்திய சர்ச்சைகள் பெருமளவு நிதிப்பிரச்சினைகள்பற்றியதாக இருந்தன. பாராளுமன்றத்தின் வரிவிதிப்பு அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளாமல் அரசரால் போதிய வருவாய் திரட்ட முடியுமென்றால் இவர் நடைமுறையில் ஒரு வல் லாட்சியை நிறுவ முற்படலாம். முதலிலிருந்தே இத்தகைய ஓர் இடரைப்பற்றிப் பாராளுமன்றம் விழிப்புடன் இருந்து வந்தது. சப்ஸிகள்மீதான கட்டுப்பாட்டை இது பற்றி நின்றது.

டியூடர்களின் ஆட்சியின்கீழ் மக்கள் சார்புடைய வல்லாட்சி யொன்று நிறுவப்பட்டிருந்தது. இதே சமயத்தில் அரசிய லமைப்பின் உருவமைப்பு அப்படியே கட்டிக்காக்கப்பட்டது. இவ் வல்லாட்சியை உருவாக்கிய காரணங்கள் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தோடு படிப்படியாக மறையத் தொடங்கின. இங்கிலாந்தில், ரோமானியத் திருச்சபையின் எதிர்விளைகள் மறைந்தன. ரோமானியத் திருச்சபை இப் பொழுது சமயப்பொறையை நாடியது. இயலுமாயின்,

இதை அளிக்க ஸ்டுவர்ட்டு மன்னர்கள் தயங்கியிருக்க மாட்டார்கள். எலிசபெத் அரசியாரின் காலத்திய அரசியல் அறிஞர்கள் போப்பாண்டவரது ஆதரவாளர்களின் கலகத்திற்கு அஞ்சினார்களெனின், ஸ்டுவர்ட்டுகளின் காலத்திய அரசியல் அறிஞர்கள் போப் ஆதரவாளர்களின் சதியைக் கண்டு அஞ்சினார்கள். மக்கள் ஆதரவை இழந்துவிட்ட துணிச்சல் வீரனாகிய டைட்டஸ் ஒட்ஸ்[1] மறைந்தபின் அச்சமும் அகன்றது. சுதந்திர ஹாலந்தின் உதயமும், உள்நாட்டில் ∴பிரான்சு பின்பற்றிய சமயப்பொறைக் கொள்கையும், வெளி நாட்டுப் பிராடெஸ்டெண்டு நாடுகளுடனை கூட்டும், இங்கிலாந்தை வெளியார் தாக்கும் அச்சத்திலிருந்து மீட்டன. இங்கிலாந்து சொந்தமுறையில் ஸ்காட்லாந்தோடு இணைந்தது. எல்லைக்காப்பிலிருந்து தாக்கப்படும் அச்சத்திற்குக் காப்புறுதியாக அமைந்தது.

மேலும், சட்ட ஆக்கம், வரிவிதிப்பு ஆகியவைகளின் மீதான பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் டியூடர்களின் காலத்தில் வலுப்பெற்றன. எட்டாம் ஹென்றியின் பாராளுமன்றங்கள் தம் ஆட்சி எல்லைக்குள், பதினேழாம் நூற்றாண்டின் ஸ்டுவர்ட்டுகளின் பாராளுமன்றங்களைப்போல், தம் உரிமைகள்பற்றிப் பெரும் அக்கறைகொண்டிருந்தன. உண்மையான அரசாங்கப் பணிகளை அரசரிடம் விட்டுவிட இவை விரும்பின. ஏனெனில், அரசரின் கொள்கை பெரும்பாலும் இவைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

பழைய பெருங்குடிமக்களை டியூடர்களின் காலம் தாழ்த்தியது. ஆனால், வணிக வகுப்பினருக்கும் இடைநிலை வகுப்பினருக்கும் இக் காலம் ஒரு புதிய சிறப்புநிலையை அளித்தது. வணிக வளர்ச்சியும் நில அடைப்புகளோடு தொடர்புடைய வேளாண்மை மாற்றங்களும் இவர்களின் செல்வத்தைப் பெருக்க உதவின. ஆயினும், இக்காலத்திய சமயச் சச்சரவுகளால் ஒரு விழிப்புணர்வு மனத்தில் ஏற்பட்டது. விரைவில் இது அரசியலையும் சமயத்தையும் பாதிக்கத் தொடங்கியது.

அரசரின் நிருவாக அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்த முறை பெருந்தொல்லையையும் கொள்கைப் பிணக்கையும் உண்டாக்கியது. அது இரண்டு காரணங்களால் அதிகரித்தது. இவைகளில் ஒன்று சமயச்

[1] Titus Oates

சர்ச்சைகளாகும். இதனுடன் தொடர்புடைய மற்றொன்று, அரசரின் ஆதரவாளர்களாகிய திருச்சபையினராலும் சட்ட அறிஞர்களாலும் வளர்க்கப்பட்ட இறையுரிமைக் கோட்பாடாகும்.

எலிசபெத் அரசியாரின் காலத்தில் பியூரிடானிசம் படிப்படியாக அரசியல் சிறப்புப்பெற்றது. வணிக வகுப்பினரிடையே இது வலிமையான இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இவர்களின் கருத்துகள் பொதுமக்கள் சபையில் எடுத்துரைக்கப்பட்டன. பியூரிட்டன் கட்சியினருக்கும் ஆங்கிலத் திருச்சபையின் அலுவல் சார்புடைய தலைவர்களுக்குமிடையேயான பிளவு விரிவடைந்ததும் திருச்சபை எதிர்த்திசை நோக்கிச் செல்லத்தொடங்கியது. அந்துருஸ்[1] என்பவரோடு தொடங்கிய "உயர் திருச்சபை" எதிர்வினைச் செயல் லாட்[2] என்பவரின்கீழ் உச்சநிலையை அடைந்து பியூரிடானிசத்தை நேரடியாக எதிர்த்தது.

தம்முடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே முதலாம் ஜேம்ஸ் திருச்சபையின் அதிகாரப்பூர்வமான கொள்கையை ஆதரிக்க உறுதிபூண்டார். ஸ்டுவர்ட்டுகளுக்கும் திருச்சபைகளுக்கும் இடையேயான இச் "செயற்கூட்டு" இருதரப்பினருக்கும் இறுதியில் பேரிடராக மாறியது. இது திருச்சபையை அரசியல் தொடர்புகளுக்குட்படுத்தியது. இதிலிருந்து திருச்சபை தன்னை விடுவித்துக்கொள்ள இயலவில்லை அரசரிடமிருந்து ஒரு பெரும் பிரிவினரை இது பிரித்தது. இவர்களுக்கு உயர் திருச்சபையின் நிலை, உருமாறிய ரோமனிசத்தைவிட, மேலாகத் தோன்றவில்லை. வரிவிதிப்புபற்றி ஸ்டுவர்ட்டுகளின் பாராளுமன்றம் வன்மையான கருத்துடையதாக இருந்ததோடு, தேசியச் சமயம் ரோமை நோக்கி விலகிச்செல்லும் போக்கைப்பற்றி மேலும் வன்மையான கருத்துடையதாக இருந்தது.

ஸ்டுவர்ட்டுகளின் இறையுரிமைக் கோட்பாடு சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விளைவாகும். போப்பின் கோரிக்கைகளை மறுதலிக்கும் இவர்களின் முயற்சிகளில், ஐரோப்பியச் சமயச் சீர்திருத்தவாதிகள் சமயச்சார்பில்லா அதிகாரத்தின் சமய இயல்புகளை வலியுறுத்தினர். போப் பாண்டவர்

[1] Andrews

[2] Laud

எலிசபெத் அரசியாரைச் சமயவிலக்குச் செய்தபோதும் குடிமக்கள் அரசியார்மீது கொண்டிருந்த பற்றுறுதியை அகற்றியபொழுதும் பணியும் கடமை அரசியாரின் இறையுரிமையில் நிலைபெற்றிருப்பதாக ஆங்கிலநாட்டுப்பற்று வலியுறுத்தியது. ஸ்காட்லாந்திய மேரி அரசியாரின் காலத்தில் மரபுரிமைக் கோட்பாடு வெளிப்படையாக வற்புறுத்தப்பட்வில்லை. ஆனல், இவர் இறந்தபின், மரபுவழி அரசுரிமையெய்துதல் இறைவனின் விருப்பென இக் கோட்பாடு குறிப்பிட்டது. இவருடைய அரசுரிமையைத் தடைசெய்யும் வகையில் இரு சட்டங்கள் நிறைவேறியிருப்பினும், முதலாம் ஜேம்ஸின் வாத எதிர்ப்பற்ற அரசுரிமை மரபுவழிக் கருத்திற்குப் பெரும் வெற்றியாகும். உரிமை அறிவிப்புச் சட்ட உருவில் ஸ்டூவர்ட்டுகளின் அரசுரிமையைப் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது. "பிறப்புரிமையால் அரசர் முடியரசைப் பெறுகிறார்" என்றும் "இரத்த உறவுவழி வந்தவ"ரென்றும் இச் சட்டம் வலியுறுத்தியது.

தம்முடைய முன்னோர்கள் பெற்றுச் செயல்படுத்திய அதிகாரத்தில் மனநிறைவு கொள்ளாமல் ஜேம்ஸ் அரசப்பதவி பற்றிய ஒரு கோட்பாட்டை வலியுறுத்தினர். இக் கோட்பாடு அரசரை ஓர் அசைக்கமுடியாத நிலையில் வைத்தது. ஆங்கில அரசுரிமையைப் பெறுவதற்கு முன்னரே சட்டத்திற்குமேல் இவருடைய தனிமுதன்மை நிலையை இவர் எடுத்துரைத்தார். "சட்டத்திற்கு அப்பாற்பட்டவராக இருந்தாலும், ஒரு நல்ல அரசர் தம் செயற்பாடுகளைத் தம் சொந்தவிருப்பில் குடிமக்கள் நலனுக்கு உட்படுத்திவரைந்துகொள்ளுவார்; ஆனல், அதற்குட்படவோ, கட்டுப்படவோ மாட்டார்". 1616-ல் இவர் விண்மீன் நீதிமன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவொன்றில், "கடவுள் என்ன செய்யக்கூடுமென்பதை மறுத்துரைப்பது நாத்திகம் அல்லது தெய்வநிந்தனை ஆகும். கடவுளுடைய சொல்லில் வெளிப்படும் விருப்பில் நல்ல கிறித்துவர்கள் மனநிறைவுகொள்ள வேண்டும். ஓர் அரசர் என்ன செய்யக்கூடும் அல்லது சொல்லக்கூடும், அல்லது இதை அல்லது அதை ஓர் அரசர் செய்யக் கூடாதெனவும் மறுத்துரை செய்வது கடுங்குற்றமென"க் கூறினர். "அரசர் வெளியிடும் விருப்பில்தான் சட்டம் இருக்கிற"தெனவும் கூறினர். அரசத்தனியாட்சிக் கருத்து வலியுறுத்தப்பட்டதைத் திருச்சபையினரும் சட்ட அறிஞர்களும் ஆதரித்தார்கள். "உயர் திருச்சபை"க் கட்சியின் தலைவர்கள் "எதிர்ப்பில்லாப் பணிவு"க் கோட்பாட்டைக் கற்பித்தார்கள். கடவுளுக்கு மட்டுமே பொறுப்புடைய அரசரின் அதிகாரத்

திற்கான எதிர்ப்பை எச் சூழ்நிலைகளாலும் மெய்ப்பிக்க முடியாது.

அரசரின் சொந்த அதிகாரத்தை உயர்த்துவதில் திருச் சபையினரோடு நீதிபதிகளும் முந்திக்கொண்டார்கள். அரசியலமைப்பின் பாதுகாவலராகவும் பொருள் விளக்குநராகவும் நீதிமன்றங்கள் செயல்பட்டன. ஆனால், ஆங்கில அரசியலமைப்பு, சட்டத்தாலன்றி மரபுகளால் தோற்றுவிக்கப்பட்டது. இம் மரபுகளும் படிப்படியாக வளர்ந்தவைகளே. சட்டப்படி ஸ்டுவர்ட்டுகளின் காலத்திய நீதிபதிகளின் முடிவுகள் சரியானவைகளாக இருந்திருக்கலாம். ஆனால், எழுத்துருலமையா உடன்பாடுகளோக் கொண்டமைந்த அரசாங்கமுறைக்கு இவை பொருந்தா. கோக்[1] தலைமை நீதிபதியாக இருக்கையில், பொதுச்சட்டத்தின்பால் இவர் கொண்டிருந்த மதிப்பு ஸ்டுவர்ட்டுகளின் தனிமுதன்மைக் கோட்பாட்டை ஏற்க மறுத்தது. ஆனால், 1616-ல் இவர் பதவி நீக்கப்பட்டபின், அரசியலமைப்பு வழக்குகளின் தீர்ப்புகள் அரசரின் கருத்துகளுக்கிணங்கவே இருந்தன. இதற்கு முன்னரும்கூட, கால்வினின்[2] வழக்கில், அரசருக்குப் பற்றுறுதி சொந்தமுறையில் அளிக்கப்படுகிறதென்றும், இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும் ஜேம்ஸ் அரசராக இருந்தார் என்ற உண்மை ஒவ்வொரு ஸ்காட்லாந்தியரையும் ஓர் ஆங்கிலேயராக்கியதென்றும் நீதிபதிகள் முடிவுசெய்தார்கள். இறைமையுரிமையைப் பாதிக்கும் எதிலும் அரசர்கள் தமக்குப் பின் வருபவர்களோக் கட்டுப்படுத்தலாகாதெனப் பேட்[3] வழக்கில் முடிவுசெய்யப்பட்டது. வழக்குகளோ விசாரிக்க அரசர் சொந்தமுறையில் அமரும் உரிமையைக் கோக் ஏற்க மறுத்துவிட்டார். மேலும், பேரறிக்கைகளைப் பயன்படுத்தி அரசர் புதிய குற்றங்களைப் படைக்கலாகா. நீதிமன்ற அலுவல்களில் அரசர் தலையிடும் முயற்சிகளோ இவர் வெளிப்படையாக எதிர்த்தார்.

இக் காலத்திய நீதிமன்றத் தீர்ப்புகள் உடனடியான பிரச்சினைகளைச் சார்ந்திருந்தன என்பதைவிட நீதிபதிகள் தம் முடிவுகளுக்கு அரசரின் சிறப்பதிகாரங்களோ எப்படி வரையறை செய்தார்கள் என்பதில்தான் சிறப்பு காணப்பட்டது.

[1] Coke

[2] Calvin

[3] Bate

எடுத்துக்காட்டாக, பேட்டின் வழக்கில், அரசருடைய அதிகாரம் இயல்பானதெனவும் முழுமையானதெனவும் இரு வகையாக வரையறை செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம். குறிப்பிட்ட சிலரின் நலனுக்காகச் சாதாரண நீதிமன்றங்களில் சிவில் நீதியைச் செயல்படுத்துவதற்காகவும் இவருடைய சாதாரண அதிகாரம் பயன்படுத்தப்பட்டது. மாறாக, அரசரின் முழுமையான அதிகாரம் குறிப்பிட்ட சிலரின் நலனுக்காக அன்றி, மக்களின் பொதுநலனுக்காகப் பயன்படுத்தப்பட்டது. மேலும், கப்பற்பண வழக்கில், நாட்டின் பாதுகாப்பிற்காக அரசர் குடிமக்களின் மீது வரிவிதிக்கலாமெனக் கப்பற்பண வழக்கில் முடிவாயிற்று. பாராளுமன்றத்தின் சட்டமாக இருந்தபோதிலும், அரசருடைய சிறப்பதிகாரங்களுக்குப் பாதகமான சட்டங்களாக இருந்தபோதிலும் இவை அரசைக் கட்டுப்படுத்தா. மேலும், தேவையானபோது அரசர் எந்தச் சட்டத்தையும் விலக்கிவிடலாம்.

இத்தகைய கருத்துகளைக்கொண்டிருந்த நீதிபதிகள், நிருவாகத்திற்கு எதிராக மக்களுக்கு எத்தகைய பாதுகாப்பையும் அளிக்க முடியவில்லை. ஆள்கொணர் ஆணைகளி[1]லிருந்து மீள, அரசரின் தனிமுறைக் கட்டளைகள் போதுமானவைகளாகக் கருதப்பட்டபொழுது காரணமின்றிச் சிறைப்படுத்துவது எளிதாயிற்று. சாதாரண நீதிமன்றங்களோடு விண்மீன் நீதிமன்றத்தை நிருவாகம் ஒரு பயங்கரமான கருவியாகப் பயன்படுத்திவந்தது. ஸ்டுவர்ட்டுகளின் ஆட்சிக் காலத் தொடக்கத்தின்போது சாதாரணச் சட்டங்களை மீறும் வகையில் நிருவாக அதிகாரத்தைச் செயற்படுத்தும் கருவியாக இது இருந்தது.

முதலிலிருந்தே, பாராளுமன்றம் பிரச்சினைகளின் தன்மையை அறிந்துகொண்டிருந்தது. ஆனால், ஜேம்ஸ் உயிரோடு இருக்கையில் இவருக்குமுன் ஆட்சிசெய்தவர்கள் காலத்தில் அரசப்பதவி பெற்றிருந்த பெருமையை இவரும் பெருமளவு பெற்றிருந்தார். தேசியச் சமயத்தின் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் கடுமையான சச்சரவு எழுந்தது. பாராளுமன்றம் இதில் தன் பங்கை வலியுறுத்தியது. வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஐரோப்பியப் பிராடெஸ்டண்டுகளின் சார்பில் அரசர் செயலார்வம் காட்டவேண்டுமெனப் பாராளுமன்றம் விரும்பியது. ஆயினும், இதற்கான

[1] Habeas Corpus

நிதியுதவியளிக்கப் பாராளுமன்றம் தயக்கம் காட்டியது. ஸ்பெயினோடு ஜேம்ஸ் மேற்கொண்ட நட்புடன்பாட்டிற்கான திட்டங்களுக்குப் பாராளுமன்றம் வன்மையாக வெறுத்தது, தந்தையைக்காட்டிலும் முதலாம் சார்லஸ் சிறந்தவர். ஆனல். விட்டுக்கொடுக்கவேண்டியபொழுது விடாப்பிடியாகவும் உறுதியாக இருக்கவேண்டிய நேரத்தில் உறுதியற்றும் நடந்து கொண்டார். இவருடைய உறுதியான, உண்மையான சமய நம்பிக்கைகூட இவரது அழிவிற்குதவியது. இவருடைய ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் பக்கிங்ஹாமின் தவருன அரசியல் அறிவுரையால் தப்பான வழியில் சென்ருர். வென்ட் வொர்த்தின் மிகச்சிறந்த அறிவுரை கிட்டியபோது உறுதியான ஓர் இடத்தை அடையப்போவதாகத் தோன்றியது. ஸ்காட் லாந்தின் திருச்சபைக் கலகங்கள் மேற்றிராணியார்களின் போரில் கொண்டுவிட்டன. கலகம் செய்யும் குடிமக்களை அடக்கும்பொருட்டு நிதியுதவியளிக்கும் பாராளுமன்றத்தை எப்படியும் நல்லபடியாக வைத்துக்கொள்ளவேண்டியதன் தேவையைச் சார்லஸ் உணர்ந்தார்.

இறையுரிமைக் கோட்பாட்டையும், மறுக்கமுடியாத மரபு வழி அரசுரிமையையும் எதிர்க்கக்கூடாத் தன்மையையும் முன்னிலை மீட்சி மறுபடியும் கொண்டுவந்தது. ஆனல், இக் கோட்பாடுகளின் அடிப்படையை முந்திய காலத்தின் நிகழ்ச்சிகள் தகர்த்தன. முன்னிலை மீட்சிக்காலத்திய முடியாட்சியைப் போற்றிப் பாராட்டிய இரு அரசியல் அறிஞர்களும் இதற்காதரவாகப் புதிய காரணங்களை ஆராய்ந்தனர். பல ஆண்டுகளுக்குமுன் ∴பில்மரால்[1] எழுதப்பட்ட பாட்ரியார்க்[2] என்ற நூல் 1681-ல் வெளியானது. குடும்பத்தின்மீது தந்தையின் பழமையான உரிமைகளின் அடிப்படையில் கோனுட்சியின் கோரிக்கைகளை ∴பில்மர் நிலைநிறுத்தினர். ஹாப்ஸ்[3] என்பவரோ, தம் நூலில், (Leviathan) மக்களாட்சி அடிப்படையில் முழுமையான கோனுட்சிக் கோட்பாட்டை உருவாக்க முயன்ருர். இக் கோட்பாட்டின்படி, அரசரின் அதிகாரம் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்படுகிறது. இதன்படி, பழமையான சமூகத்தின் உறுப்பினர்கள் தம்மைக் காத்துக்கொள்ள ஒன்றுகூடி ஓர் அரசரை அமர்த்தினர்கள்.

[1] Filmer
[2] Patriarcha
[3] Hobbes

அரசியல் சமூகம் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டதெனும் கருத்து ஹூக்கர்[1], மில்டன்[2] போன்ற வர்களின் காலத்திற்குரியதாகும். முன்னிலை மீட்சிக்காலத் தில் விக் அரசியல் சிந்தனையாளர்களால் இது வளர்க்கப் பட்டது. மக்களின் விருப்பில் அரசியலமைப்பு முறையிலான கோளாட்சி நிலைபெறுவதற்கான வாதமாகும் இது. லாக்கின்[3] அரசாங்கம்பற்றிய ஆய்வுக்கட்டுரை புரட்சிக்கான அடிப் படை நியாயத்திற்கு வழிசெய்கிறது. ஸ்டுவர்ட்டுகளின் இறையுரிமைக் கோட்பாட்டிற்கு இது இறுதியான ஒரு முடிவைக் கொண்டுவந்தது. தன்முனைப்பான ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் பாராளுமன்றத் தலைவர்கள், நிருவாகத்தின் அதிகாரங்களை வரையறைசெய்வதில் உண்மையான பரிகாரம் காணவில்லையெனினும், அரசரின் அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையராதல் வேண்டுமென்பதை அறிந்திருந்தார்கள். முன்னிலைமீட்சிக் காலத்தில், அரசருக்கு ஓர் அமைச்சர் அறிவுரை வழங்குவதற் கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டுமெனும் கருத்து, கிளாரண்டன்[4] மீது தொடரப்படவிருந்த கடுங்குற்ற விசாரணை யாலும் டான்பியின்[5] மீதான கடுங்குற்ற விசாரணையாலும் வலியுறுத்தப்பட்டது. அமைச்சுப்பொறுப்பின் விளைவாக அரசரின் பொறுப்பின்மை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது இங்நாட்டு வரலாற்றின் பிற்பகுதிக்குரியதாகவும் பத்தொன் பதாம் நூற்றாண்டின் தொடக்ககாலம்வரை முடிவுபெற்ற தாகவும் கூறவியலாது.

முதலாம் ஜேம்ஸ் மன்னரும் பாராளுமன்றமும் (1603—1625)

ஸ்டுவர்ட்டு அரசர்களின் காலத்தில் பாராளுமன்றத் திற்கும் அரசர்களுக்கும் மோதல் ஏற்பட்டது.

வலிமையான முடியாட்சிக்கான தேவை இப்பொழுது ஏற்படவில்லை. காலம் மாறிக்கொண்டிருந்தது. நிருவாகத் திடம் எப்பொழுதும்போல் பெருமளவு அதிகாரம் நிலைபெற் றிருந்தது. இந்த அதிகாரத்தின்மீது பாராளுமன்றம் கட்டுப் பாடு செலுத்தமுடியாமல் இருந்தது. 17-ஆம் நூற்றாண்டின்

[1] Hooker
[2] Milton
[3] Locke
[4] Clarendon
[5] Danby

தொடக்கத்தில் இந்த அதிகாரம் அரசரிடமிருந்தது. ஆனால், இந் நூற்றாண்டின் இறுதியில் இது பொறுப்புடைய அமைச்சர் களிடமிருந்தது. இந்த மாற்றத்தைப்பற்றித்தான் நாம் சில செய்திகளை அடுத்த சில அதிகாரங்களில் பார்க்க இருக் கிறோம்.

முதலாம் ஜேம்ஸ் அரியணையேறியது இங்கிலாந்தின் வரலாற்றில் ஒரு முறிவை ஏற்படுத்தவில்லையெனினும், அரசியல் வாழ்க்கைச் சூழ்நிலை படிப்படியாக மாறியது. ராபர்ட் செசில்[1] பிரதமராக இருக்கையில் எலிசபெத் ஆட்சிக் காலத்திய மரபுகள் பேணப்பட்டன. இவர் இறந்தபின் (1612) கொள்கையற்ற சிலர் அரசின் கொள்கையைச் செயல்படுத் தியபொழுது அரசருக்கும் மக்களுக்குமிடையில் நம்பிக்கை யின்மையும் தீய உணர்வுகளும் பரவின.

வெளியார் தாக்குதல் அச்சம் இப்பொழுது இல்லை. ஸ்காட்லாந்தின் அரசர் ஆரும் ஜேம்ஸ் இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் என்னும் பட்டப்பெயரில் அரியணையேறிய பொழுது சுதந்திர ஸ்காட்லாந்துப் பிரச்சினை மறைந்துபோய் விட்டது. வலிமைபெற்றிருந்த முக்கியமான கத்தோலிக்க அரசாகிய ஸ்பெயினும் வலிவிழந்து காணப்பட்டது. உள் நாட்டில் குழப்பநிலையும் நிலவவில்லை. திருச்சபையையும் பெருங்குடியினரையும் டியூடர் மன்னர்கள் சிதைத்துவிட்டிருந் தார்கள். உள்நாட்டுப்போர் அச்சமும் பெருங்குடியினரின் கலகப்போக்கும் இப்பொழுது மறைந்துவிட்டதெனலாம். முதலாம் ஜேம்ஸின் எதிர்ப்பில்லா அரசுரிமை, வாரிசுரிமைக் கான எல்லா இடர்களையும் நீக்கிவிட்டது. ஆங்கிலிக்கன் திருச் சபை நிறுவப்பட்டபின், போப்பாண்டவரின் ஆதிக்கம் குறைந்தது. எலிசபெத்தின் நீண்ட ஆட்சிக்காலத்தில் குடி மக்களில் பெரும்பாலோர் தேசியத் திருச்சபையின் ஆட்சி வரம்பிற்குள் வந்தார்கள்.

இதே சமயத்தில், மக்களின் மனப்போக்கிலும் மாற்றம் காணப்பட்டது. தொடர்ந்து முழு வல்லாட்சியை ஏற்றுக் கொள்ள இவர்கள் விரும்பவில்லை. டியூடர்களின்கீழ், நடுத்தர வகுப்பினரின் செல்வம் வளர்ச்சியடைந்தது. அரசரிடமிருந்து பொருளாதாரச் செல்வாக்கு இப்பொழுது இவர்கள் கைக்கு மாறியது. மக்களில் செல்வாக்குமிக்க வகுப்பினராகிய நிலக்கிழார்களும் வணிகர்களும் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்

[1] Robert Cecil

கொள்ளத்தொடங்கினர்கள். தல ஆட்சியிலும் பாராளு மன்றத்திலும் இவர்கள் பெரும் செல்வாக்குப் பெற்றிருந் தார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் அமைதிகாண் நீதிபதிகளாக இருந்து, அரசின் செயல்முறைகளில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார்கள். பெருங்குடிமக்களின் அரசியல் செல்வாக்கைத் தவிர்க்க, நிலக்கிழார்களையும் வணிக மக்களை யும் அரசியல் சிறப்புநிலைக்கு டியூடர்கள் உயர்த்தினர்கள். மறுமலர்ச்சி இயக்கம் காரணமாக மக்களிடையே அரசாங்க முறைபற்றிய விழிப்புணர்வு காணப்பட்டது. ஸ்டூவர்ட்டு களின் காலத்தில் இறையுரிமைக் கோட்பாடு உச்சகட்டத்தை அடைந்திருந்தது. ஆங்கிலிக்கன் திருச்சபையினரால் வளர்க் கப்பட்ட இறையுரிமைக் கோட்பாடு மரபுவழி முடியாட்சியைக் கடவுளின் இசைவுபெற்ற ஒரு நிறுவனமெனக் குறிப்பிட்டது. முதல் மகவு அரசுரிமை பெறுதலே இறைவனின் கட்டளையென மக்கள் நம்பினர்கள். அரசரின் அதிகாரங்கள் எல்லையில்லா தவையென்றும், அரசரின் முறையான இவ் வுரிமைகளையும் அதிகாரங்களையும் எவரும் மறுக்கமுடியாது என்றும், அரச அதிகாரங்கள் சட்டங்களால் வரையறை செய்யப்படுவது அரசர் விரும்பியளிக்கும் சலுகைகளே என்றும், எதிர்ப்பின்றிப் பணிதல் குடிமக்களின் கடமையென்றும் கருதப்பெற்றது. முதலாம் ஜேம்ஸ் அரசரின் ஆட்சிக்காலத்தில்தான் இறை யுரிமைக் கோட்பாடு இறுதிவடிவம் பெற்றது. டியூடர்கள் காலத்தில் இறையுரிமை அதிகாரத்தின் அடிப்படையென ஏற்றுக்கொள்ளப்பட்டதெனினும், இதைப் பெறுவதற்கான வழிமுறை குறிப்பிடப்படவில்லை. உலகியல் விவகாரங்கள் பற்றிய அதிகாரம், மன்னருக்கும் மக்களுக்கும் இடையே உருவான ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைகிறதெனும் கோட்பாடு, இறையுரிமைக் கோட்பாட்டோடு முரண்பட்டு மோதியது. அரசர் கடமை தவறும்பொழுது உடன்பாடும் முறிவுறுகிறது. இம் மனப்போக்கு இயற்கையாகவே பாராளு மன்றத்தில் வெளிப்பட்டது. திறமிக்க சட்ட அறிஞர்கள், பெரும் நிலக்கிழார்கள், பெரும் வணிகர்கள் ஆகியோர் பாராளுமன்றத்தில் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்கள் சபையில் உறுப் பினர்களாக இருந்துகொண்டு அரசருக்கு எதிராக இயங்கி வந்தார்கள். மடங்கள் ஒழிக்கப்பட்டதால் பெருமக்கள் சபையில் திருச்சபையினரின் எண்ணிக்கை குறைந்து, உலகியற் சார்புடைய பிரபுக்கள் அதிகரித்தனர். இவர்களில் பலர் அரசரையும் ஆதரிக்கவில்லை, பொதுமக்களையும் ஆதரிக்க வில்லை. பெருமக்கள் சபையினரில் ஒரு சிறுபகுதியினர்

அரசரால் பெருமக்களாகப் படைக்கப்பட்டவர்கள். இவர்கள் பொதுமக்களுக்கு ஆதரவுகாட்டினர்கள். பதினேழும் நூற்றாண்டில் பாராளுமன்றம் தொடர்ந்து செயல்பட்டுவந்தது, பாராளுமன்றத்தின் வளர்ச்சியில் ஒரு சிறப்பியல்பாகும். அரசில் பாராளுமன்றம் இன்றியமையாததொரு நிறுவனமாக வளர்ந்துவிட்டது. டியூடர்கள் பாராளுமன்றத்தைப் புறக்கணித்தார்களெனினும், இவர்கள் பாராளுமன்றத்தைத் தொடர்ந்து வைத்துக்கொண்டதோடு இதைச் சிறப்பான முறையில் பயன்படுத்திக்கொண்டார்கள். இடைக்காலத்தில் கோரிப்பெற்ற உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் ஸ்டுவர்ட்டுகளின் பாராளுமன்றம் உணர்ந்துகொண்டிருந்தது. பல குறைபாடுகளை இது உணர்ந்திருந்ததால் இப்பொழுது உரிமைகளை வலியுறுத்தத் தொடங்கியது. "பணிவடக்கத்தோடு காணப்பட்ட ஏழாம் ஹென்றியின் பாராளுமன்றம் எலிசபெத்தின் காலத்தில் முணுமுணுக்கத் தொடங்கி, ஜேம்ஸின் காலத்தில் புரளிசெய்கின்ற பாராளுமன்றமாகி, முதலாம் சார்லஸ் காலத்தில் கலகம் செய்யும் பாராளுமன்றமாகிய"தென பேஜ்ஹாட் (Bagehot) குறிப்பிடுகிறார். இது ஓர் இடைமாற்றுக்காலமாகும். அரசரின் இறைமையையும், பாராளுமன்றத்தில் அரசரின் இறைமையையும் உள்நாட்டுப் போரைப் பயன்படுத்தி இக் காலம் வரையறை செய்தது.

முடியாட்சியின் மாறுபட்ட குணவியல்பும் இம் மோதலுக்குக் காரணமாகும். டியூடர்களைப் போலன்றி, ஸ்டுவர்ட்டுகள் வெளிநாட்டவராகையால் நாட்டினர் மனநிலையை இவர்கள் அறிந்துகொள்ளவில்லை. ஆனால், டியூடர்களோ என்றுமே தேசிய விருப்பை மதித்து நடந்தார்கள். ஸ்டுவர்ட்டுகள் தேசிய வளர்ச்சியைக் காண மறுத்தார்கள். மேலும், ஸ்டுவர்ட்டுகளின் தனிவல்லாட்சியை மரபுரிமையாகப் பெற்ற இவர்கள் அதிகாரங்களையும் தவருகப் பயன்படுத்தினர்கள். இதற்கெதிராகக் கிளம்பிய பாராளுமன்ற எதிர்ப்புகளுக்கு ஸ்டுவர்ட்டுகள் சாதுரியமின்றித் தம் சிறப்பதிகாரங்களை வரையறை செய்தார்கள். பாராளுமன்றமும் சினந்து அதன் சிறப்பதிகாரங்களை வரையறுத்துக் கூறியது. இறையுரிமைக் கோட்பாட்டை டியூடர்கள் பற்றிநின்றார்கள். எனினும், இதை வரையறை செய்யவோ, ஆராயவோ இவர்கள் முற்படவில்லை. மேலும், டியூடர்கள் நட்புறவோடு பாராளுமன்றத்துடன் பழகினர்கள். ஆனால், ஸ்டுவர்ட்டுகள் பாராளுமன்றத்தைப் பகைத்துக்கொண்டு அதன் இயல்பான உரிமைகளைக்கூட மீறினர்கள். ஆகவே, வல்லாட்சி படிப்படியாகச்

சட்டவரம்பிற்குட்பட்ட முடியாட்சியாக மாறுபடாமல் ஒரு வன்முறை மோதலில் கொண்டுபோய் விட்டுவிட்டது.

சமயப்பிரச்சினை

சமயப்பிரச்சினைபற்றி ஜேம்ஸ் என்ன கருத்துடையவ ரென்பதை எவரும் அறியார். ஆனால், இவருடைய பிரஸ்பி டீரியத் தொடர்புகளைக் கருத்தில்கொண்ட சிலர், பியூரிட்டன் கட்சியினரின் திட்டங்களையும் சீர்திருத்தங்களையும் ஆதரிக் கலாமென நம்பியிருந்தார்கள். ஆயிரம் பியூரிட்டன்கள் கையெழுத்திட்டிருப்பதாகக் கருதப்பெற்ற "ஆயிரவர் விண் ணப்பம்" (1603) என்ற கருத்துரைகள் அடங்கிய பத்திர மொன்றை அரசரிடம் பியூரிட்டன்கள் கொடுத்தனர். ஏற்கனவே இருந்த ஏற்பாடுகளில் இவர்கள் இப்பொழுது சில மாற்றங்களைக் கோரினர்கள். இக் கருத்துரைகளை ஆராய, 1604-ல் ஹாம்டன் மன்ற மாநாடு கூடியது. அரசர் இம் மாநாட்டிற்குத் தலைமைதாங்கினர். இவர் யாருக்குப் பரிவு காட்டினர் என்பது இம் மாநாட்டில் தெளிவாயிற்று. "பிரஸ்பி டீரியச்சமயத்தை இங்கிலாந்தில் நிலைநாட்ட விரும்புகிறவர்கள் ஸ்காட்லாந்தியப் பிரஸ்பிடீரியர்களுக்கும் எனக்கும் உள்ள உறவு, இறைவனுக்கும் பிசாசுக்குமுள்ள தொடர்பை ஒத்தது என்பதை அறிந்துகொள்ளவேண்டு"மெனச் சினந்துரைத்தார். பியூரிட்டன்கள் ஆங்கிலிக்கத் திருச்சபையோடு இணங்கிச் செல்லவேண்டுமென்றும், அப்படி இணங்கிச்செல்ல விரும்பாத வர்களை நாட்டைவிட்டு வெளியேற்றப்போவதாகவும் அச்சுறுத் தினர். அரசரின் இவ் வச்சுறுத்தல் வருங்காலத்திய மோத லுக்கு வித்திட்டதெனலாம். இயல்பான ஒரு சமய இயக்கத் திற்கு இது ஓர் அரசியல் உருவம் கொடுத்தது, அரசரையும் பியூரிட்டன்களையும் இவ் வியக்கம் ஒரு போராட்டத்தில் கொண்டுபோய்விட்டது. இதன் முடிவு அரசருக்குப் பாதக மாய் அமைந்தது. வழிபாட்டுநூலை ஏற்காத குற்றத்திற்காக ஓராண்டிற்குள் 300-க்கும் மேற்பட்ட குருமார்கள் பதவிகளை இழக்கவேண்டியதாயிற்று.

இதே ஆண்டில், அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையேயான வாக்குவாதம் தொடங்கியது. முதல் பாராளு மன்றத்தைத் தொடங்கிவைத்த ஜேம்ஸ், முடியாட்சியின் உண்மையான கோட்பாட்டை வெளியிட்டார். சிறப்புரிமை பற்றியவைகளெல்லாம் அரசரிடமிருந்து பெறப்பட்ட தென்பது இக் கோட்பாடாகும்.

அரசரின் இக் கோட்பாட்டை எதிர்க்கும் வகையில் ஜேம்ஸின் முதலாவது பாராளுமன்றம் உரிமைகளைத் தொகுத்து "காப்புரைதாள்" (A form of Apology) என்னும் ஒருபத்திரத்தை அரசரிடம் கொடுத்தது. தவருன செய்திகளை வைத்துக் கொண்டு அரசர் இத்தகைய கருத்தை உருவாக்கியுள்ளது பெருந்தவருகுமெனக் கூறிய பாராளுமன்றம், அதன் அசைக்க முடியாத உரிமைகளைச் சபையில் எடுத்துரைக்கத் தொடங்கியது. பிரதிநிதிகளைச் சுயேச்சையாய்த் தேர்ந்தெடுக்கும் உரிமை, பாராளுமன்றக் கூட்டங்கள் நடைபெறும்பொழுது உறுப்பினர் சிறையிடப்படா உரிமை, யாதொரு கட்டுப்பாடுமின்றிக் கருத்துகளை எடுத்துரைக்கும் உரிமை ஆகியவை வழிவழியாகப் பாராளுமன்றம் பெற்றுவந்த உரிமைகளாகுமென இதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவைகளை ஜேம்ஸ் ஏற்க மறுத்தார். இவ் வுலகில் மன்னரின் இறைமை நிலையானது. இவர் கடவுளின் பிரதிநிதி. இவர் அமர்ந்திருப்பது இறைவனின் அரியணையாகுமென மன்னர் வாதித்தார். ஆனால், பாராளுமன்றத்தின் ஒப்பிசைவின்றி இங்கிலாந்தின் அரசர்கள் சமயத்தை மாற்றியமைக்கவோ, இதுபற்றிய சட்டங்களை இயற்றவோ அதிகாரம் பெற்றிருக்கிறார்களென யாராவது சொல்லியிருந்தால் அது மேதகு அரசுக்குத் தவருகக் கொடுக்கப்பட்ட செய்தியாகும் எனப் பாராளுமன்றம் வாதாடியது. பாராளுமன்றத்தின்மீது அரசர் நம்பிக்கைவைத்துச் செயல்ற்ற வேண்டுமென மரியாதையாக முறையிட்டுக்கொண்டு காப்புரை முடிக்கப்பட்டது.

எனவே, பொதுமக்கள் சபை முன்னிகழ்வையொட்டித் தன் நிலையை வலியுறுத்தியது. அரசர் பழமையான வழக்காறுகளில் புதுமைக் கருத்துகளைப் புகுத்தினரென்பது சபையினரின் கருத்தாகும். ஸ்டுவர்ட்டுகளின் ஆட்சிக்காலம் முழுவதும் சபை இதே கருத்தை வலியுறுத்தி வந்தது. 14-ஆம் நூற்றாண்டிலிருந்து டியூடர்கள் காலம் வரையிலான அரசர்பற்றிய முன்னிகழ்வுகளைப் பாராளுமன்றத்தினர் எதிர்த்தனர். வரலாறு, சட்டம் ஆகியவைகளின் சான்றுகளைக்கொண்டு பொதுமக்கள் சபை உரிமைகளுக்காகப் போராடியது. மனித உரிமைகளுக்காகச் சபை போராட்டம் நடத்தவில்லை. ஆங்கிலேயரின் வரலாற்றுவழி உரிமைகளுக்காகவே சபை போராடியது.

நிதிச்சிக்கல்

அரசரின் அறவுரையாளர்களை எதிர்நோக்கிய மிகப் பழமையான பிரச்சினை நிதிச்சிக்கலாகும். தம்முடைய

ஆட்சிக்கால இறுதியில் எலிசபெத் அரசியார் வறியநிலையில் இருந்தார். புதிய உலகத்திலிருந்து வெள்ளி வந்து குவிந்ததால் விலைவாசிகள் உயர்ந்தன. அதே சமயத்தில் அரசியாரின் வருவாய் வளங்கள் வற்றிப்போயின. கடுமையான சிக்கன முறையினால் அரசியார் வாழ்க்கை நடத்தினர். எனவேதான், அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் உண்மையான போராட்டம் நிதித்துறையில் நடைபெற்றதென்பர்.

குடும்பச்செலவுகளை ஈடுசெய்ய ஜேம்ஸ் அரசருக்குப் பெரும் வருவாய் தேவைப்பட்டது. வணிகத்தை முறைப்படுத்தும் உரிமையைப் பயன்படுத்தி, அரசர் தம் நிலையைச் சரிக்கட்டலாமென்பதைக் கண்டார். அதன்படி, 1606-ல் இறக்குமதி செய்யப்பட்ட பல பொருள்களின்மீது காப்புவரி விதிக்கக் கட்டளையிட்டார்; பழைய நிலமானியக் கட்டணங்களை வசூலிக்க முற்பட்டார். மரபுப்படி, அரசருக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம், கம்பனி, தோல் ஆகிய பொருள்களின்மீதான சுங்க வரியிலிருந்து கிடைக்கும் பணம், வழக்கம்போல் ஒவ்வொரு ஆண்டுக்கும் பாராளுமன்றம் அரசருக்களிக்கும் டன் எடைவரி, (இறக்குமதியாகும் ஒவ்வொரு டன் இன்தேறல்மீது விதிக்கப்படும் வரி), பவுண்டுக் கட்டணம் (இறக்குமதியாகும் பொருள்களின்மீது விதிக்கப்படும் வரி) ஆகியவைகளிலிருந்து கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு அரசர்கள் ஆட்சிசெய்ய வேண்டும். தேவையேற்பட்டால், அரசர்கள் பாராளுமன்றத்திடமிருந்து நிதிஉதவிகள் பெற்றுக்கொள்ளலாம். இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்மீது விதிக்கப்பட்ட வரிகளின்மீது இடுவரிகள்[1] போடலாம். தனியுரிமை[2]கள் அளித்து இவைகளின்மீது ஒரு கட்டணம் வாங்கலாம். திருப்பிக் கொடுக்காத நன்கொடைகளை அரசர் குடிமக்களிடமிருந்து திரட்டலாம். இவ் வரிகளை டியூடர்கள் திரட்டினர்களென்றால், ஜேம்ஸும் ஏன் இவைகளைத் திரட்டலாகாதெனக் கருதினர். ஆயினும், மாறிவிட்ட சூழ்நிலைகளை இவர் கருதிப் பார்த்ததாகத் தெரியவில்லை.

பேட் வழக்கு (Bate's Case)

1606-ல் ஜேம்ஸ் பாராளுமன்றத்தின் இசைவின்றி இறக்குமதிப் பொருள்களின்மீது ஒரு டன்னுக்கு 5 ஷில்லிங்கு வீதம்

[1] Imposition

[2] Monopolies

ஒரு காப்புவரியை விதித்தார். ஏற்கனவே இருந்த வரியோடு இதுவும் சேர்ந்து வசூலிக்கப்பட்டதால், இது இடுவரியெனப் பெயர்பெற்றது. லெவண்டு கம்பெனியைச் சேர்ந்த (Bate) பேட் என்னும் வணிகர் இம் மேலதிக வரியைச் செலுத்த மறுத்தார். பாராளுமன்றத்தின் அனுமதியின்றி இவ் வரி விதிக்கப்பட்டதால், இது செல்லாதெனப் பேட் வாதித்தார். நிதித்துறை நீதிமன்றத்தில் இவர்மீது வழக்குத் தொடரப் பட்டது. இந்த நீதிமன்றத்தின் முடிவு அரசருக்குச் சாதகமாக அமைந்தது. இவ்வித அதிகப்படியான சுங்கவரி டியூடர்கள் காலத்தில் இருந்ததை முன்னிகழ்வுச் சான்றுகாட்டி நீதி பதிகள் தீர்ப்பளித்தார்கள். இந்த முடிவைப் பக்கபலமாகக் கொண்டு அரசர் 1608-ல் வரிவிகிதப் புத்தகம்[1] ஒன்றை வெளியிட்டார். ஆனால், 1610-ல் கூடிய பாராளுமன்றம் பேட் வழக்கில் நீதிபதிகள் மேற்கொண்ட கருத்துகளைக் கண்டித்தது. பாராளுமன்றத்தால் பொருளாதாரத்துறையில் கட்டுப் பாடுகளை விதிக்கமுடியாத நிலை உருவானால் அரசரைக் கட்டுப் படுத்த இயலாதெனபதைப் பாராளுமன்றம் நன்குணர்ந்தது. பாராளுமன்றத்தின் முன்னிசைவின்றிச் சுங்கவரிகள் விதித்தல் சட்டவிரோதமெனப் பாராளுமன்றம் வாதித்தது. இதற்கு ஆதாரமாகப் பாராளுமன்றம் முதலாம் எட்வர்டு காலத்திய சட்டங்களை மேற்கோள் காட்டியது. இருதரப்பினரிடையே இவ் விவாதம் தொடர்ந்து நடந்ததேயன்றி, முடிவு எதுவும் ஏற்படவில்லை. அரசரின் போக்கு பாராளுமன்றத்தினரின் உணர்ச்சியைத் தூண்டவே, 1610-லும் பின், 1614-லும் கூடிய பாராளுமன்றம் இத்தகைய வரியைப் பாராளுமன்றத்தின் இசைவின்றித் திரட்ட அரசருக்கு உரிமையில்லையெனும் பொருள்படத் தீர்மானம் இயற்றி நிறைவேற்றியது.

1610-ல் கூடிய பாராளுமன்றம் ஒரு சமரச முயற்சியில் ஈடுபட்டது. இச் சமரச ஏற்பாடு, "பெரும் ஒப்பந்தம்"[2] எனப் பெயர்பெற்றது. இம் முயற்சியை மேற்கொண்ட சாலிஸ்பரி பிரபு, நிலமானியமுறை வரிகளை விதிப்பதை அரசர் நிறுத்திக்கொண்டு அவைகளுக்குப் பதிலாக 200,000 பவுன்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாமெனப் பாராளுமன்றம் கருத்துத் தெரிவித்தது. ஆனால், இந்த ஒப்பந்தம் செயற்பாட்டிற்கு வரவில்லை. இதற்குள் பாராளுமன்றத்திற்கும் அரசருக்கும் மனக்கசப்பு அதிகரித்தது. மேலும்,

[1] Book of Rates

[2] Great Contract

சமயப் பூசல்கள் தலையெடுக்கவே, இந்தப் பிரச்சினை முடிவு செய்யப்படாமல் பாராளுமன்றம் கலைப்பிற்குள்ளாகியது.

இதற்குப்பின், ஜேம்ஸ் பாராளுமன்றத்தைக் கலந்து கொள்ளாமல் பத்தாண்டு ஆட்சிசெய்தார். இடையில் 1614-ல் பாராளுமன்றம் சிறிது காலம் கூடிக்கலைந்தது. இக் காலத்தில் பிரச்சினைகள் நீதிமன்றத்திற்குச் சென்றன. அரசரின் கோரிக்கைகளுக்குக் கோக் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியவரானார். இவருடைய காலத்தில் எட்வர்டு கோக் மிகச்சிறந்த, கற்றறிந்த வழக்கறிஞராக இருந்தார். எலிசபெத் அரசியாரின் காலத்தில் இவர் வழக்குரைஞர் நாயகமாக இருந்தார். 1606-ல் இவர் பொதுவழக்கு நீதிமன்ற நீதிபதியானார். 1610-ல் மேலதிக வரிவிதிப்புபற்றிய பேரறிக்கையின் சட்டச் செல்திறன்பற்றி அரசர் இவரைக் கலந்தாராய்ந்தார். இவரும், இவரோடு பணியாற்றிய நீதிபதிகளும் அரசரின் ஐயப்பாடுகளைப் போக்கும் வகையில் மூன்று கருத்துகளை வரைந்துரைத்தார்கள். பேரறிக்கைகளைப் பிறப்பித்தல் பற்றி இக் கருத்துகள் பிற்காலத்தில் வழிகாட்டும் நெறிகளாக இருந்துவந்தன. இவை: (1) பேரறிக்கையால் அரசர் புதிய குற்றமெதையும் உண்டாக்கமுடியாது; (2) செயற்பாட்டில் இருக்கும் சட்டமொன்றை ஈர்க்கும் பேரறிக்கையைப் புறக்கணித்தல் குற்றத்தை மிகைப்படுத்தும்; (3) விண்மீன் நீதிமன்றத்தில் ஒரு குற்றம் தண்டிக்கப் படலாகுமென ஒரு பேரறிக்கை விதிசெய்யலாகாது.

1613-ல் அரச நீதிமன்றத்தில் கோக் முதன்மை நீதிபதியாக அமர்த்தப்பட்டார். அரசரின் விருப்புகளுக்கு ஏற்ப நடந்துகொள்வார் என்ற நம்பிக்கையில் இவர் இப் பதவியில் அமர்த்தப்பட்டார். ஆனால், பதவிஉயர்வு பெற்ற உடனேயே இவர், அரசரின் செயலை எதிர்த்து பீச்ஹாம்[1] வழக்கில் தீர்ப்புக்கூறினார். 1616-ல் நடந்த திருக்கோயில் மானியம்[2] பற்றிய வழக்கில் அரசரோடு இவர் கொண்டிருந்த தொடர்பு இறுதியாக முறிவுற்றது. இவ் வழக்குபற்றிய விவரங்களை அரசர், நீதிபதிகளோடு கலந்தாராயும் வரையில் வழக்கு முடிவைத் தள்ளிப்போடுமாறு கேட்டுக்கொண்டார். இவ் வேண்டுகோளைக் கோக் ஏற்க மறுத்தார். அத்துடன், இந்த வழக்குபற்றிய இவருடைய கருத்தை அரசர் முன்னிலையில்

[1] Peacham

[2] Commerdam

எடுத்துரைத்தார். உடனடியாக இவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். 1620-லிருந்து 1634 வரை இவர் அரசரின் (கோரிக்கை) உரிமைகளை எதிர்த்த பாராளுமன்றக் கட்சியின் தலைவர்களில் ஒருவராக இருந்துவந்தார்.

இவருடைய பதவிநீக்கம் நீதிபதிகளுக்குப் பொதுவான ஓர் எச்சரிக்கையாக அமைந்தது. பெருந்திறமையுடைய வராக இருந்தபோதிலும் இவருடைய கவர்ச்சியற்ற குணவியல்புகளால் இவர் அரசரின் வெறுப்பிற்குள்ளானார். மேலும், நீதிபதிகளின் பதவிக்காலம் அரசரின் விருப்புள்ள வரைதான் நீடிக்குமென்பதும் உறுதியாயிற்று. கோக்கின் வாழ்நாள் முழுவதும் போட்டியாளராக இருந்த பேக்கன்[1] நீதித்துறையின் முதன்மை நடுவரானார்.

The Parliament of James I.

1621-ல், வெளிநாட்டு விவகாரங்கள் இருந்தநிலையும் இவருடைய பணத்தட்டுப்பாடும், பாராளுமன்றத்தைக் கூட்டும்படி செய்தன. 1621-ஆம் ஆண்டில் கூடிய பாராளுமன்றம் இரு செயல்களுக்காகக் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இது தனியுரிமைகளை வன்மையாகத் தாக்கியது. மூன்று ஆண்டுகளுக்குப்பின், இவைகளின் ஒழிப்பிற்கு இது வழிசெய்தது. கடுங்குற்ற விசாரணை முறையை மீண்டும் இப் பாராளுமன்றம் கொண்டுவந்தது, இப் பாராளுமன்றத்தின் இரண்டாவது அருஞ்செயலாகும். தனியுரிமைகளைத் தவருகப் பயன்படுத்திய குற்றங்களுக்காக மோம்பெசன்[2], மிட்செல்[3] ஆகிய இருவரையும் விசாரித்துத் தண்டித்தபின், கையூட்டுகள் பெற்றுக்கொண்ட குற்றத்திற்காகக் கோக்கின் விசாரணையை யொட்டி, பேக்கன் தண்டனைக்குள்ளானார். பரிசுகளைப் பெற்றுக்கொண்டதால் பேக்கனின் தீர்ப்பில் மாற்றம் காணப்பட்டதென்பதற்கு எத்தகைய சான்றுகளும் அளிக்கப்படவில்லையெனினும், இவர் பதவி நீக்கப்பட்டுப், பெருந்தண்டனைவிதிப்பிக்குள்ளாகிப் பின் பொதுவாழ்க்கையிலிருந்து விலகவேண்டியதாயிற்று.

பேச்சுரிமைப் பிரச்சினையைபொட்டிய சச்சரவு 1621-ஆம் ஆண்டுப் பாராளுமன்றக் கூட்டத்தை முடிவிற்குக் கொண்டுவந்தது. ஜெர்மனியில் தொடங்கிய முப்பதாண்டுப் போரில்

[1] Bacon
[2] Mompesson
[3] Mitchell

பிராடெஸ்டெண்டுகளின் சார்பில் தலையிடுமாறு சபையின் வெளிவிவகார விவாதம் வற்புறுத்தியது. ஸ்பெயின் நாட்டோடு நட்புறவு கொள்ள வேண்டுமெனும் விருப்பத்தால் பாராளுமன்றம் வெளிவிவகாரங்களை விவாதிக்கலாகாதென ஜேம்ஸ் கட்டளையிட்டார். எல்லா விவகாரங்களையும் விவாதிக்க இதற்குள்ள உரிமையை வலியுறுத்திக் கருத்துகளை இது தெரிவித்தது. சினங்கொண்ட ஜேம்ஸ் சபையின் அன்றைய நடவடிக்கைக் குறிப்புகளைக் கொணரச் செய்து, குறிப்புகளைக் கிழித்தெறிந்துவிட்டுப், பாராளுமன்றத்தையும் கலைத்துவிட்டார்.

மூன்றாண்டிற்குப்பின், இவருடைய ஆட்சிக்காலத்தின் இறுதிப் பாராளுமன்றம் கூடியது. இப்பொழுது ஜேம்ஸ் ஸ்பானியக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு, வெளிவிவகாரங்களில் பாராளுமன்றத்தோடு இணங்கிச்சென்றார். உடல்நலம் கலிந்துகொண்டிருந்ததால் அமைதியை விரும்பிப் பாராளுமன்றத்திற்குச் சில குறிப்பிட்ட சலுகைகளை அளித்தார். தனியுரிமைகளைச் சட்டவிரோதமாக்கிய சட்டம், பாராளுமன்றக் கூட்டத் தொடரின் மிக முக்கியமான செயலாகும். 1625-ன் தொடக்கத்தில் ஜேம்ஸ் இறந்தார். இவரது மறைவோடு டியூடர்கால இறுதி மரபுகளும் மறைந்துவிட்டனவெனக் கூறலாம். பக்கிங்ஹாமின் நான்காண்டு ஆட்சி, பாராளுமன்றத்திற்கும் அரசருக்கும் இடையான உறவைப் பகைமையாக்கியது.

ஜேம்ஸ் இறக்குமுன், புது உலகில் இரண்டு நிகழ்ச்சிகள் நடந்தன. இவைகளிலிருந்து பெரும் அரசியலமைப்புமுறை விளைவுகள் வளர்ந்தன. வர்ஜீனிய குடியேற்ற நாட்டின் பிரதிநிதிகளின் முதல் கூட்டம் 1619-ல் கூடியது ஒரு நிகழ்ச்சியாகும். கம்பெனியின் ஆட்சிப்பொறுப்பிலிருந்து 1624-ல் வர்ஜீனியா அரசரின் நேர்முகக் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. சவுத்தாம்டனிலிருந்து மே.ஃபிளவரில்[1] சென்று காட்[2] வளைகுடாவில் இறங்கிய 120 ஆங்கிலேயர்களின் செயலே இரண்டாவதாகக் கூறலாம். இவர்கள் 'ஓர் அரசாங்க ஒப்பந்தம்' செய்துகொண்டார்கள். இவர்களை ஓர் அரசியல் சமுதாயமாக இவ் வொப்பந்தம் மாற்றியமைத்தது. இதை இக்கால மக்களாட்சியின் உதயமெனக் கூறுவது சற்று மிகை.

[1] May Flower

[2] Cod

படக் கூறுவதாகும். சுயேச்சையாளர்கள் ஏற்கனவே, திருச் சபை நிருவாகத்தில் முற்றிலும் சனநாயக முறையைத் தழுவிக்கொண்டிருக்கையில், இதையே பொதுவாழ்க்கைக்குக் கொண்டுசென்றது இயல்பாகவே தோன்றியது.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

E. R. Adair	:	Petition of Rights
Tanner	:	Constitutional Conflicts of the 17th Century
Gobbett	:	Parliamentary History
Gardiner	:	Constitutional Documents
D. L. Keir	:	Constitutional History of Modern Britain
Gardiner	:	History of England
Figgis	:	Divine Right of Kings

7. முதலாம் சார்லஸ்

(1625 — 1649)

அரசரின் சிறப்பதிகாரங்கள் மிகைப்படுத்திக் கூறப்பட்ட காலத்தில் இவர் வளர்ந்தார். இவரை இடைக்காலத்திய அரசராகிய மூன்ரும் ஹென்றியோடு ஒப்புநோக்குதலுண்டு. அறிவாற்றல் இல்லாதவராயினும், இவர் தம் நிலையைப்பற்றி, பெரிதாக எண்ணிக்கொண்டிருந்தார். எதிர்ப்பைச் சமாளிப்பதில் இவர் பொறுமையின்றி நடந்துகொண்டார். இவருடைய தந்தையைவிடப் பிடிவாதமுள்ளவராகவும் குறுகிய நோக்குடையவராகவும் சார்லஸ் இருந்தார். தந்தையைப் போல் இவர் அறிவாற்றலுடையவரல்லர். குறுகிய மனப்பான்மையுடையவராக இருந்தமையால் இவரிடம் விட்டுக் கொடுக்கும் போக்கு காணப்படவில்லை. அதிகாரங்களைப் பேணிக்காக்க வேண்டுமென்பது இவருடைய உண்மையான மனக்கிடக்கை. எந்தப் பொறுப்பும் இவரைக் கட்டுப்படுத்தியது கிடையாது. நம்பத்தகாத, வஞ்சகமான, மாறும் இயல்புடையவராக இவர் இருந்தார். ஆகவே, இவர் நற்பெயர் பெறவில்லை. இவைகளே இவருடைய முடிவிற்கும் காரணமாகவும் இருந்தன.

முதலாம் சார்லஸின் ஆட்சிக்காலம் இரண்டு நிகழ்ச்சிகளோடு தொடங்கியது. படையின் அழிவு, முதல் நிகழ்ச்சியாகும். படைக்கலனின்றி, அனுபவமின்றி, ஆர்வமின்றி வறியநிலையில் உள்ள 12,000 பேர்களடங்கிய ஒரு கூட்டம் படையெனக் கூறிக்கொண்டால் இதையும் படையெனலாம் என்று ஆங்கிலேயர் குறிப்பிட்டனர். இத்தகைய படையொன்று ஜெர்மனியில் பிராடெஸ்டண்டுகளின் சார்பில் பங்குபற்ற மான்ஸ்ஃபீல்டு[1] என்பவரின் தலைமையில் சென்ற பொழுது அழிக்கப்பட்டது. சார்லஸின் அமைச்சராகிய

[1] Mansfield

பக்கிங்ஹாமின் திறமையின்மையை இப் படையின் அழிவு பாராளுமன்றத்திற்கு அறிவுறுத்தியது. பாராளுமன்றத்தைக் கூட்டி அதன் இசைவையும் சப்ளையையும் பெறுமல் சார்லஸை வற்புறுத்திப் பக்கிங்ஹாம் இப் படையை அனுப்பினர். ஹென்றியெட்டாமேரியாவை (:பிரான்சு நாட்டின் இளவரசி) சார்லஸ் மணந்துகொண்டது இரண்டாவது நிகழ்ச்சியாகும். இரண்டு வழிகளில் இது அரசகுலத்தைப் பாதித்தது. மனைவியின் மீது சார்லஸ் காட்டிய அன்பு இவருடைய ஆட்சிக்காலத்தில் பல தவறுகளுக்கு வழிகோலியது. அரை நூற்றாண்டிற்குப்பின், இரண்டாம் சார்லஸின் வெளிநாட்டுக் கொள்கையால் ஆங்கிலேயர்களில் ஒரு பெரும் பிரிவினரின் ஆதரவை இழக்கவேண்டியதாயிற்று. டியூடர்களுக்கும் ஹாப்ஸ்பர்க் மரபினர்களுக்குமிடையேயான உறவுமுறை, எலிசபெத் அரசியாரின் மதிநுட்பமின்றேல், இங்கிலாந்தின் சுதந்திரத்திற்குக் கேடு விளைத்திருக்கும். ஸ்டுவர்ட்டுகளுடனை பேர்போன் மரபினரின் திருமண உறவுமுறைகள் கிராம் வெல்லைப் பாதுகாவலராகவும் மூன்றும் வில்லியத்தை அரசராகவும் ஆக்கப் பெருமளவு உதவின.

ஒவ்வொரு ஆட்சிக்காலத்தின் தொடக்கத்திலும் வழக்கமாக அரசருக்கு ஆயுட்காலம் முழுவதும் கொடுக்கப்படும் வரிவிதிப்பு அதிகாரத்தைப் பாராளுமன்றம் இந் நிகழ்ச்சிகளைக் கருத்தில்கொண்டு கொடுக்கமறுத்தது. பாராளுமன்றம் கூடிய இரண்டு மாதங்களுக்குள் அதைக் கலைப்பதற்காகப் பக்கிங்ஹாமைக் காரணம்காட்டி அவரையும் அரசர் வன்மையாகத் தாக்கினர். ஏற்கனவே ஸ்பெயினோடும் :பிரான்சோடும் சச்சரவு ஏற்பட்டபொழுது பாராளுமன்றம் இரண்டாவது தடவையாகக் கூட்டப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுமுன், தமக்குப் பிடிக்காதவர்களைப் பாராளுமன்றத்தில் நுழையவிடாமல் தடுக்க, பக்கிங்ஹாம் ஒரு முறையைக் கையாண்டார். கோக், வென்ட்வொர்த் ஆகியவர்களை மாவட்டங்களில் அரசப் பதிலாட்களாக அமர்த்தி, அதன் விளைவாக அவர்கள் உறுப்பினர் தகுதியை இழக்குமாறு இவர் செய்தார். ஸ்பெயினில் பக்கிங்ஹாம் நடந்துகொண்ட முறையை ஜான்டிக்பி[1] வெளிப்படுத்திவிடுவாரென அஞ்சி, அவருக்குப் பெருமக்கள் சபைக்கு வருமாறு அழைப்பு விடுக்காமலே

[1] Johne Dighby

விட்டுவிட்டார். இவருடைய மற்றொரு எதிரியாகிய அருண்டேல் கோமகனை, சட்டம் ஒவ்வா முறையில் திருமணம் செய்து கொண்டாரெனக் கூறிச் சிறைப்படுத்திவிட்டார். இதையறிந்த பெருமக்கள் சபை டிக்பிக்கும் அருண்டேல் கோமகனுக்கும் அழைப்பு அனுப்பினலன்றி எச் செயலையும் மேற்கொள்ள முடியாதென அறிவித்தது. பின், இவர்கள் இருவரும் சபைக்கு அழைக்கப்பட்டனர். ஆனல், பெரு மக்கள் சபைக்குக் கோக், வென்ட்வொர்த் ஆகியோர் வர இயலவில்லையெனினும், இவர்களுக்காட்டிலும் ஆர்வமிக்க எலியட், பிம்[1] ஆகியோர் சபைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பாராளுமன்றம் கூடியதும் அதன் குறைகள் அகற்றப் பட்டாலன்றி அரசருக்கு மானியம் (நிதியுதவி) அளிக்க முடியாதெனக் கூறியது. அடுத்து, பக்கிங்ஹாம் கோமகனை, கடும் அரசியல் குற்றம்சாட்டி விசாரிக்க முயன்றது. குற்றச்சாட்டுகளைப் பெருமக்கள் சபைக்கு எடுத்துரைக்க சர்ஜான் எலியட் என்பார் முன்வந்தார். இவர் சொல்வன்மை மிக்கவர்; சிறந்த பண்பாளர்; நாட்டுப்பற்றுள்ளவர். காடிஸ் முற்றுகையின் தோல்விக்கும், நாட்டைப் பற்றிக்கொண்டிருந்த பல தீமைகளுக்கும் பக்கிங்ஹாம் காரணமென்று எலியட் எடுத்துரைத்தார். "நாட்டின் நலத்தை அரிக்கும் கரையான்" என்று இவரை எலியட் வருணித்தார். இதையெல்லாம் கேட்ட சார்லஸ் சினங்கொண்டு எலியட்டையும், சர் டட்லி டிக்கிஸ்[2] என்பவரையும் சிறையில் தள்ளுமாறு கட்டளையிட்டார். உறுப்பினர்களைச் சிறைப்படுத்துதல் சட்டமுரண் என்றும் இவர்கள் சிறையில் இருக்கும்வரை மேற்கொண்டு எதையும் செய்யமுடியாதெனவும் சபை கூறிவிட்டது. இதை அறிந்த சார்லஸ் பாராளுமன்றத்தைக் கலைக்கக் கட்டளையிட்டார். மானியம் எதுவும் அரசருக்குக் கொடுக்காமல் பாராளுமன்றம் கலைந்தது.

நிலைமைகள் விண்ணப்பம் (1628)

கட்டாயக் கடன்களை வசூலித்து நிதிதிரட்டி ஓராண்டு சார்லஸ் சமாளித்தார். இக் கடன்களைக் கொடுக்க மறுத்ததற்காக எண்பதுபேர் சிறைப்படுத்தப்பட்டார்கள். படைவீரர்களுக்கு உணவளிக்கும் பொறுப்பை அரசர் மக்களிடம் விட்டு

[1] Pym

[2] Sir Dudley Diggis

விட்டார். இம் முறைகளில் தோல்விகண்டதும் இவருடைய ஆட்சிக்காலத்தின் மூன்றாவது பாராளுமன்றத்தைக் கூட்டினார் (1628). இப் பாராளுமன்றம் புத்துணர்ச்சியோடு புதிய தலைவர்களின்கீழ் கூடியது. லங்காஸ்டிரியர்களின் காலத்தில் பாராளுமன்ற வளர்ச்சிக்காகப் பாடுபட்ட மாவட்டத் (Shire) தலைவர்களான வீரத் திருத்தகைகளின் பிரதிநிதிகளாக இக் காலத்தில் வெனட்வொர்த், பிம், ஹாம்டன்[1] எலியட் ஆகியோர் பாராளுமன்றத்தில் இடம்பெற்றார்கள். இவர்களுடைய அரசியல் உணர்வுகள் தீவிரமானவை என்பதை விடப் பழமையானவை எனக் குறிப்பிடலாம். இவர்கள் எல்லோரும் ஒரேமாதிரியான சட்டஇயல் பயிற்சி பெற்றிருந்தார்கள். நாட்டின் பழமையான நிறுவனங்களை அரசரின் புதுமாதிரியான தனி வல்லாட்சியிலிருந்து இவர்கள் காப்பதாகக் கருதினர்கள். சார்லஸின் அரசாங்கம் திறமையற்றிருந்ததோடு கொள்கையிலும் தனி வல்லாட்சியாக இருந்தது.

புதிய பாராளுமன்றத்தின் முதற்பணி, உரிமை விண்ணப்பத்தை வரைவதாக இருந்தது. பாராளுமன்றத்தின் இசைவின்றி அரசர் எவரையும் சிறையிடக்கூடாதென்றும், சட்டப்படியிலான விசாரணையின்றி அரசர் யாரையும் காவலில் வைக்கக்கூடாதென்றும், பாராளுமன்றத்தின் இசைவின்றி அரசர் கட்டாயக் கடன்களையோ, வரிகளையோ திரட்டக்கூடாதென்றும், போர்வீரர்களைச் சாதாரண மக்களின் இல்லங்களில் தங்கவைக்கலாகாதென்றும், அமைதிக்காலத்தில் படைமுறைச் சட்டங்களைச் செயல்படுத்தக்கூடாதென்றும் உரிமைகள்பற்றிய விண்ணப்பம் குறிப்பிட்டது. பக்கிங்ஹாமின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டிருந்த பெருமக்கள் சபை இவ் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டது. இதற்குமுன், இவ் விண்ணப்பம் பொதுமக்கள் சபையிலும் நிறைவேறிவிட்டது. இரு சபைகளும் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டபின், அரசரும் இதற்கு ஒப்பிசைவை அளித்தார். பாராளுமன்றமும் அரசருக்கு ஐந்துநிதி உதவியளித்தது.

மகாசாசனத்திற்கு அடுத்தபடியாக வைத்து எண்ணத்தக்க சிறப்பு இவ் உரிமை விண்ணப்பத்திற்குண்டு. சில குறைபாடுகளை நீக்குவதே இதன் நோக்கமாக இருந்தபோதிலும் இதில் சில சிறப்பான கோட்பாடுகளைக் காணமுடிகிறது.

[1] Hampten

அரசியலமைப்பின் சில அடிப்படையான கருத்துகளை அரசர் ஏற்றுக்கொண்டதில் இதன் சிறப்பு விளங்குகிறது. சட்டங்களுக்கும் அரசரின் சிறப்புஅதிகாரங்களுக்கும் உள்ள தொடர்பை இது விளக்கியுள்ளது. நாட்டின் இறைமை அரசரிடமிருந்து பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்டிருப்பதை இவ் விண்ணப்பம் தெளிவுபடுத்தியது. இதில் வற்புறுத்தப்பட்ட உரிமைகள் புதியவையல்லவெனினும், இவை தெளிவாய் வரையறுக்கப்பட்டு, அரசின் ஏற்பைப்பெற்றது இதன் சிறப்பாகும்.

சட்ட ஆக்க உரிமை பாராளுமன்றத்திற்கே உரியதென விண்ணப்பம் கூறுவதால் பாராளுமன்றத்தின் சட்ட இறைமை முறையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பாராளுமன்றத்தின் இசைவின்றி வரி விதிக்கலாகாதெனும் கோட்பாடு ஜேம்ஸ் காலத்தில் வலியுறுத்தப்பட்டதெனினும், இது சார்லஸ் காலத்திலேதான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தக்க காரணமின்றி அரசியல் எதிரிகளைச் சிறையிடும் வழக்கமும், வீரர்களைக் கட்டாயமாக மக்களின் வீடுகளில் வைத்துப் பராமரிக்கும் வழக்கமும் சார்லஸ் காலத்திற்குரியவைகளாகும். மேலும், இராணுவ நீதிமன்றங்களைப் பயன்படுத்தி, மக்களின் உரிமைகளைப் பறிக்கும் முறையும் இக்காலத்திற்குரியதாக இருந்தது. இத்தகைய தொல்லைகளிலிருந்து மக்களைக் காக்க இவ் விண்ணப்பம் உதவியது.

உரிமைகள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் ஃபெல்டன்[1] என்பவரால் பக்கிங்ஹாம், போர்ட்ஸ்மவுத் என்னுமிடத்தில் கொல்லப்பட்டார். ஃபெல்டன் படையிலிருந்து பக்கிங்ஹாமினால் விலக்கப்பட்டவன் இச் சொந்தப் பகையைப் பயன்படுத்திப் பக்கிங்ஹாமைப் பழிதீர்த்துக்கொண்டான். இவனுடைய செயலை நாட்டுமக்கள் வரவேற்பார்கள் என்று நினைத்தான். கொலை செய்தவனைத் தியாகியென்றும் அவன் வாழ்கவென்றும் லண்டன் மக்கள் வாழ்த்தினர்கள். ஆனால், தம் உற்ற நண்பர் இறந்ததைக் கொண்டாடிய லண்டன் நகரத்தினரைச் சார்லஸ் மறக்கவில்லை.

பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் இன்னொரு கடுமையான போராட்டத்திற்கான காரணங்களை

[1] Felton

எழுப்பியது. சார்லஸின் தந்தையைவிட முதலாம் சார்லஸ் உயர் திருச்சபைக்கு உற்ற நண்பரென்பதைப் பாராளுமன்றம் அறிந்திருந்தது. அரசரின் உயர்சமய ஆலோசகராகிய லாடு[1] என்பவரின் தலைமையில் பியூரிட்டானிசம் பாராளுமன்றத்தின் தாக்குதலுக்குள்ளாகியது.

Religious Policy of Charles I:

சார்லஸிற்குச் சமயம்முற்றிய தெளிவான கருத்துகள் இல்லை. மனைவியின் செல்வாக்காலும் பக்கிங்ஹாமின் செல்வாக்கினாலும் இவர் கத்தோலிக்கச் சமயச் சடங்குகளை விரும்பினர். ஆனால், இவர் கத்தோலிக்கராக இருக்க விரும்பவில்லை. ஆயினும், கத்தோலிக்கச் சமயச்சடங்குகளைப் பெருமளவு ஏற்றுக்கொண்டிருந்த ஆர்மீனியக் கொள்கைகள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. இங்கிலாந்தின் திருச்சபைப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த மதநிலைய மேலோர்[2] ஆர்மீனியக் கருத்துகளை உவந்தேற்றுக்கொண்டிருந்தார்கள். சமயத்துறையில் அரசரின் தனிமுதன்மை நிலையை ஏற்றுக்கொண்டதோடு, அரசரின் சிறப்பதிகாரங்களை இவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், பியூரிட்டன்கள் ஆர்மீனியர்களை ஆதரிக்கவில்லை. கிறித்துவர்களுக்கு உண்மையான வழிகாட்டி விவிலிய நூல் என்றும், யார் கிறித்துவர்களாக இருக்கவேண்டுமென்பது இறைவனால் முடிவுசெய்யப்பட்டுவிட்டதென்றும் பியூரிட்டன்கள் கூறினர்கள். தன் விருப்பின்படி எவரும் கிறித்துவராக இருக்கமுடியுமென்றும் இவர்களின்மீது ஆதிக்கம் செலுத்த அரசருக்கு அதிகாரம் உண்டென்றும் ஆர்மீனியர்கள் வலியுறுத்தினர்கள். ஆனால், ஆர்மீனியக் கருத்துடையவர்களைப் பாராளுமன்றம் கண்டனம் செய்தது. மாண்டேகு என்பவர் கத்தோலிக்கச் சமயத்தைத் தாக்கிப் பிராடெஸ்டண்டு சமயத்தை ஆதரித்தார். ஆயினும், இவர் சமயத்துறையில் அரசரின் தனிமுதன்மையை ஆதரித்தார். இவருடைய கருத்தைப் பாராட்டும் வகையில் மாண்டேகு சிச்செஸ்டர்[3] என்னுமிடத்திற்கு மேற்றிராணியாராக அமர்த்தப்பட்டார். லண்டனின் அதிமேற்றிராணியாராகிய ஆபட்[4] ஆர்மீனியச் சொற்பொழிவுகளை அனுமதிக்காததால் பதவியிலிருந்து நீக்கப்பெற்றார். இவருக்குப் பதிலாக ஆர்மீனியக் கொள்கையினராகிய வில்லியம் லாடு[5] என்பவர் அதிமேற்றிராணியாராக

[1] Laud
[2] High Churchmen
[3] Chichester
[4] Abbot
[5] William Laud

அமர்த்தப்பெற்றார். உயர்ஆணை நீதிமன்றம், விண்மீன் நீதிமன்றம் ஆகியவற்றின் துணையோடு அரசரின் அதிகாரத்தால் ஒரே சீரான சடங்குமுறைகளைக் குருமார்களின்மீது லாடு செயல்படுத்தினர். நாட்டின் சமயக்கொள்கையை வகுத்தளிப்பதாக லாடு உரிமைகொண்டாடினர். பாராளுமன்றத்திலிருந்த பியூரிட்டன் கட்சியினர் இதைச் சமாளிக்க எதிர்க்கோரிக்கையொன்றைக் கிளப்பினர். இப் போராட்டம் சமயப் பொறைக்கான போராட்டமாக இருக்கவில்லை. தேசியச் சமயத்தைச் செயலாட்சி செய்யும் போராட்டமாகத்தான் இது இருந்தது. பல்வேறு சமயங்கள் அடுத்தடுத்திருக்கலாமென்பது இக் காலம் ஏற்காத ஒரு கருத்தாகும். சொந்தச் சமயக் கருத்துகள் தனியுரிமை பெற இயலாதென்பதை இருதரப்பினரும் கண்டபொழுது ஐம்பதாண்டிற்குப்பின், அரசியல் சகிப்புத்தன்மை உதயமாயிற்று. இன்னும் காலம் தாழ்த்தியே சமயப்பொறை ஏற்பட்டது. இது இன்னும் முற்றுப் பெறவில்லை.

அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் பகைமை வளர்ச்சியடைந்து கொண்டிருந்ததோடு, தன்னிச்சையான வரி விதிப்பைத் தடைசெய்யும் உரிமை விண்ணப்பத்தின் பொருள் பற்றிய கருத்துவேறுபாடு மற்றொரு சர்ச்சையைக் கிளப்பியது. அரசரின் ஆட்சிக்காலம் முழுவதும் பாராளுமன்றத்தால் கொடுக்கப்பட்ட டன் எடை வரி, பவுண்டுக் கட்டணம் ஆகிய பழைய சுங்க வரிகள் இதில் அடங்குமா? இத்தகைய வரிகளை ஆட்சிக்காலத் தொடக்கத்தில் ஓராண்டிற்கு மட்டும் அளிக்கப்பட்டதை அரசர் ஏற்கமறுத்த வரிகள் இதில் அடங்குமா?

பாராளுமன்றம் மீண்டும் கூடியதும் சர் ஜான் எலியட் மூன்று தீர்மானங்களைக் கொண்டுவந்தார். (1) சமயத்தில் புதுமைகளைக் கொண்டுவருபவர்களும் போப்பின் ஆதிக்கம் அல்லது ஆர்மீனியனிசத்தை நுழைப்பவர்களும் (2) பாராளுமன்றத்தால் அளிக்கப்படாத டன்எடை வரியையும் பவுண்டுக் கட்டணத்தையும் விதிக்க அறிவுரை அளிப்பவர்களும் (3) இவ்வாறு விதிக்கப்பட்ட டன் எடை வரியையும் பவுண்டுக் கட்டணத்தையும் கொடுப்பவர்களும் நாட்டின் தலையாய எதிரிகளாகக் கருதப்பட வேண்டுமென இத் தீர்மானங்கள் அறிவித்தன. பாராளுமன்றத்தில் நடந்துகொண்டிருப்பதை அறிந்த அரசர், சபையின் கூட்டத்தை ஒத்திப்போடுமாறு கட்டளையிட்டார். ஆனல், சில பாராளுமன்றத் தலைவர்கள் சபாநாயகரை இருக்கையில் அமர்த்திப் பெருத்த கூக்குரலுக்

கும் கொந்தளிப்பிற்கும் நடுவில் மூன்று தீர்மானங்களையும் நிறைவேற்றினர்கள். அரசியலமைப்பு நடவடிக்கையின் வரம்பை எட்டிவிட்ட இச் செயல், சார்லஸைக் காட்டிலும் சற்றே குறைந்த பிடிவாதமுள்ள வேறு எந்த அரசருக்கும் ஓர் எச்சரிக்கையாக அமைந்திருக்கவேண்டும்.

இந் நடவடிக்கைகளில் பங்குபற்றிய ஒன்பது உறுப்பினர்கள் சிறையிடப்பட்டார்கள். இவர்களில் பெரும் தகைமைக்குரியவராகிய சர் ஜான் எலியட் மூன்றுண்டுகள் சிறையிலிருந்து உயிர்நீத்தார். பொதுமக்கள் சபையின் நடைமுறைகளை நீதிமன்றங்கள் ஆய்வு மேற்கொள்ளும் உரிமையை இவர் இறக்கும்வரை எதிர்த்தார். எலியட்டையும் மற்றப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சிறைப்படுத்தியது, பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் பேச்சுரிமையை மீறிய செயலாகுமென்பது இக் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதற்குப்பின், பாராளுமன்றமின்றி நாட்டை ஆட்சிசெய்ய சார்லஸ் முடிவுசெய்தார்.

எலியட் போன்ற சிலரை அரசர் சிறைப்படுத்தினரெனினும், சர் டட்லி டிக்கிஸ், நொய்[1], லிட்டில்டன்[2], வென்ட்வொர்த் போன்றவர்களுக்குப் பதவியளித்துத் தம் பக்கம் இழுத்துக் கொண்டார்.

தனி வல்லாட்சி (1629—1640) Personal Rule

அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் உருவான தகராற்றிற்குத் தனி வல்லாட்சியை அரசர் ஒரு முடிவாக அளித்தார். இத் தனி வல்லாட்சிக்காலத்தைப் பதினோராண்டுக் கொடுங்கோலாட்சியென்பர். இயல்பான பொருளில் இதை ஒரு கொடுங்கோலாட்சி எனக் குறிப்பிட முடியாதென ஹால்[3] கூறுகிறார். மக்களின் பொதுவாழ்க்கையில் இது தலையிடவில்லை. தனிப்பட்ட முறையில் எவரும் ஒடுக்கப்படவில்லை; தம் கருத்துகளுக்காக எவரும் உயிர்த்தியாகம் செய்யவில்லை. வணிகமும், செல்வச்செழிப்பும் அதிகரித்தன. சாதாரண நீதிமன்றங்களும், அரசாங்கமும் பணிகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தன. வழக்கம்போல் கவுன்சில்களும் (அவைகளும்) அமைதிகாண் நீதிபதிகளும்

[1] Noy
[2] Littleton
[3] Hall

கடமையை நிறைவேற்றமுடிந்தது. சொந்தநலனிற்காகச் சட்டங்களுக்குச் சார்லஸ் பொருள்விளக்கம் செய்ய முற்பட்டா ரெனினும், ஒரு சில சட்டங்கள் மட்டுமே மீறப்பட்டன. சட்ட மீறிய வரிவிதிப்புகளைத் தவிர்க்க அரசரும் அவருடைய அறி வுரையாளர்களும் விரும்பினர். பாராளுமன்றம் பற்றிநின்ற அதிதீவிர நிலை அரசருடைய வல்லாட்சியைப் பயனுடைய தாக்கியது. இத் தனிவல்லாட்சி மக்கள் ஆதரவையும் பெற்றது. ஆனால், அரசர் தமக்குக் கிட்டிய வாய்ப்பை நழுவ விட்டார். இக் காலத்திய அரசரின் ஆட்சி மிதவாதிகளையும் எதிரிகளாக்கியது. அரசரின் தனிச்சிறப்பதிகார நீதி மன்றங்கள் தனியுரிமையை அச்சுறுத்தின. இவைகளின் தண்டனைகளும் கடுமையாக இருந்தன. கவுன்சில் நீதி மன்றங்கள், தனியுரிமைகளுக்கெதிராகப் பொதுநலன்களுக் காகப் பாடுபட்டன. அரசரின் வரிவிதிப்பு, சொத்துப்பாது காப்பைப் பாதித்தது. மக்களின் மனநிலையிலும் பெரும் மாற்றம் காணப்பட்டது. அரசாங்கத்தின் பிரச்சினைகளையும், சமயப் பிரச்சினைகளையும் மக்கள் அமைதியாகவும், ஆழ்ந்தும் சிந்திக்கத் தலைப்பட்டனர். ∴பிரான்சின் தேசியச்சபை[1] 1614-லிருந்து கூட்டப்படவில்லை. இந் நாட்டைச் சார்லஸ் பின் பற்று இருந்தால் என்ற அச்சம் மக்களுக்கு உண்டாயிற்று.

வென்ட்வொர்த், சார்லஸின் முதன்மையான அரசியல் அறிவுரையாளரானார். பக்கிங்ஹாம் இறந்தபின், இவர் அரச ரின் ஆதரவாளரானார். இவரைச் சார்லஸ், ஸ்டிரா∴போர்டின் கோமகனாக்கினார். இவர் முதலில் வடக்கெல்லை அவை (கவுன்சில்)யின் தலைவராக அமர்த்தப்பட்டார். பின், இவர் அயர்லாந்து சென்று, அந்நாட்டை உறுதியாக ஆட்சிசெய்தார். பதினோராண்டுத் தனிவல்லாட்சி முடிவுறும்போது இவர் இங்கி லாந்திற்கு அழைக்கப்பட்டார். எதிர்த்தரப்பினர் இவரைத் துரோகியென வெறுத்தனர். இவருடைய திறமையையும் மன உறுதியையும் கண்டு எதிரிகள் அஞ்சினர். ஆனால், இவர் நேர்மைப் பண்போடுதான் அரசரை ஆதரித்தார். எனவே, இவரைச் சமயக் கொள்கைகளைக் கைவிடுபவரென்று கருத வியலாது. பாராளுமன்றமுறை அரசாங்கத்தில் வென்ட் வொர்த்திற்கு நம்பிக்கை கிடையாது. நல்லறிவுரையாளர் களின் உதவியோடு மக்களின் நலனுக்காகப் பாடுபடும் முடி யாட்சிதான் இவருடைய குறிக்கோளாகும். தனி நலன்களை முற்றிலும் புறக்கணித்துச் சமூக நலனுக்காகப் பாடுபடத் தனி

[1] States General

வல்லாட்சி நடைபெற வேண்டுமென்பது இவருடைய கருத்தாகும். சொந்தநலனுக்காக எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தின் அதிகாரங்களைத் தவருகப் பயன்படுத்தினர்கள் என்பது இவர் கருத்து. திறமையில் நாட்டமுடைய இவர் இயல்பாகவே பக்கிங்ஹாமை எதிர்த்தார். ஆனல், பக்கிங்ஹாம் இப்பொழுது இறந்துவிடவே, இவர் அரசரோடு சேர்ந்துகொண்டார். வலிமைவாய்ந்த படையைத் திரட்டுவதால் இவருடைய குறிக்கோள் நிறைவேறுமெனக் கருதினர். இதை இவர் அயர்லாந்தில் செய்யத் தொடங்கினர். அயர்லாந்தின் தொழில்வளத்தைப் பெருக்க அரும்பாடுபட்டார். வடக்கெல்லை அவையைப் பயன்படுத்தி அமைதியை நிலைநாட்டினர். இவர் ஆங்கிலேயரின் வெறுப்பிற்குள்ளானர். ஏனெனில், வடக்கெல்லை அவையின் தலைவர் என்ற முறையில் அவையின் ஆட்சிவரம்பைப் பெருமளவில் நீட்டித்தார்.

Laud.

அரசராகப் பதவியேற்றவுடன் சார்லஸ், லாடு என்பவரை லண்டனில் மேற்றிராணியாராக்கினர். சமயத்துறையில் இவர் அரசருக்கு அறிவுரை அளித்தார். 1633-க்குப்பின், இவர் கான்டர்பரியின் அதிமேற்றிராணியாராகப் பதவி உயர்வு பெற்றார். நேர்மைப் பண்பிற்கும், தூய வாழ்விற்கும், ஒழுங்குணர்விற்கும் எடுத்துக்காட்டாக இவர் இருந்தார். சமயக் கருத்துகளுக்காக இவர் யாரையும் தண்டிக்கவில்லை. சமய ஒறுப்பில் இவருக்கு நம்பிக்கையில்லை. ஆனல், சில கருத்துகளை இவர் வன்மையாகப் பற்றிநின்றார். ஆர்மீனியக் கருத்துகளை இவர் ஆதரித்தார். மேற்றிராணியார்களின் அதிகாரத்தை நிலைநாட்டினர். அரசரின் தனிமுதன்மை நிலையை ஆதரித்தார். சமயக் கருத்துவேறுபாடுகளைப் பொதுமேடைகளில் விவாதிப்பதை இவர் விரும்பியதில்லை. எனவே, இத்தகைய விவாதங்களை இவர் தடுத்தார். மேற்றிராணியார்களின் அதிகாரத்தைத் தாக்கியவர்களை இவர் கொடுமையாகத் தண்டித்தார். விண்மீன் நீதிமன்றத்தை இவர் இதற்காக நன்கு பயன்படுத்திக்கொண்டார். லாடைப் பின்பற்றியவர்கள் சிறுபான்மையினராக இருந்ததால் அரசரைச் சார்ந்திருந்தனர். அரசரின் அதிகாரத்தை உயர்த்திப் பேசினர். பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் இவரை எதிர்த்தார்கள். மறுபடியும் திருச்சபையைக் கத்தோலிக்கத் திருச்சபையாக்க ஒரு பெரிய சதி நடைபெறுவதாகச் சிந்தனையாளர்களுள் பெரும் மனக்குறை காணப்பட்டது. கத்தோலிக்கச் சமயத்தின் கோட்பாடுகளையொத்த கோட்பாடுகளைக்

கொண்ட நூல்கள் மக்களிடையே பரவிவந்ததைக் கண்டு இவர்கள் அஞ்சினர்கள். திருச்சபையில் காணப்பட்ட சடங்கு களின் வளர்ச்சியும், போப்பாண்டவரின் பதிலாட்களோடு அரசர் கொண்டிருந்த தொடர்பும் மக்களுக்குப் பேரச்சமூட்டி யது. அரசியார் ஒரு கத்தோலிக்கச் சமயத்தினராக இருந் தது, மேலும் மக்களுடைய அச்சத்தை அதிகரித்தது. தூய்மை யான சமயத்தை அழிக்கும் துரோகியாகவும், திருச்சபையைப் போப்பாண்டவரின் ஆதிக்கத்துக்குட்படுத்துபவராகவும் மக்கள் இவரைக் கருதினர். இதன் விளைவாகப் பல பியூரிட்டன் குடும்பங்கள் அமெரிக்காவில் சென்று குடியேறின.

அப்பொழுது நிலவிவந்த மனக்குறைகள் ஒரு புரட்சியை உருவாக்கியிருக்கமுடியாதெனினும், சார்லஸின் பொறுக்க முடியாத வரிவிதிப்புகள் இதற்குதவியாக இருந்திருக்க முடியும். நாடு செழிப்புடன் இருந்தது. வரிப்பளுவும் மற்ற நாடுகளைவிடக் குறைவாகவே இருந்தது. ஆகவே, நிதிக் காரணங்களால் புரட்சி ஏற்பட்டிருக்க முடியாதென்பது ராம்சேமூர்[1] என்பாரின் கருத்தாகும். அரசாங்கம், சமயம் ஆகியவைபற்றிய பெரும் பிரச்சினைகளால் மக்கள் கொதிப் படைந்திருந்தனர். அரசரின் வரிவிதிப்பு இக் கொதிப்பை மேலும் அதிகரித்தது. பாராளுமன்றத்தின் தடைவிதிப்பு களுக்கு உட்படாத சட்டங்களையும் வழக்கங்களையும் ஆராய்ந்து வரிவிதிப்பிற்காக உக்திகளைக் கண்டறிய சார்லஸ், பொருளாளராகிய வெஸ்டனின்[2] உதவியையும், வழக்கறிஞர் நாயகமாகிய நொய் என்பவரின் உதவியையும் நாடினர். ∴பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகளுடனை போர் முடிந்ததும் கடுமையான சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. போருக்கான கடனைத் திருப்பித்தரவும், நடப்புச் செலவுகளைச் சமாளிக்கவும் அரசருக்குப் பணம் தேவைப்பட்டது. எனவே, பலமுறைகள் கையாளப்பட்டன. டன் எடை வரியும் பவுண்டுக் குட்டணமும் வசூலிக்கப்பட்டன. வணிக வளர்ச்சியால் இதன் மூலம் அரசருக்கு நிறையப் பணம் கிடைத்தது. கட்டாயக் கடன்களும் வசூலாயின. கம்பெனிகளுக்குத் தனியுரிமைகள் அளிக்கப்பட்டன. விடுபட்டுப்போன வீரத்திருத்தகைப் பட்டங்கள் மீண்டும் வழங்கப்பட்டன. இப் பட்டத்தைப் பெறு தற்கு நாற்பது பவுன் வருமானம் இருந்தால் போதுமானது. இப் பட்டங்களைப் பெறுபவர்கள் அரசருக்கு நிலமானிய நிதி

[1] Ramsaymuir

[2] Weston

உதவிகளைச் செய்யவேண்டும். இச் சட்டம், எலிசபெத் அரசியார், முதலாம் ஜேம்ஸ் ஆகியவர்களின் காலத்தில் செயற்பாட்டில் இருந்தது. இப் பட்டத்தைப் பெற்றவர்கள் கடமைப் பொறுப்புகளில் இருந்து தவறினால், தண்ட விதிப் பிற்குள்ளாவார்கள். இதேபோல், வனச் சட்டங்கள் (Forest Laws) மீண்டும் செயற்படுத்தப்பட்டன. பழைய வனங்களின் எல்லைகளை அளந்து கணக்கிட அரச ஆணையர்கள் அனுப்பப் பட்டார்கள். எல்லைகளை ஆக்கிரமிப்புச் செய்தவர்களிடமிருந்து தண்டப்பணம் திரட்டப்பட்டது. இவ் வனச்சட்டங்களின் பிடியிலிருந்து தப்ப விரும்புகிறவர்கள் ஒரு மொத்தமாகத் தண்டம் செலுத்திவிட்டு விடுபடலாம். சார்லஸ் இம் முறையை முதன் முறையாகப் பயன்படுத்தவில்லையெனினும், இதனால் மக்களிடையே ஏற்பட்ட வெறுப்புணர்வு அளவு கடந்துவிட்டது. பொருள்திரட்டும் நோக்கத்தோடு வழக் கொழிந்த இடைக்காலச் சட்டங்கள் பலவற்றைச் சார்லஸ் மீண்டும் செயற்படுத்தினர். சார்லஸின் இச் செயல் மக்க ளிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

Shipmoney:

1634-ல் ஃபிரான்சு, பெல்ஜியத்தின் ஒரு பகுதியை ஆக்கிர மிக்கும் அபாயம் இருந்தது. டச்சு வணிகப் பெருக்கமும், டச்சுக் கப்பற்படையின் வளர்ச்சியும் ஆங்கிலேயரை அச் சுறுத்தின. ஆகவே, கப்பற்படையை வலுப்படுத்த சார்லஸ் கப்பற்பணத்தைத் திரட்ட முடிவுசெய்தார். எனவே, 1634-ல் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கப்பல்களையும், இவைகளைப் பேணுவதற்குப் போதிய பணத்தையும் அளிக்குமாறு கரை யோர நகரங்களுக்கு அரசர் கட்டளையிட்டார். இக் கட்டளை பழைய வழக்கத்தையொட்டியே இருந்தது. 1635-ல் பிறப் பிக்கப்பட்ட கட்டளை இக் கடமைப் பொறுப்புகளை நாடு முழு வதற்கும் நீட்டித்தது. பாராளுமன்றத்தின் இசைவைப் பெரு மல் இத்தகைய வரிகளைத் திரட்ட அரசர் அனுமதிக்கப்பட்டால், பாராளுமன்றத்தைக் கூட்டாமலேயே அரசர் நிதித் தேவை களை நிறைவுசெய்துகொள்ளலாம் எனும் அச்சம் மக்க ளிடையே நிலவியது. மேலும், மறைமுக வரியைவிட நேர்முக வரியை மக்கள் பெரும் சுமையாகக் கருதினர்கள். மற்ற வரி களைப்போலன்றிக் கப்பற்பணம் அவ்வப்போது விதிக்கப்படும் வரியேயாகும். ஆனால், 1635-ல் மற்றொரு கட்டளையால் சார்லஸ் இவ் வரியை நிலையானதாகச் செய்தார். இக் கட்டளையையொட்டி வரி விதிக்கும்படி அரசப் பேராட்களுக்கு அரசர் கட்டளையிட்டார். இவருடைய நிலையை வலுப்படுத்திக் கொள்ள இக் கட்டளையின் சட்டக்கூறுகளை ஆராய்ந்து

அறிவுரை கூறுமாறு அரசர் நீதிபதிகளின் உதவியை நாடினர். நீதிபதிகளின் கருத்துகள் அரசருக்கு ஆதரவாக இருந்தன. இருப்பினும், பக்கிங்ஹாம் ஷயரின் பேராள், ஹாம்டன்[1] என் பாரின் வரியை 1637-ல் மதிப்பீடு செய்தபொழுது, இவர் இவ் வரியைச் செலுத்த மறுத்துவிட்டார். இவ் வரி சட்ட விரோத மானதெனவும் வாதித்தார். இவரிடமிருந்து கோரப்பட்ட வரி 20 ஷில்லிங் ஆகும். இதைக் கடுமையான வரியெனச் சொல்ல முடியாது. எனவே, ஒரு கருத்தின் அடிப்படையில் இவர் வரிகொடுக்க மறுத்தார். பாராளுமன்றத்தின் இசைவில்லா மல் விதிக்கப்படும் வரியென்பதை ஹாம்டன் நன்கறிந்திருந் தார். இவர் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையென்றால் பாராளு மன்றமும் கூட்டப்பட்டிருக்காது.

ஒரு சோதனை வழக்காக விசாரிக்க, நிதித்துறை நீதி மன்றத்தின்முன் இது கொண்டுசெல்லப்பட்டது. இங்கு அனைத்து நீதிபதிகளுமிருந்து இந்த வழக்கை ஆராய்ந்தனர். நாட்டுப் பாதுகாப்பின் தனிப்பட்ட சேவைக்கு ஈடாகக் கப்பற் பணம் திரட்டுவது பழைய வழக்கமென்றும், நாட்டிற்கு ஆபத்து உள்ளதென்பதை அரசர்தான் முடிவுசெய்யவேண்டு மென்றும் அரசரின் சார்பில் வாதிக்கப்பட்டது. கப்பற் பணத்தை உள்நாட்டுப் பகுதிகளுக்கு நீட்டிப்பதற்கு முன் னிகழ்வுகள் இருந்தன. ஹாம்டன் சார்பில் வழக்குரைத்த வர்கள், பாராளுமன்றத்தின் இசைவின்றி வரிவிதிப்பது உரிமை விண்ணப்பத்தால் தடைசெய்யப்பட்டுள்ளதென்று வாதாடினர்கள். இருதரப்பினரும் முன்னிகழ்வுகளைக் காட்டி வாதித்தனர். 12 நீதிபதிகளில் ஏழு நீதிபதிகள் அரசருக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தனர். 5 நீதிபதிகள் எதிர்த்துத் தீர்ப்புக்கூறினர்கள். எடுத்துக்கொண்ட அடிப்படையான கருத்துகளையொட்டி இரண்டு நீதிபதிகள் இணங்காக் கருத்து களைக் கூறினர்கள். அரசரின் இறைமை, பாராளுமன்றத்தில் அரசரின் இறைமை (King-in-Parliament) ஆகிய இரு கருத்து களின் மோதலே இத் தீர்ப்பு தெளிவாக வெளிப்படுத்தியது.

சில குறிப்பிட்ட வரையறை செய்யப்படாத அதிகாரங் களை அரசர் பெற்றிருந்தார் என்பதும், தம் சொந்த விருப்பில் எதைச் செய்யக்கூடாதென உறுதி கூறியிருக்கிறாரோ அதைத் தவிர இவர் எதையும் செய்யலாமென்பதும் தெரிந்ததே யாகும். ஆகவே, சிறப்பதிகாரங்கள் இரட்டிப்பானவையென

[1] Hampden

நீதிபதிகள் வரையறுத்தார்கள். அரசரின் இயல்பான அதிகாரங்கள் சட்டத்தின்படி செயல்படுத்தப்பட்டன. நாட்டின் நலனிற்காக அரசரால் செயல்படுத்தப்பட்ட இவ் வியல்பு மீறிய அதிகாரம் அரசரின் உசிதம்போல் செயற்படுத்தப் பட்டது. இதைப்பற்றிய தெளிவற்ற நிலை அகற்றப்படாத வரை மோதலைத் தவிர்க்கமுடியாது. சிறப்பதிகாரத்தாலன்றி இவ் வரியை அரசர் விதித்திருக்க முடியாதென்பதை நீதிபதிகள் தெளிவுபடுத்தினர்கள். சட்டத்திற்கு மாறான வரிகளைத் தடுத்துநிறுத்தும் பாராளுமன்றச் சட்டங்களின் திறனை மறுக்கமுடியாதென்பதை அறிந்த நீதிபதிகள், அரசரின் "முழுமை"யான அதிகாரத்தின்மீது தம் முடிவுகளைச் செய்யவேண்டியிருந்தது. பாராளுமன்றத்தின் நிதியுதவியை எதிர்பார்த்திருக்காமல் அரசர், நாட்டுப் பாதுகாப்பிற்கு நிதி திரட்டலாமென இவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். ஏனென்றால், எதிர்பாராத இடரைச் சமாளிக்கப் பணம் உடனடியாகச் செலவிடப்படலாம். ஆயினும், அரசருடைய "முழுமையான" அதிகாரம் இவரைச் சட்டத்திற்கப்பாற்பட்டவராகச் செய்து விடவில்லை. இவ் வதிகாரத்தினால் அரசரது கட்டளைகள் சட்டத்தின் திறனைப் பெறலாமென நீதிபதிகள் அறிவித்தனர். இப்படிக் கூறினாலும், அரசரை வல்லாட்சியாளரெனக் குறிப்பிட இவர்கள் தயங்கினர்கள். அரசரை ஆதரித்த நீதிபதிகள் கூட, சட்டத்திற்கப்பாற்பட்டவரென அரசரைக் கூறவில்லை. தலைமை நீதிபதி :பிஞ்ச்[1] என்பவர், "பாராளுமன்றத்தால்கூட அழிக்கமுடியாத சில குறிப்பிட்ட அதிகாரங்களை அரசர் பெற்றிருக்கிறார்" எனக் கூறினர். இப் பிரச்சினையையொட்டிய நிகழ்ச்சிகளே ஆண்டுதோறும் மோதலை உண்டாக்கின. பிற்காலத்தில் நீடித்த பாராளுமன்றம் இத் தீர்ப்பைக் கண்டனம் செய்தது. நேரடியாக வழக்குடன் தொடர்பில்லாக் கருத்துகளை நீதிபதிகளிடமிருந்து பெறும் வழக்கத்தையும் இது கண்டனம் செய்தது.

எனவே, ஒரு புரட்சி ஏற்படுவதற்குரிய பொதுவான குறைபாடுகள் இருந்தன. ஆனால், அக் காலத்தில் மக்களின் கருத்தை வெளிப்படுத்த முறையான நிறுவனமெதுவுமில்லை. மக்களின் கருத்துகளைப் பாராளுமன்றம் வெளிப்படுத்த முடியும். பாராளுமன்றம் தொடர்க்கூட்டத்தில் இல்லையென்றால் எதிர்ப்புகளைத் தெரிவிக்க இயலாத ஒரு நிலையில் மக்கள் இருந்தனர். பாராளுமன்றமும் கருத்துகளை முறை

[1] Finch

யாக வெளியிட முடியாமல் தவித்தது. ஸ்காட்லாந்தில் தலையிட்டுச் சார்லஸ் தம்முடைய அரசாங்கத்தின் நல்வாய்ப்பு களை கெடுத்துக்கொண்டார். ஸ்காட்லாந்திய சமயச் சீர்திருத்த இயக்கம் ரோமானியத் திருச்சபைக்கெதிரான வெறுப்பை உருவாக்கியது; மக்களும் சமயத்துறையில் ஈடுபாடுகொள்ளத் தூண்டியது. இது ஒரு விதமான தேசிய உணர்வை எழுப்பி, பிரிஸ்பிடீரியத் திருச்சபையில் மக்கள் ஆர்வம் கொள்ளுமாறு செய்தது. ஜேம்ஸும், சார்லஸும் இத் திருச்சபை அமைப்பை எதிர்த்தனர். ஏனெனில், இவ் வமைப்பு அரசரின் அதிகாரங்களுக்குத் தடைவிதிக்க முயன் றது. எனவே, அரசரின் அதிகாரத்தை வளர்க்க உதவும் ஆங்கிலிக்கன் திருச்சபையைப் புகுத்த இவர்கள் முயன்றனர். எனினும், ஜேம்ஸ் அரசரால் அமர்த்தப்பெற்ற மேற்றிராணி யார்கள் இந் நாட்டில் செல்வாக்குப் பெறவில்லை. ஸ்காட் லாந்தை ஆட்சிசெய்த பிரிவி கவுன்சிலர்களும் மக்களின் விருப்பைத் தேடிக்கொள்ளவில்லை.

1637

சார்லஸ் 1637-ல் இம் மக்களின் மீது ஒரு புதிய வழிபாட்டு நூலைப் புகுத்தினர். இந் நூல் கத்தோலிக்கச் சமயத்தைப் பின்பற்றியமைந்ததாகத் தோன்றியது. எனவே, ஒரு பொதுவான எதிர்ப்பு உருவாகியது. சார்லஸின் சமய மாற் றங்களை எதிர்க்கும் வயதுவந்த ஆண்கள் அனைவரும் ஒரு தேசிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்கள். ஸ்காட்லாந்து மக்கள் கிளர்ந்து எழுந்தனர். எப்படியாவது சார்லஸ் அதி காரத்தை இங்கு நிலைநிறுத்திக்கொள்ள முயன்றார். இவ ருடைய பணமுடை காரணமாக எவ்விதநடவடிக்கையும் எடுக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்தார். ஆனால், போரிட வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்படவே அரசர் பெரும் தொல்லைகளுக்குள்ளானார். தம்முடைய விருப்பத்தை நிறை வேற்றத்தக்க படைபலம் சார்லஸிடம் கிடையாது. மேலும், இவருக்கு மக்களின் ஆதரவுமில்லை. எனவே, இவர் ஸ்காட் லாந்தோடு உடன்பாடு செய்துகொள்வதைத்தவிர வேறு வழி இல்லை என்பதை அறிந்தார். 1639-ல் ஓர் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

இந் நெருக்கடி காலத்தில், சார்லஸ் வென்ட்வொர்த்தை இங்கிலாந்திற்கு அழைத்து, அவரை ஸ்டிராஃபோர்டு கோமக னாக்கினர். நிதியுதவி பெறுவதற்காக அவருடைய ஆலோசனை யின்பேரில் சார்லஸ் பாராளுமன்றத்தைக் கூட்டினர். ஸ்காட் லாந்தின் படையெடுப்பை இங்கிலாந்து எதிர்நோக்கியிருந்த

தால், பாராளுமன்றம் அரசரை ஆதரிக்குமென நம்பியிருந்தார். ஆனல், பிம் என்பவரின் தலைமையில் கூடிய பாராளுமன்றம் அரசாங்க நடவடிக்கைகளைக் கண்டித்து நிதியுதவியளிக்க மறுத்துவிட்டது. எனவே, இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. இதன் கூட்டம் குறைந்தகாலம் நடைபெற்றதெனினும், பாராளுமன்றத்திற்கு மக்களிடமிருந்து எத்தகைய ஆதரவு கிட்டியதென்பது இப்பொழுது வெளியாயிற்று. பாராளுமன்றம் பெருத்த எதிர்ப்பாக மட்டும் உருவாகாமல் பெரும் திறமைமிக்க தலைவர்களையும் கொண்டிருந்தது. மக்களின் ஆதரவின்றி அரசர் ஸ்காட்லாந்தின்மீது படையெடுக்கிறார் என்பதை இது வெளிப்படுத்தியது. ஆகவே, அரசரின் வெற்றி வாய்ப்புகளை இக் குறுகியகாலப் பாராளுமன்றம் அழித்துவிட்டது. அரசர் இப்பொழுது பேரவையைக் கூட்டினர். இப் பேரவையோ பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு அறிவுரையளித்தது. வேறு வழியின்றி அரசர் பாராளுமன்றத்தைக் கூட்டினர். தேர்தலில் எதிர்த்தரப்பிற்குப் பெரும் வெற்றி கிட்டியது. 1640 நவம்பரில் கூடிய இப் பாராளுமன்றம் 1660 வரையில் நீடித்த பாராளுமன்றமென்ற பெயரில் இருந்துவந்தது.

நீடித்த பாராளுமன்றம் (1640—1660) Long Parliament

1640-லிருந்து 1649-க்குள் இப் பாராளுமன்றம் சில சிறந்த பணிகளைச் செய்தது. இப் பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடரில் பல சீர்திருத்தங்கள் நிறைவேறின. இதன் இரண்டாவது கூட்டத்தொடரில் பல புரட்சிகரமான சட்டங்கள் நிறைவேறின (1641—42). இப் பாராளுமன்றம் உறுதியோடு செயற்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் வெறும் அனுபவம் மட்டுமின்றி, அரசரோடு தொடர்புகொள்ளும் முறையையும் அறிந்துகொண்டிருந்தனர். நாட்டை எதிர் நோக்கிய பிரச்சினைகளை இவர்கள் நன்கறிந்திருந்தனர். பாராளுமன்றத்தோடு பரிவுணர்வு கொண்டிருந்த ஸ்காட்லாந்தியப் படை 1641 வரை இங்கிலாந்தின் வடக்கெல்லையில் நிலை கொண்டிருந்தது. அரசரின் அதிகாரத்தை அழிக்க, இப் படையைப் பாராளுமன்றம் பயன்படுத்திக்கொண்டது. இதற்குப் பாராளுமன்றம் நிதிஉதவியளித்தது. பெருமக்கள் சபை அரசரை ஆதரித்தபோதிலும், கடுங்குற்ற விசாரணையால் அரசரின் ஆதரவாளர்கள் தண்டிக்கப்படவே மேல் சபையும் தலைவர்களை இழந்தது. வலிமைமிக்க ஒரு சிறுபான்மையினர் பொதுமக்கள் சபைக்கு உதவியாக இருந்தனர்.

ஆகவே, நீடித்த பாராளுமன்றத்தை அரசரால் எதிர்க்கமுடியாது போயிற்று.

முதலில் சீர்திருத்தங்கள் ஒருமனதாக நிறைவேறின. விரும்பாத மசோதாக்களுக்கு இசைவுதர அரசரால் மறுக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. நீடித்த பாராளுமன்றத்தின் முதல் பத்து மாதங்களில் அடுத்தடுத்து நிறைவேறிய மசோதாக்கள் அரசரின் அதிகாரமின்மைக்கு எடுத்துக்காட்டாக இருந்தன. பாராளுமன்றத்திற்குதவியாக ஆயுதப்படையொன்று இருந்ததை நாம் முதன்முறையாக இப்பொழுது அறிகிறோம்.

அரசரின் ஆட்சிமுறைக்கு மூவாண்டுச் சட்டம் (Triennial Act) ஒரு பேரிடியாக இருந்தது. பாராளுமன்றம் மூன்றாண்டிற்கொருமுறை கூட இச்சட்டம் வகைசெய்தது. அரசர் பாராளுமன்றத்தைக் கூட்டத் தவறினாலும், இதைக் கூட்டுவதற்கு இச்சட்டம் ஒரு நிறுவன அமைப்பை நிறுவியது. பாராளுமன்றம் மூன்றாண்டிற்குமேல் தொடர்ந்திருக்கலாகாது. பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை வரையறைசெய்யும் கருத்து தொடர்ந்து இருந்துவந்தது. பாராளுமன்றம் கூடுவதற்குக் குறிப்பிடப்பட்ட ஐம்பது நாட்களுக்குள்ளாக அரசர் இதைக் கலைக்கவோ, கூட்டத்தொடரை ஒத்திவைக்கவோ, அன்றுடக் கூட்டத்தைத் தள்ளிவைக்கவோ கூடாது. அரசர் இவைகளைப் பாராளுமன்றத்தின் ஒப்பிசைவோடு செய்யலாம். ஆனால், பாராளுமன்றத்தை அழைக்கும் அரசரின் சிறப்பதிகாரத்தை இச்சட்டம் விலக்கிவிடவில்லை. அரசரின் சிறப்பதிகாரம் குறிப்பிட்ட காலத்திற்குள் செயற்படுத்தப்படவில்லை என்றால், மாற்றுச் செயல்முறையொன்று மேற்கொள்ளப்படும். முன்னிலை மீட்சிக்குப்பின், 1694-ல் இச்சட்டம் நீக்கப்பட்டுப் புதிய சட்டமொன்று செயற்பாட்டிற்கு வந்தது. அக்காலத்தில் பதவியில் இருந்த பாராளுமன்றத்தை இச்சட்டம் தொடர்ந்து மூன்றாண்டிற்குப் பதவியில் இருக்கும்படி செய்தது. அரசரின்மீது இச்சட்டம் நிர்ப்பந்தம் எதையும் விதிக்கவில்லை. எனவே, இரண்டாம் சார்லஸும், இரண்டாம் ஜேம்ஸும் இந்தச் சட்டத்தைப் புறக்கணித்துவிட்டு, நீண்டகாலத்திற்குப் பாராளுமன்றமின்றி ஆட்சிசெய்தார்கள்.

மீண்டும் அதிகாரம் பெற்று அரசர் பாராளுமன்றத்தை அழிக்கமுயன்றால், அத்தகைய முயற்சியைத் தவிர்க்கப் பாராளுமன்றம் அரசரின் அமைச்சர்களைக் கண்டிக்க முற்

பட்டது. 1641 ஏப்ரலில் ஸ்டிரா.:போர்டு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார். மிகத் திறமையோடு இவர் வாதாடினர். விசாரணை தொடரும்பொழுது இவரைத் தண்டிக்க முடியாதென்பது தெளிவாயிற்று. எனவே, பொதுமக்கள் சபை கடுங்குற்ற விசாரணையைக் கைவிட்டு, தப்பித்துக் கொள்ள அனுமதிக்கமுடியாத, ஆபத்தான எதிரியென இவரைக் குற்றஞ்சாட்டி, மரணதண்டனை விதிப்புச்சட்டத்தை நிறைவேற்றியது. வடக்கேயுள்ள படையை லண்டனுக்குக் கொண்டுவர அரசியாரும், சில அவையினரும் முயன்ற செய்தி வெளியாகவே, பெருமக்கள் சபையும் இச் சட்டத்திற்கு இசைவளித்தது. அரண்மனையைச் சூழ்ந்துகொண்டு ஒரு பெருங்கூட்டம் இச் சட்டத்திற்கு அரசர் இசைவளிக்க வேண்டுமென வற்புறுத்தியது. சட்டம் ஏற்கப்பட்ட மூன்று நாட்களுக்குப்பின், ஸ்டிரா.:போர்டு லண்டன் சிறையில் கொல்லப்பட்டார். மக்களைத் திரட்டி அரசரைப் பணிய வைத்த இந்த முறை மேலும் வன்முறையைப் பயன்படுத்திப் பியூரிட்டானிசம் அரசியலில் பெற்றிருந்த செல்வாக்கை அழிக்கப் பயன்படுத்தப்பட்டது.

ஸ்டிரா.:போர்டின் விசாரணை நடந்துகொண்டிருந்த பொழுதும், சில மாதங்கள் கழிந்தபின்னும், அதிகார வெறியால்உந்தப்பட்ட பாராளுமன்றம்ஸ்டுவர்ட்டுகளின் அரசாங்க முறையை அகற்றிவிடுவதில் ஈடுபாடு கொண்டது. விண்மீன் நீதிமன்றமும் உயர்ஆணை நீதிமன்றமும் ஒழிக்கப்பட்டன. பாராளுமன்றத்தின் இசைவைப்பெறுத வரிகள் சட்டத்திற்கு மாறுனவைகளாக அறிவிக்கப்பட்டன. "நன்னடத்தை உள்ள வரை பதவியில்" இருக்கலாமென்ற கருத்தை ஏற்கும்படி அரசர் வற்புறுத்தப்பட்டார். இரண்டு பாராளுமன்றக் கூட்டங்களுக்கிடையேயான இடைவெளி மூன்றாண்டிற்குமேல் இருக்கக்கூடாதெனச் சட்டமியற்றப்பட்டது. மேலும், அப்பொழுது கூடியிருந்த பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி அதைக் கலைக்கக்கூடாதெனவும் சட்டம் குறிப்பிட்டது. இச் சட்டங்களெல்லாம் பொதுமக்கள் சபையில் எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேறின. மேற்றிராணியார் திருச்சபை ஆட்சி முறையை வேரோடு களைந்துவிடவேண்டுமென ஒரு தரப்பினர் கருத்துரையளித்தபோதும், சமயப் பிரச்சினைகள் ஆராயப்படும்போதும் ஒருமித்த உணர்வு சபையில் இருக்கவியலாதென்பது தெரியவந்தது.

1641-ல் பாராளுமன்றம் மறுபடியும் கூடியபொழுது அயர்லாந்தில் புரட்சி தோன்றியது. இது முதலில் அல்ஸ்ட

ரில் தோன்றிப் பின் மன்ஸ்டருக்குப் பரவியது. இப் புரட்சி சில புதிய அரசியலமைப்புச் பிரச்சினைகளை எழுப்பியது. இப் புரட்சியை ஒடுக்கவேண்டுமெனில் ஒரு படை தேவைப்பட்டது. பொதுமக்கள் சபை ஒரு படையைத் திரட்ட அரசருக்கு நிதி யுதவியளிக்குமெனில், இப் படையை, எதிர்ப்பை ஒடுக்க அரசர் பயன் படுத்தினால் என்ன செய்வது?

பாராளுமன்றத்தின் இக் கூட்டத்தொடர் ஒரு பெரும் கண்டன அறிக்கையோடு தொடங்கியது. முந்திய கூட்டத் தொடரின் பணிகளை இவ் வறிக்கை விரிவாகக் குறிப்பிட்ட தோடு, மேலும் பல சீர்திருத்தங்களையும் குறிப்பிட்டது. "பாராளுமன்றத்தின் நம்பிக்கைக்குரியவர்களே அமைச்சர் களாக இருக்கவேண்டு"மென்று பிம் என்பார் குறிப்பிட்ட கருத்தும் இதில் அடங்கும். திருச்சபையில் சில தீவிர மாற் றங்களையும் இப் பெருங் கண்டன அறிக்கை கொண்டிருந்தது. திருச்சபையின் பிரச்சினைகளைத் திருச்சபையினரின் முடிவிற்கு விட்டுப் பின் இம் முடிவுகளைப் பாராளுமன்றத்தின் ஆய்விற்கு விடவேண்டுமென அறிக்கை கூறியது. அறிக்கையை வரைந்த வர்கள், திருச்சபையின் ஆட்சி, வழிபாடு, ஆகியவைகளில் அர சராலும் மேற்றிராணியாராலும் செயற்படுத்தப்பட்ட முறைக ளன்றித் தம் முறையைப் புகுத்த விரும்பினர். சமயக் கருத்து களை சபை விவாதித்தபொழுது சபையின் ஒற்றுமை குலைந் தது. சபையின் விவாதங்கள் இரத்தக்களரியில் முடிவடை யலாமென அஞ்சப்பட்டது. இக் கண்டனப் பேறிக்கை பதினேரு உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவோடு சபையில் நிறைவேறியது. இதன் நிறைவேற்றத்தோடு சபை யில் அரச ஆதரவாளர்களின் கட்சியொன்று .:பால்க்லாண்டு, ஹைடு ஆகியவர்கள் தலைமையில் உருவாயிற்று. முந்திய காலத் திய சீர்கேடுகள் அழிக்கப்பட்டுவிட்டன என நம்பிய .:பால்க் லாண்டு, பிம் போன்றவர்களிடமிருந்து விலக்கிகொண்டார். இப் புதிய கட்சி, திருச்சபை, அரசர் ஆகியோரின் கட்சி யென்ற பெயரில் இயங்கிற்று. அடுத்து நிகழ்ந்த போர் அரசி யல் பிரச்சினைகளுக்காக மட்டுமன்றிச் சமயப் பிரச்சினைகளுக் காகவும் நடந்ததெனலாம்.

உடனடியாக, குருமார் தொகுதியினரின் உரிமை இழப் புச்சட்டம் நிறைவேறியது. இதனால், மேற்றிராணியார்கள் சமயச் சார்பில்லாத் துறைகளில் செலுத்திவந்த அதி காரத்தை இழந்தனர். பெருமக்கள் சபையில் மேற்றிராணி யார்கள் வாக்களிக்கும் உரிமையையும் இழந்தார்கள். பொது

மக்கள் சபை இப் பிரச்சினையை ஆராய, மூன்று முயற்சிகள் மேற்கொண்டன. முதல்முயற்சியைப் பெருமக்கள் சபை தோற்கடித்தது. "வேரோடு களையும் மசோதா[1] திருச்சபையின் மேற்றிராணியார் ஆட்சிமுறையை ஒழிக்க முற்பட்டது. இது இரண்டாவது முயற்சியாகும். சார்லஸ் லண்டனைவிட்டுச் செல்லுமுன், பாராளுமன்றத்திற்களித்த சலுகையைச் சபையின் மூன்றாவது முயற்சியெனலாம். மேற்றிராணியார்களைப் பெருமக்கள் சபையிலிருந்து விலக்கிவைக்கும் மசோதாவைச் சபை 1642-ல் நிறைவேற்றியது. சார்லஸ் இசைவளித்த கடைசி மசோதாவாகும் இது. பெருமக்கள் சபையில் உள்ள அரச ஆதரவாளர்களைக் குறைக்கும் நோக்கத்தோடு பொது மக்கள் சபை இம் மசோதாவை நிறைவேற்றியது. முன்னிலை மீட்சிக்குப்பின், இம் மசோதா ஓரளவு நீக்கப்பட்டுவிட்டது. இதனால் மேற்றிராணியார்கள் மீண்டும் சபையில் இடம் பெற்றார்கள். ஆனால், திருச்சபை நீதிமன்றங்களைப் படைக்கும் அரசரின் சிறப்பதிகாரத் தடை தொடர்ந்து அப்படியே இருந்துவந்தது.

எதிர்க்கட்சியின் ஐந்து முதன்மையான தலைவர்களைக் கைது செய்வதால் எதிர்ப்பை அழித்துவிடலாமெனச் சார்லஸ் கருதினார். பெருங்குற்றவாளிகளின்மீது குற்றம்சாட்டுகின்ற அதிகாரத்தை அரசப்பதவி முதலில் பெற்றிருந்தது. இந்த அதிகாரத்தை மீண்டும் மீண்டும் செயல்படுத்திப் பாராளுமன்ற உயர் தலைவர்களைச் சிறையிட அரசர் இப் பொழுது திட்டமிட்டார். எனவே, பிரிஸ்டலின் கோமகன்[2] மீது பெருமக்கள் சபையில் அரசர் குற்றஞ்சாட்டினர். 1641-ல் இதே முறையில், ஐந்து உறுப்பினர்களை எதிர்த்து அரசர் குற்றஞ்சாட்டினர். அரசரோடு போர்தொடுக்கும் அளவிற்குப் பிம்மும் இவரைப் பின்பற்றியவர்களும் வந்துவிட்டார்கள். அரசரின் முயற்சிகள் இப்பொழுது சட்டத்திற்கு முரணானவைகளாக்கப்பட்டன. எனவே, அரசரும் தம் முயற்சியில் இப்பொழுது தோல்வியடைந்தார். சபையின் தீவிரக்கட்சி இப்பொழுது பெரும் செல்வாக்குப் பெற்றது. அரசருக்குப் படைபலமளித்து, அழிவைத் தேடிக் கொள்ள விரும்பாத பாராளுமன்றம் நாட்டுப்படை மசோதா[3] ஒன்றைக் கொண்டுவந்து படையின் செயலாட்சிப் பொறுப்

[1] Root and Branch Bill
[2] Earl of Bristol
[3] Militia Bill

பைத் தன் சார்பில் வைத்துக்கொள்ள விரும்பியது. இச் செயல் அரசரின் சிறப்பதிகாரத்தில் குறுக்கிட்டதால் அரசர் இம் மசோதாவிற்கு இசைவைத்தர மறுத்துவிட்டார். அரச ரின் ஒப்புதலின்றி அவசரச் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பாராளுமன்றம் வலியுறுத்தியது. இது வரம்புமீறிய ஒரு செயலாகும். "பத்தொன்பது அறுதியுரை" என்ற தலைப்பில் பாராளுமன்றம் மேலும் சில கருத்துகளை அரசருக்கெடுத்துக் கூறியது. திருச்சபையின் கட்டுப்பாடு, அரசுத் துறைகளின் கட்டுப்பாடு, அரசக்குமாரர்களின் கல்வி ஆகியவைகளைப் பாராளுமன்றம் அதன் பொறுப்பில் விடுமாறு கேட்டது. அர சாங்கத்தைப்பற்றிய எதிர்த்தரப்பினரின் கருத்துகளை இந்த அறுதியுரைகள் வெளிப்படுத்தின. இக் கருத்துகள் அரசரின் அதிகாரத்தைக் குறைக்க விரும்புவதோடு நிற்காமல் அழிக் கவும் முற்பட்டன. இக் கருத்துகள் பழமையான உரிமைகளை வலியுறுத்தின என்பதைவிடப் புரட்சிகரமான மாற்றங்கள் பற்றிய அறிக்கைகள் எனக் குறிப்பிடலாம். இத்தகைய மிகுதியான கோரிக்கைகளை அரசர் ஏற்க மறுத்துவிட்டதால் உள்நாட்டுப்போர் நிகழ ஏதுவாயிற்று. போர் நடக்கும் பொழுது அமைதிக்காகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அடிப்படையான கருத்துகளில் ஒற்றுமை காணப் படாததால் இம் முயற்சிகள் தோல்வியுற்றன. ஒரு முடிவைப் பெற ஆதிக்கப் போராட்டம் நடைபெற வேண்டியதாயிற்று.

உள்நாட்டுப்போர் நடக்கும்போது, சமயம், நிதி ஆகியவை பற்றிய பிரச்சினைகள் பாராளுமன்றத்திற்கும் படைக்கு மிடையே கடுமையான கருத்துவேறுபாடுகளை உண்டாக்கின. பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோர் பிரிஸ்பிட்டீரி யர்களாக இருக்கையில், படையில் பெரும்பான்மையோர் சுயேச்சையாளர்களாக இருந்தார்கள். நிதிச் செயலாட்சியை மேற்கொண்ட பாராளுமன்றம் நிதிவீணழிவிற்கும் ஊழலுக்கு முள்ளாயிற்று. இதே சமயத்தில் படை ஒழுங்காக உணவை யும் ஊதியத்தையும் பெறுமல் இடர்ப்பட்டது. பாராளுமன்றம் அரசரோடு தொடர்புகொள்வதைக் கண்டு படை அஞ்சியது. எனவே, பாராளுமன்றத்தை முந்திக்கொண்டு 1647-ஆம் ஆண்டு சூன் மாதம் மூன்றும் நாள் படை அரசரைக் கைப் பற்றித் தன்வசம் வைத்துக்கொண்டது. அரசியலமைப்புத் திட்ட ஏற்பாடுகளைப் பாராளுமன்றம் அறுதியுரைகளாக 1647 ஆகஸ்டில், அரசர்முன் வைத்தது. இதன்படி, இராணுவ விவ காரங்களிலும், வெளிநாட்டுக் கொள்கையைச் செயல்படுத்து வதிலும் அரசருக்குத் துணைசெய்ய ஓர் அரசுக் கவுன்சில்

இருக்கவேண்டும். அடுத்த பத்தாண்டிற்கு அரசின் அலுவலர் களே அமர்த்தவும் நாட்டுப்படையைக் கட்டுப்படுத்தவும் பாராளுமன்றம் அதிகாரம் பெறவேண்டும். பிரதிநிதித்துவத் தைப் பரவலாக்கப் பாராளுமன்றத்திற்கான இடங்கள் பகிர்ந் தளிக்கப்படவேண்டும். பிராடெஸ்டெண்டு சமயத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் சமயப்பொறை அளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் அரசரின் அதிகாரத்தையும் குறைக்கும் ஏற்பாடாக இவை இருந்ததால் நேர்மையாகத் தோன்றின. ஆனால், இவைகளை அரசரும் ஏற்றுக்கொள்வதாக இல்லை. பாராளுமன்றத்தின் தீவிரவாதி களும் ஏற்பதாக இல்லை. "லெவலர்கள்"[1] என்ற தீவிரவாதிகள் முடியாட்சியை ஒழிக்கவேண்டுமென்றார்கள். ஸ்காட்லாந் திற்குச் சார்லஸ்தப்பிச்சென்று பாராளுமன்றத்தோடுபோரிட ஸ்காட்லாந்தியர்களோடு நிகழ்ச்சியில் ஈடுபட்டார். மீண்டும் படையினர் 1648 டிசம்பரில் அரசரை, காரிஸ்புரோக் என்னு மிடத்தில் கைப்பற்றினர். பாராளுமன்றப் பிரிஸ்பிட்டீரிய உறுப்பினர்கள் 140 பேர்களைக் கலோனல் பிரைடு[2] என்பவர் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளாதவாறு தடுத்து விட்டார். ஏனெனில், இவர்கள் முதலாம் சார்லஸ் மன்னரைத் தண்டிக்க உடன்படமாட்டார்கள் என இவர் அஞ்சினர். பிரைடின் இந் நடவடிக்கை பிரைடின் கழிப்பு[3] எனப்படு கிறது. இதனால் அதிகாரம் பாராளுமன்றச் சுயேச்சை உறுப் பினரிடம் நிலைபெற்றது. அரசரை விசாரிக்க இப் பாராளு மன்றம் 1649 ஜனவரியில், ஒரு நீதிமன்றத்தை நிறுவியது. இந் நீதிமன்றத்தை ஏற்படுத்த சுயேச்சை உறுப்பினர்கள் ஒருசிலரை மட்டுமே கொண்ட எஞ்சிய பாராளுமன்றத்திற்கு அதிகாரமில்லையென்றும், எனவே, இந் நடவடிக்கை சட்டத் திற்கு மாறுனதாகுமென்றும் வாதிக்கப்பட்டது. பிரபுக்கள் பலர் இந் நீதிமன்றம் நிறுவப்பட்ட முறையை எதிர்த்தனர். சார்லஸும் இதைச் சட்டமுரணை செயலென வாதித்து இதன் தீர்ப்பைத் தாம் ஏற்றுக்கொள்ளமுடியாதெனக் கூறி வழக் குரைக்க மறுத்துவிட்டார். எனினும், ஓர் அவசரச் சட்டத் தினால் மேற்குறிப்பிட்ட நீதிமன்றம் நிறுவப்பட்டது. இதில், மூன்று நீதிபதிகளும், 150 ஆணையர்களும் விசாரணையாளர் களாக அமர்த்தப்பெற்றனர். பெருமக்கள் சபை அவசரச் சட்டத்தை ஏற்க மறுக்கவே மூன்று நீதிபதிகளும் பதவியேற்க

[1] Levellers - Reformists.

[2] Pride

[3] Pride's Purge

மறுத்துவிட்டார்கள். இதன்பின், பொதுமக்கள் சபை அரசப் பதவியையும், பெருமக்கள் சபையையும் அகற்றிவிட்டு ஒரு தீர்மானத்தினுல் உயர் நீதிமன்றம் ஒன்றை உருவாக்கியது. இதில் 150 ஆணையர்கள் நீதிபதிகளாகவும் அறங்கூறும் அவையினராகவும் அமர்த்தப்பட்டார்கள். 1649-ஆம் ஆண்டு ஜனவரி 20-ஆம் நாள் விசாரணை தொடங்கியது. இதற்குப் பிராட்ஷா[1] என்பவர் தலைமைதாங்கினர். ஜனவரி 27-ஆம் நாள் அரசருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. 135 நீதிபதிகளில் அன்று 35 பேர்களே விசாரணையில் கலந்துகொண்டார்கள். இறுதிவரை சார்லஸ் தம் குற்றத்தை மறுத்துவிட்டார். ஜனவரி 30-ஆம் நாள் இவரது சிரம் துண்டிக்கப்பட்டது. இறக்கும்போது இவர் காட்டிய இயல்புமீறிய வீரமும் கண்ணியமும் மக்களின் உள்ளத்தை உருக்கின.

விசாரணை நடந்துகொண்டிருக்கும்பொழுது ஒரு புதிய அரசாங்க முறையை அலுவலர் அவை எடுத்துக்கூறியது. இதை இவர்கள் "மக்களின் உடன்பாடு" எனக் குறிப்பிட்டார்கள். இத் திட்டம் அரசப்பதவியை விட்டுவிட்டு, நிருவாகக்குழு ஒன்றினை நிறுவப்போவதாகக் குறிப்பிட்டது. மக்களின் சமய, அரசியல் உரிமைகளைப்பற்றிய அதிகாரங்களை இக் குழு பாராளுமன்றத்திடமிருந்து எடுத்துக்கொள்ளுமென அறிவித்தது. இடங்கள் மறு ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாக்குரிமைத் தகுதிப்பாடுகள் புதிதாக வரையப்படவேண்டுமென்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி அரச ஆதரவாளர்கள் ஏழாண்டிற்கு வாக்குரிமை இழக்கவேண்டும். பாராளுமன்ற உறுப்பினராக அமர்வது பதினைந்து ஆண்டிற்குத் தடைசெய்யப்படவேண்டும். இருந்தபோதிலும், உரிய முழுமையான இறைமையைப் பாராளுமன்றம் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. நாட்டின் பிரதிநிதிகள் எனச் சொல்லிக்கொள்ளக்கூடிய 125 உறுப்பினர்களைக்கொண்ட எஞ்சிய (Rump) பாராளுமன்றமொன்று பெயரளவில் தொடர்ந்து இருந்துவந்தது.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Gardiner : History of England

Tanner : Constitutional Conflicts of 17th Century

[1] Bradshaw

P. F. Keeler : The Long Parliament
Gobbett : Parliamentary History
Sham : English Church during the Civil War
W.H. Coates : Observations on the Grand Remonstrance
Firth : Advise of Lords

8. பொதுநல அரசு

(1649—1660)

(The Commonwealth)

1642 முதல் 1660 வரை அரசியலமைப்பு செயற்பாட்டில் இல்லையெனலாம். அரசாங்கம் நடைமுறையில் மக்கள் அரசாங்கமாக இருந்தது. உண்மையில் இக் காலம் இராணுவ ஆட்சிக்காலமாகும். எஞ்சிநின்ற பொதுமக்கள் சபை பாராளுமன்றத்தின் முழுமையான அதிகாரத்தை மேற்கொள்ள விரும்பியது. இச் சிறிய பொதுமக்கள் சபை எஞ்சிய பாராளுமன்றமெனப்[1] பெயர்பெற்றது. "மக்கள் உடன்பாடு" என்ற கருத்தின் அடிப்படையில் எஞ்சிய பாராளுமன்றம் முடியாட்சியையும் பெருமக்கள் சபையையும் நீக்கியது. சார்லஸின் வழித்தோன்றல்களிடமிருந்து இச் சட்டம் அரசரின் அதிகாரத்தையும் மாண்பையும் நீக்கியது. அரசர்மீது குடிமக்கள் கொண்டிருந்த பற்றுறுதியையும் இது விலக்கியது. குடியரசை அறிவித்து, அரசர்கள் மக்களால் அமர்த்தப்படும் அலுவலர்களென்றும் மக்களால் பதவிநீக்கம் பெறக்கூடியவர்களென்றும் பாராளுமன்றம் அறிவித்தது. எஞ்சிய பாராளுமன்றம் முழுப்பாராளுமன்றத்தின் அதிகாரத்தை ஏற்றுச் செயல்படுத்தியது. அரசாங்கம் அரசுக் கவுன்சிலால் நடைபெற்றது. இக் கவுன்சிலில் இடம்பெற்றவர்கள் படையிலிருந்தும் பாராளுமன்றத்திலிருந்தும் வந்தவர்களேயாவர். இவர்கள் பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டவர்களெனச் சட்டம் குறிப்பிடுகிறது. தனிமுறையில் அமர்த்தப்பட்ட வணிகக் குழுவைப்போல் அரசின் பல்வேறு துறைகளின் பணிகளைக் குழுக்கள் ஏற்றுச் செயல்படுத்தின. எனவே, ஒரங்கப் பாராளுமன்றம் நிருவாகக் கவுன்சிலைக் கட்டுப்படுத்தும் முறையில் அமைந்தது.

[1] Rump

ஓரங்கப் பாராளுமன்றம் செயல்திறமோடு செயல்பட்டது. இது மிகச்சிறந்த பணிகளை மேற்கொண்டது. கப்பற்படை புதிதாய் உருவாகியது. நாவாய்ச் சட்டத்தினால் வணிகம் வளர்ச்சியடைந்தது. சட்டத்தைச் சீர்திருத்த ஒரு குழு அமர்த்தப்பட்டது. ஒழுங்கீனங்கள் தண்டிக்கப்பட்டன. அரச ஆதரவாளர்களின் சொத்துகள் பறிமுதலாயின. திருச்சபையின் நிலமும் அரசரின் நிலமும் விற்பனையாயின. மிகத் திறமையான வரிவிதிப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஓரளவு சமயப்பொறையை அளிக்க மக்கள் உடன்பாடும் பின்பற்றப்பட்டது. "மக்கள் உடன்பாட்டின்" முக்கியமான கருத்தாகிய பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தையும் அதன் அதிகார வரையறைகளையும் எஞ்சிய பாராளுமன்றம் புறக்கணித்தது. இதன் ஆட்சி ஊழல்களுக்குள்ளாகி ஒரு கொடுங்கோலாட்சியாக மாறியது. இது "லெவலர்" களின் எதிர்ப்புக்கும் அரச ஆதரவாளர்களின் கண்டனத்துக்கும் உள்ளாகியது. ஸ்காட்லாந்திலும் அயர்லாந்திலும் கலகங்களை அடக்கிவிட்டு வெற்றிகரமாகக் கிராம்வெல் இங்கிலாந்து திரும்பியபொழுது அரசியலமைப்பு முடிவிற்கு வந்தது. நிலையான கட்டுப்பாடற்ற இறைமையை எஞ்சிய பாராளுமன்றம் செயல்படுத்தியதை இவர் வெறுத்தார். "மக்கள் உடன்பாட்டின்" மற்றக் கருத்துகளை நிறைவேற்ற விரும்பிய கிராம்வெல் 1653-ல் எஞ்சிய பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொது அறிக்கையொன்றையும் வெளியிட்டார். அரசாங்கம் முழுவதும் இப்பொழுது கிராம்வெல்லின் பொறுப்பில் மாறியது. இதன்பின் இவரே இங்கிலாந்தின் உண்மையான ஆட்சியாளராக இருந்தார்.

மக்களுக்குக் கிராம்வெல் ஓர் இராணுவ ஆட்சியாளராகத் தோன்றினர். இவரை ஒரு வல்லாட்சியாளரெனச் சிலர் கண்டனம் செய்தார்கள். கார்லில் என்பார் இவருடைய குணவியல்புகளையும் கொள்கைகளையும் பாராட்டினர். பாராளுமன்றத்தைக் கண்டனம்செய்து இவருடைய பேராற்றலைப் போற்றினர். இவரை வீரவழிபாட்டிற்குரியவராக்கினர். நாட்டின் நலன்களை மேம்படுத்த கிராம்வெல் முயன்றார். இவர் ஒரு நடைமுறைவாதி. தாம் எடுத்துக்கொண்ட அரசாங்க முறைகளுக்கு ஒரு சட்ட அடிப்படையை நாடியது, இவருடைய ஆட்சியின் ஒரு துயர நிகழ்ச்சியாகும். உண்மை நிலை என்னவென்றால், இங்கிலாந்து ஒரு படையால் ஆட்சி செய்யப்பட்டுவந்தது. இது மக்களுக்காகப் பேசுவதாகச்

சொல்லிக்கொண்டதுமாகும். அரசியலமைப்புக் கட்டுமானத்தை வரலாற்றுப் பின்னணியிலிருந்து பிரிக்கமுடியாதென்பதும், ஒரு புரட்சித்தலைவர் அரசியலமைப்புமுறை ஆட்சியாளராக முடியாதென்பதும் தெளிவாயிற்று. உயர் சனநாயகக்கருத்துகளைச் செயல்படுத்த முடியாமை பொதுநல அரசின் செயல்களைத் தகர்த்தது. "வழக்கறிஞரின் பொய் முடிக்குள் கிராம்வெல் வாளை மறைக்க முயன்றாரெ"னப் போலார்டு கூறுகிறார். அரசாங்கம் வீழ்ச்சியடைந்தால் அரசு அற்றநிலைதான் இருக்குமென்பதைக் கிராம்வெல் அறிந்திருந்தார். எனவே, ஸ்டுவர்ட்டுகளின் ஆட்சியிலிருந்து சிறிது வேறுபட்ட நிலையை இவர் ஏற்கவேண்டியதாயிற்று. இவருடைய அதிகாரம் படையைச் சார்ந்திருந்தது. இவருடைய அரசாங்கமும் ஒரு படைமுறைத் தனியாட்சியாகத்தான் இருந்தது. மக்களின் இறைமைக் கோட்பாடும் அதிகார ஒப்படைப்பு இயல்புள்ள அரசாங்கமும் 19-ஆம் நூற்றாண்டில் பெறக்கூடியவைகளாக இருந்தனவென்பது ஆடம்ஸின் கருத்தாகும். பொதுநல அரசின் தோல்விக்கு அரசாங்கத்தின் திறமையின்மை காரணமன்று. சுயேச்சையான வாக்களிப்பு இக் காலத்தில் இருந்திருக்க முடியாது. ஏனெனில், ஆங்கிலிகன், பிரிஸ்பிட்டீரியன், அரச ஆதரவாளர்கள், லெவலர்கள் ஆகியோர் அரசாங்கத்துக்கெதிராக வாக்களித்திருக்க வேண்டும். இச் சூழ்நிலைகளில் எந்த ஓர் அரசியலமைப்பும் நிலையானதாக இருந்திருக்க முடியாது. படைமுறை ஆட்சியே தொடர்ந்திருந்திருக்க முடியும்.

பியூரிட்டன் துறவிகள் சிலரின் அரசாங்கமே முறையான அரசாங்கமாக இருக்கமுடியுமென்று கிராம்வெல் நம்பினார். எனவே, இவர் பல பியூரிட்டன்களைப் பாராளுமன்றத்தில் அமர்த்தினார். இப் பாராளுமன்றம் சிறிய பாராளுமன்றமென்றும், பேர்போன் பாராளுமன்றம் என்றும் பெயர் பெற்றது. இப் பாராளுமன்றம், நன்னெக்கங்களைக் கொண்டிருந்தாலும் இதில் ஒற்றுமை நிலவவில்லை. இதனால், ஓர் அரசியலமைப்பை உருவாக்க முடியவில்லை. இதில் நிலவிய கருத்துவேற்றுமைகள் இதைக் கைவிடுமாறு கிராம்வெல்லைத் தூண்டின. பெரும்பான்மையானவர்களின் அதிகாரத்தைக் கிராம்வெல் தமக்கு விட்டுத்தருமாறு தூண்டினர். ஆகவே, பாராளுமன்றமும் முடிவிற்கு வந்தது.

அரசாங்க அமைப்புப் பத்திரம்[1] அடுத்து வரையப் பட்டது. படையின் குறிப்பிட்ட சிலரால் இத் திட்டம்

[1] Instrument of Government

உருவாக்கப்பட்டது. இதுவே புதிய அரசியலமைப்பாக இருக்கவேண்டுமென்பது இவர்களின் கருத்தாகும்.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகள் ஒரு காப்பாளரின்[1] கீழ் வரவேண்டுமெனவும், இக் காப்பாளர் கிராம்வெல்லாக இருக்கவேண்டுமெனவும் இத் திட்டம் குறிப்பிட்டது. இவரே அரசுத்தலைவராக இருக்க வேண்டும். இத் திட்டத்தின் 33-வது பிரிவு இப் பதவிக்குக் கிராம்வெல்லை அமர்த்தியது. இவருக்கு அறிவுரை கூறவும், ஆட்சி நடத்தவும் பதினைந்துபேர்கள் அடங்கிய ஓர் அரசுக் கவுன்சில் நிறுவப்படவேண்டும். இக் கவுன்சில், கிராம்வெல்லுக் குப்பின், அடுத்த காப்பாளரை அமர்த்தும். சட்டமியற்ற நானூறு பேர்களடங்கிய ஒரு பாராளுமன்றம் மூன்றுண்டிற் கொருமுறை கூட்டப்படவேண்டுமெனவும், குறைந்தது ஐந்து மாதம் முடியுமுன்னர் இது கலைக்கப்படலாகாதெனவும் இத் திட்டம் கூறியது. கவுன்சில் இடம் காலியாகும்பொழுது இக் காலி இடத்தை நிரப்பப் பாராளுமன்றம் தெரிவுசெய்த 6 உறுப்பினர்களில், இருவரைக் கவுன்சில் தெரிவுசெய்யும். இதில் ஒருவரைக் காப்பாளர் இறுதியாகத் தெரிவுசெய்வார். நேர்மையின்மை, லஞ்சஊழல் ஆகிய காரணங்களுக்காக இவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படலாம். பாராளுமன்றத் தின் பிரதிநிதிகளும் கவுன்சிலின் பிரதிநிதிகளும் ஓர் ஆணைக் குழுவாக இருந்து இவர்களின் குற்றத்தை ஆராய்ந்து பதவி நீக்கலாம். முக்கியமானவர்களில் காப்பாளர் இதன் அறிவுரையின்பேரில் செயலாற்றுவார். பாராளுமன்றம் கூட்டத் தில் இல்லாதபொழுது அவசரச் சட்டங்களை இயற்ற இது காப்பாளருக்கு உதவியாக இருந்தது. எனினும், அவசரச் சட்டங்கள் அடுத்துக்கூடும் பாராளுமன்றத்தால் ஏற்கப்பட வேண்டும். பாராளுமன்றம் இல்லாதபொழுது இவர் படையைக் கட்டுப்படுத்திக்கொள்வார். நிருவாக அலுவலர்கள் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டுமென இப் பத்திரம் கூறுகிறது.

460 உறுப்பினர்கள்கொண்ட ஓரங்கப் பாராளுமன்றம் ஒன்று நிறுவப்பட்டது. அண்மையில் இடப்பகிர்வு செய்ததை யொட்டி இதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இங்கிலாந்து ஒரு வேளாண்மை நாடாயினும், மாவட்டப் பிரதிநிதிகளைவிட நகரப் பிரதிநிதிகள் அதிகமாக இருந்தனர். இந்

[1] Protector

நிலையை அரசாங்க அமைப்புப் பத்திரம் மாற்றியமைக்க முற்பட்டது. ஆண்டுக்கு 200 பவுன் வருவாய் உள்ளவர்கள் (கவுன்டிகளில்) மாவட்டங்களில் வாக்குரிமை பெற்றனர். இதனால், மாவட்டப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை உயர்ந்தது. சிறிய நகரங்கள் பிரதிநிதித்துவத்தை இழந்தன. புதிய நகரங்கள் பிரதிநிதித்துவம் பெற்றன. பழைய பாராளுமன்றத்தில் 413 நகரப் பிரதிநிதிகளும் 92 மாவட்டப் பிரதிநிதிகளுமிருந்தனர். ஆனால், புதிய பாராளுமன்றத்தில் 135 நகரப் பிரதிநிதிகளும் 238 மாவட்டப் பிரதிநிதிகளும் இடம் பெற்றனர். இப் பாராளுமன்றத்திற்கு ஸ்காட்லாந்திலிருந்தும் அயர்லாந்திலிருந்தும் பிரதிநிதிகள் வந்தார்கள். ஆகவே, இப்பொழுது இம் மூன்று நாட்டுப் பிரதிநிதிகளின் ஒரு பாராளுமன்ற ஒன்றியம் உதயமாயிற்று. ஸ்காட்லாந்து, அயர்லாந்துப் பிரதிநிதிகளுக்குக் காப்பாளரும் கவுன்சிலும் இடம் ஒதுக்கலாம். ஸ்காட்லாந்திற்கும் அயர்லாந்திற்கும் 30 உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்டார்கள். அரசரை ஆதரித்தவர்கள் வாக்குரிமை இழந்தார்கள். முதல் நான்கு பாராளுமன்றங்களில் அரசர்கள் இடம்பெறலாகாதென விதிசெய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கெதிராக அயர்லாந்தில் கலகம் செய்தவர்களுக்கு வாக்குரிமையும் உறுப்பினராகும் உரிமையும் மறுக்கப்பட்டன.

நிலப்படையையும் கடற்படையையும் பராமரிக்க, ஆண்டொன்றிற்கு ஒரு தொகையைப் பாராளுமன்றம் அளிக்க வேண்டும். காப்பாளருக்கு மானியமாக 200,000 பவுன் அளிக்கவேண்டுமென இப் பத்திரம் குறிப்பிட்டது. அரசாங்கத்தின் நிதித்தேவையையும், இதைப்பெற எத்தகைய வரிகள் விதிக்கவேண்டுமென்பதையும் கவுன்சிலும் காப்பாளரும் முடிவுசெய்வார்கள். இவர்களால் உறுதிசெய்யப்பட்ட தொகையைக் குறைக்கப் பாராளுமன்றத்திற்கு அதிகாரமில்லை. போர்க்காலத்திற்கான செலவுகளுக்குப் பாராளுமன்றம் நிதிஉதவியளிக்கும். பாராளுமன்றம் கூட்டத்தில் இல்லாதபொழுது காப்பாளரும் கவுன்சிலர்களும் நிதி திரட்டலாம். நெருக்கடிக்காலங்களில் பாராளுமன்றம் இயன்ற விரைவில் அழைக்கப்படவேண்டும்.

பாராளுமன்றத்தில் நிறைவேறிய மசோதா காப்பாளரின் இசைவுபெறவேண்டும். காப்பாளரின் இசைவிற்காக அனுப்பப்பட்ட மசோதா 20 நாட்களுக்குள் இசைவுபெறவில்லையென்றால் தானாகவே சட்டமாகிவிடும். இச் சட்டங்கள்

அரசாங்க அமைப்புப் பத்திரத்திற்கிசைந்தனவாக இருக்க வேண்டும்.

நிதித்துறைத்தலைவர் (சான்சலர்), அரசமுத்திரைக் காப்பாளர், பொருளாளர், கடற்படைத்தலைவர், அயர்லாந்தின் ஆளுநர், ஸ்காட்லாந்தின் ஆளுநர், நீதிபதிகள் ஆகியோர் பாராளுமன்றத்தின் ஒப்பிசைவோடு காப்பாளரால் இதன்படி அமர்த்தப்படுவார்கள். மற்ற அலுவலர்களைக் காப்பாளர் தாமே அமர்த்தலாம்.

கத்தோலிக்கர்களும், அயர்லாந்து புரட்சிக்குதவியவர்களும் நிரந்தரமாக உரிமை இழந்தனர். அரசரை எதிர்த்தவர்கள் தற்காலிகமாக உரிமை இழந்தார்கள்.

பாராளுமன்றம் இந்த அரசாங்க அமைப்புப் பத்திரத்தைத் திருத்தமுடியாது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசாங்கத்தை மாற்றும் அதிகாரம் பெறமாட்டார்களென்பது உறுதிசெய்துகொள்ளப்பட்டது. "இது அரசியலமைப்பின் மிகப்பெரும் குறைபா"டெனக் கார்டினர் (Gardiner) கருதுகிறார். வருங்காலத்தில் அரசியல் அமைப்புத் திட்டம் திருத்தப்படவேண்டியதை இது புறக்கணித்தது. இருப்பினும், இப்பத்திரத்தின் 24-வது பிரிவின்படி காப்பாளரின் இசைவோடு பாராளுமன்றம் இவ் வரசியலமைப்பைத் திருத்தலாம்.

கத்தோலிக்கர்களைத்தவிர மற்ற எல்லாச் சமயப் பிரிவினரும் வழிபாட்டுச் சுதந்திரம் பெற்றார்கள்.

தற்கால ஐரோப்பாவில் இது முதன்முறையாக எழுதப்பட்ட அரசியலமைப்பாகுமென ஆடம்ஸ் கருதுகிறார். அரசியலமைப்பிற்கும் பாராளுமன்றத்திற்கும் மக்களே அதிகாரமளிக்கிறார்கள். அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கும் இம்மக்கள் அவ் வதிகாரத்தை வரையறை செய்யவும் உரிமை பெற்றிருக்கிறார்களென இவர் கூறுகிறார். குறிப்பிட்ட சில பிரிவுகள் அடிப்படையானவையாதலால், பாராளுமன்றம் தலையாய அதிகாரத்தை வகிக்கமுடியாது.

இந்த அடிப்படையான சட்டம் மக்களின் விருப்பு அடிப்படையில் அமையாது, இராணுவ ஆட்சிக்குழுவின் நலனையொட்டியே அமைந்திருந்தது. இயன்ற விரைவில் இவ் வரசாங்க அமைப்பைக் காப்பாளர் கைவிட்டுவிட்டு, உள்நாட்டுக் கொள்கையின் முக்கிய கூறுகளைப் பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி நிறைவேற்றினர்.

சிறிது காலத்திற்குக் கிராம்வெல் வல்லாட்சி செலுத்தினார். பத்து மேஜர் ஜெனரல்கள் நாட்டை ஆட்சிசெய்ய இவர் ஏற்பாடுசெய்தார். இவர்கள் காப்பாளருக்கும் கவுன்சிலுக்கும் கட்டுப்பட்டு ஆட்சிசெய்தார்கள். இத்தகைய ஆட்சி முறையையும் நிலைப்படையையும் ஆங்கிலேயர்கள் வெறுத்தார்கள். வரிகள் கட்டாயமாக வன்முறையில் திரட்டப்பட்டன. காப்பாளருக்காதரவாக நீதிபதிகள் தீர்ப்பளிக்க வற்புறுத்தப்பட்டார்கள். அரசரை ஆதரித்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இவர்கள் படைக்கலன்கள் வைத்திருக்கலாகாதெனவும், ஆங்கிலிக்கன் குருமார்களைக் குடும்பப் புரோகிதர்களாக வைத்துக்கொள்ளக்கூடாதெனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. தனிவாழ்க்கையில் ஜெனரல்கள் தலையிட்டார்கள். இரவலர்களும், அரச விசுவாசிகளும் சந்தேகத்தின்பேரில் சிறையிடப்பட்டனர்.

பழைய அரசாங்க முறையை மீண்டும் உயிர்ப்பித்து, மக்களின் பெரும்பரிவைத் தமக்காதரவாக்கக் கிராம்வெல் முயன்றார். உண்மைநிலையை உணர்ந்துகொண்டு நிலையைச் சமாளிக்க முயன்றார். அரசாங்க அமைப்புப் பத்திரத்தின் அடிப்படையில் தேர்ந்தமர்த்தப்பட்ட இவருடைய இரண்டாவது பாராளுமன்றம் கிராம்வெல்லின் ஆதரவாளர்களால் நிறைவிக்கப்பட்டிருந்தது. கிராம்வெல்லை எதிர்த்த 100 பேர்கள் சபையில் இடம்பெறுமல் பார்த்துக்கொள்ளப்பட்டார்கள். எஞ்சிய சபை உறுப்பினர்கள் 1657-ல் "தாழ்மையான விண்ணப்பமும் அறிவுரையும்"[1] என்னும் பத்திரமொன்றைத் தயாரித்தார்கள். கிராம்வெல்லையும் இவருடைய கவுன்சிலையும் கொண்ட நிருவாகத்துறை நிறுவப்பட்டது. கிராம்வெல் தம் வாரிசை நியமித்துக்கொள்ளலாம். கிராம்வெல் இங்கிலாந்தின் மன்னராக வேண்டுமெனப் பாராளுமன்றம் கேட்டுக் கொண்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை அரசர் விலக்கக்கூடாதென்றும், விலக்கப்பட்டவர்கள் திரும்ப அழைத்துக்கொள்ளப்படவேண்டுமென்றும் இப் பத்திரம் கேட்டுக் கொண்டது. இரண்டாவது சபை (மேல்சபை) ஒன்று இருக்க வேண்டுமெனவும், இதில் 40-லிருந்து 70 வரை உறுப்பினர் எண்ணிக்கை இருக்கவேண்டுமெனவும், இவர்களைக் கிராம்வெல் அமர்த்தவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இவர்கள் உயிர் உள்ளவரை பதவியில் இருக்கவும் இது வழி செய்தது. இச் சபைக்குக் (மேல் சபைக்கு) கிராம்வெல்

[1] Humble Petition and Advice

63 பேர்களை நியமித்தார். இவர்களில் 42 பேர் சபைக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். இவர்களில் இருவர் மட்டுமே பிரபுக்கள். வரலாற்று வழிவந்த முடியாட்சியில் பிரதிநிதியாகக் கிராம்வெல் விளங்கவில்லை. அரச ஆதரவாளர்கள் இவரை வெறுத்தனர். பிரிஸ்பிட்டீரியர்களின் ஆதிக்கத்தை இவர் அழித்ததால் இவர்களும் இவரை விரும்பவில்லை. இவருடைய குடியரசுத் தத்துவத்தைப் பல சுயேச்சையினர் சந்தேகித்தார்கள். மரபுவழிவந்த பிரபுக்கள் மற்றவர்களோடு பெருமக்கள் சபையில் சேர்ந்தமர விரும்பவில்லை. பொதுமக்கள் சபையினர் புதிதாக அமைக்கப்பட்ட பெருமக்கள் சபையைக் கண்டிக்கத் தலைப்படவே கிராம்வெல் மீண்டும் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

இறக்கும்வரை கிராம்வெல் பாராளுமன்றத்தின் துணையின்றி ஆட்சிசெய்தார். பாராளுமன்றத்தைக் கலைக்கவும், பதவியிலிருந்து விலகிக்கொள்ளவும் சார்ச்சர்டு கிராம்வெல்லைப் படை வற்புறுத்தியது. இதே படை முன்னிலை மீட்சிக்கும் வழிவகுத்தது. பொதுநல அரசும், காப்பாளர் ஆட்சியும் படையின் கொடையேயாகும். நடைமுறையில் குடியாட்சி வல்லாட்சியாகத்தான் இருந்தது. பொதுநல அரசின் அமைப்பு நெறிகள், பிரதிநிதித்துவ அரசாங்கம், பாராளுமன்றச் சிற்றுரத்த திட்டம், அயர்லாந்து, ஸ்காட்லாந்து ஆகியவற்றின் ஒன்றிப்பு, கத்தோலிக்கர் நீங்கலாக யூதர்கள் உள்பட அனைவருக்கும் சமயப்பொறை ஆகியவை சுவையான அரசியலமைப்பு வளர்ச்சியின் முன்னோடிகளாக இருந்தன.

சுயேச்சையான பத்திரிகைத் தொழில் வளர்ச்சியடைந்தது. அச்சிடுதலில் இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. நாட்டின் அரசியலறிவைத் தட்டியெழுப்பவல்ல நூல்கள் இடையறாது வெளியாயின. புதிய நிதிவரி வகைகள் கிராம்வெல் காலத்தில் புகுத்தப்பட்டன. நாட்டில் உற்பத்தியான நுகர்வுப் பொருள்களின் மீது கலால்வரி விதிக்கப்பட்டது. இது ஒரு புதுவரியாகும். இதை ஆங்கிலேயர்கள் வெறுத்தனர். கடற்படை ஒன்றும் இவர் காலத்தில் உருவாயிற்று. அரசியல் அறிஞர்கள் குடியேற்ற நாடுகளில் அக்கறை செலுத்தினர்கள்; எழுத்துருவில் அரசியலமைப்பை வரைந்து, வரலாற்றின் போக்கை மாற்றியமைக்க இக் காலத்தவர் விரும்பினர். இருந்தபோதிலும், இங்கிலாந்து குடியரசாவதற்குத் தயாராக இல்லை.

கிராம்வெல் இறந்ததும் இவரது மூத்தமகனை ரிச்சர்டு கிராம்வெல் காப்பாளராகப் பதவியேற்றார். பியூரிட்டன் சமயத்தோடு இவர் ஈடுபாடு கொள்ளாததால் மக்கள் இவரை விரும்பினாலும் படையினரின் மதிப்பை இவரால் பெறமுடிய வில்லை. 1659-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாளன்று அழைக்கப்பட்ட புதிய பாராளுமன்றம் இவரை ஆதரித்தது. எனவே, பாராளுமன்றம் ரிச்சர்டைப் படைத்தலைவராக்க விருப்பம் தெரிவித்தது. ஆனால், படையினர் ∴பிளிட்வுட்[1] என்பவரை நிலையாகப் படைத்தலைவராக்க விரும்பினர். காப்பாளரின் அதிகாரமும், படைத்தலைவரின் அதிகாரமும் தனித்தனியாக இயங்கவேண்டுமெனப் படையினர் விரும் பினர். இதற்கிடாகப் படையினர் பாராளுமன்றச் செயற்பாடு களில் தலையிடலாகாதெனப் பொதுமக்கள் சபை தீர்மான மியற்றியது. ரிச்சர்டும் இதற்கிணங்கி ∴பிளிட்வுட் என்பாரைப் படைத்தலைவராக்கினர். ஆயினும், இவர் ரிச்சர்டின் அதி காரத்திற்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டுமென வலியுறுத் தப்பட்டார். இந் நிலையைப் பாராளுமன்றம் வரவேற்றது. இதைக் கண்ட படை வெகுண்டு பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி அச்சுறுத்தியது.

இதன்பின், நீடித்த பாராளுமன்றத்தின் ஒரு பகுதியான எஞ்சிய பாராளுமன்றத்தை 1659 மே மாதத்தில் படையினர் கூட்டினர். இப் பாராளுமன்றம் கிராம்வெல் காலத்திய சட்டங்களையும் நடவடிக்கைகளையும் செல்லாதென அறி வித்தது. இதைக்கண்டு படையினர் வெகுண்டனர். பொது மக்கள் சபை ஒன்றுமட்டும் போதாதென்றும் மூதறிஞர்கள் அடங்கிய மேல்சபையொன்று கூட்டப்படவேண்டுமென் றும் படையினரும் மற்றவர்களும் வற்புறுத்தினர்கள். படையும், பாராளுமன்றமும் இப்படி மோதிக்கொள்வதைக் கண்டு மனம் வருந்திய ரிச்சர்டு 1659-ஆம் ஆண்டு மேமாதம் பதவிதுறந்தார்.

இச் சமயத்தில் செஸ்ஷயர் என்னுமிடத்தில் கலகம் ஒன் று தோன்றியது. இக் கலகம் சார்லஸி (இரண்டாம்)ற்கு ஆதர வாக அமைந்தது. இக் கலகத்தைப் பாராளுமன்றத் தள கர்த்தர் வென்று திரும்பியபொழுது படைத்தலைவர்கள் படை பலம்கொண்டு பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி கட்டளை யிட்டனர். பாராளுமன்றமும் 1659 அக்டோபர் மாதம்

[1] Fleatwood

கலைக்கப்பட்டது. மீண்டும் இங்கிலாந்தில் இராணுவத் தினரின் ஆட்சி ஏற்பட்டது. நாட்டை ஆள, படையினர் ஒரு பாதுகாப்புக் குழுவை அமைத்தனர். படைமுறை ஆட்சியை மக்கள் வெறுத்தனர். படையினரிடையே ஒற்றுமை நிலவ வில்லை. போட்டியும் பொறுமையும் தலைவிரித்தாடின. நாடும் நிலையான அரசாங்கத்தை இழந்து அல்லற்பட்டது. இந் நிலையில் படையினர் எஞ்சிய பாராளுமன்றத்தைக் கூட்டினர்.

இந் நிலையில் ஜெனரல் மாங்க்[1] ஒரு படையோடு வந்து லண்டனைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டார். இவர் வடக்கே ஸ்காட்லாந்தில் கவர்னராக இருந்தவர். இங்கிலாந்தில் ஒரு நிலையான அரசாங்கத்தை நிறுவ, இவர் படையைப் பயன் படுத்தினர். எஞ்சிய பாராளுமன்றத்தை இவர் கூட்டி, நீடித்த பாராளுமன்றத்தின் உறுப்பினர்களோடு இதைக் கலைக்கும்படி கட்டாயப்படுத்தினர். புதிய தேர்தலுக்கு இவர் ஆணை பிறப்பித்தார். இதற்கிடையில் கூடிய மன்னர் அழைப் புப் பெறுத பாராளுமன்றம் (Convention Parliament) அர சருக்கு (இரண்டாம் சார்லஸிற்கு) அழைப்பு விடுத்தது. சார்லஸ், பிரெடா (Breda) என்னுமிடத்திலிருந்து ஓர் அறிக்கை வெளியிட்டார். இதன்படி, அரசரை எதிர்த்த அனைவருக்கும் மன்னிப்பு அளிக்கப்பட்டது. படையினருக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும், படையினருக்குப் பாக்கிச்சம்பளம் முழு வதையும் கொடுப்பதாகவும், நிலவுடைமைப் பிரச்சினைகளைப் பாராளுமன்றத்தின் இசைவோடு தீர்ப்பதாகவும், எல்லாச் சமயத்தினருக்கும் சமயப்பொறை வழங்குவதாகவும் இவ் வறிக்கை குறிப்பிட்டது. மகிழ்ச்சியடைந்த மக்கள் இவரை இங்கிலாந்தின் மன்னராக முடிசூட்டிக்கொள்ள அழைப்பு விடுத்தனர். இங்கிலாந்தில் மீண்டும் முடியாட்சி ஏற்பட்டது.

9. இரண்டாம் சார்லஸ்

(1660—1685)

முன்னிலை மீட்சி

படையின் வல்லாட்சி இருந்த இடத்தில் 1660-ல் மீண்டும் அரசர், பாராளுமன்றம், சட்டம் ஆகியவை நிலைபெற்றன. சமயத்துறையில் பியூரிட்டானிசம் இருந்த இடத்தில் இப் பொழுது ஆங்கிலிக்கானிசம், மேற்றிராணியார் ஆட்சி, வழி பாட்டுநூல் ஆகியவை மீட்சிபெற்றன. பிரபுக்களும் நகரினர் களும் தேசிய, தலத்தலைவர் நிலைக்கு வந்தார்கள். ஆனல், மீட்சிபெற்ற நிறுவனங்கள் பெரும் மாற்றத்திற்குள்ளாயின. "முன்னிலை மீட்சி எப்பொழுதுமே ஒரு புரட்சியாகு"மென ஒரு வரலாற்றுசிரியர் கூறினர்.

சார்லஸின் தந்தை இறந்த நாளன்றே இரண்டாம் சார்லஸ் அரசுரிமை எய்தினரென்பது ஒரு சட்டக்கருத்தாகும். முன்னிலை மீட்சியின் முதலாண்டு, சார்லஸின் பதினேராவது ஆட்சிக்காலமெனவும் கருதப்பட்டது. ஆகவே, பொதுநல அரசுக்காலத்தில் செயல்படுத்தப்பட்ட சட்டங்கள் அரசரின் இசைவுபெறுத காரணத்தினல் செல்லாதவைகளாகிவிடு கின்றன. எனவே, அரசரை நாடு திரும்புமாறு அழைத்த பேரவை,[1] நீடித்த பாராளுமன்றத்தைக் கலைக்க ஒரு சட்ட மியற்றியது. பேரவை நிறைவேற்றிய சட்டங்களுக்கு ஏற்பமைதியளிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் சட்டமியற்றியது.

தந்தை பெற்றிருந்த உரிமைகள் எல்லாவற்றையும் சட்டப்படி சார்லஸ் பெறுவாராயினும், முந்திய ஆட்சிக்கால நிகழ்ச்சிகள் அரசருக்கும், பொதுமக்கள் சபைக்குமிடையே யான தொடர்பை மூன்று திசைகளில் மாற்றின.

[1] Convention

இவைகளில் நிதி முதலாவதாகும். பாராளுமன்றம் ஒவ்வாத வரிவிதிப்புகள் இப்பொழுது காலங்கடந்தனவாகி விட்டன. இரண்டாவது, பாராளுமன்றம் கூடும்வரை ஜேம்ஸ் தொடர்ந்து வரிகளைத் திரட்டிவந்தார். ஆனால், வசதிக்காகவே அரசர் இவ்வாறு செய்தார். பாராளுமன்றம் கூடியதும் அரசர் செயலுக்குச் சட்ட ஒப்புதல் அளித்தது. பாராளுமன்றத்தின் ஆய்விலிருந்து விடுதலைபெற விரும்பிய இரண்டாம் சார்லஸ், பதினைந்தாம் லூயியிடமிருந்து நிதியுதவி பெற விரும்பினரேயன்றித் தம் குடிமக்களிடமிருந்து பெற விரும்பவில்லை.

முன்னிலை மீட்சிக்குப்பின், அரசரின் முழுமையான அதிகாரம் மறைந்துவிட்டது. நிலமானியமுறை வரிவிதிப்புகளுக்குப் பதிலாக, இப்பொழுது கலால்வரி வந்துவிட்டது. இதனால், நிலமானிய முறையும் இறுதியாக மறைந்துவிட்டது. பிரிவி கவுன்சில், விண்மீன் நீதிமன்றம், உயர்ஆணை நீதிமன்றம் ஆகியவைகளின் குற்றத்தண்டனை செயலாட்சி வரம்பிற்கு உயிர் ஊட்டுவதில்லையென அரசர் உறுதியளித்தார். பாராளுமன்றம் அரச மானியமாகக் கொடுத்த 1,200,000 பவுன்களைப் பெற்றுக்கொண்டு நிதியைப் பொறுத்தவரையில் அரசர் மன அமைதிகொள்ளவேண்டும். டன் எடைவரி, பவுண்டு கட்டணவரி ஆகியவைகளை அரசர் விதிக்கலாகாது. மீட்சியுற்ற அரசர் அதிகாரம் அற்றவராகிவிடவில்லை. இரண்டாம் ஜேம்ஸ் செய்ததுபோல் இவர் இறையுரிமையை வெளியிடலாம். இவர் தம்முடைய வாரிசை நியமிக்கலாம்; அமைச்சர்களை அமர்த்தலாம்; வெளிநாட்டுக் கொள்கையை இப்பொழுதும் உருவாக்கலாம். ஆனால், முன்னிலைமீட்சிக் காலத்திய பாராளுமன்றங்கள் நிதியுதவியளிப்பதற்கான தனியுரிமையை நிலைநாட்டியதோடன்றி, குறிப்பிட்ட இனங்களுக்கு நிதி ஒதுக்கும் வழக்கத்தைப் புதுப்பித்தன. கொடுக்கப்பட்ட நிதியை மற்ற இனங்களுக்குச் செலவிடுவதைப் பாராளுமன்றம் விரும்பியதில்லை. ஆனால், பொதுமக்கள் சபையினது அலுவலின் ஒரு பகுதியாக இந்நிதி ஒதுக்கீடு புரட்சிக்குப் பின்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வரிவிதிப்பின் மீதான பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, 1662-ல் இன்னொரு திசையில் முழுமை பெற்றது. கிளாரெண்டனுக்கும் கான்டர்பரி அதிமேற்றிராணியாருக்குமிடையேயான ஓர் ஏற்பாட்டின்படி குருமாரின் சபை வரிவிதித்து நிதியுதவி செய்வது நின்றுவிட்டது. இதற்குப் பதிலாகப் பாராளு

மன்ற உறுப்பினருக்கு வாக்களிக்கும் உரிமையைக் குரு மார்கள் பெற்றனர். ஆகவே, ஒரு தனிப்பட்ட அரசியல் பிரிவாக இருந்த குருமார் தொகுதியினர் இறுதியாக மறைந்துவிட்டனர்.

தேசியச் சமயத்தின் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை, அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான தொடர்பு மாறியது இரண்டாவது போக்காகும். முதன்மை அமைச் சராகிய கிளாரெண்டனின் செல்வாக்கின்கீழ் இப்பொழுது பாராளுமன்றம் அரசரைக்காட்டிலும் திருச்சபை குரு மரபுச் சார்புடையதாகத் தோன்றியது. எலிசபெத், முதலாம் சார்லஸ் ஆகியவர்களைப்போல் வழிபாட்டுநூல், மேற்றிரா சனம் ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்ட தேசியத் திருச்சபையொன்றில் இப்பொழுது அரசர் கவனம் செலுத்த வில்லை. இறைநெறியைக்காட்டிலும் அரசியல் கட்சியில் மக்களும், பாராளுமன்றமும் பெருமளவு அக்கறைகாட்டினர். திருச்சபை அரசு இணைப்புபற்றிய கிளாரெண்டனின் முயற்சி வீணுயிற்று. ஐக்கியத்திற்கும் ஒரே திருச்சபை அமைவதற்கு மான வாய்ப்புகளை எல்லாம் கிளாரெண்டனின் சட்டத் தொகுப்பு அழித்துவிட்டது. மாநகராட்சி மன்றங்களில் பதவி வகிப்பவர்கள் ஆங்கிலிக்கன் திருச்சபை சடங்குக ளின்படி புனிதத் திருவிருந்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென 'மாநகராட்சிச் சட்டம்'[1] (1661) குறிப்பிட்டது. இவர்கள் ஸ்காட்லாந்திய ஒப்பந்தத்தை மறுப்பதாகவும், அரசரை எ திர்ப்பதில்லையெனவும் வாக்குறுதியளிக்கவேண்டுமென இச் சட்டம் வற்புறுத்தியது. இதனல் பிரிஸ்பிட்டீரியர், குடி யரசுவாதிகள், கத்தோலிக்கர், இணங்காதோர் ஆகியோர் ஆங்கிலிக்கன் திருச்சபையிலும், நகராட்சி மன்றங்களிலும் நுழையமுடியாமல் போய்விட்டது. ஒரே வழிபாட்டுமுறைச் சட்டத்தால்[2] (1662) உருவான வழிபாட்டுநூலைக் குருமார் தொகுதியில் ஐந்தில் ஒரு பங்கினர் ஏற்க மறுத்தனர். இதை ஏற்கமறுக்கும் குருமார்கள், அவர்கள் வசிக்கும் இடங்களில் சமயப் போதனை செய்யமுடியாததோடு, நகரம், மாநகர், நகரத் தொகுதி, திருச்சபை வட்டம் ஆகியவைகளில் ஐந்து மைல் களுக்குள் இவர்கள் சமயப் பிரசாரம் செய்யக்கூடாதெனவும் இரகசியத்தொழுகைக் கூட்டச் சட்டமும்[3] ஐந்து மைல் சட்ட மும் தடைசெய்தன.

[1] Corporation Act

[2] Act of Uniformity

[3] Conventicle Act, 1664

ஒரே வழிபாட்டுமுறைச் சட்டத்தின்படி வழிபாட்டுநூலை ஏற்காதவர்கள் ஆங்கிலத் திருச்சபையிலிருந்து வெளியேற வேண்டும். மன்னரை எதிர்ப்பதில்லையென்றும், "புனிதக் கூட்டு ஒப்பந்தத்தை" மறுப்பதாகவும் குருமார்கள் வாக்குறுதி எடுத்துக்கொள்ளவேண்டும். குருமார்களோ மேற்றிராணியார்கள் அமர்த்தவேண்டுமென இச் சட்டம் குறிப்பிட்டது. இச் சட்டம் பியூரிட்டன் குருமார்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டதாகும்.

ஐந்து பேருக்குமேல் தொழுகைக்காகக் கூடுவதை இரகசியத் தொழுகைக் கூட்டத் தடைச்சட்டம் தடைசெய்தது. இச் சட்டத்தின்படி முதல்தடவை குற்றம் செய்பவர்கள் அபராதவிதிப்பிற்குள்ளாவார்கள்; இரண்டாவது தடவைக்குச் சிறைத்தண்டனையும், மூன்றாவது தடவைக்கு நாடுகடத்தப்படுவதும் சட்டம் விதிக்கும் தண்டனைகளாகும். இதனால், ஆங்கிலிக்கன் திருச்சபையோடு இணங்கிச்செல்லாதவர்கள் சிறையிலிடப்பட்டார்கள்.

பொறுத்தலறிக்கையை[1] வெளியிட்டுச் சமயப்பொறையைப் பெற அரசர் இருமுறை முயன்றார். முதல் பொறுத்தலறிக்கை 1662-ல் வெளியிடப்பட்டது. ஆனால், பாராளுமன்றத்தின் கடுமையான எதிர்ப்பிற்கு மதிப்புக்கொடுக்கும் வகையில் சில வாரங்களுக்குப்பின், இது விலக்கிக்கொள்ளப்பட்டது. டோவர் இரகசிய உடன்பாட்டின் விளைவாக, பத்தாண்டிற்குப்பின், தண்டனைச் சட்டத் தொகுப்பு முழுவதையும் விலக்கிவிடுமாறு சார்லஸ் அறிக்கைவிட்டார். பாராளுமன்றம் கூடிய பொழுது பொறுத்தலறிக்கையை அரசர் விலக்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. சிவில், இராணுவப் பதவி வகிப்போருக்கு மூன்று சமயச்சோதனைகளைச் செயற்படுத்த சோதனைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. சார்லஸிற்கும் பதினான்காம் லூயிக்கும் இடையே இருந்த உறவுமுறையிலிருந்து ரோமன் கத்தோலிக்க மறைமுகச் சூழ்ச்சி உருவாகியதே இக் காலத்தின் சமயப்பொறைக்குப் பெரும் எதிர்ப்பாக இருந்தது. மேலும், பதினான்காம் லூயி கத்தோலிக்கத் திருச்சபைக்கு ஆதரவு அளிப்பவராகவும், ∴பிரெஞ்சு பிராடெஸ்டெண்டு அரசாகிய ஹாலந்தை ஒழிக்க முயன்றதாகவும் மக்கள் ஐயங்கொண்டனர். அரசியல், சமயக் காரணங்களால் ஆங்கிலேயர்களின் பொதுக்கருத்தின் போக்கு ∴பிரான்சிற்கு விரோதமாக இருந்

[1] Declaration of Indulgence

தது. ∴பிரான்சின் முடியாட்சிக்கும் ஸ்டூவர்ட்டுகளுக்குமிடையில் காணப்பட்ட தொடர்பு, புரட்சி தோன்றுவதற்கான காரணங்களில் முதன்மையானதாக இருந்தது.

கடந்தகாலத்திய போராட்டங்கள் நீதித் தொடர்புடையவைகளில் நிலையான மாற்றத்தைச் செய்தன. ஆட்சியில் நீதிமன்றங்கள் இப்பொழுது மறைந்துவிட்டன. விண்மீன் நீதிமன்றமும் உயர்ஆணை நீதிமன்றமும் முறைகேடானவைகளாக அறிவிக்கப்பட்டன. பிற்காலத்தில் இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் திருச்சபை ஆணை நீதிமன்றத்தை[1] நிறுவ முயன்றது இவருக்கெதிரான குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும். அரசாங்கத்திடமிருந்து குடிமக்களுக்கு இயல்முறை நீதிமன்றங்களால் போதிய பாதுகாப்பளிக்க முடியவில்லை. ஆனால், நிருவாகத்துறைக்குப் பணிய மறுத்த நீதிபதிகளைப் பதவிநீக்கம் செய்தல், அரசாங்கத்திற்கெதிராகத் தீர்ப்பளித்த ஜூரிகளை சிறைப்படுத்தல் போன்ற முறைதவறிய செயல்கள் படிப்படியாக மறைந்தன.

நிருவாகக் காரணங்களுக்காக ஒருவரைச் சிறையிலிடும் கொடுமையான வழக்கம் பழங்காலத்தில் இருந்துவந்துள்ளது. தவறுகச் சிறைப்படுத்துவதிலிருந்து குடிமக்களைப் பாதுகாக்க இரண்டு பரிகாரங்கள் இருந்தன. இவைகளில் ஒன்று ஆட்கொணர் கட்டளையாகும். இதன் பொருள், "உடலை (ஆளை) உடனே நீதிமன்றத்தின் முன் கொணர்க" என்பதாகும். இடைக்காலத்தில் நீதிமன்றச் செயற்பாடுகளை மேற்பார்வையிட, அரசர்கள் இந்த உரிமையைக் கோரியதில் இதன் தோற்றத்தைக் காணலாம். குடிமகனெருவனை எவரேனுமொருவர் சிறையில் வைத்திருந்தால், அப்படிச் சிறையிடப்பட்டவரை அரசர்முன் கொண்டுவந்து நிறுத்துமாறும், சிறையிலிடப்பட்டதற்கான காரணங்களை விளக்குமாறும் இக் கட்டளை வலியுறுத்தியது. சிறையிலிடப்பட்டவரின் நண்பரொருவரின் வேண்டுகோளின் பேரில் அரசர் இத்தகைய கட்டளை பிறப்பிக்கலாம். இத்தகைய கட்டளையை நீதிமன்றங்கள் படிப்படியாக ஏற்கத்தொடங்கின.

ஆனால், இக் கட்டளைக்குச் சரியான காரணத்தைக் கூறும் பொறுப்பு நீதிமன்றத்திடமிருந்தது. 1628-ல் முதலாம் சார்லஸ் மன்னரால் விதிக்கப்பட்ட கட்டாயக் கடன்களைக்

[1] Eccelesiastical Commission

கொடுக்கமறுத்த 5 வீரத்திருத்தகைகளின் வழக்கில், கைது செய்யப்படுவதற்கான சரியான காரணம் "அரசரின் தனி முறைக்கட்டளை"யாகுமெனக்கூறி நீதிமன்றம் தீர்ப்பளித்ததை ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆகவே, குடிமகனின் தனி யுரிமை நிருவாகத்தின் முழுஉசித அதிகாரத்திற்குட்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். ஆனல், பல வழிகளில் குடிமக்கள் இக் கட்டளையின் பாதுகாப்பைப் பெறமுடியாமல் நிருவாகம் செய்துவிடலாம். அதிகாரம் தவருன வழிகளில் செயல் படுத்தப்படுவதைத் தவிர்க்கவே ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டம் 1679-ல் நிறைவேற்றப்பட்டது. நீதிமன்றம் கூடியிராத பொழுதும் கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதற்கு இச் சட்டம் வழிசெய்தது. இக் கட்டளையை மீறினல் கடுமையான தண்ட விதிப்பிற்கு உள்ளாகவேண்டும். ஆங்கில நீதிமன்றங்களின் ஆட்சி எல்லைகளுக்கப்பால் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் சிறை வைக்கப்படுவதை இச் சட்டம் தடைசெய்தது. சிறை வைத்த வர்கள் தேவைக்குமேலதிகக் காலதாமதமின்றிச் சிறைவைக் கப்பட்டவர்களை நீதிமன்றத்தின்முன் கொண்டுவர வேண்டும். இதை மீறினல் கடுமையான தண்டனைக்குள்ளாக வேண்டும்.

குடிமகனின் உரிமைக்கு இன்னெரு பாதுகாப்பு, பிணைய மளிப்புமுறையாகும். இக் காலத்திய முதன்மையான குறைபாடு நீதிபதிகள் மிகையான பிணையத்தொகையைக் கோரியதாகும். ஆகவே, சட்டம் குற்றவாளிக்குக் கொடுத் திருந்த இந்த உரிமை நடைமுறையில் அரியதாகிவிட்டது. இரண்டாம் ஜேம்ஸ் அரசருக்கெதிரான குற்றச்சாட்டுகளில் இதுவும் ஒன்ருகும்.

அரசியல் அதிகாரம் அரசப் பதவியிலிருந்து பாராளு மன்றத்திற்கு மாறியதற்குப் பாராளுமன்ற ஊழல் வளர்ச்சி யும் ஒரு காரணமாயிற்று. முன்னிலை மீட்சிக்காலத்தில் நீடித்த பாராளுமன்றம் 1661 முதல் 1679 வரை பதவியில் இருந்தது. இப் பாராளுமன்றத்தில் ஓய்வூதியம் பெற்றவர்கள் இடம்பெற் றிருந்ததால் இதை "ஓய்வு பெற்றவர்களின் பாராளுமன்ற" மெனச் செல்லப்பெயரிட்டு அழைத்தார்கள். இரண்டாவது சார்லஸ் பெரும்பொருளைச் செலவிட்டுப் பாராளுமன்றத்தின் ஆதரவைத் தேடிக்கொண்டார். ∴பிரெஞ்சு நேசக் கூட்டுக் கொள்கையைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்ததற் காகப் பதினன்காம் லூயி அவர்களுக்கு நிதியுதவியளித்தல் நலமெனக் கருதினர்.

முன்னிலைமீட்சிக்காலத்திய பாராளுமன்றத்தின் அமைப்பைப்பற்றிச் சிறிது தெரிந்துகொள்ளவேண்டும், ஸ்டுவர்ட்டுகளின் ஆட்சிக்காலத் தொடக்கத்தில் 78-ஆக இருந்த மேல்சபை உறுப்பினர் தொகை இரண்டாவது சார்லஸ் காலத்தில் 145-ஆக உயர்ந்தது. பொதுமக்கள் சபை உறுப்பினர் எண்ணிக்கையும் சிறிதளவு அதிகரித்தது. முதலாம் ஜேம்ஸ் நான்கு பல்கலைக்கழக உறுப்பினர்களை இச் சபையில் இடம் பெறச் செய்தார். ஒன்பது நகரத்தொகுதிகள் மீண்டும் பொதுமக்கள் சபைக்கு உறுப்பினர்களை அனுப்பும் உரிமை பெற்றன. டர்ஹாம் மாவட்டத்திலிருந்தும், டர்ஹாம் நகரிலிருந்தும் பிரதிநிதிகள் சபைக்கு வந்தார்கள். 1677-ல் புதிய நகர்த் தொகுதிகள் சாசனவாயிலாகப் படைக்கப்பட்டது கடைசிமுறையாகும். இந்த ஆண்டில் சார்லஸ் நியூஆர்க் (Newark) நகரத்திற்கு இரண்டு உறுப்பினர்களை ஒதுக்கினர். அரசரின் இச் செயலைப் பாராளுமன்றம் விவாதித்தது. அரசரின் இந்த அதிகாரம் முறையாகக் கைவிடப்படவில்லையெனினும், இந்த உரிமை மறுபடியும் செயற்படுத்தப்படவில்லை. 1832-ஆம் ஆண்டு, சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டவரை புதிய நகர்த் தொகுதிகள் பிரதிநிதித்துவம் பெறவில்லை.

கிளாரண்டன் பிரபுவின் ஆட்சி (1660—1667)

இரண்டாம் சார்லஸின் முதன்மையான ஆலோசகராக கிளாரண்டன் ஏழாண்டுக்காலம் இருந்தார். இங்கிலாந்தில் முடியாட்சியையும் ஆங்கிலிக்கன் திருச்சபையையும் நிலைநாட்டிவிடவேண்டுமென்பது இவருடைய விருப்பமாக இருந்தது.

அமைச்சரவைப் பொறுப்பு, கட்சிமுறை ஆகிய இரண்டு சிறப்புக் கருத்துகள் வளர்ச்சியடைந்தது இக் காலத்தில்தான். சார்லஸின் முதல் ஏழாண்டு ஆட்சிக்காலத்தில் கிளாரண்டன் முதன்மை அமைச்சராக இருந்தார். டன்கிர்க்[1] விற்பனைப் பொறுப்பு, டச்சுப்போர் தோல்வி, இக் காலத்திய பல தொல்லைகள் ஆகியவை நாட்டை எதிர்நோக்கியிருந்தன. ஆனல், இவருடைய சிக்கன நடவடிக்கைகளை அரசவையின் இளம் உறுப்பினர்கள் ஆதரிக்கவில்லை. பாராளுமன்றம் இவருக்கெதிராக மாறியவுடன் சார்லஸ் அமைச்சரைப் பலியிடத் தயங்கவில்லை. பொதுமக்கள் சபை இவரைக் கடுங்குற்ற விசாரணை செய்யப்போவதாக மிரட்டியபொழுது இவர் நாட்டைவிட்டு வெளியேறினர். 1674-ல் இவர் இறக்கும்

[1] Dunkirk

வரை வெளிநாட்டில் இருந்தார். பெரும் புரட்சியின் வரலாற்றைத் தொகுப்பதில் இவருடைய இறுதிக்காலம் செலவானது. வீழ்ச்சிக்கும் டச்சுப்போர் தோல்விக்கும் கிளாரண்டன் பொறுப்பென்று பாராளுமன்றம் வாதித்தது.

அரசருக்குப் பிரிவி கவுன்சில் அரசியலமைப்பு ஆலோசகராக இருந்துவந்தபோதிலும், சில சமயங்களில் அரசர்கள் ஆலோசகர்களின் உட்குழுவை நாடும் போக்கு காண்பட்டது. இத்தகைய உட்குழுக்களுக்குச் சிலசமயங்களில் கெபால்[1] எனச் செல்லப்பெயரிட்டு அழைக்கப்பட்டது. கிளாரண்டனின் வீழ்ச்சிக்குப்பிறகு அமைந்த ஆலோசனைக் குழுவில் இடம்பெற்ற அமைச்சர்களின் பெயரிலுள்ள முதல் எழுத்துகளைச் சேர்த்துச் சொல்லாக்கினால் 'கெபால்' என்ற பெயர் ஆங்கிலத்தில் உருவாகியது. ஆனால், இக்குழு இக்காலத்திய அமைச்சரவைக்கு ஒப்பாகாது. கிளிஃபோர்டு, ஆர்லிங்டன், பக்கிங்ஹாம், ஆஷ்லிகூபர், லாடர்டேல் (Clifford, Arlington, Buckingham, Ashleycooper, Lauderdale) ஆகியவர்கள் இக்கெபால் அமைச்சரவை உறுப்பினர்களாவர். ஐந்தாண்டிற்கு இவ் வமைச்சரவை பதவியிலிருந்தது. ஷாஃப்ட்ஸ்பரி[2] சோதனைச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியபொழுது கிளிஃபோர்டு வெளியேறினர். இவர் ரோமன் கத்தோலிக்கராவார். இக்குழுவும் இதனுடன் முறிவுற்றது. ஓராண்டிற்குப்பின், ஷாஃப்ட்ஸ்பரி பதவியிலிருந்து விலகி எதிர்த்தரப்புத் தலைவரானார்.

Origin of the Political

அடுத்து, டான்பி பிரபு என்பவர் சார்லஸின் அமைச்சரானார். ஆங்கிலத் திருச்சபையினராகிய இவர் அரச ஆதரவாளராவார். இவருடைய ஆதரவால் கிளாரண்டன் சட்டத் தொகுதி மீண்டும் எழுச்சிபெற்றது. எதிர்த்தரப்பினராகிய "நாட்டுக்கட்சி"யினர் பாராளுமன்றத்தைக் கலைக்கும் வீண் முயற்சியில் ஈடுபட்டனர். போப் ஆதரவாளர்களின் சூழ்ச்சி (சதி) தோன்றிப் பெரும் புரளியை உண்டாக்கியது. இப் புரளி அரசுரிமை விலக்கு மசோதாவிற்கு வகைசெய்தது. யார்க் கோமகன் அரசுரிமை பெறுவதை இம் மசோதா விலக்க வழி செய்தது. பத்தாண்டுகளுக்குப்பின் கொண்டுவரப்படவேண்டிய மசோதா 1678-ல் கொணரப்பட்டது. இச் சட்டத்தை யொட்டிய போராட்டம் இருகட்சிகளைத் தோற்றுவித்தன.

[1] Cabal

[2] Shaftesbury

ஒரு கட்சி பாராளுமன்றத்தை ஆதரித்தது. இன்னொரு கட்சி, விலக்கல் மசோதாவையொட்டிய அருவருப்பை வெளிப்படுத்தியது. இவை விக், டோரி கட்சிகள் எனப் பெயர்பெற்றன. அயர்லாந்திலும், ஸ்காட்லாந்திலும் நடைபெற்ற கொடுங்கோலாட்சி பொறுப்பற்ற ஒரு கூட்டத்தினரை உருவாக்கிவிட்டது. இவர்களுடைய கொடிய செயல்களுக்குச் சமய உணர்ச்சி மேலும் வெறியூட்டியது. ஸ்காட்லாந்தில் ஒறுக்கப்பட்ட ஒப்பந்தவாதிகள் அரசாங்கத்தின் அடக்குமுறையால் பெரும் கொதிப்படைந்தனர். இவர்கள் அரசாங்கத்திற்கெதிராக ஆயுதம் தாங்கிக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். இந்த வெறியர்கள் மேற்கத்திய தாழ்வெளிகளில் பெரும் திரளாக இருந்தனர். இவர்களே விக்குகள்[1] என்று ஏளனமாக அழைக்கப்பட்டார்கள். ஸ்காட்லாந்தின் பிரிஸ்பிட்டீரியச்சமய வெறியர்கள் இப் பெயரைப் பெற்றுர்கள். அவையை ஆதரிக்க விரும்பிய ஆங்கில அரசியல்வாதிகளுக்கும் பிராடெஸ்டெண்டு இணங்காப் பிரிவினரைப் பொறுத்துக்கொள்பவர்களுக்கும் இப் பெயர் வழங்கப்பட்டது. நாடுகடத்தப்பட்ட போப்பாதர வாளர்களாக இருந்த குற்றவாளிகளுக்கு அயர்லாந்து இடமளித்தது. இவர்கள் பிற்காலத்தில் டோரிகள்[2] என அழைக்கப்பட்டனர். ரோமன் கத்தோலிக்க இளவரசர்களை அரியணையிலிருந்து விலக்கிவைக்க மறுத்த ஆங்கிலேயர்களுக்கு இப் பெயர் அளிக்கப்பட்டது. சமயப் பொறையையும், அரசுரிமை மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டையும் விக்குகள் பற்றிநின்றுர்கள். ஆனல், டோரிகளோ, பழமையான கோட்பாடாகிய எதிர்ப்பின்மையையும் திருச்சபையின் தனிமுதன்மை நிலையையும் ஆதரித்தார்கள். ஷாப்ட்ஸ்பரி, பக்கிங்ஹாம், ரசல், அல்கெர்னன் சிட்னி[3] போன்றவர்களைத் தலைவர்களாகக்கொண்டு விக்குகள் நாடு முழுவதும் அவர்களுடைய அரசியல் நிறுவன அமைப்பை வளர்த்துக்கொண்டார்கள். ஆர்ப்பாட்டம் உச்சகட்டத்தில் இருக்கையில், சார்லஸின் போதனையால் டான்பி ஆங்கிலேயரின் நடுநிலையை ஆண்டுக்கு 30,000 பவுன் உதவித்தொகைக்காகப் பதினன்காம் லூயிக்கு விற்க ஏற்பாடு செய்தார். பாராளுமன்றம் இவரைக் கடுங்குற்ற விசாரணை செய்து தண்டனைக்கு வாக்களித்தது. அமைச்சரைக் காக்கவேண்டி சார்லஸ் பதினெட்டாண்டுகள் பதவியிலிருந்த பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

[1] Whigs

[2] Tories

[3] Algernon Sidney

அடுத்துநடந்த தேர்தல்களில் விக்குகள் பெரும் வெற்றி யடைந்தார்கள். இவர்கள் உடனே டான்பியைக் கடுங்குற்ற விசாரணைக்குட்படுத்தினர்கள். இவரைச் சிறையில் வைத் தார்கள். சிறையில் இவர் ஆறுண்டுகள் இருந்தார். அரசரின் கட்டளையை ஆதாரம்காட்டி இவர் மன்றுடினர். அரசரும் இவரை மன்னிப்பதாக அறிக்கைவிடுத்தார். ஆனல், இத்தகைய மன்னிப்பு எதுவும் கடுங்குற்ற விசாரணைக்குத் தடையாக அமையாதெனப் பாராளுமன்றம் முடிவுசெய்தது.

இதற்குப்பின், (அரசுரிமை) விலக்கு மசோதாவையொட்டி அரசருக்கும் விக்குகளுக்கும் இடையில் ஏற்பட்ட சர்ச்சை யினல் டான்பியும் இவருடைய தீயசெயல்களும் மறைந்து போயினர். விக்குகள் அடுத்தடுத்துத் தவறுகள் செய்து கொண்டிருக்கையில் சார்லஸ் மிக்க திறமையோடு செயற் பட்டு வந்தார். இரண்டு பாராளுமன்றங்கள் கலைக்கப்பட் டன. 1681-ல் பாராளுமன்றம் ஆக்ஸ்ஃபோர்டில் கூடிய பொழுது விக்குகள் தம் வன்முறைச் செயல்களால் நாட்டை அச்சுறுத்தினர். பதினன்காம் லூயியிடமிருந்து நிதியுதவி பெறும் நம்பிக்கையால் அரசர் பாராளுமன்றத்தைக் கலைக்க முற்பட்டார். தோல்வியுற்ற கட்சி, எதிரிகளிடமிருந்து எத்தகைய இரக்கத்தையும் பெற எதிர்பார்க்கமுடியாது. ஷாஃப்ட்ஸ்பரி ஹாலந்திற்கு ஓடினர். சதிசெய்த குற்றத் திற்காக ரசலும், சிட்னியும் மரணதண்டனைக்குள்ளானர்கள். பல நகர்த்தொகுதிகளின் சாசனங்களை ஜெஃப்ரெய்ஸ்[1] பறி முதல் செய்தார். அரசருடைய நலன்களுக்காக இவைகளை இவர் திருத்தியமைத்தார். சார்லஸின் நான்காண்டு ஆட்சிக் கால இறுதியில் எதிர்ப்பில்லா வல்லாட்சி நிலவியது. பாராளு மன்றங்கள் கூட்டப்படவில்லை. அரச விருப்பிற்கெதிராக எதிர்க்கட்சி எதுவும் தம் கருத்தை வெளியிட விரும்பவில்லை. பெரும் ஆதாயம் கருதிப் பாடுபட்ட விக்குகள் தோல்வியுற் றனர்; பல ஆண்டுகள் மதிப்பிழப்பிற்குள்ளானர்கள். இங்கி லாந்தில் ரோமன் கத்தோலிக்கச் சமயத்தை ஜேம்ஸ் நிலை நாட்டும் முயற்சியைத் தவிர்த்திருந்தால் இவர்களின் நிலை மேலும் மோசமடைந்திருக்கும்.

விக்குக்கட்சியின் அமைப்பையும், கொள்கையையும் சிறிது அறிந்துகொள்வது நலமாகும். ஒருசில பெருமக்கள் இக் கட்சியை நடத்திச்சென்றார்கள். நகரில் உள்ள வணிக

[1] Jeffreys

மக்களே இக் கட்சி கவர்ந்தது. இவர்களின் பியூரிட்டன் மரபு, கிளாரண்டனின் சட்டத்தொகுப்பை எதிர்த்தது. நாட்டுப் புறத்தில் இருந்த சிறுநிலச் சொந்தக்காரர்கள், செல்வர்களே யும், மதக்குருமார்களேயும் வெறுத்தார்கள். ஐம்பதாண்டிற்கு முன், லண்டன் நகரம் பியூரிட்டனை இருந்ததுபோல் இப் பொழுது விக்குகளின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது. சார்லஸ் உயிரோடு இருக்கையில் விக்குக்கட்சி அமைதியை விரும்பிய கட்சியாக இருந்தது. ஏனெனில், அரசருக்கு ஒரு நிலைப் படையை அளிக்க இவர்கள் அஞ்சினர்கள். புரட்சிக்குப்பின், விக்குகள் போர்க்கட்சியாக மாறியபொழுது டோரிகள் அமைதியை எடுத்துரைத்தார்கள். கட்சியின் அரசியல் கோட்பாட்டைச் சிட்னியும், லாக்கும்[1] எடுத்துரைத்தார்கள். ஸ்டூவர்ட்டுகளின் முடியாட்சிக் கோட்பாட்டை ஃபில்மர்[2] என்பவர் தம் பாட்ரியார்க்[3] என்னும் நூலில் ஆதரித்துள்ளார். ஹாப்ஸ் என்பவரும் லெவியத்தான் (Leviathan) என்னும் நூலில் ஸ்டூவர்ட்டுகளே ஆதரித்தாரெனினும், கருத்துகளே அதிகார அடிப்படையில் உருவாக்காமல் பகுத்தறிவின் அடிப் படையில் இவர் உருவாக்கினர். இவர்களுக்கெதிராகச் சிட்னி யும், லாக்கும் அரசாங்கம்பற்றிய கருத்தை வெளியிட்டார்கள். இதன்படி தன் விருப்பில் அமைந்த ஓர் உடன்பாட்டின் அடிப் படையில் சுயேச்சையான மக்கள் நிறுவனமொன்று சட்டத் தைச் செயல்படுத்த ஓர் அரசரை அல்லது அரசாங்கத்தை நிறுவியது. தம் சார்பில் ஒப்பந்தத்தை நிறைவேற்ற அரசர் மக்களின் கீழ்ப்படிதலைக் கோரினர். ஆகையால், எந்தக் குறிப் பிட்ட அரசாங்கமும் நடைமுறை பயன்பாட்டைத் தவிர வேறெந்தக் காரணங்களாலும் தன்னை மெய்ப்பித்துக்கொள்ள முடியாது. இக் கருத்துகளுக்குரியவர் ஹூக்கர்[4] ஆவர். இவரிடமிருந்து இக் கருத்துகள் மில்டனுக்குச் சென்றன. அரசியல் அதிகாரத்திற்கு ஏற்புடைய அடிப்படையைப் பெறு வதில் இதன் சிறப்பு இருக்கிறது. மறை நூல்களேயும் மரபு களேயும் திருச்சபை நம்பி இருந்ததை இக் கோட்பாடு மறுத் தது. விக்குகளின் கருத்துநோக்கு நல்ல பகுத்தறிவுச் சார் புடையதாக இருந்தது. வீழ்ச்சியடைந்த ஸ்டூவர்ட்டுகளின் பதிவில் காணப்படும் வீரக்காதையையோ அல்லது பிற்காலத் திய தீவிர இயக்கத்தைத் தூண்டிய புரட்சிக் கருத்துகளையோ

[1] Locke
[2] Filmer
[3] Patriarch

விக்குக்கட்சி பெற்றிருக்கவில்லை. புரட்சிக்குப்பின், இருக்கும் நிறுவனங்களின் நிலைப்பேற்றிற்காக விக்குக்கட்சி உழைத்தது. அரசர், பெருமக்கள் சபை, பொதுமக்கள் சபை ஆகியவைகளுக்கு இடையிலான தக்க சமன்பாட்டை இது பேண முற்பட்டது. சிந்தனையிலும் கருத்து வெளியீட்டிலும் ஓரளவு உரிமைக்காகவும் இது பாடுபட்டது. இது பேரார்வத்தையும் துணிகரச் செயல்களையும் வெறுத்தொதுக்கியது. ஆயினும், பரவலாக உரிமை நிலவுவதை இது விரும்பியது. அரசியல் வரலாற்றின் போக்கைப் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி வரை இது உருவாக்கியது.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Gardiner	:	History of Civil War
Firth	:	Years of the Protectorate
	:	House of Lords in the Civil War
Gardiner	:	Commonwealth & Protectorate
Pannce	:	Cromwell's Major-Generals
Woolrych	:	The fall of the Protectorate
Tanner	:	Constitutional Documents
Webb	:	English Poor Law History
Abbott	:	The Long Parliament of Charles II
Ogg D.	:	England in the reign of Charles II

John Backman, Cromwell

10. இரண்டாம் ஜேம்ஸ்

(1685 — 1688)

பொதுக்கருத்தை அறிந்துகொண்டு அதற்கேற்றபடி நடந்துகொள்ளும் அறிவாற்றல் சார்லஸிடம் காணப்பட்டது. ஆனால், ஜேம்ஸ் பொறுமையின்றியும் செயல்திறமின்றியும் காணப்பட்டார். வல்லாட்சிபற்றிய சார்லஸின் கருத்தை ஏற்றுக்கொண்டவரெனினும், இவர் ஒருவெறியர். சமயத்தைப் பொறுத்தவரையில் தம்முடைய தமையனைவிட அக்கறையுடையவராகவும் சமய வெறியராகவுமிருந்தார். கத்தோலிக்கச் சமயத்தை மீண்டும் நிறுவ இவர் முயன்றாரெனினும், சமயப் பொறையைக் கத்தோலிக்கர்களுக்குப் பெற்றுத்தர விரும்பினரென்பதையும் வரலாற்றாசிரியர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மனிதர்களை மதிப்பீடு செய்வதில் இவர் தவறிவிட்டார். இவருடைய நம்பிக்கையைப் பெற்றிருந்த சன்டர்லாண்டும்[1] சர்ச்சிலும்[2] அரசத் துரோகிகளாக மாறினர்.

இவருடைய முதல் பாராளுமன்றத்தில் டோரிகள் பெரும்பான்மை பலம்பெற்றிருந்தார்கள். இவர்களும் அரசருக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொண்டார்கள். ஏனெனில், மாநகர் சாசனங்கள் ஒழிக்கப்பட்டபின், இப் பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மான்மவுத்தின்[3] கலகம் வெற்றிபெறுதலை வைத்துக்கொண்டு ஜேம்ஸ் தப்புக்கணக்குப்போட்டார். இவர் விருப்பத்திற்கிணங்கிப் பாராளுமன்றம் சோதனைச் சட்டத்தை நீக்க மறுத்தபொழுது பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். இவருடைய கொள்கையைத் திருச்சபை ஆதரிக்கவேண்டுமென்பதற்காக அரசரின் தனிமுதன்மையைத் திருச்சபையின்மீது செலுத்தி, குருமார்களுக்கிருந்த

[1] Sunderland

[2] Churchill

[3] Manmouth

எதிர்ப்பை அடக்க ஒரு சமய நீதிமன்றத்தை நிறுவினர். திருச்சபையின் மீதான தாக்குதல் அரசரின் ஆதரவாளர் கூடப் புண்படுத்தியது. அரசினர் ஆதரித்த ஆங்கிலிக்கன் திருச்சபையினர் அரசரின் அதிகாரத்தை வலுப்படுத்த இறையுரிமைக் கோட்பாட்டைப் பயன்படுத்திக்கொண்டனர். லண்டனைக் கட்டுப்படுத்த, கத்தோலிக்கர்களின்கீழ் அரசர் ஒரு நிலைப்படையை உருவாக்க முயன்றார். விக்குகளின் கட்டுப்பாட்டிலிருந்த நாட்டுப்படையின் பிடியிலிருந்து காத்துக் கொள்வது இவரது நோக்கமாக இருந்தது. பொதுநல அரசுக்காலத்திலிருந்து நிலைப்படைபற்றிய வெறுப்பு நிலவி வந்தது. மேலும், படைமுறை ஆட்சியிலிருந்து தப்ப, ஜேம்ஸின் ஆட்சியை முடிவிற்குக் கொண்டுவரவேண்டுமென மக்கள் நினைத்தார்கள். சிறப்பதிகாரமாகிய விலக்கிவிடும் அதிகாரத்[1]தைத் தாராளமாக அரசர் செயல்படுத்தியது, நீய உணர்ச்சியைப் பெருக்கியது. ஒரு சட்டத்திற்குப் பணிய மறுப்பவர்களுக்கு முன்கூட்டியே கொடுக்கப்படும் மன்னிப்பிற்கு, 'விலக்கிவிடும் அதிகார'மெனப் பெயர். பாராளுமன்றத்தின் எதிர்ப்பிற்கிடையில் இந்த அதிகாரம் அரசரால் பழங்காலத்திலிருந்தே செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது. லங்காஸ்டிரியர்களின் காலத்திய நீதிபதிகள் அரசரின் இந்த அதிகாரம் நெறிமுறைச் சட்டத்திற்கெதிராக இருக்கலாகாதென அறிவித்தார்கள். தவறுன செயல்களுக்கு இவ்வதிகாரம் ஏற்பளிக்கலாகாதென 1674-ல் ஒரு வழக்கில் நீதிபதிகள் குறிப்பிட்டார்கள்; மூன்றும் தரப்பினரின் உரிமையை இந்த அதிகாரம் கவரமுடியாதெனவும் கூறினர்கள். இந்த அதிகாரத்தை டியூடர்களும், முதலாம் ஜேம்ஸும் பயன்படுத்தியுள்ளார்கள். கத்தோலிக்கர்களுக்குப் பதவியளிக்க இரண்டாம் ஜேம்ஸ் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தினர்.

தொடர்ச்சியான பல நடவடிக்கைகளால் இரண்டாம் ஜேம்ஸ் 1688-ஆம் ஆண்டு புரட்சியை உருவாக்கினர். நிறுத்திவைப்பு[2] அதிகாரத்தையும், விலக்கிவிடும் அதிகாரத்தையும் பயன்படுத்தி ரோமன் கத்தோலிக்கச் சமயத்தை நிலைநிறுத்த ஜேம்ஸ் முயல்கிறார் என்பதை மக்கள் சிறிதுசிறிதாகப் புரிந்துகொண்டார்கள். மேலும், நிலைப்படையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை அச்சுறுத்தியும் வந்தார். ∴பிரெஞ்சு யூகு நோக்குகளுக்குச் சமயப்பொறை வழங்கிய

[1] Dispensing Power

[2] Suspencing Power

நான்டிஸ் ஆணையை 1685-ல் பதினான்காம் லூயி நீக்கியதோடு புரட்சிக்கான தொடர்நிகழ்ச்சிகள் தோன்றியதெனக் கூறலாம். லூயியின் இச் செயல் ஐரோப்பிய பிராடெஸ்டெண்டுகளின் உணர்ச்சியைத் தூண்டியது. அரசரின் விலக்கிவிடும் அதிகாரம்பற்றிய பிரச்சினையை எழுப்பிய ஹேல்சின் வழக்கு 1686-ல் நீதிமன்றத்தின்முன் வந்தது. சர் எட்வர்டு ஹேல்ஸ் ஒரு இராணுவப் பதவியில் அமர்த்தப்பட்டார். இதை எதிர்த்து கோடன்[1] என்பவர் கொண்டுவந்த வழக்கில் ஹேல்ஸ் தண்டிக்கப்பட்டார். அரசரின் விலக்கிவிடும் அதிகாரத்தை நாடிய ஹேல்ஸ் அரச நீதிமன்றத்தில் முறையிட்டார். பன்னிரண்டு நீதிபதிகளில் பதினேரு நீதிபதிகள் இவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தார்கள். இத் தீர்ப்பு, சட்ட முரணானதென்பது தெளிவு. முன்னிகழ்வுகளைக்கொண்டு ஆராயும்பொழுது இது சரியென்று தோன்றலாம். ஆனல், நீதிபதிகள் அரசரின் உசித அதிகாரம்பற்றிய தொடர்பில்லா விளக்கத்தின் அடிப்படையில் இத் தீர்ப்பை அளித்தார்கள். சட்டங்கள் அரசருடைய சட்டங்களென்றும், இவைகளில் அரசர் எதையும் தள்ளுபடி செய்துவிடலாமென்றும், பாராளுமன்றம் இந்த அதிகாரத்தைக் கட்டுப்படுத்த முடியாதென்றும் முதன்மை நீதிபதி ஹெர்பர்ட் கூறினர். ஓரளவிற்கு விலக்கிவிடும் அதிகாரமும், நிறுத்திவைக்கும் அதிகாரமும் போப்பிடமிருந்து மரபுரிமையாக அரசர்கள் சமயச் சீர்திருத்த இயக்கத்திற்குப்பின் பெற்ற அதிகாரங்களாகும். அரசரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரத்தைப்போல் தவறு செய்தவர்களுக்கு அரசர் சொந்தமுறையில் கொடுக்கும் தண்டனைகளாக இவை கருதப்பட்டன. குறிப்பிட்ட வழக்குகளில் தண்டனைச் சட்டங்களை விலக்கிவிடும் அதிகாரம் அரசரிடமிருந்து பிரிக்கமுடியாத சிறப்பதிகாரனென ஹேல்ஸ் வழக்கில் நீதிபதிகள் முடிவுசெய்தார்கள்.

பிற்காலத்தில், "உரிமைகள் மசோதா" இந்தத் தீர்ப்பை கண்டனம் செய்தது; பின் ஒழித்துக்கட்டியது. பிராடெஸ்டண்டுகளை நீக்கிவிட்டுக் கத்தோலிக்கர்களை அமர்த்த வேண்டுமென ஜேம்ஸ் நினைத்திருக்கமுடியாது; ஆங்கிலிக்கன் திருச்சபையையும் அழித்துவிடக் கருதியிருக்கமுடியாது. ஆனல், பல சிவில், இராணுவப் பதவிகளுக்குப் பல கத்தோலிக்கர்களை அமர்த்தினரென்பதை மறுக்கமுடியாது. ஆங்கிலிக்கன் திருச்சபையின் கோட்டைகளாக இருந்த

[1] Godden

ஆக்ஸ்:போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களை ஜேம்ஸ் கடுமையாகத் தாக்கினர். பொறுத்தல் அறிக்கையையொட்டிய சர்ச்சையில் இவர் நிறுத்திவைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தினர். இணங்காதாரின் ஆதரவை அரசர் பெற விரும்பினர். ஏனெனில், இவர் அரசெய்திய காலத்திலிருந்தே கத்தோலிக்கர்கள் சமயப்பொறையைப் பெற்று வந்துள்ளார்கள். கத்தோலிக்கர்களையும் இணங்காதாரையும் பதவியமர்த்துவதிலிருந்து விலக்கிவைக்கும் சட்டங்களை இந்த அறிக்கை அகற்றியது. இவர்களுக்குத் தண்டனையளித்த சட்டங்களையும் இந்த அறிக்கை நீக்கியது. ஆனால், பொது வழிபாட்டுரிமையை இணங்காதார் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஏனெனில், கத்தோலிக்கர்களுக்கு உதவவேண்டுமென்பது மன்னரின் நோக்கம் என்பதை இவர்கள் அறிவார்கள். ஆகவே, ஜேம்ஸ் இவ் வறிக்கையை இரண்டாம் தடவையாகப் பிறப்பித்து, குருமார்கள் இதை வெளிப்படையாகத் திருச்சபையில் படிக்கவேண்டுமெனக் கட்டளையிட்டார். மேற்றிராணியார்கள் இப்பொழுது இக்கட்டான நிலைக்குள்ளானார்கள். இதை வாசிக்க மறுத்தால், எதிர்ப்பில்லாக் கோட்பாட்டிற்கெதிராக இது இருக்கும். அரசரின் கட்டளைக்குப் பணிந்தால் இது இவர்களுடைய சமயக் கருத்துகளுக்கு முரணுகும். ஆகவே, கான்டர்பரியின் அதிமேற்றிராணியாரும் மற்ற ஆறு மேற்றிராணியார்களும் சட்டங்களை விலக்கிவிடப் பொறுத்தல் அறிக்கையைப் பிறப்பிக்கும் அரசரின் அதிகாரத்தை ஒரு விண்ணப்பத்தில் மறுத்துரைத்தார்கள். இதைத் திருச்சபைகளில் வாசிக்கும் பணியிலிருந்து இவர்களுக்கு விலக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அரசரின் அதிகாரத்தை இவ் விண்ணப்பம் மறுத்துரைத்ததால் இதை ஆட்சிக்கெதிரான அவமதிப்பு வெளியீடென அரசர் கருதினர். எனவே, ஏழு மேற்றிராணியார்களும் விசாரணைக்குள்ளானர்கள். இந்த விசாரணை மூன்று பிரச்சினைகளை எழுப்பியது. (1) அரசருக்கு விண்ணப்பிக்கும் உரிமை (2) ஆட்சிக்கெதிரான அவதூற்றின் தன்மை (3) விலக்கிவிடும், நிறுத்திவைக்கும் அதிகாரங்களின் முறைமையுடைமை. விசாரணை முடிவில் மேற்றிராணியார்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். விண்ணப்பிக்கும் உரிமையை நீதிமன்றம், "குடிமக்களின் பிறப்புரிமை"யென விவரித்தது. இந்த வழக்கின் முடிவு அறிவிக்கப்படுவதற்குப் பதினைந்து நாட்களுக்குமுன், ஜேம்ஸ் மன்னருக்கு ஆண்மகவு பிறந்தது. ஆரெஞ்சு வில்லியத்தின் மனைவியும், ஜேம்ஸின் மகளுமாகிய மேரி இனிமேல் அரசப்பதவிக்கு அடுத்த வாரி

சாக வரமுடியாது போய்விட்டது. தொடர்ச்சியாக ரோமன் கத்தோலிக்க அரசர்களே அரசியல் தலைவர்கள் ஏற்றவேண்டியிருக்குமென்பதை இவர்களால் பொறுக்கமுடியவில்லை. டான்பி, பிசப் கோம்டன்[1] போன்ற டோரிகள், எட்வர்டு, ரசல் சிட்னி போன்ற விக்குகளுடன் சேர்ந்துகொண்டு, "ஆங்கில மக்களின் உரிமையை மீட்டுத்தரவும், பிராடெஸ்டெண்டு சமயத்தைப் பாதுகாக்கவும்" ஆரெஞ்சு வில்லியத்தை வரவேற்றார்கள். டோர்பேயில்[2] வில்லியம் வந்திறங்கியதும் ஜேம்ஸின் செல்வாக்குகள் குலைந்தன. 1688-ஆம் ஆண்டு இறுதியில் அரசர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார். பெரு மக்கள் சபையின் உறுப்பினர்களையும், முந்திய அரசர்களின் காலத்திய பொதுமக்கள் சபையின் எஞ்சியுள்ள உறுப்பினர்களையும் கொண்ட ஒரு பேரவை கூட்டப்பட்டது. இதில் லண்டன் நகரின் நகர முதுவர்களும், கவுன்சிலர்களும் இடம் பெற்றனர். இப் பேரவையின் அறிவுரையின் பேரில் 1689-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மற்றொரு பேரவை கூட்டப் பட்டது.

பேரவையின் முதற்கூட்டத்தின் பணி அப்பொழுது இருந்த நிலையை வரையறை செய்யவேண்டியதாக இருந்தது. இதைப் பேரவை ஒரு தீர்மானத்தால் முடிவுசெய்தது. "அரசருக்கும் மக்களுக்கும் இடையேயான ஒப்பந்தத்தை முறித்ததாலும், நாட்டின் அரசியலமைப்பைக் கீழிறக்க இரண்டாம் ஜேம்ஸ் முயன்றதாலும், இயேசு திருச்சபையினர், பிறதீயவர்கள் ஆகியோரின் அறிவுரையால் அடிப்படையான சட்டங்களை மீறியதோடு, தாமே நாட்டைவிட்டு வெளியேறி அரசுதுறந்ததால், அரியணை காலியாக இருக்கிறது" என்பதே இத் தீர்மானம். பெருமக்கள் சபையில் டோரிகளின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. இதைப் பயன்படுத்தி, "பதவி துறந்தார்" என்பதற்குப் பதிலாக, "பதவிவிட்டார்" என்ற சொல்லைப் பொதிந்து தீர்மானத்தை மாற்றியமைக்கச் சபை முயன்றது. அரசுரிமையை ஜேம்ஸ் இழந்துவிட்டார் என்பது டோரிகளின் கருத்தாகும். இதன்படி அரசப்பதவி மேரிக்குச் சென்றடையுமென இவர்கள் நம்பினர்கள். அரசருக்குரிய எல்லா அதிகாரங்களையும் வில்லியம் பெற்றுச் செயல்படுத்த வேண்டுமென டோரிகள் விரும்பினாலும், பாராளுமன்றத்தின் இறைமைக்கு ஈடாக மரபுவழி அரசுரிமையெய்தும் கோட்

[1] Compton

[2] Terbay

பாட்டை இவர்கள் கைவிட விரும்பவில்லை. வில்லியம் அரசப் பகர ஆளுநராக இருக்க மறுத்ததாலும், தம் கணவரின்றி, மேரியும் அரசியாக இருக்க விரும்பாததாலும், ஓர் உடன்பாடு செய்துகொள்ளுவதவசியமாயிற்று. இதன்படி வில்லியமும் மேரியும் சேர்ந்து ஆட்சிசெய்வதென்பது ஒத்துக்கொள்ளப் பட்டது. நிருவாக அதிகாரம் வில்லியத்திடம் நிலைபெற வேண்டுமென்பது உடன்பாடாகும். அதிமேற்றிராணியார் சான்கிராப்ட்டும்[1] மேலும் பல மேற்றிராணியார்களும் குறிப் பிட்ட தொகையினரான குருமார்களும் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள மறுத்தார்கள். விசுவாசப் பிரமாணம் எடுக்க மறுத்தவர்களின் தலைவர்களாக இவர்கள் மாறினர்கள். இக் குழுவினர் 18-ஆம் நூற்றாண்டிலும் மத்தியப் பகுதிவரை இருந்துவந்தார்கள்.

Bill of Rights"

வில்லியத்திற்கும் மேரிக்கும் அரசுரிமை அளிப்பதற்கு முன், உரிமைகள்பற்றி ஓர் அறிக்கையைத் தயாரிக்கப் பாராளுமன்றக் குழு ஒன்று அமர்த்தப்பட்டது. ஸ்டூவர்ட்டு களின் வீழ்ச்சிக்கு இவ் வுரிமை மீறலே காரணமாக இருந்தது. முடிசூட்டப்பெறுமுன், இந்த உரிமைகளின் அறிக்கை அர சருக்கு அளிக்கப்பட்டது. மக்களின் உரிமைகளையும், சுதந் திரத்தையும் அறிவிக்கும் ஒரு சட்டமாகப் பின்னர் இது நிறை வேற்றப்பட்டது. அரசுரிமைக்கான வாரிசை முடிவுசெய் யும் சட்டமாகவும் இது இருந்தது. இதைப் பொதுவாக, "உரிமைகள் மசோதா" என்பர். சில நாட்களுக்குப்பின், ஸ்காட்லாந்தில் கூடிய பேரவை அரசுரிமைக் கோரிக்கையை நிறைவேற்றியது. இம் மசோதாவில் குருமார்களின் ஆட்சி ஒழிப்பும் ஒரு பிரிவாகச் சேர்க்கப்பட்டது.

இரண்டாம் ஜேம்ஸ் மக்கள் உரிமைகளை மீறியதை அடிப் படையாக வைத்து, உரிமை அறிக்கை தொடங்கியது. நிறுத்தி வைக்கும் அதிகாரத்தையும் விலக்கிவிடும் அதிகாரத்தையும் செயல்படுத்தி, இவைகளை எதிர்த்து விண்ணப்பித்துக் கொண்ட திருச்சபையினரைச் சிறைப்படுத்தி, திருச்சபை உயர்ஆணை நீதிமன்றத்தை நிறுவி, பாராளுமன்றத்தின் ஒப் பிசைவின்றி வரிகளை விதித்து, அமைதிக்காலத்தில் நிலைப் படையொன்றை வைத்துக்கொண்டு, பிராடெஸ்டெண்டுகளின் ஆயுதங்களைக் களைந்து, போப்பிஸ்டுகள் ஆயுதங்களைத் தாங் கிச்செல்ல அனுமதித்து, தேர்தல் சுதந்திரத்தில் தலையிட்டு,

[1] Sancraft

பாராளுமன்றத்தின் நீதிச் செயலாட்சிச் சிறப்புரிமைகளில் குறுக்கீடு செய்து, தகுதியில்லாதவர்களை ஜூரிகளாக நீதி மன்றங்களில் நிரப்பி, மேலதிகமாகப் பிணையப்பணம் கோரி, மிகையாகத் தண்டப்பணம் விதித்து, தண்டிக்கப்படுவதற்கு முன் தண்டம் விதித்து, உரிமையைப் பறித்து ஜேம்ஸ் ஆட்சி செய்ததை, "உரிமை அறிக்கை" குறிப்பிட்டுக் கூறியது. இவைகளனைத்தும் மரபுகளுக்கும், எழுத்துருவில் இருக்கும் சட்டங்களுக்கும், இந் நாட்டின் சுதந்திரத்திற்கும் முற்றிலும் முரணானவையென இவ் வறிக்கை கூறியது.

பழங்காலத்திய உரிமைகளையும் சுதந்திரங்களையும் அறிக்கை பதின்மூன்று பிரிவுகளில் தொகுத்தளித்தது. சட்டங்களை நிறுத்திவைக்கும் அதிகாரத்தை முதல்பிரிவு, முறை கேடானதென அறிவித்தது. அண்மையில் ஏற்றுச் செயல் படுத்தப்பட்ட விலக்கிவிடும் அதிகாரம் சட்டத்திற்கு மாறான தென இரண்டாம் பிரிவு தெரிவித்தது. திருச்சபை வழக்கு களுக்கான உயர்ஆணை நீதிமன்றங்கள் எல்லாம் முறை கேடானவையென இவ் வறிக்கை குறிப்பிட்டது. குடிமக்கள் அரசருக்கு விண்ணப்பிக்க உரிமை உண்டென ஐந்தாவது பிரிவு கூறியது. பாராளுமன்றத்தின் இசைவில்லாமல் அமைதிக் காலத்தில் நிலைப்படையை வைத்துக்கொள்வதை ஆறுவது பிரிவு கண்டனம் செய்தது. பிராடெஸ்டெண்டுகள் ஆயுதம் தாங்கிச்செல்லும் உரிமையை ஏழாவது பிரிவு கோரியது. பாராளுமன்றத்திற்கான தேர்தலில் சுயேச்சையை எட்டாவது பிரிவு வலியுறுத்தியது. பாராளுமன்றத்தில் பேச்சுரிமைக்கு ஒன்பதாவது பிரிவு வற்புறுத்தியது. மிதமிஞ்சிய பிணையப் பணத்தையும், கொடிய, வழக்கம் மீறிய தண்டனையளிப்பையும் பத்தாவது பிரிவு தடைசெய்தது. ஜூரிகளின் பெயர்கள் முறையாகப் பட்டியல்படுத்தப்பட வேண்டுமெனப் பதினொ ராவது பிரிவு கோரியது. தண்டிக்கப்படுவதற்குமுன் விதிக்கப் படும் தண்டங்களையும், பறிமுதல்களையும் சட்ட முரணானவை யென்றும், செல்லாதவை என்றும் பன்னிரண்டாவது பிரிவு அறிவித்தது. குறைகள் எல்லாவற்றையும் நீக்குதற்கும், சட்டங்களைத் திருத்தி, வலிவூட்டிப் பேணுதற்கும் அடிக்கடி பாராளுமன்றம் கூட்டப்படவேண்டுமெனப் பதின்மூன்றாவது பிரிவு வலியுறுத்தியது.

இந்த அறிக்கை சட்டமாக மாறியபொழுது, அரசுரிமை பெறுதலிலிருந்து "கத்தோலிக்க அரசக்குமாரனையும் அல்லது அரசரையும் அல்லது ஒரு கத்தோலிக்கரை மணந்துகொண்ட

அரசியாரையும்" உரிமைத்தகுதி யிழக்கச்செய்வதற்கான ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது.

1689-ஆம் ஆண்டில் இரண்டு சட்டங்கள் இயற்றப்பட்டன. இவைகளில் ஒன்று படைக்கலச் சட்ட[1]மாகும். படையில் படைமுறைச் சட்டத்தைச் செயல்படுத்த இச் சட்டம் அதிகாரமளித்தது. இந்தச் சட்டம் ஆறுமாத காலத்திற்கு நிறைவேற்றப்பட்டது. இதை ஆண்டுதோறும் புதுப்பிக்கவும், அரசரின் படைகளைப் பயனுள்ள முறையில் கட்டுப்படுத்தவும் பாராளுமன்றத்திற்கு இச் சட்டம் வாய்ப்பளித்தது. சமயப் பொறைச் சட்டம்[2] இன்னொன்றாகும். ஒருசில சமயப் பிரிவினர்களுக்கு இச் சட்டம் வழிபாட்டுச் சுதந்திரமளித்தது. இச்சட்டத்தினால் பெறப்பட்ட நன்மைகளிலிருந்து போப்பிஸ்டுகளுக்கு விலக்களிக்கப்பட்டது. இச் சட்டத்தைத் தொடர்ந்து சிறிது காலத்திற்குப்பின், பத்திரிகைத் தணிக்கை முறையும் விலக்கப்பட்டது. இதனால் பரந்த செயல்விளைவுகள் ஏற்பட்டன. இவ் விளைவுகள் ஆட்சியை எளிதாக்கின. மக்களின் செயற்பாட்டெல்லைகளிலிருந்து அரசாங்கம் விலகிக்கொண்டது.[3] அரசியல், சமயக் கருத்துகளைக் கட்டுப்பாடின்றி வெளியிட, விக்குகள் அனுமதித்ததன் வழியாக வருங்காலத்தை மட்டுமன்றி, நிகழ்காலத்தையும் இவர்களால் ஒருவாறு உருவாக்க முடிந்தது. ஆனால், பொறையைச் சமயத்துறையில் ஏற்றுக்கொண்டபின், இது வாழ்க்கையில் எல்லாப் பிரிவுகளுக்கும் பரவியது. கருத்து வெளியீட்டுச் சுதந்திரம், அரசியலில் ஒரு புதிய சகிப்புத்தன்மை வளர்வதற்குப் பெரிதும் உதவியது. எனவே, 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசியல் குற்றங்களுக்கான விசாரணைமுறை காலங் கடந்து விட்ட முறையாக மாறிவிட்டது.

விலக்குரிமைச் சட்டத்திற்குப்[4] பாராளுமன்றம் இணங்க மறுக்கவே இதை அரசர் 1690-ல் கலைத்தார். ஆட்சிக்காலத் தொடக்கத்தில் எத்தகைய துயர நிகழ்ச்சிகளையும் விரும்பாத வில்லியம் அடுத்தாண்டு கூடிய பாராளுமன்றத்தில் அருள் இரக்கச் சட்டத்திற்கு இசைவை அளித்தார். பாராளுமன்றத்தின் அதிகாரத்தை வலுப்படுத்தும் நோக்கத்தோடு, இப்

[1] Mutiny Act

[2] Gardiner, "Introduction to English History" p. 165

[3] Toleration Act

[4] Act of Indemnity

பாராளுமன்றம் அரசருக்கு 600,000 பவுன்களை மானியமாக அளித்தது. இத் தொகை அரசரின் செலவிற்காகக்கொடுக்கப் பட்டதாகும். வருவாயின் மற்றப் பகுதிகளைப் பொதுமக்கள் சபை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கியது. கணக்குகளைத் தணிக்கைசெய்யவும், கட்டுப்பாடு செய்யவும் ஆணையர்கள் அமர்த்தப்பட்டார்கள். இதன் விளைவாக, மற் றெந்தச் சட்டத்தின் இசைவுமின்றி, 1689-க்குப்பின், பாராளு மன்றம் நிதி திரட்டவும், நிதி ஒதுக்கவும் ஒவ்வொரு ஆண்டும் கூடியது.

தவருமல் கூட்டங்களுக்கு இப்பொழுது வகைசெய்யப் பட்டிருந்தாலும், வாக்காளர்களின் உரிமைகள் இன்னும் பாது காக்கப்படவேண்டியவைகளாக இருந்தன. முன்னிலுமீட்சிக் காலத்திய நீடித்த பாராளுமன்றம் பதினெட்டாண்டுகள் பதவி யில் இருந்தது. அரசரின் கொள்கைக்கு இது பணிந்து சென்றிருக்குமென்றல், மேலும் தொடர்ந்து பதவியில் இருந் திருக்கும். வருங்காலத்தில் பாராளுமன்றத்தின் இத்தகைய பதவிக்கால நீட்டிப்பு எதையும் தடுக்க 1693-ல் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றம் மூன்றாண்டிற்குமேல் பதவியில் இருக்கலாகாதென இச் சட்டம் விதித்தது. இம் மசோதாவிற்கு அரசர் இசைவுதர மறுத்துவிட்டார். எனினும், அடுத்த ஆண்டில் இதற்கு இசைவளித்துச் சட்டமாக்கிக் கொண்டார். இந்த மூவாண்டுச் சட்டம்[1] 1716 வரை செயற் பாட்டிலிருந்தது. ஜேகப்பைட்டுகளின் கலகங்களையொட்டிப் பாராளுமன்றம் எந்த நேரத்திலும் கலைக்கப்பட்டுவிடலா மெனும் அச்சமிருந்தபொழுது பாராளுமன்றம் ஏழாண்டுச் சட்டத்[2]தை நிறைவேற்றியது. இப்பொழுது பதவியிலிருந்து பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை அதிகரிக்கவும், இனி வரும் பாராளுமன்றங்களின் பதவிக்காலத்தை அதிகரிக்கவும் இச் சட்டம் வழிசெய்தது.

உரிமை மசோதா, வாரிசுரிமையை வில்லியம், மேரி ஆகிய வர்களின் குழந்தைகளுக்கு அளிக்க வகைசெய்தது. இவர் களுக்குக் குழந்தைகள் இல்லையென்றல், மேரியின் தங்கைக் கும், இவருடைய குழந்தைகளுக்கும் வாரிசுரிமை செல்ல வேண்டும். இவருக்கும் குழந்தை இல்லையென்றல், வில்லியத் தின் மற்றெந்த மனைவியின் குழந்தைக்கும் அரசுரிமை செல்ல

[1] Triennial Act. 1694

[2] Septennial Act

வேண்டுமென வகைசெய்தது. நாட்டுத் துரோகச் சட்டத்தை ஒழுங்குபடுத்த முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வில்லியமும் மேரியும் அரசுரிமையை ஏற்றுக்கொண்டார்கள். உரிமைகளின் அறிக்கை, உரிமை மசோதாவாக நிறை வேறியது.

புதிய அரச மரபினர் ஆட்சிசெய்யவேண்டிய நிலையை உரிமை மசோதா வரையறை செய்ததெனலாம். விக்குகளும் டோரிகளும் சேர்ந்தே செயல்படவேண்டியிருந்ததால், அரசரின் அதிகாரத்தையொட்டிய நிலையான வரையறை நீடித்த பாராளுமன்றம் குறிப்பிட்டதைவிடக் குறைவாகவே இருந்தது. ஆனால், அரசரின் இறையுரிமை இப்பொழுது மறைந்துபோய் விட்டது. ஸ்டுவர்ட்டுகளின் காலத்திலிருந்துவந்த சர்ச்சைகள் மக்களுக்கு ஆதரவாக முடிவடைந்தன. அடிப்படையான பிரச்சினைகளை உரிமை மசோதா விளக்கியுரைக்கவில்லை.[1] ஆனால், இரண்டாம் ஜேம்ஸின் குறிப்பிட்ட நடவடிக்கைகளைக் கணக்கிட்டு, அவைகளை முறைகேடானவையென அறிவித்தது. ஸ்டுவர்ட்டுகள் உரிமைகொண்டாடிய அதிகாரங்களை இது வருங்காலத்தில் ஒழித்துக்கட்ட வகைசெய்தது. இரண்டாம் ஜேம்ஸின் நடவடிக்கைகள் சட்டத்திற்கு மாறுனவைகளாக இருந்தமையால், குடிமக்கள் வில்லியத்தையும் மேரியையும் ஆட்சிசெய்யும் அரசர்களாக ஏற்றுக்கொண்டார்கள். இது மக்களுக்கும் அரசருக்கும் இடையில் உருவான ஓர் ஒப்பந்த மாகும். பாராளுமன்றத்தில் இறைமையை நிலைபெறச் செய்தது, முழு வல்லாட்சிக்கு முடிவுகட்டியது. நாட்டு மக்களின் இறைமைபற்றிய கருத்தும் சட்டத்தின் ஆட்சியும் இப்பொழுது திட்டவட்டமாக நிறுவப்பட்டுவிட்டன. "பாராளு மன்றத்தின் இசைவுபெறுத மற்றெதுவும்" என்ற சொற் றொடர், பாராளுமன்றத்தின் இசைவு எதையும் சட்டப்படியான தாகச் செய்யலாமெனும் கருத்தைக் குறிப்பிடுகிறது. பாராளுமன்றத்தின் ஆதிக்கநிலையை இவ் வறிக்கை குறிப் பிட்டதோடு, நிருவாகத்திற்கும் சட்டமன்றத்திற்குமிடையே யான போராட்டத்தை இது முடிவிற்குக் கொண்டுவந்தது. பிற்காலத்தில் பாராளுமன்ற இறைமைக் கோட்பாடும் சட்டத் தின் ஆட்சிக் கருத்தும் பயன்படுத்தப்படுவதில் முன்னேற்றத் தைக் காணவேண்டும்.

அரசாங்கத்தைப்பற்றி உரிமை மசோதாவில் ஒன்றும் கூறப்படவில்லை. புதிய அரசாங்க வடிவமெதையும் இது

[1] G. B. Adams, "Constitution History of England"

படைக்கவில்லையாதலால், அரசப்பதவியின் அதிகாரத்தை இது வரையறை செய்ய முற்படவுமில்லை. அரசியலமைப்பில் இறைமையின் உறைவிடம்பற்றி இது எதையும் குறிப்பிட வில்லை. அரசியலமைப்புப் பாதுகாப்பையும் இது முடியாட்சிக்குக் கூறவில்லை. இது உரிமைகளின் தொகுப்பேயன்றிப் புரட்சியானதாக இருக்கவில்லை. அரசியலமைப்பிற்கான பாதுகாப்புகள் காலப்போக்கில் வளர்ச்சியடைந்தன. நிலமாற்றத்தில் காணப்பட்ட சிறப்பைவிட இதன் தனிப்பட்ட பிரிவுகளில் சிறப்பெதுவும் காணப்படவில்லை. புரட்சிக்குப் பின், அரசர் சட்டத்திற்குட்பட்டவராக மாறினர். இருப்பினும், ஆட்சித்துறையில் இவர் முடிவான கட்டுப்பாட்டைத் தொடர்ந்து பெற்றிருந்தார். ஒரு சிறிய, செல்வாக்குள்ள குழு அமைச்சரவையாக இருந்தது. இது அரசரின் நம்பிக்கையைப் பெற்றிருந்ததோடு, பாராளுமன்றத்திலும் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தது. பாராளுமன்றத்தின் இசைவின்றி அரசர் நாட்டைவிட்டு வெளியே செல்லலாகாதென்றும், பாராளுமன்றத்தைக் கலந்துகொள்ளாமல் அரசர் போர்தொடுக்கலாகாதென்றும் உரிமை மசோதா குறிப்பிட்டது. உரிமை மசோதாவின் இக் கருத்துகள் வில்லியத்தைப் பாதிப்பதாகத் தோன்றின. வெளியாராகவும், கால்வினிய சமயப் பிரிவினராகவும் இருந்ததால், ஆங்கிலேயர்களின் பற்றுறுதியை இவரால் பெறமுடியவில்லை.

வரிவிதிப்பின்மீதான எல்லாக் கட்டுப்பாட்டையும் அரசர் இப்பொழுது இழந்தார். முற்காலத்தில் அரசாங்கச் செலவிற்கும் அரசரின் சொந்தச் செலவிற்கும் ஒரு வேறுபாடு இருந்தது. அரசரது மரபுவழி வருவாய்களைப் பாராளுமன்றம் அவருக்களித்தது. அரசருடைய சொந்த நிலங்களிலிருந்து கிடைத்த வருமானமும், பாராளுமன்ற வரிகளால் கிடைத்த வருமானமும் அரசருக்குரிய தனிப்பட்ட வருவாய்களாகும். புரட்சிக்குப்பின், பாராளுமன்றம் அரசருக்கு மானியமாக ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்தது. வில்லியம் கடன்பட்டுப்போகவே, நிதிஉதவி பெற, பாராளுமன்றத்தை நாடவேண்டியதாயிற்று. மூன்றுவது ஜார்ஜ் பல தனிப்பட்ட வருவாய்களை விட்டுக்கொடுத்தார். நான்காம் வில்லியமும் அரசருக்குரிய நிலத்தின் வருவாயைத் தவிர, மற்றவைகளை விட்டுக்கொடுத்துவிட்டார். விக்டோரியாவின் காலத்தில் சொந்தச்செலவு தவிர, அரண்மனைச் செலவு போன்றவை, அரசமானியத்திலிருந்து அகற்றப்பட்டுவிட்டன.

சட்ட ஆக்கத்தின்மீதான கட்டுப்பாட்டையும், அரசர் இப்பொழுது இழந்துவிட்டார். பாராளுமன்றம் இயற்றிய மசோதாவிற்கு இசைவுதர அரசர் மறுக்கலாம். பாராளுமன்றத்திற்கும், அரசருக்கும் போராட்டம் இருந்தபொழுது இவ் விசைவு மறுப்பு பயனுடையதாக இருந்தது. ஆனல், இப்பொழுது இந்த அதிகாரம் வழக்கொழிந்து போய்விட்டது. இசைவு மறுப்பு அதிகாரத்தை வில்லியம் நான்கு தடவைகள் பயன்படுத்தினர். இச் செயல் பெரும் வெறுப்பைத் தூண்டியது. ஆன் அரசியார் இதை ஒருமுறை பயன்படுத்தினர். இவருக்குப்பின், இது வழக்கொழிந்து போய்விட்டது.

அமைதிக்காலத்தில் நிலைப்படையை வைத்துக்கொண்டிருப்பது சட்டத்திற்கு மாருனதெனினும், ∴பிரான்சுடன் போரிடவேண்டியிருந்ததால், நிலைப்படையொன்று தேவைப்பட்டது. இதைத் தனிப்பட்ட சட்டங்களால் கட்டுப்படுத்த வேண்டியதாயிருந்தது. படையினரிடையே கலகநிலை காணப்பட்டதால் படைக்கலகச் சட்டமொன்று விரைந்து நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் ஓராண்டே செயற்பாட்டில் இருக்கும். எனவே, படையைப் பாராளுமன்றம் தொடர்ந்து கட்டுப்படுத்த இச் சட்டம் வாய்ப்பளித்தது. படையினரின் கலகத்தை அடக்க இச் சட்டம் அரசருக்குத் தனிச் சிறப்பதிகாரமளித்தது. படையினர் இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டார்கள். சாதாரண சட்டத்திற்கும், இராணுவச் சட்டத்திற்கும் தெளிவானதொரு வேறுபாடு ஏற்பட்டது. இராணுவச் சட்டங்களும், விதிமுறைகளும் அரசரின் சிறப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பாராளுமன்றத்தின் சட்டங்களையே பற்றிநின்றன. சாதாரண சட்டத்தின் செயற்பாட்டிலிருந்து படைவீரர் விலக்குப் பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். ஆகவே, பாராளுமன்றத்தின் ஏற்பைப் படை பெற்றதோடு, இதன் நிதியுதவியையும் பெற்றது.

நீதிபதிகளைப் பதவியிலிருந்து அரசர் விலக்கும் அதிகாரத்தை அரசுரிமை நிருணயச் சட்டம் அகற்றியது. ஒழுக்கக்கேடன்றி வேறு காரணங்களுக்காக நீதிபதிகளை, பேருரையைப் பயன்படுத்தி நீக்கலாகாதென விதிசெய்யப்பட்டது. நீதிபதிகளின் ஊதியமும் தேசிய வருவாயிலிருந்து அளிக்கப்படவேண்டும். இதற்குமுன், இவர்களின் ஊதியத்தின் பெரும் பகுதி வழக்காடுபவர்களிடமிருந்து வந்தது. கடுங்குற்ற விசாரணைக்குட்பட்டவர்கள் அரசரால் மன்னிக்கப்படுவதும்

இச் சட்டத்தால் நீக்கப்பட்டது. தண்டிக்கப்பட்டபின், அரசர் மன்னிக்கும் அதிகாரம் இதனால் பாதிக்கப்படவில்லை.

மக்களின் உரிமைப் பாதுகாப்பிற்கு இப் புரட்சி ஆக்கம் செய்தது. பத்திரிகைச் சுதந்திரம் தொடர்ந்திருந்துவந்தது. துரோகக் குற்றச்சட்டத்திலும் மாறுதல் காணப்பட்டது. இச் சட்டத்தை நீதிபதிகள் காலப்போக்கிற்கேற்ப விளக்கம் செய்து, இதன் கடுமைத்தன்மையைப் போக்கினர்கள்.

வில்லியத்திற்குப்பின், ஆட்சியின்மீதான அரசரின் கட்டுப்பாடும் அகன்றது. அரசியல் விவகாரங்களில் ஆன் அரசியார் அக்கறை கொள்ளவில்லை. கேபினெட் அரசாங்கமுறை வளர்ச்சியடைந்தபின், பல முக்கியமான பிரச்சினைகள் கேபினெட்டால் முடிவுசெய்யப்பட்டன. ஹனோவர் மரபினர் இங்கிலாந்தின் அரசர்களானபோது (அரசர்கள்) தம் சுயேச்சையான அதிகாரங்களை முற்றிலும் இழந்தார்கள்.

புரட்சிக்குப்பின், பாராளுமன்றம் அரசாங்கத்தின் மிக முக்கியமான அங்கமாயிற்று. இரண்டு நிகழ்ச்சிகளால் பாராளுமன்றத்தின் அதிகாரம் வளர்ச்சியடைந்தது. இதற்கு முன், அரசரின் ஆயுட்காலத்திற்கு வரிகள் அனுமதிக்கப்பட்டன. இப்பொழுது அரசரின் சொந்தச் செலவிற்கும் அரசாங்கச் செலவிற்கும் நிதி வழங்கியதோடு, நாட்டின் பாதுகாப்பிற்கும் ஆண்டுதோறும் நிதி அளித்தது. படைக்கலச் சட்டத்தை நிறைவேற்றவும், அரசருக்கு மானியமளிக்கவும் ஆண்டுதோறும் பாராளுமன்றம் கூட்டப்படவேண்டியதாயிற்று. ஆனால், உரிமை மசோதா பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெற வழிசெய்யவில்லை. மூவாண்டுச் சட்டப்படி பாராளுமன்றம் மூன்றாண்டிற்குமேல் நீடிக்கலாகாது. இச் சட்டம் அரசரின் சிறப்பதிகாரத்தைச் சட்டப்படி வரையறை செய்தது.

1689-ல் சமயப்பொறைச்சட்டம் நிறைவேறியது. விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்ட, தனிமுதன்மைச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட இணங்காதாருக்குத் தண்டனைச் சட்டங்கள் நீடிக்கலாகாதென இச் சட்டம் கூறியது. பிரமாணம் எடுத்துக்கொண்ட குருமார்கள், அவர்களுடைய பணிகளைக் கட்டுப்பாடின்றிச் செய்யலாம். ஏற்றுக்கொள்ளப்பட்ட திருச்சபைக்கு வெளியே பொது வழிபாட்டு உரிமையை இச் சட்டம் முதன்முறையாக ஏற்றுக்கொண்டது. சமயத்

தைப்பற்றிய இணங்காக் கருத்துகளை வெளியிடும் உரிமையையும் இச் சட்டம் ஏற்றுக்கொண்டது.

கத்தோலிக்கர்களைப் பொறுத்தவரையில் கடுமையான சமய ஒறுப்புச் சட்டங்களுக்கு உட்பட வேண்டியவர்களானார்கள். ஏனெனில், இப் புரட்சி பிராடெஸ்டெண்டுகளின் புரட்சியாகக் கருதப்பட்டது.

புரட்சியின் பயனாக ஸ்காட்லாந்திற்குச் சுதந்திரமான பாராளுமன்றம் ஒன்று ஏற்பட்டது. இப் பாராளுமன்றம் "உரிமைக் கோரிக்கை" ஒன்றை உருவாக்கியது. ஜேம்ஸ் அரசுரிமையை இழந்தபின், இவ் வுரிமையை வில்லியத்திற்கும் மேரிக்கும் அளித்ததாக இக் கோரிக்கை குறிப்பிட்டது.

இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் இக் காலத்திற்குப் பின், பாராளுமன்றம் தலையாயதாகியது. இருநாடுகளின் ஐக்கியத்திற்குப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பின், 1707-ஆம் ஆண்டில் ஓர் ஐக்கியச் சட்டம் உருவாகியது. இச் சட்டத்தை இருநாடுகளின் பாராளுமன்றங்களும் ஏற்றுக் கொண்டன. இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் ஒரு நாடாக வேண்டும்; ஒரு கொடியைப் பெறவேண்டும் என இச் சட்டம் வலியுறுத்தியது. வாரிசுரிமை நிருணயச் சட்டத்தின்படி இந் நாட்டின் அரசுரிமை அமையவேண்டும். முழு வணிக உரிமையையும், சமமான பொருளாதார உரிமைகளையும் இச் சட்டம் இருநாடுகளுக்கும் அளித்தது. நீதித்துறையின் சுயேச்சை நிலையை இச் சட்டம் ஏற்றுக்கொண்டது. பெரு மக்கள் சபையில் 16 ஸ்காட்லாந்து பிரபுக்களும் பொதுமக்கள் சபையில் 45 பிரதிநிதிகளும் இடம்பெற வழிசெய்யப்பட்டது. இருநாடுகளின் பாராளுமன்றங்களும் திருச்சபைகளுக்குக் காப்புறுதியளித்தன. "வெறுப்புணர்வின் வரலாறு முடிவிற்கு வந்தது". இருநாடுகளிலும் புரட்சியின் முடிவுகள் நிலைபெற்றன. "இங்கிலாந்தின் அரசியல் பாதுகாப்புபற்றிய அச்சத்தையெல்லாம் இது போக்கியது; ஸ்காட்லாந்தின் பொருளாதாரச் செழிப்பை இது மேம்படுத்தியது".[1]

புரட்சியின் விளைவால் அயர்லாந்து இங்கிலாந்திலிருந்து விலகிச்சென்றது. சமய ஒறுப்பைப் புரட்சி எழுப்பியது. அயர்லாந்தின் பாராளுமன்றத்திலிருந்த பெரும்பாலான

[1] Raih and Dicey, "Thought on the Union Between England and Scotland", 1920

பிராடெஸ்டெண்டுகள் கத்தோலிக்கர்களை ஒடுக்கக் கடுமையான சட்டங்களை நிறைவேற்றினர்கள். குற்றத்தண்டனைச் சட்டங்கள் கத்தோலிக்கர்களின் சிவில் உரிமைகளைப் பறித்தன. புரட்சியால் அயர்லாந்தில் பிராடெஸ்டெண்டுகளின் ஆதிக்கம் வலுத்தது.

புரட்சிக்குப்பின், புதிய நிதியியல் முறைகளை உருவாக்க வேண்டியதாயிற்று. வழக்கம்போல் பொற்கொல்லர்களிடமிருந்து வில்லியத்தின் அமைச்சர்களால் கடன்கொள்ள முடியவில்லை. எனவே, லண்டன் வணிகர்களிடமிருந்து கடன் எழுப்பப்பட்டது. இதற்கீடாக இவர்கள் இங்கிலாந்தின் வங்கி[1] ஒன்றை ஒரு கூட்டுநிறுவனமாக அமைத்துக் கொள்ளும் உரிமைபெற்றார்கள். 1853 வரை பணவைப்பில் இது முற்றுரிமை பெற்றிருந்ததால், இது லண்டனின் நிதி வைப்பு வங்கியாக மாறியது. வங்கியால் கொடுக்கப்பட்ட கடன், தேசியக் கடனின் தொடக்கத்தைக் குறித்தது. முதலைத் திருப்பிக் கொடுக்க விதி வகுக்கப்படவில்லை. ஆனால், வட்டியளிப்பது அரசாங்கத்தின் முதல் பொறுப்பாயிற்று. பாதுகாப்பான முதலீட்டு வாய்ப்புகள் பணமுடக்கத்தைக் குறைத்தன. இங்கிலாந்து வங்கியின் வளர்ச்சி, புரட்சியின் ஏற்பாடுகளை உறுதிப்படுத்தியது. வாணிக வளர்ச்சி இங்கிலாந்தின் பொருளாதார நலச்செழிப்பிற்கு வழிவகுத்தது.

புரட்சியால் முடிவுசெய்யப்படாத ஒரு பிரச்சினை இருந்தது. அரசரின் அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையராதல் வேண்டுமென்னும் கருத்து, பதினேழாம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்துகொண்டிருந்தது. பெருங்கண்டன அறிக்கை, ஸ்டிரா:போர்டின்[2] மரண தண்டனை, கிளாரண்டனின் கடுங்குற்ற விசாரணை, டான்பியின் கடும் அரசியல் குற்ற விசாரணை ஆகியவை இந்தக் கருத்து வளர்ச்சியின் பல நிலைகளாகும். அரசர் நிருவாக அலுவலராக இருக்கையில், அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையராதல் இயலாததாயிற்று. ஏனெனில், கொள்கை நிறைவேற்றத்தில் இவர்கள் அரசரின் கட்டளைக்கிசைய செயல்பட்டார்கள். "அரசர் குற்றம் செய்ய முடியாது" என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டபொழுது முழுப்

[1] Bank of England

[2] Strafford

பொறுப்புடைமை பெறமுடிந்தது. ஏனெனில், அமைச்சர்களின் அறிவுரையின் படி அரசர் செயல்பட வேண்டியவரானர்.

கேபினெட் அமைச்சரவை வளர்ச்சியோடு அமைச்சரவைப் பொறுப்பு நெருங்கித் தொடர்புகொண்டுள்ளது. இதில் மூன்றும் வில்லியத்தின் ஆட்சிக்காலம் ஒரு முக்கியமான வளர்ச்சிநிலையைக் குறிப்பிடுகிறது. ஆட்சிக்காலத் தொடக்கத்தில் இருகட்சிகளிலிருந்தும் அமைச்சர்களைத் தேர்வுசெய்ய அரசர் முயன்றார். ஆனல், இவர்களிடையே காணப்பட்ட இணக்கமின்மை பெருந்தீங்கை விளைத்தது: மேலும், ஒரு கலப்பான அமைச்சரவையால் பொதுமக்கள் சபையின் ஆதரவையும் பெறமுடியவில்லை. ஆகவே, சன்டர்லாண்டின் குறிப்புரையின்பேரில் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையாக உள்ள ஒரு கட்சியிலிருந்து அமைச்சர்களைத் தெரிவுசெய்யும் திட்டத்தை அரசர் படிப்படியாக மேற்கொண்டார். வில்லியத்தின் ஆட்சிக்காலப் பெரும்பகுதியில் விக்குகள் பெரும்பான்மையினராக இருந்தார்கள். ரசல், சோமர்ஸ், மான்டேகு, வார்ட்டன்[1] போன்ற குறிப்பிடத்தக்க வர்களைக்கொண்டு விக்குக்கட்சி செயல்பட்டது. இவர்களின் நெருக்கமான செயற்பாடு காரணமாக இக் குழு ஜன்டா[2] (உட்குழு) எனப் பெயர்பெற்றது. 1697 வரையில் விக்குகள் பதவியில் இருந்தார்கள். நாட்டில் டோரிகளின் செல்வாக்கு உயர்ந்தபொழுது டோரி அமைச்சர்கள் விக்குகளின் இடத்தில் அமர்த்தப்பட்டார்கள். அரசரின் போர்க்கொள்கையை ஆதரிப்பது விக்குகளின் முதன்மையான பணியாக இருந்தது. ஆனல், இவர்களின் பதவிக்காலத்திய நிகழ்ச்சியொன்றை இங்குக் குறிப்பிடவேண்டும். 1695-ல் தனி உரிமை அளிக்கும் சட்டம் முடிவுற்றது. அரசாங்கம் இதைப் புதுப்பிக்க மறுத்து விட்டது. இதனல் பத்திரிகைச் சுதந்திரம் எளிதில் கிடைத்தது. ஆயினும், செய்தித்தாள்களின் வளர்ச்சியில் இன்னும் பல தடைகள் இருந்துவந்தன.

டோரிகளின் எழுச்சிக்குப்பின், ஆன் அரசியாரின் ஒரே மகனுகிய கிளவ்செஸ்டர் கோமகனின் மறைவு, வாரிசுரிமைக்கு ஒரு புதிய ஏற்பாட்டைத் தேவையாக்கியது. முதலாம் ஜேம்ஸின் மகளை மணந்துகொண்ட பாலட்டினின்[3] மக

[1] Wharton

[2] Junta

[3] Palatine

Act of Settlement :—

ளாகிய ஹனோவர் மரபைச் சேர்ந்த சோபியாவிற்கு அரசுரிமையளிக்கும் அரசுரிமை நிருணயச் சட்டம் 1701-ல் நிறைவேறியது. பிராடெஸ்டெண்டுகள் அரசுரிமை பெறவேண்டுமென்பதற்காக ஸ்டுவர்ட்டுகளின் வழிவந்த பலர் விட்டுவிடப்பட்டனர். ஹனோவர்களின் அரசுரிமை பாராளுமன்றச் சட்டத்தின் அடிப்படையில் நிலவிற்று.

அரசரின் சிறப்பதிகாரம் தவருன வகையில் பயன்படுத்தப்படுவதற்கு எதிராகப் புதிய பாதுகாப்பை மேற்கொள்ள, அரசுரிமை நிருணயச் சட்டம் ஒரு வாய்ப்பை அளித்தது. வருங்கால அரசர்களுக்கு இச்சட்டத்தின் பிரிவுகள் பல புதிய தடைவரம்புகளை விதித்தன. வருங்கால அரசர்கள் திருச்சபையோடு நெருங்கித் தொடர்புகொள்ள வேண்டும். பாராளுமன்றத்தின் இசைவின்றி, அரசரின் வெளி நாட்டு நிலவுடைமைகளுக்காக இங்கிலாந்து போரில் ஈடுபடலாகாது. பாராளுமன்றத்தின் இசைவின்றி, ஆங்கில அரசர் எவரும் இங்கிலாந்தைவிட்டு வெளியே செல்லலாகாது. இங்கிலாந்தின் நல்லாட்சிக்கான நடவடிக்கைகள் எல்லாம் இந்நாட்டின் சட்டங்கள், மரபுகள் ஆகியவைகளைக் கொண்டியங்கும் பிரிவி கவுன்சிலால் எடுக்கப்படவேண்டும். எல்லாத் தீர்மானங்களும் இங்கு உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்படவேண்டும். வெளியார் எவரும் பிரிவி கவுன்சிலராக இருக்கலாகாது. அரசப்பதவியின் கீழ் பொறுப்புள்ள பதவி வகிக்கலாகாது. பதவியில் இருப்பவர் அல்லது அரசாங்கத்தில் இலாபம் தரும் பதவியில் இருப்பவர் எவரும் பொதுமக்கள் சபையில் உறுப்பினராகும் தகுதி பெறார். நீதிபதிகள் நன்னடத்தை உள்ளவரையில் பதவியில் இருக்கலாம். ஆனால், பாராளுமன்றத்தின் இரு சபைகளின் பேருரையால் இவர்கள் பதவியிலிருந்து விலக்கப்படலாம். அரசரின் மன்னிப்பு, கடுங்குற்ற விசாரணைக்குத் தடையாக இருக்கலாகாது.

பிரிவி கவுன்சிலருக்குரிய அறிவுரை கூறும் பணியை ஓர் உட்குழு எடுத்துக்கொள்வதைக் கண்டு பாராளுமன்றம் சினங் கொண்டது. ஒரே கட்சியிலிருந்து அமைச்சர்கள் தேர்வு செய்யப்பட்டவுடன், இவர்கள் இணைந்து செயல்படத் தொடங்கினர். பிரிவி கவுன்சிலின் முறையணையாக "குழு" ஒன்று உருவாகியதில், "கேபினெட்டின்" தோற்றத்தைக் காணலாம். இதனோடு, கூட்டுப்பொறுப்புக் கருத்தும் வளர்ச்சியடையத் தொடங்கியது. இதைத் தடுப்பதற்கும், அரசருக்குக் கவுன்சிலர்கள் கொடுத்த அறிவுரைக்குச் சொந்தப்

பொறுப்பேற்கவும் விதிமுறைகள் வகுக்கப்பட்டன. ஆனல், இவை நடைமுறைக்கு ஒவ்வாதுபோகவே விரைவில் அகற்றப் பட்டுவிட்டன. கேபினெட்டின் வளர்ச்சியைக் கண்டு பாராளு மன்றம் வெறுப்படைந்ததும் வியப்பிற்குரியதாகும்.

அரசரின்கீழ் இலாபம் தரும் பதவியில் இருப்பவர்களைத் தடைசெய்ததும், அரசரின் செல்வாக்கிற்குத் தடைவரம்பு விதிக்கவேயாகும். இக் கருத்து நிலைபெற்றிருக்குமாயின், அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் இடம்பெற்றிருக்கமுடி யாது. பாராளுமன்றமும் பயனுள்ள முறையில் அரசாங்கத் தைக் கட்டுப்படுத்தியிருக்கமுடியாது. இதை அறிந்துகொண் டதும் இப் பிரிவை அகற்றிவிட்டு, இதற்குப் பதிலாக 1705-ல் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, பாராளு மன்றத்தின் உறுப்பினர் ஒருவர் அரசரின்கீழ் இலாபம் தரும் பதவியொன்றைப் பெறுவாராயின், இவர் பாராளுமன்றத்தி லிருந்து விலகிக்கொள்ளவேண்டும். 1705-க்குப்பின் படைக்கப் பட்ட இலாபந் தரும் பதவியில் இருப்பவர் ஒருவர் பொது மக்கள்சபையின் உறுப்பினர் தகுதியை இழப்பார். இச் சட்டம் சில விநோத விளைவுகளை உண்டாக்கியது. பாராளு மன்ற உறுப்பினர் பதவியைவிட்டு எவரும் விலகிக் கொள்ளமுடியாது. எனவே, விலகிக்கொள்ள விரும்பும் உறுப்பினர் சில்டெர்ன்[1] செயல் முகவரின் பதவிக்கு விண்ணப் பிக்கவேண்டும். பதவியில் அமர்த்தப்பட்டதாக அறிவிக்கப் பட்டவுடன் இவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்து விடுகிறார். இவர் விரும்பினல் மறுபடியும் தேர்தலில் போட்டி யிடலாம்.

1700-ல் சோமர்ஸும்[2] மற்ற விக்குகளும் கடுங்குற்ற விசாரணைக்குள்ளாகும் அபாயம் இருந்தது. ஆனல், பொது மக்கள் சபைக்கும் பெருமக்கள் சபைக்கும் இடையில் பிணக்கு வளர்ந்துவந்துகொண்டிருந்தது. சோமர்ஸின் விசாரணைக்கான நாள் வந்தபொழுது பொதுமக்கள் சபை வழக்குரைக்க முன்வராது போகவே சோமர்ஸ் விடுதலை செய்யப்பெற்றார்.

அரசருக்கெதிரான டோரிகளின் எதிர்ப்பு நாட்டில் கிளர்ச்சிகளை உண்டாக்கியது. கென்டின் கிராண்ட் ஜூரிகள் அரசருக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தார்கள். அரசரின்

[1] Chiltern Hundreds

[2] Somers

கட்டளைகளைத் தவிர்த்துவிட்டு, இவர்களின் விண்ணப்பத்தைச் சப்ளை மசோதாவாகக் கொள்ளும்படி சபையைக் கேட்டுக் கொண்டார்கள். இக் கண்டன விண்ணப்பத்தை அவதூறான தெனக்கூறிச் சபை வாக்களித்து, விண்ணப்பம் செய்த 5 பேர்களையும் சிறைப்படுத்த கட்டளையிட்டது. விண்ணப்பஞ் செய்துகொள்ளும் மக்களின் உரிமையையொட்டிப் பல சர்ச்சைகள் எழுந்தன. இரண்டாண்டுகளுக்குப்பின், சபையின் தெளிவான கருத்தை மற்றொரு வழக்கு வெளிப்படுத்தியது. தமக்கு வாக்களிக்கும் உரிமையை மறுத்த தேர்தல் அதிகாரி ஒயிட் என்பவருக்கெதிராக ஆஸ்பி[1] என்பவர் ஒரு வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த பெருமக்கள் சபை ஆஸ்பிக்கு ஆதரவாக முடிவுசெய்தது. உறுப்பினரின் தேர்தலையொட்டி எழும் வழக்குகளை முடிவுசெய்யும் அதிகாரம் பொதுமக்கள் சபைக்கே உரியதெனக்கூறிப் பெருமக்கள் சபையின் முடிவை எதிர்த்தது. ஆஸ்பியினால் தூண்டப்பட்ட ஜவர், தேர்தல் அதிகாரிக்கெதிராக நடவடிக்கையில் இறங்கினர். உரிமை மீறிய குற்றத்திற்காகப் பொதுமக்கள் சபை இந்த ஐந்து பேர்களையும் சிறையில் தள்ளியது. சபை கூட்டத் தொடரின் தள்ளிவைப்பு இவர்களைக் காப்பாற்றியதெனினும், இப் பிரச்சினை முடிவுசெய்யப்படவில்லை.

1701-ல் இரண்டாம் ஜேம்ஸ் காலமானார். பதினான்காம் லூயி, ஜேம்ஸின் மகனை இங்கிலாந்தின் அரசராக ஏற்றுக் கொண்டார். லூயியின் இச் செயல் ஆங்கிலேயரின் வெறுப் புணர்ச்சியைத் தூண்டியது. விக்குகள் மறுபடியும் அதிகாரத் திற்கு வந்தார்கள். போர் தொடங்கிய ஒருசில வாரங் களுக்குப்பின், வில்லியமும் இறந்தார்.

ஆன் அரசியார் பதவியேற்றதும் அரசியல் நிலையில் மாறுதல் ஏற்பட்டது. அரசியல் அதிகாரமும், இராணுவ அதிகாரமும் பிரிந்து செயல்பட்டன. போர்த்தலைவராக இருந்த வில்லியத்தின் பதவி இப்பொழுது மார்ல்பரோவைச் சென்றடைந்தது. இவருடைய நண்பர் கொடோல்பின்[2] என் பாரின் உதவியால் இவர் அமைச்சரவையில் ஆதிக்கம் செலுத் தினர். வில்லியம் செய்ததைப்போல் இவரும் (அரசியாரும்) கலப்பு அமைச்சரவையோடு செயலாற்ற முயன்றார். ஆனால், 1708 வாக்கில் அமைச்சரவையில் எல்லோருமே விக்குகளாக இருந்தனர்.

[1] Ashby

[2] Godolphin

ஆன் அரசியாரின் பதவியேற்பு இன்னொரு வகையில் மாற்றம் உண்டாக்கியதெனலாம். வில்லியத்தைப்போலன்றி, ஆன் அரசியார் அமைச்சர்களை நம்பி இருக்கவேண்டியிருந்தது. ஆகவே, அமைச்சர்களும் அவர்களுடைய செயல்களுக்குப் பொறுப்பேற்கவேண்டிய நிலையில் இருந்தார்கள். இதே சமயத்தில் அரசரின் பொறுப்பற்ற தன்மைபற்றிய கருத்தும் வளரத்தொடங்கியது. அரசியல் தவறுகளை விக்குகள் இக் காலத்தில் அரசியாரின் டோரி ஆதரவாளர்கள் மீது சுமத்த முற்பட்டார்கள். "பல ஆண்டுகளாக எல்லாவற்றிற்கும் அரசியார் பதில் சொல்லவேண்டுமென வலியுறுத்தப்பட்ட"தென 1711-ல் ரோசெஸ்டர் அறிவித்தார். "இக் காலம் கடந்துவிட்டதென இவர் நம்பினர். நாட்டின் அடிப்படையான அரசியலமைப்பின்படி எல்லாவற்றிற்கும் அமைச்சர்கள் பொறுப்புடையவர்க"ளென்பது தெளிவாயிற்று.

இந்த அரசியாரின் ஆட்சிக்கால இறுதி நாட்டில் டோரிகளின் எதிர்வினைகளை வெளிப்படுத்தியது. தொடர்ந்து நடைபெற்ற போரினால் ஏற்பட்ட அயர்ச்சியும், மார்ல்பரோவின் சொந்த முன்னேற்ற முயற்சியும், நாட்டில் மீண்டும் தோன்றிய உயர் திருச்சபையின் செல்வாக்கும் மக்களிடையே ஐயப்பாட்டை உண்டாக்கின. இத் திருச்சபையின் சார்பில் டாக்டர் சச்சிவெரல்[1] என்பவர் அரும்பாடுபட்டார். ஆகவே, 1710-ல் ஆன் அரசியார் ஒரு டோரி அமைச்சரவையைப் பதவியில் அமர்த்தினர். பெருமக்கள் சபையில் விக்குகள் பெரும்பான்மை பலத்தைத் தொடர்ந்து பெற்றிருந்தார்கள்; புதிய அமைச்சர்களை இச் சபையில் முடக்க நினைத்தார்கள். ஆனால், 1711-ல் டோரிகளுக்கு இச் சபையில் பெரும்பான்மை பலம் கிட்டும்பொருட்டு ஹார்லி[2]யும், போலிங்புரோக்[3]கும் பன்னிரண்டு பிரபுக்களைப் படைக்குமாறு அரசியாரைத் தூண்டினர்கள். உட்ரெக்ட் (Utrecht) உடன்படிக்கையால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போருக்குப்பின், அரசியாரின் உடல்நலக்குறைவு, வழியுரிமைப் பிரச்சினையை மீண்டும் கிளப்பியது. ஹார்லியோடு மோதிக்கொண்ட போலிங்புரோக் (St. John) அவரைப் பதவியிலிருந்து நீக்கச் செய்துவிட்டு, ஜேக்கோபைட்டுகளோடு சதிச்செயல்களில் ஈடுபட்டார்.

[1] Dr. Sacheverell

[2] Harly

[3] Bolingbroke

இச் சதிச்செயல்கள் நடந்துகொண்டிருக்கையில் ஆன் அரசியார் நோய்வாய்ப்பட்டார். இதைப் பயன்படுத்திக்கொண்ட இரண்டு விக்குத் தலைவர்களாகிய சோமர்செட்[1] கோமகனும் ஆர்கில்[2]லும் பிரிவி கவுன்சிலர்கள் என்ற முறையில் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஹார்லி வகித்த பதவியில் ஸ்ருவ்ஸ்பரி[3] பிரபுவை அமர்த்துமாறு வலியுறுத்தினர்கள். இதைச் செய்துமுடித்த அரசியார் அடுத்தநாள் இறந்தார். அரசியாரின் திடீர் மரணமும், சோமர்செட், ஆர்கில் ஆகிய இரு பிரபுக்களின் எதிர்பாராக் குறுக்கீடும் போலிங்புரோக்கின் திட்டத்தில் குழப்பமுண்டாக்கி, ஹனோவர் மரபினரின் எதிர்ப்பில்லா வழியுரிமையை உறுதிப்படுத்தின. பிரிவி கவுன்சிலின் கூட்டத்திற்கு அழைக்கப்படாத கவுன்சிலர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்தக் கடைசிநிகழ்ச்சி சுவையானதாகும்.

கேபினெட் அரசாங்கமுறை

பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை ஒருங்கமைக்க ஒரு நிறுவனம் உருவாயிற்று. இந் நிறுவனமே கேபினெட் அமைச்சரவையாகும். இதன் வளர்ச்சியால் பாராளுமன்றம் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த முடிந்தது. அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் ஆதரவைப்பெற்றிருக்கவேண்டுமென்பது கேபினெட் முறையிலிருந்து பெறப்படுகிறது. பாராளுமன்றத்தின் (பொதுமக்கள் சபையின்) ஆதரவைப் பெற்றிருக்கும் வரையில்தான் இவர்கள் தொடர்ந்து பதவியில் இருக்கலாம். கட்சிமுறையின் அடிப்படையில் கேபினெட் அமைச்சரவைமுறை வளர்ச்சியடைந்ததெனலாம். மக்களாட்சியில் கட்சிமுறை தவிர்க்கமுடியாததாகும். கட்சியடிப்படையில் உருவாகும் பெரும்பான்மை, ஒற்றுமையையும் நிலைப்பேற்றையும் அளிக்கும். அமைச்சர்கள் பெரும்பான்மைக்கட்சியின் தலைவர்களாதலால் கட்சிகளின்றிக் கேபினெட் அமைச்சரவை தோன்றியிருக்கமுடியாது. கேபினெட் அரசாங்கமுறை "புரட்சி ஏற்பாடுகளின்" விளைவன்று; நாட்டின் தேவைகளுக்கேற்ப இயற்கையாகத் தோன்றிய ஒரு வளர்ச்சியாகும்.

உள்நாட்டுப் போர்க்காலத்தில் கட்சிகள் அரச ஆதரவாளர்கள், பாராளுமன்ற ஆதரவாளர்கள் ஆகியவர்களைக்

[1] Somerset
[2] Argyill
[3] Shrewesbury

கொண்டதாக இருந்தன. இவை கவேலியர், ரவுண்டு ஹெட்ஸ் என்ற பெயரில் தோன்றி வளர்ந்தன. விலக்கு மசோதாக் காலத்தில் கட்சிகள் தோன்றினவென்பது ஹாலம் என்பவரின் கருத்தாகும். அரசவையினர் டோரிகள் என்றும், நாட்டுக்கட்சியினர் விக்குகள் என்றும் பெயர் பெற்றிருந்தனர். ஆனல், இத் தன்னலக் கும்பல்களை இக் காலத்திய கட்சிகளுக்கு ஒப்பாகக் கருதமுடியாது. ஏனெனில், இவை மற்றக் கும்பல்கள் இருப்பதை விரும்பவில்லை. புரட்சிக்குப் பின்னர், அரசாங்கத்தை ஆங்கில மக்கள் எதிர்க்கலாமென்ற கருத்தையும், ஆதரிக்கலாமென்ற கருத்தையும் ஏற்றுக் கொண்டார்கள். புரட்சிக்குப்பின், பாராளுமன்றம் நாட்டில் தலையாயதென்றும், அரசர் அதற்குட்பட்டவரென்றும் விக்குகள் கருதினர்கள். சமயத்துறையில் விக்குகள் தேசியத் திருச்சபையை ஆதரித்தாலும், இதைப் பாராளுமன்றம் கட்டுப்படுத்த வேண்டுமென்று கருதினர்கள். இவர்கள் சமயப் பொறையை ஆதரித்தார்கள். மேலும், இவர்கள் சொத்துரிமையைப் புனிதமாகக் கருதினர்கள். வணிகத்திலும் தொழிலிலும் ∴பிரான்சு இங்கிலாந்திற்குப் போட்டியாக இருப்பதாகக் கருதி, ∴பிரான்சோடு போருக்குத் தயாரானர்கள். விக்குகள் பெரும்பாலும் பெருமக்களாக இருந்தபோதிலும், இணங்காதாரும் வணிகச் சமூகத்தினரும் இவர்களுக்கு ஆதரவளித்தார்கள். எனவே, இவர்கள் தேசியக்கடன், இங்கிலாந்து வங்கி ஆகிய கருத்துகளுக்கு ஆதரவுகாட்டினர்கள்.[1] முடியாட்சி, கடவுளால் படைக்கப்பட்டதென்ற கருத்தை டோரிகள் பற்றிநின்றார்கள். ஆகவே, மக்களின் பணிவு அடிப்படையில் வலிமைவாய்ந்த முடியாட்சி ஒன்றை இவர்கள் ஆதரித்தார்கள். ஆனல், இக் கருத்தைப் புரட்சி முடிவுகள் மாற்றிவிட்டன. மூன்றுவது வில்லியத்தின் ஆட்சிக்காலத்தில் விக்குகளைவிட டோரிகள் அரசரின் அதிகாரத்தைக் குறைக்கப் பாடுபட்டனர். சமயத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் ஆங்கிலிக்கன் வழிபாட்டுமுறையை ஏற்றுக்கொண்டார்கள். வணிக, பொருளாதார வளர்ச்சிகளில் இவர்கள் அக்கறை கொள்ளாததால் ஐரோப்பிய அரசியலில் நாட்டம்கொள்ளவில்லை. வில்லியத்தின் மீதும், முதலாம் ஜார்ஜ் மன்னர் மீதும் இவர்கள் பகைமை கொண்டிருந்ததால் ஐரோப்பியப் போர்களைக் கண்டனம் செய்தார்கள். ஐரோப்பாவிலிருந்து தனித்திருப்பதையே இவர்களும் விரும்பினர்கள். தேசியக் கடனையும் இங்கிலாந்தின் வங்கியையும் இவர்கள் வெறுத்தார்கள்.

[1] Acton, "Rise of the whigs."

ஏனெனில், இவை விக்குகளால் படைக்கப்பட்டவைக ளாகும். நாட்டுப்புற நிலக்கிழார்களும் ஆங்கிலிக்கர்களும் டோரிக்கட்சி கொண்டிருந்தது.

இக் காலத்திய அரசியல் கட்சிகளிலிருந்து இவை வேறுபட்டிருந்தன. கட்சி அமைப்போ, கட்டுப்பாடோ இங்குக் காணப்படவில்லை. பல குழுக்களைக்கொண்ட விக்குக்கட்சி, சில வேளைகளில் விக்கு அரசாங்கத்தை எதிர்த்தும் வந்துள்ளது. எதிர்த்தரப்பினரோடு சேர்ந்துகொள்ளக் கூடிய குழுக்களும் கட்சிகளில் இருந்தன. இக் கட்சிகளின் குணவியல்புபற்றியொன்றும் சொல்வதற்கில்லை. சொந்த முன்னேற்றமே இவைகளின் நோக்கமாக இருந்துள்ளது. சில முதன்மையான பெருமக்களால் புரட்சி ஏற்பட்டது என்பதை மறுக்கமுடியாதெனினும், இவர்களுக்குள் ஒரே மாதிரியான அரசியல் கருத்து நிலவியதில்லை. ஆனல், இவர்களனைவரும் தக்க நடவடிக்கையை மேற்கொண்டு, அரசர்களின் வல்லாட்சியை ஒழிக்கவேண்டுமென்பதில் ஒன்றுபட்டார்கள். பெருமக்கள் போப்பாண்டவரின் ஆதிக்கத்தை வெறுத்தனர். 1714-ல் டோரிகள் வீழ்ச்சியடையும்வரை பெருமக்கள் சபையில் டோரிகளே ஆதிக்கம் செலுத்திவந்தார்கள்.

1693-ல் முழு உரிமையளிப்புச் சட்டம் முடிவிற்கு வந்தது, பத்திரிகைத்தொழில் அரசியல் சிறப்புடையதாக்கியது. அரசியல் வெளியீடுகள் பெருகின. செய்த்தாள்கள் அரசியல் கட்சிகளின் கருத்துகளை மக்களுக்கு எடுத்துரைத்தன. கட்சி முறையின் இவ் வளர்ச்சி பாராளுமன்றத்தின் அமைப்பைப் பாதித்தது.

உடனடியாக இரகசிய முடிவுகளைச் செய்யமுடியாத அளவிற்குப் பிரிவி கவுன்சில் பெரியதாக இருந்ததால் அரசர் அறிவுரைக்கு முதன்மையான அமைச்சர்களின் இரகசியக் குழுவை நாடவேண்டியதாயிற்று. சிறிய குழுவின் குறைகளையும் நிறைகளையும் பேக்கன் (Bacon) தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர் "கேபினெட்" என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். ஒரு சிறிய தனியறையில் அரசர், கவுன்சிலர் சிலரைக் கலந்தாலோசிக்கும் வழக்கையொட்டிக் கேபினெட் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் ஆகிய அரசர்களின் ஆட்சிக்காலத்தில் வெளிவிவகாரங்களையும், மற்ற முக்கிய மானவைகளையும் ஆராய, பிரிவி கவுன்சிலின் நிலைக்குழுக்கள்

அமர்த்தப்பட்டதை டானர் குறிப்பிடுகிறார். முதலாம் சார்லஸ் காலத்தில் வெளிவிவகாரங்கள் பற்றிய குழு, பிரிவி கவுன்சிலின் ஒரு சிறிய கவுன்சிலாக நடைமுறையில் மாறியது. ஆகவே, முதலாம் சார்லஸ் காலத்தில் பெரிய பிரிவி கவுன்சிலின் சிறிய குழுக்களிடம் முக்கியமானவை விடப்படும் வழக்கம் இருந்தது. "கேபினெட் கவுன்சில்" என்ற பெயரும் வழக்கில் இருந்துவந்தது. இக் கவுன்சில் உள்நாட்டுப் போர்களின்போது மறைந்து, இரண்டாம் சார்லஸ் காலத்தில் மீண்டும் தோன்றியது. கிளாரெண்டன் கேபினெட்டைக் குறிப்பிடுகிறார். வெறுப்பிற்கும் ஐயப்பாட்டிற்கும் உள்ளான அமைச்சரவை, பிரிவி கவுன்சிலின் உட்குழுவாகும். இதை அரசர்கள் கேபினெட் கவுன்சில் என்றார்கள். இவ்வுட்குழு பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது. பிரிவி கவுன்சிலின் குழுக்கூட்டத்தின் ஏற்பைப்பெறுமுன், இரண்டாம் சார்லஸ் முக்கியமான அலுவல்களை இக் கேபினெட் கவுன்சிலில் செய்துமுடித்துக்கொண்டார். நாட்டின் அரசாங்கத்தில் இக் கவுன்சில் ஒரு தலைமுறைக்கு முதன்மையான அதிகாரத்தைப் பெற்றுச் செயல்படுத்தியது. இந்தக் கவுன்சிலுக்குக் கேபால் (Cabal) என்ற சொல் இழிதகவாக வழங்கப்பட்டது. அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இணக்கமுண்டாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. இரண்டாம் சார்லஸ் காலத்தில் ஒரு சிறு அமைச்சரவை உருவாகி, அரசரின் நம்பிக்கைக்கு உரியதாக இருந்ததோடு, ஓரளவு பாராளுமன்றத்தையும் கட்டுப்படுத்த முயன்றது. இரண்டாம் சார்லஸ் அரசரின் ஆட்சிக்கால இறுதியில் எட்டு அல்லது பத்துப்பேர்களைக்கொண்ட கேபினெட் கவுன்சில் அடிக்கடி கூடியது. அதாவது, ஒவ்வொரு வாரமும் கூடியதெனலாம், இக் கூட்டங்களில் முக்கியமான அமைச்சர்களில் பலர் கலந்து கொண்டார்கள். ஆகவே, புரட்சிக்குப்பின், அரசியல் கட்சிகளின் வளர்ச்சியோடு, ஒருங்கமைந்த அமைச்சர் குழுவும் உருவாகியது. புரட்சிக்குப்பின், அரசாங்கம் கேபினெட் கவுன்சிலுக்கு மாறியது. இதுகாலம்வரை, கேபினெட் கவுன்சில் அரசரின் பணியாட்களின் துணையோடு ஆட்சிசெய்து வந்தது. ஆகவே, பாராளுமன்றமும் கேபினெட்டைக் கண்டு அஞ்சியது. அரசுரிமை நிருணயச் சட்டமும் (1701) இதைக் குறிப்பிட்டுள்ளது. சட்ட முறையிலான ஒரு நிறுவனமாகக் கேபினெட் இல்லாதிருந்ததால் இது ஐயப்பாட்டிற்குரியதாக இருந்தது.

புரட்சிக்குமுன், யாரை வேண்டுமென்றாலும் அரசர் அமைச்சராக அழைக்கலாம். அரசுரிமையை ஏற்குமாறு வில்லி

யத்தை அழைத்த விக்குகள் பாராளுமன்றத்தில் பெருமளவு இருந்தாலும், டோரிகளின் ஆதரவைப்பெற முதன்மையான பதவிகளை இவர் இருகட்சியினருக்கும் பகிர்ந்தளித்தார். ∴பிரான்சுடனான போருக்குப் பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெற, இவர் எல்லா அமைச்சர்களையும் பாராளுமன்றத்திலிருந்து அமர்த்தினர். ஆனால், அமைச்சர்களுக்கிடையே பூசல்கள் ஏற்பட்டன. ஏனெனில், இவர்கள் இரண்டு கட்சிகளையும் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

1690-ஆம் ஆண்டின் தேர்தலில் டோரிகள் பெரும்பான்மை பலம் பெற்றனர். விக்குகளின் எண்ணிக்கை குறைந்தது. ஆனால், டோரிகளைக் காட்டிலும் விக்குகள் போரை ஆதரிப்பதை வில்லியம் கண்டார். 1695-ல் நடந்த தேர்தலில் விக்குகள் பெரும்பான்மை பெற்றனர். எனவே, எல்லா அமைச்சர்களையும் வில்லியம் விக்குக்கட்சியிலிருந்து அமர்த்திக் கொண்டார். ஆகவே, 1695-ல் அமைந்த அமைச்சரவை ஒரு கட்சி உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது. 1698-ல் நடைபெற்ற தேர்தலில் டோரிகள் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றிருந்தாலும், அமைச்சரவை பதவியிலிருந்து விலகிக்கொள்ளவில்லை. ஆயினும், பல விக்கு அமைச்சர்களை விட்டுவிட்டு, டோரிகளை அமர்த்தவேண்டிய நிலையில் வில்லியம் இருந்தார். டோரி பாராளுமன்றம் அரசுரிமை நிருணயச் சட்டத்தை நிறைவேற்றியது. கேபினெட்டின் வளர்ச்சிக்கு இச் சட்டம் அச்சம் தெரிவித்தது. கேபினெட் இரகசியக் காப்பு முறையும், அமைச்சர்கள் அரசருக்களிக்கும் அறிவுரைகளுக்கு அவர்களைப் பொறுப்புடையவர்களாக்க இயலாமையும் அரசரின் செல்வாக்குபற்றிய பேரச்சத்தைக் கிளப்பின. கேபினெட் முறையில் ஐயங்கொண்ட பாராளுமன்றம் இரண்டு பிரிவுகளை அரசுரிமை நிருணயச் சட்டத்தில் புகுத்தியது. ஒன்று, எல்லா அலுவல்களும் பிரிவி கவுன்சிலில் தான் நடைபெற வேண்டும். பிரிவி கவுன்சிலர்களின் இணக்கம் பெற்ற தீர்மானங்களுக்குச் சான்றுக ஒப்பமிட்டுத் தம் பொறுப்புடைமையைத் தெரிவிக்கவேண்டும். இரண்டு, ஓய்வூதியம் பெறுபவர்களும், உயர்பதவியில் இருப்பவர்களும் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதை இது தடை செய்தது. இவ் விரு பிரிவுகளும் விக்குகளைக் கண்டனம் செய்யும் பொருட்டு இச் சட்டத்தில் இணைக்கப்பட்டன. இவ் விரு பிரிவுகளும் தொடர்ந்து செயற்பாட்டில் இருந்திருக்குமெனில், கேபினெட் முறை வளர்ச்சியடைந்திருக்காது. ஆனால், இயல்பாக நடந்தநிகழ்ச்சிகள் காரணமாக இவ் விரண்டு

பிரிவுகளும் செயல்படாமல் போய்விட்டன. ஆன் அரசியார் காலத்தில் கேபினெட் பழக்கப்போனதோர் நிறுவனமாயிற்று. முதல் பிரிவு செயல்படாமலே இருந்து, ஆன் அரசியார் காலத்தில் இது சட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. பதவியிலிருப்பவர்களை அகற்றுதல் நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கவில்லை. ஏனெனில், பொதுமக்கள் சபையிலிருந்து அமைச்சர்கள் அமர்த்தப்படுவதை அகற்றிவிடலாகாதென்பதைப் பாராளுமன்றம் உணர்ந்தது. அமைச்சர்களைச் சபைக்குப் பொறுப்புடையவர்களாக்கவும், நேர்முகமாக ஆட்சிச் செய்திகளை அறிந்துகொள்ளவும் இவர்கள் சபையில் இருக்கவேண்டுமெனப் பாராளுமன்றம் கருதியது. ஆகவே, 1705-ல் இரண்டாவது பிரிவு திருத்தப்பட்டது. பதவியிலிருந்தவர்கள் 18-ஆம் நூற்றாண்டு முழுவதும் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அமர்ந்து இருந்தார்கள். இவர்களின் வழியாகப் பாராளுமன்றத்தை அரசாங்கம் கட்டுப்படுத்த முடிந்தது. வில்லியத்தின் ஆட்சிக்கால இறுதியில் ஒரு கருத்து உருவாகியது. அதாவது, பாராளுமன்ற உறுப்பினரல்லாத ஒருவர் அமைச்சராக இருக்கமுடியாதென்பதாகும். எழுத்துருவில் அமையாத ஒரு மரபாக இது இன்றளவும் இருந்துவருகிறது.

விக்குகளையும் டோரிகளையும் கொண்ட அமைச்சரவையை ஆன் அரசியார் அமைத்தார். இக் கேபினெட், வில்லியத்தின் காலத்தில் இருந்ததைப்போலவே இருந்தது. பாராளுமன்றம் டோரி பாராளுமன்றமாக இருந்தாலும் போரை விரும்பியது. அரசியாரும் டோரிக் கட்சியின் கருத்துடையவராக இருந்தார். பொதுத்தேர்தல்களின் முடிவுகள் அமைச்சரவையைப் பாதிக்கவில்லை. 1702-லிருந்து 1710 வரையில் அமைப்பால் அமைச்சரவைகள் மாறுபட்டிருந்தாலும், இவை தொடர்ந்து கலப்பு அமைச்சரவைகளாகவே இருந்துவந்தன. ஆயினும், அரசாங்கத்தை நடத்த அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் ஆதரவை நாடவேண்டுமென்பது தெளிவாகிக்கொண்டு வந்தது. அமைச்சரவை ஒரு கட்சிச் சார்புடையதாக இருந்தால் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான மோதல்கள் குறைவாக இருக்கும். ஆன் அரசியாரின் அமைச்சரவையில் டோரிகள் பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். தேர்தலால் மட்டுமின்றி, அரசியாரின் ஆதரவாலும் டோரிகளின் எண்ணிக்கை அமைச்சரவையில் உயர்ந்தது. ஆனால், 1705-ஆம் ஆண்டு, பாராளுமன்றத்தில் விக்குகள் பெரும்பான்மை பெறவே அமைச்சரவையிலிருந்து டோரிகள் இதன்பின் விலக்கப்பட்டனர். 1708-ல் விக்குகளைக்கொண்ட

அமைச்சரவை பதவியில் இருந்தது. 1710-ல் நடைபெற்ற தேர்தலில் டோரிகள் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை யான இடங்களைக் கைப்பற்றினர்கள். டோரிகளையே அமைச் சர்களாக்க இச் சபை வற்புறுத்தியது. இதன்படி 1710-ல் டோரி அமைச்சரவையொன்றை அரசியார் அமர்த்தினர்.

இந்த அமைச்சரவையில் ராபர்ட் ஹார்லியும், செயின்ட் ஜானும் இடம்பெற்றார்கள். இவர்கள் முறையே கருவூலத் தலைவராகவும், உள்துறை அமைச்சராகவும் அமர்த்தப்பட் டார்கள். ஐரோப்பியப் போரை இந்த அமைச்சரவை நிறுத்தி விட விரும்பியது. எனவே, பாராளுமன்றத்தின் இசைவின் பேரில் உட்ரெக்ட் உடன்படிக்கை (1713) செய்துகொள்ளப் பட்டது. ஆன் அரசியாருக்குப்பின், யார் பட்டத்துக்கு வர வேண்டுமென்பதுபற்றி டோரிகளிடையே கருத்துவேறுபாடு காணப்பட்டது. மூத்த போலியை[1] பட்டத்திற்குரியவராக்கப் போலிங்புரோக் முயன்றார். ஹார்லி இதை எதிர்த்தார். இரு வருக்குமிடையே கருத்துவேறுபாடு நிலவிவந்தது. அரசி யாரின் முன் மரியாதையின்றி நடந்துகொண்டதற்காக ஹார்லி பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதைப் பயன்படுத்திக் கொண்டு போலிங்புரோக் மூத்த போலியை அரசராக்கத் திட்டமிட்டார். அரசியாரும் நோய்வாய்ப்பட்டார். ஆனால், அரசியார் இறக்குமுன், ஸ்ரூஸ்பரி கோமகனைக் கருவூலத் தலைமைப் பிரபுவாக நியமித்தார். அரசியார் இறந்தவுடன் இவர் ஹனோவர் நாட்டின் தேர்வாளரான ஜார்ஜை இங்கிலாந் தின் அரசரென அறிவித்தார். தேர்வாளர் ஜார்ஜ், முதலாம் ஜார்ஜ் என்னும் பட்டப்பெயருடன் இங்கிலாந்தின் அரச ரானார்.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Guizot	:	History of English Revolution
Mackintoch	:	History of Revolution
Gooch	:	English Democratic Ideas in the 17th Century
Gobbet	:	Parliamentary History

[1] Old Pretender

E. R. Tanner	:	Privy Council, 1603 — 1784
Turner	:	Cabinet Council
W. C. Abbot	:	Long Parliament of Charles II
A. Brownwig	:	Party organisation in the Reign of Charles II
Holdsworth	:	History of English Law
Lecky	:	History of England
G. N. Clark	:	Later Starts

11. விக்குகளின் ஆட்சி

ஹனோவர் மரபினரான முதல் இரண்டு ஜார்ஜ் மன்னர்களும் அரசியலமைப்பு வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருக்கிறார்கள். திறமையின்றியும் இங்கிலாந்தின் உள் விவகாரங்களில் அக்கறையின்றியும் இவர்கள் இருந்ததால், நாட்டின் ஆட்சிப்பொறுப்பை இவர்களுக்கு ஆதரவாக இருந்து, அரசுரிமையைப் பெற்றுத்தந்த கட்சியிடம் விட்டுவைத்தார்கள். இந்த இரண்டு அரசர்களும் வெளியார்களாக இல்லாமல் ஆங்கிலேயர்களாக இருந்திருந்தால், வால்போல்[1] பொது மக்கள் சபையின் ஆதரவோடுகூடிய கேபினெட் அரசாங்க முறையை நிறுவியிருக்கமுடியாது.[2]

ஏறத்தாழ நாற்பதாண்டுக் காலத்திற்கு இங்கிலாந்தின் அரசியலில் டோரிக்கட்சி வலிமையின்றி இருந்தது. சில வேளைகளில், இக் கட்சியினர் ஜேக்கோபைட்டுகளை ஆதரித்தும், ரோமன் கத்தோலிக்கச் சமயத்தைப் பகைத்தும் வந்தார்கள். இவர்களால் ஆதரிக்கப்பட்ட மூத்த போலி, ரோமன் கத்தோலிக்கச் சமயத்தைக் கைவிட மறுத்தார். வால்போலின் நீண்ட கால ஆட்சியை முடிவிற்குக் கொண்டுவந்த எதிர்ப்பாளர்கள் பெரும்பாலும் மனநிறைவில்லாத விக்குகளாவர். ஜார்ஜின் ஆட்சிக்காலத் தொடக்கத்திலிருந்தே விக்குகள் இரு பிரிவினராகப் பிரிந்து செயல்பட்டார்கள். பெருமக்கள் சபையின் ஆதரவை நாடிய சன்டர்லாண்டு, ஸ்டான்ஹோப்[3] ஆகியவர்களைத் தலைவர்களாகக் கொண்டிருந்த விக்குகள் ஒரு பிரிவினராகவும், பொதுமக்கள் சபையின் அதிகாரத்தை வலிமைப்படுத்தும் கொள்கையைப் பற்றிநின்ற வால்போல், டவுன்சென்ட்[4] ஆகியவர்களைத் தலைவர்களாகக் கொண்டிருந்த விக்குகள் இன்னொரு பிரிவினராகவும் இருந்தனர். மேலும்,

[1] Walpole
[2] Morley, Walpole, p. 49
[3] Stanhope
[4] Townshend

மிகச்சிறந்த தலைவர்கள் பலர் இக் கட்சியில் இருந்தார்கள். கட்சியும் சிறந்த் அமைப்பைப் பெற்றிருந்தது. பாராளு மன்றத்தின் கட்டுப்பாடும் இக் கட்சியிடமிருந்தது. நாட்டின் பெரும் நிலக்கிழார்கள் பலர் இக் கட்சியில் இருந்தனர். பல நகரத்தொகுதிகள் இவர்களின் சொந்தத்தொகுதிகளாக இருந்ததால், இவர்களின் விருப்பிற்குகந்தவர்களைப் பாராளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பமுடிந்தது. கையூட் டைப் பயன்படுத்தி மற்ற நகரத்தொகுதிகளையும் இவர்கள் கைப்பற்றினர்கள். தேர்தலைக் கட்டுப்படுத்த அரசரின் செல் வாக்கும் பயன்படுத்தப்பட்டது. பணத்தையும், பதவியையும் பகிர்ந்தளித்துப் பாராளுமன்றத்தின் செயற்பாட்டைத் தம் பொறுப்பில் வைத்துக்கொண்டார்கள். இவர்களின் அதி காரத்தை நிலைப்படுத்திக்கொள்ள ஏழாண்டுச் சட்டம் உதவி யது. புதிய பிரபு ஒவ்வொருவரும் விக்குக் கட்சியினராக இருந்ததால், பெருமக்கள் சபையில் இவர்களின் செல்வாக்கு அதிகரித்தது. பொதுப்பதவிகள், படை, கப்பற்படை, திருச் சபை ஆகிய துறைகளில் விக்குகள் நிறைவிக்கப்பட்டனர். துணைநிலை ஆளுநர் பதவிக்கு விக்குகளே அமர்த்தப்பட் டார்கள். இவர்களால் அமர்த்தப்பட்ட அமைதிகாண் நீதிபதி களும் விக்குகளாகவே இருந்தார்கள். பணம் படைத்தவர்கள் விக்குகளை ஆதரித்தார்கள். ஜெக்கோபைட்டுகளும் செல் வாக்குக் குன்றிக் காணப்பட்டார்கள். பெரும்பாலான மக் களும் இப்பொழுது போப்பின் ஆதிக்கம் மீண்டும் நிலைபெறு வதை எதிர்த்தார்கள்.

1721-லிருந்து 1742 வரை வால்போல், அரசரின் முதல் அமைச்சராக இருந்தார். இவருடைய நிதித்திறமை வணிக வகுப்பினரையும் நிலச்சொந்தக்காரர்களையும் கவர்ந்தது. நுட்பமான பிரச்சினைகளைப் பொதுமக்கள் சபையில் சமாளித் தது, இவருக்கு எதிர்ப்பில்லாத் தலைமையை அளித்தது. உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை இதுகாறும் உள்ள நிலையி லேயே இருக்கவேண்டுமென்பது இவருடைய கருத்தாக இருந்தது. இவருடைய இருபதாண்டு ஆட்சிக்காலத்தில் முதல்தரமான சட்டமெதுவும் நிறைவேறவில்லை. ஆயினும், ஒரு நூற்றாண்டு குழப்பநிலைக்குப் பிறகு இவர் இங்கிலாந் திற்கு ஒரு நிலைப்பேறு உணர்வை அளித்தார். இதுவே இக் காலத்திய பெருந்தேவையாக இருந்தது.

வால்போலின் தனிமுதன்மைக்காலம் அரசியலமைப்பு வளர்ச்சியில் பெரும் சிறப்பிற்குரியதாகும். இக் காலத்தில்

பொதுமக்கள் சபைக்கு அதிகாரம் மாறியது; கேபினெட் முறை நிலைபெற்றது. பிரதமர் பதவியின் வளர்ச்சி தொடங்கியது. வால்போல் நிதித்துறைத் தலைவராக இருந்தார். 1719-ல் அமைச்சரவை, பெரும்மக்கள் தொகையினர் மசோதாவைக் கொண்டுவந்தது. பாராளுமன்றத்திலிருந்து பெரு மக்களின் செல்வாக்கை விலக்குவது இம் மசோதாவின் நோக்கமாகும். வேல்ஸ் இளவரசர் அரசராகும்பொழுது பெரு மக்கள் சபையிலுள்ள விக்குப் பிரபுக்களைக் குறைக்க, டோரிப் பிரபுக்களைப் புடைத்தமர்த்தலாமென அமைச்சரவை அஞ்சியது. அரசரின் நெருங்கிய உறவினர்களைத் தவிர, ஏற்கனவேயுள்ள 178 பிரபுக்களின் எண்ணிக்கையை ஆறுக்குமேல் அதிகரிக்கலாகாதென அரசரின் அதிகாரத்தை இம் மசோதா குறைக்க வகைசெய்தது. மரபற்றுப்போயிருந்த இடங்களை நிரப்ப, புதிய பிரபுக்கள் படைக்கப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட 16 ஸ்காட்டிஷ் பிரபுக்களுக்குப் பதிலாக 25 மரபுவழிப் பிரபுக்கள் பெருமக்கள் சபையில் இடம்பெறுவர். இம் மசோதா பெருமக்கள் சபையில் நிறைவேறியது. ஆனால், எதிர்க்கட்சியிலிருந்த வால்போல் இம் மசோதாவிற்கெதிராகக் கருத்தை உருவாக்கியதன் பயனைப் பொதுமக்கள் சபை இதனைத் தள்ளிவிட்டது. இம் மசோதாவின் நிறைவேற்றம் இங்கிலாந்து அரசியலமைப்பின் இயல்பையும், வருங்கால வளர்ச்சியின் தன்மையையும் முழுமையாக மாற்றியிருக்கும். இம் மசோதா நிறைவேறியிருந்தால், பெருமக்கள் சபை வலிமைபெற்று ஆதிக்கம் செலுத்தியிருக்கும். அரசியல் முட்டுக்கட்டைகளைத் தவிர்க்கப் பிரபுக்களைப் படைப்பது இயலாததாயிருக்கும். அரசரின் பழமையான இச் சிறப்பதிகாரம் பொதுமக்கள் சபைக்கு ஒரு வாய்ப்பளிக்கிறது. வழிவழிப் பிரபுக்களைக்காட்டிலும், படைக்கப்பட்ட பிரபுக்கள் சபையில் அரும்பணியாற்றியிருக்கிறார்கள். புதிய பிரபுக்களைப் படைக்கும் அதிகாரம் அரசருக்கு அளிக்கப்படவில்லை என்றால், அழிவுபெறுத விக்குகள், சபையில் நிலைபெற்றிருக்கலாம். இம் மசோதா நிறைவேறியிருந்தால் இங்கிலாந்தின் பெருமக்கள் தொகையினர் ஒரு தனிவகுப்பாக ஆகியிருப்பர்.

ஏழாண்டுச் சட்டம் பொதுமக்கள் சபைக்கு ஒரு புதிய சுயேச்சை நிலையை அளித்தது. மூன்றாண்டுகள் எதிர்த்தரப்பில் இருந்துவிட்டு, 1721-ல் வால்போல் கருவூல முதல் பிரபுவாகவும், நிதித்துறைத் தலைவராகவும் பதவியேற்றார். பொதுமக்கள் சபையின் அதிகாரத்தைப் பெருக்கும் கொள்கையை இவர் மேற்கொண்டார். தம் உயர்நிலையைத் தக்கவைத்துக்

கொள்ள எந்த அளவிற்குக் கையூட்டு முறையைத் திட்டவட்ட மாகப் பயன்படுத்தினரென்பதை எதிர்க்கட்சியினர் மிகை படக் கூறியிருக்கிறார்கள். முன்னிலை மீட்சிக் காலத்திலிருந்து லஞ்ச ஊழல் பொதுவாக இருந்துவந்துள்ளது. வால்போலின் வீழ்ச்சிக்குப்பின், இது மேலும் அதிகரித்தது. அரசரின் முதல் அமைச்சராக இருந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இவருடைய நம்பிக்கைக்குகந்த ஆதரவாளர்களுக்குப் பெரும் சலுகைகள் காட்டி ஆதரவளித்தார். வால்போலின் ஆட்சிக்கு ஆதரவளித்த பாராளுமன்ற உறுப்பினர், இலாபம் தரும் பதவி எதையும் பெறமுடியும். "ஊழலாலன்றிக் கட்சியின் பற்றுர்வத்தால் வால்போல் ஆட்சிசெய்தா"ரெனப் பர்க் கூறினர்.

முதலாம் ஜார்ஜ் மன்னரின் பாராளுமன்றத்தில் 271-க்குக் குறையாதவர்கள் அரசரின் பதவி அல்லது ஒய்வு ஊதியம் பெற்றவர்களாக இருந்தார்கள் என்பது அரசரின் வாடிக்கை யாதரவின் ஆற்றலைக் காட்டுகிறது. வால்போலின் வீழ்ச் சிக்குப்பின், பதவி மசோதா நிறைவேறியது. பெருமளவி லான அலுவலர்களை இம் மசோதா சபையிலிருந்து விலக்கி யது. 1782-ல் ராக்கிங்ஹாம் பிரபு அரசமானியப் பட்டியல் சட்டத்தை நிறைவேற்றும்வரை அரசரின் செல்வாக்கு அஞ்சும் அளவிற்கு வலிமையானதாக இருந்தது.

பொதுமக்கள் சபையின் ஆதிக்கம் நிலைபெறும்பொழுது மற்றொரு அரசியலமைப்பு மாற்றம் ஏற்பட்டுக்கொண் டிருந்தது. நாம் முன்பார்த்ததுபோல், பிரிவி கவுன்சிலின் உருவளவின் வளர்ச்சியும் அமைப்பும் சிறிய, இயல்பான அமைச்சரவைக் குழுக்களின் வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தன. ஆன் அரசியாரின் காலத்தில் முதன்மையான அமைச்சர்கள் தவறாமல் கூடினார்கள். இக் கூட்டங்களுக்கு அரசியார் தலைமை தாங்கினர். இக் கவுன்சில் கூட்டங்களில் அழைப்புப்பெற்ற அமைச்சர்கள் மட்டுமே கலந்துகொண்டார்கள். இதற்கு மாறாக, அரசியார் இறக்குமுன், அழைக்கப்பெறாத இருவர் கவுன்சில் கூட்டத்திற்கு வந்து கலந்துகொண்டதை முன்னர் பார்த்தோம்.

ஆங்கிலம் அறியாத முதலாம் ஜார்ஜ், கவுன்சிலின் கூட்டங் களுக்குத் தலைமைதாங்கும் தொல்லைமிகு கடமையை ஏற்க மறுத்தார். இதையொட்டி இரண்டு விளைவுகள் ஏற்பட்டன. அரசர் கவுன்சிலில் இல்லாததால் அமைச்சர்கள் கட்டுப்பா

டின்றிக் கலந்தாராய முடிந்தது. அமைச்சர்கள் ஒத்துக் கொண்ட செயற்குறிப்புகளை அரசருக்களிக்க முடிந்தது. அரசருக்குப்பதிலாகத் தலைமைதாங்கிய அமைச்சர் இயற்கையாகவே தனிமுதன்மை பெற்றார்.

இக் காலத்தில் அரசரின் முதன்மையான அமைச்சர்கள், "கேபினெட்"[1]டில் இடம்பெறும் உரிமை தெளிவாக நிறுவப்பட்டுவிட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரையில் அரண்மனை அகவினைஞர், கான்டர்பரியின் அதிமேற்றிராணியார் போன்றவர்கள் கேபினெட்டில் இடம்பெற்று வந்தார்கள். வால்போல் கேபினெட் கூட்டங்களை அடிக்கடி அழைத்தார். நிதித்துறைத் தலைவர், செயலர்கள், தனிமுறையில் அக்கறையுள்ள அமைச்சர்கள் ஆகியோரோடு வால்போல் தனிமுறையிலான ஆலோசனைகளை நடத்தினர். வால்போலின் காலத்திலும், இதற்குப்பின்னும் கேபினெட் அமைச்சரவையில் பொதுமக்கள் சபையினரின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருந்துவந்தது. இளைய பிட்டின் கேபினெட்டில் அவர் மட்டுமே பொதுமக்களின் சார்பில் உறுப்பினராக இருந்தார். இக் காரணம்பற்றியே பொதுமக்கள் சபை இப் புதிய அரசியலமைப்பு வளர்ச்சியைச் சிறிது அச்சத்தோடு பார்த்தது.

கேபினெட் அமைச்சரவையின் வளர்ச்சியோடு கொண்டிடிருந்த நெருங்கிய தொடர்பு பிரதம அமைச்சர்[2] பதவியின் தோற்றமாகும்.

இப்போதைய அரசியலமைப்புமுறையில் பிரதம அமைச்சர், மற்ற அமைச்சர்களிலிருந்து மூன்று வகைகளில் வேறுபடுத்தப்படுகிறார். (1) அரசரோடு கலந்து ஆராய்ந்து கொண்டு மற்ற அமைச்சர்களை அமர்த்தும் உரிமையைப் பிரதமர் பெற்றிருக்கிறார். (2) கேபினெட் அமைச்சரவைக் கூட்டங்களுக்கு இவர் தலைமைதாங்குகிறார். எல்லாப் பிரச்சினைகளையும் முடிவுசெய்யும் இறுதியான அதிகாரம் இவரிடம் இருக்கிறது. மற்ற அமைச்சர்கள் இவருடைய முடிவை ஆதரிக்கவேண்டும் அல்லது பதவியிலிருந்து விலகிக் கொள்ளவேண்டும். (3) அரசருக்கும் கேபினெட்டிற்கும் இடையில் இவர் செய்திப் போக்குவரத்துச் செயற்கருவியாக

[1] இதன் தோற்றம், வளர்ச்சி ஆகியவைகளுக்கு இதே நூலின் 16-ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[2] விரிவான செய்திகளுக்கு இதே நூலின் 17-ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

இருக்கிறார். "அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் கேபினெட் இருத்தல்போல, அரசருக்கும் கேபினெட்டிற்கும் இடையில் பிரதமர் இருக்கிறார்".

பதினேழாம் நூற்றாண்டின் இறுதிவரையில் கருவூலப் பிரபு மிக முக்கியமான அலுவலராக இருந்தார். ஆனால், முதலாம் ஜார்ஜ் அரசுரிமையேற்றபின், இப் பதவி ஓர் ஆணைக் குழுவில் நிலைபெற்றது. சிறிது காலத்திற்குமுன், தேசிய நிதியின் செயலாட்சி நிதித்துறைத் தலைவருக்கு[1] மாற்றப் பட்டது. வால்போலின் காலத்திலிருந்து கேபினெட்டில் மிக உன்னத இடத்தைப் பெற்றிருந்த ஓர் அமைச்சர் பொதுவாகக் கருவூல முதன்மைப் பிரபுவாக அமர்த்தப்பட்டார். ஆனால், நெடுநாள்வரை எவருக்கும் பிரதம அமைச்சர் என்ற பட்டத் தைக் கொடுக்கவேண்டுமென்றதாகத் தெரியவில்லை. பிரதமர் பதவிக்குரிய தனிப்பட்ட உரிமைகளை முழுமையாகச் செயல் படுத்திய முதல் அமைச்சர் இளைய பிட் (Pitt) ஆவார்.

ஆனால், வால்போலின் நீண்ட ஆட்சிக்காலத்தின் ஆதிக்கம் இக் கருத்தை வளர்ப்பதற்குப் பெரிதும் உதவிய தெனலாம். கவுன்சிலில் செல்வாக்குப்பெற்ற, ஒத்துக் கொள்ளப்பட்ட, உண்மையான அமைச்சர் ஒருவர் இருக்க வேண்டும்; அரசரின் நம்பிக்கையில் முதன்மையான இடத்தையும் பெற்றிருக்கவேண்டுமெனப் பிற்காலத்தில் பிட் விளக்கினார். அரசியலமைப்பின் மரபிற்கு மாறுக, வால்போல் தம்மைத் தனித்த அல்லது பிரதம அமைச்சராக ஆக்கிக் கொண்டாரென இவர்மீது சிலர் குற்றம்சாட்டினர்கள். இத்தகைய நோக்கமெதுவும் தமக்கில்லையென வால்போல் கூறினர். மாட்சிமிகு அரசரின் கவுன்சிலில் இவர் ஒரு வாக்கு மட்டுமே பெற்றிருந்ததாக வலியுறுத்தினர். பிரதம அமைச்சர் பதவியை ஏற்படுத்தும் முயற்சிக்கெதிரான உணர்ச்சியின் வலிமையைப் பெருமக்கள் சபை சார்ந்த சிறு பான்மையினரின் எதிர்ப்பிலிருந்து தெரிந்துகொள்ளலாம். தனித்த அல்லது முதன்மையான அமைச்சர் பதவி, இங்கிலாந் தின் சட்டம் அறியாப் பதவியெனவும், இந்த நாட்டின் அரசிய லமைப்பிற்குப் பொருந்தாது எனவும், எந்த அரசாங்கத்திலும் உரிமையை அழிக்கக்கூடியதெனவும் எதிர்ப்புத்தீர்மானம் குறிப்பிட்டது. அரசர், அமைச்சர் ஆகியோர்களின்மீது பாராளுமன்றம் கட்டுப்பாட்டைச் செயல்படுத்தாத வரையில், பிரதம அமைச்சரின் பதவி அரசியலமைப்பு முறையில் ஒரு

[1] Chancellor of the Exchequer

பிரிவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கேபினெட் என்ற பெயரும், பிரதம அமைச்சர் என்ற பெயரும், விக்கு, டோரி என்ற அரசியல் பட்டங்களும் இழிபெயர்களாக முதலில் தோன்றின.

புதிய வளர்ச்சிகள் தோன்றிக்கொண்டிருக்கையில் பழமையான அரசியலமைப்பு வழக்காறுகள் செல்திறனற்றுப் போயின. மூன்றும் வில்லியம் பலமுறைகள் பயன்படுத்திய அரசரின் தடைவாக்கு, முதலாம் ஜார்ஜ் மன்னர் அரியணையேறியபின், பயன்படுத்தப்படவில்லை. சொந்த அதிகாரத்தை வலியுறுத்த முயன்றதில் மூன்றும் ஜார்ஜ் சட்ட ஆக்கத்திற்கான தடைவாக்கைப் பயன்படுத்த முயலவில்லை. அரசரின் இணங்காமையைத் தெரிவிக்கும் எக்கருத்தையும் இவர் எதிர்ப்பதாக நார்த் பிரபுவிடம் கூறினர்.

அரசியல் நோக்கங்களுக்காகக் கடுங்குற்ற விசாரணை முறையைப் பயன்படுத்தும் முயற்சி 1715-ல் இறுதியாக கைவிடப்பட்டதெனலாம். 1701-ல் சோமர்ஸ், ஹலிஃபாக்ஸ் ஆகியோரையும், வில்லியத்தின் பிற அமைச்சர்களையும் டோரிகள் கடுங்குற்ற விசாரணைக்குட்படுத்த முயன்றனர். உட்ரெக்ட் உடன்படிக்கையில் பங்குபற்றியதற்காக ஆக்ஸ்ஃபோர்டு, போலிங்புரோக், ஓர்மாண்டு[1] ஆகியவர்களை விக்குகள் விசாரிக்க உறுதிகொண்டனர். இரண்டாண்டுகளுக்குப்பின், கடுங்குற்ற விசாரணைகள் கைவிடப்பட்டன. 1742-ல் வால்போல் பதவியிலிருந்து விலகிக்கொண்டபொழுது இவருடைய எதிரிகள் இவரை விசாரிக்கவேண்டுமெனக் கூக்குரலிட்டபோதிலும், இதை நாட்டுமக்கள் செவிசாய்க்கவில்லை. இதற்குப்பின், 1788-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரையும், 1804-ல் மெல்வில்லி[2] பிரபுவையும் பாராளுமன்றம் கடுங்குற்ற விசாரணைக்குள்ளாக்கியது. இரண்டு விசாரணைகளும் அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்டனவெனினும், அரசியல் நடவடிக்கைகளுக்காக இவர்கள் விசாரிக்கப்படவில்லை. இரண்டு விசாரணைகளிலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலைபெற்றனர்.

தனியமைச்சர் பொறுப்புடைமையிலிருந்து கூட்டுப் பொறுப்புடைமை வளர்ச்சியும், அரசியலில் சில செயற்பாட்டு விதிகளின் ஏற்பும் கடுங்குற்ற விசாரணைமுறை கைவிடப்படு

[1] Ormonde
[2] Melville

தற்குக் காரணங்களாக இருந்தன. வெற்றிபெற்ற கட்சியொன்று தோல்வியடைந்த கட்சித்தலைவரைக் கடுங்குற்ற விசாரணைக்குட்படுத்தவேண்டுமென விரும்பியிருந்தால் அரசியல் வாழ்க்கையின் இனிய சிறப்பியல்புகள் அழிந்திருக்கும். சொந்த மாண்பை அழிவிற்குள்ளாக்கிக்கொண்டு நாட்டிற்குச் சேவை செய்ய எவரும் முன்வந்திருக்க மாட்டார்கள். நாட்டின் நலவாழ்விற்கு இரு கட்சிகளும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள விரும்பியதால் கட்சிமுறை மக்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருந்தது. தோல்வியடைந்த அமைச்சர்களை விசாரிக்கும் முறை கைவிடப்பட்டதானது கட்சிமுறையை ஏற்றுக்கொள்வதில் முதல் நடவடிக்கையாக இருந்தது.

அமைச்சரவைப் பொறுப்பைச் செயற்படுத்தும் கருவியாக, கடுங்குற்ற விசாரணைமுறை பயன்படுத்தப்படுவதற்குச் சட்டத்திற்கெதிரான செயற்பாடுகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, எவரும் தண்டனைக்குள்ளாகலாகாதென வலியுறுத்தப்பட்டது. கவுன்சிலர்களாக இருப்பவர்கள் சிலர் குற்றச்சாட்டிற்குட்படாதிருத்தலுக்குப் பெரும் கண்டனப்பத்திரம் எதிர்ப்புத் தெரிவித்தது.

கேபினெட் அமைச்சரவை முறையின் சிறப்பியல்புகளில் ஒன்றுகிய அமைச்சர்களின் கூட்டுப்பொறுப்புக் கருத்து, கவுன்சில் கூட்டங்களில் அரசர் கலந்துகொள்ளாமையிலிருந்து வளர்ச்சியடைந்தது. கேபினெட் நடைமுறைகளைப் பற்றி அமைச்சர் எவரும் அரசருக்குத் தகவல் அளிக்கக் கூடாதெனும் கருத்தைப் பிரதமர் செயல்படுத்தியபொழுது இது நிறைவுபெற்றதெனலாம். இந்த நூற்றாண்டின் இறுதிவரை இக் கருத்து, தெளிவானதொரு அரசியலமைப்புக் கருத்தாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வால்போலின் ஆட்சிமுறைகள்பற்றி இங்கு நாம் விரிவாக ஆராய்வதற்கில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் வரலாற்றில் வால்போலின் வீழ்ச்சி (1742) ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசியலமைப்பு வளர்ச்சியில் இவருடைய பங்குப் பணிபற்றி வரலாற்றாசிரியர்கள் விரித்துரைத்திருக்கிறார்கள். அரசியல் தேவைகளுக்கேற்பத் தம் சொந்தக் கருத்துகளைக் கொண்டு ஆட்சிசெய்தவர் வால்போலாவார். பொதுமக்கள் சபையில் நாட்டின் அலுவல்களை முதலில் நடத்தியவர்

வால்போல். பார்ளுமன்றத்தின் உறுப்பினர்கள் இவருடைய நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டுமென முதலில் இவர் வலியுறுத்தினர். வால்போலின் காலத்தில் பொதுமக்கள் சபை நாட்டின் வலிமைமிக்க சக்தியாக மாறியது. திறமை, செல்வாக்கு, உண்மையான அதிகாரம் ஆகியவைகளில் பெரு மக்கள் சபையைவிடப் பொதுமக்கள் சபை ஆதிக்கம் பெறத் தொடங்கியது. அரசரின் அளப்பரிய ஆதரவைப் பெற்றிருந் தாலும், பொதுமக்கள் சபையின் ஆதரவைப் பெறத் தவறினால் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவேண்டுமெனும் மரபிற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர்.

பெருமைக்குரிய இவ் வமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொண்டது, வில்லியம் பிட் (William Pitt) என்பவரின் எழுச்சிக்கு உதவியாக இருந்தது. புதிய தீவிரமான கொள் கையை உருவாக்கிச் செயல்படுத்தவும் இம் மாற்றம் உதவி யாக இருந்தது. வில்லியம் பிட் பொதுமக்கள் சபையை நம்பி யிருந்ததைக்காட்டிலும் சபையில் பிரதிநிதித்துவம் பெறுத வகுப்பினரைப் பெரிதும் நம்பியிருந்தார். இதுபற்றியே இரண்டாம் ஜார்ஜ் மன்னர், "மக்களின் கருத்தை அறிய, பொதுமக்கள் சபையைவிட வேறு இடங்களை நாடவேண்டு மென நீங்கள் எனக்குக் கற்பித்திருக்கிறீர்கள்," என்று குறிப் பிட்டார். எனவேதான், 1757-ல் பிட் பதவியிலிருந்து விலகிய பொழுது நகரங்கள் முந்திக்கொண்டு இவரைப் பாராட்ட முன் வந்தன. "மக்களுக்கு அரசரால் அளிக்கப்பெற்ற அமைச்சர் வால்போல்" என்றும், "மக்கள் அரசருக்கு அளித்த அமைச்சர் பிட்" என்றும் ஜான்சன் கூறினர். பதினெட்டாம் நூற்றாண்டின் சீரமைக்கப்பெறுத பாராளுமன்றத்தில் மூத்த, இளைய பிட் ஆகியவர்களின் நிலை, பொதுக் (மக்களின்) கருத் தின் செயலாட்சியை எடுத்துக்காட்டியது.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

L. Stephen : History of English Thought in the 18th Century

Holdsworth : History of English Law

Lecky : History of England

J. H. Phmb : Sir Robert Walpole

K. Feiling : The Second Tory Party

T. Mekenzie : British Political Parties.

D. L. Keir : The Constitutional History of Modern Britain

Blanvelt : Development of Cabinet Govt. in England

Phmb : Sir Robert Walpole

Turner : Cabinet Council.

12. மூன்றும் ஜார்ஜ் மன்னரும் அவரது சொந்த அதிகாரமும்

(1760—1784)

முதல் இரண்டு ஹனோவர் அரசர்களின் ஆட்சிக்காலத்தின் போது, அரசருடைய நேர்முக அதிகாரம் மிகக்குறைந்த அளவில் காணப்பட்டது. 1727-ல் இரண்டாம் ஜார்ஜ், வால்போலை விலக்க இயலாதிருந்தார். பதினைந்தாண்டிற்குப் பின், அவரைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளவும் இவரால் முடியவில்லை. இவருடைய ஆட்சிக்கால இறுதியில் பிட் சிறந்து விளங்கினர். அரசியல் வாடிக்கை ஆதரவைத் திறமையாகப் பயன்படுத்திக்கொண்ட நியூகாசில் பொது மக்கள் சபையை வசப்படுத்திக்கொண்டார். இதனால் விக்கு களின் தனிமுதன்மை தொடரும்போல் தோன்றியது. ஆனால், மூன்றும் ஜார்ஜ் அரியணையேறியதும் அரசியல்நிலை மாறியது. புதிய அரசர் இங்கிலாந்தில் வளர்ந்தவர். அரசப்பதவியைப் பற்றி இவர் பெரும் கனவு கண்டுவந்தார். பிளாக்ஸ்டோனின் (Blackstone) கருத்துரைகளிலிருந்து அரசரின் சிறப்புரிமைகள் பற்றிய சட்டக்கோட்பாடுகளை இவர் கற்றறிந்திருந்தார். நாட்டின் உயர் பண்புகளுக்கு எடுத்துக்காட்டாகவும், கட்சி களுக்கப்பாற்பட்டவராகவும் இவர் இருக்கவேண்டுமென்ப தைப் போலிங்புரோக்கின் நூலிலிருந்து தெரிந்துகொண் டிருந்தார். அரசரின் சொந்த அதிகாரத்தை நிலைநிறுத்தும் உறுதியோடு இவர் அரியணையேறினர். இவருடைய திட்டப் படி, அரசரே அமைச்சரவையின் இணைப்புக்கூறாக இருக்க வேண்டும். அரசரின் இசைவோடு அமைச்சரவை பிரதம அமைச்சரால் உருவாக்கப்படவேண்டும். இதன் உறுப்பினர்கள் அரசரின் விருப்பப்படி நடந்துகொள்ளவேண்டும். பாராளு மன்றத்திற்குப் பொறுப்பு ஏற்கவேண்டிய அமைச்சர்கள் இவருடைய திட்டத்தின்படி அரசரின் பதிலாட்களாக இருக்க வேண்டியதாயிற்று. ஆனால், அரசரின் நடவடிக்கைகளுக்கு

அரசர் தம்மைப் பொறுப்புடையவராகக் கருதவில்லை. இது அரசரை ஒரு கட்சியின் தலைவராக்கியது. பாராளுமன்றத்தில் இவருக்கு ஆதரவு தேவைப்பட்டது. இதை இவர் பெற்றார்.

ஆனால், இவர் பாராளுமன்றத்தின் இறைமையையும் தனி முதன்மையையும் தாக்கவில்லை. 1688-க்குப்பின், இழந்த அதிகாரங்களை இவர் மீண்டும் பெறமுயன்றார். இருப்பினும், வழக்காறுகளை மாற்ற இவர் விரும்பவில்லை. கேபினெட் அமைச்சரவைக் கூட்டங்களில் இவர் கலந்துகொள்ளாததை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இங்குக் கூறலாம். இருந்த போதிலும், இவருடைய கருத்துகளை வெளியிட இவர் தயங்கிய தில்லை. இவருடைய திட்டமெதையும் அரசியலமைப்பிற்கு மாறுனதென எவரும் கருதியதில்லை. மக்களிடையே கேபினெட் அமைச்சரவை பழக்கத்திற்கு வரவில்லை. இக் காலத்திய அரசியற் கோட்பாடுகளும் இவரையே அரசாங்கத் தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தன. கட்சிச் சார்பில்லாத அரசாங்கத்தையே இன்னும் பலர் பற்றிநின்றார்கள். ஒரு சிறு குழுவினர் அரசரின் ஆதரவைத் தேடிக்கொள்ள முயன்றதை டோரிகள் நேர்மையற்றதாகக் கருதினர்கள். போலிங்புரோக்கின் அரசியற் கருத்துகள் டோரிகளுக்குக் கொள்கையாகவும் திட்டமாகவும் அமைந்தன. இவருடைய அரசியற் கருத்துகள் சிற்றேடுகளாகவெளிவந்தன. இவைகளை மூன்றும் ஜார்ஜ் பின்பற்றினர். விக்குகளின் ஆதிக்கத்தில் பெரும் தீமைகளும் இருந்தன. மாற்றம்பற்றிய தெளிந்த கருத்துகள் விக்குகளிடம் கிடையா. ஆனால், டோரிகள், கட்சி வேறுபாடின்றித் திறமையானவர்களைப் பதவியில் அமர்த்தினர்கள். இங்கிலாந்தின் சட்டங்கள்பற்றிய பிளாக்ஸ்டோனின் கருத்துரைகளை மூன்றும் ஜார்ஜ் பின்பற்றினர். அரசியலமைப்பின் சட்டக் கருத்துகளை இவர் முதன்முறையாகப் பகுத்தாய்ந்தார். அரசியலமைப்பின் பல்வேறு நுட்பக் கூறுகளை இவர் பாராட்டினர். அரசரின் அதிகாரம்பற்றிய இவருடைய விளக்கம் தவறுனதென டைசி[1] குறிப்பிடுகிறார். அரசியலமைப்பின் அடிப்படையான கருத்துகளை எவரும் கண்டறியவில்லை. பொதுமக்கள் சபையின் உட்குழுக்களிடமிருந்து அரசியலமைப்பைக் காப்பாற்றுவதாக ஜார்ஜ் நம்பினர். அமைச்சர்களைத் தெரிவுசெய்யும் அரசருடைய உரிமையை அரசியல் அறிஞர்களும் சட்ட நிபுணர்களும் ஆதரித்தார்கள். அமைச்சர்களை அமர்த்திக்கொண்டு கொள்

கையை முடிவுசெய்வதில் செயலூரத்தோடு பணியாற்ற இவர் திட்டமிட்டார். மற்றெல்லா அரசர்களையும்விட இவர், இவை களில் பெருமளவிற்கு வெற்றிகண்டார். இவருடைய செயல் களை விக்குகள் அரசியலமைப்பிற்கு மாருனவைகளெனக் கருதினர்கள். அரசப்பதவியின் சுயேச்சை நிலையை நிலைப் படுத்தவும், விக்குக்கட்சிக்கு வெளியேயிருந்து திறமையாளர் களைக் கொணரவும் இவர் முற்பட்டார். மேலும், ஸ்டுவர்ட்டு களைப்போல, இவர் பாராளுமன்றத்தை எதிர்க்காமல் அதைச் சமாளித்துக்கொண்டார். கேபினெட் அரசாங்க முறையை வைத்துக்கொள்வதா அல்லது அரசரின் அதிகாரத்தை மீண்டும் புதுப்பிப்பதா என்பது இப்பொழுது ஒரு பிரச்சினை யாயிற்று. ஆங்கில வரலாற்றுப் போக்கிற்கெதிராக ஜார்ஜ் போராடிக்கொண்டிருந்தார். ஜார்ஜின் வெற்றி, பாராளு மன்றத் தனிமுதன்மையின் தோல்விக்கும், கேபினெட் அரசாங்க முறையின் மறைவிற்கும் காரணமாக இருந்திருக் கும். இதன் பயனாக, பாராளுமன்றத்தில் அரசரின் ஆதர வாளர்கள் இடம்பெற்றிருப்பார்கள். பல்வேறு துறைத் தலைவர்களும் அரசருக்குப் பொறுப்புடையவர்களாக இருந் திருப்பார்கள். விக்குகள் பயன்படுத்திவந்த அரசியல் வாடிக்கையாதரவை இவர் முதலில் நீக்கினர். பின், விக்குக் கட்சியின் உட்பகைக் குழுக்களை மோதவிட்டு, இவைகளின் வலிமையைக் குறைத்தார். இதே சமயத்தில், பாராளு மன்றத்தில் தம் சொந்தக் கட்சியைப் படைத்துக்கொண்டார். இதனால் அரசரின் கொள்கைக்குப் பாராளுமன்றத்தில் ஆதரவு கிட்டுமாறு இவர் செய்துகொண்டார். "அரசரின் நண்பர்"க ளென டோரிக்கட்சியில் ஒரு பிரிவு உருவாயிற்று. அரசரின் செல்வத்தாலும் செல்வாக்காலும் இது வலிமைபெற்றதோடு, பாராளுமன்றத் தேர்தலிலும் பங்குபற்றியது. அரசரின் கருத்திற்கிணங்காது பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித் தவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். அரசரின் கருத்துகள் முன் கூட்டியே அறிவிக்கப்பட்டதால் இவைகளையொட்டியே பாராளு மன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கவேண்டுமென வற்புறுத்தப் பட்டார்கள். பாராளுமன்ற வாக்களிப்புகளை ஆராய்ந்து அதற்கேற்ப ஆதரவும் தண்டனையும் அளிக்கப்பட்டன. பெரு மக்கள் சபையில் விக்குகளுக்கிருந்த பெரும்பான்மை மறைந் தது. அரசரின் செயல்விளைவு காரணமாக, இவருடைய முதல் பத்தாண்டு ஆட்சியில் அடுத்தடுத்து நிலையற்ற கேபினெட் அமைச்சரவைகள் தோன்றிமறைந்தன. அமைச்சர்கள் முந்திச்செயல்படும்பொழுது அரசரின் அச்சுறுத்தலுக்கு ஆளானார்கள். கேபினெட்டில் இருந்த அரச ஆதரவாளர்கள்

சில நடவடிக்கைகளைக் குலைத்தார்கள். ஆங்கில வரலாற்றில் இக் காலம் பாராளுமன்ற லஞ்ச ஊழல்களின் உச்சகட்டத் தைக் குறிப்பிட்டதெனலாம்.

விக்குக்கட்சியில் இங்கிலாந்தின் பெருங்குடி மக்கள் பலர் இடம்பெற்றிருந்தனர். இவர்களுடைய சொந்தத்தொகுதி களின் பிரதிநிதிகளைக்கொண்டு பொதுமக்கள் சபையை நிறைவித்தனர். பதினெட்டாம் நூற்றாண்டில் கீழ்சபையின் மூன்றிலிரு பங்கினர் நியமன உறுப்பினர்களாக இருந் தார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் விக்குகளின் ஆதரவாளர்கள். விக்குக்கட்சி சேர்ந்து செயல்பட்டிருந்தால் ஆங்கில அரசியலில் ஒரு வலிமையான இடத்தைப் பெற்றிருக் கும். ஆனல், அரசர் தம் எதிரிகளின் ஒற்றுமையின்மையை நம்பியிருந்தார். விக்குகளின் ஒற்றுமையின்மை இவருடைய உயர்வுக்கு வழிகோலியது.

1760-ல் பெருமக்கள் சபையில் விக்குக்கட்சி, பெரும்பான் மைக்கட்சியாக இருந்தது. இக் கட்சியில் இப்போது 200 உறுப்பினர்கள் இருந்தார்கள். மூன்றும் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் படைக்கப் பட்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சபை டோரிகளின் ஆதிக்கத்திற்குள்ளாயிற்று.

அரசுரிமை பெற்றவுடன் தம்முடைய பிரதிநிதியாக பியூட்[1] பிரபுவை இவர் கேபினெட்டில் அமர்த்தினர். இதற் கென இவர் பிட், நியூகாசில் ஆகியோரின் இசைவைப் பெற வில்லை. ஒருசில மாதங்களுக்குள், பியூட்டின் சதிச்செயல் களால் பிட் பதவியிலிருந்து விலகும்படி நேர்ந்தது. ஆறு மாதங்களுக்குப்பின், நியூகாசிலும் பதவியிலிருந்து துரத்தப் பட்டார். ஆனல், அரசாங்கப் பணியை ஏற்றுச் செயல் படுத்தும் திறமையற்றவராக பியூட் இருந்தார். 1763-ல் ஜார்ஜ் கிரன்வில்லிக்கு இவர் இடமளித்து விலகிக்கொள்ளவேண்டிய தாயிற்று. கிரன்வில்லி விக்குகளின் ஆதரவு பெற்றிருந்தார். இவருடைய குறுகிய பதவிக்காலத்தில் அமெரிக்கக் குடி யேற்ற நாடுகள்பற்றிய சர்ச்சை கிளம்பியது, குறிப்பிடத் தக்கதாகும். இவர் காலத்தில் விரைவுக்கமுள்ள வில்க்ஸ்[2] தோன்றினர். இவரைப்பற்றிப் பின் ஆராயலாம்.

[1] Lord Bute

[2] Wilkes

அரசருடன் ஒத்துப்போகக்கூடியவராகக் கிரன்வில்லி இருப்பாரென்று ஜார்ஜ் மன்னரும் பியூட்டும் நினைத்தார்கள். விரைவில் இவர்களுடைய தவற்றை உணர்ந்துகொண்டார்கள். மூன்றாண்டிற்குள், ராக்கிங்ஹாம் பிரபுவின் தலைமையின் கீழ் விக் அமைச்சரவையொன்று பதவியேற்றது. பிட்டினுடைய ஒத்துழைப்பை ராக்கிங்ஹாம் பெற்றிருப்பாராயின், அரசரின் சூழ்ச்சிகளை எதிர்த்துச் சமாளிக்கக்கூடிய ஓர் அமைச்சரவையை இவர் நிறுவியிருக்கலாம். ஆனால், பிட், ராக்கிங்ஹாமின் அமைச்சரவையில் சேர மறுத்துவிட்டார். ஓராண்டிற்குப்பின், இவர், கிராஃப்டன் கோமகனரின் கலப்பு அமைச்சரவையில் ஓர் உறுப்பினரானார். ஆனால், சாத்தம் கோமகனைப் பிட் பெருமக்கள் சபையில் அமர்ந்ததும், இதையடுத்து உடனடியாக இவர் நோய்வாய்ப்பட்டதும் அமைச்சரவையின் கொள்கை உருவாக்கத்தில் இவர் பங்குபற்ற இயலாது போயிற்று. சிதைந்து அழிந்து போகும்வரையில் கிராஃப்டனின் அமைச்சரவை நான்காண்டுகள்வரை தொல்லைகளுக்கிடையே தொடர்ந்திருந்தது. பர்க், ஜூனியஸ் போன்றோரின் சிற்றேடுகளின் வன்மையான கண்டனத்திற்கு இவ் வமைச்சரவை உள்ளாயிற்று. மூன்றும் ஜார்ஜ் உண்மையிலேயே கொள்கையை உருவாக்கும் தலைவராகவும், நார்த் பிரபு பிரதம அமைச்சராகவும் இருந்தார்கள்.

விக்குக்கட்சியின் இரண்டுபட்ட நிலையின் காரணமாக நார்த் பிரபுவைப் பன்னிரண்டாண்டுகள் அரசர் பதவியில் வைத்திருக்கமுடிந்தது. அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடனான போர் இக் காலத்தின் தலையாய விளைவாகும். 17-ஆம் நூற்றாண்டின் பாராளுமன்றப் போராட்டத் தொடர்ச்சியாக இப் போர் இருந்தது. இரு நிகழ்வுகளிலும், தற்கருத்துச் செருக்குடைய, விடாப்பிடியான அரசர்கள் அரசியலமைப்பு வழக்காறுகளுக்கெதிராகச் சட்ட உரிமைகளைப் பற்றிநின்றார்கள். "இசைவுடன் வரிவிதிப்பு" என்னும் கருத்துடன் மற்றக் குறைபாடுகளும் கலக்கப்பட்டன. இரு நிகழ்வுகளிலும், ஒரு தரப்பின் விடாப்பிடித்தனம் இன்னொரு தரப்பின் வன்முறையால் சமாளிக்கப்பட்டது. எனவே, சிக்கலைத் தவிர்க்கப் போரில் இறங்கவேண்டியதாயிற்று. அரசரையும் நார்த் பிரபுவையும் எதிர்ப்பதில் நாட்டுமக்களில் பெரும்பகுதியினர் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்குப் பரிவுணர்வு காட்டினர். ஃபிரான்ஸ் குறுக்கிடும் வரையில் சாத்தம் பிரபு

[1] Earl of Chatham

வும் குடியேற்ற நாடுகளின் உரிமைக் கோரிக்கைகளுக்கு ஆதரவுகாட்டினர்.

1780 வரையில் விக்குக்கட்சியின் பல்வேறு பகுதிகளும் ஒன்றுபடவில்லை. இதே ஆண்டில் பொருளாதாரச் சீர்திருத்தத் திற்கான விண்ணப்பத்தை யார்க்ஷயர் அரசருக்குக் கொடுத் தது. "அரசப்பதவியின் செல்வாக்கு அதிகரித்துள்ளது, அதிகரித்துக்கொண்டிருக்கிறது, இது குறைக்கப்படவேண்டு மெனப் பொதுமக்கள் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி யது. ரிச்மாண்டு கோமகன்[1] ஒரு சீர்திருத்த மசோதாவைக் கொண்டுவந்தார். இவைகளெல்லாம் நாட்டுமக்களின் மன நிறைவின்மையை வெளிப்படுத்த உதவின. 1782 மார்ச்சு மாதத்தில் நார்த் பிரபு பதவியிலிருந்து விலகிக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். ராக்கிங்ஹாம் இரண்டாம் தடவை யாகத் தம் அமைச்சரவையை உருவாக்கினர். இதில் ஷெல்பர்ன் (Shelburne), ∴பாக்ஸ் (Fox), பர்க் (Burke) ஆகி யோரும் உறுப்பினர்களாக இருந்தனர்.

பல நடவடிக்கைகளால் பொதுமக்கள் சபையின் மீதான அரசரின் அதிகாரத்தை ராக்கிங்ஹாம் கட்டுப்படுத்த முயன் ருர். அரசாங்கத்திற்கு நிதியுதவி செய்பவர்கள் பாராளு மன்றத்தில் அமர்வது ஒரு சட்டத்தால் விலக்கப்பட்டது. சிவில் பட்டியல்[2] சட்டத்தால் அரசரின் ஆதரவில் உள்ள பல பதவிகள் ஒழிக்கப்பட்டன. இரகசியச்சேவை நிதிப்பாராளு மன்றத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. ஓய் வூதியங்கள் நிதித்துறையின் வழியாக அளிக்கப்பட்டதால், இவை போதிய விளம்பரம் பெற்றன. சிவில் பட்டியல் சட்டத்தால் வருவாய்த்துறை அலுவலர்கள், போஸ்ட்மாஸ் டர்கள் போன்றோர் பொதுமக்கள் சபையில் இடம்பெறுத தோடு, தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையையும் இழந்து விட்டார்கள். ஒப்பந்தக்காரர்களின் சட்டத்தால், ஒப்பந்தக் காரர்கள் சபையில் அமரும் தகுதியிழந்தனர். 1782-ல் ராக்கிங்ஹாம் இறந்ததும் விக்குக்கட்சியில் பிளவு ஏற்பட்டது. ஷெல்பர்ன்[3] பிரதமரானர். இவருடைய அமைச்சரவையில் இளைய பிட் நிதித்துறைத் தலைவராகப் பதவியேற்றார். ஓராண்டிற்குள், விக்குக்கட்சியின் ஒரு பிரிவினர் நார்த்தின்

[1] Duke of Richmond
[2] Civil List Act
[3] Shelburne

தலைமையை நாடி, ஷெல்பர்னை நீக்கிவிடவும், பரவலான கலப்பு அமைச்சரவையை அமைக்கவும் விரும்பினர். இக் கலப்பு அமைச்சரவை மக்களின் வெறுப்புணர்ச்சியைக் கிளறியது. அரசியலமைப்புமுறை சாராத சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி, அரசர் பெருமக்கள் சபையில் ∴பாக்ஸின் இந்திய மசோதாவைத் தோல்வியுறச்செய்து, அமைச்சரவையைப் பதவியிலிருந்து நீக்கினர். ஆட்சியை ஏற்று நடத்துமாறு பிட்டிற்கு அரசர் அழைப்பு விடுத்தார். பொது மக்கள் சபையின் பெரும்பான்மைக்கெதிராகப் பிட் தடுமாறினர். ஆனால், இவர் பதவியேற்றுக்கொண்ட நான்கு மாதத்தில் இப் பெரும்பான்மை, சபையில் ஒருவர் பெரும் பான்மையாகக்குறைந்தது. பாராளுமன்றத்தைப் பிட்கலைத்து விட்டு, 1784-ல் பொதுத்தேர்தலை நடத்திச் சபையில் மிகப் பெரும் பெரும்பான்மை பலம்பெற்றார். இதனால் பிட் பதினைந்தாண்டிற்கு எதிர்ப்பில்லாத் தலைமைநிலையைப் பெற முடிந்தது. மூன்றும் ஜார்ஜ் இருபத்தைந்தாண்டிற்கு விக்குகளோடு போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர். இறுதியில் விக்குக்கட்சி முறிவுற்றுச் சிதறி, பெருமையிழந்து காணப்பட்டது. அரசியலிலிருந்து 50 ஆண்டிற்கு விலகியிருக்கவேண்டிய நிலையில் விக்குகள் இருந்தனர். ஆனால், உண்மையான வெற்றி அரசரிடமின்றி அமைச்சரிடம் நிலைபெற்றதெனலாம். நாட்டின் பொதுவான நம்பிக்கையைத் தமக்காதரவாக எவ்வாறு திரட்டிக்கொள்வதென்பதை அமைச்சர் அறிந்திருந்தார். ஊழலுக்கு வழிசெய்த முறைகளை அகற்றிச் சபையிலிருந்து லஞ்ச ஊழலைக் களைந்து, உண்மையிலேயே மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருந்த பொதுமக்கள் சபையின் சிறப்பை இவர் ஏற்றுக்கொண்டார். ∴பிரெஞ்சுப் புரட்சி இடைப்படவில்லையென்றால், ஒரு தலைமுறையாகத் தடைபட்டுப்போன பாராளுமன்றச் சீர்திருத்தப் பணியை இவர் ஒருவேளை நிறைவேற்றியிருக்கலாம்.

ஜான் வில்க்ஸ் (John Wilkes) என்பவரோடு தொடர்புடைய பல்வேறு அரசியல் பிரச்சினைகள்பற்றிய விளக்கமின்றி, இக் காலத்தில் அரசியலமைப்பு வரலாறு நிறைவு பெறாது. "நார்த் பிரிட்டன்" என்னும் பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில், வில்க்ஸ் முதன்மைநிலை பெற்றார். இப் பத்திரிகை வன்மையாகவும், கேவலமாகவும் பியூட் பிரபுவைத் தாக்குவதில் ஈடுபட்டிருந்தது. பியூட்டின் கொள்கையை, "தி பிரிட்டன்" என்னும் பத்திரிகை ஆதரித்தது. நார்த் பிரிட்டனின் 45-வது இதழ் அரசரின் சொற்

பொழிவை வன்மையாகத் தாக்கியது. இத் தாக்குதலைக் கிரன்வில்லி, பொய்க்குற்றச்சாட்டெனக் கண்டனம் செய்தார். அரசுச் செயலராகிய ஹலி.:பாக்ஸ்[1] பிரபு ஒரு பற்றுணையை இவருக்கெதிராகப் பிறப்பித்தார். "ஆங்கில மக்களுக்கெதிரான ஓர் ஏளனமான பற்றுணை"யென இதை வில்க்ஸ் வருணித்தார். "நார்த் பிரிட்டன்" பத்திரிகையின் ஆசிரியர், பதிப்பாளர் ஆகியோருக்கெதிரான ஆணையாக இதை இவர் கருதினர். இவ் வாணையின்படி, வில்க்ஸ் உட்பட 50 பேர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். வில்க்ஸ், பாராளுமன்ற உறுப்பினராகையால் அரசாங்கத்தின் இந் நடவடிக்கை இரு பிரச்சினைகளை எழுப்பியது. அவை, உறுப்பினர் கைது செய்யப்படலாகாதெனும் சிறப்புரிமைப் பிரச்சினையும் பொதுப்பற்றுணையின் முறைமையும் ஆகும். கைதுசெய்யப்படவேண்டியவர்களையோ, பற்றிக்கொள்ளக்கூடிய பொருளையோ, சோதனையிடவேண்டிய இடங்களையோ இப் பற்றுணை திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. பொதுப் பற்றுணைகள் விண்மீன் நீதிமன்றத்திலிருந்து தோன்றியதாக நம்பப்படுகிறது. இரண்டாம் சார்லஸ் இசைவளிப்புச் சட்டத்தால் இதை மீண்டும் உயிர்ப்பித்தார். இச் சட்டம் வழக்கொழிந்துவிட்ட பின்னும் தொடர்ந்திருந்துவந்தது. முன்னிலைமீட்சிக்குப்பின், நிகழ்ந்த சதிகள், கலகங்கள் ஆகியவைகளை ஒடுக்க, இவ் வதிகாரம் அரசுச் செயலருக்கு அளிக்கப்பட்டது. கைதுசெய்யவும், பொருள்களைக் கைப்பற்றவும் இவ் வதிகாரம் ஒருதலையாகப் பயன்படுத்தப்பட்டது. பொதுப்பற்றுணையை நீதிமன்றங்கள் செல்லத்தக்கதன்று என அறிவித்தன. ஹலி.:பாக்ஸிடமிருந்தும், இவருடைய நேர்முகச் செயலரிடமிருந்தும் வில்க்ஸ் பெரும் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றார். நீதிமன்றத்தின் இத் தீர்ப்பைப் பொது மக்கள் சபை ஒரு தீர்மானத்தால் ஏற்றுக்கொண்டது. கைது செய்வதற்கான கட்டற்ற அதிகாரத்தை இப் பொதுப் பற்றுணை நிருவாகத்திற்கு அளித்ததால், இது பெரும் சிறப்பிற்குரியதாயிற்று. ஆனால், தனிப்பட்ட ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டுப் பிறப்பிக்கப்படும் பற்றுணை குறிப்பிட்டவர்களை மட்டுமே பிடிக்க அரசாங்கத்திற்கு அனுமதியளிக்கிறது.

வில்க்ஸ் வெளிட்ட, "நார்த் பிரிட்டனின்" 45-வது இதழைப் பொதுமக்கள் சபை, "பொய்யான, அவதூறான, அடாப்பழியான, பொய்க்குற்றச்சாட்டு" என அறிவித்து, கைதுசெய்யப்

[1] Lord Halifax

படாதிருக்கும் உரிமை அவதூறான பொய்க்குற்றச்சாட்டிற்குப் பொருந்தாதெனவும் கூறியது. வில்க்ஸ் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார். இவர் ஃபிரான்சிற்குச் சென்றபின், அரச நீதிமன்றம் இவருக்கு விலக்காணை அளித்தது. கிரன்வில்லியின் அமைச்சரவையை எதிர்த்தோரிடையே இவர் ஒரு பெரும் வீரரானார். பொதுமக்களின் உரிமைக்கு இவர் அளித்த பாதுகாப்பிற்காக லண்டனின் பொதுக்கவுன்சில் இவருக்கு நன்றி தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் வாக்களித்ததற்காக உறுப்பினர்கள் தண்டிக்கப்படுதற்கான ஓர் எடுத்துக்காட்டை வில்க்ஸின் வழக்கு வெளிப்படுத்தியது. பொதுப்பற்றாணையைப் பற்றியதில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்காத ஜெனரல் கோன்வே[1] யும் இன்னும் மூன்று அலுவலர்களும் பதவிகளை இழக்க நேர்ந்தது.

நான்காண்டிற்குப்பின், மிடில் செக்ஸின்[2] உறுப்பினராக வில்க்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் அரச நீதிமன்றத்தில் சரணடைந்தார். நீதிமன்றமும் இவருக்கு 22 மாதச் சிறைத் தண்டனை விதித்தது. அடுத்த ஆண்டு இவர் மீண்டும் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். ஆனால், மீண்டும் மிடில்செக்ஸ் இவரை உடனடியாகத் தேர்ந்தெடுத்தது. வில்க்ஸ் மூன்று தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டபின்னும் இவரை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற லயோனல் லட்ரல்[3] என்பவரைப் பொதுமக்கள் சபை தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவித்தது. தேர்வாளர்கள்மீது பொதுமக்கள் சபை அதிகார ஆணையிட்டதை மக்கள் வெறுத்தெதிர்த்தனர். பாராளுமன்றச் சீர்திருத்தக் கோரிக்கையை எழுப்ப இது உதவியது. வில்க்ஸிற்கு எதிரான சபை நடவடிக்கைப் பதிவுகள் சபையின் அன்றாட நடவடிக்கைப் பதிவேடுகளிலிருந்து அகற்றப்பட்டுவிட்டன.

இதற்கிடையில் வில்க்ஸ் மற்றொரு அரசியல் போராட்டத்தில் தம்மைத் தொடர்புபடுத்திக்கொண்டார். பேச்சுரிமையில் அரசர் தலையிடக்கூடாதென்பதற்காகத் தொடக்கத்தில் சபையின் விவாதங்களை வெளியிடச் சபை எதிர்த்தது. ஆனால்,

[1] General Conway

[2] Middle Sex

[3] Lionel Lattrel

இவ் விடர் நீங்கிய பிறகும் இது தொடர்ந்து இருந்துவந்தது. 1771-ல் இப் பிரச்சினையை எழுப்ப வில்க்ஸ் உறுதிகொண்டார். பல லண்டன் செய்தித்தாள்களைப் பாராளுமன்ற விவாதச் சுருக்கங்களை வெளியிடுமாறு இவர் கேட்டுக்கொண்டார். விவாதங்களை வெளியிட்ட ஆசிரியர்கள், சபைமுன் வரவேண்டுமெனப் பொதுமக்கள் சபை பணித்தது. வர மறுத்தவர்களைச் சிறைப்படுத்த கட்டளை பிறப்பித்தது. நகர எல்லைக்குள் இரண்டு பதிப்பாசிரியர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். இந்த வழக்கு நகர முதல்வர்முன்னும் இரண்டு நகராட்சிக்குழு உறுப்பினர்முன்னும் விசாரணைக்கு வந்தது. இந் நீதிமன்றம் பதிப்பாசிரியர்களை விடுதலைசெய்தது. பாராளுமன்ற உறுப்பினரான மேயரையும் நகராட்சி உறுப்பினரையும் சபைமுன் வருமாறு சபை கட்டளையிட்டது. பெருமக்கள் கூட்டத்தோடு இவர்கள் சபைமுன் வந்தார்கள். இவர்கள் சிறையிலிடப்பட்டார்கள். நீண்டகாலமாகச் சபையில் குறிப்புகளை எடுத்துக் கொள்ள நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லையெனினும், இறுதியில், சபையின் விவாதங்கள் வெளியிடப்படுவதைத் தடுக்கும் முயற்சியைப் பொதுமக்கள் சபை கைவிட்டுவிட்டது. 1837-க்குப்பின், பாராளுமன்றம் மறுபடியும் கட்டப்பட்டபொழுது செய்தித்தாள் நிருபர்களுக்கென இடவசதி செய்துகொடுக்கப் பட்டது.

1784-ல் பிட் பதவியேற்றது, கேபினெட் முறையின் வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டமாகும். பிட் வெளிப் படையாகப் பிரதம அமைச்சரின் நிலையைக் கோரிப்பெற்றார். 1792-ல் தர்லோ[1] பிரபுவின் வெளியேற்றத்திற்குப்பின், அமைச்சரவையின் தலைவருக்குக் கட்டுப்படாமல் தனித்துச் செயல்படவிரும்பும் அமைச்சர் தொடர்ந்து அமைச்சரவையில் இருக்கமுடியாதெனும் கருத்து வலியுறுத்தப்பட்டது. சிறிதுகாலத்திற்கு அரசின ஒற்றராகத் தர்லோ பிரபு தொடர்ந்து பல அமைச்சரவைகளில் இருந்துவந்தார். இவருக்குப் பின்வந்த லாப்பரோ[2] பிரபு நிதித்துறையின் தலைவராகப் பிட் அமைச்சரவையின் எஞ்சிய காலத்தில் இருந்துவந்தார்.

பிட் பதவியிலிருந்த முதல் எட்டாண்டுக்காலம் அரசியலமைப்பு வளர்ச்சிக்காலமாகும். 1785-ல் நலிந்துபோன தொகுதிகளுக்கான வாக்குரிமையை நீக்கும் திட்டங்கள்

[1] Thurlow
[2] Loughborough

தோல்வியுற்றபின், பாராளுமன்றச் சீர்திருத்த முயற்சியைப் பிட் கைவிட்டார். ஆனால், அரசாங்கக் கணக்குத் தணிக்கைக்கு இவர் ஏற்பாடு செய்தார்; பாராளுமன்ற லஞ்ச ஊழல் களைத் தடைசெய்தார். தேசிய நிதியை முறைப்படுத் தினர். இக்காலத்தின் முக்கியமான சட்டங்களில் ∴பாக்ஸ்[1] நிறைவேற்றிய பொய்க்குற்றச்சாட்டுச் சட்டம் (1792) தனி யுரிமைப் பாதுகாப்பிற்கான ஒரு சிறப்பு நடவடிக்கையாகும். இச் சட்டத்தின்படி, அவதூறு வழக்குகளில் சட்டத்தை யொட்டியும் வாதத்திற்குரிய பொருளையொட்டியும் தீர்ப்பு வழங்க ஜூரர்கள் உரிமைபெற்றனர். ஓர் அவதூறு வழக்கில் குற்றத்தின் தன்மையை முடிவுசெய்யும் உரிமை நீதிபதி களுக்கேயுரியதென்பது இச் சட்டத்தால் மாற்றப்பட்டது. ஒரு நீதிபதியின் தீர்ப்பைவிட ஒரு ஜூரியின் முடிவு அரசியல் ஆதரவிலிருந்து சுயேச்சையானதாக இருக்குமாவென்பதில் சமீபக்கால நிகழ்ச்சிகள் சில ஐயப்பாடுகளைக் கிளப்பலாம்.

1788-ஆம் ஆண்டின் பகர ஆட்சியாண்மை மசோதா[2] அரசியலமைப்பு வரலாற்று ஆய்வாளருக்குத் தனிச்சிறப் புடையதாகும். இந்த ஆண்டில் மூன்றாம் ஜார்ஜ் மனநோய்க்குள் ளானதால் பகர ஆட்சியாண்மைக்கு வழிசெய்யவேண்டிய தாயிற்று. விக்குகளோடும் ∴பாக்ஸ் என்பவரோடும் வேல்ஸ் இளவரசர் நெருங்கித் தொடர்புகொண்டிருந்தார். இயலு மாயின், இவர்களைப் பதவியிலமர்த்த இவர் முயன்றார். எனவே, பகர ஆட்சியாண்மை முறைப்படி வேல்ஸ் இள வரசரையே சாருமென ∴பாக்ஸ் வாதாடினர். பகர ஆளுநரை அமர்த்துவதும், இவருடைய அதிகாரங்களை வரையறை செய்வதும் பாராளுமன்றத்தின் பணியாகுமெனப் பிட் வலி யுறுத்தினர். இக்கருத்தை வேல்ஸ் இளவரசர் ஏற்றுக்கொண் டார். "இங்கிலாந்தின் அரியணையில் பிரன்ஸ்விக் மரபினரை அமர்த்திய புனிதமான கருத்துகளை அறிவதாகவும், பாராளு மன்றத்தில் கூடியுள்ள பெருமக்கள், மக்களின் பிரதிநிதிகள் ஆகியோரிடமிருந்து பெற்ற விருப்பினலன்றி, அதிகாரமெதை யும் செயல்படுத்துவதில்லை" யெனவும் இவர் கருத்துத் தெரி வித்தார். எனவே, பாராளுமன்றம் நடவடிக்கை எடுப்பதற் கான வழிகள் வகுக்கப்பட்டன. ஆனல், பாராளுமன்றம் அப்பொழுது கூட்டமாக அமரவில்லை. இதன் கூட்டத்திற்கான அழைப்பாணையை எப்படிப் பிறப்பிப்பது? அரச முத்திரை

[1] Fox

[2] Regency Bill

யின்கீழ் ஆணையர்களை அமர்த்தி, அவர்களைக்கொண்டு பாராளு மன்றம் கூட்டப்பட்டது. வரையறைக்குட்பட்ட அதிகாரங்க ளோடு, வேல்ஸ் இளவரசரைப் பக்ர ஆளுநராக அமர்த்தும் சட்டமொன்றை இருசபைகளும் நிறைவேற்றின. ஆனால், இதற்குள் அரசர் குணமடைந்துவிட்டார். 1788-ஆம் ஆண்டு நிகழ்ச்சியின் அடிப்படையில், 1840-ல் ஒரு சட்டம் இயற்றப் பட்டது.

அயர்லாந்தின் ஐக்கியச் சட்டத்[1]தோடு, பிட்டின் பதவி விலகலும் தொடர்புகொண்டிருந்தது. இச் சட்டத்தின் விவரங் களைப் பிறிதொரு அதிகாரத்தில் பார்க்கலாம். ஐக்கியச் சட்டம் நிறைவேறியபின், கத்தோலிக்கர்களின் தகுதியின்மை களைப்பற்றி இவர் கவனம் செலுத்தத்தொடங்கினர். ஆனால், இவருடைய திட்டங்களை லாப்பரோ பிரபு அரசருக்குக் காட்டிக் கொடுத்துவிட்டார். இந்தப் பிரச்சினையைப் பிட் வற்புறுத் தினால் அரசரின் உடல்நிலை குலைந்துவிடும் என அஞ்சினர். ஆகவே, இவர் 1801-ல் அமைச்சரவையிலிருந்து விலகிக் கொள்ளும் மாற்றுவழியை ஏற்றுக்கொண்டார். அரசரின் நெருங்கிய நண்பரான அடிங்டன்[2] என்பவர் பிரதம அமைச்ச ரானார். கேபினெட் அமைச்சரவையை உருவாக்குவதில் இவர் லாப்பரோவின் விருப்பையொட்டி நடந்துகொண்டார். பொறுப்பிற்கு ஏற்பப் பதவியிலிருக்கும் உறுப்பினரின் எண்ணிக்கை கேபினெட் உறுப்பினரின் எண்ணிக்கையை விட மிகலாகாதென இவர் விளக்கினர். இவ் வரசியலமைப்புக் கருத்து அன்றிலிருந்து பின்பற்றப்பட்டுவருகிறது. ∴பிரான்சுடனை போரை மீண்டும் தொடங்கவேண்டியிருந்த தால்—ஒரு வலிமையான ஆள் உடனடியாகத் தேவைப்பட்ட தால், 1804-ஆம் ஆண்டு மே மாதத்தில் அடிங்டன் பதவியி லிருந்து விலகினர். இப்பொழுது பதவியேற்றிருந்த பிட், அரச ரின் உடல்நிலை நலிவு கருதி, கத்தோலிக்கர்களின் சட்டத்தடை நீக்கப் பிரச்சினையை எழுப்புவதில்லையென உறுதிகூறினர். ஆனால், 1806 சனவரியில் பிட் காலமானார். ∴பாக்ஸ் என்பவரை வெளிநாட்டமைச்சராகக்கொண்ட, எல்லாத் திறமையாளர் களின் கலப்பு அமைச்சரவை ஒன்று பதவியேற்றது. 1806 செப்டம்பரில், ∴பாக்ஸ் காலமானதால் அமைச்சரவை கலைவிழந்தது. அடுத்த ஆண்டில் படை, நாவாய்ச் சேவை மேசோதாவில் கத்தோலிக்கர்களின் சட்டத்தடை நீக்கப்

[1] Act of Union

[2] Addington

பிரச்சினையை எழுப்பி, அமைச்சரவை மன்னரை அச்சுறுத்தியது. இப் பிரச்சினையை எழுப்புவதில்லையெனும் உறுதிமொழியை அமைச்சரவையிடமிருந்து அரசர் கோரினர். அமைச்சரவையின் மறுப்பின்பேரில் அரசர் அமைச்சரவையைப் பதவிநீக்கினர். இது விக்குகளின்மீதான இறுதி வெற்றியாகும். இவருடைய ஆட்சிக்கால இறுதிவரை டோரிகளின் அமைச்சரவை தொடர்ந்து பதவியிலிருந்துவந்தது. பிட் இறந்ததும் கிரன்வில்லி பிரதமரானர். இவரோடு சச்சரவிட்ட அரசர் இவரைப் பதவிநீக்கம் செய்துவிட்டு, போர்ட்லாண்டைப்[1] பிரதமராக்கினர். போர்ட்லாண்ட் இறந்ததும், அமைச்சரவை முடிவிற்கு வந்தது. பெர்சிவலின் தலைமையில் அமைச்சரவை உருவாகியது. 1812-ல் இவர் இறந்ததும் லிவர்பூல் பிரபு அமைச்சரவையை உருவாக்கினர். இந்த அமைச்சரவை பதினைந்தாண்டுகள் பதவியில் இருந்தது. எனவே, ∴பிரஞ்சுப் புரட்சிப் போர்களுக்குப்பின், இங்கிலாந்தில் பிட்நீங்கலாகப் பத்து டோரிப் பிரதம அமைச்சர்கள் பதவியிலிருந்திருக்கிறார்கள். கடைசி டோரி அமைச்சராக இருந்தவர் லிவர்பூல் பிரபு. இவர்கள் திறமையற்றவர்களாக இருந்தாலும், போரைத் தொடர்ந்து நடத்தினர்கள். பாராளுமன்றம் டோரிகளின் ஆதிக்கத்தில் இருந்தது. பொதுமக்கள் பெரும்பாலும் ∴பிரான்சை எதிர்த்தார்கள். ∴பிரெஞ்சுப் புரட்சியின் நினைவுகள் இங்கிலாந்தில் சீர்திருத்த இயக்கங்களை ஒடுக்கின. தொழில், வேளாண்மை ஆகிய துறைகளின் புரட்சியால் நேர்ந்த தீய விளைவுகளைத் தடுக்கும் முயற்சிகள் தடைப்பட்டன. விலைவாசி உயர்வாலும், வரிவிதிப்பாலும் மக்கள் அல்லற்பட்டனர். போருக்குப்பின்னரும் மக்களின் துன்பம் குறையவில்லை. ஆயினும், ∴பிரெஞ்சுப் புரட்சியின் விளைவால், மக்களாட்சிக் கருத்துகள் வளர்ச்சியடைந்தன. இதன் விளைவாக அமைதியின்மையும் சூழ்நிலையில் மாற்றமும் காணப்பட்டன. ஆனல், நிலையைச் சமாளிக்க அரசாங்கம் அடக்குமுறையைக் கையாண்டது.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Namier	:	Structure of Politics at the accession of George III
Butterfield	:	George III and the Constitution
Lecky	:	History of England
Emden	:	People and the Government
C. H. Mllwain	:	The American Revolution

[1] Portland

13. பாராளுமன்றச் சீர்திருத்தம்

பாராளுமன்றச் சீர்திருத்தப் போராட்டம் 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கியதெனலாம். நசித்துப்போன பரோக்கஸ்' தவருன முறையில் பயன்படுத்தியதை லாக் (Locke) 1690-ல் கண்டித்து எழுதினர். பொதுமக்கள் சபையில் இப் பொருள்பற்றி முதலில் வினவெழுப்பியவர் சர்.பிரான்சிஸ் டாஸ்வுட் ஆவார். பாராளுமன்றத்தில் சுயேச்சையாகவும் நேர்மையாகவும் மக்கள் பிரதிநிதித்துவம் பெறவேண்டுமென்பதை வலியுறுத்த அரசரின் சொற்பொழிவிற்கு இவர் ஒரு திருத்தம் கொண்டுவந்தார்.

மூன்றும் ஜார்ஜின் ஆட்சிக்காலத்தில் இப் பிரச்சினை காரசாரமாக விவாதிக்கப்பட்டது. அரசரின் அதிகாரங்களை மீண்டும்பெறப் பாராளுமன்ற உறுப்பினர்களை இவர் பயன்படுத்திக்கொள்ள முயன்றார். ஆகவே, நசித்துப்போன பரோக்களின் பிரதிநிதித்துவத்தை விலக்கிவிடச் சில அறிஞர்கள் முயன்றார்கள். மேலும், அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடனான சர்ச்சை, பிரதிநிதித்துவம் பெறுத நகரங்களிடையே, "பிரதிநிதித்துவமின்றி வரியளிப்பில்லை" யெனும் கருத்தை வலியுறுத்தத் தூண்டியதெனலாம். 1766-ல் நசித்துப்போன பரோக்களின் பிரதிநிதித்துவத்தை அகற்ற சாத்தம் மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தன. 1776-ல் ஜான் வில்க்ஸ், சிறப்பான சீர்திருத்தக் கருத்துகளைக் கொண்ட தீர்மானமொன்றைப் பொதுமக்கள் சபையில் கொணர்ந்தார். 1780-ல் அரசியலமைப்புத் தகவல் கழகம் ஒன்று நிறுவப்பட்டது. ரிச்மாண்ட் கோமகன்[1] 1780-ல், ஆண்டுதோறும் பாராளுமன்றங்கள், வயது வந்தோருக்கு வாக்குரிமை, சமமான தேர்தல் தொகுதிகள், சொத்துடைமைத் தகுதி நீக்கம், உறுப்பினருக்கு ஊதியம், இரகசிய வாக்களிப்பு ஆகிய கருத்துகளை ஒரு மசோதாவில் கோரினர்.

[1] Richmond, Duke

1782-க்கும் 1785-க்கும் இடையில் இளைய பிட் மூன்று மசோதாக்களைக் கொண்டுவந்தார். இவை அனைத்தும் தோல்வியுற்றன. இந்தச் சீர்திருத்த இயக்கத்தை வளர்க்க, 1792-ல் "மக்கள் நண்பர்களின் கழகம்" ஒன்று நிறுவப்பட்டது. ∴பிரெஞ்சுப் புரட்சியின் பெரும் விளைவுகளைக் கண்டு அஞ்சிய பர்க்கும், பிட்டும் இக் கழக அமைப்பை எதிர்த்தனர். 1793-க்கும் 1797-க்கும் இடைப்பட்ட காலத்தில் பல மசோதாக்களைச் சார்லஸ் கிரே[1] கொண்டுவந்தார். ஆனல், இவை தோல்வியுற்றன. 1819-ல், ஒரு மிதமான சீர்திருத்தப் பிரேரணையை ஜான் ரசல்[2] சபையில் கொண்டுவந்தார். ஆனல், டோரிகள் இப்பொழுது பதவியில் இருந்ததாலும், இவர் விக்குக் கட்சியினராக இருந்ததாலும் இப் பிரேரணை தோல்வியுற்றது. ஆனல், 1830 வரையில் இவர் இச் சீர்திருத்தப் பிரச்சினையைச் சபையின் கவனத்தில் வைத்திருந்தார்.

முதல் சீர்திருத்தச் சட்டம் (1832)

∴பிரெஞ்சுப்புரட்சி இங்கிலாந்தின் சீர்திருத்த இயக்கத்திற்கு வேகம் உண்டாக்கியது. வாக்குரிமையற்ற நடுத்தர வகுப்பினரும் ஆலைத் தொழிலாளரும் அரசியல் உரிமைபெற, பெரும் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். நான்காம் ஜார்ஜின் மரணம் பொதுத்தேர்தலுக்கு வழிசெய்தது. தேர்தலில் டோரிகள் தோல்வியுற்றனர். 1830-ல் விக்குகள் ஆட்சிப் பொறுப்பேற்றனர். 1831-ல் ஜான் ரசல் பிரபு முதல் சீர்திருத்த மசோதாவைக் கொண்டுவந்தார். ஓர் உறுப்பினர் பெரும்பான்மையில் மசோதாவின் இரண்டாவது வாசிப்பு சபையில் நிறைவேறினும், குழுவில் (Committee) மசோதா தோல்வியடைந்தது. கிரே பிரபுவின் வேண்டுகோளின் பேரில் அரசர் பாராளுமன்றத்தைக் கலைத்தார். அடுத்துநடந்த கடுமையான தேர்தலில் விக்குகள் பெரும்பான்மை பலம்பெற்றனர்.

இரண்டாவது முறையாகப் பொதுமக்கள் சபை சீர்திருத்த மசோதாவை 100 உறுப்பினர் பெரும்பான்மையில் நிறைவேற்றியது. ஆனல், பெருமக்கள் சபை மசோதாவைத் தள்ளிவிட்டது. 1831-ஆம் ஆண்டு இறுதியில் மூன்றுவது தடவையாக இம் மசோதா பொதுமக்கள் சபையில் நிறைவேறியது. இதைப் பெருமக்கள் சபையும் இரண்டாவது வாசிப்பிற்கு எடுத்துக்கொண்டது. ஆனல், பெருமக்கள்

[1] Charles Grey
[2] Lord John Russell

சபைக்குழுவில் இம் மசோதாவைத் திருத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டதை எதிர்க்கும் வகையில் கேபினெட் பதவி விலகியது. டோரித் தலைவர்கள் அமைச்சரவையை உருவாக்க முடியவில்லை. ஆகவே, கிரேபிரபுவை அரசர் பதவியேற்க அழைக்கவேண்டியதாயிற்று. இதே சமயத்தில், சீர்திருத்த மசோதா நிறைவேறுவதற்குத் தேவையான பிரபுக்களைப் படைத்துக்கொள்ள இவருக்கு அரசர் எழுத்துருவில் வாக் குறுதி அளித்திருந்தார். அரசரின் விருப்பின்பேரில், மசோதாவை எதிர்க்கும் போக்கை பிரபுக்கள் கைவிடுமாறு வெல்லிங்டன் கோமகன் கேட்டுக்கொண்டார். பிரபுக்கள் இணங்கவே, 1832-ஆம் ஆண்டு ஜூலை மாதம், முதல் பாராளு மன்றச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேறியது.

இரண்டு உறுப்பினர்களைச் சபைக்கு அனுப்பிவந்த 56 பரோக்கள் பிரதிநிதித்துவத்தை முற்றிலும் இழந்தன. பரோக்கள் ஒவ்வொன்றும் ஒரு பிரதிநிதியை இழந்தது. இந்த143இடங்களும், வட இங்கிலாந்தின் பெரிய நகரங்களுக்கு இப்பொழுது மாற்றப்பட்டன. இந்தச் சட்டம் வாக்குரிமையை விரிவாக்கியது. மாவட்டங்களின் எண்ணிக்கை 95-லிருந்து 159-ஆக உயர்த்தப்பட்டது. சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை இச் சட்டம் 658-ஆக உயர்த்தியது. பரோக் களில் 10 பவுன் மதிப்புள்ள வீட்டுடைமையாளர் வாக்குரிமை பெற, இச் சட்டம் வழிசெய்தது. மாவட்டங்களில் பத்துப் பவுன் படியுரிமை நிலத்தவர்களும், நீண்டகாலக் குத்தகை யாளரும், சில ஆண்டுகள் குத்தகைநிலம் வைத்திருப் போரும், ஆண்டிற்கு 50 பவுன் செலுத்தும் குத்தகையாளரும் வாக்குரிமை பெற்றனர். இவைகளிலிருந்து, தலத்தில் வாழ்வதையும் வரிசெலுத்துவதையும் இச் சட்டம் வாக்குரி மைக்கு வலியுறுத்தியுள்ளதை அறியலாம்.

ஸ்காட்லாந்திற்கும் அயர்லாந்திற்குமான சீர்திருத்தச் சட்டங்கள் இதே பாராளுமன்றத் தொடர்க்கூட்டத்தில் நிறைவேறின. 45-ஆக இருந்த ஸ்காட்டிஷ் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 53-ஆக உயர்ந்தது. இவைகளில் மாவட்டங் களுக்கு 30 பிரதிநிதிகளும், நகரங்களுக்கும் பரோக்களுக்கு மன 23 பிரதிநிதிகளும் ஒதுக்கப்பட்டனர்.

1832-ஆம் ஆண்டின் சீர்திருத்தச்சட்டம் முழுமையான மக்களாட்சியை நிறுவிவிடவில்லையெனலாம். இக் காலத்திய பாராளுமன்றத்தில் காணப்பட்ட பல ஊழல்களையும் குறை

பாடுகளையும் அகற்றுவதே இச் சீர்திருத்தச் சட்டத்தின் நோக்கமாக இருந்தது. நசித்துப்போன பரோக்களை இச் சட்டம் ஒழித்தது; 22 பெரிய நகரங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளித்தது. ஆனால், நாட்டைச் சமமான தொகுதிகளாக இச் சட்டம் பிரிக்கவில்லை. பெரும் நிலக்கிழார்களிடம் நிலை பெற்றிருந்த இத் தேர்தல் அதிகாரம் சிறிய நிலக்கிழாரிடமும் நடுத்தர வகுப்பினரிடமும் சென்றடைந்தது. இதன் பயனாக நடுத்தர வகுப்பினர் அதிகாரமேற்கவில்லை.

ஏற்கனவே இருந்த வாக்காளர்களோடு இப்பொழுது 217,000 வாக்காளர்கள் சேர்ந்தனர். வாக்காளரின் எண்ணிக்கையில் 50% அதிகரிப்பு காணப்பட்டது. எனினும், அரசியலமைப்பு முறையில் இச் சீர்திருத்தச் சட்டம் சில அடிப்படையான விளைவுகளை ஏற்படுத்தியது. தேர்தல்முறை நடைமுறைக்கு வந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரு நிலக்கிழார்களாக இருந்தாலும், இவர்கள் தொகுதியினரின் கருத்துகளுக்கு மாறுபட்ட கருத்துகளைக்கொண்டு செயல்பட முடியாதுபோயிற்று. இறுதியான இறைமையும் வாக்காளர்களிடம் நிலைபெற்றிருந்தது. மேலும், அமைச்சரவையை உருவாக்கிச் செயல்படுத்தும் அதிகாரத்தை அரசர் இழந்துவிட்டார். நான்காம் வில்லியம் இந்த உண்மையை இரண்டாண்டிற்குள் கண்டுகொண்டார். பொதுமக்கள் சபைக்கு மக்கள் விக்குகளைப் பெருமளவில் தேர்ந்தெடுத்து அனுப்பிய தால் டோரிக்கட்சியினராகிய பீல்[1] இவர் தொடர்ந்து பிரதம அமைச்சராக வைத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, பெரும்பான்மை ஆதரவைப் பெற்றிருக்கும் கட்சியினரிலிருந்து கேபினெட்டை உருவாக்கவேண்டுமெனும் நிலை ஏற்பட்டது. எனவே, கேபினெட், கட்சியோடு இணைப்புக்கொண்டதாகிவிட்டது. இறுதியாக, வாக்காளர்களிடம் அரசியல் அதிகாரம் விடப்பட்டது, பிரதிநிதித்துவ நிறுவனமாகிய பொதுமக்கள் சபையின் நிலையை உயர்த்தியது. பெருமக்கள் சபையின் நிலை தாழ்ந்தது.

1832-க்குப்பின், புதிய இரவலர் சட்டம் (1834), நகராட்சிக் கூட்டு நிறுவனச் சட்டம் (1835) போன்ற மக்கள் ஆதரவுபெற்ற பல சட்டங்கள் நிறைவேறின. இக் காலத்தில் பேருருமைக்கிளர்ச்சி இயக்கம் தோன்றியது. தொழிலாளருக்கன்றி, நடுத்தர வகுப்பினருக்கும் 1832-ஆம் ஆண்டின் சீர்திருத்

தச்சட்டம் அதிகாரத்தை மாற்றியதைக் கண்டு ஏமாற்ற மடைந்த தொழிலாளர்கள் இவ் வியக்கத்தைத் தோற்று வித்தார்கள்.

பிற்காலத்திய சமூக சனநாயக இயக்கத்தைப்போல் இப் பேருரிமை இயக்கமும், சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங் களைச் செய்ய அரசியல் நிறுவனங்களைக் கைப்பற்றவேண்டு மென்ற கருத்தின் அடிப்படையில் தோன்றியது. வயது வந்தோருக்கு வாக்குரிமை, ஆண்டிற்கொரு பாராளுமன்றம், சொத்துடைமைத் தகுதிநீக்கம், ஒரே மாதிரியான தொகுதி கள், உறுப்பினருக்கு ஊதியம், வாக்குச்சீட்டுவழி வாக் களிப்பு போன்றவை இந்த இயக்கத்தாரின் கோரிக்கை களாகும்.

வன்முறையின்றித் தொழிலாளர்களின் நிலையை உயர்த் தப் படிப்படியாக மக்களின் கருத்தை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட லண்டன் பணியாட்கள் கழகத்திலிருந்து இந்த இயக்கம் வளர்ச்சியடைந்தது. இவ் வியக்கத்தின் மெத்தனப் போக்கைக் கண்டிக்கும் வகையில் இது இரண்டுபட்டது. அரசியலமைப்பு முறையில் நின்று செயல்பட்டுக் குறிக்கோளை எட்டவும், வன்முறையில் குறிக்கோளையடையவும் இவை பிளவுபட்டுச் செயல்படத் தொடங்கின.

தானியச்சட்ட ஒழிப்பும் (1846) இன்னும் பிற சீர்திருத்தங் களும் தொழிலாளர்களின் உடனடியான தேவைகளை நிறைவு செய்வதாக இருந்ததால், இவ் வியக்கத்தின் வேகம் குறைந்தது.

ஆயினும், வாக்குரிமையை விரிவுபடுத்துவதற்கான கோரிக் கைகளுக்கு மக்கள் பெரும் ஆதரவுகாட்டினர்கள். இவை களுக்கு இணங்கவேண்டுமென்பதும் இப்பொழுது தெளிவா யிற்று. பெருங்கூட்டத்தில் மக்களின் விருப்பத் தேர்வினை வெளியிடுவதற்குப் பதிலாக, இரகசியமாக வாக்களிக்கும் திட்டங்கள் 1833-க்குப்பின் மேற்கொள்ளப்பட்டன. சொத் துடைமை அடிப்படையில் இருந்த வாக்குரிமைத் தகுதியைச் சீர்திருத்தக்காரர்கள் மாற்றியமைப்பதில் 1838-ல் வெற்றி கண்டனர். பின், 1858-ல் இத் தகுதியை நீக்கினர். வாக்குரி மையை விரிவுபடுத்தவும், பாராளுமன்றத்தின் இடங்களை மறு ஒதுக்கீடு செய்யவும் பல திட்டங்கள் உருவாயின. 1852-லும் 1854-லும் ரசல் பிரபு பல மசோதாக்களைக் கொண்டுவந்தார்.

1859-ல் டிஸ்ரெலி[1]யும் ஒரு மசோதாவைக் கொணர்ந்தார். 1860-ல் ஜான் ரசல் மற்றொரு மசோதாவைக் கொண்டுவந்தார். இறுதியாக, எதிர்பாராத வகையில் டிஸ்ரெலி பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். இதுவே, பின், 1867-ல் சீர்திருத்தச் சட்டமாக நிறைவேறியது.

1867-ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம்

டர்பி பிரபு[2]வின் கன்சர்வேடிவ் அமைச்சரவை நிறைவேற்றிய இச் சட்டம் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் மேலும் வாக்குரிமையை விரிவாக்கியது.

பரோக்களில் ஓராண்டு வசித்து, இரவலர் வரி செலுத்திய எல்லாக் குடியிருப்புமனைகளின் சொந்தக்காரர்களுக்கும், ஆண்டிற்குப் பத்துப்பவுன் வாடகையுள்ள விடுதிகளில் தங்கியிருந்தவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. மாவட்டங்களில் 12 பவுன் செலுத்திக் குடியிருப்பு மனைகளில் வாழ்வோர் வாக்குரிமை பெற்றனர்.

இச் சட்டத்தால் பதினேரு பரோக்கள் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமையை இழந்தன. இதற்குமுன், இரு உறுப்பினர்களைத் தேர்ந்தனுப்பும் உரிமைபெற்றிருந்த பரோக்களில் 35 பரோக்கள் ஓர் உறுப்பினரையே அனுப்பவேண்டியதாயிற்று. இவ்வாறு கிடைத்த இடங்களில் இருபத்தைந்தைக் கவுண்டிகள் பெற்றன. பன்னிரண்டு புதிய பரோக்கள் படைக்கப்பட்டன. லண்டன், எடின்பரோ, கிளாஸ்கோ பல்கலைக்கழகங்கள் பொதுமக்கள் சபையில் பிரதிநிதித்துவம் பெற்றன. சில மாநகரங்களுக்குக் கூடுதலாக இடங்கள் ஒதுக்கி வழங்கப்பட்டன. சில மாவட்டங்களும் இப்பொழுது கூடுதலாகப் பிரதிநிதிகளைப் பெற்றன.

முதல் சீர்திருத்தச் சட்டத்தால் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 217,000 பேர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஐக்கிய முடியரசு[3] முழுவதிலும் 455,000 பேர்கள் வாக்குரிமை பெற்றார்கள். இரண்டாவது சீர்திருத்தச் சட்டத்தால் நகரங்களில் வாழ்ந்த தொழிலாளர்கள் வாக்குரிமை பெறமுடிந்தது. இதன் பயனாக, வாக்காளரின் எண்ணிக்கை ஒரு மில்லியனாக

[1] Disraeli
[2] Derby, Lord
[3] United Kingdom

உயர்ந்தது. "1918-ஆம் ஆண்டிற்கு முந்திய சீர்திருத்தச்சட்டங்களில் இது புரட்சிகரமான"தென்று ஹரன்சா[1] என்பவர் கூறுகிறார். நிலக்கிழாரின் ஆட்சியை இச் சட்டம் ஒழித்தது. இதற்குப்பின், அரசாங்கம் மக்களின் நலன்கருதியே நடத்தப்பட்டது. வாக்காளர் தொகுதியின் விரிவாக்கக் காரணமாக, கட்டாயத் தொடக்கக்கல்வியின் நீட்டிப்பையும், கட்சி யமைப்பையும் இச் சட்டம் வலியுறுத்தியது. இச் சட்டத்தால் வாக்காளர்களின் எண்ணிக்கை இரண்டு மில்லியனாக உயர்ந்தது. பொதுமக்கள் சபையின் இடங்களும் மறு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

ஸ்காட்லாந்திற்கும் அயர்லாந்திற்குமான சீர்திருத்தச் சட்டங்கள் உடனடியாக நிறைவேறின. ஸ்காட்லாந்திய மாவட்டங்களில் ஆண்டிற்கு 5 பவுன் வருமானம் அளிக்கும் நிலம், மரபுவழிச்சொத்துகள் ஆகியவற்றை உடையவர்கள் வாக்குரிமை பெற்றார்கள். பதினான்கு பவுன்கள் செலுத்திக் குடியிருப்பு மனைகளில் வசித்தவர்களும் இவ் வுரிமையைப் பெற்றார்கள். ஸ்காட்லாந்திய பரோக்களில், குடியிருப்பு உள்ளவர்களும், விடுதிகளில் தங்கி வசிப்பவர்களும் வாக்குரிமை பெற்றனர். அயர்லாந்தின் மாவட்டத்தொகுதிகளில் மாற்றமெதுவும் செய்யப்படவில்லையெனினும், பரோக்களில் நான்கு பவுன் வாடகை கொடுத்துக் குடியிருப்பு மனைகளில் வாழ்வோர் வாக்குரிமை பெற்றார்கள்.

சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவ உரிமையை இச் சட்டம் தற்காலிகமாகவும் அரைகுறையாகவும் அளித்துள்ளது. சில மாவட்டங்களிலும் பரோக்களிலும் மூன்று பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய சட்டம் வகைசெய்தது. இதன்படி, மான்செஸ்டர் நகரமும், லிவர்பூல், பர்மிங்ஹாம், லீட்ஸ் ஆகிய பரோக்கள் ஒவ்வொன்றும் மூன்று பிரதிநிதிகளை அனுப்பும் உரிமைபெற்றன. மூன்று பிரதிநிதிகளைக்கொண்ட எந்த ஒரு மாவட்டத்திலோ, பரோவிலோ தேர்தல் நடந்தால் ஒரு வாக்காளர் இருவருக்குமேல் வாக்களிக்கலாகாதென இச் சட்டத்தின் எட்டாவது, ஒன்பதாவது பிரிவுகள் குறிப்பிட்டன. இதேபோல் நான்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டிய லண்டன் மாநகரில் ஒருவர், இரண்டு பிரதிநிதிகளுக்கு மட்டுமே வாக்களிக்கமுடியும்.

[1] Heranshaw

ஆனால், தேர்தல் ஊழல்களை ஒழிக்க மேல்நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய நிலை இருந்தது. லஞ்சம், ஊழல், கட்டாயம், அமளி, வன்முறை ஆகியவை பொதுத்தேர்தலில் மலிந்து காணப்பட்டன. எனவே, 1872-ஆம் ஆண்டில் இரகசிய வாக்களிப்புச் சட்டத்தைக் கிளாட்ஸ்டன் நிறைவேற்றினர். அரசியல் அலுவல்கள் வெளிப்படையாக நடைபெறவேண்டுமெனப் பெரு மக்கள் சபை வாதிட்டு, இச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தது. ஆயினும், எதிர்ப்பிற்கிடையில் இச் சட்டம் நிறைவேறியது. சிறிதுகாலம் மட்டுமே குத்தகைநிலம் வைத்திருந்தவர்களுக்கு முதல் சீர்திருத்தச் சட்டம் வாக்குரிமை அளித்தது. ஆனால், இவர்கள் நிலக்கிழார்களின் விருப்பத்திற்கேற்ப அஞ்சி, வாக்களிக்கவேண்டிய நிலை இருந்தது. இத்தகைய அச்சுறுத்தலை இச் சட்டம் ஒழித்துக்கட்டியது. வேட்புப்பத்திரம் தாக்கல் செய்யும் தற்கால முறையை இச் சட்டம் புகுத்தியது. இதனால், பொதுக்கூட்டமொன்றில் வேட்பாளரை அறிவித்து அவருக்கு எதிர்ப்பில்லையெனில் அவரையே ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கும் பழையமுறை கைவிடப்பட்டது.

தேர்தலோடு தொடர்புடைய மற்ற ஒழுங்கீனங்கள் தொடர்ந்திருந்துவந்தன, தொகுதியின் உருவளவிற்கேற்பத் தேர்தல் செலவுகள் இருக்கவேண்டுமெனவும், பணம் செலவிடப்படவேண்டிய குறிப்பிட்ட இனங்களை முறைப்படுத்தவும் 1883-ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் ஊழல் நடைமுறை மசோதாவைச் சட்டமாக்கினர். மேலும், ஊழல்கள் நுட்பமாக வரையறை செய்யப்பட்டன. தேர்தல் பதிலாட்கள் சட்டப்படி கணக்குக்காட்டும் பொறுப்புடையவர்களாயினர். இச் சட்டத்தை மீறுபவர்கள் கடுமையான தண்டத்திற்குள்ளாகவேண்டும். ஓரளவு வசதியுள்ளவர்கள் இனிமேல் தேர்தலில் போட்டியிடலாம். 1880-ல் தேர்தல் செலவு ஒரு வாக்காளருக்கு ஒரு பவுனாக இருந்தது. 1885-ல் 3 ஷில்லிங்காகக் குறைந்தது. இன்று இச் செலவு ஏறத்தாழ ஒரு வாக்காளருக்கு 7 ஷில்லிங்காக இருக்கிறது. எல்லோரும் வாக்குரிமை பெற்றதும் இதில் பெரும் மாறுதல் ஏற்பட்டது.

1832-ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம் வாக்காளர் பதிவிற்கு ஏற்பாடு செய்ததெனினும், இதற்கென ஒரு நிறுவனத்தை இச் சட்டம் நிறுவவில்லை. அரசியல் கட்சிகள் வாக்காளர்களைப் பதிவுசெய்ய ஏற்பாடு செய்துகொண்டன. ஆனால், 1878-க்குப்பின், பல சட்டங்களால் வாக்காளர் பதிவிற்

கான நிறுவனங்கள் படைக்கப்பட்டன. இன்று வாக்காளர்களின் தகுதிப்பாடுகளைப் பதிவு அலுவலர்கள் முடிவுசெய்யலாமெனினும், பாதிக்கப்பட்டவர்கள் மாவட்ட நீதிமன்றத்திடம் முறையிடலாம்.

1884-ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்

1867-ஆம் ஆண்டுச்சட்டம் நகர்ப்புறத் தொழிலாளருக்கு வாக்குரிமையளித்ததெனினும், நாட்டுப்புறத் தொழிலாளருக்கு இவ் வுரிமையை மறுத்துவிட்டது. 1884-ஆம் ஆண்டுச் சீர்த்திருத்தச் சட்டம் நாட்டுப்புறத் தொழிலாளருக்கு வாக்குரிமை அளித்தது. பாராளுமன்றப் பரோ எல்லைக்கப்பால் வாழ்ந்த சுரங்கத் தொழிலாளர்களுக்கும் இச் சட்டம் வாக்குரிமை அளித்தது. இதன் விளைவாக, வாக்காளரின் எண்ணிக்கை மேலும் இரண்டு மில்லியனாக உயர்ந்தது. இதற்கேற்ப, பாராளுமன்றத்தின் இடங்களை மறு ஒதுக்கீடு செய்யவேண்டியதாயிற்று. எனவே, 1885-ஆம் ஆண்டில் இடங்களின் மறு ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இரட்டை உறுப்பினர் தொகுதிகள் கைவிடப்பட்டன. இருபத்திரண்டு நகரங்களும், ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களும் மட்டுமே உறுப்பினர்களைச் சபைக்கு அனுப்பிவந்தன. 1867-ல் நிறுவப்பெற்ற மூன்று உறுப்பினர் தொகுதிகள் சிறிதுகாலமிருந்து இப்பொழுது மறைந்து போயின. மற்றப் பரோக்களும், மாவட்டங்களும் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளாக அமைக்கப்பட்டன. சிறிய பரோக்கள் தொடர்ந்து ஒரு பிரதிநிதியை அனுப்பிவந்தன. பெரியனவாக இருந்தவை மூன்று அல்லது நான்கு தொகுதிகளாகப் பிரிந்தன. இதேபோல், ஒற்றை உறுப்பினர் தொகுதிகளாக மாவட்டங்களும் பிரிந்தன.

இச் சட்டங்களுக்குப்பின், விரிவான வாக்குரிமைக்கான கோரிக்கைகளும் எழுந்தன. இவைகளில் மிக முக்கியமான கோரிக்கை, பெண்கள் வாக்குரிமைபற்றியதாகும். இந்நிலையில் பாராளுமன்றச் சீர்திருத்தப் பிரச்சினையை ஆராயவும் மாநாடு ஒன்றைக் கூட்டவும் 1916-ல் முடிவுசெய்யப்பட்டது. இப் பிரச்சினையை ஆராய, சபாநாயகரைத் தலைவராகக்கொண்ட இரு சபைகளின் உறுப்பினர் 30 பேர்களைக்கொண்ட ஒரு குழு அமர்த்தப்பட்டது. இக் குழுவின் திட்டத்தைச் சபை முழுமையாக ஏற்றுக்கொண்டதெனலாம். இத் திட்டமே 1918-ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமாக நிறைவேறியது.

இச் சட்டம் தீவிர மாற்றங்களைச் செய்தது. பல தொகுதி களுக்கான இடங்களைப் பறித்து, இவைகளைப் பிறவற்றிற்குப் பகிர்ந்தளித்தது. இந்தச்சட்டம் சபையின் உறுப்பினர் தொகையில் (658) மாற்றம் செய்யவில்லை. 455,000 மக்கள் வாக்குரிமை பெறுதற்கான அளவில் சில மாறுதல்களை 1832-ஆம் ஆண்டுச்சட்டம் செய்தது. 1867-லும் சபையின் உறுப்பினர் தொகை பழையபடியே இருந்தது. ஆயினும், வாக்காளர் தொகை 1,080,000-ஆகக் கூடியது. 1884, 1885-ஆம் ஆண்டுச்சட்டங்கள் வாக்காளர்களை 2,000,000-ஆகப் பெருக்கின. 658-ஆக இருந்த உறுப்பினர் எண்ணிக்கையும் இப்பொழுது 670-ஆக உயர்ந்தது. 1918-ஆம் ஆண்டின் சீர் திருத்தச் சட்டம் வாக்காளர் பட்டியலில் ஏறக்குறைய 6,000,000 பேர்களைக் கூட்டியது. பெண்களுக்கு இச் சட்டம் வாக்குரிமை அளித்தது. இதனால், வாக்காளர்களுடைய தொகை 16,000,000-ஆக உயர்வதற்கு இச் சட்டம் வழி வகுத்தது.

1. இச் சட்டம் (1918) வாக்களிக்க, எளிய தகுதியைப் புகுத்தியது. ஆறுமாதம் ஓரிடத்தில் தங்கி வசித்தல் அல்லது தொழில் மனைகளில் தங்கியிருத்தல் இத் தகுதிகளாகும்.

2. முப்பது வயதிற்குமேற்பட்ட பெண்களுக்கு வாக் குரிமை அளிக்கப்பட்டது. வாக்குரிமை பெறும் பெண் அல்லது இவரது கணவர் தல ஆட்சிக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் தகுதி பெற்றிருக்கவேண்டும்.

3. இரவலர் இடர்காப்புப் பெறும் தகுயின்மையை இச் சட்டம் நீக்கியது.

4. பொதுத்தேர்தலும், எல்லாத் தேர்தல்களும் ஒரே சமயத்தில் நடத்தப்படவேண்டுமென்றும், வாக்காளர் எவரும் இரண்டு தொகுதிகளுக்குமேல் எத்தொகுதியிலும் வாக்களிக்க லாகாதெனவும் இச் சட்டம் குறிப்பிட்டது.

5. தேர்தல் அலுவலரிடம் வேட்பாளர் ஏமவைப்பு நிதி யாக 150 பவுன் கட்டவேண்டும். வாக்குப்பதிவில் பங்கு பற்றியவர்களின் வாக்குகளில் எட்டில் ஒரு பங்கினை இவர் பெறத்தவறினால், ஏமவைப்பு நிதியை இவர் இழக்கவேண்டும்.

6. மக்கள் தொகையில், 70,000 பேர்களுக்கு ஓர் உறுப் பினர் என்ற அடிப்படையில் இது இடங்களை மறு ஒதுக்கீடு செய்தது.[1]

[1] Harvey & Bather, 'The British Constitution,' p. 61

இச் சட்டம் வாக்காளர்களின் தொகையை 8 மில்லியனிலிருந்து 21 மில்லியனுக உயர்த்தியது. ஆண்களோடும் பெண்களோடும் சமவாக்குரிமை பெற்றபொழுது வாக்காளரின் தொகை 28 மில்லியனுகப் பெருகியது.

1948-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பரவலான அமைப்பை மாற்றியமைத்தது. வாக்களிக்க, தொழில் மனைக் குடியிருப்புத் தகுதியை இச் சட்டம் அகற்றியது. பல்கலைக்கழகத்திற்காக இடங்களையும் இது நீக்கியது. எவரும் இனிமேல் ஒன்றுக்குமேற்பட்ட வாக்குகள் பெறமுடியாது. மக்களின் இடப்பெயர்ச்சி காரணமாகத் தொகுதிகள் மாற்றியமைக்கப்படுதல் அவசியமாயிற்று. 1944-ஆம் ஆண்டு இட மறு ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி, எல்லை ஆணைக்குழுக்கள் அமர்த்தப்பட்டன; இவை தவருமல் அறிக்கை கொடுக்க வேண்டும். 1969-ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, வாக்களிப்பதற்கான வயதுத்தகுதி 18-ஆகக் குறைக்கப்பட்டது.

ஆகவே, கடந்த 130 ஆண்டுகளாகத் தேர்தல் முறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவந்ததை நாம் காணுகிறோம். சமுதாயப் பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாக, எண்ணிக்கையின் பிரதிநிதித்துவத்தையும், சொத்துடைமைப் பிரதிநிதித்துவத்திற்கேடாகக் குடிமக்களின் பிரதிநிதித்துவத்தையும் இங்குக் காணமுடிகிறது. ஒருவருக்கு ஒரு வாக்கு என்னும் சமதர்ம நோக்கில் வரையறைக்குட்பட்ட வாக்குரிமை முறையொன்று இங்கிலாந்தில் வளர்ச்சியடைந்தது. இத்துடன், ஒற்றை உறுப்பினர் தொகுதிகள் புகுத்தப்பட்டு, ஊழல்கள் களையப்பட்டுள்ளன.

வாக்களிப்பதற்கான இப்போதைய தகுதிகள்

ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒருவர் வாக்களிக்கும் தகுதி பெறுகிறார். வாக்குப் பதிவு அலுவலர், வாக்காளர் பட்டியலை ஆண்டுதோறும் தயாரிக்கிறார். வாக்காளர் பட்டியலில் இடம்பெற, ஒருவர் தொகுதியில் ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து வசிப்பவராக இருக்கவேண்டும்; வயதும் 18-க்கு மேலாக இருக்கவேண்டும்; பிரிட்டிஷ் குடிமகனை அல்லது ஐரிஷ் குடிமகனை ஒருவர் இருக்கவேண்டும். அல்ஸ்டர் மாகாணத்தவராக இருந்தால் தேர்தலுக்குமுன் தொடர்ந்து ஓரிடத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். சிலருக்கு வாக்களிக்கும் தகுதிகள் கிடையா. பெரு

மக்கள், வெளியார், முழுமூடர், பித்தர், அடாப்பழிக்குற்றத் திற்காகப் பன்னிரண்டு மாதச் சிறைத்தண்டனை அனுபவித்த குற்றவாளிகள், தேர்தல் ஊழல் வழக்குகளினால் தண்டிக்கப் பட்டுத் தகுதி இழந்தவர்கள் ஆகியோர் வாக்கு அளிக்கும் உரிமையை இழந்துவிடுகிறார்கள்.

உறுப்பினருக்கான தகுதிகள்

பொதுமக்கள் சபை உறுப்பினருக்கான தனிச்சிறப்புத் தகுதிகள் கிடையா. 21 வயதுக்கு உட்பட்டவர்கள் இச் சபையில் உறுப்பினராக இருக்கமுடியாது. அரசாங்க ஒப்பந்தக் காரர்கள், அரசப் பதிலாட்கள் (Sheriffs), சிவில் பணியாளர்கள், ஆங்கிலத் திருச்சபையின் குருமார்கள், ஸ்காட்லாந்தின் திருச் சபைக் குருமார்கள், ரோமன் கத்தோலிக்கக் குருமார்கள், ஆங்கில, ஸ்காட்லாந்திய பிரபுக்கள் ஆகியோர் பொதுமக்கள் சபையில் உறுப்பினராதற்குத் தகுதிபெறவில்லை. ஒரு தொகுதியின் பிரதிநிதியாக இருக்கவிரும்பும் வேட்பாளர் அத் தொகுதியில் வசிப்பவராக இருக்கவேண்டியதில்லை. தல பிராந்திய மனப்பான்மைகளிலிருந்து இது உறுப்பினர்களைக் காப்பாற்றியது.

1911-க்குமுன், பொதுமக்கள் சபையின் உறுப்பினர்கள் ஊதியம் பெற்றுக்கொண்டதில்லை. அமைச்சர்களாகவும், சபையின் அலுவலர்களாகவும், அரசியாரின் அரண்மனை அலுவலர்களாகவும் இருந்து ஊதியம் பெறுபவர்களைத் தவிர, மற்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டிற்கு 400 பவுன்களை 1911-க்குப் பிறகு ஊதியமாகப் பெற்றார்கள். 1946-க்குப்பின், உறுப்பினரின் ஊதியம் ஆண்டிற்கு 1000 பவுன்களாக உயர்த்தப்பட்டது.

இன்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆண்டிற்கு 3250 பவுன்களை ஊதியமாகவும், 500 பவுன்கள்வரை செயலகச் செலவிற்கான தொகையாகவும் பெற்றுக்கொள் கிறார். இலவசத் தபால் வசதிகளையும், சொந்த ஊருக்கும் தொகுதிக்கும் பாராளுமன்றத்திற்கும் சென்று திரும்ப இலவச முதல்வகுப்பு ரயில்பயண வசதியையும் இவர் பெற்றிருக் கிறார்.

தொகுதியைப் பேணுதற்கு ஒரு கன்சர்வேடிவ் வேட்பாளர் ஆண்டிற்கு 1500 பவுன்கள் செலவிட வேண்டியிருக்கிறதென் றும், ஒவ்வொரு தேர்தலிலும் 800 பவுன்கள் செலவிட வேண்டி

யுள்ளதென்றும் ஜென்னிங்ஸ் மதிப்பிட்டுள்ளார். சராசரியாக, கன்சர்வேடிவ் வேட்பாளர் ஒருவர் 778 பவுன்களையும், தொழிற் கட்சி வேட்பாளர் 697 பவுன்களையும், லிபரல்கட்சி வேட்பாளர் 459 பவுன்களையும் 1951-ஆம் ஆண்டுத் தேர்தலில் செலவிட்டனரென்று ரோஸ் என்பவர் கணக்கிட்டுள்ளார்.[1] முற்காலத்தில் கன்சர்வேடிவ் வேட்பாளர்கள் தேர்தல் செலவுகளை அவர்களே ஏற்றுக்கொண்டனர். ஆனால், இப்பொழுது கன்சர்வேடிவ் வேட்பாளர் ஒருவர், தொகுதிச்சங்கத்திற்கு 25 பவுன்களுக்கு அதிகமாகக் கொடுக்க அனுமதிப்பதில்லை. கட்சி நிதிக்கும் 50 பவுன்களுக்கு அதிகமாகக் கன்சர்வேடிவ் உறுப்பினர் அளிப்பதில்லை. வேட்பாளரின் தேர்தல் செலவுப் பொறுப்பு, தொகுதிச்சங்கத்தைச் சார்ந்ததாகும். இதே போல் தொழிற்கட்சியும் விதிசெய்துகொண்டுள்ளது. தனிப்பட்டவரோ, அமைப்போ ஒரு பாராளுமன்ற நகரத் தொகுதிக்கு ஆண்டிற்கு 200 பவுன்களுக்கு அதிகமாக அளிக்க, கட்சி அனுமதிப்பதில்லை. தொழிற்சங்கம் ஒருவரை வேட்பாளராக நிறுத்தினால் சட்ட வரம்புகளுக்குட்பட்டு இது செலவிட வேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகள் லிபரல் கட்சிக்கும் மற்றச் சிறிய கட்சிகளுக்கும் கிடையா. இக் கட்டுப்பாடுகளின் பயன்கள் பாராட்டற்குரியன. 1949-ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் தேர்தல் செலவுகள் மீதும் மோட்டார் கார் பயன்பாட்டின் மீதும் கடுமையான வரையறைகளை விதித்துள்ளது. மாவட்ட அல்லது நகரத்தொகுதியிலிருந்து போட்டியிடும் வேட்பாளர் 450 பவுன்களைச் செலவிடவும், நகரத்தொகுதி வாக்காளர் ஒருவருக்கு இரண்டு பென்சும், மாவட்டத்தொகுதி வாக்காளர் ஒருவருக்கு 1½ பென்சும் என்ற கணக்கின் அடிப்படையில் செலவிடவும் இச் சட்டம் அனுமதித்துள்ளது.

ஒற்றை உறுப்பினர் தொகுதிகள் அடிப்படையில் சாதாரண பெரும்பான்மை முறையில் தேர்தல்கள் இங்கிலாந்தில் நடைபெறுகின்றன.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Turberville : House of Lords in the 18th Century

Trevor William : Cabinet in the 18th Century

[1] Ross Political Quarterly, 1952, P. 178

Emden : People and the Constitution
G. S. Veitch : Genesis of Parliamentary reform
Lecky : History of England
Burke : Select Works (Payne)
J. R. M. Butler : Passing of the Great Reform Act
C. Scymsur : Electoral Reform in England History and Wales

14. பெருமக்கள் சபையும் பொதுமக்கள் சபையும்

முன்னதிகாரங்களில் இவ் விருசபைகளையும்பற்றிப் பரவலாகச் சில செய்திகளைக் கூறியிருப்பினும், இங்குச் சில செய்திகளைத் தொகுத்துரைப்பது அவசியமாகும். முதலில் நாம் பெருமக்கள் சபையை எடுத்துக்கொள்ளுவோம். எட்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலத் தொடக்கத்தில் இச் சபையில் 43 சமயச்சார்புடைய பிரபுக்களும் 36 உலகியல் பிரபுக்களும் இருந்தார்கள். மடங்களின் ஒழிப்பிற்குப்பின், 20 திருமடத் தலைவர்கள் சபையிலிருந்து மறைந்துபோயினர். மேற்றிராணியார்களின் எண்ணிக்கை இக் காலத்திலிருந்து 26-ஆக இருந்தது. 1800-லிருந்து (1869-ல்) ஐரிஷ் திருச்சபை அகற்றப்படும்வரை நான்கு ஐரிஷ் மேற்றிராணியார்கள் இச் சபையில் இடம்பெற்றிருந்தார்கள். இரண்டு அதிமேற்றிராணியார்களும், டர்ஹாம், வின்செஸ்டர், லண்டன் ஆகியவைகளின் மேற்றிராணியார்களும் தொடர்ந்து சபையின் உறுப்பினர்களாக இருந்துவந்துள்ளனர். பதவி காலியாகும் பொழுது மற்ற மேற்றிராணியார்கள் அப் பதவிகளை முறைப்படி நிரப்புவார்கள். சட்டப்பிரபுக்களைத்தவிர, இவர்கள் மரபுவழி வாராத உறுப்பினர்களாவர். சமயச் சார்பில்லாத பிரபுக்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்துவந்தது. டியூடர்கள் 40 பேர்களை உறுப்பினராக்கினர். முன்னிலை மீட்சிக்காலத்தின்போது இவர்களின் எண்ணிக்கை 140-ஆக உயர்ந்தது. ஒரு நூற்றாண்டிற்குப்பின், 200-ஆக உயர்ந்தது. மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் ஆட்சிக்காலத்தின்போது 116 புதிய பிரபுக்கள் படைக்கப்பட்டனர். இவர்களில் பெரும் பகுதியினரைப் பிட் பிரபுக்களாகப் படைத்தார். அயர்லாந்து ஐக்கியச்சட்டத்தால் 28 பிரபுக்கள் சேர்க்கப்பட்டனர். 19-ஆம் நூற்றாண்டின்போது ஏறக்குறைய 400 பிரபுக்கள் படைக்கப்பட்டுச் சபையில் அமர்த்தப்பட்டனர். மரபுவழி முறிவு காரணமாகப் பதவியிழந்த பிரபுக்களைத்தவிர, சபையில்

550 பிரபுக்கள் இருந்தார்கள். நீதி விசாரணை செய்யும் பிரபுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, சிலரை அரசர் பிரபுவாகப் படைத்தபோது சபையின் மரபுவழிப் பண்பை நிலைப்படுத்த வேண்டுமென்று மரபுவழிப் பிரபுக்கள் வலியுறுத்தினர். பெருமக்கள் சபையின் குழுவொன்று, ஆயுட்காலப் பிரபுக்களைப் படைக்கும் அரசரின் உரிமை பயன்படுத்தப்படாமையால் வழக்கொழிந்துபோயிற்றென முடிவுசெய்தது. ஆகவே, சர் ஜேம்ஸ் பார்க்ஸ்[1] என்பவரை அரசர் வென்சிடேலின் பிரபுவாக்கி, மரபுவழிப் பிரபுவாக மாற்றினர். திறமைமிக்கவர்களைப் பிரபுக்களாகப் படைத்துச் சபையில் அமர்த்திச் சபையின் வலிமைக்கு உதவமுடியாதவகையில் அரசருக்கு இவ்வதிகாரம் இல்லாதுபோனது, பலருக்குத் துயரமளித்தது. நிதி நிலை காரணமாகச் சிலரால் வழிவழிப் பிரபுப்பதவியை ஏற்க இயலாதிருந்தது.

பெருமக்கள் சபையின் சட்ட அதிகாரங்கள் பேரவை[2]யிலிருந்து மரபுவழி வந்தவைகளாகும். சிவில் வழக்குகளில் இன்றும் சபை இறுதி நீதிமன்றமாக இருந்துவருகிறது. 1876-ஆம் ஆண்டுச் சட்டப்படி, சபையின் மேல்முறையீட்டு அதிகார வரம்பு ஒழுங்குபடுத்தப்பட்டது. நான்கு சட்டப் பிரபுக்களை அமர்த்த இச் சட்டம் வகைசெய்தது. இவர்களோடு, நிதித்துறை முதல்வரும், உயர்நீதியியல் பதவிகளை வகித்தவர்களும் சபையில் நீதியியல் அலுவல்களில் பங்கு பற்றலாம். குறைந்தது மூன்று சட்டப் பிரபுக்கள் இல்லாத பொழுது, எந்த வழக்கையும் இது விசாரிக்கலாகாது. சட்டப்படி, சபையின் எவ்வுறுப்பினரும் நீதி விசாரணை அலுவல்களில் பங்குபற்றலாம். ஆனால், நடைமுறையில் சட்டப்பயிற்சியில்லாப் பிரபுக்கள் இப் பணியில் கலந்துகொள்வதில்லை. ஆகையால், சட்டமியற்றும் பெருமக்கள் சபையிலிருந்து நீதி வழங்கும் பெருமக்கள் சபை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. ஆனால், சபை ஒரே பெயரில் ஒரே இடத்தில் இருந்து செயல்படுகிறது.

சபைகளுக்கிடையிலான உறவுமுறையைப் பார்க்கும் பொழுது, கீழ்சபை படிப்படியாகப் பெருமக்கள் சபையோடு சட்ட ஆக்கச் சமத்துவத்தைப் பெற்றுவருவதை நாம் காணலாம். முதலில், பொதுமக்களின் வேண்டுகோளின்பேரில்

[1] Sir James parkes

[2] Magnum Concilium

பெருமக்களின் இசைவோடு அரசர் சட்டங்களைச் செய்தார். ஆனல், லங்காஸ்டிரிய மரபினர் காலத்தில், பொதுமக்கள் சபை விண்ணப்பங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக, மசோதாக்களைச் சபையில் கொண்டுவர உரிமைபெற்றது. காலத்திலிருந்து பாராளுமன்றத்தின் சட்டங்களை, பாராளுமன்றமாகக் கூடியுள்ள பெருமக்கள், பொதுமக்கள் சபையின் அறிவுரையோடு அரசர் இயற்றினர்.

முதலில் பொதுமக்கள் சபையும், பெருமக்கள் சபையும் தனித்தனியே வரிவிதிப்புகளுக்கு இசைவளித்தன. நிதியுதவியை இருசபைகளும் சேர்ந்து அரசருக்களிப்பது 14-ஆம் நூற்றாண்டில் வழக்கமாயிற்று. ஆகவே, 1395-க்குப்பின், நிதியுதவியை, "பெருமக்கள் சபையின் ஒப்புதலோடு பொதுமக்கள் சபை அளித்தது." 1407-ல் நிதியளிப்பைப் பெருமக்கள் சபை அளிக்க முயன்றதைப் பொதுமக்கள் சபை எதிர்த்தது. பொதுமக்களின் உரிமைகளுக்கு இது பாதகமானதெனச் சபை கூறியது. இருசபைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிதியுதவிகளைப் பொதுமக்கள் சபையின் சபாநாயகர் அரசருக்கு அறிவிப்பதற்கு நான்காம் ஹென்றி இணங்கினர். இக் காலத்திலிருந்து பொதுமக்கள் சபை நிதியுதவிகள் அளிப்பதை அதன் உரிமையென அறிவித்தது.

ஆனல், முன்னிலைமீட்சிக்காலம்வரை இந் நிதியுதவி அளிக்கும் பிரச்சினை மீண்டும் எழவில்லை. கடந்தகால நிகழ்ச்சிகள் சபையின் சிறப்புரிமைகளைச் சிறிது பொருமை உணர்வோடு பார்க்கத் தூண்டின. 1661-ல் வெஸ்ட்மின்ஸ்டர் வீதிகளைச் சீரமைக்கப் பெருமக்கள் சபை ஒரு மசோதாவை நிறைவேற்றியபொழுது, பொதுமக்களின்மீது வரிவிதிப்பு அல்லது பொதுமக்களின் பணச்செலவுபற்றிய மசோதா எதுவும் பொதுமக்கள் சபையில் கொண்டுவரப்படவேண்டுமெனக் கூறி மசோதாவைத் தள்ளிவிட்டது. பல மாதங்கள் சர்ச்சைக்குப்பின், இதே நோக்கத்திற்கான மசோதாவைப் பொதுமக்கள் சபை நிறைவேற்றியபொழுது, பெருமக்கள் சபை எதிர்ப்புத் தெரிவித்து ஏற்றுக்கொண்டது.

பத்தாண்டிற்குப்பின், சட்ட மசோதாக்களைப் பெருமக்கள் சபை திருத்த முயன்றபொழுது, அரசருக்குப் பொதுமக்கள் சபையில், "அளிக்கப்படும் எல்லா நிதி உதவிகளின் வீதத்தையும், வரிகளையும் பெருமக்கள் சபை மாற்றலாகாதென" உறுதிப்படுத்தியது. சில ஆண்டுகளுக்குப்பின், பெருமக்கள்

சபையின் இன்னொரு முயற்சி, பொதுமக்கள் சபை எதைத் தன் சிறப்புரிமையாகக் கருதியதோ, அதைப்பற்றி முழுமையான ஓர் அறிக்கை வெளியிட உதவியது.

"எல்லா உதவிகளும், சப்ளைகளும் பொதுமக்கள் சபையின் முழுமையான கொடையென்பதையும், இத்தகைய உதவிகளையும், சப்ளைகளையும் அளிக்கும் எல்லா மசோதாக்களும் பொதுமக்கள் சபையில் தொடங்கவேண்டு"மென்பதையும் சபையினர் நிலைநாட்டினர். இத்தகைய மசோதாக்களின் இறுதிப்பயன், நோக்கம், நிலை, வரையறைகள் ஆகியவைகளை இயக்குவதும், வரையறுப்பதும் பொதுமக்கள் சபையின் உரிமையென்பதையும், இத்தகைய நிதியுதவிகளைப் பெருமக்கள் சபை மாற்றலாகாதென்பதையும் சபையினர் உறுதிப்படுத்தினர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் போது இருசபைகளுக்கும் இடையிலான உறவு இணக்கமாக இருந்தது. விக்குப் பெருங்குடியினர் அரசியல் வாடிக்கையாதரவைப் பயன்படுத்திக் கீழ்சபையைக் கட்டுப்படுத்தினர். ஆனால், 1832-ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டத்திற்குப்பின், மோதல்களால் இருசபைகளுக்கிடையிலான இணக்கம் முறிவுறத் தொடங்கியது.

நிதிப்பிரச்சினைகளையொட்டி இதற்குப்பின் இருசபைகளுக்கிடையில் இரண்டு மோதல்கள் ஏற்பட்டன. பத்திரத் தீர்வைகளை அகற்றவேண்டுமெனக் கோரிய கிளாட்ஸ்டனின் தீர்மானத்தையொட்டி 1830-ல் முதல் மோதல் ஏற்பட்டது. இத் தீர்மானத்தைப் பெருமக்கள் சபை ஏற்க மறுத்தது. பின் கிளாட்ஸ்டன், வரிவிதிப்பு மீதான பொதுமக்கள் சபையின் உரிமையை வலியுறுத்தப் பல தீர்மானங்களை இயற்றுமாறு பால்மர்ஸ்டனைத் தூண்டினர். அரசருக்கு நிதி உதவியையும் சப்ளையையும் பொதுமக்கள் சபை அளிக்கவேண்டுமென்பதைச் சபை முதல் தீர்மானத்தால் வலியுறுத்தியது. பெருமக்கள் சபையின் மறுப்பு அதிகாரம் அடிக்கடி நிகழும் செயற்பாடன்று. ஆகையால், இதைப் பொதுமக்கள் சபையினர் விசித்திரப் பொருமையுணர்வோடு பார்த்தனர். அடுத்த ஆண்டில் எல்லா நிதிச்செயற்குறிப்புகளையும் ஒரு மசோதாவில் கிளாட்ஸ்டன் பொதிந்தார். ஏனெனில், அந்த ஆண்டில் நிதித்திட்டங்கள் அனைத்தையும் பெருமக்கள் சபை ஏற்றுச் செயல்படுத்தவேண்டும் அல்லது ஏற்க மறுக்கவேண்டும். நிதித்திட்டங்களை மக்கள்முன் வைக்க அரசாங்கத்தைத்

தூண்டுவதற்காக 1909-ல் ஆண்டு வரவுசெலவு விவர அறிக்கையைப் பெருமக்கள் சபை தள்ளியபொழுது இரண்டாவது மோதல் 50 ஆண்டிற்குப்பின் ஏற்பட்டது. குறைந்த பெரும்பான்மையோடு அரசாங்கம் மீண்டும் பதவியேற்றதெனினும், பெருமக்கள் சபையில் பட்ஜெட் நிறைவேறியது.

பொதுமக்கள் சபையால் அனுப்பப்பட்ட ஒரு பணமசோதா ஒரு மாதத்திற்குள் பெருமக்கள் சபையால் நிறைவேற்றப்படவில்லையென்றால், அரசரின் இசைவு பெறுவதற்கு அனுப்பப்பட்டுப் பின் சட்டமாகவேண்டுமென்பது ஒரு சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நிதிபற்றிய பொதுமக்கள் சபையின் உரிமைகள் தவறுகப் பயன்படுத்தப்படலாம் என்பதை 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில், நிதியியல் செயற்குறிப்புகளைப் பொதுமக்கள் சபை, சட்ட மசோதாக்களோடு இணைத்துச் செயற்படுத்த முயன்றபொழுது அறியமுடிந்தது. நிதிஉதவி அல்லது சட்ட மசோதாவோடு ஒரு பிரிவு அல்லது பல பிரிவுகளை இணைப்பதும், இம் மசோதாக்களுக்குத் தொடர்பில்லாதவைகளைச் சேர்ப்பதும் பாராளுமன்றமொவ்வாச் செயலெனவும், அரசாங்க அமைப்பை அழிக்க முற்படுகிறதெனவும் வன்மையாக ஒரு தீர்மானத்தை இயற்றி, 1702-ல் பிரபுக்கள் இதைச் சமாளித்தார்கள்.

இதற்குப்பின், "இணைப்புப் பிரச்சினை" எழவில்லை. ஆயினும், கீழ்சபையின் முழு நிதிமுதன்மைநிலை ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு, எது பணமசோதாவாகிறதென்பதை வரையறை செய்வது முக்கியமாயிற்று. இதை முடிவுசெய்யும் பொறுப்பைப் பாராளுமன்றச் சட்டம், சபாநாயகரிடம் விடுகிறது. இயலுமாயின், ஒவ்வொரு கூட்டத்தொடரின் தொடக்கத்திலும் தலைவர்கள் பட்டியலிலிருந்து தெரிவுக்குழுவால் அமர்த்தப்படும் இரண்டு உறுப்பினர்களை இவர் கலந்தாராய வேண்டும்.

பெருமக்கள் சபையின் நீதி அதிகாரத்தையொட்டி இரு சபைகளுக்கிடையிலும் முன்னிலைமீட்சிக்காலத்தில் இரண்டு மோதல்கள் ஏற்பட்டன. இவைகளில் முதல் மோதல், ஸ்கின்னருக்கும் கிழக்கிந்திய கம்பெனிக்கும் இடையில் நடந்த வழக்கில் ஏற்பட்டது. இந்த வழக்கில் கிழக்கிந்திய வணிகராகிய ஸ்கின்னர், கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராகக் குறிப்பிட்ட சில குறைபாடுகளை அகற்றுமாறு அரசருக்கு விண்ணப்பித்துக்

கொண்டார். இந்த விண்ணப்பம் பெருமக்கள் சபையின் ஆய்விற்கு விடப்பட்டது. இதைப்பற்றிக் கம்பெனி பின்னர் பொதுமக்கள் சபைக்கு விண்ணப்பித்துக்கொண்டது. இரு சபைகளுக்குமிடையில் எழுந்த இச் சச்சரவு நான்காண்டுகள் நடந்தது. ஆனல், பெருமக்கள் சபை இதற்குப்பின் சிவில் வழக்குகளில் அசல் விசாரணை உரிமை கோரியதில்லை.

நிதிவழக்கு நீதிமன்றத்திடமிருந்து பெருமக்கள் சபை மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் உரிமைபற்றி எழுந்தது இரண்டாவது மோதல். செர்லிக்கும், ஃபாக்[1] என்பவருக்கும் இடையில் இந்த வழக்கு எழுந்தது.

சட்ட ஆக்கம்பற்றிய துறையில் இரு சபைகளுக்கிடையேயான உறவுமுறைகளை முன் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளோம். 1832-ஆம் ஆண்டின் முதல் சீர்திருத்த மசோதாவையொட்டி, இரு சபைகளுக்கிடையேயான போராட்டம் தொடங்கியது. இம் மசோதாவைப் பொதுமக்கள் சபை மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றினலும், பெருமக்கள் சபை இதைத் தள்ளிவிட்டது. அரசாங்கத்தின் அடிப்படையையே இம் மசோதா தகர்ப்பதாகப் பிரபுக்கள் கருதினர்கள். இம் மசோதாவை நிறைவேற்றப் பெருமக்கள் சபையில் புதிய பிரபுக்களைப் படைக்கப்போவதாக அரசர் அச்சுறுத்தினர். இதற்கஞ்சிய பெருமக்கள் சபையினர் மசோதாவை நிறைவேற்றினர். ஆனல், கீழ்சபையின் மெல்லிசைவால் மேல்சபை இருப்பதாகக் கருதி அஞ்சியது.

ஐரிஷ் திருச்சபையை அரசாங்கத் தொடர்பிழக்கச் செய்வதைப் பெருமக்கள் சபையின் பெரும்பாலோர் வன்மையாகத் தாக்கினர். இதன் விளைவாக உருவாகிய அரசியலமைப்புவழி முட்டுக்கட்டை, அரசியாரின் முயற்சியால் தவிர்க்கப்பட்டது.

பொதுமக்கள் சபையின் இட மறு ஒதுக்கீட்டுத் திட்டம் குறிப்பிடப்படவில்லையென்பதற்காகப் பெருமக்கள் சபை 1884-ஆம் ஆண்டின் வாக்குரிமை நீட்டிப்புச் சட்டத்தைத் தள்ளியது. இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையை ஒரு தனிப்பட்ட மசோதாவில் எடுத்துக்கொள்ள கிளாட்ஸ்டன் முடிவுசெய்திருந்தார். பெருமக்களின் கோரிக்கையின்பேரில் சபையைக் கலைக்க, கிளாட்ஸ்டன் மறுத்தார். நீண்டதோர் அரசியல்

[1] Shirley Vs Fogg

போராட்டம் தொடங்கியது. இதில் அரசியார், இருதரப்பின ரிடையே நடுவராக இருந்து அரும்பணியாற்றினர். இறுதியில் ஓர் ஏற்பாடு உருவாகியது. இதன்படி, இட ஒதுக்கீட்டுத் திட்டத்தின் முதன்மையான கருத்துகளைக் கிளாட்ஸ்டன் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அனுப்ப இணங்கினர்.

சுயஆட்சி மசோதாவையொட்டி, அடுத்து இருசபைகளும் மோதிக்கொண்டன. இம் மோதலில் பெருமக்கள் சபை வெற்றிபெற்றது. இரண்டாவது சுயஆட்சி மசோதாவைச் சபை தள்ளியது. மக்களின் தயக்கமும் பொதுவான ஐயப் பாடும் இதற்குக் காரணங்களாக இருந்தன. பெருமக்கள் சபை யின் எதிர்ப்பால் முதலாளிகளின் பொறுப்புடைமை மசோதா கைவிடப்பட்டது.

பெருமக்கள் சபையின் அதிகாரங்கள் மறுபடியும் மீட்டுயிர்ப்புப் பெற்றன. 1906-ல் நடந்த தேர்தலில் லிபரல் கட்சியினர் பெரும்பான்மை வலிமைபெற்றனர். ஆனால், மேல்சபையில் கன்சர்வேடிவ்கள் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தனர். எனவே, பெருமக்கள் சபையினர் முழு மூச்சுடன் எதிர்த்தடுப்பு வாக்கினைப் பயன்படுத்துவதில் ஈடு பட்டனர். 1906-க்கும் 1910-க்கும் இடைப்பட்ட காலத்தில் பொதுமக்கள் சபையால் முதல் முக்கியத்துவமாகக் கருதப் பட்ட 5 மசோதாக்களைப் பெருமக்கள் சபை தள்ளிவிட்டது.

இவ்வாறு தள்ளிவிடப்பட்ட மசோதாக்களில் 1909-ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டமும் ஒன்றாகும். பண மசோ தாக்களைத் திருத்தும் அதிகாரத்தைப் பெருமக்கள் சபை இழந்துவிட்டதெனினும், இவைகளை ஏற்க மறுத்துத் தள்ளி விடும் அதிகாரத்தை இச் சபை பெற்றிருந்தது. ஆனால், 1909-ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தை இச் சபை ஏற்க மறுத்தது, இருசபைகளுக்கிடையிலான உறவுமுறையில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்திவிட்டது. 1910-ல் பாராளு மன்றம் கலைக்கப்பட்டுப் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தலில் லிபரல் கட்சி பெரும்பான்மையான இடங்களைப் பெற்றது. பெருமக்கள் சபையின் சட்டஆக்கத் தடை அதி காரத்தைக் குறைக்கப் பொதுமக்கள் சபை பல தீர்மானங்களை நிறைவேற்றியது. இப்படிப்பட்டதொரு நெருக்கடியான வேளையில் ஏழாம் எட்வர்டு அரசர் மரணமடைந்தார். இதற்கு முன், நிதி மசோதா பெருமக்கள் சபையில் நிறைவேறியது. பெருமக்கள் சபையின் தடையதிகாரத்தைக் குறைக்கும் கடும்

அரசியலமைப்புப் பிரச்சினை தற்காலிகமாகக் கைவிடப் பட்டது. இப் பிரச்சினையை இணக்கமாகத் தீர்க்க மாநாடுகள் கூட்டப்பட்டன. ஆனல், இவையெல்லாம் தோல்வியுற்றன. பின், அமைச்சரவை பாராளுமன்றத்தைக் கலைத்துவிட அரசருக்கு அறிவுரை கூறியது. இதே சமயத்தில், தேர்தல்கள் அமைச்சரவைக்குச் சாதகமாக இருந்தால், மேல்சபையின் தடையதிகாரத்தைக் குறைக்கும் மசோதாவை நிறைவேற்ற அரசர் போதிய அளவில் பிரபுக்களைப் படைக்கவேண்டு மெனவும் கேட்டுக்கொண்டது. பொதுத்தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு இடையேயான உறவில் மாறுதல் செய்யவில்லை. பொதுமக்கள் சபை தடை அதிகாரத்தைக் குறைக்க, மசோதாவை நிறைவேற்றியது. பெருமக்கள் சபை இம் மசோதாவில் சில திருத்தங்கள் செய்தது. இவைகளைப் பொது மக்கள் சபை ஏற்றுக்கொள்ளவில்லை. 400-க்குக் குறையாமல் புதிய பிரபுக்கள் படைக்கப்பட்டுப் பெருமக்கள் சபையில் அமர்த்தப்படுவார்கள் என்ற அச்சத்தில் மேல்சபை மசோதாவை நிறைவேற்றியது.

இம் மசோதா 1911-ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்ட மாக நிறைவேறியது. பண மசோதாக்களும், "பொது மசோதாக்களும்" பெருமக்கள் சபையின் இசைவின்றிச் சட்ட மாகலாமென இச் சட்டம் வரையறை செய்தது. பொதுமக்கள் சபையிலிருந்து அனுப்பப்பட்ட பண மசோதாவைப் பெரு மக்கள் சபை பெற்றுக்கொண்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற் குள் நிறைவேற்றவில்லையென்றல், மசோதா சட்டமாகிவிடும். மற்றப் பொது மசோதாக்கள், அடுத்தடுத்து நடந்த இரண்டு தொடர்க்கூட்டங்களில் பெருமக்கள் சபையால் தள்ளப் பட்டனவெனினும், அம் மசோதா மூன்றாவது தடவையாகப் பொதுமக்கள் சபையில் நிறைவேறினல், பெருமக்கள் சபை யின் எதிர்ப்பு இருப்பினும் சட்டமாகும். ஆனல், முதல் கூட்டத்தொடரில் இரண்டாவது வாசிப்பிற்கும் இம் மசோதா நிறைவேற்றத்திற்கும் இடையில் இரண்டாண்டுகள் கடக்க வேண்டும். பொதுமக்கள் சபையின் பதவிக்காலம் ஏழாண்டி லிருந்து ஐந்தாண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

அதிகாரத்தைப் பொறுத்தவரையில் இச் சட்டம் பெரு மக்கள் சபையைத் தாழ்த்தியது. பொதுமக்கள் சபை நிலை யால் உயர்ந்தது. 1949-ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம் பெருமக்கள் சபையின் அதிகாரத்தை மேலும் குறைத்தது. இச் சட்டத்தின்படி பண, நிதி மசோதாக்கள் அல்லாத பிற

மசோதாக்களைப் பெருமக்கள் சபை ஓராண்டிற்கே முடக்கி வைக்கலாம்.

மேல்சபையின் சட்டஆக்க அதிகாரத்தின் குறைப்பு இச் சபையின் சீரமைப்பிற்கு வழிவகுத்ததெனலாம்.. இதன் பயனாக, சபையின் மரபுவழிக் கருத்து முழுமையாக அல்லது ஓரளவிற்குக் கைவிடப்படலாம். சபையின் அமைப்பு முற்றிலும் தேர்தல் அடிப்படையில் அல்லது ஓரளவு நியமன அடிப்படையில் இருக்கலாம். அவசரமான, அல்லது அரைகுறையாக ஆராயப்பட்ட மசோதாக்களைத் தடுத்து நிறுத்தத்தக்க திறமையான, சுயேச்சையான ஒரு மேல்சபையை உருவாக்குதல் இயலாததாகத் தோன்றுகிறது. இருப்பினும், இப்படிப்பட்ட மேலவை பொதுமக்கள் சபையின் பொறுப்புணர்வைக் குறைத்துவிடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். சொத்துடையவர்களை மட்டுமன்றி, நாட்டின் பயிற்சிபெற்ற உயர்தர அறிஞர்களையும் இச் சபை கொண்டிருக்கிறதென்பதையும், அரசியலமைப்பை ஆராய்கிறவர்கள் புறக்கணிக்கமுடியாது.

1914-க்குப்பின் பாராளுமன்றம்

இங்கிலாந்தில் பாராளுமன்ற அரசாங்கம் என்பது விவாதத்தால் நடைபெறுகிறது. இவ் விவாதத்தில் எதிர்க்கட்சி அரசாங்கத்தைக் கண்டனம் செய்யும் வாய்ப்பைத் தவறவிடுவதில்லை. ஆனால், போர்க்காலத்தில் கட்சிப்பூசல்கள் மறைகின்றன. மக்களின் ஒற்றுமைக்குப் பாராளுமன்றம் ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.

பாராளுமன்றமும், மக்களும் 1914-லும், 1939-லும் ஒற்றுமையாக நின்று ஜெர்மனியின் மீது போர்தொடுத்தார்கள். போருக்குமுன், ஐரிஷ் சுயஆட்சி, வேல்ஸ் திருச்சபையின் அரசாங்கத் தொடர்பை இழக்கச்செய்தல், பெருமக்கள் சபையின் அதிகாரங்களைக் குறைத்தல் போன்ற பிரச்சினைகள் பற்றி லிபரல்களுக்கும் கன்சர்வேடிவ்களுக்கும் இடையில் கடுமையான போராட்டம் நடந்தது. போர் தொடங்கியதும், கட்சிப்பூசல்கள் முடிவிற்குவந்தன. எதிர்க்கட்சியாக இருந்த கன்சர்வேடிவ் கட்சி 1915-ஆம் ஆண்டு மேமாதம் வரையில் லிபரல்களுக்கு ஆதரவளித்தது. 1915-க்குப்பின், கலப்பு அரசாங்கம் அமைக்கப்பட்டது. இதேபோன்று 1939-ல் போர் தொடங்கியபோது சேம்பர்லின் கலப்பு அமைச்சரவையில்

தொழிற்கட்சிக்கும், லிபரல் கட்சிக்கும் பிரதிநிதித்துவமளித்தார். உண்மையில் இதை எதிர்க்கட்சிகள் ஏற்கவில்லை. ஆயினும், 1940 மேமாதம்வரை எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை எதிர்க்கவில்லை. இடைத்தேர்தல்களில் இம் மூன்று கட்சிகளும் ஒன்றையொன்று எதிர்ப்பதில்லையென்ற முடிவிற்கு வந்தன.

ஆனல், கட்சிச்சண்டை ஒழிந்ததால் வல்லாட்சி நிறுவப்பட்டதெனக் கருதிவிடலாகாது. போர் நடவடிக்கைகளை எதிர்க்கட்சி எதிர்க்கவில்லை. ஆனல், உணவு, கப்பற்போக்குவரத்து, பிரச்சாரம், ஆட்பலம் ஆகியவை தாராளமாக விவாதிக்கப்பட்டன. இவை வாக்கெடுப்பால் முடிவுசெய்யப்பட்டன. சமூக, பொருளாதாரத் திட்டங்களைப் பாராளுமன்றம் அமைதிக்கால வேகத்திலும், ஆர்வத்திலும் விவாதித்தது. 1939-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25-ஆம் நாள் பாராளுமன்றம் அரசாங்கத்திற்கு நெருக்கடிநிலை அதிகாரமளித்தது. இவ்வாறு அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம் பரவலானதாக இருந்தது. ஆனல், பாராளுமன்றத்தின் இசைவாணையின்றி, அரசாங்கம் வரிவிதிக்கவில்லை; வரிப்பணத்தைச் செலவிடவுமில்லை. புதிய சட்டங்களைச் செய்யாமல் சமூகப் பணிகளில் அரசாங்கத்தால் மாறுதல் செய்ய இயலவில்லை. நெருக்கடிநிலை காரணமாக அமைச்சர்கள் பதிலளிக்கவும், கண்டனங்களை மறுதலிக்கவும் தவறியதில்லை.

கடந்த போரின்போது பாராளுமன்றம் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதன் பயனுடைமை பல தடவைகள் வெளியாயிற்று. சேம்பர்லினின் அரசாங்கம் போரை அரைமனதாக நடத்தியதும், ∴பின்லாண்டு வீழ்ச்சியடைந்ததும், தெற்கு நார்வேயிலிருந்து பிரிட்டிஷார் பின்வாங்கியதும் அரசாங்கத்தைத் தொழிற்கட்சி வெளிப்படையாகத் தாக்க வாய்ப்பளித்தன. எனவே, சேம்பர்லினின் அரசாங்கம் 1940-ல் பதவியிலிருந்து விலகிக்கொண்டது. விரிவான ஒரு கலப்பு அமைச்சரவையைச் சர்ச்சில் அமைத்தார். சிங்கப்பூரின் வீழ்ச்சி போன்ற பெரிய தோல்வி ஏற்பட்டபோது சர்ச்சிலின் அரசாங்கமும் மாற்றி அமைக்கப்பட்டது.

போர்க்காலத்தில் பாராளுமன்றம் முப்பணிகளை நிறைவேற்றியது. (1) அரசாங்கத்திற்குச் சபையில் பெரும்பான்மை ஆதரவையும், நாட்டில் மக்களின் நம்பிக்கையையும் இது தேடித் தந்தது. போர்க்காலத்தில் பொதுத்தேர்தல்

நடத்தமுடியாது. ஆனல், பொதுக்கருத்து நெருக்கத்தால் அமைச்சரவையும், அமைச்சர்களும் மாற்றப்படலாம். இப் பணியைப் பாராளுமன்றம் பயனுள்ள முறையில் செய லாற்றியது. (2) அரசாங்கம் திறமையுள்ளதாக இருக்கும்படி பாராளுமன்றம் பார்த்துக்கொள்ளுகிறது. அரசாங்கத்தைக் கேள்விகள் கேட்டும், திறனாய்வு செய்தும் பாராளுமன்றம் கண்காணிப்புச் செய்ததோடு, போர் நடவடிக்கைகளைப்பற்றி, பெரும் அக்கறை காட்டியது. (3) திறமையான, மக்கள் சார்புடைய அரசாங்கத்திற்குப் பாராளுமன்றம் முழு ஆதரவு கொடுக்கவேண்டியதாக இருந்தது. பொதுமக்கள் சபை அரசாங்கத்தைக் காரசாரமாகத் திறனாய்வு செய்தது. இருப் பினும், சர்ச்சிலின் அரசாங்கத்திற்குப் பாராளுமன்றம் பேரா தரவு காட்டியது.

பாராளுமன்றம் மக்கள் பிரதிநிதிச் சபையாக இருந் தாலும், சபையில் விவாதிக்கப்பட்டதையெல்லாம் இது வெளி யிட முடியவில்லை. பாராளுமன்ற இரகசியக் கூட்டங்கள் போர்க்காலத்திய ஏற்பாடாகும். ஆகையால், வாக்காளர் களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் சபையில் என்ன செய் கிறார்கள் என்பது வெளியே தெரியாமலே இருந்தது.

பாராளுமன்றச் சிறப்புரிமைகள் நாட்டின் சாதாரண சட்டங்களுக்கு விதிவிலக்குகளாகும். உரிமைமீறலை முடிவு செய்யும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உரியதாகும். குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரம் இருசபைகளுக்கு முண்டு. இருப்பினும், புதிய சிறப்புரிமைகளை இருசபைகளில், எதுவும் படைக்கமுடியாது. உரிமை இருப்பதுபற்றிய தகராறு எழுமாயின், இதை நீதிமன்றங்கள் முடிவுசெய்யும். ஸ்டாக்டேலுக்கும், ஹான்சார்டுக்கும் இடையே நடந்த வழக்கில், இதனுடைய விவாதங்களைப்பற்றிய அறிக்கை களுக்குப் பாராளுமன்றம் (பொதுமக்கள் சபை) தன் சிறப் புரிமையை நீட்டிக்கமுடியாது என நீதிமன்றம் முடிவுசெய் தது. எனவே, பாராளுமன்றப் பத்திரச் சட்டம், (1840) அவ தூறு நடவடிக்கைகளிலிருந்து விவாத அறிக்கைகளைக் காத்தது.

பேச்சுரிமை, அரசரை அணுகும் உரிமை, நடவடிக்கை களைத் தக்கமுறையில் விளக்கம் செய்யக்கோரும் உரிமை ஆகியவை பாராளுமன்றத்தின் மிகப்பழமையான சிறப் புரிமைகளாகும். இருசபைகளும் அடிப்படையான உரிமைகளை

நிலைநாட்ட முற்பட்டதால் இவ்வுரிமைகள் தோன்றின. நிறுவப் பெற்ற முன்னிகழ்வுகளால் இருசபைகளுக்கும் தனித்தனியே சில சிறப்புரிமைகளை அளித்து, எழுத்துருவில் அமையாத ஒரு சட்டத்தொகுதியே வளர்ச்சியடைந்துள்ளது. இன்னும் இவ்வுரிமைகளைச் சபாநாயகர் ஒவ்வொரு புதிய பாராளுமன்ற மும் கூடும்பொழுது கீழ்சபையின் சார்பில் பெருமக்கள் சபை முன்வந்து கோருகிறார். நிதித்துறை முதல்வரும் அரசர், அரசியாரின் சார்பில் இவ்வுரிமைகளைப் பொதுமக்கள் சபைக்கு அளிக்கிறார்.

சிறைப்படா உரிமை

குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு இச் சிறப்புரிமைகளைக் கோருவதில்லை. கடனுக்காகச் சிறைப்படுத்தப்படும்பொழுது (1869-க்குமுன்) இது சிறப்பானதாகும். சபைமுன் வரும் சாட்சிகளுக்கும், இதன் குழுக்களுக்கும், சபையின் அலுவலர் களுக்கும் இச் சிறப்புரிமை நீட்டிக்கப்பட்டது.

பேச்சுரிமை

முதலில் உறுப்பினர்களை அரசரிடமிருந்து பாதுகாக்கும் பொருட்டு இச் சிறப்புரிமை கேட்கப்பட்டது. முதலாம் எலிசபெத் அரசியார் இதை ஏற்றுக்கொண்டார். ஆனால், சபைக்குத் தொடர்பில்லாத அயல்நாட்டுக் கொள்கை, அரசியாரின் திருமணம் போன்றவைகளைச் சபை விவாதிக்கலாகாதெனக் குறிப்பிட்டார். இச் சிறப்புரிமையை ஸ்டூவர்ட்டுகள் எதிர்த்தார்கள். சபை அரசரைக் குறைகூறியதை எதிர்த்து முதலாம் ஜேம்ஸ் சபாநாயகரிடம் முறையிட்டார். சபை முறையாக இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததும், சபையின் அன்றைய நிகழ்ச்சி ஏட்டிலிருந்து அப் பகுதியைக் கிழித்தெறிந்து விட்டார். முதலாம் சார்லஸ் மேலும் ஒருபடி முன்னேறினர். 1629-ல் சர் ஜான் எலியட்டையும் மற்றப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கைதுசெய்தார். 1642-ல் 5 உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்காக இவர்களை இராசத்துரோகக் குற்றத்திற்காகக் கைதுசெய்ய முயன்றார். 1689-ல் உரிமைகள் மசோதாவில் இச் சிறப்புரிமைகள் உறுதிசெய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் பேசியதை அவதூறான குற்றமென்பதிலிருந்து இச் சிறப்புரிமை உறுப்பினர்களைக் காப்பாற்றியது. இருசபைகளின் கட்டளையால் அச்சிடப்பட்டவைகளுக்கும் 1840-ல் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

ஒரு குழுவாக (கூட்டமாக) அரசரை அணுகும் உரிமை

ஓர் அறிக்கையை அரசர்முன் வைக்கவும் ஒரு குழுவாகப் பாராளுமன்றம் அரசரை அணுகவும் உரிமை பெற்றுள்ளது.

சபையின் நடவடிக்கைகளுக்கு ஏற்கத்தக்க விளக்கம் தருமாறு கேட்கும் உரிமை இச் சிறப்புரிமையாகும். இதன் சிறப்பை இப்பொழுது இழந்துவிட்டது. இந்த உரிமைகளோடு இதனுடைய அமைப்பிற்கு வழிசெய்யும் சிறப்புரிமையையும் பாராளுமன்றம் பெற்றுள்ளது. அவ்வப்போது ஏற்படும் காலி இடங்களை நிரப்பும் உரிமை, சபையை ஏளனப்படுத்தும் உறுப்பினர்களைச் சபையிலிருந்து வெளியேற்றுதல், தள்ளி வைத்தல் ஆகியவையும் இதில் அடங்கும். உறுப்பினர்களின் தகுதிபற்றி முடிவுசெய்யும் சிறப்புரிமையையும் சபை பெற்றுள்ளது.

இதன் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் உரிமை

சபை எதைப்பற்றியும் எப்படியும் விவாதிக்கலாம். அரசரின் பேருரையை விவாதிக்குமுன், சபையின் தொடக்கத்தின்போது இந்தச் சிறப்புரிமையை நிலைநாட்டும்பொருட்டு ஒரு மசோதாவை விவாதிக்கும் உரிமையைப் பொதுமக்கள் சபை வலியுறுத்துகிறது. ஆனால், இதைப்பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை. நாத்திகராகிய பிராட்லா[1]வைச் சபை உறுப்பினராக ஏற்க மறுத்தபொழுது, 1884-ல் இச் சிறப்புரிமை நன்முக எடுத்துக்கூறப்பட்டது. பொதுமக்கள் சபையின் நடவடிக்கையை நீதிமன்றம் சட்டத்திற்கு மாறுனதெனக் கூற மறுத்துவிட்டது. சபையில் எழும் பிரச்சினைகளுக்குச் சபையே நீதிபதியாக இருக்கிறதென்னும் கருத்தை நீதிமன்றம் தெரிவித்தது.

அவமதிப்பு அல்லது உரிமைமீறல் ஆகியவைகளைத் தண்டிக்கும் அதிகாரம்

உரிமைமீறல் பாராளுமன்றத்தை அவமதிக்கும் குற்றமாகும். இதன் மாண்பையும் திறமையையும் நிலைநாட்ட, சபை நடவடிக்கை எடுக்கலாம். உறுப்பினரை, உறுப்பினரல்லாத ஒருவர் மிரட்டினால் அல்லது அச்சுறுத்தினால் அவமதிப்புக் குற்றம் உண்டாகும். அல்லது ஒருவர் சபையின்

[1] Bradlaugh

கட்டளைக்குப் பணியவில்லையென்றாலும் அல்லது சபையின் செயல்களில் தலையிடுகிறார் என்றாலும் அவமதிப்புக் குற்றம் ஏற்படும்.

உரிமைமீறல் ஏற்பட்டால் சபை அதை உடனே தீர்க்கலாம். அல்லது உரிமைக் குழுவின் ஆராய்விற்கென இதைக் குழுவிடம் விடலாம். சபை சபாநாயகரின் வழியாகக் குற்றவாளிகளைக் கண்டிக்கலாம் அல்லது கடிந்துரைக்கலாம். உறுப்பினர்களை உரிமை மீறலுக்காக வெளியேற்றலாம் அல்லது விலக்கிவைக்கலாம். கடுமையான உரிமைமீறல் குற்றங்களுக்குத் தண்டமும், சபையின் தொடர்க்கூட்டம் முடியும்வரை சிறைத்தண்டனையும் அளிக்கலாம்.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

W. O. Aydelotte	:	House of Commons in 1840. s.
G. Kitson clark	:	Peel and the Conservative Party
Holdsworth	:	House of Lords
E. Allyn	:	Lords versus Commons
W. L. Burn	:	Parliamentary affairs
P. Lowell	:	Government of England
K. R. Mackenzie	:	The English Parliaments
B. Cvick	:	Reforms of Parliament
Sir I. Jennings	:	Parliament
C. Wittike	:	Parliamentary Privilege
Erskine May	:	Parliamentary Practice

15. முடியாட்சி
(Monarchy)

தொடக்கத்தில் படைவலிமையின் அடிப்படையில் இங்கிலாந்தின் அரசுரிமை இருந்துவந்துள்ளது. பின், மூதறிஞர் அவையின் தேர்வினால் முடியாட்சி நிலைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டு, வெஸ்ட்மின்ஸ்டரில் முடிசூட்டப்பட்ட காரணத்தினால் முதலாம் வில்லியம் இங்கிலாந்து முழுவதையும் ஆளும் உரிமை கோரினார். எட்வர்டு (கன்பெசர்) இறந்ததிலிருந்து தாமே இங்கிலாந்தின் சட்டப்படியிலான அரசரென வில்லியம் வலியுறுத்தினர். இறுதியாக, இங்கிலாந்தின் ஆட்சியுரிமை பொதுச்சட்டத்தின் அடிப்படையில் மரபுவழியில் அமைந்தது. பெண்களும் அரசப்பதவிக்குரியவர்களானார்கள்.

முடியாட்சிபற்றிய சட்டம் மரபாலும் எழுத்துருவிலான சட்டத்தாலும் வளர்ச்சியடைந்தது. அரசரின் பொதுச்சட்ட அதிகாரத்தையொட்டியதாக மரபுகள் இருந்தன. சூழ்நிலை மாறுதல்களுக்கேற்ப, சட்டங்கள் செய்யப்பட வேண்டியிருந்தன. இத்தகைய மாற்றங்களில் மிக முக்கியமானவை :

(1) அரசர் எவரும் ரோமன் கத்தோலிக்கராக இருக்க முடியாது. அல்லது ரோமன் கத்தோலிக்கரை மணம்செய்து கொள்ளலாகாது (உரிமைகள் மசோதா, 1689.)

(2) அரசுரிமைச் சட்டத்தின்படி (1701) பட்டமும் வழிமுறை உரிமையும் பெறப்படுகிறது.

(3) பாராளுமன்றத்தின் பதவிக்காலத்திற்கும் அரசரின் மரணத்திற்கும் தொடர்பில்லை. (மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1867.)

(4) அரசரின்கீழ் பதவியில் இருத்தல் அரசரின் மரணத்தால் பாதிக்கப்படுவதில்லை. (அரசரின் மரணச் சட்டம், 1901.)

(3) அரசர் 18 வயதிற்குட்பட்டவராக இருப்பாராயின், அரசரின் பணிகளை ஒரு காப்பாளர் செயல்படுத்த வேண்டும். இக் காப்பாளர் வாரிசு வரிசையில் இருக்க வேண்டும்; 21 வயதுக்கு மேற்பட்டவராகவும் இக் காப்பாளர் இருக்க வேண்டும். இரண்டாம் எலிசபெத் அரசியாரின் குழந்தைக்கு ஒரு காப்பாளர் தேவையென்றால் எடின்பரோ கோமகன் காப்பாளராக இருப்பார் என வகைசெய்யப்பட்டது.

நோய்வாய்ப்படும்பொழுதும், நாட்டிற்கு வெளியே இருக்கும்போதும், உரிமைப்பட்டயத்தால் கொடுக்கப்பட்டுள்ள பணிகளை ஏற்றுச் செயல்படுத்தக்கூடிய கவுன்சிலர்களை அரசர் அமர்த்தலாம். இத்தகைய கவுன்சிலர்கள் அரசரின் மனைவியாகவும் அரசியாரின் கணவராகவும் இருக்கவேண்டும். அடுத்து, வழிமுறைப்பட்டியலில் உள்ள முதல் நான்கு பேர்களும் கவுன்சிலர்களாகச் செயல்படுவர்.

(6) அரச மானியம், தொடக்கத்தில் நிலமானிய வருவாயிலிருந்து அரசர் எல்லாச் செலவுகளையும் செய்துவந்தார். இது காலப்போக்கில் பற்றுதுபோயிற்று. பாராளுமன்றம் புதிய வரிகளை அரசருக்கு அளிக்கவேண்டியதாயிற்று. ஸ்டூவர்ட்டுகள் தனியுரிமைகளை விற்றுச் சட்டத்திற்கு மாறான வரிவிதிப்புகளை மேற்கொண்டு வந்ததைப் பாராளுமன்றம் எதிர்த்ததெனினும், அரசாங்கத்தின் செலவினங்களைச் சரிக்கட்ட அரசர் புதிய வரிகளை விதிக்கவேண்டியதன் அவசியம் முன்னிலைமீட்சிக்குப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக் காலத்தில் நிலமானிய வருமானத்தின் பெரும்பகுதி மறைந்து போய்விட்டது. ஆனால், அரசாங்கத்தின் பணிகள் அதிகரித்தன. ஆகவே, இரண்டாம் சார்லஸிற்குப் பாராளுமன்றம் சில வரிகளை அவருடைய ஆயுட்காலம்வரை விதித்துக்கொள்ளும் அதிகாரத்தை அளித்தது. இவ்வரிகள் அரசரின் முறையான வருமானமாயின. இவைகளே மூன்றும் வில்லியத்தின் காலத்தில் அரசமானியமெனப்பட்டன.

ஒரு நிலைப்படையையும் கப்பற்படையையும் வைத்துப் பேணுதற்கு அரசாங்கத்தின் இந்த வருவாய் பற்றுதுபோயிற்று. இப் பற்றுக்குறை ஆண்டு சப்ளை மானியங்களால் சரிக்கட்டப்பட்டது. இச் சப்ளை மானியங்கள் விரைவில் அரசமானியத்தைவிட மிஞ்சின. அரசமானியத்தைக் கொண்டு சமாளிக்கக்கூடிய செலவினங்களைக்கூட மூன்றும் ஜார்ஜ் மன்னரால் சமாளிக்க முடியவில்லை. ஆகவே, அரசரது

நிலவுடைமைகளின் வருமானத்தையும், மரபுவழிகளால் வரியையும் பெரிய அரசமானியத் தொகைக்கீடாக விட்டுக் கொடுத்தார். அரசரின் மாண்பையும், அரசப்பதவியின் நிலையையும், மாண்புமிகு அரச மரபினரின் சொந்தநல வசதிகளையும் பாதிக்கின்ற எல்லாச்செலவினங்களையும் அரசமானியத் திலிருந்து விலக்கிவிடவேண்டுமென ஓர் ஆய்வுக் குழு பரிந்துரைத்தபொழுது, 1830-ஆம் ஆண்டின் இறுதியில் இந்த அவலநிலை முடிவிற்குவந்தது.

ஆகையால், இன்று அரண்மனைச் செலவுகள், அரசக் குடும்பத்தினருக்குப் பாராளுமன்றமளிக்கும் படிகள் ஆகிய வைகளோடு, அரசரின் சொந்த வருமானத்தையும் அரச மானியம் குறிப்பிடுகிறது. அரசாங்கத்தின் மற்றச் செலவினங் களுக்குத் திரண்ட நிதியிலிருந்து அல்லது பாராளுமன்றத்தின் நிதி அளிப்பிலிருந்தும் பணம் கொடுக்கப்படுகிறது. ஓர் அரசர் அரியணையேறும்போது அரசமானியம் ஓர் ஆய்வுக் குழுவினால் ஆராயப்பட்டுப் பின் இதன் பரிந்துரைகள் சட்ட மாக்கப்படுகின்றன. 1952-ஆம் ஆண்டின் அரசமானியச் சட்டம் அரசியாருக்கு மானியமாக 475,000 பவுன்கள் அளித் தது. எடின்பரோ கோமகன் 40,000 பவுன்கள் பெற்றார். இத் தொகை இப்பொழுது 900,000 பவுன்களாக உயர்த்தப் பட்டுள்ளது.

நுட்பமாற்றங்களைப்பற்றியதாகச் சட்டங்கள் இருக்கை யில், அரசியல் வளர்ச்சிக்கேற்ப அரசரின் பணிகளை மாற்றி யமைக்க மரபுகள் தோன்றின. இத்தகைய மரபுகள் அடிப் படையான அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை களாகும். இவை முதன்மையாக அரசரின் சிறப்பதிகாரங் களைச் செயல்படுத்துவதுபற்றியவைகளாகும். சிறப்பதிகா ரங்கள் பொதுச்சட்டத்தையொட்டியவைகளாக இருக்கின் றன. இருப்பினும், மற்ற மரபுகள் அரசுத் தலைவராகிய அரசியாரின் பணிகளை நிறைவேற்றப் பயன்படுகின்றன.

அரசப்பதவியின் பொருள்

அரசர் ஓர் ஆளைக் குறிக்கிறது. ஆனால், அரசப்பதவி ஒரு நிறுவனத்தைக் குறிக்கிறது. அரசப்பதவி முடியாட்சியின் சின்னமாக இருக்கிறது. முடியரசு (Crown) "செயல்படும் வசதியானதொரு புனைவுகோள்", எனச் சிட்னிலோ கூறினர். இங்கிலாந்தின் பழங்காலத்திய அரசர்களின் அதிகாரங்களும்

சிறப்பதிகாரங்களும் இதைச்சேரும். அரசர் இறப்பினும் அரசப்பதவி (முடியரசு) இறப்பதில்லை. "அரசாங்கத்தில் இது கொள்கை உருவாக்கும் நிறுவனமாகு"மென ஆக் (Ogg) வரையறை செய்தார். நடைமுறையில், அரசர், அமைச்சர்கள், ஓரளவிற்குப் பாராளுமன்றம் ஆகியவற்றின் இணைப்பே இது வாகும். ஒருகாலத்தில் அரசரிடம் நிலைபெற்றிருந்த அதிகாரங்களும் சிறப்பதிகாரங்களும் படிப்படியாக இப்பொழுது அரசப்பதவிக்கு மாற்றப்பட்டுள்ளன.

பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளின் ஆங்கில வரலாற்றுப்போக்கு அரசரை ஒரு நிறுவனமாக மாற்றுவதாக இருந்தது. அரசரின் பெரும்பாலான அதிகாரங்கள் இப்பொழுது அமைச்சர்களால் செயல்படுத்தப்படுகின்றன. அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய மாற்றத்தின் ஒரு விளைவு "அரசர் தவறுசெய்ய முடியா"தெனும் கோட்பாட்டின் தோற்றமாகும். தனிப்பட்ட முறையில் அரசரின் செயல் எதற்கும் (அரசர்) கட்டுப்படவேண்டியதில்லையென்பது இதன் பொருளாகும். இத்துடன், தவறெதற்கும் அரசர் இசைவளிக்க இயலாதெனவும் பொருள்படும். அமைச்சர்கள் செய்யும் தவறுகளுக்கு அரசரைப் பொறுப்பாக்க இயலாது. அமைச்சர்களின் செயல்களுக்கு அவர்களே பொறுப்புடையவர்களாவர். அரசரால் பிறப்பிக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் ஆணைகளுக்கு அமைச்சர்கள் மேற்கையொப்பம் இட வேண்டும். ஆகவே, அமைச்சர் ஆணைக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறார். கருத்தளவில் அரசர் முழு அதிகார முடையவராகவும் அதிகாரத்தின் பிறப்பிடமாகவும் இருக்கிறார்; அரசாங்கத்தின் செயல்கள் இவருடைய செயல்களாகும்; அரசின் அலுவலர்கள் இவருடைய பணியாட்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், உண்மையில் சட்டங்களாலும், மரபுகளாலும், வழக்காறுகளாலும் இவருடைய அதிகாரங்கள் வரையறைக்குள்ளாகின்றன. எல்லாப்பிரச்சினைகளையும் முடிவுசெய்யும் இறைமை மன்னரிடமிருந்து மக்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. மக்கள் நாடாக அமைந்து, பிரதிநிதிகளின் வழியாகச் செயல்படுகிறார்கள்.

அரசப்பதவியின் அதிகாரங்கள்

அரசரின் அதிகாரங்கள் குறைந்துகொண்டிருக்கையில் அரசப்பதவியின் அதிகாரங்கள் பெருகிவந்துள்ளன. பரவலாக அரசு, செயற்பாடுகளுக்கும் பொறுப்பேற்றுக்

கொண்டுள்ளது இதற்குக் காரணமாகும். நிருவாகத் துறையிடம் உசிதமாக விடப்பட்டுள்ள அதிகாரங்கள் இங்கிலாந்தில் அரசப்பதவியால் செயல்படுத்தப்படுகின்றன. பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் அரசப்பதவிக்குப் புதிய அதிகாரங்களைக் கொடுக்கின்றன. அரசாங்கத்தின் நிருவாக அதிகாரங்கள் மிக விரிவானவை. பாராளுமன்றத்தோடு சேர்ந்தாலன்றி, அரசப்பதவிக்குச் சட்டமியற்றும் அதிகாரமில்லையெனினும், நிருவாகக் கட்டளைகளைப் பிறப்பிக்க இதற்குப் பெருமளவிலான அதிகாரங்களைச் சட்டங்கள் அளித்துள்ளன. ஹனேவர் மரபினர் பதவிக்கு வந்தபின், அரசப் பதவியின் சிறப்பதிகாரங்கள் இப்பொழுது வழக்கொழிந்து போயின. சிறப்பதிகாரத்தின் பெருமளவு, அரசப்பதவியில் நிலைபெற்றுள்ளது. அரசப்பதவியின் சில அதிகாரங்கள் சிறப்பதிகாரத்திலிருந்து பெறப்பட்டவைகளாகும். அரசப் பதவியின் உசித அதிகார எச்சமென இதை டெய்சி கூறுகிறார். ஆயினும், சில அதிகாரங்கள் சட்டத்தின் வழி பிறந்தவைகளாகும்.

பாராளுமன்றத்தைக் கலந்துகொள்ளாமல் விக்டோரியா அரசியார் என்னென்ன அதிகாரங்களைச் செயல்படுத்த முடியுமென்பதை வரலாற்றாசிரியர் பட்டியல்படுத்தியுள்ளார். "அரசியார் படைகளைக் கலைக்கலாம்; அதிகாரிகளைப் பதவி நீக்கலாம்; போர்க்கப்பல்களை விற்கலாம்; சமாதானம் செய்துகொள்ளலாம்; போரைத் தொடங்கலாம்; தம் குடிமக்களை அரசியார் பிரபுக்களாக்கலாம்; திருச்சபை வட்டமெல்லாவற்றையும் பல்கலைக்கழகமாக்கலாம்; சிவில் பணியாட்கள் பலரைப் பதவிநீக்கலாம்; எல்லாக் குற்றவாளிகளையும் மன்னிக்கலாம்; சிறப்பதிகாரங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கேவலப்படுத்தலாம்." இவை அரசியாரின் சட்டப்படியிலான அதிகாரங்கள் என்பதில் ஐயமில்லை. கேபினெட் இந்த அதிகாரங்களைச் சட்டமுறைப்படி செயற்படுத்தலாம். ஆனால், பாராளுமன்றம் பொதுமக்களின் கண்டனத்திற்கும் கருத்திற்கும் அஞ்சி இவைகளைச் செய்ய முற்படாது.

அரசரின் கொள்கைக்கு அமைச்சர்கள் முழுப்பொறுப்பேற்றல், அக்கொள்கைபற்றி அமைச்சர்கள் முழுக் கூட்டுப் பொறுப்பு பெற்றிருக்கவேண்டுமென்பது தெளிவு. பின்பற்றப் போகும் நடைமுறையை அமைச்சர்கள் அரசருக்கு விளக்கிக் கூறவேண்டும். அரசர் அளிக்கும் அறிவுரையை இவர்கள்

கருத்தில் கொள்ளவேண்டும். முடிவுகளுக்குப் பொறுப்புடைய வர்கள் இம் முடிவுகளுக்கு இணக்கம் தெரிவிக்கவேண்டும். ஆயினும், இவர்கள் தகவல் தெரிவித்து வசப்படுத்தவேண்டுமே தவிர, அரசரை மீறிச் செயல்படலாகாது. 17-ஆம் நூற்றாண்டில் அரசாங்கப்பொறுப்பு இறுதியாக அரசரிடம் நிலைபெற்றிருந்தது. அரசரின் அமைச்சர்கள் நிபுணர்களாக இருந்து அரசருக்கு அறிவுரை நல்கினர். அரசரும் இவர்களைக் கலந்தாராய்ந்தார். ஆனால், 19-ஆம் நூற்றாண்டில் உண்மையான பொறுப்பு அமைச்சர்களிடமிருந்தது. அரசர் சிறந்த ஆலோசகராக இருந்தார். இவரை அமைச்சர்கள் கலந்தாராயக் கடமைப்பட்டிருந்தார்கள். அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்கும் அரசியலமைப்புப்படியிலான அதிகாரத்தை அரசர் இழந்துவிடவில்லை. ஆனால், இந்த உரிமை மூன்றாம் ஜார்ஜ் மன்னர் காலத்திலிருந்து பயன்படுத்தப்படவில்லை. தொடர்ந்து பயன்படுத்தப்படலாமென்பதுமில்லை.

அரசரின் சிறப்பதிகாரங்களைச் செயல்படுத்துவதில் அரசர் இப்பொழுது அமைச்சர்களின் அறிவுரையின்படி நடந்துகொண்டார். அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவர்களானார்கள். பாராளுமன்றத்தைக் கலைக்கும் உரிமையிலும் இந்த உண்மையைக் காணலாம். பாராளுமன்றத்தின் கலைப்பிற்கு அரசியார் இணங்கினரென்றால், அமைச்சரின் கொள்கைக்கு இவர் ஏற்பளிக்கிறார் என்றாகும். பொதுமக்கள் சபையில் தோல்வியுற்ற பிரதமர் இருவழிகளைப் பின்பற்றலாம். ஒன்று, பதவியிலிருந்து விலகிக் கொள்ளுதல். இன்னொன்று, மக்களிடம் முறையிட்டு அவர்களின் முடிவை ஏற்றுக்கொள்ளுதல். பாராளுமன்றத்தைக் கலைக்க இணக்கம் மறுப்பதற்கான சூழ்நிலைகள் எழலாம். ஆனால், அடுத்துப் பதவிக்கு வந்தவர் இதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு இதைப் பாராளுமன்றத்தில் எடுத்துரைக்கவேண்டும். பிரபுக்களைப் படைத்தல் அரசரின் சிறப்பதிகாரத்தின் ஒரு பகுதியென்பதைச் சமீபக்காலத்திய நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டியுள்ளன. பிரபுக்களைப் படைத்தற்கு அமைச்சர்கள் பொறுப்பேற்கவேண்டும்.

மூன்றாம் ஜார்ஜ் ஒரு கட்சித்தலைவரைப்போல் செயல்பட்டார். இவருக்குப்பின் வந்தவர் டோரிக்கட்சிக்கு ஆதரவளித்ததோடு, பாராளுமன்றச் சீர்திருத்தத்தையும் எதிர்த்தார். இவர் இன்னும் சில ஆண்டுகள் உயிரோடு இருந்திருப்பாராயின், முடியாட்சிக்கு இடரானதொரு அரசியலமைப்பு

நெருக்கடி ஏற்பட்டிருக்கும். ஆனல், தாராளக் கருத்துகளுடைய அர்சராகிய நான்காம் வில்லியம் அரியணையேறியது, நிலையை மாற்றிச் சீர்திருத்தச் சட்ட (1832) த்தின் நிறைவேற்றத்திற்கு வழிகாட்டியது.

நான்காம் வில்லியத்தின் மரணம், ஒரு பெண்ணை அரியணையில் அமர்த்தியது. விக்டோரியா அரசியார் இந்த வரலாற்றில் நான்காவது அரசியாவார். அரசியாரின் இளமையும், உயர் குணமும் அரசப்பதவியின் நிலையை வெகுவாக உயர்த்தியது. "இந்த நூற்ருண்டின் தொடக்கத்திற்குப்பின், மூன்று அரசர்கள் பதவியேற்ருர்கள். இவர்களில் முதலாமவர் நீண்டகாலம் அறிவிலியாக இருந்தார்; இரண்டாமவர் ஊதாரியாக இருந்தார்; மூன்ருமவர் கோமாளியைக்காட்டிலும் கொஞ்சம் நன்ருக இருந்தார்". முடியாட்சியின் புகழ் 1837-ல் மங்கிக் கிடந்தது.

அரசியார் அரசு எய்தியபொழுது மெல்போர்ன் பிரபு பிரதம அமைச்சராக இருந்தார். அரசியாரின் இயற்கையான விசைவேகத்தை இவர் அரசியலமைப்பின் எல்லைக்குட் படுத்திக்கொண்டார். இவர் விக் அமைச்சரவைக்கு ஆதரவுகாட்டியது, சிரமத்தை உண்டுபண்ணியது. இதனல், மெல்போர்ன் விலகிக்கொண்டதும், பீலின்[1] தலைமையில் டோரிகள் பதவிக்கு வந்தனர். பீலின் திறமை, அரசியாரை விரைவில் கவர்ந்தது. அவருடைய கொள்கையை அரசியார் மதிப்போடு ஆராய்ந்தார். பீல் இயற்றி நிறைவேற்றிய தானியச்சட்டம் அரசியாரின் ஏற்பைப் பெற்றது.

விக்டோரியா அரசியார் பட்டமெய்தியபொழுது தேசிய வருவாய்க்கும் தனி வருவாய்க்கும் இடையில் ஒரு பிரிவினை ஏற்பட்டது. அரச மானியத்திற்குப் பதிலாக, மூன்றும் ஜார்ஜ் மரபுவழி வருவாய்களை விட்டுக்கொடுத்தார். நான்காம் வில்லியமும் குறிப்பிட்ட சில வருவாய்களை விட்டுவிட்டு, அரச மானியமாக 510,000 பவுன்களைப் பெற்றுக்கொண்டார். விக்டோரியா அரியணையேறியபோது, தேசியச் செலவினங்கள் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டன. அரச மானியம் 385,000 பவுன்களாக உறுதிசெய்யப்பட்டது. பின், இத் தொகை அரசியாருடைய செலவிற்குப் போதவில்லை. எனவே, அரச மானியம் 470,000 பவுன்களாக முடிவுசெய்யப்பட்டது.

[1] Peel

ராபர்ட் பீல், எல்லாப் பிரதம அமைச்சர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருந்தார். எல்லாத்துறைகளையும் கண்காணிப்பில் இவர் வைத்திருந்ததோடு, செயல்திறம் மிக்கவராகவும் இருந்தார். கேபினெட்டின் தலைவராக இருந்த பிரதம அமைச்சர் இப்பொழுது மற்ற அமைச்சர்களின் கொள்கைக்கும் பொறுப்பு ஏற்கவேண்டியவரானர்.

பீல் இறந்ததும் (1850) ஆங்கில அரசியல் வாழ்க்கையில் பால்மர்ஸ்டன் குறிப்பிடத்தக்கவராகத் தோன்றினர். பாராளுமன்றச் சீர்திருத்தத்தை எதிர்த்தாலும், வெளிநாட்டுக் கொள்கையில் இவர் தாராளக்கொள்கையைப் பின்பற்றினர். இங்கிலாந்தின் ஆதரவை இவர் புரட்சி இயக்கங்களுக்களித்தார். அரசியாரைக் கலந்தாலோசியாது பால்மர்ஸ்டன் கொள்கையைச் செயல்படுத்தினரென்று அரசியார் குறைபட்டுக்கொண்டார். பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கு வசதியாகத் தகவல் கொடுக்கவில்லையென்றும் அரசியார் குற்றம் கூறினர்.

அரசியாரின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில், அரசியாரின் ஆதரவையும் நம்பிக்கையையும் பிரதமர் பெறுதற்குரியவர் என்ற அரசியலமைப்புக் கருத்தை இவர் உண்மையாகவே பற்றிநின்றார்.

சொந்தப்பொறுப்பிலிருந்து முற்றிலும் அரசருக்குப் பாதுகாப்பு இருந்தாலும், சொந்த நேர்முகச் செல்வாக்கை அரசாங்கத்தின்மீது செலுத்த அரசருக்குப் போதிய வாய்ப்பு இருந்தது,

இரண்டு துறைகளில் அரசியார் சுயேச்சையான அதிகாரம் செலுத்தினர். ஒன்று, திருச்சபை, படை, கப்பற்படை ஆகியவைகளுக்கு அரசியார் ஆட்களை அமர்த்தினர். இரண்டு, அயல்நாட்டு விவகாரத் துறையிலும் இவர் ஆட்களை அமர்த்த அதிகாரம் பெற்றிருந்தார்.

முன் குறிப்பிட்டதில், இப்பொழுது குறைந்தளவு அரசச் செல்வாக்குப் பயன்படுத்தப்பட்டது. ஆனல், நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையில் அரசியார் பெருமளவு செல்வாக்குச் செலுத்தினர். ஆனல், அயல்நாட்டுக் கொள்கைபற்றிய முழுப் பொறுப்பையும் கேபினெட் ஏற்றுக்கொள்ளுகிறதென்பதை மறந்துவிடலாகாது. நான்காம் ஜார்ஜ் காலத்தில், மாண்புமிகு

அரசருக்கும் அயல்நாட்டுத்துறை அமைச்சருக்கும் இடையில் நடக்கும் கூட்டத்தில் அரசர் கலந்துகொள்வது கடமையாகு மென கானிங் நினைவுபடுத்தினர். அரசர் வெளிநாடு செல்லும் பொழுது ஓர் அமைச்சரும் உடன்செல்லவேண்டுமென்பது அரசியலமைப்பு வழக்காருகும். வெளிநாட்டினருடனான எந்தப் பேச்சுவார்த்தையும் அமைச்சர் வழியாகவே நடைபெற வேண்டும். விக்டோரியா அரசியார் வெளிநாட்டு அரசருடன் கடிதத்தொடர்பு கொண்டால் இக்கடிதங்கள் பிரதம அமைச்சர் அல்லது வெளியுறவு அமைச்சருக்குக் காட்டப்படவேண்டும். இதிலும், பிற துறைகளிலும் அரசர் அமைச்சர்களுக்குத் தனிச் சிறப்பு அறிவுரை தருபவராக இருந்தார்.

அடுத்தடுத்து வந்த அமைச்சரவைகளுக்கு நிலையான அறிவுரையாளராக அரசர் இருந்ததால், வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு தொடர்ச்சியைப் பெற அரசர் ஆவன செய்யலாம். கலந்தாராயும் உரிமை பன்னெட்டு அமைதிக்குச் சிறந்த பாதுகாப்பாகும்.

குடியேற்ற நாடுகளின் விவகாரம் கட்சிச் சர்ச்சைபற்றிய தாக இல்லை. அரசியல் போராட்ட அரங்கிலிருந்து அரசர் அகற்றப்பெற்றது, 19-ஆம் நூற்றாண்டின் அரசியலமைப்பு மாற்றங்களில் சிறப்பானதாகும். அரசர் கட்சிச்சார்பில் லாதவரென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு மரபாகும்.

உயர் நிருவாக ஆட்சியியல் அலுவலர்களையும், நீதிபதி களையும், படை, கப்பற்படை, வானப்படை ஆகியவற்றின் அலுவலர்களையும் அரசர் அமர்த்துகிறார். நீதிபதிகளைத்தவிர, மற்றவர்களை அரசர் பதவியிலிருந்து விலக்கலாம். சட்டத்தை அரசர் செயல்படுத்துகிறார்; ஆட்சியியலை இயக்குகிறார்; வரி யைத் திரட்டுகிறார்; பாராளுமன்றத்தின் இசைவுபெற்ற தொகையைச் செலவிடுகிறார்; அரசத் தூதர்களை அமர்த்து கிறார்; வரவேற்கிறார். பாராளுமன்றத்தைக் கலக்காமல் அரசர் போரைத் தொடங்கலாம் அல்லது முடிவிற்கும் கொண்டு வரலாம். ஆனால், போரை நடத்த பாராளுமன்றம் நிதி உதவவேண்டும். அரசப்பதவியின் மேற்பார்வையில் தல ஆட்சி நடைபெறுகிறது.

சட்டம் செய்யும் அதிகாரத்தையும், திருத்தம், நீக்கம் ஆகி யவைகளைச் செய்யும் அதிகாரங்களையும் அரசப்பதவி இழந்து விட்டது. அரசரின் தடைவாக்கு (Veto) வழக்கொழிந்துபோய்

விட்டது. குடியேற்ற நாடுகளின் சட்டங்களை அரசப்பதவி இப்பொழுதும் மாற்றலாம்; நீக்கலாம். பாராளுமன்றத்தால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தையொட்டி அரசப்பதவி (நிருவாகத்துறை) கட்டளைகளைப் பிறப்பிக்கலாம். ஒப்படைக்கப்பட்ட சட்டஆக்க அதிகாரத்தையும் இப்பொழுது அரசப்பதவி பெற்றிருந்தது.

பெருமக்கள் சபையின் அமைப்பில் அரசப்பதவி கணிசமான அதிகாரம் பெற்றிருந்தது. விரும்பினால் எத்தனைப் பிரபுக்களை வேண்டுமானாலும் இது படைத்து அமர்த்தலாம். அரசரின் விருப்புள்ள காலத்தின்போது பொதுமக்கள் சபை அதன் அலுவல்களை மேற்கொள்ளலாம்.

நீதிமன்றங்களைப் படைக்கும் அதிகாரத்தையும் நீதிமன்ற அதிகார வரம்புகளை மாற்றியமைக்கும் அதிகாரத்தையும் அரசப்பதவி இழந்துவிட்டது. அரசர் நீதிபதிகளை அமர்த்தலாமெனினும், இருசபைகளின் பேருரையினலன்றி இவர்களைப் பதவியிலிருந்து நீக்கமுடியாது. குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் மேல்முறையீடுகளை அரசப்பதவி, பிரிவி கவுன்சிலின் நீதிக்குழுத் துணையோடு ஆராய்ந்து முடிவுசெய்கிறது. குற்றவியல் தண்டனைகளுக்கு உசித அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசப்பதவி மன்னிப்பளிக்கலாம்.

ஆங்கிலிக்கன் திருச்சபையின் மேற்றிராணியார்களையும், அதிமேற்றிராணியார்களையும் அரசப்பதவி அமர்த்துகிறது. அரசரின் இசைவோடு காண்டர்பரி, யார்க் ஆகிய திருச்சபைகளின் குருமார்கள் திருக்கூட்டம் நடைபெற்றன.

இவ்விரிவான அதிகாரங்களை அரசப்பதவி கேபினெட்டின் வழியாகவும், பிரிவி கவுன்சில், குழுக்கள், கழகங்கள், ஆணைக்குழுக்கள் ஆகியவைகளின் வழியாகவும் செயல்படுத்துகிறது. பிரதம அமைச்சரைத் தெரிவுசெய்தல் போன்ற முக்கியமான பணியை அரசர் நேர்முகமாக மேற்கொண்டார்.

அரசரின் செயல்முறைகள்

பிரதம அமைச்சரைத் தெரிவுசெய்தல் அரசரின் மிக முக்கியமான செயல்முறைகளில் ஒன்றாகும். ஒரு கட்சி பெரும்பான்மை பெற்று ஒரு தலைவரைப் பெற்றுமிருப்பின், அத் தலைவரே பிரதம அமைச்சராக ஆகவேண்டுமெனும் மரபு ஒன்றிருந்தது. பாராளுமன்றத்தின் தொழிற்கட்சி உறுப்

பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை அக் கட்சி தலைவராக அறிவிக்கிறது. ஆனால், கன்சர்வேடிவ் கட்சி இந் நடைமுறையைப் பின்பற்றுவதில்லை. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாதபொழுதும், கன்சர்வேடிவ் கட்சி பெரும்பான்மை பெற்றிருந்து ஒரு தலைவர் இல்லையென்றாலும், பதவியிலிருந்து விலகிக்கொண்ட அல்லது இறந்துபோன ஒரு பிரதம அமைச்சருக்குப்பின் பதவிக்கு வரக்கூடிய ஒருவர் இல்லாதபொழுதும் அரசர் சொந்த உசித அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும். 1924-ல் எக் கட்சியும் பெரும்பான்மை பலம் பெற்றிராதபொழுது ஐந்தாம் ஜார்ஜ், லிபரல் கட்சித் தலைவராகிய அஸ்குவித்[1] என்பவரை அல்லது தொழிற்கட்சித் தலைவராகிய ராம்சேமாக்டோனல்டு என்பவரைத் தெரிவு செய்யவேண்டியிருந்தது. அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பை அரசர் ராம்சேமாக்டோனல்டு என்பவருக்குக் கொடுத்தார். 1923-ல் பொனர் லா[2] பதவி விலகியபோது அரசர், கர்சன் பிரபுவை அல்லது பால்டுவினைத் தெரிவுசெய்திருக்கலாம். பலர் கர்சனின் இறுமாப்பைக் கண்டு அவரை வெறுத்தனர். பால்டுவின் சிறிதுகாலம் அமைச்சுப்பொறுப்பில் இருந்திருக்கிறார். அரசர் பால்டுவினைத் தெரிவுசெய்தார். 1894-ல் கிளாட்ஸ்டன் பதவியிலிருந்து ஓய்வுபெற்றபொழுது மற்ற மூன்று பேர்களையும் ஒதுக்கிவிட்டு, அரசியார் (விக்டோரியா) ரோஸ்பெரி[3] பிரபுவைத் தெரிவுசெய்தார். 1931-ல் ஒரு சிக்கலான நிலை தோன்றியது. நாட்டில் கொடிய நிதி நெருக்கடி ஏற்பட்டிருந்தது. அப்பொழுது பதவியிலிருந்த தொழிற்கட்சிக்குப் பொதுமக்கள் சபையில் அறுதிப் பெரும்பான்மை இல்லை. ஆயினும், அக் கட்சி தனித்த பெரும்பான்மைக் கட்சியாக இருந்தது. ராம்சேமாக்டோனல்டு வேலையின்மை உதவிநிதியில் பத்து சதவீத வெட்டுத்திட்டத்தை அறிவித்தார். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இத் திட்டத்தை எதிர்த்தனர். இதன் விளைவாகத் தொழிற்கட்சியில் ஒரு பிளவு ஏற்பட்டது. ராம்சேமாக்டோனல்டும் பதவியிலிருந்து விலகினர். தொழிற்கட்சி உறுப்பினர்களில் பலர் ஹென்டர்சன்[4] பக்கம் சென்றனர். பால்டுவினையும், ஹெர்பர்ட் சாமுவேல்[5]யும் கலந்துகொண்டு, ராம்சேமாக்டோனல்டின் தலைமையில்,

[1] Asquith
[2] Bonar Law
[3] Rosebery
[4] Henderson
[5] Herbert Samuel

ஒரு கலப்பு அமைச்சரவையை அமைக்க அரசர் இவர்களை இணங்கச்செய்தார். அரசரின் இச் செயல் பலரின் கண்டனத்துக்குள்ளாகியது. அரசியலமைப்பு முறையை மீறி அரசர் செயல்பட்டார் என்பதற்குச் சான்றுகள் இல்லை. அரசருக்குத் தவறான ஆலோசனை கூறப்பட்டதென மாரிசன் (Morrison) கருதுகிறார். ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் தொழிற் கட்சியைக் கலந்தாராயவில்லை. மேலும், கன்சர்வேடிவ் கட்சியினரிடம் அமைச்சரவையை உருவாக்கும் பொறுப்பைக் கொடுத்திருக்கவேண்டியது நேர்மையான முறையாகும்.

பிரதம அமைச்சரின் ஆலோசனையையேற்று, அரசர் சபையைக் (பொதுமக்கள் சபை) கலைத்தல் என்பது வழக்கமான நடைமுறையாகும். இந்த நூற்றாண்டில் இரண்டு தடவைகள் பொதுமக்கள் சபையைக் கலைக்கும் பொறுப்பை அரசர் தாமே எடுத்துக்கொண்டார். இவ் விரு தடவைகளிலும் விருப்பில்லா இசைவை அரசர் லிபரல் அமைச்சர்களிடமிருந்து பெற்றார். 1910-ல் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் நிறைவேற்றத்தையொட்டி வாக்காளர்களின் கருத்தை ஏழாம் எட்வர்டு அறிய விரும்பியபொழுது ஒரு நெருக்கடி உருவாயிற்று. இதே ஆண்டில், பெருமக்கள் சபையின் அதிகாரக் கட்டுப்பாடுபற்றி ஐந்தாம் ஜார்ஜ் மக்களின் கருத்தையறிய விரும்பியபொழுது இன்னொரு நெருக்கடி ஏற்பட்டது. இருந்தபோதிலும், 1913-ல் சுயஆட்சிப் பிரச்சினையையொட்டி இணைப்பாதரவு உறுப்பினர்கள் அரசரை நெருக்கியபோதிலும், பொதுமக்கள் சபையைக் கலைக்க மறுத்துவிட்டார். இந் நிகழ்ச்சியில் அரசர் சரியான அரசியலமைப்பு நடைமுறைவிதிகளைப் பின்பற்றினர். ஏனெனில், லிபரல் அரசாங்கம் சபையைக் கலைக்குமாறு அரசருக்கு அறிவுரை அளிக்கவில்லை. அரசர் சபையை அப்பொழுது கலைத்திருந்தால், குறிப்பிட்ட சிறு பிரச்சினைகளுக்கு வாக்காளர்களின் இசைவாணையைப் பெற்றிராத காரணத்திற்காகப் பொதுமக்கள் சபையைக் கலைத்துவிடலாமென்றாகிவிடும்.

பிரதம அமைச்சரின் அறிவுரையின்பேரில் அரசர் பிரபுக்களைப் படைக்கிறார். ஆனால், இதுபற்றிய வாக்காளர்களின் கருத்தை அறிந்துகொள்ளாமல் அரசர் பெருந்தொகையில் பிரபுக்களைப் படைக்க இணங்குவதில்லை. 1910-ல் பெரும் எண்ணிக்கையில் பிரபுக்களைப் படைக்க ஐந்தாம் ஜார்ஜ் மறுத்துவிட்டார். பெருமக்கள் சபையின் அதிகாரம்பற்றிய

பிரச்சினைக்கு வழிகாணும் பொருட்டு அரசர் பொதுத்தேர்தலை நடத்தினர். விருதுகளை வழங்குவதுபற்றியும் அரசரே முடிவு செய்கிறார்.

அமைச்சர்களின் அறிவுரையை அரசர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது உறுதியாக நிறுவப்பெற்ற மரபாகும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு பெற்றிருக்கும் அமைச்சரின் அறிவுரையை அரசர் ஏற்கவேண்டுமென்பது வலியுறுத்தப்படுகிறது. பால்டுவினின் அறிவுரையை ஏற்க மறுப்பதைக்காட்டிலும், அரசுரிமையைத் துறக்க எட்டாம் எட்வர்டு இணங்கியது, இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதே சமயத்தில் அமைச்சர்களும் அரசரின் அறிவுரைக்குப் பெரும் சிறப்பு அளிக்கிறார்கள்.

நாடு, பேரரசு ஆகியவைகளின் ஒற்றுமைச் சின்னமாக அரசர் செயலாற்றுவது அரசியல் செயல்முறைகளைக் காட்டிலும் சிறப்பானதாகும். காமன்வெல்த் நாடுகளின் நல்லுறவிற்கு அரசர் அரும்பணியாற்றுகிறார். மாறுபட்ட நலன்களுக்கும் விரிந்துகிடக்கும் நாடுகளுக்கும் இடையில் இன்றும் இப் பதவி ஒற்றுமையின் சின்னமாக இருந்துவருகிறது.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Bagehot	:	The English Constitution
Sir Charles Petric	:	The Modern British Monarchy
I. Jennings	:	Cabinet Government Ch. 2, 3, 12, 13, & 14

16. கேபினேட் அமைச்சரவை

இடைக்காலத்திய அரசர்கள் முக்கியமான அரசக் காரியங் களைப்பற்றி அவ்வப்போது பேரவையைக்[1] கலந்தாராய்ந்து வந்துள்ளனர். குறிப்பாக, வரிவிதிப்புபற்றி அரசர்கள் அவையைக் கலந்தாலோசித்துள்ளார்கள். நாட்டின் அலுவல்கள் அதிகரிக்கவே அரசர் ஒரு சிறிய அவையை[2] அமர்த்த வேண்டியிருந்தது. இந்த அவையும் நிலையாகத் தொடர்ந்து கூட்டத்திலிருந்துவந்தது. முறைவர் (Justiciar), நிதித்துறை முதல்வர், பொருளாளர், முத்திரை நாயகம், முதன்மை நீதிபதிகள் போன்றோர் இவ் வவையில் இடம்பெற்றனர். தொடக்கத்தில் அரசவை[3]யாக இருந்து பிற்காலத்தில் பிரிவி கவுன்சிலாக இது வளர்ச்சியடைந்தது.

பதின்மூன்றும் நூற்றாண்டில் பிரிவி கவுன்சில் ஓர் உறுதியான நிறுவனமாக இருந்தது. அரசருக்கு அறிவுரை வழங்கப் பிரமாணம் எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள், அவையில் இடம்பெற்றிருந்தனர். ஆனால், வழக்கமாக அரசர் அவைக்கு வருவதில்லை. இதன் அமைப்பை அரசரே முடிவுசெய்தார். இது ஒரு பெரிய அவையாக இருந்ததில்லை. எடுத்துக்காட்டாக, 1404-ல் அவையில் 19 உறுப்பினர்கள் இருந்தார்கள். அரசரின் அதிகாரங்களைச் செயல்படுத்துவதுபற்றி அரசர் பிரிவி கவுன்சிலைக் கலந்தாராயலாமெனினும், பேரவையைக் கலந்தாலோசிக்கத் தடையெதுவுமில்லை. பெருமக்கள், மேற்றிராணியார்கள், அரசவையினர் ஆகிய அதிகாரச் சார்பில்லாதவர்கள் பேரவையில் உறுப்பினர்களாக இருந்தனர். ஆகையால், நடைமுறையில் பிரிவி கவுன்சிலின் செயற்பாடுகள் அரசரின் குணத்தையும், வலிமையையும் பொறுத்திருந்தன. மூன்றும் ஹென்றி, இரண்டாம் ரிச்சர்டு, ஆரும்

[1] Magnum Concilium
[2] Council
[3] Curia Regis

ஹென்றி ஆகியோர் உரிய வயதடையாதவர்களாக இருந்து ஆட்சிசெய்தபோது, பிரிவி கவுன்சில் உண்மையிலேயே நாட்டை ஆட்சிசெய்தது. ஆனால், ஏழாம் ஹென்றியின் காலத்தில் இது அரசரின் முடிவுகளைப் பதிவுசெய்வது வழக்கமாக இருந்தது.

கவுன்சிலின் தனியாணைப் பேரறிவிப்புகளின் வழியாக அரசரின் விருப்பு நாட்டுமக்களுக்கு எட்டியது. கவுன்சில் தேவையான ஆட்சிப்பணிகளையும் ஏற்றுச் செயல்படுத்தியது. ஆகவே, ஆட்சிப்பணிகளோடு கவுன்சில் சிவில், கிரிமினல் வழக்குகளில் நீதிவழங்கும் அதிகாரங்களைப் பெற்றிருந்தது. மக்கள் கவுன்சிலிடம் விண்ணப்பிக்கும் வழக்குகளிலிருந்து அசல் சிவில் அதிகார வரம்பு தோன்றியது. பதினைந்தாம் நூற்றாண்டில் கவுன்சிலுக்குச் செல்லும் வழக்குகள் அரசரின் தலைமைச் சட்ட ஆலோசகராகிய சான்சலரின் ஆய்விற்கு விடப்பட்டன. பொதுச்சட்டத்தோடு இவர் பொதுநேர்மைச் சட்டத்தையும் வளர்த்தார். அமைதிகாண் நடுவர்கள் கடமை தவறுதல், கலகங்கள், சான்றுயர்[1] ஊழல்கள் போன்ற குறிப்பிட்ட குற்றங்களுக்கான அதிகாரத்தைக் கவுன்சிலில் பெற்றிருந்தது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், இதனுடைய குற்றவியல் விசாரணை வரம்பை பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தொடர்ந்து பாராளுமன்றம் சட்டத்தால் எதிர்த்துவந்தது.

பிரிவி கவுன்சில் டியூடர்களின் ஆட்சியின்போது அதிகாரத்தின் உச்சகட்டத்தை எய்தியது. சட்டஆக்க, நிருவாக, நீதி பரிபாலன நிறுவனமாக இவர்கள் இதைப் படைத்தனர். இது அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தது. அவசரச் சட்டங்களைச் செயல்படுத்தியது. இவைகளுக்குப் பணியாதவர்களைக் கவுன்சில் தண்டித்தது. இதனுடைய ஓர் அங்கமாக இருந்த விண்மீன் நீதிமன்றம் அரசியல் குற்ற ஆய்விற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. கடும் சோதனைமுறையைப் பயன்படுத்திக் குற்றவாளிகளிடமிருந்து உண்மையைப் பிழிந்தெடுத்தது. ஆனால், பாராளுமன்றம் அரசரை உறுதியாக எதிர்த்ததால் பிரிவி கவுன்சிலின் அதிகாரம் குறைந்தது. 1641-ல் விண்மீன் நீதிமன்றம் ஒழிக்கப்பட்டது. உள்நாட்டுப போரின்போதும், பொதுநல அரசுக் காலத்தின்போதும் பிரிவி கவுன்சில் செயல்குன்றி மறைந்தது. 1660-ல் இது

[1] Jurors

மீட்டுயிர்ப்புப் பெற்றபொழுது இதனுடைய அதிகாரங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டன.

பிரிவி கவுன்சிலில் இன்று ஏறத்தாழ 300 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். முன்னாள் கேபினெட் அமைச்சர்களும், இந்நாளைய கேபினெட் அமைச்சர்களும், காண்டர்பரியின் அதி மேற்றிராணியாரும், பொதுமக்கள் சபையின் சபாநாயகரும், மேல்முறையீட்டு நீதிபதிகளும், முதன்மை நீதிபதியும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளும், உயர்தர தூதுவர்களும் இங்கிலாந்திலும் காமன்வெல்த்திலும் உள்ள மற்ற முதன்மையானவர்களும் பிரிவி கவுன்சிலில் இடம்பெற்றிருந்தனர். அரசர் இறக்கும்பொழுதும் அல்லது அரசர் திருமணஞ் செய்து கொள்ள விரும்பும்பொழுதும் இது ஒரு சபையாகக் கூடும். கவுன்சிலின் எழுத்தரால் அழைக்கப்பட்ட நான்கிலிருந்து ஆறு உறுப்பினர்கள் வழக்கமாகக் கவுன்சிலின் அலுவலில் ஈடுபடுகிறார்கள். கவுன்சிலின் கூட்டம் நடக்கக் குறைந்தது மூன்று உறுப்பினர்கள் இருக்கவேண்டும். இந்த உறுப்பினர்கள் வழக்கமாகக் கேபினெட் உறுப்பினர்களாக இருப்பர். இவர்கள் அரசியாரின்முன் கூடுவர். எழுத்தர் கவுன்சிலின் நடவடிக்கைகளுக்கு அதிகாரமளிக்கிறார். கூட்டத்தின் நிகழ்ச்சிப்பதிவில் இவர் ஒப்பமிடுகிறார்.

இதன் கடமைகள்:

(1) பதவிப்பிரமாணத்தை ஏற்கும் முறையான அலுவலை நிறைவேற்றுதல், அரசரின்கீழ் பதவியில் இருக்கும் குறிப்பிட்ட சிலரை அமர்த்தல் நீக்கல், மேற்றிராணியார்களின் விசுவாசத்தை ஏற்றல்.

(2) தனியாணைப் பேராறிக்கை அல்லது கவுன்சிலின் கட்டளைகளால் விவாதமின்றிக் கேபினெட்டின் முடிவுகளை நிறைவேற்றுதல்.

(3) நிலைக்கமிட்டிகளுக்கு உறுப்பினரை அளித்தல். இது கவுன்சிலின் எஞ்சிய அறிவுரை அளிக்கும் பணியாகும்.

பிரிவி கவுன்சிலின் நீதிக்குழு இதன் மிகச்சிறந்த குழுவாகும். கவுன்சிலின் நீதிவழங்கும் அதிகாரத்தை நீக்கிய சட்டம் இங்கிலாந்தில் மட்டும் செயல்பட்டது. கடல்கடந்து வாழும் குடிமக்களின் முறையீட்டை இது கேட்டு முடிவு

செய்தது. 1833-ல் பிரிவி கவுன்சிலின் நீதி விசாரணைக்குழு முறைப்படி அமைக்கப்பட்டது. கடல்கடந்த பிரிட்டிஷ் சார்பு நாடுகளிலிருந்தும், காமன்வெல்த் நாடுகளிலிருந்தும் வரும் முறையீடுகளை இது கேட்டு முடிவுசெய்தது. இத்தகைய வழக்குகளில் இதற்கு மேல்முறையீட்டு விசாரணை அதிகாரம் இருந்தது. இந்த நீதி விசாரணைக்குழுவில், சான்சலர் பிரபு (நிதித்துறை முதல்வர்) கவுன்சிலின் தலைவர், மேல்முறையீட்டுப் பிரபுக்கள், உயர்பதவி வகித்த பிரிவி கவுன்சிலர்கள் ஆகியோர் இருந்தனர்.

(4) குறிப்பிட்ட பிரச்சினைகளை ஆராய்வதற்கு மூன்றிலிருந்து ஐந்து உறுப்பினர்களைக்கொண்ட தனிக்குழுக்களை நிறுவுதல், தொலைபேசிகளிலிருந்து செய்திகளைக் கறத்தல், அமைச்சர்களின் சுமையைக் குறைத்தல் ஆகியவைகளை 1957-ல் பிரிவி கவுன்சிலர்கள் விசாரித்தார்கள். பொதுமக்கள் சபையின் ஆய்வுக்குழு அரசாங்கத்தைப்பற்றி நன்கறிந்திருப்பினும், பிரிவி கவுன்சிலின் குழு நெருங்கிச் செயல்படக்கூடியதாக இருக்கிறது. இக்குழு சபையின் பலதரப்பட்ட கருத்தை வெளிப்படுத்துவதில்லை. ஏனெனில், இது பிரதிநிதித்துவக் குழுவன்று.

பதினேழாம் நூற்றாண்டில் கேபினெட்

ஸ்டூவர்ட்டுகளின் ஆட்சிக்காலத்தில் கவுன்சிலில் 50-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்ததால், திறமையான ஆலோசனைச் சபையாக அல்லது நிருவாகக் குழுவாக இது இருக்கமுடியவில்லை. மேலும், துரோகிகளும், குறைகூறுபவர்களும் இதில் இடம்பெற்றிருந்ததால், இதைக் கொள்கை உருவாக்கும் குழுவாகக் கொள்ளமுடியவில்லை. ஆகவே, முதலாம் ஜேம்ஸும், சார்லஸும் அடிக்கடி ஒரு சிறிய குழுவிடமிருந்து அல்லது ஸ்டிராஃபோர்டு அல்லது லாட் (Laud) போன்ற தனி மனிதரிடமிருந்து அறிவுரையை நாடினர்கள். வெளி விவகாரம், படை, கப்பற்படை, குறைகூறல், மனக்குறைகள், வணிகம், தோட்டத்தொழில்கள் போன்றவைகளை ஆராய, பிரிவி கவுன்சில் குழுக்களை அமர்த்தியது. ஆனால், குழுவின் நடைமுறை விதிகள் அருவருப்பாக இருந்ததால், குழு முறையாகச் செயல்பட முடியவில்லை.

பெருமளவிலான கவுன்சிலின் வலிமையை முறியடிக்க முதலாம் சார்லஸ், சிறிய குழுவாக உள்ள உறுப்பினர்களைக்

கலந்தாராய்ந்தார். இக் குழுவினர் கேபினெட் அல்லது கேபால் என்று பெயர்பெற்றனர். அரசரின் தனிப்பட்ட அறையில் இக் குழு அரசரைச் சந்தித்ததால் கேபினெட் என்றும், கிளிஃபோர்டு[1], ஆர்லிங்டன்[2], பக்கிங்ஹாம்[3], ஆஸ்லி[4], லாடர்டேல்[5] ஆகியோரைக் கொண்டிருந்ததால் இவர்களின் பெயர்களிலுள்ள தலையெழுத்துகள் சேர்ந்து கேபால்[6] என்றும் வழங்கப்பட்டது. இது பிரிவி கவுன்சிலின் உண்மையான குழுவன்று. ஏனெனில், இது முழுமையாக அரசரால் தெரிவுசெய்யப்பட்டதாகும். இது கேபினெட்டைப் போல் தோன்றவும் இல்லை. இதனுடைய உறுப்பினர்கள் அரசரோடு இணைக்கப்பட்டிருந்தனர். உறுப்பினர்கள் இணைந்து செயல்படவுமில்லை. இவர்கள் அரசரின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார்கள். இவர்கள் ஒருவரையொருவர் வெறுத்தனர்; எனவே, இவர்கள் ஒரு குழுவாகச் செயல்பட முடியவில்லை. கொள்கையை முழுமையாகக் கலந்தாராய, இவர்கள் துறைத்தலைவர்களாக ஒன்றுகூடுமாறு அழைக்கப்படவில்லை. குழுவின்முன் வைக்கவிரும்பிய பிரச்சினைகளை மட்டும் ஆராய இவர்கள் அரசரால் கூட்டப்பட்டார்கள். மேலும், இவர்களுடைய விவாதங்களில் கலந்துகொண்ட தலை, முரணை செய்திகளையே அரசரால் கேட்கமுடிந்தது. மாறாக, இக் காலத்தில் கேபினெட்டின் அறிவுரை அரசியல் முறையில் பெரும் சிறப்புப் பெறுகிறது. மேலும், கேபால் ஒரு நிரந்தரமான நிறுவனமாக இருக்கவில்லை. அரசர் இக் குழுவைமட்டும் கலந்துகொள்ளவில்லை. மற்றவர்களையும் இவர் கலந்தாராயலாம். இவர் மற்றவர்களைக் கலந்து ஆராய்ந்தும் வந்துள்ளார்.

கேபால் மக்களின் ஆதரவைப் பெறவில்லை. அரசரின் தனிமுறையிலான செல்வாக்கையும் இது உயர்த்தவில்லை. ஏனெனில், கவுன்சிலுக்கு வெளியேதான் கொள்கை உருவாக்கப்பட்டது. ஆனால், அரசருக்கு அறிவுரை அளித்தவர் யார் என்பதை அறியமுடியாததால், தவற்றுக்கான பொறுப்பை

[1] Cliford
[2] Arlington
[3] Buckingham
[4] Asley
[5] Lauderdale
[6] Cabal

நிருணயிக்க முடியாமல் பாராளுமன்றம் திணறியது. ஆகையால், முன்னிருந்த பிரதானநிலைக்குப் பிரிவி கவுன்சில் உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்கால கேபினெட் அமைச்சரவையின் வளர்ச்சி

முதலாம் ஜார்ஜ் கேபினெட் கூட்டங்களில் கலந்து கொள்ளாதபொழுது கேபினெட் அதற்கென ஓர் அதிகாரத்தைப் பெறத்தொடங்கியது. ஏனெனில், இதன் முடிவுகளைக் கூட்டத்தில் பங்குபற்றிய அமைச்சர்களில் ஒருவர் அரசருக்குத் தெரிவித்தார். இந் நடைமுறையை இரண்டாம் ஜார்ஜ் மன்னர் தொடர்ந்து பின்பற்றியதை மூன்றும் ஜார்ஜ் ஏற்றுக் கொண்டார். இதன் விளைவாக, அரசரின் தனிப்பட்ட செல்வாக்குக் குறைந்தது. இதனால் ஒரு சிறந்த அமைச்சர் உருவானார்.

ஆனால், கேபாலுக்கும் இக் காலத்திய கேபினெட்டிற்கும் தொடர்பான பிணைப்பு இருந்ததாகத் தோன்றவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசின் பெரிய அலுவலர்களைக்கொண்ட ஒரு முறையான கேபினெட்டை அரசர் உருவாக்கினார். இவர்களில் பலருக்குத் துறைப் பொறுப்புகள் இல்லை. ஆனால், இத்தகைய பெரிய அவை ஒற்றுமையையும் இரகசியத்தையும் பெற்றிருக்கவில்லை. எனவே, சிறியதோர் கேபினெட் உட்குழு வளர்ச்சியடைந்தது. அரசரின் அரண்மனையிலுள்ள உயர் அலுவலர்கள், அரசாங்கத்தை நடத்தியவர்கள் இதில் இருந்தனர். எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட அமைச்சரோடு கலந்துரையாடிக் கொள்கைமுடிவுகளுக்கான ஏற்பாட்டையும் வால்போல் செய்தார். பின் திறமையான கேபினெட்டைக் கூட்டி ஒற்றுமையான கொள்கை உருவாக்கப்பட்டது. முன்கூட்டியே செய்த முடிவுகளுக்கு முறையான இசைவைப் பெறக் கேபினெட்டை அழைப்பது இயல்பான நடவடிக்கையாகும்.

அறிவுரையை அரசர் ஏற்கும்படி செய்வது முதன்மையான அமைச்சர் ஒருவரின் கடமைப்பொறுப்பாகும். எந்த அளவிற்கு இது சாத்தியமாயிற்றென்பது அரசரின் ஆளுமையையும் அமைச்சரின் ஆளுமையையும் பொறுத்ததாகும். டவுன்சென்ட்[1] பதவி நீக்கப்பட்டபொழுது வால்போல் 1717-ல் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். இவர் எதிர்க்கட்சித்

[1] Townshend

தலைவராக இருந்துகொண்டு பெருந்தொல்லை கொடுத்ததால் இவர் டவுன்சென்டோடு பதவியில் அமர்த்தப்பட்டார். மூத்த பிட்டை[1] இரண்டாம் ஜார்ஜ் அமைச்சரவையில் வைத்துக் கொள்ள விரும்பாததால், 1745-ல் பெல்ஹாம்[2] பதவியிலிருந்து விலகிக்கொண்டார். அரசர் விட்டுக்கொடுக்கவேண்டிய தாயிற்று. அரசுச்செயலராகப் பிட் பணியாற்றினால்தான் நியூகாசில்[3] 1757-ல் அமைச்சரவையை அமைக்கப்போவ தாகக் கூறினர். இறுதியாக, ரோமன் கத்தோலிக்கர்களுக்கு மேலும் சலுகைகள் அளிக்கக்கூடாதெனும் உறுதிமொழியைக் கிரன்வில்லி அமைச்சரவையிடமிருந்து பெறுவதில் மூன்றும் ஜார்ஜ் தோல்வியுற்றார்.

அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான ஓர் இணைப்பாகக் கேபினெட்டின் பங்குப்பணி படிப்படியாக வளர்ச்சியடைந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் கோட் பாட்டின்படி அதிகாரங்கள் பிரிவினை செய்யப்படவேண்டும். இதன்படி நிருவாகம் சட்ட ஆக்கத்துறையிலிருந்து சுயேச்சை யாகச் செயல்படவேண்டும். நடைமுறையில் நிருவாகம், கொள்கைக்கும் ஆட்சிக்கும் பொறுப்புடையதாக இருக்க வேண்டுமெனவும், பாராளுமன்றம் நேர்முகமாகச் சட்டத்தா லும்மறைமுகமாகச் சப்ளை அளிக்க மறுப்பதாலும் அரசாங்கத் தைக் கட்டுப்படுத்தலாமெனவும் கருதப்பட்டது. இருப்பினும், பாராளுமன்றத்திற்கு ஏற்புடைய கொள்கையை அரசாங்கம் பின்பற்ற வற்புறுத்தும் எந்த முறையும் பயனுடையதாகத் தோன்றவில்லை. கட்சிமுறை வளர்ச்சியடைந்தபோதுதான் இது சாத்தியமாயிற்று. பொதுமக்கள் சபை பெரும் பான்மைக் கட்சியின் தலைவரை அமைச்சராகத் தெரிவு செய்வதால், அவருடைய ஆலோசனையின்பேரில் கொள்கை யைப் பின்பற்ற முடிகிறதென்பதை அரசர் ஏற்றுக்கொண் டார்.

பதினெட்டாம் நூற்றாண்டில அரசப்பதவி பட்டறிவைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. இக் காலத்தில் இருப்பதுபோல் அக் காலத்தில் கட்சிகளெதுவும் இருக்க வில்லை. பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்ப தென்பது சில குழுக்களையும், வாடிக்கையாதரவையும்,

[1] Pitt, Elder

[2] Pelham

[3] New Castle

சுயேச்சையாளர்களின் நல்லெண்ணத்தையும் பொறுத்திருந்தது. இத்தகைய நிலை, தற்காலத்திய கேபினெட்டின் வளர்ச்சிக்கு வசதி செய்திருக்கமுடியாது. பிரதம அமைச்சரின் அதிகாரத்திற்குப் பணிதல், அரசரின் கருத்திற்கு மேலானதாக நிலவும் கேபினெட்டின் கருத்து, அரசியல் ஒருமைப்பாடு, கூட்டுப்பொறுப்பு ஆகியவை இக்காலத்திய கேபினெட்டின் குணவியல்புகளாகும். இவைகளில் எதுவும் அக்காலக் கேபினெட்டின் வளர்ச்சியில் காணப்படவில்லை. பிரதம அமைச்சர்கள் பதவியில் நீடிக்கப் பொதுமக்கள் சபையின் ஆதரவைப் பெற்றிருக்கவேண்டுமெனினும், பல பிரதம அமைச்சர்களோ அரசரின் சொந்த விருப்பு அடிப்படையில் அமர்த்தினர். தேவைக்கேற்ப, அரசர்கள் இவர்களுடைய அறிவுரைகளோ மாற்றியிருக்கிறார்கள். 1714-ல் அமைச்சரவை முழுமையாகப் பதவியிலிருந்து விலகியது. பின், இதைப்போல் 1782-ல் மறுபடியும் நடந்தது. மேலும், அமைச்சரவையில் இருகட்சியினர் வழக்கமாக இடம்பெற்றிருந்தாலும், பாராளுமன்றத்தில் இவர்கள் தோற்கடிக்கப்பட்டால் இவர்கள் கூட்டாகப் பதவிவிலகவேண்டுமென்பதில்லை. 1719-ல் வால்போலின் எதிர்ப்பினால் ஸ்டான்ஹோப்[1]பின் பிரபுத்துவ மசோதா தோல்வியுற்றதெனினும், இதனால் ஸ்டான்ஹோப் பதவியிலிருந்து விலகவில்லை. மறுபடியும் 1733-ல் வால்போல் அரசாங்க நிதி மசோதாவாகிய கலால்வரி மசோதாவை விலக்கிக்கொள்ளவேண்டியதாயிற்று. 1739-ல் இவருடைய விருப்பிற்கெதிராக வால்போல் ஸ்பெயின் நாட்டின்மீது போர் தொடுக்கவேண்டியதாயிற்று. இவ் வேளைகளில், இவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவில்லை.

எவ்வாறாயினும், இந்நூற்றாண்டின் இறுதியில் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதில் பொதுமக்கள் சபை பெருமளவில் அதிகாரத்தைச் செயல்படுத்தத்தொடங்கியது. ஆகவே, 1780-ல் டன்னிங்[2] "அரசப்பதவியின் (நிருவாகத்தின்) செல்வாக்குப் பெருகியிருப்பது குறைக்கப்படவேண்டு"மெனும் தீர்மானமொன்றைக் கொண்டுவந்தார். 1782-ஆம் ஆண்டின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அரசியல் வாடிக்கையாதரவிற்கான பல வாய்ப்புகளை அகற்றின. சில ஆண்டுகளுக்குப் பின், மூன்றாம் ஜார்ஜ் தீவிர அரசியலிலிருந்து விலகிக்

[1] Stanhope

[2] Dunning

கொண்டபொழுது பிட் முதன்மைபெற்றார்; கேபினெட் முறையும் வளர்ச்சியடைந்தது.

ஆனால், 1832-ல் நிறைவேறிய சீர்திருத்தச் சட்டம், அரசரின் அதிகாரத்திற்கு இறுதிமுடிவு செய்தது. கொள்கையின் மீதான கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக்கொள்வதற்குக் கேபினெட்டை ஒரு கருவியாக உருவாக்கும் சக்திகளை இச் சட்டம் செயல்படுத்தத்தொடங்கியது. பிரதம அமைச்சரைத் தெரிவுசெய்வதும், அரசாங்கத்தை அமர்த்துவதும், கட்சியின் வளர்ச்சிக்குப்பின் அரசரிடமின்றி மக்களிடம் நிலைபெற்றது. கேபினெட்டிற்கும் கட்சிகளுக்கும், கேபினெட்டிற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையேயான உறவுமுறையை வரையறைசெய்ய மரபுகள் வகுக்கப்பட்டுள்ளன. நிலைமாற்றங்களுக்கேற்ப, இத்தகைய மரபுகள் வளர்க்கப்பட்டுள்ளன; மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவைபற்றிய ஓர் ஆய்வு இக் காலத்திய கேபினெட்டின் இயல்புகளை வெளிப்படுத்தும்.

கேபினெட் முறைபற்றிய மரபுகள்

கேபினெட்டின் செயல்முறை பெருமளவு மரபால் நிருணயிக்கப்படுகிறது. 1937 வரையில் கேபினெட்டின் உறுப்பினர்களாகிய அமைச்சர்களுக்கு ஊதியமளிக்க அரசப்பதவியின் அமைச்சர்கள்பற்றிய சட்டம் வகைசெய்தபொழுது, இது சட்டத்திற்குப் புறம்பானதாகவே இருந்தது. பாராளுமன்றத்தில் கேபினெட் அமைச்சர்கள் மற்ற உறுப்பினர்களைப் போலவே சமமாகவைத்து எண்ணப்பட்டனர். 1857-ல் கேபினெட் உறுப்பினர்களுக்குப் பொதுமக்கள் சபை முன்னுரிமை தர இசையவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும், நடைமுறையில் வழக்கத்தையொட்டி அமைச்சர்கள் சில சிறப்புரிமைகளைப் பெற்றுவருகிறார்கள். ஆகவே, முன்வரிசையில் சபாநாயகருக்கு வலப்புறத்தில் இவர்களுக்கு இருக்கைவசதி செய்யப்பட்டுள்ளது. விவாதத்தின் போது, இவர்கள் சபாநாயகரின் பார்வையில் பட இது எளிதாக இருக்கிறது. அரசர், பிரதம அமைச்சர், பாராளுமன்றம், கட்சிகள், வாக்காளர்கள் ஆகியவர்களோடு கேபினெட்டின் உறவுமுறைகளை ஒழுங்குபடுத்தும் விதிகள் பிரிட்டிஷ் அரசியலமைப்பில் மிக அடிப்படையான மரபுகளாக இருக்கின்றன. ஏனெனில், இவைகளின் வழியாகத்தான் மக்களின் இறைமை செயல்படுகிறது. இவை எவ்வாறு

செயல்படுகின்றன என்பதைமட்டுமே நாம் இங்குக் குறிப்பிடுகிறோம்.

சிறு தகுதிப்பாடுகளுக்குட்பட்டுக் கேபினெட்டை உருவாக்குவதில் பிரதம அமைச்சர் முழுமையான சுதந்திரம் பெற்றிருக்கிறார். பொதுவாக, இதில் பதினெட்டு உறுப்பினர்கள் இருப்பர். ஆனால், ஹோம்[1], வில்சன் ஆகியவர்களின் கேபினெட்டில் 23 உறுப்பினர்கள் இருந்தார்கள். முதல் உலகப்போரின் போது உறுப்பினரின் எண்ணிக்கை ஐந்தாகக் குறைக்கப்பட்டது. கேபினெட்டில் சிலவேளைகளில் அமைச்சுப் பொறுப்பில்லாத அமைச்சர்கள் இடம்பெறுகின்றனர். பிரதமர் விரும்பினால் புதிய அமைச்சர்களை அமர்த்தலாம்.

பொதுமக்கள் சபையின் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து கேபினெட் அமைச்சரவை உருவாக்கப்படுகிறது. பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியுள்ள கட்சியின் தலைவரை அமைச்சரவையை உருவாக்குமாறு அரசர் அழைக்கவேண்டும். இந்த விதிக்கு இரண்டு விதிவிலக்குகள் இருக்கலாம். ஒரு முக்கியமான மூன்றாவது கட்சி இருந்தால், முழுமையான பெரும்பான்மை எக் கட்சிக்கும் இல்லாமல் இருக்கமுடியும். இயல்புமீறிய சூழ்நிலைகள் கலப்பு அரசாங்கத்தை உருவாக்க உதவியாக இருக்கலாம். கட்சிப்பிளவால் மூன்றாவது கட்சியொன்று உண்டாகலாம். அல்லது புதிய அரசியல் தேவைகளை நிறைவு செய்யவும் ஒரு புதிய கட்சி உருவாகலாம். ஆனால், இருகட்சி முறையைப் பாதிக்கின்ற வகையில் போதிய அளவில் புதிய கட்சி உருப்பெறுவதில்லை. மாறாக, கலப்பு அமைச்சரவைகள் விரும்பப்படுவதில்லை. இவை வலிமையான, முடிவான தோர் அரசாங்கத்தை உருவாக்கத் தவறிவிடுகின்றன.

சட்டமன்றத்திற்கும் நிருவாகத்துறைக்குமிடையிலான ஒத்துழைப்பைப் பெறுவதற்கு இந்த மரபு உதவியுள்ளது. இந்த ஒத்துழைப்பு இல்லாமையால் ஸ்டுவர்ட்டுகளின் அரசாங்கங்கள் வீழ்ச்சியடைந்தன. சபையின் எதிர்ப்புக்குள்ளாகாத அமைச்சரவையை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதைப் பிற்காலத்தில் அரசர்கள் ஏற்றுக்கொண்டார்கள். சபையின் ஆதரவைப் பெறக்கூடியவர்களை அரசர் தெரிவுசெய்தார் அல்லது அரசரின் கொள்கையைப் பின்பற்றக்கூடியவர்களைத்

[1] Home

தெரிவுசெய்துவிட்டுப் பின் பொதுமக்கள் சபையில் தம் ஆதரவாளர்களைக் கொண்டுநிரப்புவார். ஆனால், 1832-ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம் இறைமையை மக்களுக்கு மாற்றிய பொழுது, இம் மரபை ஏற்க வழிவகுத்தது. இதற்குப்பின், அமைச்சரவையைத் தெரிவுசெய்யும் அதிகாரம் அரசருக்கு விடப்படவில்லை. அரசர் இதை வலியுறுத்தி இருந்தால், இவர் கட்சி அரசியலுக்குட்பட்டிருப்பார். குறைந்த செல்வாக்கையும், பெருமையையும் வைத்துக்கொண்டு அரசர் இதைச் செய்திருக்கமுடியாது. ஏனெனில், அரசரின் தனிமதிப்பு நிலையும் இப்பொழுது தேய்ந்துகொண்டு வந்தது. 1834-ல் இந் நிலை நான்காம் வில்லியத்திற்கு அறிவிக்கப்பட்டது. அரசர் இந் நிலையைப் பயன்படுத்திக்கொண்டு மெல்போர்ன் பிரபுவைப் பதவிவிலகுமாறு செய்து தம் விருப்பிற்குகந்த ஒருவரை அவரிடத்தில் அமர்த்தினர். இவ்வாறு அமர்த்தப் பட்டவர் டோரிக்கட்சித் தலைவராகிய ராபர்ட் பீல் ஆவார். ஆயினும், அடுத்துநடந்த தேர்தலில் டோரிகள் தோல்வியடையவே மெல்போர்னின் சார்பில் பீல் பதவியிலிருந்து விலகநேர்ந்தது.

பொதுமக்கள் சபையில் ஒரு பெரும் பிரச்சினையை யொட்டித்தோல்வியடைந்த அரசாங்கம் பதவியிலிருந்துவிலக வேண்டும் அல்லது பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு கேட்க வேண்டும். பொதுமக்கள் சபையின் எதிர்ப்பிற்குள்ளாகியிருக்கும் அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருக்கமுடியாதென்பது 1841-ல் தெளிவாயிற்று. இரண்டாண்டுகளுக்குமுன், தீவிரவாதிகள், ஐரிஷ்காரர்கள் ஆகியோரின் ஆதரவை இழந்த பொழுது மெல்போர்ன் தாமாகவே பதவியிலிருந்து விலகிக் கொண்டார். இருந்தபோதிலும், விக்குகளின் ஆதரவாளர்களாகிய பள்ளியறைப்பெண்களை விக்டோரியா அரசியார் மாற்ற விரும்பாததால், பீல் பதவியேற்க விரும்பவில்லை. பொதுமக்கள் சபையில் வாக்களிப்புப் பாதகமாக இருந்தபோதிலும், மெல்போர்ன் தொடர்ந்து பதவியில் இருந்து வந்தார். "பொதுநலத்திற்குகந்ததாகக் கருதக்கூடிய மிக முதன்மையான நடவடிக்கைகளைச் சபை நிறைவேற்றும் அளவிற்குப் போதுமான நம்பிக்கையை மேதகு அரசியாரின் அமைச்சர்கள் பெற்றிருக்கவில்லை" என்றும், "இச் சூழ்நிலையில் இவர்கள் தொடர்ந்து பதவியில் இருப்பது அரசியலமைப்பின் உட்கருத்திற்கு மாறுபட்டதாகு"மென்றும் 1841-ல் பீல் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது, நிலை உச்சகட்டத்தை அடைந்தது. இதன் பயனாக, விக்குகள் பாராளு

மன்றத்தைக் கலைக்கும்படி அரசரைக் கேட்டனர். அடுத்து நடைபெற்ற பொதுத்தேர்தலில் இவர்கள் தோல்வியடைந்தார்கள். ஆனாலும், இவர்களுக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறும் வரையில் பதவியிலிருந்து விலகவில்லை.

பொதுமக்கள் சபையில் அரசாங்கத்தைத் தோல்வியுறச் செய்வதென்பது இன்று இயலாததாகும். ஏனெனில், கட்சி முறையின் கட்டுப்பாடும் நெறிகளும் இதைத் தவிர்த்துவிடுகின்றன. கட்சியினர் கேபினெட்டின் முடிவுகளுக்கெதிராக வாக்களித்தால் அரசாங்கப் பதவியிலிருந்து விலகவேண்டும் அல்லது சபை கலைக்கப்படவேண்டும். ஆனால், உறுப்பினர்கள் (பொதுமக்கள் சபையின்) பதவியை இழக்க விரும்பமாட்டார்கள். ஆகவே, ஒருமுறை அமைக்கப்பட்டதும், பொதுமக்கள் சபை கேபினெட்டைக் கட்டுப்படுத்துகிறதென்பதைவிடக் கேபினெட்டுதான் பொதுமக்கள் சபையைக் கட்டுப்படுத்துகிறதென்பது உண்மையாகும். கேபினெட்டின் கொள்கையைப் பாராளுமன்றம் பெரும்பாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறது.

தேர்தலில் தோல்வியுற்ற அரசாங்கம் உடனே பதவியிலிருந்து விலகிக்கொள்ளுகிறது. ஒரு காலத்தில், பொதுத் தேர்தலில் அரசாங்கம் தோல்வியுற்றாலும், சபை கூடி நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை நிறைவேற்றும்வரை அரசாங்கம் பதவியில் இருக்கும். இருப்பினும், தேர்தலில் தோல்வியடைந்ததை ஏற்றுக்கொண்டு உடனடியாகப் பதவியிலிருந்து விலகிக்கொள்ளும் நடைமுறையை 1868-ல் டிசரெலி ஏற்படுத்தினர்.

கட்சி, பெரும்பான்மை பலத்தோடு திரும்பினால், நிலையில் மாறுதல் இருக்கும். ஏனெனில், சிறுபான்மைக் கட்சிகள் எப் பக்கம் வாக்களிக்கும் என்பது இதற்குத் தெரியாமல் இருக்கும். இந் நிகழ்வில், அரசாங்கம் பாராளுமன்றத்தைச் சந்தித்து, பேருரைத் திருத்தம் ஒன்றின் முடிவிற்கு எதிர் பார்த்திருக்கவேண்டும்.

கேபினெட்டின் முடிவுகளுக்கு எல்லா அமைச்சர்களும் கூட்டாகப் பொறுப்புடையவர்களாகவேண்டும். பதவி விலகலுக்கான காரணங்களை ஓர் அமைச்சர் விளக்கும் சமயத்தைத்தவிர, கேபினெட்டின் விவாதங்கள் எவைபற்றியும் பாராளுமன்றம் தெரிந்துகொள்வதில்லை. கொள்கையை

அறிவிக்கும்பொழுது முடிவுகள்மட்டும் பொதுவாக அறிவிக்கப்படுகின்றன. விவாதங்கள் இரகசியமாகவே இருக்கின்றன. விவாதங்களின்போது மாறுபட்ட கருத்துகள் வெளியானால், அரசாங்கத்தின் நிலை கடுமையாகப் பாதிக்கப்படும். கேபினெட்டின் கூட்டமொன்றில் ஓர் உறுப்பினர் எந்தத் திட்டத்தையும் எதிர்த்துப் பேசலாமெனினும், முடிவு செய்யப்பட்ட கொள்கையை இவர் ஆதரிக்கவேண்டும் அல்லது பதவிவிலகவேண்டும். கருத்துவேறுபாடு கருதிப் பலர் பதவி விலகியுள்ளார்கள். ஆனால், இத்தகைய பதவி விலகல்கள் அடிக்கடி நடப்பதில்லை. அமைச்சர்கள் ஒரே கட்சியினராக இருப்பதால் தொடக்கத்தில் இவர்களிடையே ஒற்றுமை நிலவும். எவ்வாறாயினும், முன்னாள் அமைச்சர் ஒருவர் கட்சிமாறுவது நடவாததொன்றாகும். ஒரே ஒரு பிரச்சினையில் அரசாங்கத்தோடு உறுப்பினர்கள் மாறுபடுவது வழக்கம். இவருடைய அடிப்படையான அரசியல் கருத்து அப்படியே இருந்துவருகிறது.

ஆகவே, கேபினெட் இணைந்தே நிற்கிறது; இணைந்தே வீழ்ச்சியடைகிறது. ஒரு குறிப்பிட்ட அமைச்சரின் கொள்கை தாக்குதலுக்குள்ளாகும்பொழுது, அரசாங்கமே முழுமையாகத் தாக்கப்படுகிறது. ஒரு பெரும் பிரச்சினையில் ஓர் அமைச்சரின் தோல்வி அரசாங்கத்தின் தோல்வியாகிவிடுகிறது. இருப்பினும், இன்று, பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடந்தது போல், இத்தகைய தோல்விகள் ஏற்படுவதில்லை. கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாக அரசாங்கம் எப்பொழுதும் பெரும்பான்மை வாக்குகள் பெறக்கூடும். இருந்தபோதிலும், குறைகூறல் பரவலாகவும் கடுமையாகவும் இருப்பின், அரசாங்கம் கொள்கையில் மாற்றம் செய்யலாம். இக் குறை கூறலோடு ஓர் அமைச்சர் தம்மைத் தொடர்புப்படுத்திக் கொண்டு, தம்முடைய பெருமை பாதிக்கப்படுகிறதென்று கருதுவாராயின், இவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளலாம். அபிசீனியப் பிரிவினைத் திட்டத்தையொட்டி 1935-ல் சர் சாமுவல் ஹோர்[1] பதவி விலகியதை எடுத்துக்கூறலாம்.

கடைமுறையில் இன்று கூட்டுப்பொறுப்பு என்பது அரசாங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கேபினெட்டின் முடிவுகளைச் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் ஆதரிக்கத் தயாராக இருக்கவேண்டுமென்றாகிவிட்டது. கூட்டுப் பொறுப்

[1] Sir Samuel Hoare

புடைமையின் இந்த இயல்பு இன்றும் இருந்துவருகிறது. "ஒருவர் கேபினெட்டில் இருக்கவேண்டுமெனில், அவர் கேபினெட்டின் முடிவுகளுக்குப் பொதுவான ஆதரவளிக்க வேண்டு"மென "சன்டே டைம்ஸ்"[1] குறிப்பிட்டது.

கூட்டுப்பொறுப்பு என்பது ஓர் அமைச்சரின் தவறுகளுக்குப் பொருந்தாது; நிரந்தர அலுவலர்களுக்கு அமைச்சர் பொறுப்புடையவருமல்லர்.

அரசியலமைப்பில் கேபினெட்டின் நிலை

கொள்கை உருவாக்கம், செயல்முறை ஒருங்கிணைப்பு ஆகியவை கேபினெட்டின் பணியாக இருந்தாலும், இது அரசாங்கத்தின் நிருவாக அங்கமாகமட்டும் இருக்கவில்லை பிரிட்டிஷ் அரசியலமைப்பிற்கு இசைவினை அளிக்கும் ஒரு முறையாக இது இருக்கிறது. மக்களாட்சி அரசாங்க அமைப்பிற்கு ஓர் அடிப்படையாகிய அதிகாரப் பிணைப்புக்கு இது மாற்று ஏற்பாடாக இருக்கிறது. கேபினெட்டின் வழியாக நிருவாகத் துறை சட்டசபைக்கும் இதன்வழி வாக்காளருக்கும் இது நேர்முகமாகத் தொடர்புகொண்டிருக்கிறது.

கேபினெட் முறை வளர்ச்சியடையும் வரையில் பாராளுமன்றத்தின் விருப்புகளுக்கிணங்க அமைச்சர்கள் செயல்படுவதை உறுதிப்படுத்துவது கடினமாக இருந்தது. பொதுமக்கள் சபையிடம் நிதியுதவி கேட்காமல் சமாளிக்கும் வரையில் கொள்கையை முடிவுசெய்வதில் அரசர் பொறுப்புடையவராக இருந்தார். இவருக்குக் கட்டுப்பாடுகள் மிகக் குறைவே. சப்ளை தர மறுப்பதும், பொறுப்புடைய அமைச்சரைக் கடுங்குற்ற விசாரணைக்குட்படுத்துவதும்போன்றதடையாணைகளைப் பொதுமக்கள்சபை பயன்படுத்தலாம். ஆயினும், இவ் விரண்டு முறைகளும் அரசாங்கத்தை வலிமையற்றதாகச் செய்துவிடும். முன்கூட்டியே குறைகூறலைத் தடுத்துவிட வேண்டுமென டியூடர்கள் உணர்ந்தார்கள். முதன்மையான அரசியல் அறிஞர்கள் தேர்தலில் கலந்துகொண்டு பொதுமக்கள் சபையில் சென்று கருத்துகளை விளக்கிக்கூறியபின் அரசரிடம் கருத்துகளை எடுத்துரைத்தனர். ஸ்டூவர்ட்டுகள் சிறிது குறைந்த திறமையுடையவர்களாக இருந்ததால், சட்டசபைக்கும் நிருவாகத்துறைக்குமிடையிலான மோதல் அரசாங்க முறிவில் கொண்டுபோய் விட்டுவிட்டது.

[1] Sunday Times

1688-க்குப்பின், அரசாங்கமும் பாராளுமன்றமும் நெருங்கித் தொடர்புகொண்டது. 1697-ஆம் ஆண்டின் அரசமானிய ஏற்பாட்டினால், பணத்திற்காக அரசர் அடிக்கடி பொதுமக்கள் சபையை எதிர்நோக்கி இருக்கவேண்டியதாக இருந்தது. எனவே, கொள்கை தொடர்ந்து ஆய்விற்குள்ளானது. இதன்பின், பொதுமக்கள் சபையின் விருப்பிற்குகந்தவர்களை அமைச்சர்களாகத் தெரிவுசெய்வதன் அவசியத்தை அரசர் அறிந்தார். கட்சிமுறையோடு அமைச்சரவையை இணைப்பதால் இதைப் பெறமுடிந்தது. கேபினெட் ஒரு நிருவாகக் குழு. இது சட்டமன்றத்திலிருந்து இதனுடைய அதிகாரத்தைப் பெறுகிறது. இக் குழுவினர் பெரும்பான்மைக் கட்சியினரிலிருந்து அமர்த்தப்பட்டார்கள். கேபினெட் ஓர் இணைப்புக்குழுவாகும்; அரசின் சட்டமியற்றும் அங்கத்தையும் செயல்துறையையும் இணைக்கும் ஒரு குழுவாகும்.

1832-ல் அரசியல் இறைமை மக்களைச் சென்றடைந்த பொழுது கேபினெட் முறை மேலும் ஒரு நிலையைக் கடந்தது. இப்பொழுது நிருவாகத்துறை சட்டமியற்றும் துறையோடு மட்டுமின்றி, பாராளுமன்றத்திற்கு வெளியேயுள்ள வாக்காளர்களோடும் இணைக்கப்பட்டது. கட்சிமுறையினால் இன்று ஒரு பொதுத்தேர்தல் என்பது நாட்டை யார் ஆட்சி செய்வதென்பதை முடிவுசெய்யும் ஒரு குடியொப்பமாக மாறிவிட்டது. இத்தகைய ஏற்பாடு மக்களாட்சிக்கும் பயனுள்ள அரசாங்கத்திற்கும் வகைசெய்கிறது. இரண்டு காரணங்களுக்காக இது மக்களாட்சியாக இருக்கிறது. ஒன்று, தேர்தலில் அறிவிக்கப்பட்ட கொள்கையைப் பின்பற்றக்கூடிய அரசாங்கத்திற்கு மக்கள் வாக்களிக்கக்கூடும். இரண்டு, பாராளுமன்றத்தில் உள்ள பிரதிநிதிகள் சிறப்பாக எதிர்த்தரப்பினர் வழியாக அரசாங்கத்தைத் திறனாய்வு செய்யும் உரிமையை மக்கள் வைத்துக்கொள்ளுகிறார்கள். பொது மக்கள் சபையில் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றிருக்கும் கட்சியிலிருந்து அரசாங்கம் அமைவதால் இது பயனுடையதாக இருக்கிறது.

நிருவாகத்துறை மிக்க வலிமையுடையதாக மாறுகிறதெனச் சிலர் அஞ்சுகிறார்கள். பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருப்பதைவிட, கட்சிமுறையின் வழியாகக் கேபினெட் இக் காலத்தில் பொதுமக்கள் சபையைக் கட்டுப்படுத்த முற்படுகிறது. கலைக்கப்படலாமெனும் அச்சத்தால் பொதுமக்கள் சபை தன்னை நெறிமுறைக்குட்படுத்திக்

கொள்ளுகிறது. சட்ட ஆக்கத்தை இது கட்டுப்படுத்துகிறது. நிதிபற்றிய செயற்குறிப்புகளை இது வரைகிறது. இவைகளை போதிய அளவு விவாதிக்க முடியாதவாறு உறுப்பினருக்கு நேரம் ஒதுக்குகிறது. ஒப்படைக்கப்பட்ட சட்ட ஆக்கத்திற்கு இது பெருமளவு வாய்ப்பு அளித்துள்ளது. அமைச்சர்களின் எண்ணிக்கையை இது அதிகரித்துள்ளது. இதனால், இன்று பொதுமக்கள் சபையில் நூற்றுக்குமேற்பட்ட அரசாங்கத் தரப்பினர் இருக்கின்றனர். அரசுக்குச் சொந்தமான தொழிற் சாலைகளின் வழியாக நாட்டின் உற்பத்தியில் இவர்கள் தலையிடலாம்.

தற்காலப் பொதுநலவாழ்வு அரசிற்கு இத்தகைய வளர்ச்சிகள் இன்றியமையாதனவாகும். பாராளுமன்ற இறைமைபற்றிய வழக்கமான கோட்பாடு தனிச்சிறப்புடையதன்று. முடியரசின் வல்லாட்சியோடு இதனுடைய மோதல் குறிப்பிடத்தக்கதாகும். பாராளுமன்றத்திற்கு மாறுனதாக இன்று நாம் கேபினெட்டைப் பார்க்கலாகாது. ஆனால், அரசியலமைப்பின் செயற்பாட்டில் ஒன்றை மற்றொன்றிற்குத் துணையாகக் கொள்ளுதல்வேண்டும்.

கேபினெட்டின் கடமைகள்

உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் பின்பற்றுவதற்கான முதன்மையான கொள்கையைப்பற்றி இது முடிவுசெய்கிறது. தேர்தலின்போது கட்சி எடுத்துரைத்த கொள்கையைச் செயல்திட்டமாக வரைந்து விரிவாக இது செயல்படுத்துகிறது. அதிகாரத்திற்கு வந்தவுடன் ஒரு குறிப்பிட்ட கட்சி, கொள்கையை வகுத்துச் செயல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு இது தடையாக இருக்காது. கட்சிக்கு மட்டுமின்றி, நாடு முழுவதற்கும் கேபினெட் பொறுப்புடையதாகும்.

கொள்கையின் விவரங்களை இது விரித்துரைக்கிறது. கட்சி பதவிக்கு வந்தவுடன் கொள்கையைச் செயல்படுத்தும் பொறுப்பை அரசாங்கத்திடம் விட்டுவிடுகிறது. உண்மையில் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்கும், கட்சியின் செயல்திட்டத்திற்கும் வழக்கமாக வேறுபாடு இருக்கும். நிலவும் நிலைக்கேற்ப, அரசாங்கம் திட்டங்களை மறுஆய்வு செய்யவேண்டும். எல்லாத்துறைகளுக்குமிடையில் அரசாங்கம் ஒருங்கிணைப்பிற்கு வகைசெய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, செயற்குறிப்புகளை நிறைவேற்றுவதில் தொடர்புடைய எல்லாநலன்களையும் அரசாங்கம் கலந்தாய்கிறது.

பல்வேறு துறைகளின் கொள்கைகளை இது ஒருங்கிணைக்கிறது. சுமுகமாக ஆட்சி நடக்கவும், வெற்றிகரமாகக் கொள்கையைச் செயற்படுத்தவும் பாதிக்கப்படும் துறைகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு இருக்கவேண்டும். பள்ளியை விட்டு வெளியேறும் வயதை உயர்த்தும் ஒரு திட்டம் கல்வித் துறையை மட்டுமன்றி வேலை வாய்ப்பு, உற்பத்தித்துறை பாதுகாப்பு அமைச்சகம், நலவாழ்வு, சமூகக்காப்பு, உள்துறை ஆகியவைகளையும் பாதிக்கும்.

பெருமளவு கீழ்மட்டத்தில் ஒருங்கிணைப்பைப் பெறுகையில் கொள்கையின் பரவலான கூறுகளைக் கேபினெட் முடிவு செய்கிறது. கொள்கைத் திட்டமிடலுக்கும், திட்டச்செயற்பாட்டிற்கும் இது பொருந்தும். ஆகையால், வெற்றியோடு செயல்படக் கேபினெட்டில் துறைத்தலைவர்கள் பலர் இருக்கவேண்டும்.

எதிர்பாராத பெரும் பிரச்சினைகளையொட்டி இது முடிவு செய்கிறது. நாட்டிற்குள்ளும் வெளியேயும் தொடர்ச்சியாக எழும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முடிவுகாணவேண்டும். பாராளுமன்ற அலுவலுக்கப்பால், பத்திரிகையின் கவனத்தை இது ஈர்ப்பதாலும், பொதுமக்கள் சபையில் கேள்விகளை எழுப்புவதாலும் இவை கேபினெட் மட்டத்திற்கு வருகின்றன. மேலும், வெளிவிவகாரங்களில் அவசர முடிவுகளை அடிக்கடி எடுக்கவேண்டியிருக்கும்.

வருங்காலத்திற்கான திட்டங்களை இது உருவாக்குகிறது. அரசு நிலையாக இருப்பதால், 50 ஆண்டிற்கப்பாற்பட்டவைகளுக்கு இப்பொழுதிருந்தே திட்டமிடவேண்டும். இந்த நூற்றாண்டு முடிவிற்கு வருவதற்குள் மக்கள் தொகையின் போக்குகள்பற்றிய திட்டங்களை வரையவேண்டும். மின்சக்தி உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளோடு ஒருங்கிணைத்து அணுசக்தி வளர்ச்சிக்கு வழிசெய்யவேண்டும். பாதுகாப்பிற்கான புதிய முறைகளைத் திட்டமிடல்பற்றியும், உற்பத்திக்கு அறிவியல் முன்னேற்றத்தைப் பயன்படுத்துவதுபற்றியும் கேபினெட் திட்டமிடவேண்டும். அடிக்கடி மாறும் கட்சியின் உறுப்பினரைக் கொண்டமையும் கேபினெட் நீண்டகாலத் திட்டத்தை வரைதல் கடினமாகிவிடுகிறது.

ஆகவே, பிரிட்டிஷ் அரசியலமைப்பில் கேபினெட் கொள்கையை உருவாக்கும் நிறுவனமாக உள்ளது. முற்போக்

குடைய அரசாங்கத்திற்கு இது செயல்வேகத் தூண்டுணர் வைக் கொடுக்கிறது. கேபினெட் இல்லையேல் கொள்கை முடங்கிப்போகிறது.

இருபதாம் நூற்றாண்டில் கேபினெட் முறையின் வளர்ச்சி

கேபினெட் முறை திட்டமிடப்பட்டு வரையப்பெற்ற நிறுவனமன்று. படிப்படியாகத் தோன்றிய மேம்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு அனுபவத்தின் விளைவாக இது வளர்ச்சியடைந்ததெனலாம். சூழ்நிலை மாற்றங்களுக்கேற்பப் புதிய தேவைகள் எழுந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரசின் பணி குறைவாக இருந்ததால், அரசாங்கம் நிதானமாகவும் மெதுவாகவும் செயல்பட்டால் போதுமானது. ஆனால், இந்த நூற்றாண்டில், அரசியல் பொருளாதார வாழ்க்கையில் காணப்பட்ட வேகம், தலையிடாமைக்கொள்கை கைவிடப்படல், பொதுநல வாழ்வு அரசின் தோற்றம், இருபெரும் போர்களால் ஏற்பட்ட விளைவுகள் ஆகியவை கேபினெட் முறையின் செயல்வேகத்தை விரைவுபடுத்தின.

ஒரு பெரிய கேபினெட் பொதுக்கொள்கையைத் திறமையாக இயக்கமுடியாதென்பது முதல் உலகப்போரின்போது தெளிவாயிற்று. ஆனால், 1916 வரை லாயிட் ஜார்ஜ்[1] போர்க்காலக் கேபினெட்டை உருவாக்கவில்லை. இதற்குப்பின் அமைந்த "சிறிய கேபினெட்" பிரிட்டனின் போர்க்கொள்கையை முழுமையாக இயக்கியது. இக் கேபினெட் அமைச்சரவையில் ஐந்து உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் பொனர் லா[2] வைத்தவிர மற்ற நால்வருக்கும் தனிப்பட்ட துறைப் பொறுப்புகள் இல்லை. தேவையான துறைத்தலைவர்களையும் நிபுணர்களையும் இது கூட்டத்திற்கழைத்தது. படைத்தலைவர்களும் இக் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

அன்றுட ஆட்சிமுறைக்கும் நீண்டகாலப் பொதுத்திட்டமிடலுக்கும் இடையே வேறுபாடு இருக்கவேண்டுமென்பதற்காக, ஹால்டேன்[3] குழுவினரும், எல். எஸ். அமெரி[4] யும் அமைதிக்

[1] Lloyd George
[2] Bonar Law
[3] Haldane
[4] L. S. Amery

காலத்திற்குச் சிறிய அளவிலான கேபினெட்டை வலியுறுத்தினர்கள். செயல்முறை அடிப்படையில் பாதுகாப்பு, வெளிநாடு, போரசு, குடியேற்ற நாடுகள், பொருளாதார விவகாரங்கள், சமூகப்பணிகள் ஆகிய துறைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர்களோ இக் கேபினெட் கொண்டிருக்கும். குறிப்பிட்ட துறைத்தலைவர்களின் ஆலோசனை தேவைப்படும் பொழுது இவர்கள் கேபினெட் கூட்டங்களுக்கு அழைக்கப்படுகிறார்கள்.

ஆனால், இத்தகைய திட்டத்தில் பல இடர்கள் இருக்கின்றன. கொள்கையையும், ஆட்சியையும் என்றுமே பிரித்து வைத்துவிடலாமென்பது இயலாது. துறைப்பொறுப்பில்லாத அமைச்சர்கள் கேபினெட்டில் இடம்பெறவில்லையெனில், கேபினெட் முழுமை பெறுவதில்லை. துறைத்தலைவர்களின் ஆட்சி அனுபவம் கேபினெட்டிற்குக் கிடைப்பதில்லை. 1945-ஆம் ஆண்டின் படைக்குறைப்புத் திட்டத்தின் பெரும் வெற்றிக்குத் தொழில், தேசியச் சேவை ஆகிய துறைகளின் அமைச்சராகிய எர்னெஸ்ட் பெவின்[1] என்பவரின் அனுபவம் காரணமாக இருந்தது. இந்த ஏற்பாடு, பாராளுமன்றத்திற்கான துறைப் பொறுப்பை அழித்துவிடுகிறது. இத்தகைய சிறிய அமைச்சரவையில் இடம்பெறுத முதன்மையான தலைவர்களுக்கிடையில் பொறுமை ஏற்படலாம். மேலும், திறமைமிக்க இளம் அமைச்சர்கள் இதில் இடம்பெறுவதில்லை. கொள்கையை உருவாக்கும் பணி ஒரு சிறு குழுவிடம் விடப்படுவதால் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் முதன்மையான கட்சித்தலைவர்கள் விடுபட்டுவிடுகின்றனர். கொள்கையை உருவாக்குவதோடு, கேபினெட் கட்சியையும், பாராளுமன்றத்தையும், நாட்டையும் வழிநடத்திச் செல்ல வேண்டும்; பொதுக்கருத்தோடு தொடர்புகொள்ளவேண்டும்.

சர்ச்சிலின் போர் கேபினெட்டில் நான்கு துறைத் தலைவர்கள் உள்பட, எட்டு அமைச்சர்கள் இருந்தனர். தொழில், தேசியச் சேவை, உற்பத்தி, உள்துறை, மறு அமைப்பு ஆகிய துறைகளின் அமைச்சர்கள் இதில் இடம்பெற்றனர். 1945-க்குப் பின், ஒருங்கிணைப்பு, கொள்கை ஆகியவைபற்றிய ஐந்து அல்லது ஆறு அமைச்சர்கள் உள்பட, கேபினெட்டுகளில் ஏறக்குறைய இருபது அமைச்சர்கள் இருந்தார்கள். துறைத் தலைவர்களை அமைச்சரவையில் இருத்தவேண்டுமெனும்

[1] Ernest Bevin

போக்கு வளர்ந்துவருகிறது, ஆகையால், சர் அலக் டக்லஸ் ஹோம், வில்சன் ஆகிய இருவரின் அமைச்சரவைகளில் 23 அமைச்சர்கள் இடம்பெற்றிருந்தனர்.

கேபினெட்டின் வேலைப்பளு ஓரளவிற்குக் குழு அமைப்பினால் குறைந்திருக்கிறதெனலாம். கேபினெட் குழுக்கள் மூன்று வகைப்படும். இவை: நிலைக்குழு, தனிப்பட அமைந்த குழு, முறையீணையாக்குழு ஆகியவைகளாகும். பாதுகாப்பு, சட்டஆக்கம், உள்விவகார ஒருங்கிணைப்பு, பொருளாதாரம் உற்பத்தி ஆகியவைகளின் ஒருங்கிணைப்பு போன்ற துறைகளுக்கென நிலைக்குழுக்கள் இருக்கின்றன. பாதுகாப்புக் குழுவில் கருவூலம், வெளியுறவு அலுவலகம், உள்துறை, காமன்வெல்த் தொடர்பு அலுவலகம், குடியேற்ற நாட்டு அலுவலகம், போர் அலுவலகம், விமானத்துறை, நாவாய்த் துறை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் முப்படைத்தலைவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். கருவூலத் துறையின் நிலையான செயலரும் இக் குழுவில் இடம்பெறுகிறார். இக் குழு நாட்டுப்பாதுகாப்பு முயற்சிகளில் ஈடுபடும். இக் குழுவிற்குப் பிரதமர் தலைமைதாங்குகிறார். இக் குழு, பல உட்குழுக்களைப் பெற்றிருக்கிறது. கொள்கைபற்றிய முக்கியமான கருத்துகளைமட்டும் கேபினெட் ஆராய்வதற்கு இத்தகைய அமைப்பு உதவுகிறது. பேரரசுக்குழு[1] கேபினெட்டின் குழுவாகாதென்பது ஜென்னிங்ஸ் என்பவரின் கருத்தாகும். தனிப்பட்ட பிரச்சினைகளைத் தனிப்பட அமைந்த குழு (Adhoc) ஆராய்கிறது. அமைச்சர்களை முறையீணையாக் குழுக்கள் அவ்வப்போது அமைக்கின்றன.

மிக நெருங்கிய தொடர்புடைய பல துறைகளின் கொள்கைகளையும் பணிகளையும் ஒருங்கிணைப்பதற்கான ஓர் அமைப்பு அண்மையில் உருவாகியுள்ளது. ஒன்றோடொன்று தொடர்புடைய பொருள்களாகிய பாதுகாப்பு, வெளியுறவு, பொருளாதார விவகாரங்கள் ஆகிய துறைகளுக்கு மிக முக்கியமான அமைச்சர்கள் தலைவர்களாக்கப்பட்டுள்ளனர்.

கேபினெட்டின் நடைமுறைகளை முறையாக 1917-க்கு முன் பதிவுசெய்யவில்லை. பின், லாயிட் ஜார்ஜ் கேபினெட் செயலகம் ஒன்றை நிறுவினர். கேபினெட் செயலர் இப்பொழுது கேபினெட் கூட்டங்களில் கலந்துகொள்ளுகிறார்.

[1] Imperial Committee

கேபினெட் கூட்டங்களுக்கான பொருள்குறிப்பை இவர் தயாரிக்கிறார்.

கேபினெட்டின் கூட்டங்கள் எங்கும் எப்பொழுதும் நடை பெறலாமெனினும், இவை வழக்கமாக 10, டவுனிங் தெருவி லுள்ள கேபினெட்டின் அறையில் புதன்கிழமைதோறும் நடை பெறுகின்றன. அடிக்கடி கூடுவதற்கான சூழ்நிலைகள் எழலாம். அவசரக் கூட்டங்களும் கூட்டப்படலாம்.

பொருள்குறிப்பு (Agenda) பிரதம அமைச்சரின் கட்டுப் பாட்டில் இருக்கிறது. எதைச் சேர்க்கவேண்டுமென்பதையும், எந்தவரிசையில் அலுவல் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென் பதையும் இவர் முடிவுசெய்கிறார். அவசரமானவைகளை இவர் நிகழ்ச்சிநிரலில் சேர்க்கலாம். இவருடைய இசைவுடன் மற்ற அமைச்சர்கள் சில பொருள்களைக் கேபினெட்டின்முன் வைக்க லாம். ஒரு பொருள்பற்றிய ஆய்வைப் பிரதமர் தொடங்கி வைக்கிறார். எடுத்துக்கொண்ட பொருளோடு தொடர்புடைய அமைச்சர்களையும் பிரதமர் கலந்துகொள்ளுகிறார். பொது வான இணக்கம் ஒன்று ஏற்படுமென்றால் உடனடியாக முடிவு செய்யப்படுகிறது. ஆனால், திறனாய்வுகளையும் மாற்றுக் கருத்துகளையும் ஓர் அமைச்சர் எடுத்துரைக்கலாம். ஒரு கொள்கை முழுவதாக ஆராயப்படும் திறமைக்காகவன்றி, ஓர் அமைச்சரின் துறைசார்ந்த திறமைகளுக்காகமட்டும் ஒருவர் அமைச்சராக அமர்த்தப்படுவதில்லை. ஆகவே, ஒரு பொரு ளோடு தொடர்புடைய அமைச்சர்களோடுதான் பெரும் பான்மையான விவாதங்கள் இருக்கும். ஆனால், கட்சிச் சர்ச் சைகளை எழுப்பக்கூடியவைகளைப்பற்றிய கருத்துகளைக் கேபினெட்டின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் எடுத்துரைக் கலாம். ஆனால், கேபினெட் குழுத்தலைவரின் கருத்திற்குத் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும். ஆயினும், பிரதம அமைச்சரின் மனப்போக்கு முதன்மையானதாகும். தனிச் சிறப்பறிவுடைய எவரும் கேபினெட் கூட்டத்திற்கு அழைக்கப் படலாம். படைத்தலைவர்கள் அடிக்கடி கூட்டத்தில் கலந்து கொள்வர். சில வேளைகளில் சிவில் பணியாளர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். இதற்குப் பிரதம அமைச்சரின் தனிப்பட்ட அதிகாரம் தேவையாகும்.

கூட்டுப்பொறுப்பிற்கு முக்கியமான கேபினெட் நடை முறையின் இரகசியம், பிரிவி கவுன்சிலர்களின் பிரமாணத் தால் காக்கப்படுகிறது. எல்லா அமைச்சர்களும் பதவிப்

பிரமாணம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். என்ன நடக்கிறது என்பதுபற்றிய தகவலைப் பல்வேறு வழிகளிலிருந்து அறியலாம். பத்திரிகைகளுக்குச் செய்திகள் கொடுக்கப்படுகின்றன. முன்னாள் கேபினெட் அமைச்சர்கள் நூல்கள் எழுதுகின்றனர். கேபினெட் கூட்டங்களில் என்ன நடந்ததென்பது பற்றிய விறுவிறுப்பான செய்திகளை நிருபர்கள் கொடுக்கலாம். மேலும், கருத்துவேறுபாடு காரணமாகப் பதவிவிலகும் அமைச்சர் பாராளுமன்றத்தில் நிலையை விளக்க வாய்ப்புப்பெறுகிறார். இவருடைய சொற்பொழிவில் மேலும், சில தகவல்கள் கிடைக்கலாம்.

கேபினெட்டின் ஒருமைப்பாட்டை நிலைப்படுத்துவதற்காக வாக்கெடுப்பைப் பயன்படுத்தி முடிவெடுப்பதில்லை. கருத்துவேறுபாடு எழும்போது தனிப்பட்ட உறுப்பினரின் கருத்தை அறிந்துகொண்டு பின் பொதுக்கருத்து உருவாக்கப்படுகிறது. கேபினெட்டின் முடிவைப் பிரதம அமைச்சர் அறிவிக்கிறார்.

கேபினெட்டின் கூட்டங்கள் இரண்டுமணி நேரம் நடக்கலாம். எடுத்துக்கொண்டுள்ள பணியின் சிறப்பைக் கருத்தில் கொண்டு பார்க்கும்பொழுது இது மிகக்குறைந்த காலமாகத் தோன்றுகிறது. இவ்வளவு விரைவாக அலுவல்களை முடிப்பதற்கான காரணங்கள்:

(1) ஒரு தனிப்பட்ட அமைச்சரால் முடிவுசெய்ய முடியாத மிக முக்கியமான அல்லது அரசியல் தனிச்சிறப்பிற்குரிய ஒரு விவகாரம் கேபினெட்டின்முன் கொண்டுவரப்படுகிறது.

(2) பாதிக்கப்பட்ட அமைச்சர்களுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளாலும் துறைகளுக்கிடையேயான விளக்கங்களாலும் கேபினெட்டின் பார்வைக்கு வருமுன் பிரச்சினையில் தெளிவு ஏற்பட்டுவிடுகிறது.

(3) முன்கூட்டியே அமைச்சர் பிரதமரைக் கலந்து கொண்டு தக்கவாறு செயற்குறிப்பில் மாற்றம் செய்துவிடலாம்.

(4) துறைகள் இடர்களை எதிர்நோக்கி அவைகளை அகற்றிவிடுகின்றன.

(5) கேபினெட் கூடுவதற்குமுன், சம்பந்தப்பட்ட எல்லாச்செய்திகளும் சான்றுகளும், அமைச்சரின் கருத்துகளும் கேபினெட்டிற்குக் கிடைத்துவிடுகின்றன.

(6) ஒரு பொருளை விரிவாக ஆராய வேண்டுமெனில், இதை முன்கூட்டியே கேபினெட் குழுவொன்றில் ஆராய்வது வழக்கம்.

(7) விரைந்து முடிவுசெய்வதற்கான அமைதியான சூழ நிலை.

(8) பிரதம அமைச்சரின் நிலை.

(9) ஒரு முக்கியமான கொள்கைபற்றி முடிவுசெய்ய வேண்டுமெனில், பிரதம அமைச்சர் முன்கூட்டியே நான்கு அல்லது ஐந்து அமைச்சர்களோடு சொந்தமுறையில் கலந்து பேசி முடிவுசெய்கிறார்.

(10) அரசாங்க அலுவல்களின் வளர்ச்சிக்கும் சிக்கலான தன்மைக்குமேற்ப, மேம்பட்ட அமைப்புகளும் முறைகளும் வளர்ச்சியடைந்துள்ளன.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Walter Bagehot	:	English Constitution
J. P. Mackintosh	:	The British Cabinet
I. Jennings	:	Cabinet Government
A. Aspinall	:	The Cabinet Council
H. Daalder	:	Cabinet Reform in Britain (1914-63)
Lord Morrison	:	Government and Parliament
P. Edelman	:	The Minister

17. பிரதம அமைச்சர்

1878-ல் டிசரெலி[1] பிரதம அமைச்சர் என்ற பதவிப்பெயரைப் பயன்படுத்தினர். ஆனல், பிரதம அமைச்சரின் பணிகளை நார்மானியர் காலத்திலிருந்து யாரோ ஒருவர் செயல்படுத்தி வந்திருக்கிறர். இரண்டாம் வில்லியத்தின் கீழ் ரால்ப் பிலாம்பார்டு[2], முதலாம் ரிச்சர்டின் கீழ் வில்லியம் லாங்சாம்ப்[3], மூன்றும் எட்வர்டின் கீழ் வில்லியம் வைக்ஹாம்[4], எட்டாம் ஹென்றியின் கீழ் உல்கியும் தாமஸ் கிராம்வெல்லும்[5] முதலாம் எலிசபெத் அரசியாரின் கீழ் வில்லியம் செசில்[6] என்பவரும் பணியாற்றியுள்ளனர். இரண்டாம் சார்லஸின் கீழ் பணியாற்றிய கிளாரென்டன் தற்காலப் பிரதம அமைச்சருக்குரிய சில இயல்புகளைப் பெற்றிருந்தார். ஆனல், இவர்கள் அனைவரும் இக் காலப் பிரதம அமைச்சரின் இரண்டு முதன்மையான குணவியல்புகளைப் பெற்றிருக்கவில்லை. முதலில் இவர்கள் அரசரின் பணியாட்களாக இருந்தார்களேயன்றிப் பாராளுமன்றத்தின் பணியாட்களாக இருந்ததில்லை. சட்டப்படி, பிரதம அமைச்சர் அரசரின் பணியாளே. ஆனல், இவர்மீது உண்மையாகச் செயலாட்சி செய்வது பாராளுமன்றமாகும். இரண்டாவதாக, மேற்குறிப்பிட்டவர்களில் எவரும் அமைச்சரவையின் தலைவராக இருந்ததில்லை.

கிளாரென்டனின் மீதான கடுங்குற்ற விசாரணை, அரசரின் அமைச்சர்களைப் பாராளுமன்றம் கட்டுப்படுத்தத் தொடங்கியதைக் காட்டியது. டான் பி பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவராக்கப்பட்டார். இவர் அமைச்சரவையின்

[1] Disraeli
[2] Ralph Flambard
[3] Longchamp
[4] Wykeham
[5] Thomas Cromwell
[6] William Cecil

(Cabinet) தலைவராக இருந்தார். அமைச்சர்கள்மீது அரசர் பயனுள்ள கட்டுப்பாட்டைச் செயல்படுத்தும் வரையில் பிரதம அமைச்சரின் நிலை உருவாகவில்லை. மூன்றும் வில்லியமும் ஆன் அரசியாரும் அரசின் கொள்கையைச் செயல்படுத்தினர். முதல் இரண்டு ஜார்ஜ் மன்னர்களின் அக்கறையின்மையும், வழக்கமாக இவர்கள் கேபினெட் கூட்டங்களுக்கு வராதிருந்ததும் பிரதம அமைச்சர் பதவி உருவாக உதவின. அரசர் இல்லாத பொழுது அமைச்சர் ஒருவர் கேபினெட் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். படிப்படியாக, இவரே பிரதம அமைச்சரானர். பிரதம அமைச்சரின் எல்லாப்பணிகளையும் செய்துகாட்டிய முதல் அரசியல் அறிஞர் வால்போலாவார். இவர் கேபினெட்டின் தலைவராக இருந்தார். இவருடன் இருந்த அமைச்சர்கள் இவரால் அமர்த்தப்பட்டவர்கள். எனவே, இவருக்குக் கீழ்நிலையில் உள்ளவர்களாக இருந்தார்கள். இவரை எதிர்த்த அமைச்சர்களையெல்லாம் இவர் நீக்கிவிட்டார். பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையை இவர் நேர்மையான முறைகளாலும் நேர்மையற்ற முறைகளாலும் தக்கவைத்துக்கொண்டார். ஆனால், பெரும்பான்மையினரின் இசைவோடு இவர் ஆட்சி செய்தார். பெரும்பான்மையினரின் நம்பிக்கையை இவர் இழந்தபொழுது பதவியிலிருந்து விலகிக்கொண்டார். பிரதம அமைச்சர் என்னும் பதவிப்பெயரைக் கண்டு மக்கள் வெறுப்புத் தெரிவித்ததையொட்டி இவர் பிரதம அமைச்சராக இருக்கவில்லையென வன்மையாக மறுத்துரைத்தார். ஓர் அமைச்சர் அரசாங்கத்தின் எல்லாச்செயற்பாடுகளையும் இயக்கலாம் என்பதை மக்கள் ஏற்கவில்லை. ஆகவே, எல்லாப்பணிகளையும் நிறைவேற்றிய வால்போல் பிரதம அமைச்சர் என்னும் பட்டப்பெயரை ஏற்கமறுத்தார். மூன்றும் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் அவருக்குகந்த அமைச்சர்களைத் தேர்வுசெய்ய முயன்றார். ஆனால், அவர் முயற்சி தோல்வியடைந்தது.

காலப்போக்கில் மக்கள், பிரதம அமைச்சர் என்னும் கருத்தோடு பழகிப்போனர்கள். "உண்மையான, ஏற்கத்தக்க ஓர் அமைச்சர் இருக்கவேண்டும். இவர் கவுன்சிலின் பெரும் செல்வாக்கையும் அரசரின் முதன்மையான நம்பிக்கையையும் பெற்றிருக்கவேண்டு"மென 1803-ல் இளைய பிட் கூறினர்.

பிரதம அமைச்சர் பதவியை இதனுடைய அதிகாரத்தின் உச்ச நிலைக்கு, ராபர்ட் பீல் உயர்த்தினர். ஒவ்வொரு துறை

யின்மீதும் இவர் கண்டிப்பான மேற்பார்வை செலுத்தினர். பீலின் நிலையை அடையக் கிளாட்ஸ்டன் முயன்றார். பொது மக்கள் சபையின் பெரும்பான்மைக்கட்சித் தலைவராக இப்பொழுது பிரதம அமைச்சர் முழுமையாக ஏற்றுக்கொள் ளப்பட்டார்.

பிரிட்டிஷ் அரசியலமைப்பில் பிரதம அமைச்சர் ஓர் உன் னதமான நிலையைப் பெற்றிருக்கிறார். இக் காலத்திய வளர்ச்சிகள் இவருடைய அதிகாரத்தைப் பெருக்குவதாக அமைகின்றன. வாக்குரிமை கீட்டிப்பு இப் பதவிக்குப் பெரு மையையும் மாண்பையும் அளித்திருக்கிறது. இக் காலத்தில் பிரதம அமைச்சர் அமெரிக்க அதிபரோடு வைத்து எண்ணத் தக்க சிறப்புநிலையை அடைந்துள்ளார். இப்பொழுது ஒரு பொதுத்தேர்தல் என்பது உண்மையில் ஒரு பிரதம அமைச் சருக்கான தேர்தலாக இருக்கிறது. அரசாங்க அமைப்பிலும் இவர் ஓர் இயக்க மையமாக இருக்கிறார். அரசர், கேபினெட் அமைச்சரவை, பொதுமக்கள் சபை, கட்சி ஆகியவைகளின் மீது இவர் செயலாட்சி செய்கிறார். இவர் கேபினெட் அமைச் சரவையை உருவாக்குகிறார்; இதை இவர் மாற்றியமைக்க லாம்; அழித்துவிடலாம். பொதுமக்கள் சபையை இவர் கூட்டலாம்; தள்ளிவைக்கலாம்; கலைக்கலாம். போதுமான பெரும்பான்மை வலிமைபெற்றுள்ள ஓர் ஆங்கிலப் பிரதம அமைச்சர், ஜெர்மானியப் பேரரசர், அமெரிக்க அதிபர் ஆகி யோர் செய்யக்கூடியவைகளைச் செய்யலாமென ஒருவர் குறிப்பிட்டார். போட்டியிடும் தலைவர்களில் எக் கட்சியின் தலைவரைப் பிரதம அமைச்சராகத் தேர்வுசெய்யவேண்டு மென்பதை இக் காலத்தில் பொதுத்தேர்தல் முடிவுசெய்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம அமைச்சர் அரசியலமைப்பின் மரபுகளையும் விதிகளையும் மதித்து நடக்கிறார்.

இத்தகைய உயர்பதவி 1878-க்குமுன் சட்ட ஏற்பினைப் பெறவில்லையென்பது வியப்பிற்குரியதாகும். இப் பதவி மரபின் அடிப்படையில் நிலைபெறுகிறதேயன்றிச் சட்டத்தின் அடிப்படையிலன்று.

1905-ஆம் ஆண்டின் அரசரின் தனியாணைப் பேரறிக்கை யொன்று சடங்குமுறை விழாக்களில் சான்சலர் பிரபுவிற் கடுத்துப் பிரதம அமைச்சருக்கு இடமளித்துள்ளது. அலுவல் முறையில் இவர் பிரதம அமைச்சருக்குக் கீழ்நிலையில் உள்ள வராவார். இவரைப் பிரதம அமைச்சர் பதவிக்குரியவராக்கிய

முதல்சட்டம் 1937-ல் நிறைவேறியது. இதன்படி, பிரதம அமைச்சராகவும் கருவூல முதல் பிரபுவாகவும் இருப்பவர் ஆண்டு ஊதியமாக 10,000 பவுன்கள் பெறவேண்டும். மற்ற அமைச்சர்கள் 2000 பவுனிலிருந்து 5000 பவுன்கள் வரையிலான ஊதியம் பெறுவர். இப்பொழுது பிரதம அமைச்சராக இருப்பவர் ஆண்டு ஊதியமாக 14,000 பவுன்களையும், ஓய்வு ஊதியமாக 4000 பவுன்களையும் பெறுகிறார். ஆனால், யார் பிரதம அமைச்சராக இருக்கவேண்டுமென்பதையும் இவர் என்ன செய்யவேண்டுமென்பதையும் இச் சட்டம் (அரசரின் அமைச்சர்கள் சட்டம்) வரையறைசெய்ய முயலவில்லை.

நாட்டிலும் பாராளுமன்றத்திலும் இவர் கட்சித்தலைவராக இருக்கிறார். தம் கடமைகளை நிறைவேற்ற இவர் கட்சியோடு தொடர்புகொள்ளுகிறார். தம்முடைய தலைமையைப் பயன்படுத்தி இவர் கட்சி ஒற்றுமையைப் பேணிக்கொள்ள வேண்டும். தேவையானபோது விட்டுக்கொடுத்துப் பிரச்சினைகளுக்கு முடிவுகாணவேண்டும். இவைகளை நிறைவேற்றுவதில் பீலும் கிளாட்ஸ்டனும் தவறிவிட்டார்கள். மேலும், அடுத்த தேர்தலில் வெற்றிபெறப் பிரதம அமைச்சர் பொது மக்களின் கருத்தோடு தொடர்புகொள்ளவேண்டும்; விரும்பத்தக்க இடங்களில் கொள்கையில் மாற்றம்செய்யத் தூண்டவேண்டும்.

பிரதம அமைச்சர் தம் கட்சியைப் புறக்கணிக்க இயலாதிருக்கையில் கட்சியும் இவரைக் கைவிடுதல் கடினமாகிவிடும். கட்சித்தலைவராகத் தேர்தலில் வெற்றிபெற்ற இவர் திறன்முறை அறிந்தவராகவும் மக்களின் ஆதரவு பெற்றவராகவும் மக்கள்முன் தோன்றுகிறார். வாக்காளர்கள் ஒரு பொது மக்கள் சபையைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதைவிட ஒரு பிரதம அமைச்சரையும் அரசாங்கத்தையும் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதுதான் உண்மையாகும். எதிர்த்துப் போட்டியிடும் இருகட்சிகளுக்கு இடையிலான போராட்டமாக மட்டுமின்றி, இருகட்சித் தலைவர்களுக்குமிடையிலான போராட்டமாகவும் இக் காலத்திய தேர்தல் வளர்ச்சியடைந்துள்ளது. பிரதம அமைச்சர் நாடுசூழ வருகிறார்; வானொலியில் பேசுகிறார்; தொலைக்காட்சியில் தோற்றமளிக்கிறார். இத்தகைய விளம்பரங்கள் இவரைக் கட்சியின் சின்னமாக மாற்றிவிடுகின்றன.

அமைச்சரவையை உருவாக்கும் பொறுப்பு பிரதம அமைச்சரைச் சாரும். மேதகு அரசியாரின் அமைச்சர்கள்

பிரதம அமைச்சரின் அறிவுரையின்பேரில் அரசியார்ரால் அமர்த்தப்படுகிறார்கள். நூற்றுக்குமேற்பட்ட பதவிகளுக்கு ஆட்களை அமர்த்தி அவர்களைக் கட்டுப்படுத்துகிறார். மிகச் சிறிய பதவியைக்கூட ஏற்கமறுப்பது, மறுப்பவரின் வருங்கால அரசியல் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்துவிடலாம். 1924-ல் சர் ராபர்ட் ஹோர்ன்[1] பால்டுவின் அமைச்சரவையில் தொழிலமைச்சராகப் பதவியேற்க மறுத்தது, அவருடைய அரசியல் வாழ்க்கையையே முடிவிற்குக் கொண்டுவந்து விட்டது. மாறுக, அந்தோனி ஈடன், ஹரோல்டு வில்சன், மாக்லோயிட்[2] போன்ற சில அமைச்சர்கள் விலகிக்கொண்டபின், மறுபடியும் அமைச்சர் பதவிக்கு வந்துவிட்டார்கள். இவர்கள் கட்சியமைப்பில் பெரும் செல்வாக்குடையவர்களாக இருந்திருக்கவேண்டும். கூட்டுப்பொறுப்பின் அடிப்படையில் பதவி விலகிய அமைச்சர்கள்கூடச் சில வேளைகளில் பாதிக்கப்படலாம்.

அமைச்சரவையை உருவாக்கப் பிரதம அமைச்சர் பரவலாக அமைச்சர்களைத் தெரிவுசெய்யலாம். முக்கியமான பதவிகளுக்குத் தம் கட்சியின் முதன்மையானவர்களை அமர்த்தலாம். சிறிய பதவிகளுக்குப் பிரதம அமைச்சர் தலைமைக் கொறடாவைக் கலந்துகொண்டு ஆட்களை அமர்த்தலாம்.

இருந்தபோதிலும், சில அரசியல் நுட்ப வரையறைகளுக்குட்பட்டுப் பிரதம அமைச்சர் இயங்குகிறார். அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டுமென்பதற்குச் சட்டங்கள் இல்லையென்றாலும், சில நிலைபெற்ற மரபுகள் இருக்கின்றன. கொள்கையை விளக்கவும், கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் இருக்கவேண்டும்.

அரசரின் அமைச்சர்கள்பற்றிய சட்டம் (1964) பொது மக்கள் சபையிலிருந்து அமைச்சர்களாக அமர்த்தப்படக் கூடியவர்களின் எண்ணிக்கையை 91-ஆக வரையறுத்துள்ளது. இதனால், பெருமக்கள் சபையிலிருந்தும் சிலரை அமைச்சர்களாக அமர்த்தவேண்டுமென்பது பெறப்படுகிறது.

[1] Sir Robert Horne

[2] Macleod

ஒரு துறையின் தலைவர் பெருமக்கள் சபை உறுப்பினராயின், அவருடைய உடனடியான உதவியமைச்சர் பொது மக்கள் சபையினராக இருக்கவேண்டும்.

சான்சலர் பிரபு, அட்டர்னி ஜெனரல், சொலிசிட்டர் ஜெனரல் ஆகியோர் வழக்கறிஞர்களாக இருக்கவேண்டும். கலப்பு அரசாங்கமில்லையென்றால், அமைச்சர்கள் பிரதம அமைச்சரின் கட்சியினராக இருக்கவேண்டும். பிரதம அமைச்சர் கட்சியின் முதன்மையான தலைவர்களின் செல்வாக்கைக் கருத்தில்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். அரசாங்கம் பின்னணி உறுப்பினரின் தொடர்பை இழந்துவிடாமல் இருக்கும்பொருட்டுப் பிரதம அமைச்சர் கட்சியின் இளம் உறுப்பினர்கள் சிலரை அமைச்சர்களாக அமர்த்தவேண்டும். அரசரின் கருத்துகளையும் பிரதம அமைச்சர் அறிந்துகொண்டு அமைச்சர்களை அமர்த்தவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, அமைச்சர்கள் திறமையும் நேர்மையுமுடையவர்களாக இருக்கவேண்டும்.

அமைச்சர்கள் நேர்மையாக இருந்தால்மட்டும் போதாது நேர்மையாக இருப்பதுபோலும் இவர்கள் தோற்றமளிக்க வேண்டும்.

சூழ்நிலைத் தேவைகளுக்கேற்பப் பிரதம அமைச்சர், அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்கிறார். அரசாங்கத்திற்கு இக்கட்டான ஒரு நிலையைத் தோற்றுவித்ததற்காக ஓர் அமைச்சரைப் பதவிவிலகுமாறு ஆலோசனை கூறலாம். கேபினெட்டின் சீரமைப்பிற்காகவும், இளைஞர்களுக்கு இடமளிப்பதற்காகவும் சிலரைப் பதவியிலிருந்து விலக்கலாம். பதவியிலிருந்து விலகும் அமைச்சர், அவருடைய நிலையைச் சபைக்கு விளக்கிக்கூறும் வாய்ப்பினைப் பெறுகிறார்.

கேபினெட் அமைச்சர்களைப் பிரதமர் தெரிவுசெய்கிறார். 16-லிருந்து 24 அமைச்சர்கள் கேபினெட் அமைச்சர்களாகத் தெரிவுசெய்யப்படுகிறார்கள். நிதித்துறை முதல்வர், வெளியுறவுச் செயலர், உள்துறைச் செயலர், பாதுகாப்பு அமைச்சர், வணிகக்கழகத்தலைவர், தொழிலாளர் அமைச்சர், காமன்வெல்த் விவகாரச் செயலர், ஸ்காட்லாந்திற்கான செயலர், கவுன்சிலின் தலைவர், முத்திரை நாயகம், சான்சலர் பிரபு ஆகியோர் என்றும் கேபினெட்டில் இடம்பெறுகின்றனர். இப் பதவிகளுக்கானவர்களைத் தெரிவுசெய்வதில் பிரதமர்,

பதவியைப்பற்றிக் கவலைப்படாமல் பதவியில் இருக்கப் போகிறவரைப்பற்றியே கருத்துச்செலுத்துகிறார். இயல்பாக, முக்கியமான பதவிகளைப் பிரதமரின் நண்பர்கள் வகிக்கிறார்கள். எந்த அமைச்சரைக் கேபினெட்டில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்பதைப் பிரதம அமைச்சரே முடிவு செய்கிறார்.

கேபினெட்டின் தலைவராகப் பிரதம அமைச்சர் செயல்படுகிறார். கேபினெட்டின் நடைமுறைகளைப் பிரதம அமைச்சர் கட்டுப்படுத்தினாலும், இச் சொல்லின் வழக்கமான பொருளில் இவர் தலைவராக இருப்பதில்லை. கேபினெட் கூட்டத்தை நடத்துவது, அமைதியைப் பேணுவது, கருத்துகளை உறுப்பினர் எடுத்துரைக்க வாய்ப்பளிப்பது, விவாத இறுதியில் முடிவுசெய்வது தலைவரின் இயல்பான பணிகளாகும். ஆகையால், இப் பணியை நிறைவேற்றும் மனஉறுதி, குணநலம், நடுநிலைப்பண்பு, திறனுய்வுப்பண்பு ஆகியவை பிரதமரிடம் இருக்கவேண்டும்.

கொள்கையை ஒருங்கமைத்துப் பிரதம அமைச்சர் இயக்குகிறார். கட்சியின் செயற்குழு, கொள்கையை விரிவாக வரைந்து கொடுக்கிறது. இதைக் கட்சிக்கூட்டம் ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனால், கொள்கையின் சரிநுட்பமான பொருள்விளக்கமும், செயற்படுத்தற்கான காலமும் கேபினெட்டிடம், குறிப்பாக, பிரதம அமைச்சரிடம் நிலைபெறுகிறது. கொள்கையை வரையறை செய்து செயற்படுத்தும் முடிவைப் பிரதம அமைச்சர் ஏற்றுக்கொள்ளுகிறார்.

பிரதம அமைச்சர் எல்லாவற்றையும் மேற்பார்வையிடுவதில் இரண்டு பயன்கள் ஏற்படுகின்றன. இவர் பாராளுமன்றத்தில் அடிக்கடி பேசவேண்டும்; பொது முக்கியத்துவம் வாய்ந்தவைபற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கவேண்டும். கொள்கையை ஒருங்கிணைப்பதில் இவர் பெரும் பங்குபற்ற முடிகிறது. தனிப்பட்ட அமைச்சரவைகளின் முடிவுகள் பொதுவான கொள்கைக்கு ஒத்திருக்கிறதாவென்பதை இவரால் பார்த்துக்கொள்ள முடிகிறது.

பொதுமக்கள் சபையின் தலைவராக இருந்து இதன் அலுவல்களைக் கட்டுப்படுத்துவதோடு, இச் சபையின் கருத்துகளை வெளியிடுபவராகவும் இவர் இருக்கிறார். பிரதம

அமைச்சர் சபையின் தலைவராக[1] இருந்துகொண்டு சபைத் தொடர்க்கூட்டத்தின் பெரதுவான நிகழ்ச்சிநிரலை வரைகிறார். அரசாங்க அலுவல்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க, இவர் எதிர்க்கட்சித்தலைவரின் ஒத்துழைப்போடு செயல் திட்டத்தை வரைகிறார்.

அரசாங்கத்தின் முடிவுகளை இவர் அரசருக்குப் பரிந்துரைக் கிறார். அரசாங்கத்தைப்பற்றியவைகளைப்பற்றி அரசர் தகவல் அறிந்துகொள்ளவும், கலந்தாராயவும் உரிமைபெற் றிருக்கிறார். எனவே, தவறாமல் பிரதம அமைச்சர், அரசரைப் பேட்டி காணவேண்டும். இத்தகைய வேளைகளில் பிரதம அமைச்சர், அரசரின் தனிமுறையிலான ஆலோசகராகச் செயல்படுகிறார்.

பரவலானதும் பலதரப்பட்டதுமான பதவி அமர்த்தல் களுக்கு இவர் பொறுப்புடையவராகிறார். பெருமளவில் அரசியல் வாடிக்கை ஆதரவளிக்கிறார். அரசரின் சிறப்பதி காரங்களைப் பிரதம அமைச்சர் ஏற்றுச் செயல்படுத்துவதன் விளைவாக, இப் பணிகளை இவர் நிறைவேற்றுகிறார்.

குறிப்பிட்ட காலங்களில், இவர் காமன்வெல்த் பிரதம அமைச்சர்களை மாநாடுகளில் சந்திக்கிறார். மற்ற அரசாங்கத் தலைவர்களையும், "உயர்கட்ட மாநாடுகளில்" சந்திக்கிறார். காமன்வெல்த் பிரதம அமைச்சர்களின் மாநாடு இப்பொழுது தவறாமல் நடைபெறுகிறது. உயர்நிலை முக்கியத்துவம் வாய்ந்தவைகளைப்பற்றி உயர்நிலையில் உயர்தலைவர்கள் கலந் தாராய்கிறார்கள். இத்தகைய கூட்டங்களில் பிரதம அமைச் சர் தம் நாட்டின் சார்பில் கலந்துகொள்ளுகிறார்.

பிரிட்டிஷ் அரசியலமைப்பில் பிரதம அமைச்சர் ஒப்பற்று விளங்குகிறார். இவருடைய அதிகாரங்களும், கடமைகளும் இவருக்குப் பெருமைமிக்கதோர் நிலையை அளித்துள்ளன. இவ ருடைய செயல்முறைகள் மரபுகளால் பெருஞ்சிறப்படை கின்றன. "இந்தப் பதவியை வகிப்பவர் இதை எப்படி வைத்துக்கொள்ள விரும்புகிறாரோ அப்படித்தான் இது இருக்கிறது"தெனக் கூறுவர். பெரும்பான்மைத் தலைவராகிய இவரை வாக்காளர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். தம் நிலையை உறுதிப்படுத்திக்கொள்ள மக்களிடம் இவர் எந்த நேரத்திலும் முறையிடலாம்.

[1] Leader of the House

இவருடைய அதிகாரங்கள் இப்பொழுது வளர்ச்சியடையும் போக்கில் உள்ளன. "கேபினெட் வகீலில் மையக்கல்" லென இவரை மோர்லி (Morley) வருணித்துள்ளார். இவ்வருணனையில் குறைகண்ட ஜென்னிங்ஸ், பிரதமரை, "அரசியலமைப்பின் மையக்கல்" லெனக் கூறினர். பிரதம அமைச்சர் பெற்றிருக்கும் அதிகாரங்களுக்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

கட்சியினரும் வாக்காளரும் இவருடைய தலைமையில் வைத்திருக்கும் அசைக்கமுடியாத நம்பிக்கை இவருடைய சிறப்புநிலைக்கு ஒரு காரணமாக இருக்கிறது. முறையான கட்சி விதிமுறைகள் ஒருபுறம் இருக்க, ஒன்றுபட்ட ஆதரவைப் பிரதம அமைச்சர் பெற்றிருக்கிறார். இவருடைய நம்பிக்கைக்குரியவர்களுக்கு இவர் அரசியல் வாடிக்கையாதரவு காட்டுகிறார். ஆதரவுகாட்டியும் அச்சுறுத்தியும் இவர் தம் பதவியைத் தக்கவைத்துக்கொள்ளுகிறார். இவருடைய கொள்கைக்கு இணங்காதவர்கள் பதவியிலிருந்து விலகிக் கொள்ளவேண்டும். மற்றெல்லா முறைகளும் தோல்வியுற்றால், இவர் பாராளுமன்றத்தைக் கலைக்க அறிவுரை கூறலாம்.

சமீபக்கால அறிவியல் வளர்ச்சிகளும், சர்வதேச விவகாரங்களும் இவருடைய முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளன. வானொலியும் தொலைக்காட்சியும் இவரை மக்களோடு தொடர்புகொள்ளச் செய்கின்றன. இவருடைய ஆளுமையில் மக்கள் கட்சியைக் காணுகிறார்கள். நெருக்கடி காலத்தில் இவரைத் தேசத்தின் பொறுப்பாளராக மக்கள் கருதுகின்றார்கள். வெளிநாட்டுக் கொள்கையில் பிரதம அமைச்சர் முதல் முக்கியத்துவம் காட்டுகிறார்.

கேபினெட் அலுவலகத்தின் படைப்பும், கேபினெட் குழுக்களின் வளர்ச்சியும் பிரதம அமைச்சரின் அதிகாரத்தை விரிவாக்கியுள்ளன. கேபினெட் அலுவலகத்தின் ஆட்சிப்பணி இவருடைய பார்வையில் நிறைவேற்றப்படுவதோடன்றி, முக்கியமான குழுக்களிலும் இவர் அமர்கிறார்.

இவருடைய கட்சியின் ஆதரவை நம்பித்தான் இவர் செயல்படுகிறார். பொதுமக்கள் சபையில் இவருக்குள்ள ஆதரவு குறைந்தால், இவர் செயல்திட்டங்களை நிறைவேற்ற முடியாது. பல பிரதம அமைச்சர்கள் தம் சொந்தக் கொள்கைகளைச் செயல்படுத்தத் தொடங்கிவிடுகிறார்கள். பீல் 1846-ல்

தானியச் சட்டங்களை நீக்கியதும், டிசரெலி 1875-ல் சூயஸ் கால்வாயின் பங்குகளை வாங்கியதும், சூயஸின் மீது ஈடன் 1956-ல் படையெடுத்ததும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். ஒரு பிரதம அமைச்சருக்குக் கட்சியின் முழு மொத்தமான ஆதரவு இருந்தால், ரோமானியப் பேரரசர்களும் பொறுமைப் படும் அளவிற்கு அதிகாரத்தைச் செயல்படுத்தலாம்.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

A. H. Birch	:	Representative and Responsible Government Chapters, 7, 8 and 9
Sir I. Jennings	:	"Cabinet Government"
J. P. Mackintosh	:	"The British Cabinet"
Lord Morrison	:	Government and Parliament (1964)
Harvey and Bather	:	The British Constitution (1968)
E. Carter	:	The office of the Prime Minister
N. H. Brasher	:	Studies in British Government
F. XV. G. Benemy	:	"The Elected Monarch" (1968)
A. Howard & R. Wesh	:	The Making of a Prime Minister

18. அரசியல் கட்சிகள்

பிரிட்டிஷ் அரசாங்க முறையைக் கட்சிகளின் ஆட்சிமுறை யெனக் கூறலாம். சட்டத்தால் நேர்முகமாகக் கட்சிகள் ஏற்கப்படவில்லையென்றாலும், ஆங்கில அரசாங்க முறையில் இவை இணைந்த பகுதிகளாக இருக்கின்றன. கட்சித் தலைவர் களைக்கொண்ட அரசாங்கத்தைப் பதவியில் இருத்துதல், கட்சி களின் முதன்மைப்பணியாகும். தொடர்ந்து தம் கட்சி அரசாங்கத்தை வைத்திருக்க முயல்வதும் இவைகளின் பணி யாகும். இந் நோக்கத்தையெய்த செயல்திறம் படைத்த கட்சி யினர் மக்களோடு தொடர்புகொண்டு அவர்களின் விருப் பத்தை அறிகிறார்கள். மக்களைக் கவரும் நோக்கத்தில் கட்சிகள் கொள்கைத்திட்டத்தை வகுத்து, மக்கள்முன் வைத்து, அவர்களின் ஏற்பைப் பெறுகின்றன. தம் திட்டத் திற்கும் கொள்கைக்கும் ஆதரவு திரட்டக் கட்சிகள் கூட்டங் களுக்கு ஏற்பாடு செய்கின்றன; விருந்துகள் நடத்துகின்றன; கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்கின்றன; கட்சிக் கொள்கையை விளக்க வகுப்புகள் நடத்துகின்றன; சிற்றேடு களை வினியோகிக்கின்றன; செய்தித்தாள்களை நடத்துகின் றன. வாக்காளர்களின் தொகுதியில் தனிமனிதன் மறைந்து விடுகிறான். எனவே, தன்னுடைய அரசியல், பொருளாதார விருப்புகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமெனில், இவன் அரசியல் கட்சியோடு தன்னைத் தொடர்புப்படுத்திக்கொள்ள வேண்டும். தலைவர்களின் ஆளுமை கட்சிக்கு அடித்தளமாக அமைவதோடு, வெற்றியும் தேடித்தருகிறது. மக்களின் ஒருங் கமைந்த ஆதரவின்றித் தலைவர்கள் பெற்ற அதிகாரத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள இயலாது. பொதுவான குறிக்கோள்களை நாடும் தனிமனிதர்களுக்குத் தலைவர்கள் தேவைப்படுகிறார்கள். தலைவர்களுக்குக் கட்சி அமைவு பெற்ற ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள். மக்கள் கருத்தோடு இணங்கிச்செல்ல அரசாங்கத்திற்குக் கட்சிமுறை உதவுகிறது. மக்கள் ஆதரவைத் தலைவர்கள் தம் சார்பில் என்றும் வைத்துக்கொள்ளவேண்டும். தலைவர் மக்களின்

மீது அதிகாரம் செலுத்தமுடியாது. கத்தோலிக்க விடுதலைக்கு டோரிகளே ஆதரவுகாட்டுமாறு பீலும், வெல்லிங்டனும் தூண்டினர்கள். ஆனால், 1846-ல் பீல் தானியச்சட்டத்தை விலக்கிய போது கன்சர்வேடிவ் கட்சி பிளவுற்றது. இதேபோன்று 1886-ல் அயர்லாந்திற்குச் சுயஆட்சி வழங்கும் திட்டத்திற்குக் கிளாட்ஸ்டன் தம் கட்சியினரின் ஆதரவைத் திரட்டமுடியவில்லை. 1931-ல் ராம்சேமாக்டோனல்டு வேலியின் மை உதவித் திட்டத்தில் 10 சதவீத வெட்டு அறிவித்ததை எதிர்த்துத் தொழிற்கட்சியின் பெரும்பான்மையினர் கிளர்ச்சி செய்தனர். கட்சிமுறைக்கு மாற்றுத்திட்டம் சர்வாதிகாரமே. சர்வாதிகாரத்தில் சர்வாதிகாரியைத்தவிர, வேறு கட்சிகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. சர்வாதிகாரிகள் பொதுக் கருத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். ஆனால், பொதுக்கருத்து இங்கிலாந்தில் கட்டற்று வெளியாகிறது.

1832-ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டத்தோடு இங்கிலாந்தில் அரசியல் கட்சிகளின் வரலாறு தொடங்கியதெனக் கூறலாம். இச் சட்டத்தின் நிறைவேற்றத்திற்குப்பின், விக்குக் கட்சி இரண்டு பிரிவாகப் பிரிந்தது. இவர்களில் மிதமானவர்கள் லிபரல்கள் எனப் பெயர்பெற்றனர். சீர்திருத்தச் சட்டத்தைச் சீர்திருத்தத்தின் முதல் தவணையாகக் கருதி ஏற்றுக்கொண்டவர்கள் தீவிரவாதிகளானார்கள். டோரிக் கட்சியிலும் இதேபோன்ற மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. முன்னேற்றக் கருத்துடைய பீலின் ஆதரவாளர்கள் டோரிக்கட்சியின் பெயரைக் கன்சர்வேடிவ் கட்சி என்று மாற்றிக்கொண்டார்கள்.

முதலிரண்டு சீர்திருத்தச் சட்டங்களைப் பிரித்த முப்பதாண்டு கட்சிப் பற்றுறுதியைப் பொறுத்தவரையில், குழப்பமான காலமாகும். தானியச்சட்டப் பிரச்சினை கன்சர்வேடிவ் கட்சியில் பிளவை உண்டாக்கியது. பீலைப் பின்பற்றியவர்களின் கட்சி, சுயேச்சையாகச் சில ஆண்டுகள் செயல்பட்டுப் பின் இறுதியில் லிபரல் கட்சியில் இணைந்துகொண்டது. பால்மர்ஸ்டனின் தனிப்பெரும் செல்வாக்கு, லிபரல் கட்சியின் பிளவிற்கு வழிகோலியது. இவர் இறந்தபின், கிளாட்ஸ்டனின் தலைமையில் லிபரல் கருத்துகள் ஒன்றுபட்ட சக்தியாக மாறின. இதே சமயத்தில், பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் உருவாக்கிய புதிய நிலைகளுக்கு டிசரெலி கன்சர்வேடிவ் கட்சியினரை ஆற்றுப்படுத்திக்கொண்டிருந்தார். எனவே, இது வலிமையானதோர் எதிர்ப்பை உண்டாக்கியது. ஐரிஷ்

தேசியக்கட்சியின் தோற்றம் அரசியல் நிலையைச் சிக்கலாக்கியது. 1885-ல் சுயாட்சித்திட்டம் கட்சியில் மேலும் பிளவுண்டாக்கியது. இப்பொழுது லிபரல்களும், இணைப்பாதரவாளர்களும் கன்சர்வேடிவ் கட்சியின் ஒரு பிரிவாகச் செயல்பட்டனர். தொழிற்கட்சியின் எழுச்சியும், சுங்கவரிப் பிரச்சினையால் கன்சர்வேடிவ் கட்சியினரின் கட்சிமாறலும் அண்மைக் காலத்தில் கட்சியமைப்புப் பிரச்சினையைச் சிக்கலாக்கி விட்டது.

லிபரல்களும் கன்சர்வேடிவ்களும்

பிரிட்டனின் வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் விரு கட்சிகளுக்கிடையேயான வேறுபாடுகளைப் பிரித்துக்கூற இயலாது. "ஆங்கிலேயர்கள் தொடர்புப்படுத்திக்கொண்டுள்ள கட்சிகள் அரசாங்கத்தின் முதன்மையான கருத்துகளை வெளிப்படுத்தின." இக் கட்சிகள், அதிகாரத்தையும், மக்களின் உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் பிரதிபலித்தன. முன்னதை வலிந்து செயல்படுத்தினால் முழு வல்லாட்சியும், பின்னதைச் செயற்படுத்தினால் குடியாட்சியும் உருவாகலாம். ஆனால், தக்க எல்லைகளுக்குள் இவைகளை வைத்துச் செயல்படுத்தினால் இவை இரண்டும் அரசியலமைப்புச் செயற்பாட்டிற்குத் தேவையாகும். இக் கருத்துகளைக் கட்சிகள் புறக்கணிக்குமாயின், இவை தன்னலக் கும்பலாக மாறிவிடும்.

பரவலாகப் பார்க்கும்போது இது உண்மையாகத் தோன்றலாம். ஆனால், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு இதைப் பயன்படுத்துவது கடினமாகும். இரு கட்சியினரின் கணிசமான அளவினர், ஒரு கட்சியை இன்னொரு கட்சியிலிருந்து பிரிக்கும் எல்லைக்கோட்டிற்கு அருகில் இருப்பது இதற்கான ஒரு காரணமாகும். லிபரல் கட்சியிலிருந்து கட்சிமாறிச் செல்பவர்கள் கன்சர்வேடிவ் கட்சியில் இடையருது சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதே சமயத்தில் முற்போக்குக் கன்சர்வேடிவ்கள் லிபரல் கட்சிக்குச் செல்கிறார்கள். இரு கட்சிகளுக்குமிடையில் கணிசமான வேறுபாடுகள் இல்லாததும் உண்மையாகும். இது அரசாங்க அலுவலை எளிதாக்குகிறது. இவ் விரு கட்சிகளும் மாறிமாறி அதிகாரத்திற்கு வரும்பொழுது முந்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளை அகற்றுவதைத் தடுக்கமுடிகிறது. கட்சிப்போராட்டத்தில் காணப்படும் இணக்கம் பார்ப்பவர்களுக்கு நம்பமுடியாத காட்சியாக இருக்கிறது. ஆனால், பாராளுமன்றச் சக்திகளின்

செயல்பாட்டிற்குரிய இந் நல்லிணக்கமில்லாவிட்டால், இக் காலத்திய அரசாங்கமுறை இயலாததாகிவிடும் என்பது உறுதியாகும். இருதரப்புத் தலைவர்களும் பின்பற்ற உறுதியளித்துள்ள விதிகள் இருக்கின்றன. ஆனால், இருதரப்பினருக்கும் மெய்யார்வம் குறையலாமென்பதை இது குறிப்பிடுவதில்லை.

வெளியே இருந்துகொண்டு அரசியல் கட்சிகள் அரசியல் நிறுவனத்தைச் செயலாட்சி செய்வதில்லையென்பது ஆங்கில அரசியலமைப்பு முறையின் முனைப்பான உண்மைகளில் ஒன்றாகும். ஓர் அரசியல் கட்சியின் தலைவரே பிரதம அமைச்சராகவும் இருக்கிறார். கட்சித்தலைவர்களின் இரகசியக் கூட்டமே கேபினெட் கூட்டமாகிறது. கருவூலத்தின் இளநிலைப் பிரபுக்கள் கட்சியின் கொறடாக்களாக இருக்கிறார்கள். தலைமைக்கொறடா கருவூலத்துறையின் பாராளுமன்றச் செயலராக இருக்கிறார். கட்சித்தலைவர்களிடம் கட்சி ஆதரவாளர்கள் அளிக்கும் பெரும் நிதியைத் தலைமைக்கொறடாக்களின் வழியாகத்தான் தலைவர்கள் செலவிடுகிறார்கள். சில வேளைகளில், நிதிஉதவியளித்தவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நோக்கத்தில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

கட்சி அமைப்பு

பாராளுமன்றத்திற்கு வெளியே கட்சி அமைப்பு வளர்ச்சி 1832-ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டத்திற்குப்பின் தொடங்கியது. தகுதிபெற்ற கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பதிவேடுகளில் இடம்பெறுமாறு பார்த்துக்கொள்ள, "பதிவுக் கழகங்கள்" தோன்றின. ஆனால், அரசியல் கட்சியின் உண்மையான தோற்றத்தின் காலம் 1867 ஆகும். ஏனெனில், இச் சட்டத்திற்குப்பின், நகரக் கைவினைஞர்கள் வாக்காளர்களாகும் தகுதிபெற்றார்கள். பிரதிநிதித்துவ அடிப்படையில் நிறுவப்பெற்ற முதல் கட்சி அமைப்பு பர்மிங்ஹாம் லிபரல் கழகமாகும். இரண்டு அரசியல் கட்சிகளும் நாடு முழுவதும் இத்தகைய அமைப்பை நிறுவிக்கொண்டன. மிகக் கவனமாக லிபரல் வாக்குகளை முறைப்படுத்தி, நகரின் மூன்றுவது உறுப்பினராக ஒரு கன்சர்வேடிவ் அனுப்பப்படுவதைத் தடுப்பதில் பர்மிங்ஹாம் லிபரல்கள் வெற்றிகண்டனர். 1873-ல் திரு. சேம்பர்லின் என்பவரின் தலைமைப்பொறுப்பில் இக் கழகம் நகராட்சித் தேர்தல்களை நடத்தத்தொடங்கியது. 1877-ல் லிபரல் கட்சிக்கழகங்கள் சேர்ந்து தேசிய லிபரல்

கழகமாக[1] அமைந்தன. 1867-க்குப்பின், கன்சர்வேடிவ் கட்சியும் பெருமளவிலான தல அமைப்புகளை நிறுவியது. 1880-க்குப்பின், இவை பிரதிநிதித்துவ இயல்பைப் பெற்றன. 1887-ல் பிரதிநிதித்துவ அடிப்படையில் கன்சர்வேடிவ் கழகங்களின் தேசிய யூனியன் சீரமைக்கப்பட்டது.

தலக்கட்சி அமைப்புகளின் வளர்ச்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய தொகுதியினருக்குமான உறவின்மீது பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஏனெனில், தலைமைக்கொறடாவினால் அனுப்பப்பட்ட பட்டியலிலிருந்து பெரும்பாலும் தலக்கழகங்கள் வேட்பாளர்களைத் தெரிவு செய்ய உரிமைகொண்டாடியதோடன்றி, பாராளுமன்றத்தில் இவர்மீது கட்டுப்பாட்டைச் செயல்படுத்தவும் விரும்பின. இக் கட்டுப்பாட்டின் அளவு மாறுபடலாம். தலமக்களின் ஆதரவு பெற்ற செல்வர் ஒருவர் இத்தகைய கட்டுப்பாட்டை வெறுக்கலாம். ஆனால், தலமக்களின் ஆதரவின்றிப் போட்டியிடும் ஒருவர் இத்தகைய கட்டுப்பாடுகளைத் தடுத்து ஒதுக்கவியலாது. தம்முடைய கழகத்தினுடனான தொடர்பு ஒருபுறம் இருக்க, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதிலாளா அல்லது பிரதிநிதியா என்னும் பிரச்சினை பெரியதாகும். பாராளுமன்ற உறுப்பினர் தலக்கழகத்தின் பதிலாளாக இருக்கவேண்டுமெனும் கருத்து இப்பொழுது ஒங்கிவருகிறது. முன்கூட்டியே வாக்காளர்களின்முன் வைத்த திட்டத்தை பாராளுமன்றத்தில் அரசாங்கம் எடுத்துரைக்கவேண்டுமெனும் உரிமை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதை நேர்முக ஆட்சியாக வலியுறுத்தலாம். இங்கிலாந்தின் அரசியல் முறையில் குடியொப்பத்தைப் புகுத்தும் திட்டம் இவ்விணப்பாதரவாளர்களின் கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதிலிருந்து இதே போக்கு இருந்துவருவதை அறியலாம். பாராளுமன்ற உறுப்பினர், தொகுதியினரின் பதிலாளாக இருந்து, இவர்களின் சார்பில் வாக்களிப்பதாக உறுதியளித்து, ஒருசில குறிப்பிட்ட நடவடிக்கைகள், மசோதாக்கள் ஆகியவைகளின் விவரங்களை மட்டுமே பாராளுமன்றத்தில் விவாதிக்கவேண்டுமென்பது வெறும் கேலிக்கூத்தாகும். தனிமுறையிலான முந்து துணிவை மிகக்குறைந்த அளவிற்குக் குறைக்கும் ஒருமுறையின்கீழ் மிகச்சிறந்தவர்களின் சேவையைப் பெறுதலென்பதும் இயலாததாகும்.

[1] National Liberal Association

தலக்கழகங்கள் தேசியக்கட்சி அமைப்புகளை உருவாக்க ஒன்றுபட்டபோது, இயற்கையாகவே இந் நிறுவனங்கள் கட்சியின் கொள்கையை உருவாக்குவதில் வாய்ப்பு வேண்டு மெனக் கோரின. அப்பொழுது உருவாகிவந்த தேசிய லிபரல் கூட்டமைப்பு, 1877-ல் குறிப்பிட்ட சீர்திருத்தத் திட்டங் களைத் தெரிவுசெய்வதிலும், இயக்குவதிலும், கட்சியின் எல்லா உறுப்பினர்களும் நேர்முகப் பங்குபற்ற வேண்டு மெனும் கருத்தை இதனுடைய திட்டத்தின் முதன்மையான இயல்பென வலியுறுத்தியது. "விரிவான, தூய்மையான" இக் கருத்திற்குக் கிளாட்ஸ்டன் தம்முடைய ஆசிகளை அளித்தார். இக் காலத்திலிருந்து ஆண்டுதோறும் கட்சியால் ஏற்கக்கூடிய கொள்கையைச் சுட்டிக்காட்டி இக் கூட்டமைப்பு தீர்மானங்களை இயற்றுவது வழக்கமாகிவிட்டது. இந்தத் தீர்மானங்களில், 1891-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் புகழ்பெற்றவைகளாகும். இவை, "நியூகாசில் திட்டங்கள்" எனப்படும். அடுத்து லிபரல் அமைச்சரவை பதவியேற்ற தால், இவைகளுக்குச் சிறப்பு ஏற்பட்டது. இத் திட்டங்களை அமைச்சரவை ஏற்றுச்செயல்படுத்துமெனக் கூட்டமைப்பு இயல்பாக எதிர்பார்த்தது. தாங்கமுடியாத பளுவை அமைச் சர்கள் சுமக்கவேண்டியது இதன் விளைவாக இருந்தது. ரோஸ்பரி[1] பிரபுவின் அமைச்சரவை வீழ்ச்சிக்கு இதுதான் காரணமெனவும் இவர் கூறினர். பலதரப்பட்ட காரணங் களால் கூட்டமைப்பு இதன்பின் மறைந்தது. குறிப்பாக, பேரரசு சட்டமன்றத்திற்கு வெளியே லிபரல் பாராளுமன்ற மாக இதற்குப்பின் செயல்படவில்லை. கட்சியின் கொள்கை கீழிருந்து வகுக்கப்படாமல் மேலிருந்து வகுக்கப்பட்டது. அதாவது, கட்சியின் கொள்கை தொண்டர்களாலன்றி, சில துணைவர்களோடு கலந்தாராயப்பட்டுத் தலைவரால் உருவாக்கப்பட்டது. 1877-ல் தேசிய லிபரல் கூட்டமைப்பின் வழியாகச் சேம்பர்லின் எதைச்செய்ய முயன்றாரோ அதையே 1883-ல் ரன்டோல்ப் சர்ச்சில்[2] கன்சர்வேடிவ் கட்சியின் தேசிய யூனியன் வழியாகச் செய்யமுயன்றார். தேசிய யூனியன் அவ்வப்போது கட்சியின் செயல்திட்டத்தில் எந்த இனங்கள் இடம்பெற வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றின. ஆனால், கட்சித்தலைவர்கள் இவைகளைப் படிப்படியாகப் புறக்கணித்தார்கள். இன்று தேசிய யூனியனும், தேசியக் கூட்டமைப்பும், தல அமைப்புகளுக்கு

[1] Rosebery

[2] Randolph Churchill

உதவும்பொருட்டு அரசியல் தகவலைப் பரப்பும் நிறுவனங்களாக இருந்துவருகின்றன. கட்சியின் கொள்கையை உருவாக்குவதில் இவ் விரண்டு நிறுவனங்களுக்கும் பயனுள்ள அதிகாரம் கிடையாது. ஒரு லிபரல் அல்லது கன்சர்வேடிவ் தம்முடைய தலைவரின் கொள்கையிலிருந்து வேறுபடுகிறார்களென்றால், அவர் கட்சியிலிருந்து விலகுவதைவிட அவருக்கு வேறுவழி கிடையாது. எனினும், ஒருசில வேளைகளில், கட்சித்தலைவர்கள் இடைவிடாமல் மக்களுடைய கருத்துகளை அறிந்துகொள்ளுகிறார்கள். ஆதரவாளர்களின் உணர்ச்சிகளைத் தலைவர்களுக்கு அறிவித்துத் தலைவர்களோடு தொடர்பு கொள்ளவேண்டிய வேலை தலைமைக்கொறடாக்களைச் சேரும். தலக்கழகச் செயலாளர்களிடமிருந்தும், மற்ற வட்டாரங்களிலிருந்தும் மக்களின் உணர்ச்சிகளைத் தலைமைக்கொறடாக்கள் அறிந்துகொள்ளுகிறார்கள்.

ஒரு போராட்டத்தின் உருவத்தில் அரசியல் வாழ்க்கையை அரசியல் கட்சிமுறை வெளிப்படுத்துகிறது. இப்படிச் செய்வதால் சாதாரண மனிதனுக்கும் இதில் சுவையேற்படுகிறது. ஆட்சித்திறமையின் கணிசமான வீணழிவை இது உட்கொள்ளுகிறதென்பதில் ஐயமில்லை. அரசியல் வாழ்க்கையில் பாதிக்குமேற்பட்ட திறமையானவர்கள் மற்றப் பாதிப்பேர்கள் எடுத்துரைக்கும் திட்டங்களை எதிர்ப்பதில் காலங்கழிக்கின்றனர். ஆயினும், ஆங்கில தேசியக் குணவியல்பிற்கு இது சிறந்த அரசியல் செயற்பாடாக இருக்கிறதென்பதில் சிறிதளவு உண்மை இருக்கிறது. ஆங்கிலேயர்கள் ஆளில்லாத தீவு ஒன்றில் இறங்கினால், அவர்கள் இயற்கையாகவே இருகட்சிகளாக அமைந்துகொள்வர். இருகட்சிகளும் தனித்தனியே தலைவர்களையும் செயல்திட்டத்தையும் பெற்றிருக்கும் என்று ஓரளவு உண்மையோடு கூறப்பட்டது.

சமீபக்காலத்தில் வளர்ச்சியடைந்துள்ள நல்ல மரபுகளினால் வெளிநாட்டு விவகாரங்கள் கட்சிப்போராட்டங்களுக்கு அப்பாற்பட்டனவாகப் பொதுவாகக் கருதப்படுகின்றன. வெளிநாட்டுக் கொள்கையின் பெரிய பிரச்சினைகள், இரண்டு பெரிய அரசியல் கட்சியின் தலைவர்களுக்கிடையில் கலந்து ஆராய்வதற்கான பொருளாகிவிடுகின்றன. பாதுகாப்புப் பிரச்சினைகளை இதேமாதிரி நடத்தவேண்டுமென விரும்பலாகாது. பெருமக்கள் சபைபற்றிய சமீபக்காலத்திய மாநாட்டின் அனுபவங்கள் நம்பிக்கையளிப்பதாக இல்லையெனினும், 1885-ஆம் ஆண்டின் முன்னிகழ்வு, மறு ஒதுக்கீடுபற்றிய

கலந்தாய்வு போன்ற பிரச்சினைகளில் கொண்டுபோய் விடலாம். சாதாரண உறுப்பினர் இந்த உரிமையை முற்றிலும் கைவிட விரும்பமாட்டார்கள். அடிப்படையான தேசிய நலன்களுக்கு ஆபத்து என்றால், அரசியல் கட்சிகள் போராட்டத்தைத் தவிர்க்கின்றன. சிறந்த வழிகள்பற்றி அரசியல் கட்சிகள் வேறுபடலாமெனினும், இவைகளின் நோக்கம் ஒன்றேதான். அதாவது, அரசருடைய பாதுகாப்பு, மதிப்பு, நலவாழ்வு ஆகியவைகளைக் கட்சிகள் தம் நோக்கங்களாகக் கொண்டிருக்கின்றன.

ஒருங்கமைந்த கட்சிகளின் கட்டுக்கோப்பு

1950-ல் இங்கிலாந்தில் 3,43,69,477 வாக்காளர்கள் இருந்தார்கள். இதற்குமேல், 400, 500 பேர்கள் தபால்மூலம் வாக்களிக்கும் உரிமைபெற்றிருந்தார்கள். ஒரு தொழிற்கட்சி உறுப்பினருக்கும் கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினருக்கும் அளிக்கப்பட்ட சராசரி வாக்குகள் முறையே 42,100. ஆனால், ஒரு லிபரல் கட்சி உறுப்பினருக்கு 2,91,600 வாக்காளர்கள் வாக்களித்திருக்கின்றனர். 1950-ல் 82.96 சதவீதம் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களும் 1951-ல் 82.6 சதவீத வாக்காளர்களும் வாக்களித்தார்கள்.

ஒரு கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றக் கட்சியமைப்பை ஒவ்வொரு கட்சியும் பெற்றிருந்தது. லிபரல் கட்சியினரும் கன்சர்வேடிவ் கட்சியினரும் வெளியாரைக் கலக்காமல் தம்முடைய கொள்கையையும் செயலையும் தாமே முடிவுசெய்துகொள்ளும் உரிமைபெற்றிருந்தனர். ஆனால், தொழிற்கட்சியின் பாராளுமன்றக் கட்சி, கட்சியின் தேசியச் செயற்குழுவோடு தொடர்புகொண்டு செயல்படவேண்டும். ஒவ்வொரு கட்சியும், அதன் தலைவரையும் கொறடாவையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறது. வாக்களிப்பின்போது சபையின் உறுப்பினரைத் திரட்டிச் சபைக்குள் கொண்டுவருவது கொறடாவின் தலையாய பணியாகும். பின்னணி உறுப்பினர்களின் கருத்துகளையும் செயல்களையும் இவர் தலைவருக்கு விளக்கியுரைக்கவேண்டும். கன்சர்வேடிவ், லிபரல், தொழில் ஆகிய கட்சிகளின் பிரிவுகள் இயல்பாகப் பாராளுமன்றத் தொகுதிகளாக இருக்கின்றன. கன்சர்வேடிவ், லிபரல் கட்சிகளின் அமைப்பு, கழகம் என விளங்குகிறது. தொழிற்கட்சியின் அமைப்பு, தொகுதியின் தொழிற்கட்சியெனப்படுகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் பிரிவுகள் தன்னாட்சிப் பிரிவுகளல்ல.

ஆனால், இவை தலைமைச் செயலகத்தின் கட்டளைகளுக் கிணங்கிச் செயல்படுகின்றன.

ஒவ்வொரு தொகுதியிலும் ஒருகட்சி ஒரு தல அமைப்பைப் பெற்றிருக்கிறது. முதலில் நிறுவப்பட்ட தல அமைப்பு, "பர்மிங்ஹாமின்" கழகமாகும். அப்பொழுது லிபரலாக இருந்த சேம்பர்லின் 1867-ல் இதை நிறுவினர். பின், எல்லா இடங்களிலும் கன்சர்வேடிவ் கட்சியும் லிபரல் கட்சியும் இது போன்ற அமைப்புகளை உருவாக்கின. தலக் கன்சர்வேடிவ் கழகங்களைக்கொண்ட தேசிய யூனியன் நிறுவப்பெற்றது. தல அலுவலகத்திற்கும் தேசிய யூனியனுக்குமிடையேயான உறவினைப் பெருக்கி, மக்களோடு தொடர்புகொள்வது இவ் வமைப்புகளின் நோக்கமாக இருந்தது. இப் பணிகள் 12 மாவட்டப் பிராந்தியக் கவுன்சில்களாலும், மத்திய நிருவாகக் குழுவினாலும், ஒரு மத்திய கவுன்சிலாலும் ஒரு மாநாட்டாலும் நிறைவேற்றப்பட்டன. இப் பன்னிரண்டு பிராந்தியக் கவுன் சில்கள் தொகுதியையும் தலைமையகத்தையும் இணைத்தன. தேசிய யூனியனின் நிருவாகக்குழு ஆண்டுதோறும் அமைக் கப்பட்டது. இதன் உறுப்பினர்களில் கன்சர்வேடிவ் கட்சி யின் தலைவர், ஆலோசனைக்குழுவின் தலைவர், ஒவ்வொரு பிராந்தியமும் அனுப்பிய 5 பிரதிநிதிகள், பிரபுக்களின் பிரதி நிதி ஒருவரும் அடங்குவர். தேசிய யூனியனின் மற்ற ஓர் அங்கம் மத்திய கவுன்சிலாகும். இது தேசிய யூனியனின் நிருவாகக்குழு தயாரித்த அறிக்கையை ஆராய்கிறது. கட்சி யின் கீழ்நிலைப்பிரிவுகள் அனுப்புகின்ற பிரேரணைகளைக் கேட்கிறது. கட்சியின் அடிமட்டத்திலும் உச்சியிலும் முறையே தொகுதிக்கழகமும் மத்திய அலுவலகமும் இருக் கின்றன. 1870-ல் நிறுவப்பட்ட மத்திய அலுவலகம் பாராளு மன்ற வேட்பாளர்களைப் பேட்டிகாணுகிறது; அமைப்புப் பிரச்சினைகள்பற்றியும் கட்சியின் திறன்முறைபற்றியும் தலக் குழுக்களுக்கு அறிவுரை அளிக்கிறது. 12 பிராந்தியங்களுக்கும் பிராந்தியப் பேராட்களை அனுப்புகிறது. மத்திய அலுவலகத் தின் தேர்தல் பேராலும், தலக்கட்சித் தொகுதியின்பேராலும் ஆண்டு ஊதியமாக 400 பவுனிலிருந்து 800பவுன்கள்வரை பெறு கிறார்கள். இவர்கள் மத்திய அலுவலகத்தால் பயிற்றுவிக்கப் படுகிறார்கள். தலைவர், துணைத்தலைவர், பொருளாளர் ஆகி யோர் கன்சர்வேடிவ் கட்சித்தலைவரால் அமர்த்தப்படுகிறார் கள். கன்சர்வேடிவ் மாநாடுகளின் முடிவுகளுக்குக் கட்சித் தலைவர் எவ்வழியிலும் கட்டுப்பட்டவரில்லை. ஆண்டிற்கு ஒரு தடவை மாநாட்டைத் தேசிய யூனியன் கூட்டுகிறது. இக்

கூட்டத்தில் மத்தியக் கவுன்சிலின் எல்லா உறுப்பினர்களும், தொகுதிக்கழகங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் ஏழு பிரதிநிதிகளும் கலந்துகொள்ளுகிறார்கள்.

தொழிற்கட்சியின் அமைப்பு

தொழிற்சங்கம், சோசலிசத் தொழிற்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தலக்கட்சி அமைப்புகள் ஆகியவைகளின் பகர ஆட்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுமாநாட்டில் கூடுகின்றார்கள். கட்சி அமைப்பு ஒவ்வொன்றும் அதன் உறுப்பினர் தொகையின் வீதத்தில் பிரதிநிதித்துவம் பெறுகிறது. ஒவ்வொரு ஆயிரம் உறுப்பினருக்கும் ஒரு வாக்குச்சீட்டு கொடுக்கப்படுகிறது. பொதுவாக, ஐந்து அல்லது ஆறு தொழிற்சங்கங்கள் மற்றெல்லாத் தொகுதிக்கட்சிப் பிரதிநிதிகளைக்காட்டிலும் அதிக வாக்குகளைப் பெற்றிருக்கின்றன. இம் மாநாடு ஓராண்டில் 5 நாட்கள் கூடிக் கட்சியின் கொள்கையை முடிவுசெய்கிறது.

தொழிற்கட்சியின் ஆண்டுமாநாடு உருவாக்கும் திட்டங்களின் அரசியலமைப்புமுறைச் சிறப்பியல்புபற்றி, சர்ச்சில் அட்லிக்கு விளக்கிக் கடிதமொன்று எழுதினர். தொழிற்கட்சி பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதனுடைய கொள்கையையும் செயலையும் பொறுத்தவரையில் செயற்குழுவின் வழியாகச் செயற்படும் மாநாடு, கட்டுப்பாடு செய்யும் ஒரு நிறுவனமாக இருக்கிறதென்பது சர்ச்சிலின் கருத்தாகும். இக் கருத்தை அட்லி ஏற்கவில்லை. பாராளுமன்றத் தொழிற்கட்சி, கட்சியின் மாநாட்டிற்கோ, செயற்குழுவிற்கோ கட்சியமைப்பு விதிகளின்படி பதில்சொல்லக் கடமைப்பட்டிருக்கவில்லை. கட்சியின் ஆண்டுமாநாட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டத்திற்குள் செயல்படப் பாராளுமன்றத் தொழிற்கட்சி முழுமையான உசித அதிகாரம் பெற்றிருக்கிறதென்பது அட்லியின் கருத்தாகும்.

கட்சிமாநாடு கூட்டமாக அமராதபொழுது தொழிற்கட்சியின் விவகாரங்களும், மத்திய அலுவலகத்தின் இயக்கமும் தேசிய நிருவாகக் (செயல்) குழுவிடம் விடப்பட்டிருக்கின்றன. இக் குழுவில் 27 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆண்டுமாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களில் பன்னிருவர் தொழிற்சங்கப் பேராட்களால் தெரிவுசெய்யப்படுகிறார்கள். ஏழுவர் தலக்கட்சி அமைப்பு

களால் தெரிவுசெய்யப்படுகிறார்கள். ஒருவர், சோசலிஸ்ட், தொழில்முறைக் கூட்டுறவுச் சங்கங்களினால் தேர்ந்தெடுக்கப் படுகிறார். மாநாடு 5 பெண்களைத் தெரிவுசெய்கிறது. இதனு டன், பாராளுமன்றத் தொழிற்கட்சித்தலைவரும் பொரு ளாளரும் பதவிபற்றிய உறுப்பினர்களாக இருக்கிறார்கள். தேசியச் செயற்குழு மாதமொரு முறை கூடுகிறது. கூட்டம் இரண்டு அல்லது மூன்று நாட்கள் நடைபெறுகிறது. மாநாட்டின் மீது இது பெரும் அதிகாரமும் செல்வாக்கும் செலுத்துகிறது. இதன் ஏற்பின்றி, எவரும் தொழிற்கட்சியின் சார்பில் பொது மக்கள் சபைக்கு வேட்பாளராக ஆகமுடியாதென்னும் உண்மை, இதன் வலிமைக்கு ஒரு சான்றாகும். இச் செயற்குழு, உறுப்பினர்களை வெளியேற்றும் அதிகாரத்தையும் பெற்றிருக் கிறது.

செயற்குழுவைத்தவிர, தொழிலாளர்களின் தேசியக் கவுன்சிலும் இருக்கிறது. இதில் 21 உறுப்பினர்கள் இருக் கிறார்கள். இவர்களில் எழுவரைத் தொழிற்சங்கக் காங்கிரசு தேர்ந்தெடுக்கிறது. மூவரைத் தொழிற்கட்சிச் செயற்குழுவும், நால்வரைப் பாராளுமன்றத் தொழிற்கட்சியும், எழுவரைக் கூட்டுறவு யூனியனும் தேர்ந்தெடுக்கின்றன. இது ஓர் ஆலோ சனைக்குழுவாகும். கட்சியின் பல்வேறு அமைப்புகளிடையே இணக்கத்தை ஏற்படுத்துவது இதன் கடமைப்பொறுப் பாகும்.

தொகுதிக்கட்சி அமைப்புகளையும் தொழிற்கட்சி பெற் றிருக்கிறது. இவை கூட்டங்களை நடத்துகின்றன. ஆண் டிற்கு ஒரு ஷில்லிங் சந்தா செலுத்துபவர் இக் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். வார்டு (வட்டம்) அமைப்பிற்கு ஒரு தலைவர், செயலர், பொருளாளர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்படுகிறார்கள். தொகுதிக்கு இது பிரதிநிதிகளை அனுப்பும் அதிகாரம் பெற்றிருக்கிறது. தொகுதியமைப்பு செயற்குழுவைத் தெரிவுசெய்கிறது. தலத் தொழிற்சங்கக் கிளைகளும், சங்கங்களும் தம் உறுப்பினர்களின் தொகைக் கேற்பப் பொதுக்குழுவிற்குப் (General Committee) பேராட்களை அனுப்பலாம். பொதுக்குழு கொள்கையை ஆராய்கிறது; தொகுதிக்கட்சியின் விவகாரங்களைக் கட்டுப்படுத்துகிறது. தொழிற்கட்சியின் அமைப்பு, மற்றக் கட்சிகளைவிடப் பெரு மளவு மக்கள் சார்புடையதாக இருக்கிறது.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Sir Ivor Jennings	:	Party Politics, Vol I
do	:	Growth of Parties, Vol II
Brand	:	The British Labour Party
R. T. Mekenzie	:	British Political Parties (1963)
Lord Morrison	:	Government and Parliament Ch. 6 & 7
Harvey & Bather	:	British Constitution Ch. 7
Masterman	:	History of the British Constitution
L. S. Amery	:	Thoughts on the Constitution
S. D. Bailey	:	The British Party System

19. தலஆட்சி

மாவட்டம் (Counties)

ஒரு நாட்டின் அரசியல் மாண்பை அந் நாட்டின் தலஆட்சி முறையில் காணமுடிவதால் இங்கிலாந்தின் தலஆட்சிமுறை, அரசியலமைப்புச் சிறப்புப்பெறுகிறது. அரசியல் வாழ்க்கையில் பயிற்சிக்கூடமாகத் தலஆட்சி மன்றங்கள் இருக்கின்றன. மாவட்ட வீரத்திருத்தகைகள், அமைதிகாண் நடுவர்கள், மாவட்ட, நகரக்கவுன்சிலர்கள் ஆகியோர் தலஆட்சியின் பட்டறிவை மத்திய சட்டமன்றத்திற்குக் கொண்டுவருகிறார்கள். ஒரு நாட்டின் அரசியல் வாழ்க்கையில் ஊழலும் திறமையின்மையும் காணப்பட்டால், அந்த நாட்டின் ஆட்சி முறையும் திறமையற்றதாக இருக்கும்.

இங்கிலாந்தின் தலஆட்சிமுறை நான்கு காலவரையறைக்குட்பட்டதாக இருக்கிறது. முதல் கால வரையறை நார்மானியர்களின் வெற்றியோடு முடிகிறது. இக் காலத்தில் மத்திய நிறுவனம் நீலபெற்றுவிடுகிறது. மாவட்ட நீதிமன்றங்களின் மறைவோடும், மாவட்ட ஆட்சிப்பணிகள் அமைதிகாண் நடுவர்களுக்கு மாற்றப்படுவதோடும் இரண்டாவது காலப்பிரிவு முடிவுறுகிறது. 1888-ஆம் ஆண்டின் மாவட்டக் கவுன்சில் சட்டத்தோடு மூன்றுவது காலப்பிரிவு முடிவடைகிறது. மாவட்ட ஆட்சியை இச் சட்டம் மக்களாட்சி அடிப்படையில் வைத்தது. இதற்குப் பிற்பட்ட காலத்திய தல ஆட்சியின் வளர்ச்சி நான்காவது காலப்பிரிவைச் சேரும்.

இடைக்காலத்திய தலஆட்சி

மாவட்ட நீதிமன்றத்தை மையமாகக்கொண்டு முற்காலத்திய தலஆட்சி நடைபெற்றது. நார்மானியர்கள் வலிமைவாய்ந்த மத்திய அரசாங்கமொன்றை இங்கிலாந்தில் நிறுவினர். தலஆட்சியிலிருந்து கோமகன்களின் ஆதிக்கம்

மறைந்ததை இக் காலம் குறிப்பிட்டது. இதே சமயத்தில் அரசப்பேராளின் (Sheriff) சிறப்பை நார்மானிய ஆட்சிமுறை அதிகரித்தது. நிலமானிய நீதிமன்றங்களுக்குத் தடையாகப் பழைய தலஆட்சிமுறையை நார்மானியர்கள் இறுத்திக்கொண்டார்கள். ஆஞ்சிவின் மரபினர், சுற்றிவரும் நீதிபதிகளை மத்திய அரசாங்கத்திற்கும் தல அரசாங்கத்திற்குமிடையே ஓர் இணைப்பாக வைத்துக்கொண்டார்கள். மத்திய அரசாங்கத்தின் ஒரு தனிப்பிரதிநிதியாக இப்பொழுது அரசப்பேராள் இருக்கவில்லை. இவருடைய அதிகாரத்தைக் குறைத்த பல மாற்றங்களில் இதுவும் ஒன்றாகும். தல நிலமானிய நீதிமன்றங்களின் வளர்ச்சியும், சாசன நகரங்களின் வளர்ச்சியும் இவருடைய அதிகார வரம்பைக் குறைத்தன. 1194-ல் முறையீடுகளின் காப்பாளர்கள் அமர்த்தப்பட்டபொழுது இவருடைய நீதிவழங்கும் அதிகாரத்தில் பெருமளவு அகற்றப்பட்டுவிட்டது.

நார்மானியர்களின் ஆட்சிக்காலத் தொடக்கத்தில் அரசப் பேராட்கள் மரபுவழிப் பெருமக்களாக வளர்ச்சியடைந்திருந்தார்கள். இந்தப் பதவிக்குக் கீழ்நிலை அலுவலர்களை அமர்த்தி, முதலாம் ஹென்றி இந்தப்போக்கைத் தடைசெய்தார். ஐம்பதாண்டுகளுக்குப்பின், மறுபடியும் இப் பதவி பெருங்குடிமக்களின் பிடியில் சிக்கியது. இரண்டாம் ஹென்றி அரசப் பேராட்களை நீக்கிவிட்டு, இவர்களுடைய நடத்தையை ஆராயச் சுற்றிவரும் நீதிபதிகளின் குழு ஒன்றை அமர்த்தியபொழுது அரசப்பேராட்களின் தலச்சுதந்திரம் பறிபோயிற்று. நீக்கப்பட்ட பேராட்களில் ஒருசிலர் மட்டுமே மறுபடியும் வேலையில் அமர்த்தப்பட்டனர். இவர்களுடைய இடங்களில் நிதித்துறை நீதிமன்றத்திலிருந்து அரச அலுவலர்கள் அமர்த்தப்பட்டார்கள். முதல்முறையாகத் தலஆட்சி அதிகார இனத்திற்குரியதாயிற்று.

பேருரிமைச் சாசனத்தின் ஒரு பிரிவு, அரசப்பேராள் நீதித்தொடர்புடைய பணியைச் செயல்படுத்தலாகாதெனக் குறிப்பிட்டது. பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் மாவட்டத்தின் முக்கியத்துவத்தையும் அரசப்பேராளின் சிறப்பு நிலையையும் குறைத்தது. 1340-ல் அரசப்பேராளின் பதவிக்காலம் ஓராண்டாகியது. இதற்குப்பின், அரசப்பேராள் சில இயல்பான பணிகளையே நிறைவேற்றினர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் அமைதியைப் பேணும் பணி வீரத் திருத்தகைகளிடம் விடப்பட்டிருந்தது. இவர்களின் முன் எல்லோரும்

அமைதியை நிலைநாட்டுவதாகப் பிரமாணம் செய்துகொண்டார்கள். அமைதி பேணுநர் 1860-ல் அமைதிகாண் நீதிபதிகளானார்கள். இவர்கள் நீதி இயல்புடைய சில பணிகளை மேற்கொண்டார்கள். மாவட்ட நீதிமன்றத்தின் பணி இவர்களுக்கு மாற்றப்பட்டது. பழைய மாவட்ட நீதிமன்றம் மறைந்துவிட்டது. டியூடர்கள் தலஆட்சிப்பணியை இவர்களிடம் விட்டார்கள். தலஆட்சியின் வளர்ச்சியைத் தலத்தில் உள்ளவர்களின் பொறுப்பாக்கினர்கள். ஆனல், அமைதிகாண் நடுவர்கள் நிலக்கிழார் வகுப்பினரைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஆகவே, தலஆட்சியும் உயர்குடிமக்களின் இயல்பை வெளிப்படுத்தியது. பழமையான அதிகாரங்களை அரசப் பேராட்கள் இழந்தாலும், பாராளுமன்றத் தேர்தலில் மாவட்டம், நகர் ஆகிய தொகுதிகளின் தேர்தல் அதிகாரியாக இவர் மாறினர். ஓர் அரசப்பேராள் தம் தொகுதியின் பிரதிநிதியாகப் பொதுமக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகுதியை இழந்துவிடுகிறார். இதைப் பயன்படுத்திக்கொண்டு முதலாம் சார்லஸ் மன்னர், தம் எதிரிகளை அரசப் பேராட்களாக அமர்த்தாது விட்டுவிட்டார். சிறிய கடன்கள் பற்றிய வழக்குகளை ஆராய 1846-ல் நிறுவப்பட்ட மாவட்ட நீதிமன்றத்திற்குப் பழைய மாவட்ட நீதிமன்றத்தோடு எத்தகைய தொடர்பும் இல்லை.

தலஆட்சிப்பணியின் வளர்ச்சியோடு அமைதிகாண் நடுவர்களின் முக்கியத்துவம் வளர்ந்தது. மத்திய அரசாங்கத்தின் பதிலாட்களாக இவர்கள் அமர்த்தப்பட்டார்கள். ஆனல், இவர்களின் நலனும் தொடர்பும் மாவட்டங்களில் நிலைபெற்றிருந்தன. இவர்கள் இங்கிலாந்தை அதிகாரவர்க்க ஆட்சியிலிருந்து காப்பாற்றினர்கள். தலைமையகத்திலிருந்து அனுப்பப்பட்ட அலுவலர்களைக்கொண்டு டியூடர்கள் தல ஆட்சியை நடத்தியிருந்தால், இங்கிலாந்தின் தல அரசாங்கம் அதன் மிகச் சிறப்பிற்குரிய இயல்புகளை இழந்திருக்கும்.

அமைதிகாண் நடுவர்களின் பணிகளைத்தொகுத்துரைப்பது இயலாததாகும். பதினைரும் நூற்றாண்டின்போது நூற்றுக்கு மேற்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்டன. தலஆட்சிகளின்மீது கடினமான கடமைப்பொறுப்புகளை இவை புகுத்தின. இவருடைய நீதிவழங்கும் பணிகளோடு, கூலியை நிருணயித்தல், தொழிற்பயிற்சி முறையை மேற்பார்வையிடல், பொருள்களின் விலைகளை நிருணயித்தல், சட்டம் மீறுபவர்களைத் தண்டித்தல், இரவலர் சட்டத்தைச் செயற்படுத்தல், அலைந்து

திரிவோரைத் தண்டித்தல், அரசருக்கும் தாம் அமர்ந்து செயல்படும் மாவட்டத்திற்கும் இடையில் செய்திப்போக்கு வரத்துச் சாதனமாக இருத்தல் ஆகிய பணிகளையும் ஏற்றுச் செயல்படுத்தினர்கள்.

ஆங்கிலத் தலஆட்சித்துறையில் அமைதிகாண் நடுவர்கள் நான்கு நூற்றாண்டிற்குப் பிரதான ஆட்சியாளர்களாக இருந்தார்கள். 1888-ஆம் ஆண்டின் மாவட்டக் கவுன்சிலைப்பற்றிய சட்டத்தைப் பார்க்குமுன், சிறிய தலஆட்சி நிறுவனங்களைப் பார்க்கவேண்டும்.

தலஆட்சியில் மிகச்சிறிய பிரிவு நகராட்சியாகும். நார்மானியர்களின் வருகைக்குப்பின் இது மேனர் ஆயிற்று. இது மேனர் நீதிமன்றத்தையும் ஒரு தலைவரையும் பெற்றிருந்தது. நூற்றுவர் நீதிமன்றங்களும் மேனர் நீதிமன்றத்தின் தோற்றத்திற்குப்பின் மறைந்தது. டியூடர்கள், திருச்சபை வட்டத்தைத் தலஆட்சிப் பிரிவாக்கினர்கள். இரவலர் சட்டத்தைச் செயலாட்சி செய்ய அப் பிரிவு பயன்பட்டது. பதின்மூன்றும், பதினான்காம் நூற்றாண்டுகளில் அரசிய லமைப்புப் போராட்டத்தில் திருச்சபை வட்டக்குருமார்கள் பிரதானமானவர்களாகத் தோன்றினர்கள். திருச்சபை வட்டக் கூட்டமாகப் பழைய சிறு நகராட்சிகள் மீண்டும் தலைதூக்கின. குருமார்களின் மேற்பார்வையில் மேனர் நீதிமன்றத்தின் பணிகளை இது சிறிது சிறிதாக எடுத்துக்கொண்டது. திருச்சபை வட்டக்கூட்டம் கிராம அலுவலர்களைத் தேர்ந்தெடுத்தது. இவர்களில் முக்கியமானவர் திருச்சபைக் காப்பாளராவார். திருச்சபை வட்டம் என்னென்ன சொத்துகளைப் பெற்றிருந்ததோ அவைகளைப் பேணிக்காத்தல் இவருடைய அலுவலாகும்.

திருச்சபை வட்டத்தின் கணக்குகளும் இதன் கூட்டத்தில் வைக்கப்படுகிறது. ஆகவே, பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் ஒவ்வொரு திருச்சபை வட்டமும் ஒரு சனநாயகச் சமுதாயமாயிற்று.

எலிசபெத் காலத்தின் அரசியல் அறிஞர்கள் இரவலர் சட்டத் துயருதவியை மேற்கொண்டபொழுது, திருச்சபை வட்டத்தை இரவலர் சட்டச் செயற்பாட்டிற்குத் தெரிந்தெடுத்தார்கள். துயருதவியை நிறைவேற்ற மேற்பார்வையாளர்களென்ற ஒரு புதிய அலுவலர் தொகுதி படைக்கப்பட்டது.

ஆங்கிலோ சாக்சானிய தலஆட்சிமுறையில் மாவட்டத் திற்கும் சிறு நகராட்சிக்கும் இடையில் நூற்றுவர் குழு ஒன் றிருந்தது. நிலமானிய உரிமைகளின் வளர்ச்சி, நூற்றுவர் நீதிமன்றத்தின் சிறப்புநிலையைக் குறைத்தது. பதினைகாம் நூற்றாண்டின் மத்தியில் இவை தேய்ந்து நலிந்தன. நூற்றுவர் குழு, நாட்டின் புவியியல் உட்பிரிவுகளில் ஒன்றாக இருந்தது.

திருச்சபை வட்டத்திற்கும் மாவட்டத்திற்கும் இடைநிலைப் பகுதியொன்று படைக்கப்படுவதற்கான முயற்சியை நாம் இரவலர் சட்ட வரலாற்றில் காணலாம். இரவலர் துயருத விக்காகத் திருச்சபை வட்டங்களின் இணைப்பிற்கு 1723-ஆம் ஆண்டுச்சட்டம் வகைசெய்தது. 1834-ஆம் ஆண்டின் இரவலர் சட்டத்திருத்தச் சட்டத்தால் இரவலர் சட்ட ஒன்றியங்கள் படைக்கப்பட்டன. இரவலர் சட்டத்தைச் செயல்படுத்தும் பிரிவுகளாக இவை மாற்றப்பட்டன. திருச்சபை வட்டத்தின் தொழுகைக்குழு கிராமங்களில் பயனுள்ளதாம் அதிகாரங்களை இழந்துவிட்டது. இது ஒரு திருச்சபை நிறுவனமாக மாறி விட்டது.

பிற்காலத்தில் தலஆட்சிப் பகுதிகள் குழப்பமான முறையில் வளர்ந்தன. இந் நூற்றாண்டின் சுகாதாரச் சீர்திருத் தங்கள், நகர, கிராமச் சுகாதார வட்டங்களைப் படைத்தன; 1870-ஆம் ஆண்டுக் கல்விச்சட்டம் பள்ளிக்கழகப் பகுதிகளைப் படைத்தன; இடுகாட்டுக்கழக வட்டங்கள், நெடுஞ்சாலை வட்டங்கள் போன்ற இன்னும் பல்வேறு தலஆட்சிப் பகுதிகள் இருந்தன.

1888-ஆம் ஆண்டில் தலஆட்சிச்சட்டம் ஆட்சியியல் குழப் பத்திலிருந்து ஓர் ஒழுங்கான முறையைக் கொண்டுவந்தது. மாவட்ட ஆட்சிமுறையை இச்சட்டம் ஒரு சனநாயக அடிப் படையில் வைத்தது. இதன்படி, இங்கிலாந்து 62 ஆட்சி மாவட்டங்களாகவும், 60 மாவட்ட நகரங்களாகவும் பிரிக்கப் பட்டது. ஒவ்வொரு மாவட்டமும் ஒரு மாவட்டக் கவுன்சிலைப் பெற்றிருந்தது. மாவட்டத்தின் வரிசெலுத்துவோரால் கவுன் சிலர்கள் மூன்றாண்டுப் பதவிக்காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். கவுன்சிலின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மாவட்டத்தின் உருவளவிற்கேற்ப அமையும். உறுப்பினர்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமல் கவுன்சிலில் முதியோர்கள் அமர்த்தப்பட்டார்கள். இவர்கள் ஆறாண்டுகள் பதவியிலிருப்பார்கள். குவார்ட்டர் செசன்சின் எல்லா ஆட்சிப்

பணிகளும், இக் கவுன்சிலுக்கு மாற்றப்பட்டன. நீதிபதிகளும் மாவட்டக்கவுன்சிலின் உறுப்பினர்களையும் கொண்ட ஒரு கூட்டுக்குழு அமர்த்தப்பட்டது. இது மாவட்டக் காவற்படையைக் கட்டுப்பாடு செய்தது. 1892, 1902-ஆம் ஆண்டுச்சட்டங்களால் கல்வியின் எல்லாத்துறைக் கட்டுப்பாடும் மாவட்டக் கவுன்சிலுக்கு அளிக்கப்பட்டது.

1894-ஆம் ஆண்டின் மாவட்டத் திருச்சபை வட்டங்களின் சட்டம் தலஆட்சிமுறையின் சீரமைப்பை மேலும் ஒரு நிலைக்கு உயர்த்தியது. ஒவ்வொரு திருச்சபை வட்டத்திலும் பழைய சனநாயகத் திருச்சபை வட்டக்கூட்டம் மறுபடியும் அமைக்கப்பட்டது. இத் திருச்சபைக் கூட்டம் தானுகவோ, அல்லது திருச்சபை வட்டக்கவுன்சிலின் வழியாகவோ இயங்கியது. திருச்சபை வட்டப்பகுதிக்கும் மாவட்டத்திற்கும் இடையில் ஒரு புதிய கழகம் அல்லது நகர வட்டக்கவுன்சில் ஒன்றை இச் சட்டம் நிறுவியது. சுகாதாரம், சாலைப்போக்குவரத்து, இரவலர் சட்ட விவகாரங்கள் ஆகியவைகளை இவை கவனித்து வந்தன.

தலஆட்சிக்கழகம் இந்தத் தலக்கவுன்சில்களையெல்லாம் கட்டுப்படுத்தும் கேந்திர நிறுவனமாக இருந்தது. இரவலர் சட்டத்திருத்தம் (1834), மத்திய இரவலர் சட்டக்கழகம் ஒன்றை நிறுவியது. பொது சுகாதாரச் சட்டம் (1848), பொது சுகாதாரக் கழகமொன்றை ஏற்படுத்தியது. இது பின்னர் உள்துறை அமைச்சோடு சேர்ந்துவிட்டது. தல ஆட்சியை மேற்பார்வையிடுவதற்கென ஒரு துறையை அமைக்கவேண்டுமென 1869-ல் ஓர் ஆணைக்குழு அறிவித்தது. "ஆட்சியை மையப்படுத்துவதற்கன்றித் தலவாழ்க்கையைச் செயற்படச் செய்ய போதிய அளவு வலிமையுடைய, ஏற்கத் தக்கதோர் அமைச்சர் இருக்கவேண்டு"மெனவும் இவ் வாணைக் குழு அறிக்கைசெய்தது. பழைய இரவலர் (சட்ட) கழகம், பொதுநலத்துறை ஆகியவைகளைக்கொண்ட தலஆட்சிக்கழக மொன்று 1871-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

பாராளுமன்றம் தலஆட்சிக் கழகத்திற்குக் கணிசமான சட்டஆக்க அதிகாரமளித்தது. பல்வேறு சட்டங்களின்கீழ் ஒழுங்குமுறைகளைச் செய்ய இதற்கு அதிகாரமளிக்கப் பட்டது. தல நிறுவனங்களுக்கு இது தற்காலிகக் கட்டளைகளை அளிக்கிறது. தல நிறுவனங்கள் இவைகளைப் பாராளுமன்றத்தின் உறுதிப்பாட்டிற்கு அனுப்புகின்றன. தல நிறு

வனங்களின் துணைச்சட்டங்களையெல்லாம் தலஆட்சிக்கழகம் உறுதிப்படுத்தவேண்டும்.

தலஆட்சியின் கீழுள்ள இரவலர் சட்டத்துறை, தல ஆட்சிக்கழகத்தின் நெருங்கிய கண்காணிப்பில் இருக்கிறது. எல்லாத் தலநிறுவனங்களின் கணக்குகளும் கழகத்தால் தணிக்கைசெய்யப்படுகின்றன. சட்டத்திற்கு மாறான செலவினத்தின்மீது உபரி வரிவிதிக்க இக்கழகம் அதிகாரம் பெற்றிருக்கிறது. கழகத்தின் இசைவின்றித் தலநிறுவனம் கடனெதுவும் எழுப்பலாகாது. இவைகளுக்குமேல் பலவகையான பொருள்களைப்பற்றித் தலநிறுவனங்களுக்குக் கழகம் இடையருது அறிவுரை அளிக்கிறது. இன்னும் சில நிகழ்வுகளில், பாராளுமன்றத்தால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை இது செயற்படுத்தத் தூண்டுகிறது.

மாவட்டக் கவுன்சில்கள் மூன்று மாதத்திற்கொருமுறை கூடுதல்வேண்டும். மாவட்டத்தின் பணிகளைக் கவுன்சிலின் குழுக்கள் செய்கின்றன. பல கவுன்சில்கள் பெருமளவில் குழுக்களைப் பெற்றிருக்கின்றன. சில நோக்கங்களுக்காகக் கூட்டுக்குழுக்கள் அமர்த்தப்படுகின்றன. நகரக் கவுன்சில்களை விட, இக்குழுக்கள் பெருமளவு அதிகாரம் பெற்றிருக்கின்றன. இச் சட்டத்தால் குறிப்பிடப்பட்ட வரையறைகள் என்ன வென்றால், குழுக்கள் கவுன்சிலுக்கு அறிக்கைதர வேண்டும். கடனைகவோ, வரியாகவோ எக்குழுவும் பணம் திரட்டலாகாது. காவற்படையின் செயலாட்சிக்காக 1888-ஆம் ஆண்டின் சட்டப்படி ஒரு நிலையான கூட்டுக்குழு இருக்கவேண்டும். நிதிக் குழுவின் இணக்கமின்றி, எந்தக் கவுன்சிலும் 50 பவுன்களுக்கு மேல் செலவிடலாகாது. சட்டப்படியிலான மூன்றுவது குழுவை 1902-ஆம் ஆண்டின் கல்விச்சட்டம் நிறுவியது.

மாவட்டக் கவுன்சிலின் குழுக்கள் பட்டியலிலிருந்து இதன் பணிப்பரப்பைக் காணலாம். வார்விக்ஷயர் மாவட்டக் கவுன்சிலின் குழுக்கள் பின்வருமாறு: நிதி, மாவட்டச் சாலைகள், பாலங்கள், மாவட்டக் கட்டடங்கள், சிறு நிலவுடைமை மானியங்கள், சுகாதாரம், மாவட்ட வரி அடிப்படைகள், நிருவாகம், புகலிடம், கல்வி, இதனுடைய ஒன்பது துறைச்சார்புடைய குழுக்கள், 27 உட்குழுக்கள், நிலையான கூட்டு, பொதுநோக்கங்கள், மாவட்ட எல்லைகள், அறநிலையங்கள், பறவைப் பாதுகாப்பு, நிதியேற்பாடுகள், அச்சிடுதல் ஆகியன.

இப்போதைய மாவட்ட ஆட்சியில் தொழிலாளர்கள் நேர் முகமாகப் பங்குபற்றுவதிலிருந்து மாவட்டத்தின் உருவளவு விலக்கிவிடுகிறது. மாவட்டக் கவுன்சிலின் தேர்தல்கள் பெரும் பரபரப்பை உண்டுபண்ணுவதில்லை. மாவட்டத்தின் ஆட்சிப்பொறுப்பு ஒருசிலரிடம் மட்டுமே இருந்தது. ஆனால், கவுன்சிலின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்து செயலாற்றுவதால் ஆட்சியில் திறமை ஏற்படுகிறது.

திருச்சபை வட்டக்கவுன்சில்கள் இதன் ஆதரவாளர்களின் விருப்பத்தை நிறைவேற்றவில்லை. தன்னுடைய கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கும் நிலையில் நாட்டின் தொழிலாளர்கள் போதிய அளவு சுதந்திரமான ஒரு நிலையில் இல்லாதது இதற்கான முதன்மையான காரணமாகும். தல நிலக்கிழார்கள் தன்னுட்சி உணர்வில் தனிப்பட்ட அக்கறை கொள்ளும்போது பயனுள்ள விளைவுகள் சில வேளைகளில் ஏற்படுகின்றன. ஆனால், அரசியல் வாழ்க்கையின் தலப் பிரிவுகளை மறுஅமைப்பு செய்வது, இக் காலத்திய உயிர்ப் பிரச்சினையாக இருக்கின்ற கிராம வாழ்க்கையின் முழுப்பிரச்சினையில் ஒரு பகுதியாகும்.

இங்கிலாந்தின் தலஆட்சிமுறையில் குழுமுறையும், பொழுதுபோக்குத்தன்மையின் தனிமுதன்மையும் இரண்டு சிறப்பியல்புகளாகும்.

நீதி விவகாரங்களில் தனிப்பயிற்சி பெறுத சான்றுயர்கள் வழக்குகளை ஒரு நிபுணரின் துணைகொண்டு முடிவுசெய்கிறார்கள். நிருவாகத்தில், தம்முடைய துறைபற்றிய சிறப்பறிவு எதுவுமில்லாத அமைச்சர்கள், நிபுணர்களின் கருத்தை ஏற்காதிருக்க முழுமையான அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். சிறு நீதிமன்றங்களில் சட்டப்பயிற்சியற்ற குற்றவியல் நீதிபதிகள், நீதிபதிகளின் எழுத்தர் அறிவுரையை நம்பித் தீர்ப்பு அளிக்கிறார்கள். நகரக் கவுன்சில்களில் அனுபவமில்லாத கவுன்சிலர்கள் நகர எழுத்தர், மற்ற நகராட்சி அலுவலர்கள் ஆகியோரின் அறிவுரையை வைத்துக்கொண்டு ஆட்சிசெய்கிறார்கள். தம்முடைய பொறுப்பான அமைச்சர்களின்முன் ஒரு நிபுணரின் நிலையை அரசர் பெற்றிருப்பதாகக் கூடக் கருதலாம்.

இங்கிலாந்தின் தேசிய நிறுவனங்கள் ஏன் இத்தகைய போக்கை மேற்கொண்டனவென்பதை எளிதாக விளக்க

இயலாது. இதுவே ஒரு சிறப்பியல்பாகவும் இருக்கலாம். மற்றெந்த முறைகளையும்விட இது மக்களாட்சிப் பண்புகளோடு ஒரே சீராக இயங்கிவந்துள்ளது. அதிகார வர்க்கம் இதன் எதிரியென்பதையும் இது தெரிந்திருக்கிறது.

ஆங்கிலத் தலஆட்சிமுறையில் வளர்ச்சியடைந்துள்ள குழு முறை சுவையானது. ஏனெனில், மத்திய, தல, அரசியலமைப்பு முறைகளின் மாறுபடும் தன்மையை இது எடுத்துக் காட்டுகிறது. மத்திய நிறுவனம் ஒரு குழுவால் (கேபினெட்) நடத்திவைக்கப்படுகிறது. இக் குழுவினர் ஒரு கட்சியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்கள். அமைச்சர்கள் பல்வேறு ஆட்சித்துறைகளுக்குப் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். தலக்கவுன்சிலில் இடம்பெற்றிருக்கும் வீதத்தில் இரு கட்சிகளாலும் அமைக்கப்பட்ட குழுக்களைத் தலஆட்சிமுறை வளர்த்துள்ளது. இக் குழுக்களுக்கு ஒருவர் தலைவராக அமர்கிறார். மாவட்டக் கவுன்சிலின் தலைவர் வலிமையான ஆளுமை உடையவராயின், பெருமளவு பிரதம அமைச்சரின் நிலையைச் சில வேளைகளில் எய்தலாம். ஒரு நகர முதல்வரின் நிலையும் இத்தகையதேயாகும். ஆனால், இங்கிலாந்தின் முன்னேற்றமான நகராட்சிகளில் இரண்டு அல்லது மூன்றுண்டுகளுக்குமேலாக நகர முதல்வரை மறுபடியும் தேர்ந்தெடுப்பதை மரபுகள் தடைசெய்துவிடுகின்றன. கட்சியின் நிரந்தரமான தலைவராக ஆகிவிடாதவாறு இவை இவரைத் தடுத்துவிடுகின்றன.

இங்கிலாந்தின் சட்டத்திலும் அரசியலமைப்பிலும் நிலை பெற்றுள்ள வகுப்பினரின் ஆட்சி, இங்கிலாந்தின் தலஆட்சியில் முழுமையாக ஒழிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து உண்மையிலேயே தன்னாட்சிமுறையை வளர்த்துக்கொண்டுள்ளது. அதாவது, சட்டமியற்றவும், விவாதிக்கவும், வயது வந்தோருக்கு வாக்குரிமையெனும் அடிப்படையில் தேர்தல் முறையில் பாராளுமன்றம் அல்லது கவுன்சிலின் வழியாக ஆட்சிசெய்யவும் ஆங்கிலேயர்கள் உரிமைபெற்றிருக்கிறார்கள். சுயேச்சையான, நேர்மையான நீதிமன்றத்தில் மக்களின் இறைமீதான முழுமையான, சிறப்பான வரையறை நிலைபெறுகிறது. எந்த மனிதரும் அல்லது எந்த அரசாங்கமும் விளைவு கருதாது துணிச்சலோடு சட்டத்தை முறிக்கமுடியாதவாறு இது செய்கிறது. சட்டங்களையும் துணைச்சட்டங்களையும் இயற்றவல்ல நிறுவனங்கள் சட்டங்களை இயற்றலாமேயன்றி, அவைகளை மீறமுடியாது.

மக்கள் சட்டமியற்றுபவர்கள்; சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். இங்கிலாந்தின் ஆட்சிமுறையமைப்பின் நலச்செழிப்பிற்கும் வலிமைக்கும் இது வித்தாகும்.

நகரம் (Borough)

வரலாற்றில், முதலில் தோன்றியபொழுது நகரங்கள் பெரிய கிராமங்களைப்போல் இருந்தன. இவை கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டன. நகரமக்களின்மீது முழு அதிகாரம் செலுத்திய பிரபுக்களே இவை சார்ந்திருந்தன. ஒரு படையெடுப்பில் ஈடுபடும்படி மக்களை வற்புறுத்திப் பிரபு ஒருவர் மக்களின் தொழில்களைக் குலைக்கலாம்; கட்டாய உழைப்பை நாடலாம்; கடுமையான வரிகளை இவர்களின்மீது விதிக்கலாம். இவருடைய அலுவலர்கள் கைவினைஞர்களையும் வணிகர்களையும் சிறையில் தள்ளலாம்; தண்டப்பணத்தால் இவர்களை அழிக்கலாம். இவர்களுடைய பொதுவாழ்க்கைக் கருத்திற்கு இடரான, வெறுக்கத்தக்க முறைகளை இவர்களின்மீது சுமத்தலாம். நிலத்தின்மீது இவர் முழுஉரிமை கொண்டாடியதால், நகரினர்ஒருவர் தம்சொத்துகளைத் தம் விருப்பில் விட்டுச்செல்வது இயலாததாகும். ஒரு பண்ணைக்குடிமகன் இறந்ததும், அலுவலர்கள் இவனுடைய வீட்டிற்கும் குதிரைலாயங்களுக்கும், களஞ்சியங்களுக்கும் சென்று இவைகளையெல்லாம் கைப்பற்றிக்கொண்டார்கள். புதிய ஆள் ஒருவர் நகரத்தில் வசிப்பதற்கு இவருடைய இசைவைப் பெறவேண்டும். இவருடைய அனுமதியின்றி, நகரத்தினர் வணிகம் செய்யும்பொருட்டு இன்னொரு நகருக்குச் செல்லக்கூடாது. பெற்றோர்கள் ஏற்பாடு செய்த திருமணங்களை இவர் ஏற்க மறுக்கலாம். கைம்பெண் ஒருத்தி புதிய கணவனை வரித்துக் கொள்ளலாம். எனவே, தம் கணவர் தம் வீட்டின் தலைவராகவும், நகரில் சுயேச்சையாளராகவும் இருக்கலாம். இவர் சந்தைச்சட்டங்களையும், சுங்க வரிகளையும் நிருணயித்தார். இவருடைய ஆலயில்தான் மக்கள் தானியங்களை அரைக்கவேண்டும்.

முழு அடிமை நிலையிலிருந்து ஆங்கில நகரங்கள் முற்றிலும் சுதந்திரநிலையை அடைந்தன. நார்மானியர்கள் இங்கிலாந்தை வென்றபின், இவ் விடுதலை இயக்கம் தொடங்கிப் பதினைந்தாம் நூற்றாண்டில் நிறைவுபெற்றது. ஒவ்வொரு நகரிலும் நிகழ்ச்சிப்போக்குகள் மாறிக்காணப்பட்டன. ஆனால், முன்னேற்றப்போக்கு ஒரேமாதிரியாகத்தான் இருந்தது. ஆங்கில நகராட்சி மன்றங்கள் பெற்ற சிறப்புரிமைகளை, நீதி,

நிதி, ஆட்சி ஆகிய இயல்புகளையுடைய மூன்று வகையாகப் பிரித்துக்கொள்ளலாம்.

நகரத்தின் பழங்காலத்திய சிறப்புரிமைகளில் ஒன்று, தனக்கென ஒரு நூற்றுவர் நீதிமன்றத்தைப் பெற்றிருத்தலாகும். இந்த அடிப்படையில் மாவட்ட நீதிமன்றத்தில் இது பிரதிநிதித்துவம் பெற்றிருந்தது. பன்னிரண்டு பிரதிநிதிகளை இது மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பியது. பின், மாவட்ட நீதிமன்றத்தின் ஆட்சியெல்லையிலிருந்து இது விலக்குரிமை பெற்றது. சுற்றிவரும் நீதிபதிகளின் அதிகாரத்திற்குட்பட்டு, நகரம் தன்னிறைவுடைய அதிகார எல்லையை இறுதியில் பெற்றது. மாவட்டத்திற்கு ஷயர் நீதிமன்றம் இருந்ததுபோல் நகரத்திற்குத் துறைமுகக் குழுவொன்றிருந்தது.

நகரங்கள் தம் வரிகளை மொத்தமாகக் கொடுக்க முற்பட்டது, மிகப்பழைய சிறப்புரிமையாகும். ஒவ்வொரு நகரவாசியும் கொடுக்கவேண்டிய தொகையை அரசப் பேராளோடு கலந்துகொண்டு நகரம் முடிவுசெய்துகொண்டது. பின், அரசப்பேராளின் அதிகாரத்தை அகற்றிக்கொண்டு நகரங்கள் நிதித்துறையில் நேரடியாக வரித்தொகையைச் செலுத்தின.

நகரங்கள் தம் அலுவலர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமைபெற்றன. இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் முதன்மையானவர் நகர முதல்வராவார். பண்ணைக் குடியை விடுதலைசெய்யவும், விடுதலை பெறுவதற்கு இப்படிப்பட்ட ஒருவர் நகரில் ஓராண்டும் ஒரு நாளும் வசித்திருக்கவும் வேண்டும். நகரங்கள் வணிகக் கழகங்களைப் பெற்றிருக்கவும் உரிமைபெற்றன. இவ் வுரிமைகளைக் கணிசமான இடர்களுக்குப் பின்னர் நகரங்கள் பெற்றன.

அரசரிடமிருந்து அல்லது பிரபுவிடமிருந்து நகரங்கள் சாசனம் பெறவேண்டும். இதற்காகப் பெரும் விலைகொடுக்க வேண்டும். நகரத்தின் பிரதான வணிகன் பணம்திரட்ட வேண்டும். இந் நகரங்களின் ஆட்சி இவர்களின் கைக்கு வந்தது. கொடுத்த பணத்திற்குப் பதிலாக, நகரங்கள் வணிகத்தை ஒழுங்குபடுத்தவும் அல்லது வணிகக் கழகங்களை அமைத்துக்கொள்ளவும் உரிமைகொண்டாடின. வணிகக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்ட நுழைவுக்கட்டணம் வணிகர்களால் சாசனத்திற்குக் கொடுக்கப்பட்ட அன்பளிப்

பாகக் கருதப்பட்டது. இவர்களே நகரக்கவுன்சிலில் கூடினர்கள். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவோ, நியமனம் செய்யப்பட்டவர்களாகவோ இருந்திருக்கலாம். நகர அமைப்பு, பெயரளவில் பதின்மூன்றும் நூற்றுண்டில் சனநாயகமாக இருந்தது. ஆனல், இந்நகரங்கள் காலப்போக்கில் சில்லோராட்சியாக மாறின.

சாசனத்தால் இங்கிலாந்தின் நகரங்கள் வளர்ச்சியடைந்தனவென்பது குறிப்பிடத்தக்கதாகும். ∴பிரான்சின் கம்யூன்கள் இவைகளிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டன. இரண்டு நிறுவனங்களும் கூடிச் செயல்படும் அதிகாரம் பெற்றிருந்தனவெனினும், ∴பிரான்சின் கம்யூன் நிலமானிய அமைப்பிற்குட்பட்டதாக இருந்தது. ஆனல், ஆங்கில நகரங்கள் இதற்கு வெளியே இருந்தன. ∴பிரான்சின் கம்யூன் கூட்டாக ஒரு கீழாஞப்போல் செயல்படலாம் அல்லது ஓர் அதிபரைப் போல் செயல்படலாம். ஆகவே, இவை நிலமானியக் கடமைப் பொறுப்புகளுக்கு உட்படவேண்டியிருந்தன. ஆனல், இங்கிலாந்தின் நகராட்சிமுறை வளர்ச்சி நிலமானிய முறைக்குச் சாவுமணியாக இருந்தது.

பதின்மூன்றும் நூற்றுண்டில் தேசியப் பிரதிநிதித்துவ முறையில் பங்குபற்ற நகரங்கள் அழைக்கப்பட்டன. பதினன்காம் நூற்றுண்டின் முற்பகுதியில் பாராளுமன்றத்தில் இருநூறு நகர உறுப்பினர்கள் ஷயரின் 74 உறுப்பினர்களோடு சேர்ந்து அமர்ந்திருந்தார்கள். நகரப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய முறையை நகரங்களே முடிவுசெய்துகொண்டன. ஆகவே, நகரங்களின் வாக்குரிமை முறை பெரிதும் மாறிக்காணப்பட்டது.

பதினைந்தாம் நூற்றுண்டுவரையில் மாநகராட்சியின் சட்டக்கருத்து உறுதியாக நிலைபெறவில்லை. இக் காலத்திலிருந்து மாநகராட்சியின் பெயர், நகரங்களின் தன்னாட்சியெனப் பொருள்பட்டது. இரண்டாம் சார்லஸ் அரசரின் ஆட்சிக்காலம் வரையில் பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமையை நகராட்சிகள் பெற்றிருந்தன.

டியூடர்களின் ஆட்சிக்காலம் தொடங்கி 1835 வரையில் இங்கிலாந்தில் நகராட்சிகளின் வரலாறு தலத்திறமை இழப்பு வரலாருகும். டியூடர்கள் பாராளுமன்றத்தில் தம் ஆட்களைக் கொண்டுநிரப்பினர்கள். நகராட்சிகளின் அமைப்

பில் தேர்தல் தோற்றமெதுவுமின்றி இவை சில்லோராட்சிக ளாகத் தோற்றமளித்தன. கிளாரெண்டனின் மாநகராட்சிச் சட்டம் கத்தோலிக்கர்களையும் இணங்காதார்களையும் தல ஆட்சியிலிருந்து விலக்கிவைத்தது. ஆனல், பதினெட்டாம் நூற்றாண்டில் இச் சட்டம் செல்லாமல் போய்விட்டது. இச் சட்டத்தின் பிரிவை மீறியவர்களுக்காதரவாக ஆண்டுதோறும் இழப்பீட்டுச் சட்டத்தைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது.

பெரும் எண்ணிக்கையில் நகராட்சிகள் முற்றிலும் அரசியல் இயந்திரங்களாக வைத்துப் பேணப்பட்டுவந்தன. கட்சியின் வளர்ச்சியை நிலைநாட்ட அல்லது ஒரு குடும்பத்தின் செல்வாக்கை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் இந் நிறுவனங் களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. தலத்தில் வசிப்ப ராயினும், இல்லையெனினும், உரிமைபெற்றவர்களைச் சேர்க்கும் நோக்கம் முறையாகப் பின்பற்றப்பட்டது. கவுன்சிலுக்கும் நீதித்துறைக்கும் நகராட்சிப் பணியாட்களைத் தெரிவுசெய்வ திலும், நகராட்சி நிறுவனங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள அற நிலையங்களைச் செயலாட்சி செய்வதிலும் நகராட்சியின் செல வினம், பொதுச்சொத்து மேலாண்மை ஆகியவற்றில் இந் நோக்கம் பின்பற்றப்பட்டது.

நகராட்சியைப்பற்றி அறிக்கைதர அரச ஆணைக்குழு அமர்த்தப்பட்டது, 1832-ஆம் ஆண்டுச்சட்டத்தின் முடிவு களில் ஒன்றாகும். நகராட்சியில் இயல்புமீறிய ஆட்சிமுறை அமைந்து செயல்படுவதை இவ் வறிக்கை வெளிப்படுத்தியது. பல நகரங்களில் ஊழல்களும், பதவி வேட்டைகளும் தலை தூக்கி நின்றன. குடிமக்களில் பெரும்பாலானோர் நகர ஆட்சியில் பங்குபெறவில்லை. நகராட்சிக் கவுன்சில்கள் பெரும்பாலானவைகளில் தேர்தல்முறை மறைந்துபோய்விட் டது. பெரிய நகரங்களிலும் உரிமைபெற்ற குடிமக்களின் எண்ணிக்கை சிறிதளவாகவே இருந்தது.

இதன் விளைவாக, இவ்வாறு ஆட்சிசெய்யப்பட்ட நகரங்கள் பெருமளவில் மற்ற நிறுவனங்களிடம் இருந்தன. பாராளுமன்றத் தலச்சட்டங்களால் கொடுக்கப்பட்ட அதி காரங்கள் வேறுபட்ட காரணங்களுக்காக அவ்வப்போது நகராட்சி அலுவலர்களுக்கன்றி, பொறுப்பாளர்களிடமோ அல்லது ஆணையாளர்களிடமோ கொடுக்கப்பட்டன. இதனல், பெரும்பாலும் நகராட்சிகள் எத்தகைய கடமைகளையும் நிறை வேற்ற முடியவில்லை. இவை நகரின் பெயரளவு அரசாங்க

மாக இருந்தனவேயொழிய, மற்றவர்களுக்குக் கடமைகளும் பொறுப்புகளும் மாற்றப்பட்டன. "இங்கிலாந்திலும் வேல்சிலுமுள்ள நகராட்சிகள் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கவில்லையென்றும், பெறத் தகுதியற்றவை யென்றும் எடுத்துரைப்பது எங்களுடைய கடமையாகுமென" ஆணைக்குழுவினர் அரசருக்கு அறிக்கை கொடுத்தார்கள்.

இந்த அறிக்கையின் விளைவாக, 1885-ஆம் ஆண்டின் நகராட்சிமன்றச் சட்டம் (Municipal Corporation Act) நிறை வேறியது. சட்டப்புத்தகத்தில் இடம்பெற்ற மிக முக்கிய மான சட்டங்களில் இது ஒன்றாகும். இச் சட்டத்தினால் நகராட்சியின் கட்டுப்பாடு, வாக்குரிமை பெற்றிருந்த மக்களிடம் விடப்பட்டது. கவுன்சிலின் கூட்டங்கள் பொதுவில் நடைபெற்றன. திருச்சபை மூதறிஞர்கள் நீதி வழங்கவில்லை. இருப்பினும், நீதிபதிகள் அரசரால் அமர்த்தப்பட்டார்கள்.

இச் சட்டம் 178 நகரங்களைப்பற்றியதாகும். 1883-ல் 80 பழைய நகரங்கள் அழிக்கப்பட்டு, 25 நகரங்கள் இச் சட்டத் தின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1835-லிருந்து அரசரின் கட்டளையால் அல்லது பாராளுமன்றச் சட்டத்தால் நூற்றுக்கு மேற்பட்ட நகரங்கள் படைக்கப்பட்டன. அப்பொழுது இருந்த 300 நகரங்களில் அறுபத்துநான்கினை மாவட்டக் கவுன்சில் சட்டம் (1885) மாவட்ட நகரங்களின் நிலைக்கு உயர்த் தியது. பன்னிரண்டிற்குமேற்பட்ட மாவட்ட நகரங்கள் படைக்கப்பட்டன. மாவட்ட நகரத்தின் தன்மதிப்புநிலையைப் பெற ஒவ்வொரு நகரமும் 50,000-க்குமேல் மக்கள் தொகை யுடையதாக இருக்கவேண்டும்.

தற்காலத்திய மாநகராட்சி நகரில் ஒரு நகரமுதல்வர், ஒரு ஆல்டர்மேன், நகரப்பிரதிநிதிகள் ஆகியோர் இருக் கிறார்கள். ஒரு நகரமாயின், ஒரு நகரமுதல்வர், ஆல்டர்மேன், குடிமகன் ஆகியோர் இருப்பர். நிருவாகக்குழுவில் நகர முதல்வர், ஆல்டர்மேன்கள், கவுன்சிலர்கள் ஆகியோர் இடம் பெறுகின்றனர். கவுன்சிலர்கள் மூன்றுண்டுப் பதவிக்கெனத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பதவியிலிருந்து விலகிக்கொள்ளுவர். நகர முதுவர்கள் (ஆல்டர்மேன்) கவுன்சிலர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் ஆறுண்டுகள் பதவியில் இருப்பர். மத்திய அரசாங்கத்தில் மேலவைபோல் இவர்கள் நகராட்சியில் பிரதிநிதிகளாக

இருக்கிறார்கள். ஆனால், இவர்கள் தனிப்பட்டதோர் அவையாக அமையாமல் மற்றக் கவுன்சிலர்களோடு அமர்ந்திருந்து வாக்களிக்கிறார்கள். நகர முதல்வரைக் கவுன்சில் தேர்ந்தெடுக்கிறது. இவருடைய பதவிஅமர்வை மத்திய அரசாங்கம் தடைசெய்வதில்லை. கவுன்சிலில் அமர்த்த கட்டுப்பட்டுள்ள நகர எழுத்தர், நகரப் பொருளாளர் ஆகிய இருவரும் இரண்டு முக்கியமான அலுவலர்களாவர்.

நகரக்கவுன்சிலின் அதிகாரம் மிகப் பெருமளவாகும். இது இன்னும் அதிகரித்து வருகிறது. 1902-ஆம் ஆண்டின் கல்விச்சட்டம், கல்வியின் எல்லாத் தரங்களையும் தனக்கு மாற்றிக்கொண்டது. இரவலர் துயருதவிப் பணியைத் தங்களுக்கு மாற்றவேண்டுமென இரவலர் சட்டச் சீர்திருத்தக் காரர்கள் விரும்பினர்கள். கவுன்சில்களின் கட்டாய அதிகாரங்களைத்தவிர, பல சட்டங்கள் நிறைவேறின. தனிச் சட்டங்களால் ஒரு நகரம் தன் அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ளலாம்.

நகராட்சி வணிகப் பணிகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க தோர் இயல்பாகும். முன்னேற்றப் போக்கிலுள்ள நகரங்கள், நீர், வாயு, மின்னொளி ஆகியவைகளை மக்களுக்களிக்கிறது. பல நகரங்கள் தமக்குச் சொந்தமாகக் கல்லறைகள், சந்தைகள், குளியறைகள் ஆகியவைகளைச் சொந்தமாகப் பெற்றிருக்கின்றன. மாவட்டக் கவுன்சிலைப்போல, ஒரு நகரக் கவுன்சில் பெருமளவு அலுவலைக் குழுக்களின் வழியாகச் செய்கிறது. மாவட்டக் கவுன்சிலின் குழுக்கள் பெற்றிருக்கும் அளவிற்கு இக் குழுக்கள் அதிகாரம் பெற்றிருக்கவில்லை.

நகராட்சியின் செயற்பரப்பை இங்கு விளக்கிக்கூறுவது இயலாத பணியாகும். பர்மிங்ஹாம் நகரக் கவுன்சிலின் குழுக்களின் பட்டியல், இப் பணி எவ்வளவு விரிவாகவும் மாறுபட்டும் இருக்கிறதென்பதை அறிந்துகொள்ள உதவுகிறது. இவைகளாவன : நிதி, காவல், குளியறைகள், பூங்காக்கள், அங்காடிகள், பண்ணைகள், பொதுதோக்கங்கள், தொழிற் பள்ளிகள், பொதுப்பணிகள், ட்ராம்கள், சுகாதாரம், பித்தரகம், இலவச நூல்நிலையங்கள், கண்காட்சி சாலை, கலைப் பள்ளி, கல்வி, வீட்டு வசதி, வாயு, நீர், மின்சக்தி. இவைகளில் நிதிக்குழு, காவற்குழு, கல்விக்குழு ஆகிய மூன்றுமட்டும் சட்டப்படி அமைந்தவையாகும். ஒரு கவுன்சில் விருப்பம் போல் குழுக்களை வைத்துக்கொள்ளலாம்.

கட்சிமுறையைத் தல அலுவல்களுக்கு நீட்டித்தது, நகராட்சி அரசியலின் ஒரு முக்கியமான இயல்பாகும். இப் போக்கிற்குப் பர்மிங்ஹாம் முதல் பொறுப்பாகும். நகராட்சித் தேர்தல்களை நடத்த கட்சி பயன்படுத்தப்படுகிறது. இம் முறையைப் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், நகர வாழ்க்கையில் இதன் பயன்கள் அழிவை உண்டாக்கலாம். நகராட்சியின் முக்கியமான பிரச்சினைகள் கட்சிக்குழுக்களில் முடிவுசெய்யப்படுகின்றன. முடிந்த முடிவாக, இவை பின்னர் கவுன்சிலுக்கு வருகின்றன.

மக்களின் ஆர்வமின்மை நகராட்சியில் உண்மையான இடராகும். வாக்களிக்க மக்களைத் திரட்டிக்கொணர்தல் பெரிய வேலையாகிவிடுகிறது. இம் முயற்சி இல்லையெனில், 100-க்கு 40-பேர்கள்கூட வாக்களிக்க வரமாட்டார்கள். மக்களாட்சி தலவாழ்க்கையில் முறிந்துவிடுகிறதெனும் செய்தி துயரமளிப்பதாகும். இறைமையான மக்கள் தம் அதிகாரத்தை நிறைவேற்ற தொல்லைப்படுவதில்லை.

வாக்காளர்களை வாக்களிக்குமாறு கேட்பதைவிட நகரக் கவுன்சிலில் சேவைசெய்ய, தக்கவர்களைக் கண்டுபிடிப்பது கடினமாகிவிடுகிறது. சிறந்த வணிகர் இதில் காலத்தைச் செலவிட விரும்புவதில்லை. ஓய்வாக இருப்பவர்கள் இப் பணிக்கான அறிவைத் திரட்டிக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆங்கில நகராட்சிகளில் சிறிய வணிகர்கள், பெரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பழக்கமில்லாதவர்கள், அரசியல்வாதிகள், தமக்குச் சொந்தமான அக்கறையுடையவர்களாக இருப்பார்களோ என ஐயப்படக்கூடியவர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். நிரந்தரமான அலுவலர்களின் திறமையால் நகரங்கள் நல்ல முறையில் ஆட்சிசெய்யப்படுகின்றன.

1894-ஆம் ஆண்டின் தல அரசாங்கச் சட்டம் இக் கட்டமைப்பை மேலும் எளிதாக்கிற்று. பழைய சுகாதார நிறுவனங்களுக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற நகர மாவட்டக் கவுன்சில்கள் அமர்த்தப்பட்டன. கிராமச் சுகாதார நிறுவனங்களைக் கிராம மாவட்டக் கவுன்சில்கள் ஏற்றுக் கொண்டன. திருச்சபை வட்ட யூனியன் பகுதிகளைக் கொண்டமைந்த மாவட்டங்களைக் கிராமச் சுகாதார நிறுவனங்கள் பிரதிபலித்தன. புதிய கிராம மாவட்டக் கவுன்சில்கள் பொதுச்சுகாதாரப் பணிகளை நிறைவேற்றியதோடு, இரவலர் சட்ட நிறுவனங்களாகவும் செயல்பட்டன. பாதுகாப்பாளர்

இருக்கிறார்கள். ஆனால், இவர்கள் தனிப்பட்டதோர் அலுவலராக அமையாமல் மற்றக் கவுன்சிலர்களோடு அமர்ந்திருந்து வாக்களிக்கிறார்கள். நகர முதல்வரைக் கவுன்சில் தேர்ந்தெடுக்கிறது. இவருடைய பதவி அமர்வை மத்திய அரசாங்கம் தடைசெய்வதில்லை. கவுன்சிலில் அமர்த்த கட்டுப்பட்டுள்ள நகர எழுத்தர், நகரப் பொருளாளர் ஆகிய இருவரும் இரண்டு முக்கியமான அலுவலர்களாவர்.

நகரக்கவுன்சிலின் அதிகாரம் மிகப் பெருமளவாகும். இது இன்னும் அதிகரித்து வருகிறது. 1902-ஆம் ஆண்டின் கல்விச்சட்டம், கல்வியின் எல்லாத் தரங்களையும் தனக்கு மாற்றிக்கொண்டது. இரவலர் துயருதவிப் பணியைத் தங்களுக்கு மாற்றவேண்டுமென இரவலர் சட்டச் சீர்திருத்தக் காரர்கள் விரும்பினர்கள். கவுன்சில்களின் கட்டாய அதிகாரங்களைத்தவிர, பல சட்டங்கள் நிறைவேறின. தனிச் சட்டங்களால் ஒரு நகரம் தன் அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ளலாம்.

நகராட்சி வணிகப் பணிகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க தோர் இயல்பாகும். முன்னேற்றப் போக்கிலுள்ள நகரங்கள், நீர், வாயு, மின்னொளி ஆகியவைகளை மக்களுக்களிக்கிறது. பல நகரங்கள் தமக்குச் சொந்தமாகக் கல்லறைகள், சந்தைகள், குளியறைகள் ஆகியவைகளைச் சொந்தமாகப் பெற்றிருக்கின்றன. மாவட்டக் கவுன்சிலைப்போல, ஒரு நகரக் கவுன்சில் பெருமளவு அலுவலைக் குழுக்களின் வழியாகச் செய்கிறது. மாவட்டக் கவுன்சிலின் குழுக்கள் பெற்றிருக்கும் அளவிற்கு இக் குழுக்கள் அதிகாரம் பெற்றிருக்கவில்லை.

நகராட்சியின் செயற்பரப்பை இங்கு விளக்கிக்கூறுவது இயலாத பணியாகும். பர்மிங்ஹாம் நகரக் கவுன்சிலின் குழுக்களின் பட்டியல், இப் பணி எவ்வளவு விரிவாகவும் மாறுபட்டும் இருக்கிறதென்பதை அறிந்துகொள்ள உதவுகிறது. இவைகளாவன: நிதி, காவல், குளியறைகள், பூங்காக்கள், அங்காடிகள், பண்ணைகள், பொதுநோக்கங்கள், தொழிற் பள்ளிகள், பொதுப்பணிகள், ட்ராம்கள், சுகாதாரம், பித்தரகம், இலவச நூல்நிலையங்கள், கண்காட்சி சாலை, கலைப் பள்ளி, கல்வி, வீட்டு வசதி, வாயு, நீர், மின்சக்தி. இவைகளில் நிதிக்குழு, காவற்குழு, கல்விக்குழு ஆகிய மூன்றுமட்டும் சட்டப்படி அமைந்தவையாகும். ஒரு கவுன்சில் விருப்பம் போல் குழுக்களை வைத்துக்கொள்ளலாம்.


இவைகளுக்குக் கிடைத்திருக்கும். பழைய தல அரசாங்கக் கழகங்கள் 1919-ல் நீக்கப்பட்டன. தல நிறுவனங்களை மேற் பார்வையிடும் பொது அதிகாரங்களோடு சுகாதார அமைச்சு நிறுவப்பட்டது. 1951-ல் இதன் பொறுப்புகளை வீட்டுவசதி தல அரசாங்க அமைச்சரவைக்கு மாற்றினர்கள். எல்லைகளை மறுஆய்வு செய்யும் பொறுப்புகளையும், நாடு, நகர்த்திட்ட மிடலையும் கூடுதல் பொறுப்பாக இந்த அமைச்சுப் பெற்றது. வேல்ஸில் இக் கடமைகளை 1965-க்குப்பின் வேல்ஸின் அரசுச் செயலர் நிறைவேற்றினர்.

தல அரசாங்கத்தின் இப்போதைய அமைப்பு

1963-ல் லண்டன் அரசாங்கச் சட்டத்தின்படி, லண்டன் புற நகர்ப் பகுதிகளில் செய்த மாற்றங்களைத்தவிர, இங்கிலாந்து, வேல்ஸின் தல அரசாங்கம் 1888-க்குப்பின், பெருமாற்றங்க ளின்றி, அப்படியே தொடர்ந்து இருந்துவந்துள்ளது.

ஒருசில நகராட்சிகளுக்கு மாவட்ட நகராட்சிநிலை அளிக் கப்பட்டுள்ளது. ஆனல், இத்தகைய நிலைஉயர்வு மாவட்டங் களால் எதிர்க்கப்படுகிறது. மாவட்ட நகர்கள் ஒரடுக்கு அர சாங்க முறைகளாகும். இவை பலநோக்கு நிறுவனங்களாகக் கருதப்பட்டன. இவை அதிகமான பிரச்சினைகள் கொடுப்ப தில்லை. மேலும், கவுன்சிலர்கள் தம் சிறிய எல்லைக்குள் கிளர்ச்சியுணர்வோடு செயல்பட்டார்கள். மாவட்ட நகரங்கள் சில நிதிநலன்களைப் பெறுகின்றன.

இருப்பினும், பெரிய நகர்ப்புறப் பகுதியில் மாவட்ட நக ரங்கள் இருக்கலாம். 100,000-க்கும் குறைவான மக்கள் தொகையுடைய நகரங்களில் தலஆட்சி இரண்டடுக்கு முறை யில் நடைபெறுகிறது. கிராமப்புறங்களில், திருச்சபை வட் டங்களையும் சேர்த்துக்கொண்டால் மூன்றடுக்கு அரசாங்க முறை இருந்துவருகிறது. நகர்ப்புறத்தில் சில நகரங்கள் நகராட்சிநிலையைப் பெற்றுள்ளன. மாவட்டங்களைப் போலன்றி, இந் நகரங்கள் ஒரு நகர முதல்வராலும், நகராட்சி மன்றத்தாலும் ஆட்சிசெய்யப்படுகின்றன. நகரத்தின் நல் லாட்சிக்காக இவை துணைச்சட்டங்களை இயற்றிக்கொள்ளும் சிறப்புரிமை பெற்றிருக்கின்றன. ஆனல், மாவட்டங்கள் சட் டத்தால் அனுமதிக்கப்பட்ட துணைச்சட்டங்களைத்தான் வரைந்துகொள்ள முடியும்.



லண்டன் பெருநகர்ப்பகுதி தனிப்பட்ட தலஆட்சிமுறையைப் பெற்றிருக்கிறது. லண்டன் மாவட்ட ஆட்சி எல்லைகளுக்கப்பால் நகரங்களின் தொகுதிகள் பரவியுள்ளன. 1888-ல் இங்கு மக்கள்தொகை 8 மில்லியனாக இருந்தது. இந்தப் பகுதி முழுமைக்கும் சாலைகள், வடிகால்கள் போன்றவைகளைப் பயனுள்ள முறையில் திட்டமிட ஒரு நிறுவனம் இருக்கவேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆகவே, இரண்டடுக்கு ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் லண்டன் பெருநகர்க்கவுன்சில் இருக்கிறது. இது பிராந்தியம் முழுவதும் சேவைகளை நிறைவேற்றுகிறது. மற்றும், 250,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகையையுடைய 32 லண்டன் நகராட்சி நகர்கள் இருக்கின்றன. மற்றும், எஞ்சியுள்ள பணிகளை நிறைவேற்ற லண்டன் மாநகராட்சி இருக்கிறது. "உள்நகர்கள்" எனப்பட்ட லண்டன் மாவட்டத்தின் ஆட்சி எல்லைக்குட்பட்டு முன்னாளில் 12 நகராட்சிகள் இருந்தன. இவைகளின் கல்வி வசதிப் பொறுப்புகளை லண்டன் கல்விநிறுவனம் (உள்) கவனித்துக்கொண்டது. இந் நகரின் பிரதிநிதிகளாக உள்ள லண்டன் பெருநகர்ப்பகுதியின் 40 உறுப்பினர்களிலிருந்து ஒரு குழுவும், இத்துடன் லண்டன் நகராட்சிப்பகுதிக்கு ஒரு பிரதிநிதியும், லண்டன் மாநகருக்கு ஒரு பிரதிநிதியும் அக்குழுவில் இடம்பெறுவர். எஞ்சியுள்ள "புறநகர்ப் பகுதி

களி"ன் கல்விக்கு இவை ஒவ்வொன்றும் பொறுப்புடைய தாகும்.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

R. M. Jackson	:	The Machinery of Local Government
Eric Jackson	:	The structure of Local Govt. in England and Wales
K. B. Smellie	:	History of Local Government
J. H. Warren	:	English Local Government System
J. Redlick	:	History of Local Government
Robson	:	Local Government in Crisis
J. Mand and S. E. Fineri	:	Local Government in England and Wales.

20. திருச்சபையும் அரசும்

இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றை ஆராயும் பொழுது, தற்செயலாகத் திருச்சபைக்கும் அரசிற்குமிடையிலான உறவுகள்பற்றிய பிரச்சினை எழுகிறது. இவைகளைப் பற்றிச் சிறிது அறிந்துகொள்வது நலமாகும்.

இவை இரண்டும் தனிப்பட்ட சுயேச்சையான அமைப்புகள் என்பது இடைக்காலத்திய கருத்தாகும். மனிதர்கள் இரு நிறுவனங்களிலும் உறுப்பினர்களாக இருந்தார்கள். அரசைப்போல் திருச்சபையும் ஒரு சமயச் சட்டத்தொகுப்பையும், நீதிமன்றங்களையும், விவாத அரங்குகளையும் பெற்றிருக்கிறது. ஆன்ம இயலானவைகளில் இங்கிலாந்தின் திருச்சபை போப்பாண்டவரின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளுகிறது. உலகியல்பானவைகளில் இது அரசரின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளுகிறது. ஆன்ம இயலானது எது என்பதையும், உலக இயல்பானது எது என்பதையும் வரையறை செய்யும்பொழுது இடர் ஏற்படுகிறது. அரச நீதிமன்றங்கள் திருச்சபை மானியங்களை ஒருவகையான சொத்தாகக் கருதுகின்றன. மறுபக்கம், போப்பாண்டவர் திருச்சபையின் உலகியல் சொத்துகளின்மீது தம் உரிமைகளை எடுத்துரைத்துக்கொண்டிருக்கிறார். பதின்மூன்றும் நூற்றாண்டில் குறிப்பாக மூன்று வழிகளில் போப்பாண்டவரின் உரிமைகள் பெருகிக்கொண்டிருந்தன. நீதியியல்பற்றியவைகளில் போப்பின் நீதிமன்றங்களின் மேல்முறையீட்டு அதிகார எல்லை வளர்ந்துகொண்டே இருந்தது. அடுத்த நூற்றாண்டில் தடைசெய்யப்படும் வரையில் இது வளர்ந்துகொண்டிருந்தது.

சிலுவைப்போர்கள் மேற்கத்திய திருச்சபைகளிடமிருந்து நிதிதிரட்ட போப்பிற்கு ஒரு வாய்ப்பை அளித்தன. 1297-ல் ஆறாம் போனிபேஸ் ஒரு கட்டளையைப் பிறப்பித்து, திருச்சபையின் சொத்துகள்மீது உலகியல் நிறுவனம் வரி விதிக்கும் அதிகாரத்தை மறுத்தார். ஆனால், தேசியச் செலவிற்

காகக் குருமார்கள் நியமிக்க மறுத்தபோது இவர்களோ நாடு கடத்தி முதலாம் எட்வர்டு பணியச்செய்தார். மேற்றிராசனங் களுக்கும், திருச்சபை மானியங்களுக்கும் போப்பாண்டவர் ஆட்களோ அனுப்ப உரிமைகொண்டாடியதைப் பாராளுமன்றம் சட்டத்தால் தடுக்கமுயன்றது.

இருப்பினும், போப்பாண்டவரின் ஆன்ம இயலான அதி காரம் எவராலும் எதிர்க்கப்படவில்லை. தேசிய வாழ்க்கையி லிருந்து இங்கிலாந்தின் திருச்சபையை விலக்கிவைக்க மேற் கொண்ட முயற்சிகளைப் பாராளுமன்றம் பொருமைக்கண் கொண்டு பார்த்தது. திருச்சபை தேசிய நிறுவனமாகவும் கத்தோலிக்கச் சார்புடையதாகவும் இருக்கவேண்டுமென்பது முதலாம் எட்வர்டின் விருப்பமாகும். பழங்காலந்தொட்டு மேற்றிராணியார்களும், திருச்சபை முதன்மையாளர்களும் மாநிலமட்ட சமயக்கூட்டத்தில் கூடினர்கள். ஆனல், கான்டர் பரிக்கும் யார்க்குக்குமிடையிலான பூசல்கள் காரணமாகத் தேசியத் திருச்சபையின் பேரவை வளர்ச்சியடையவில்லை. நார்மானிய மேற்றிராணியார்கள் தவருமல் மேற்றிராசனப் பிரிவு குருமார் திருக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். இக் கூட்டத்திற்குக் குருமார்கள் வந்தார்கள். 1288-ல் அதி மேற்றிராணியாராகிய பெக்ஹாம்[1] கட்டளைக்குருக்களின் தொகுதி, திருச்சபை ஆட்சி வட்டாரம் சார்ந்த துறவியர் தொகுதி ஆகியவைகளின் பிரதிநிதிகளை அழைத்தற்குமுன், மாநிலக் குருமார் கூட்டங்களில் திருச்சபை வட்டாரத் துறவி யர்கள் கலந்துகொள்ளவில்லை. புரட்சிக்குப்பின், பாராளு மன்றம் திருச்சபையின் தொடர்பைக் குறைத்துக்கொண்டு வந்தது. திருச்சபைச் சட்டக் கோட்பாட்டின்படி, நாட்டிலுள்ள தீக்கை பெற்றவர்களனைவரும் இங்கிலாந்தின் திருச்சபையாக அமைந்தார்கள்.

குருமார்களின் திருக்கூட்டம் பயனற்றதாகிவிட்டது. ஏனெனில், இது முற்றிலும் குருமார்களின் கூட்டமாகும். இதனுடைய தனிப்பட்ட கூட்டம் ஒன்றிற்கு ஈடாக, சோதனைச் சட்டத்தையும் மாநகராட்சிச் சட்டத்தையும் அகற்ற திருச் சபை உதவியிருந்தால், பிற்காலத்திய பல இடர்கள் தவிர்க்கப் பட்டிருக்கலாம். ஆனல், இதன் முழுமையான துறவியர் இயல்பைத்தவிர, பெருமளவு விக் மேற்றிராணியார்களைக் கொண்டிருந்த மேலவைக்கும் வலிமைமிக்க டோரிகளைக்

[1] Peckham

கொண்டிருந்த கீழவைக்கும் இடையருது நடந்த சண்டையினால் இக் குருமார் திருக்கூட்டம் மேலும் வலிமையிழந்து காணப் பட்டது. இறுதியாக, 1717-ல் குருமார்களின் திருக்கூட்டம் தள்ளிவைக்கப்பட்டது. மறுபடியும் 1861 வரையில் இத் திருக் கூட்டம் அழைக்கப்படவில்லை.

"சட்டத்தால் நிறுவப்பெற்ற" இங்கிலாந்தின் திருச்சபை என்ற சொற்றொடர் 1604-ல் ஒரு சமயச்சட்டத்தில் பயன் படுத்தப்பட்டது. ஆனால், புரட்சிக்குப்பின், இச் சட்டம் பொதுவாகப் பயன்படுத்தப்படவில்லை. தேசிய திருச் சபையையும் மற்றச் சமய நிறுவனங்களையும் வேறுபடுத்துவ தற்கு இத்தகைய ஒரு சொற்றொடர் அவசியமாயிற்று. நாட் டிற்குத் திருச்சபை செய்யும் சேவைக்கீடாக அரசு இதற்கு ஏற்பையும் பாதுகாப்பையும் அளித்தது. அரசுடனான சிறப்பு உறவுமுறையை இச் சொல் தெளிவுபடுத்தியது. சொத்துடைமைகளைப் பெற்றிருக்கும் சமய நிறுவனங்கள் அடிப்புடையான, முக்கியமான மாற்றங்களைச் செய்யவிரும் பினால், இதற்குப் பாராளுமன்றத்தின் வழியாகப்பெற்ற அரசின் இசைவாணை அவசியமாகும். அரசாங்கத் தொடர்பை இழந்த திருச்சபை, அரசாங்கத்தின் பாதுகாப்பை இழந்துவிடுகிறது. ஆனால், இங்கிலாந்தின் திருச்சபை சொத்துகளையுடைய கூட்டுநிறுவனம் என்ற முறையில் சில குறிப்பிட்ட உறவு களைக் கொண்டிருக்கிறது. அரசரின் இசைவின்றி, திருச்சபை சமயச் சட்டமெதையும் செய்யவியலாதென்பதுமட்டுமின்றி, பாராளுமன்றத்தின் இசைவின்றிச் சமயச்சட்டத்தையும், வழி பாட்டுமுறைகளையும் திருச்சபையும் அரசும் மாற்றியமைக்க முடியாது. திருச்சபையின் சட்டம் நாட்டின் சட்டத்தில் ஓர் அங்கமாகும். திருச்சபை நீதிமன்றங்களும் சட்டத்தின் படியி லான அதிகாரத்தைச் செயல்படுத்துகின்றன. குருமார்களின் திருக்கூட்டம் அரசரின் இசைவோடு கூட்டப்படுகிறது. திருச் சபையின் முதன்மையான அலுவலர்களாகிய மேற்றிராணி யார்கள் அரசரால் நியமனம் செய்யப்படுகிறார்கள். மேற் றிராசனப் பிரிவின் கட்டளைக்குருமார்களின் தேர்தல், சிறிது இயல்புமீறியதாகத் தோன்றுகிறது. ஆனால், ஆன்மீக இயலான அதிகாரம் அரசிற்கன்றித் திருச்சபைக்குக் கொடுக் கப்பட்டிருக்கிறது. சமய இயல்புகளைப் பொறுத்தவரையில் திருச்சபை சில வேளைகளில் நாட்டைப் பிரதிபலிக்கிறது. சமூகத்தின் சமயவாழ்க்கையின் பிரதிநிதிகளாக மேற்றி ராணியார்கள் பெருமக்கள் சபையில் இருக்கிறார்கள். இவைக ளெல்லாம் அரசுடன் திருச்சபை கொண்டிருக்கும் உறவை

வெளிப்படுத்துகிறது. இவ் வுறவுமுறையை, "நிறுவப்பெற்ற திருச்சபை"[1] என்ற சொல் தெளிவாக்குகிறது. இங்கிலாந்தின் மற்ற அரசியலமைப்பு முறைகளைப்போல் இவைகளும் சூழ்நிலைகளிலிருந்து தோன்றியுள்ளன.

போப்பாண்டவரின் தனிமுதன்மைநிலையை ஏற்க மறுத்துவிட்ட இங்கிலாந்தின் திருச்சபை சமயத்தையும், மறைநூல்களையும், சடங்குமுறைகளையும், வழிபாட்டுமுறைகளையும் தக்கவைத்துக்கொண்டது. இதனுடைய அதிகாரத்தை எல்லாக்குடிமக்களும் ஏற்கவேண்டுமென வற்புறுத்தியது. தனிமுதன்மைச் சட்டத்தின்படி, அரசர் நாட்டின் ஆன்ம இயல், உலகியல், திருச்சபைத்துறை ஆகியவைகளின் தலையாய ஆளுநரானார். இங்கிலாந்தின் திருச்சபைக்கும் அரசருக்கும் இடையிலான உறவுமுறை, அரசுரிமை நிருணயச் சட்டத்தால் இறுதியாக நிறுவப்பட்டது. "சமயக் காவலராகிய" அரசர் வழிபாடுகளில் கலந்துகொள்வதோடு, இங்கிலாந்தின் திருச்சபையைப் பற்றிநிற்கவேண்டும். ரோமன் கத்தோலிக்கர்களை மணந்துகொண்டவர்கள் இங்கிலாந்தின் அரசுரிமை எய்த இயலாது. இங்கிலாந்தின் திருச்சபையில் நம்பிக்கையுள்ளவர்கள் மற்றவர்களையும் இத் திருச்சபைக்கு இணங்கச்செய்யவேண்டும். கத்தோலிக்கர்கள் மீதும், இணங்காத புராடெஸ்டெண்டுகளின் மீதும் பல்வேறு தகுதியின்மைகள் சுமத்தப்பட்டன. இதை எதிர்த்துக் கடுமையான போராட்டம் தொடங்கியது. கிளாரென்டன் சட்டத்தொகுப்பும் சோதனைச் சட்டமுமே இத் தகுதியின்மைகளைப் புகுத்திய சட்டங்களாகும்.

கடைசி இரண்டு ஸ்டுவர்ட்டுகளின் ஆட்சிக்காலத்தில் இணங்காப் புராடெஸ்டெண்டுகள் பெரும் வலிமைபெற்றிருந்தார்கள். இவர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் 1689-ல் சமயப்பொறைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சோதனைச்சட்டத்தாலும் மாநகராட்சிச் சட்டத்தாலும் ஏற்பட்ட தகுதியின்மைகளை இச் சட்டம் களைந்துவிடவில்லை. ஆனால், இரகசிய வழிபாட்டுக் கூட்டங்களுக்கு எதிராகவும் திருச்சபைக்குச் செல்லாமைக்கு எதிராகவும் விதிக்கப்பட்ட தண்டங்களிலிருந்து விலக்களிக்கப்பட்டது. ஆனால், கத்தோலிக்கர்களுக்கும் யூனிடேரியன்களுக்கும் எத்தகைய சுமைத் தணிவும் அளிக்கப்படவில்லை.

[1] Established Church

இரண்டாம் ஜார்ஜின் காலத்தில் ஆண்டுதோறும் விலக்குரிமைச் சட்டத்தைப்[1] பயன்படுத்தி எல்லாச் சிவில் பதவிகளும் இணங்காப் புராடெஸ்டெண்டுகளுக்கு அளிக்கப்பட்டன. 1778, 1791-ஆம் ஆண்டுகளின் துயர்குறைப்புச் சட்டங்களால் கத்தோலிக்கர்கள் கல்வி, வழிபாடு ஆகிய துறைகளில் சுதந்திரம் பெற்றதோடு, நிலவுடைமைகளை வாங்கவும் அனுமதிக்கப்பட்டார்கள்.

ஆகவே, பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோதனைச்சட்டம், மாநகர்ச்சட்டங்களின் செயற்பாட்டால் இணங்காதார்கள் அரசரின் கீழ் அல்லது நகராட்சிகளில் பதவியெதையும் வகிக்கமுடியாதபடி தடைசெய்யப்பட்டிருந்தார்கள். மேலும், இங்கிலாந்தின் திருச்சபைக்குரியவர்களாக இல்லையென்றாலும், இதற்கு ஆதரவளிக்க இவர்கள் வரி செலுத்தவேண்டியிருந்தது. திருச்சபையினரிடம் இவர்கள் வழிபாடு செய்யும் இடங்களைப் பதிவுசெய்துகொள்ளவேண்டும். ஆங்கிலிக்கன் குருமார்களால் திருமண விழாக்கள் நடந்தேறவேண்டும்.

ரோமன் கத்தோலிக்கர்களின் நிலை இன்னும் திருந்தியபாடில்லை. இவர்கள் அரசரின் கீழ் எப்பதவிகளையும் வகிக்கமுடியாதென்பதோடு, பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் உறுப்பினராகும் தகுதியையும் இழந்திருந்தார்கள். ரோமன் கத்தோலிக்கர் அல்லது இணங்காதார் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டமெதையும் பெறமுடியாது. ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்கவும் இயலாது

பாராளுமன்றத்தில் அமருமுன், பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டியிருந்ததால், குவேக்கர்களும், மொரோவியர்களும், பிரிவினைவாதிகளும் பாராளுமன்றத்தில் அமர இயலாதிருந்தனர். ஆனால், இவர்கள் பிரமாணமெதுவும் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. யூதர்களும், அரசருக்கும் நகராட்சிகளுக்கும் சேவைசெய்ய முடியாதிருந்தனர். ஏனென்றால், இவர்கள் உண்மையான கிறித்துவர்களாகப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

1828-ல் சோதனைச்சட்டத்தையும் மாநகராட்சிச் சட்டத்தையும் நீக்கியதால், இணங்காதார் மீதிருந்த தகுதியின்மைகளெல்லாம் விலக்கப்பட்டுவிட்டன. மாநகராட்சிப் பதவி

[1] Act of Indemnity

களிலும் அரசரின்கீழுள்ள பதவிகளிலும் இவர்கள் இப் பொழுது அமரமுடிந்தது. 1829-ஆம் ஆண்டின் கத்தோலிக்க விடுதலைச்சட்டம், பிரமாணம் எடுத்துக்கொண்டவுடன் கத் தோலிக்கர்கள் பாராளுமன்றத்தில் அமர வழிசெய்தது. மாநகராட்சிப் பதவிகள், நீதித்துறைப் பதவிகள், சிவில் பதவி கள், அரசியல் பதவிகள் ஆகியவைகளெல்லாம் இப்பொழுது கத்தோலிக்கர்களுக்கு அளிக்கப்பட்டன. அரசப் பகர ஆளு நர், இங்கிலாந்தின் சான்சலர் பிரபு, அயர்லாந்தின் லெப்ட் னென்டு (Lord Lieutenant) ஆகிய பதவிகளுக்குக் கத்தோலிக் கர்கள் வரமுடியாது. 1882-ல் இணங்காப் புராடெஸ்டெண்டு களைப்போல் இவர்களும் எல்லா உரிமைகளையும் பெற்றுர்கள்.

1837-ஆம் ஆண்டுச்சட்டம், குவேக்கர்கள், மொரோவியர் கள், பிரிவினைவாதிகள் ஆகியோர் பாராளுமன்ற இடங்க ளுக்குத் தகுதிபெற வழிசெய்தது. மேலும், மற்றெல்லாப் பதவிகளையும் இவர் வகிக்கலாம். ஆனல், இவர்கள் ஓர் எளிய வாய்மையுரையின்பேரில் இத் தகுதியைப் பெறலாம். 1858-ல் யூதர்களின் மீதிருந்த எல்லாத் தகுதியின்மைகளும் நீக்கப்பட்டுவிட்டன. 1836-ல் இணங்காதார், அவர்களுடைய திருச்சபையில் திருமணங்களை முறைப்படி நடத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். 1868-ல் கட்டாயத் திருச்சபைக் கட்ட டணங்கள் நீக்கப்பட்டன. ஆங்கிலிக்கன் திருச்சபையில் பிறப்பு, இறப்பு, திருமணம் ஆகியவை பதிவுசெய்யப்பட்ட தால், இணங்காதாரும் கத்தோலிக்கர்களும் இச்சான்றுகளைப் பெறமுடியாமற்போகவே, 1837-ஆம் ஆண்டுச்சட்டத்தால் இக் குறை அகற்றப்பட்டது. இவர்கள் இனிமேல் சிவில் நிறு வனங்களில் பிறப்பு, இறப்பு, திருமணம் ஆகியவைகளைப் பதிவுசெய்துகொள்ள இச் சட்டம் வகைசெய்தது. 1871-ஆம் ஆண்டுச்சட்டம் எல்லாப் பட்டப்படிப்புகளையும், கல்வி சார் புடைய உலகியல் பதவிகளையும் எல்லாச் சமயத்தினருக்கும் அளிக்க வகைசெய்தது. ஆகவே, பத்தொன்பதாம் நூற் ருண்டின் இறுதியில் இங்கிலாந்தில் முழுமையான சமயப் பொறை நிறுவப்பட்டது.

சமயப்பொறை வளர்ச்சியின் பொதுவிளைவு ஒருவாறு இருப்பினும், இங்கிலாந்தின் திருச்சபை தொடர்ந்து ஓரளவு அரசரோடு தொடர்புகொண்டுள்ளது. அரசரால் திருச்சபை நிலைபெறவில்லையெனினும், மற்ற எல்லாச் சமய நிறுவனங் களும் நல்லமுறையில் பாதுகாக்கப்படுவதோடு, அரசின் தலையீடும் இவைகளில் கிடையாது. எச் சமய நம்பிக்கை

யுடையவர்களாயினும், இவர்கள் இப்பொழுது எல்லாச் சிவில் அரசியல் உரிமைகளையும் பெறலாம்.

ஆங்கிலிக்கன் திருச்சபை அமைப்பு

கான்டர்பரி, யார்க் என இங்கிலாந்து இரண்டு பிரிவுகளாக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றிலும் ஓர் அதிமேற்றிராணியார் பதவியில் இருப்பார். இப் பிரிவுகள் மாகாணங்கள் எனப் பெயர்பெற்றுள்ளன. ஒவ்வொரு மாகாணமும் பல மேற்றிராசனப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேற்றிராணியார்களைப்போல் அதிமேற்றிராணியார்களும் மாகாணங்களிலிருந்து திருச்சபைப் பணிகளை நிறைவேற்றுகிறார்கள். அதிமேற்றிராணியாருக்குரிய அதிகார எல்லைக்குள் நின்று செயல்படுகிறார்கள். மேற்றிராசனப் பகுதிகள் சில சிறிய பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. இதன் தலைவர்களை மேற்றிராணியார் அமர்த்துகிறார். ஆனால், மேற்றிராணியார்களை அரசர் அமர்த்துகிறார். கிராமப் பிரிவுகள் பல திருச்சபை வட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திருச்சபை வட்டமும் ஒரு திருச்சபையைப் பெற்றிருக்கிறது. இதன் குருவை ரெக்டர் எனப் பெயர்பெற்றுள்ளார். சிவில் திருச்சபை வட்டங்கள் வந்தபின், சமயத் திருச்சபை வட்டங்கள் புகழ்மங்கிப்போயின. திருச்சபைக்குரியதாக இது டியூடர்களின் காலம் வரையில் இருந்து, பின் சிவில் ஆட்சிப்பிரிவாக மாறியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் திருச்சபை வட்டஆட்சியில் பங்குகொண்டனர். ஆங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்தவர்களே இதன் வாக்களிப்பில் கலந்துகொள்ள முடியும்.

திருச்சபை நீதிமன்றங்களின் அதிகாரமும் குறைந்து போயிற்று. திருமணம், குடும்ப உறவுகள், மரபுரிமை, ஒழுக்கம்கெட்ட செயல், மூர்ச்சமயக் கருத்து, பொய்க்கரி போதல், கல்வி போன்றவைகளில் இடைக்காலத் திருச்சபை நீதிமன்றங்கள் அதிகார வரம்பைச் செயல்படுத்தின. பொய்க்கரிபற்றிய வழக்குகள் 1823-ல் உலகியல் நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டன. 1833-ல் பத்தில் ஒரு பகுதி வரி பற்றிய வழக்குகளும், 1836-ல் மானநட்ட வழக்குகளும் உலகியல் நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டன. 1857-ல் திருமண முறிவுபற்றிய வழக்குகளும், திருமணத் தொடர்புடைய வழக்குகளும், உயில்பற்றிய வழக்குகளும் ஒப்பாட்சி (Probate) நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டன. 1857-ல் முழுமையான மணமுறிவுக்கு வகைசெய்யப்பட்டது.

குருமார்களின் ஒழுக்கமுறை மீதான அதிகார வரம்பு தொடர்ந்து திருச்சபை நீதிமன்றத்திடமே இருந்தது. கொள்கையளவில் திருச்சபை நீதிமன்றங்கள் மக்களைச் சமயவிலக்குச்செய்யவும், சிறைப்படுத்தவும் அதிகாரம் பெற்றிருந்தன. ஆனால், இந்த அதிகாரம் பயன்படுத்தப்படுவதில்லை. 1813-க்குப்பிறகு சமயவிலக்கு, சிவில் தகுதியின்மைகளுக்குள் ஒருவரை உட்படுத்துவதில்லை.

திருச்சபை இன்றும் தேசிய அமைப்பின் ஒரு பாகமாகக் கருதப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருச்சபையின் செல்வாக்கு, அடிமை ஒழிப்பு, தொழில்மயமானதால் ஏற்பட்ட தீமைகளின் ஒழிப்பு போன்ற துறைகளில் பிரிட்டிஷ் கொள்கையை நிருணயித்தது.

திருச்சபை நிலங்களிலிருந்து வரி வசூலிக்கப்படுகிறது. திருச்சபை வட்டக்குருமார்களின் வருவாயில் பத்தில் ஒரு பங்கு திருச்சபைக்குச் செல்கிறது. இவைகளை மக்கள் மேற்றிராணியாருக்குக் கொடுக்கிறார்கள். திருச்சபைகள் நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளுகின்றன. பாராளுமன்றத்திடமிருந்து திருச்சபை உதவித்தொகை பெறுவதில்லை. சட்டத்தால் நிறுவப்பட்டதாயினும், திருச்சபை முற்றிலும் தன்னாட்சி பெற்றுள்ள நிறுவனமாகும். இதனுடைய கட்டளைகளால் பாராளுமன்றத்தின் சட்டங்களை மாற்றியமைக்கலாம்.

1838-ல் திருச்சபையின் உடைமைகளை நிருவகிக்க, திருச்சபை ஆணைக்குழு ஒன்று அமர்த்தப்பட்டது. ஸ்காட்லாந்தில் நிறுவப்பட்ட திருச்சபை பிரிஸ்பிட்டீரியன் திருச்சபையாகும். திருச்சபையின் சொத்துகளை 1925-ஆம் ஆண்டுச்சட்டம் பொதுப்பொறுப்பாளர்களிடம் விட்டுவைத்தது.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

F. Warre Cornish	:	History of the English Church during the 19th century
Gardiner	:	History of England
Holdsworth	:	History of English Law
J. Jairdner	:	History of the English Church
W. H. Ferre	:	History of the English Church in the Reign of Elizabeth & James I

21. நீதிமன்ற அமைப்பு

ஆங்கிலோ சாக்சானியர் காலத்தில் தல நீதிமன்றங்களாகிய மாவட்ட (Shire) நீதிமன்றங்களும், நூற்றுவர்கள் (Hundreds) நீதிமன்றங்களும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கின. நார்மானியர்களின் காலத்தில் அரசரின் அதிகாரமும் நிலமானியப் பிரபுக்களின் அதிகாரமும் தலநீதிமன்றங்களின் அதிகார வரம்பைக் குறைத்தன. ஆனால், நார்மானிய அரசர்கள் பிரபுக்களின் நீதிமன்றங்களுக்கெதிராக மாவட்ட நீதிமன்றங்களை வலுப்படுத்திக்கொண்டார்கள். முதலாம் ஹென்றியின் காலத்தில் நிதித்துறை முதல்வர் மாவட்டங்களுக்குச் சென்று வருவாயைத் திரட்டியும் நீதி வழங்கியும் வந்தார். முதலாம் எட்வர்டின் காலத்தில் அரசவை மூன்று நீதிமன்றங்களாகப் பிரிந்தது. (1) அரச நீதிமன்றம். இது எல்லாக் குற்றவியல் வழக்குகளையும் அரசருக்கான முறையீடுகளையும் விசாரிக்கும் அதிகாரம் பெற்றிருந்தது. (2) பொதுவழக்கு நீதிமன்றம். மக்களுக்கிடையிலான எல்லா வழக்குகளையும் விசாரித்தது. (3) நிதித்துறை நீதிமன்றம். வருவாய்பற்றிய வழக்குகளைக் கேட்டு முடிவுசெய்தது. இருப்பினும், பொதுநோர்மை அடிப்படையில் அரசர் அவையில் இருந்துகொண்டு நீதிபதிகளின் தவறுகளைச் சரிப்படுத்தலாம். நிதித்துறை நீதிமன்றமும் மேல்முறையீட்டுத் தலைமை நீதிமன்றமாகிய பெருமக்கள் சபையும் அதிகாரங்களை அரசரிடமிருந்து பெற்றன. பதினைந்தாம் நூற்றாண்டில் பொதுச்சட்ட நீதிமன்றங்கள் வலுவிழந்து காணப்பட்டபொழுது விண்மீன் நீதிமன்றத்தை ஏழாம் ஹென்றி நிறுவினர். பதினாறும் நூற்றாண்டில் விண்மீன் நீதிமன்றம், எல்லைப்புற நீதிமன்றங்கள், வடஎல்லை நீதிமன்றம் ஆகிய சிறப்புரிமை நீதிமன்றங்களைப் பயன்படுத்திக்கொண்டு நிருவாகத்தினர் நீதிச்செயற்பாட்டைக் கட்டுப்படுத்தினர்கள். நீதித்துறையை நிருவாகத்துறையின்கீழ் கொண்டுவரஸ்டுவர்ட்டுகள் முயன்றார்கள். பாராளுமன்றம் இக்

கொள்கையை வன்மையாக எதிர்த்தது. பின், நீடித்த பாராளு மன்றம் இத்தகைய நீதிமன்றங்களையெல்லாம் ஒழித்தது. ஆட்கொணர் ஆணைச்சட்டம், 1679-ல் குடிமக்களின் உரிமை களுக்குக் காப்புறுதியளித்தது.

1701-ஆம் ஆண்டின் அரசுரிமை நிருணயச்சட்டம் நீதி மன்றத்திற்கு உண்மையான சுதந்திரத்தை அளித்தது. இதற்குமுன், நீதிமன்றம் நிருவாகத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவந்தது. மேலும், பாராளுமன்றத்தின் இருசபை களின் பேருரையினலன்றி, நீதிபதிகளைப் பதவிநீக்கலாகா தெனவும் இச் சட்டம் விதித்தது. கணிசமான ஊதியம், பதவி உயர்வின்மை, வெளிப்படையான விசாரணை, சட்டப் படியிலான தாக்குதல்களிலிருந்து நீதிபதிகள் காக்கப்படுதல் ஆகியவைகளால் நீதிமன்றம் மேலும் சுயேச்சை பெற்றதென லாம். நிதித்துறை முதல்வர் (சான்சலர் பிரபு), முதன்மை நீதிபதி, அப்பீல் நீதிபதிகள், மேல்முறை மன்ற நடுவர், துணை நீதிபதிகள் ஆகியோர் முறையே, 10,000, 8000, 6000, 5000 பவுன்களை ஊதியமாகப் பெற்றுர்கள். பதவியிலிருந்து ஓய்வு பெற வயது குறிப்பிடப்படவில்லை. ஆனல், ஓர் ஓய்வுபெற்ற நீதிபதி ஆண்டிற்கு 3500 பவுன்கள் ஓய்வூதியமாகப் பெற வகை செய்யப்பட்டது.

1873 வரையில் இங்கிலாந்தில் எவ்வித தனித்த நீதிமன்ற அமைப்பும் இருக்கவில்லை. பொதுச்சட்ட நீதிமன்றங்கள், நிதித்துறை நீதிமன்றங்கள், கப்பல்துறை நீதிமன்றங்கள் ஆகிய பல்வேறு, பலதரப்பட்ட அதிகார வரம்புகளையுடைய நீதிமன்றங்கள் இருந்தன. அரச நீதிமன்றம், பொதுவழக்கு நீதிமன்றம், நிதித்துறை நீதிமன்றம் ஆகியவை பொதுச்சட்ட நீதிமன்றங்களாகப் பிரிக்கப்பட்டன. தனியார்கள்மீதும், குற்றவியல் வழக்குகள்மீதும் அரச நீதிமன்றம் அதிகார வரம்பைப் பெற்றிருந்தது. தனியார்களைப்பற்றியும், தண்ட விதிப்புபற்றியும் பொதுவழக்கு நீதிமன்றம் 1837 வரை விசாரித்து முடிவுசெய்துவந்தது. விக்டோரியா அரசியாரின் ஆட்சிக்காலத் தொடக்கத்திலிருந்து இந் நீதிமன்றம் சர்ச் சைக்குரிய தேர்தல் வழக்குகளை ஆராய்ந்துவந்தது. வரு வாய்பற்றிய வழக்குகளை விசாரிக்கும் திறமுடையதாக நிதித்துறை நீதிமன்றமிருந்தது. 1841-க்குப்பின், குடிமக்களுக் கிடையேயான வழக்குகளை இது விசாரித்துவந்தது. 1868-ல் பொதுச்சட்ட நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் ஐந்து நீதிபதிகள் இருந்தனர். பொதுநேர்மைத் தனிநீதிமன்றத்திற்குச்

சான்சலர் பிரபு தலைமைவகித்தார். பொதுச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் காணப்படும் நேர்மையின்மையை இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது. இரண்டாம் ரிச்சர்டு காலத்திலிருந்தே கப்பல்துறை நீதிமன்றம் இருந்துவந்துள்ளது. நொடிப்பு, நொடித்துப்போன கடன்காரர்களுக்குத் துயருதவி, மணமுறிவு, மணவிலகல் ஆகியவைகளுக்கான தனிநீதிமன்றங்களுமிருந்தன. கப்பல்துறை நீதிமன்றம், ஒப்பாட்சி நீதிமன்றம் ஆகியவைகளிலிருந்து முறையீடுகள் அரசருக்கும் பிரிவி கவுன்சிலின் நீதியியல் குழுவிற்கும் சென்றன. இருந்தபோதிலும், குற்றவியல் வழக்குகளுக்கு மேல்முறையீடு கிடையாது.

1873-ஆம் ஆண்டின் நீதிமன்ற அமைப்புச்சட்டம், பல்வேறு நீதிமன்றங்களையும் ஓர் உயர்நீதிமன்றத்தில் இணைத்து, தலையாய நீதிமன்ற அமைப்பொன்றை நிறுவியது. தலைமை நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகவும், மேல்முறையீட்டு நீதிமன்றமாகவும் பிரிந்தது. மூன்று பொதுச்சட்ட நீதிமன்றங்கள்மீதும், பொதுநேர்மை, ஒப்பாட்சி, மணமுறிவு, மணவிலை, கப்பல்துறை, மாவட்ட ஆணையர் ஆகிய நீதிமன்றங்களின்மீதும், லங்காஸ்டர், டர்ஹாம் நீதிமன்றங்கள் மீதும் உயர்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு அளிக்கப்பட்டது. 1883-ல் அதிகார வரம்பு, நொடிப்புபற்றிய நீதிமன்றத்திற்கு மீட்டிக்கப்பட்டது. 1881-ல் உயர்நீதிமன்றத்தின் ஐந்து பிரிவுகளும் அரசியாரின் நீதிமன்றமென்ற பெயரில் ஒரு தனிப்பிரிவாக ஒருங்கமைக்கப்பட்டது. உயர்நீதிமன்றம், பொதுநேர்மை நீதிமன்றம் ஆகியவைகளிலிருந்து மேல்முறையிடு, மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் சென்றது. பித்தர்பற்றியும் நொடிப்புபற்றியும் முறையீடுகள் இந் நீதிமன்றத்திற்குச் சென்றன. 1834-ல் மாவட்ட நீதிமன்றங்களின்மீதும் இதன் அதிகார வரம்பு நீடித்தது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு முறைமன்ற நடுவரும், மேல்முறையீட்டு நீதிபதிகள் எண்மரும் இருந்தார்கள். முதன்மை நீதிபதியையும், அரச நீதிமன்ற நீதிபதிகளையும் கொண்ட குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒன்று 1898-ல் அமர்த்தப்பட்டது. மாவட்ட, காலாண்டு நீதிமன்றங்களிலிருந்து இந் நீதிமன்றம் முறையீடுகளைக் கேட்டு முடிவுசெய்தது. இங்கிலாந்தின் படிநிலை அமைப்பில் இறுதிக் கட்டம் பெருமக்கள் சபையில் நிலைபெறுகிறது. குற்றவியல் வழக்குகளில் அரசரின் மன்னிக்கும் அதிகாரம் இறுதிநிலையாகும். இங்கிலாந்திற்கு வெளியேயிருந்துவரும் வழக்கு

கூடப் பிரிவி கவுன்சிலின் நீதியியற்குழு மீவுயர் நீதிமன்ற மாக இருந்து முறைசெய்கிறது. மூன்று அல்லது ஐந்து நீதிபதிகள் ஒரு குழுவாக இருந்து, ஒவ்வொரு முறையீட்டை யும் கேட்டு முடிவுசெய்கின்றனர். சட்டப்பிரபுக்கள், சான்சலர் பிரபு அல்லது முன்னாள் சான்சலர், மேல்முறையீட்டுப் பிரபுக்கள், பிரிவி கவுன்சிலின் சில உறுப்பினர்கள் ஆகியோர் இக் குழுவில் இருந்தார்கள். பெரும்பான்மை நீதிபதிகளின் கருத்து அறிவிக்கப்பட்டது. இக் கருத்து ஒரு முடிவாக அறிவிக்கப்படாமல் ஓர் அறிவுரையாக அறிவிக்கப்பட்டது.

நீதிமன்றங்கள்

இங்கிலாந்தின் மிகச்சிறிய நீதிமன்றம் மாவட்ட நீதி மன்றமாகும். இவ் வகை நீதிமன்றங்களில் 80-க்குமேற்பட்ட நீதிபதிகள் இருக்கிறார்கள். இவர்களின் சேவைக்காக ஊதியம் பெறுகிறார்கள். 72 வயது நிரம்பியதும் பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறார்கள். ஒரு நீதிபதி பல மாவட்ட நீதிமன்றங் களுக்குத் தலைமைதாங்கி நடத்திவைக்கிறார். ஏனெனில், இந் நீதிமன்றங்கள் தொடர்ந்து ஓரிடத்தில் இருந்து செயல் படுவதில்லை. வேளாண்மை நிலவுடைமை, வாடகைக் கட்டுப் பாடுகள், தவணை கொள்முதல் உட்பட எல்லாப் பொதுச் சட்ட வழக்குகளையும் இந் நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன. இத் தகைய நீதிமன்றங்கள் 450-க்கும் அதிகமாக இருக்கின்றன. மோசடி வழக்குகளில் விசாரணை எட்டு சான்றுயர்களின் முன்னிலையில் நடக்கவேண்டுமென எதிர்வாதி நீதிபதிக்கு முறையிடலாம். லண்டன் மாவட்ட நீதிமன்றம் நீங்கலாக, நகர முதல்வரின் நீதிமன்றமும் கீழ்நிலை நீதிமன்றங்களேயாகும். மற்ற நீதிமன்றங்களைப் போலன்றி, இந் நீதிமன்றம் எல்லை யற்ற அதிகார வரம்பைப் பெற்றுள்ளது. சொத்தின் மதிப்பு 500 பவுன்களுக்கு மேலிருந்தாலன்றி, மாவட்ட நீதிமன்றம் வழக்குகளை ஏற்கமுடியாது. லண்டன்மாநகரால் அமர்த்தப் பட்ட நீதிபதியொருவர் லண்டன்மாநகர் நீதிமன்றத்திற்குத் தலைமைதாங்குவது வழக்கமாகும். பழங்கால நகர நீதிமன் றங்கள் இப்பொழுதும் சில நகரங்களில் இருந்து செயல்படு கின்றன. 1934 வரையில் மாவட்ட நீதிமன்றங்களிலிருந்து வந்த வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருந்தது. ஆனால், 1934-க்குப்பின், மாவட்ட நீதி மன்றங்கள், நகரமுதல்வரின் நீதிமன்றம், லண்டன் நகர நீதி மன்றம் ஆகியவைகளிலிருந்துவந்த மேல்முறையீடுகளை, மேல்முறையீட்டு நீதிமன்றம் கேட்டு முடிவுசெய்தது. உரிமை

யியல் வழக்குகளில் இறுதியான நீதிமன்றம் பெருமக்கள் சபையாகும். ஒன்பது நீதிபதிகளில் ஐவர் மேல்முறையீடு களைக் கேட்டு முடிவுசெய்தார்கள்.

சிறிய குற்றவியல் வழக்குகளைக் குற்றவியல் நீதிபதிகள் அல்லது அமைதிகாண் நடுவர்கள் விசாரிக்கிறார்கள். ஒவ் வொரு மாவட்டமும், நகரும் இந் நீதிமன்றங்களைப் பெற்றிருக் கின்றன. சான்சலர் பிரபுவின் பரிந்துரையின்பேரில் அரசர் இந் நீதிபதிகளை அமர்த்துகிறார். இங்கிலாந்தில் ஏறத்தாழ 19,000 அமைதிகாண் நடுவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 3,700 பேர்கள் பெண்களாவர். இவர்களில் சிலர் மதிப்புறு நீதி பதிகளாகவும், சிலர் படிச்சலுகை பெறும் நீதிபதிகளாகவும் இருக்கிறார்கள். சிறைத்தண்டனை 14 நாட்களுக்கு அதிக மாகவும், தண்டம் 5 பவுன்களுக்கு அதிகமாகவும் இருக்கக் கூடிய வழக்குகளை இவர்கள் விசாரிக்கும் உரிமைபெறவில்லை. இரண்டு அல்லது மூன்று நீதிபதிகளுக்குமேல் அமருகின்ற வழக்குவிசாரணை சிறுகூட்டமாகும். மாவட்ட நீதிமன்றங் களைவிட இந் நீதிமன்றங்கள் (சிறு செஷன் நீதிமன்றங்கள்) தண்டம் விதிக்கவும் சிறைப்படுத்தவும் பெருமளவு அதிகாரம் பெற்றிருக்கின்றன. ஆனால், பெரும்பாலான வழக்குகளில் இந் நீதிமன்றம் ஆறு மாதத்திற்கும் அதிகமாகச் சிறைத் தண்டனை அளிக்கமுடியாது. பெரும் எண்ணிக்கையிலான வழக்குகளை உடன்விசாரணை நீதிமன்றம் விசாரிக்கிறது. 1949-ஆம் ஆண்டு அமைதிகாண் நடுவர்களின் சட்டம் நிறை வேறியபின், தனிப்பட்ட அமைதி ஆணைக்குழு இதற்குமுன் முடிவுசெய்த வழக்குகளைச் சிறிய செஷனல் நீதிமன்றங்கள் ஏற்று முடிவுசெய்தன.

அமைதிகாண் நடுவர் நீதிமன்றத்திற்குமேலே காலாண்டு குற்றவியல் அமர்வு நீதிமன்றமிருக்கிறது. பெரும்பாலான அமைதிகாண் நீதிபதிகளை இது கொண்டிருக்கிறது. ஆண் டிற்கு நான்கு முறைகள் கூடுவதால் இதற்கு இப் பெயர் வந்தது: மாவட்டக் குற்றவியல் அமர்வு, நகர்க் குற்றவியல் அமர்வு ஆகிய இரண்டு தனிப்பட்ட நீதிமன்றங்களும் காலாண்டு குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தின் பிரிவுகளே யாகும். ஒரு தலைவர் அல்லது துணைத்தலைவரைக்கொண்ட இப்படிப்பட்ட 65 மாவட்டக் காலாண்டு குற்றவியல் அமர்வு நீதிமன்றங்கள் இருக்கின்றன. 96 நகர நீதிமன்றங்கள் ஒவ் வொன்றிலும் ஊதியம் பெறும் வழக்குரைஞராகிய பதிவாளர் ஒருவர் தலைமைதாங்குகிறார். மரணதண்டனை அல்லது ஆயுட்

காலத்தண்டனை அளிக்கக்கூடிய வழக்குகளில் காலாண்டு குற்றவியல் அமர்வு நீதிமன்றம் எத்தகைய அதிகார வரம்பையும் பெற்றிருக்கவில்லை. கடுங்குற்றங்களை மாவட்ட ஆணையாளர் நீதிமன்றம் விசாரித்தது. கொள்ளை, தீவைப்பு, பணக்கையாடல், ஆள்கடத்தல், கொலை ஆகிய குற்றங்கள் இந் நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வருகின்றன. அரச நீதிமன்ற நீதிபதி அல்லது ஆணையாளர் ஒருவர் ஒரு நகரிலிருந்து இன்னொரு நகருக்குச் செல்லுகிறார். இயல்பாக, ஆணையர் நீதிமன்றம் ஆண்டிற்கு மூன்று தடவைகள் கூடுகிறது. மான்செஸ்டர், லீட்ஸ், லிவர்பூல் போன்ற நகரங்களில் இந் நீதிமன்றம் ஆண்டிற்கு நான்கு தடவைகள் கூடுகின்றன. 1956-ஆம் ஆண்டின் குற்றவியல் நீதிச் செயற்பாட்டுச் சட்டத்தின்படி, லிவர்பூலிலும், மான்செஸ்டரிலும் நிலைபெற்றிருக்கும் அரச நீதிமன்றங்கள் ஆணையாளர் நீதிமன்றங்களாகச் செயல்படத் தொடங்கின.

காலாண்டு குற்றவியல் அமர்வு நீதிமன்றம், ஆணையாளர் அல்லது அரச நீதிமன்றம் ஆகியவைகளின் குற்றத்தீர்ப்பை அல்லது தண்டனையிலிருந்து மேல்முறையீடுகளைக் குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டுபோகலாம். இது 1907-ல் நிறுவப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் அரசியார் நீதிமன்றப் பிரிவிலிருந்து குறைந்தது மூன்று நீதிபதிகளாவது இந் நீதிமன்றத்தில் அமர்கிறார்கள். குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து முறையீடுகளைப் பெருமக்கள் சபைக்குக் கொண்டுசெல்லலாம். ஆனால், இந்த வழக்கில் சில சட்டக்கருத்துகள் உள்ளடங்கியிருக்கின்றனவென்று வழக்கறிஞர் தலைவர் சான்று கூறினால்தான் மேலே முறையிடலாம். தண்டிக்கப்பட்ட குற்றவாளி அரசரின் மன்னிப்பை நாடுவது கடைசி முயற்சியாகும். குடிமக்களுக்கிடையிலான தகராறுகளில் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் குறைக்கவோ, நாட்டிற்கு வெளியே தண்டனை பெறுபவர்களை மன்னிக்கவோ அரசருக்கு அதிகாரமில்லை. வழக்கமாக, உள்துறைச் செயலரின் அறிவுரையை அரசர் ஏற்கிறார். சிலவேளைகளில், அரசர் திட்டவட்டமான கருத்துடையவராக இருக்கிறார். மனைவிகளைக் கொன்ற குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்க விக்டோரியா அரசியார் விரும்பவில்லை. ஏழாம் எட்வர்டும் ஆறும் ஜார்ஜும் உள்துறைச் செயலரின் கருத்திலிருந்து மாறுபட்டார்கள்.

இங்கிலாந்திலும் வேல்சிலும் இன்னும் பலவகை நீதிமன்றங்கள் இருக்கின்றன. இரண்டு அல்லது மூன்றுக்கு

மேற்படாத நீதிபதிகளைக்கொண்ட இளங்குற்றவாளிகளுக்கான நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந் நீதிமன்றம் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கெதிரான வழக்குகளையும், 17 வயதிற்குட்பட்ட வாலிபர்களுக்கெதிரான வழக்குகளையும் விசாரிக்கிறது. இந் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் இருப்பர். இவர்களில் ஒருவர் பெண்ணாக இருக்கவேண்டும். இவ் வழக்குகள் தனிப்பட்ட அறைகளில் வெளியார் பார்வைக்குப்படாமல் நடைபெறுகின்றன.

மணவினை தொடர்புடைய வழக்குகளும் இங்கு விசாரிக்கப் படுகின்றன. இந் நீதிமன்றத்தில் உள்ள மூன்று நீதிபதிகளில் ஒருவர் பெண்ணாகவும் ஒருவர் ஆணாகவும் இருக்கவேண்டும். இந் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பார்வையிடப் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

இன்னொரு தனி நீதிமன்றம் கொரோனர் நீதிமன்றமாகும். இந் நீதிமன்றத்திற்குக் கொரோனர் (coroner) தலைமை தாங்குகிறார். இவரை மாவட்டம் அமர்த்தினாலும், சான்சலர் பிரபுதான் நீக்கலாம். இவர் ஒரு வழக்குரைஞராக ஐந்தாண்டுகளாவது இருந்திருக்கவேண்டும். 7-லிருந்து 11 சான்றுயர்களைத் துணையாகக்கொண்டு இவர் தீர்ப்பளிக்கிறார். வன்முறையிலான, சந்தேகத்திற்கிடமான இயற்கைமீறிய மரணங்கள்பற்றிய வழக்குகளை இவர் விசாரிக்கிறார்.

திருச்சபை நீதிமன்றங்களும், இராணுவ நீதிமன்றங்களும் இவைகளுக்குரிய விவகாரங்களில் செயலாட்சி அதிகாரம் பெற்றிருந்தன.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

Peter Archer	:	The Queen's Court
Bracher	:	The Studies in British Government
Jackson	:	Machinery of Justice in England

22. அரசாங்கத் துறைகள்

அரசாங்கப் பொறுப்புடைய பணிகளை நிறைவேற்ற ஏறக் குறைய முப்பது துறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு துறையும் அரசின் குறிப்பிட்ட பணிகளோடு தொடர்புகொள்ளுகின்றன. ஒவ்வொரு துறையும் ஓர் அமைச்சரைத் தலைவராகக் கொண்டியங்குகிறது. இவ் வமைச்சர்கள் இருசபைகளில் ஏதாவதொன்றில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். பல துறைகளில் பாராளுமன்றச் செயலர் ஒருவர் இருக்கிறார். ஒருசமயம், அமைச்சர் ஒரு சபையிலும், செயலர் இன்னொரு சபையிலும் உறுப்பினராக இருக்கும் வழக்கமிருந்தது. ஆனால், இவ் வளர்ச்சி முடிவிற்குவந்தது. சில அமைச்சர்களைப் பெருமக்கள் சபையிலிருந்தும் மற்றெல்லா அமைச்சர்களையும் பொதுமக்கள் சபையிலிருந்தும் பெறுவது வழக்கமான நடைமுறையாகஇருந்தது. அரசியாரின் எழுதுபொருள் அலுவலகம், தகவல்பற்றிய மத்திய அலுவலகம், அரசாங்கப் பதிவாளர் துறை போன்றவை மற்றக் கடமைகளையுடைய அமைச்சர்களின் பொறுப்பில் இருந்தன. இத் துறைகளெல்லாம் கருவூலத்துறையின் கீழ் இருந்தன. ஓரிரண்டு அமைச்சுகளில் அமைச்சர்களில்லை. நிதித்துறையும், தணிக்கைத்துறையும் தணிக்கையாளர் தலைவரின் கட்டுப்பாட்டில் இருந்தன.

பிரிவி கவுன்சிலின் குழுக்களால் முதலில் நிறைவேற்றப்பட்டாலும், அரசாங்கத்தின் பணிகள் ஓர் அரசுச்செயலரின்கீழ் இருந்த துறைகளால் நிறைவேற்றப்பட்டன. அரசரின் செயலாளர் என்னும் சொல்லிலிருந்து அரசுச் செயலர் பதவி பெறப்பட்டது. மூன்றாவது ஹென்றியின் காலத்தில் நிதித்துறைத்தலைவரின் ஆட்சியியல் பணிகள் பலவற்றை இவர் ஏற்றுச்செயல்படுத்தினர். இன்று அரசின் முதல் செயலர் ஒருவரும் ஒன்பது மற்றச் செயலர்களுமிருக்கின்றனர். உள்துறை, வெளிவிவகாரங்கள், ஸ்காட்லாண்டு, வேல்ஸ், சமூகப்பணிகள், பொருளாதார விவகாரங்கள், பாதுகாப்பு, வேலைவாய்ப்பும் உற்பத்தியும், கல்வியும்

அறிவியலும் ஆகிய துறைகள் இவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. கருவூலம், வணிகக்கழகம், சுங்க, கலால் வரிக்கழகம் ஆகியவை வரலாற்றுச் சிறப்புடையவையாகும். "அமைச்சர்" என்ற முறையான பதவிப்பெயர் அண்மையில் படைக்கப்பட்ட பதவியின் பெயராகும். ஆகவே, வீட்டு வசதி, தலஅரசாங்கம், போக்குவரத்து, தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

வேலை அதிகமாக இருந்தாலும் அல்லது வெளிநாட்டுப் பயணத்தை இது அடிக்கடி வலியுறுத்தினாலும் துணை அமைச்சர்களாக இருக்கின்ற அரசு அமைச்சர்கள் அமர்த்தப்படலாம். இப்பொழுது அரசு அமைச்சர்களாக இருப்பவர்கள் பின் வருமாறு: வெளிவிவகார அலுவலகம் (4), வணிகக்கழகம் (3), கல்வி அறிவியல் துறை (3), உள்துறை (1), ஸ்காட்டிஷ் அலுவலகம் (1), வேல்ஸ் அலுவலகம் (1), பொருளாதார விவகாரத்துறை (1), வீட்டுவசதியும் தலஅரசாங்கமும் (1), தொழில்நுட்ப அமைச்சு (1), போக்குவரத்து அமைச்சு (1), தலைமைச்செயலாளர், கருவூலம், அரசின் அமைச்சர்.

வழக்கமாக, இளநிலை அமைச்சர்கள் பாராளுமன்றச் செயலர்களாக அமர்த்தப்பட்டார்கள். இவர் அமைச்சுப் பொறுப்பில் இருக்கிறார். அரசின் நேர்முகப் பாராளுமன்றச் செயலர், பாராளுமன்றத்திலும் துறையிலும் முதுநிலை அமைச்சர்களுக்கு உதவுகிறார். கருவூலம் இதற்கு ஒரு விதிவிலக்காகும். ஏனெனில், பாராளுமன்றச் செயலர் தலைமைக் கொறடாவாகவும், சில இளநிலை பிரபுக்கள் துணைக்கொறடாக்களாகவும் செயல்படுகிறார்கள்.

தம்முடைய துறையின் கொள்கையை அரசியல் தலைவர் கேபினெட் அமைச்சரவைக்கு எடுத்துரைக்கிறார். பாராளுமன்றத்திற்கும் துறைக்கும் கேபினெட் ஓர் இணைப்பாக இருந்தது. இவருடைய இயக்காற்றலின்கீழ் நிலையான அலுவலர்கள் தனிப்பயிற்சி நுட்பத்தகவலை அளிக்கிறார்கள். கொள்கையை உருவாக்கவும், இக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவரவும் இவர்கள் உதவுகிறார்கள். தம் துறையில் நடப்பவைகளுக்கெல்லாம் அமைச்சர் பாராளுமன்றப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறார்.

அரசாங்கத் துறைகளின் வளர்ச்சியிலும் விரிவாக்கத்திலும் அரசுச் செயற்பாட்டின் முழுவரலாறும் வெளிப்

படுத்தப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவை ஒருசிலவே இருந்தன. குடியேற்ற நாடுகள், போர், இந்தியா போன்றவைகளுக்குத் தனிப்பட்ட அலுவலகங்கள் சிறுவப் பட்டன. தலஅரசாங்கம், வேளாண்மை, கல்வி ஆகியவை களுக்குக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த நூற்றாண்டின் போது, சமுதாய நல்வாழ்வு, பொருளாதாரத் திட்டமிடல், அறிவியல் வளர்ச்சியென நாட்டுடைமையாக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்குப் பல புதியதுறைகள் படைக்கப்பட்டன. ஆகவே, இப்பொழுது வேலைவாய்ப்பு, உற்பத்தி, சுகாதாரம், சமூகக்காப்பு, வீட்டுவசதி, தலஅரசாங்கம், தொழில் நுட்பம் ஆகியவைகளுக்கு அமைச்சுகள் இருக்கின்றன. அரசின் செயற்பாடுகள் எவ்வாறு அமைக்கப்படவேண்டு மென்பதன் இறுதியான முடிவு பிரதம அமைச்சரைச் சேர்ந்த தாகும். துறைகளின் மாற்றங்களுக்கும் சிறப்பு நிலைகளுக்கு மேற்ப, இவர் புதிய துறைகளைப் படைக்கலாம்; பழைய துறைகளை நீக்கலாம் அல்லது ஒருங்கிணைக்கலாம்.

இங்கிலாந்தின் அரசாங்கம் துறைகளில் அமைந்து செயல் படுகிறது. ஏறக்குறைய 100 துறைகளுக்குமேல் இந் நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இவை தொழில் அடிப்படையில் அமைந்துள்ளனவென்பதை இவைகளின் பெயர்களிலிருந்து அறிந்துகொள்ளலாம். இவைகளின் உருவளவும் முக்கியத் துவமும் மாறுபடலாம். கேபினெட் அமைச்சர்களைத் தலைவர்க ளாகக் கொள்ளக்கூடிய முக்கியத்துவமுடைய இருபத்தைந்து அமைச்சரவைகள் இருக்கின்றன. 150 ஆண்டுகளுக்குமுன், அரசாங்கத் துறைகள் பத்து அல்லது பன்னிரண்டு இருந்தன. வளர்ச்சியடைந்துவரும் பொறுப்புகளை ஏற்றுச்செயல் படுத்தும் நோக்கத்தின் அரசுத்துறைகளைப் பெருக்கிக் கொண்டுள்ளது. பொதுச்சுகாதாரம், கல்வி, ஆலைத்தொழில், சட்டம் ஆகியவைகளோடு தொடர்புடைய சமூகச்சட்டங்களைச் செயல்படுத்தவும், இரு உலகப்போர்களின் விளைவுகளைச் சமாளிக்கவும், நாட்டின் பொருளாதார வளங்களைச் சீரமைக்கவும் புதிய துறைகள் அமைக்கப்படவேண்டிய தாயிற்று. உலகப்போருக்குப்பின் உருவான பொதுநல வாழ்வு அரசுக்கொள்கை, அரசின் செயற்பரப்பை விரி வாக்கியது.

பல முக்கியமான துறைகள்பற்றிய சிறுகுறிப்பு

துறைகளின் வகைப்பாடு அவைகளின் தொழில் அடைப் படையில் உருவாகியுள்ளது.

1. பாதுகாப்பு

பாதுகாப்பு அமைச்சு

பாதுகாப்பிற்காக ஓர் ஒருங்கிணைப்பு அமைச்சர் 1956-ல் அமர்த்தப்பட்டார். தனிப்பட்ட அமைச்சு 1947 வரையில் படைக்கப்படவில்லை. ஆனால், 1964-ல் பாதுகாப்புக் கொள்கையின் மத்திய கட்டுப்பாட்டு நோக்கத்தில், பாதுகாப்புக் கொள்கையை உருவாக்கும், கட்டுப்படுத்தும், செயற்படுத்தும் அரசாங்கத்துறைகள் முழுமையாகச் சீரமைக்கப்பட்டன.

பாதுகாப்புச் செயலரின் தலைமையின்கீழ் பாதுகாப்பு அமைச்சு கப்பல்துறை, போர் அலுவலகம் ஆகியவை பாதுகாப்பு அமைச்சு என்னும் பெயரில் ஒருங்கிணைக்கப் பட்டன. கப்பல்துறையின் முதல் பிரபு, போருக்கான அரசுச் செயலர், விமானத்துறையின் செயலர் ஆகிய பதவிகள் நீக்கப் பட்டன. கப்பல்துறைக் கழகம், படைத்துறைக் கவுன்சில் ஆகியவைகளின் இடத்தில் பாதுகாப்புக் கவுன்சில் நிறுவப் பட்டது. கேபினெட் பாதுகாப்புக் குழுவிற்குப் பதிலாக, பாதுகாப்பு வெளிநாட்டுக் கொள்கைக்குழு அமர்த்தப் பட்டது.

இரண்டு பாதுகாப்பு அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஒருவர் செயலாட்சிப் பொறுப்பையும், இன்னொருவர் தளவாடங்களின் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுகிறார். கப்பற்படைக்கும் படைக்கும் விமானப்படைக்குமென மூன்று நேர்முகச் செயலர்கள் இருக்கிறார்கள்.

வானிலை அலுவலகத்தையும் பாதுகாப்பு அமைச்சுச் செயற்படுத்துகிறது.

2. கட்டுப்பாடு

(அ) உள்துறை

இரண்டு அரசுச் செயலர்களின் பொறுப்புகள் 1782-ல் மறுபகிர்வு செய்யப்பட்டபொழுது உள்துறை அலுவலகம் படைக்கப்பட்டது. உள்துறைச்செயலர் இதன் தலைவராக இருக்கிறார். செயலாளர்களில் இவர் முக்கியமானவர். எந்த ஒரு அமைச்சருக்கும் குறிப்பிட்டுக் கொடுக்கப்படாத ஆட்சிப் பணிகளை இவர் ஏற்றுச்செய்கிறார். இவர் அரசரோடும் அரசி

யாரோடும் நெருங்கித் தொடர்புகொள்ளுகிறார். விண்ணப்பங்களையும் பேருரைகளையும் இவர் மக்களிடமிருந்து பெற்று அரசியாரிடம் கொடுக்கிறார். உள்நாட்டு அமைதியைப் பேணுதல், காவற்படையின் திறமை, மாநகராட்சியின் காவற்படைகளின்மீதான கட்டுப்பாடு, குற்றவாளிகளைச் சிறையில் வைத்துநடத்துதல் ஆகியவை இவருடைய பொறுப்புகளாகும். குடிமக்களின் நல்வாழ்வு, பாதுகாப்பு போன்ற விரிவான பொறுப்புகளை இத் துறை ஏற்றுக்கொண்டுள்ளது. குற்றவியல் நீதிபற்றிச் சட்டம் கொணர்தல், பள்ளிகளை மேற்பார்வையிடல், குற்றவாளிகளின் நன்னடத்தையைக் கண்காணித்தல் ஆகிய பணிகளும் இத் துறையைச் சேரும். போர்க்காலத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு, தீயணைப்புச் சேவைகளின் திறமையைப் பேணுதல், தலநிறுவனங்கள், குழந்தைகளைப் பராமரித்தல், குழந்தைகளையும் இளைஞர்களையும் வேலைக்கமர்த்தலை ஒழுங்குபடுத்தல், பாராளுமன்றத் தலத் தேர்தல்களைக் கண்காணித்தல், குடிஇறக்கத்தை மேற்பார்வையிடல், குற்றவாளிகளை மன்னிப்பதில் அரசருக்குப் பரிந்துரைத்தல், படைக்கலன்களைக் கண்காணித்தல் ஆகியவைகளும் இத் துறையின் கடமைப்பொறுப்புகளாகும். ஸ்காட்லாந்தில், ஸ்காட்லாந்தின் அரசுச்செயலர் இப் பணிகளை நிறைவேற்றுகிறார்.

(ஆ) சான்சலர் பிரபுவின் துறை

இவர் பல்வேறு பணிகளை நிறைவேற்றுகிறார். இவர் பெருமக்கள் சபையின் தலைவராகவும், முத்திரை நாயகமாகவும் இருக்கிறார். நீதிமன்ற அமைப்பைக் கட்டுப்படுத்துகிறார்; நீதிபதிகளை அமர்த்துவதில் அரசியாருக்கு அறிவுரையளிக்கிறார். தேவைப்படும்பொழுது இராணுவ நீதிமன்ற நடவடிக்கைகளை மறுஆய்வு செய்கிறார். ஆட்சியியல் நியாயச் சபையின் தலைவர்களை இவர் அமர்த்துகிறார். வழக்கறிஞர் தலைவர் துறையை இவர் மேற்பார்வையிடுகிறார். நிலப்பதிவு, பொதுப்பொறுப்பாளர் அலுவலகம், பொதுப்பதிவு அலுவலகம் ஆகியவற்றோடு, சட்ட நடைமுறைகளோடு முதன்மையாகத் தொடர்புகொண்டுள்ள மற்றத் துறைகளையும் இவர் மேற்பார்வையிடுகிறார்.

(இ) சட்ட அலுவலர்களின் துறை

சட்ட அலுவலர்கள், வழக்கறிஞர் நாயகம், துணை வழக்குரைஞர் நாயகம் ஆகியோர் பொதுக்கள் சபையின் உறுப்

பினர்களாவர். அரசியாருக்கும், அரசாங்கத்திற்கும், துறைகளுக்கும் இவர்கள் அறிவுரையாளர்களாவர். முக்கியமான வழக்குகளில் இவர்கள் அரசரின் சார்பில் நீதிமன்றத்தில் வழக்குரைக்கிறார்கள். பொதுக்குற்றச்சாட்டு இயக்குநரின் பணிகளை இவர்கள் மேற்பார்வையிடுகிறார்கள்.

3. வெளிநாட்டுறவு

(அ) வெளிநாடு காமன்வெல்த் அலுவலகம்

1782-ல் இது தனிப்பட்ட துறையாயிற்று. உடன்பாடுகளை வரைதலும், ஐக்கியநாட்டு நிறுவனத்திலும் பன்னாட்டு நிறுவனங்களிலும் இங்கிலாந்தின் பிரதிநிதியாக இருத்தலும், பிரிட்டிஷ் குடிமக்களைப் பாதுகாத்தலும், அவர்களுடைய நலன்களைப் பேணுதலும், இதன் கடமைப்பொறுப்புகளாகும். தேசிய இனம்பற்றியும், பயணச்சீட்டுகள் வழங்குவது பற்றியும், வெளிநாட்டு அரசுகளின் சிறப்புரிமைகள்பற்றியும் இது செயலாட்சி செய்கிறது. 1968-ல் காமன்வெல்த் அலுவலகம் வெளிநாட்டு அலுவலகத்தோடு இணைக்கப் பட்டுள்ளது.

(ஆ) கடல்கடந்த பகுதிகளின் வளர்ச்சிபற்றிய அமைச்சு

மூலதனம், தொழில்நுட்ப உதவிகள் உட்பட, கடல் கடந்த பகுதிகளின் வளர்ச்சிக்கொள்கையை நிறைவேற்றும் பொறுப்பு இதற்குரியதாகும்.

4. நிதி

(அ) கருவூலம்

நார்மானியர் காலத்திற்குமுன்னிருந்தே பொருளாளர் அரண்மனையின் ஒரு முக்கிய அலுவலராக இருந்தார். இவருக்கு வரியைத் திரட்டுவதிலும் கணக்குகளை வைப்பதிலும் உதவ, பன்னிரண்டாம் நூற்றாண்டில் நிதித்துறை (Exchequer) ஒன்று நிறுவப்பட்டது. வரிவிதிப்புபற்றிய தகராறுகளை நிதித்துறை அலுவலர்கள் விசாரித்ததால் ஒரு நீதித்துறையும் உருவாகியது.

1612-ல் பொருளாளர் பிரபு அதிகாரப்பூர்வமாக அமர்த்தப் பட்டார். நிதித்துறையில் இவருடைய சிறப்புநிலை இவருக்கு முக்கியமான அதிகாரங்களை வழங்கிற்று. மற்றத் துறைகளின்

மீது கருவூலத்துறையினர் பெரும்ஆதிக்கம் செலுத்தியதோடு, இவர்கள் பதவி அமர்த்தல்களைப் பெருமளவு கட்டுப்படுத்தினர். ஆகவே, பதினெட்டாம் நூற்றாண்டில் கருவூல முதன்மைப்பிரபு, முதன்மையான அமைச்சராக மாறிக்கொண்டிருந்தார். கருவூலத்திற்கான பாராளுமன்றச் செயலர் பதவியில் கருவூலத்தின் கடந்தகால வரலாற்றை இன்னும் காணலாம். கருவூலத்திற்கான பாராளுமன்றச் செயலர் அரசாங்கத்தின் தலைமைக்கொறடாவாகவும் இருக்கிறார்.

அரசியல் வாழ்க்கையாதரவு அகன்றபின்னரும், கருவூலத்தின் அதிகாரம் குறையவில்லை. மாறாக, இதன் செல்வாக்குப் பெருகி, இதன் பணிகள் கூடின. கருவூல மேற்பார்வை நிறுவனமாக்கப்பட்டு,நிதியியல் நேர்மைக்கோரிக்கை சமாளிக்கப்பட்டது. சிவில் சேவையை ஒருங்கிணைக்க முயன்றதில் கருவூலம் ஒரு தனித்த வேலைகொடுக்கும் நிறுவனமாயிற்று. ஆனால், நாட்டின் பொருளாதாரப் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டபொழுதுதான் இத் துறை பெரும் செல்வாக்கிற்கு உரியதாயிற்று. இதன் வேலை அதிகரிப்பு இரண்டு நிலையான இணைச்செயலர்களை அமர்த்த காரணமாக இருந்தது. இவர்களில் ஒருவர் சிவில் சேவைத் தலைவராகவும், இன்னொருவர் கருவூலத்தின் பொருளாதார, நிதிப்பணிகளோடு தொடர்புடைய அலுவலராகவுமானார்.

இன்று கருவூலக் கழகத்தில், கருவூல முதன்மைப் பிரபு, நிதித்துறை முதல்வர் (Chancellor), ஐந்து இளநிலைப் பிரபுக்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது இக் கழகம் கூடுவதில்லை. இதனுடைய பொறுப்புகளைத் தலைச்செயலர், நிதிச்செயலர் ஆகியோரின் உதவிகொண்டு நிதித்துறை முதல்வர் நிறைவேற்றுகிறார். துறையின் இயல்பான அலுவல்களைப் பாராளுமன்றச் செயலர் கருத்திற்கொள்வதில்லை.

நிதிமேற்பார்வை, சிவில் சேவைத்தொகுதியைக் கட்டுப்படுத்துதல், பொருளாதாரக் கொள்கையை ஒருங்கிணைத்தல் ஆகிய மூன்றுபணிகளும் கருவூலத்தின் சிறப்புப்பணிகளாகும்.

(ஆ) வருவாய்த்துறை

வருவாய்த்துறை கருவூலத்திற்குட்பட்டதாக இருப்பினும், இது சட்டப்படியிலான செயற்பாடுகளையும் தனக்கேயுரிய சட்ட ஆளுமையையும் பெற்றுள்ளது.

சுங்க, கலால் வரிகளை இது திரட்டியளிக்கிறது. இப் பணியைச் சுயேச்சையாக நின்று நிறைவேற்ற சுங்க, கலால் வரிக் கழகமொன்று நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

நேர்முக வரிகளைத் திரட்டும் பொறுப்பு உள்நாட்டு வருவாய்க் கழகத்தின் பொறுப்பாகும். இவைகளைப்பற்றி நிதித் துறைத் தலைவருக்கு இது அறிவுரையளிக்கிறது. கட்டாயமாக வாங்குவதற்கும், தலவரி விதிப்பதற்கும், சொத்துவரி விதிப்பிற்கும் இது சொத்துகளை மதிப்பிடுகிறது.

(இ) போஸ்ட்மாஸ்டர் ஜெனரலின் அலுவலகம்

அரசாங்கத் துறைகளுக்குப் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ஒரு பொருளாளராக (Banker) இருக்கிறார். நிதித்துறைக் கணக்கிலிருந்து இங்கிலாந்து வங்கிக்குப் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட தொகை மாற்றப்படுகிறது. போஸ்ட் மாஸ்டர் கணக்கிலிருந்து துறைகள் பணம்பெற்றுக் கொள்ளுகின்றன. சிவில் பணியாளர்கள், ஆசிரியர்கள், படை அலுவலர்கள் ஆகியோருக்கு இத் துறை ஓய்வூதியமளிக்கிறது.

5. சமூகப் பணிகள்

(அ) சுகாதார, சமூகக் காப்புத்துறை

இத் துறை 1968-ல் நிறுவப்பெற்றது. இது தேசியச் சுகாதாரச் சேவைத் தொகுதிகளைச் செயலாட்சி செய்கிறது. பொதுச்சுகாதாரம், மனநோய், முதியோர், ஊனமுற்றோர் ஆகியவரோடு தொடர்புடைய தலநிறுவனங்களை இது மேற்பார்வையிடுகிறது. தேசியக் காப்புறுதிச் சட்டங்களை இது செயல்படுத்துகிறது.

(ஆ) கல்வி, அறிவியல் துறை

இத் துறை அரசுச் செயலாளரின் கீழ் உள்ளது. இது இரு பிரிவுகளாக்கப்பட்டு இரு அமைச்சர்களின் கீழ் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகக்கல்வி நீங்கலாக, இது எல்லாக்கல்விகளையும் ஏற்றுச்செயல்படுத்துகிறது. பல்கலைக்கழகப் பண உதவிக் குழுவின் வழியாக இரண்டாவது பிரிவு செயல்

படுகிறது. இது பல்கலைக்கழகக்கல்வி, அறிவியல் ஆகியவை களைக் கவனிக்கிறது.

(இ) வீட்டுவசதி தலஅரசாங்க அமைச்சு

1951-ல் இந்த அமைச்சுப் படைக்கப்பட்டது. இது தல அரசாங்கத்தை மேற்பார்வையிடுகிறது. குடிநீர், கழிவுநீர், வீட்டுவசதி, சேரி ஒழிப்பு, நகர்த்திட்டம் ஆகியவை இத் துறையின் கடமைப்பொறுப்புகளாகும். தலநிறுவனங் களுக்கு அரசாங்க நிதிஉதவியைக் கண்காணிக்கிறது; கடன் கொள்ள இசைவளிக்கிறது.

6. பொருளாதார விவகாரங்கள்

(அ) பொருளாதார விவகாரத்துறை

இதன் தலைவராக வழக்கமாக அரசுச்செயலரே இருந்து வருகிறார். இவருக்கு உதவியாக அமைச்சர் ஒருவர் இருக் கிறார். நீண்டகாலப் பொருளாதாரக்கொள்கை, விலைக் கொள்கை, பொருளாதார வளர்ச்சி, பிராந்தியத் திட்டமிடல் ஆகியவை இதன் பொறுப்புகளாகும்.

(ஆ) வணிகக் கழகம்

இது இரண்டாவது சார்லஸின் காலத்தில் தோன்றியது. ஆனால், இக் கால அமைப்பு 1786-ல் உருவாயிற்று. இக் கழகம் கூடுவதில்லை. இதன் பணிகளுக்கு இதன் தலைவர் பாராளு மன்றப் பொறுப்பேற்கிறார். இது இங்கிலாந்தின் வணிகத் திற்குப் பொறுப்புடையதாகும்.

(இ) அஞ்சல் மனைகள்

இவை பதினேழாம் நூற்றாண்டிலிருந்து இருந்துவரு கின்றன. போஸ்ட்மாஸ்டர் ஜெனரலின்கீழ் தபால், தந்தி, தொலைபேசி ஆகிய சேவைகளை இவை நடத்துகின்றன. தொலைக்காட்சி, ஒலிபரப்பு ஆகியவைகளும் இவைகளின் பொறுப்பில் அடங்கும். அஞ்சல்மனை சேமிப்பு, கடன் பத்திர விற்பனை, தேசியச் சேமிப்புப் பத்திரங்கள், விற்பனை போன்ற பல அரசாங்கப் பணிகளை இவை ஏற்று நிறைவேற்றுகின்றன.

(ஈ) வேலைவாய்ப்பு, உற்பத்தித்துறை

1968-ல் தொழிலமைச்சிற்குப் பதிலாக, இத் துறை அமைக்கப்பட்டது. வேலைவாய்ப்பு ஏற்பாட்டுப் பணிகளையும், தொழிற்பயிற்சித் திட்டங்களையும் இது உருவாக்கிக் கொடுக்கிறது. தொழிலாளர்களின் சேமநலன், உடல்நலம், நல வாழ்வு ஆகியவைகளை இத் துறை மேற்பார்வை செய்கிறது. தொழிலாளர்கள்பற்றிப் புள்ளிவிவரங்களைத் திரட்டி வெளியிடுகிறது. நல்ல தொழில் உறவு நிலவச்செய்கிறது. தொழில் தகராறுகளைத் தீர்த்துவைக்கிறது. வேலைவாய்ப்பிற்காக மற்றத் துறைகளோடு ஒத்துழைக்கிறது.

அரசாங்க வருவாய்க்கொள்கையைச் செயற்படுத்தும் பொறுப்பை 1968-லிருந்து அரசுச்செயலர் ஏற்றுள்ளார்.

(உ) வேளாண்மை, மீன்பண்ணை, உணவு அமைச்சு

வேளாண்மை, மீன்பண்ணை ஆகிய துறைகள் 1889-ல் படைக்கப்பட்டன. 1919-ல் இது ஓர் அமைச்சாக மாற்றியமைக்கப்பட்டது. இங்கிலாந்தின் வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக்கும் இதனுடன் தொடர்புடைய எல்லாத் தொழில்களின் வளர்ச்சிக்கும் இது பொறுப்பாகும்.

(ஊ) போக்குவரத்து அமைச்சு

1919-ல் இவ் வமைச்சுத் தோன்றியது. உள்நாட்டுப் போக்குவரத்தும், கப்பற்போக்குவரத்தும் இதன் பொறுப்பாகும். நெடுஞ்சாலைகள் அமைப்பும், நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்துக் கழக உறுப்பினர்களை அமர்த்துதலும் இதன் பணிகளாகும். இங்கிலாந்தின் துறைமுக வளர்ச்சியிலும் இது ஈடுபாடு கொள்ளுகிறது.

(எ) எரிபொருள், மின்சக்தி அமைச்சு

மின்சக்தி அமைச்சாக இது 1957-ல் மாற்றியமைக்கப்பட்டது. எரிபொருள், மின்சக்தி ஆகியவைகளை வளர்த்து, ஒருங்கிணைத்து மக்களுக்களிப்பது இந்த அமைச்சின் கடமையாகும். இவைகளைப் பயன்படுத்துவதிலும், பகிர்ந்தளிப்பதிலும் இத்துறை மேம்பாடு காண திறமையோடு செயல்படுகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட நிலக்கரி, வாயு, மின்சக்தி ஆகிய தொழிற்சாலைகளின் கொள்கைகளை வகுப்பதில் இந்த அமைச்சு அரும்பணியாற்றுகிறது. பெட்ரோலியத்

தொழிற்சாலைகளோடு அரசாங்கத்தின் தொடர்பை இது ஏற்படுத்திக் கொடுக்கிறது.

(ஏ) தொழில் நுட்ப அமைச்சு

தொழிற்சாலைகளில் தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தித் தொழிலைப் பெருக்க 1964-ல் இத் துறை நிறுவப் பட்டது. முன்னாள் விமான போக்குவரத்துத் துறையின் பணிகளை இது ஏற்றுச்செயற்படுத்துகிறது. சிவில், இராணுவ விமானங்களைக் கட்டுவதற்கும், பெற்றுத்தருவதற்கும் இந்த அமைச்சுப் பொறுப்புடையதாகும். விமானத் தொழிற்சாலை களோடு அரசாங்கத்தின் சார்பில் இது தொடர்பு கொள்ளுகிறது.

7. பலதரமானவை

(அ) பொதுக்கட்டடப் பணித்துறை

அரசாங்கத் துறைகளுக்கு அலுவலக வசதிகளைச் செய்து கொடுப்பதோடு, கட்டடங்களையும் கட்டிக்கொடுக்கிறது. பழைய வரலாற்றுச் சிறப்புடைய கட்டடங்களை இது பேணிக் கண்காணிக்கிறது. கட்டடக் கலைகளிலும், கட்டடப்பொருள்கள் தொழிற்சாலைகளிலும் இது கவனம் செலுத்துகிறது.

(ஆ) கருவூல வழக்கறிஞர் தலைவர், வழக்குரைஞர்

அரசாங்கத் துறைகளுக்கு இத் துறை சட்ட அறிவுரையும் பணியும் அளிக்கிறது; குற்றச்சாட்டுகளைத் தயாரிக்கிறது; துறைகளின் சார்பில் நீதிமன்றத்தில் தோன்றுகிறார்கள். சட்டம், சொத்துடைமை ஆகியவைபற்றி இது துறைகளுக்கு அறிவுரையளிக்கிறது. வழக்குரைஞர் மணமுறிவுச் சட் டங்கள் செயல்படுவதை மேற்பார்வையிடுகிறார்.

ஸ்காட்லாந்தின் ஆட்சி மேம்பாட்டிற்கென ஒரு செயலர் 1926-ல் அமர்த்தப்பட்டார். இவருக்கு உதவியாக ஓர் அமைச் சரும், மூன்று பாராளுமன்ற நேர்முகச் செயலர்களுமிருக் கிறார்கள். இவர்களுடைய பணிகளை நான்கு முதன்மையான துறைகள் நிறைவேற்றுகின்றன. சட்ட விவகாரங்களுக்குத் தனிப்பட்ட துறைகள் இருக்கின்றன.

வடக்கு அயர்லாந்து ஓர் ஆளுநரால் ஆட்சிசெய்யப்படு கிறது. இவருக்கு உதவியாகப் பல துறைகள் இருக் கின்றன.

வேல்ஸ்

வேல்ஸிற்காகக் கேபினெட்டில் ஒரு செயலர் இருக்கிறார். 1964-ல் இப் பதவி படைக்கப்பட்டது. இவருக்கு உதவியாக ஓர் அமைச்சர் இருக்கிறார். வீட்டுவசதி, நகர்த்திட்டமிடல், புதிய நகரங்கள், தலஅரசாங்கம், சாலைகள், சுகாதாரப் பணிகள் ஆகியவைகளுக்கு அமைச்சர் பொறுப்புடைய வராகிறார்.

மேலும் கற்றற்குரிய நூல்கள்

I. M. Mackenzie	:	Central administration in Britain.
N. H. Brasher	:	Studies in British Government.
Harvey & Bather	:	The British Constitution.
H. Plaskitt	:	Government of Britain.

கலைச்சொல்லகராதி

Abbot	—	மடத்துத் தலைவர்
Accession	—	அரசு எய்துதல், அரசுரிமை பெறுதல்
Act of Attainder	—	மரணதண்டனைச்சட்டம்
Act of Settlement	—	அரசுரிமை நிருணயச்சட்டம்
Act of Succession	—	வாரிசுரிமைச் சட்டம்
Act of Supremacy	—	தனிமுதன்மைச் சட்டம்
Act of Union	—	ஐக்கியச்சட்டம்
Act of uniformity	—	சமய ஒருமைச்சட்டம்
Admiralty	—	கப்பற்படைத்துறை
Alderman	—	நகர முதுவர்
Annates	—	முதலாண்டு வருவாய்
Apology, form of	—	காப்புரை தாள்
Archbishop	—	அதிமேற்றிராணியார்
Assizes	—	சட்டங்கள், மாவட்ட வழக்கு மன்றம்
Auditor General	—	தணிக்கையாளர் தலைவர்
Autocracy	—	தனி வல்லாட்சி
Backbencher	—	பின்னணி உறுப்பினர்
Benevolent Despotism	—	நல்லாட்சி வல்லரசு
Benevolence	—	கட்டாயக் கடன்
Bishop	—	மேற்றிராணியார்
Bill of Rights	—	உரிமைகள் மசோதா
Board	—	கழகம்
Book of Common Prayer	—	பொது வழிபாட்டுநூல்
Bureaucracy	—	ஆளும் இனம்
Cabinet	—	அமைச்சரவை

Chancellor of Exchequer — நிதித்துறை முதல்வர்
Charter of Liberties — உரிமைச் சாசனம்
Church — திருச்சபை
Circuit courts — சுற்றிவரும் நீதிமன்றம்
Civil List — அரசமானியம்
Clarendon Code — கிளாரன்டன் சட்டத் தொகுப்பு
Common Law — பொதுச்சட்டம்
Common wealth — பொதுநல அரசு
Communion service — திருவிருந்து வழிபாடு
Congregation — சமயத் திருக்கூட்டம்
Consolidated fund — திரண்ட நிதி
Constitution — அரசியலமைப்பு
Conventicle Act — இரகசியத் தொழுகைக் கூட்டம்
Convention Parliament — பேராண்மைப் பேரவை
Convocation — குருமார் திருக்கூட்டம்
County — மாவட்டம்
Court of Common Plea — பொதுவழக்கு நீதிமன்றம்
Court of Exchequer — நிதிவழக்கு நீதிமன்றம்
Court of High Commission — உயர்ஆணை நீதிமன்றம்
Court King's bench — அரச நீதிமன்றம்
Curia Regime — அரசவை
Declaration of Rights — உரிமைகள் அறிவிப்பு
Declaration of Indulgence — பொறுத்தலறிக்கை
Dispensing power — சட்டவிலக்கு அதிகாரம்
Dissenters — இணங்காதார்
Divine Right theory — இறையுரிமைக் கோட்பாடு
Ecclesiastical Court — சமய நீதிமன்றம்
Electors — தேர்வாளர்கள்
Emergency — நெருக்கடிக் காலம்
Exchequer — நிதித்துறை
Exclusion Bill — அரசுரிமை விலக்கு மசோதா
Feudalism — நில, படை மானியம்

Feudal dues	—	நிலமானியத் தீர்வைகள்
Five miles Act	—	ஐந்து மைல் சட்டம்
Forced Loans	—	கட்டாயக் கடன்கள்
Free holder	—	உரிமை மானிய தார்
Glorious Revolution	—	மாண்புமிகு புரட்சி
Grand Remonstrance	—	பெருங்கண்டனப் பத்திரம்
Great Council	—	பேரவை
Great Seal	—	முத்திரை நாயகம்
Habeaus Corpus	—	ஆட்கொணர் ஆணை
High Churchman	—	மதநிலைய மேலோர்
House of Commons	—	பொதுமக்கள் சபை
House of Lords	—	பெருமக்கள் சபை
Indemnity Law	—	விலக்குரிமைச்சட்டம்
Imposition	—	இடுவரி
Impeachment	—	கடுங்குற்ற விசாரணை
Instrument of Government	—	அரசாங்க அமைப்புப் பத்திரம்
Justice of Peace	—	அமைதிகாண் நடுவர்
Jurisdiction	—	அதிகார வரம்பு, எல்லை
Jury	—	சான்றுயர்
Knight	—	வீரத்திருத்தகை
Libel	—	அவதூறு
Lords spiritual	—	ஆன்ம இயல் பிரபுக்கள்
Lords Temporal	—	உலகியல் பிரபுக்கள்
Livery and Maintenance	—	வில்லைச் சேவக முறை
Long Parliament,	—	நீடித்த பாராளுமன்றம்
Lord Treasurer	—	கருவூல முதன்மைப் பிரபு
Lord Marcher	—	எல்லைப்புற பிரபு
Martial Law	—	இராணுவச் சட்டம்
Martial Court	—	இராணுவ நீதிமன்றம்
Ministerial Responsibility	—	அமைச்சரவை பொறுப்பு
Militia Act	—	நாட்டுப்படைச் சட்டம்
Millenary Petition	—	ஆயிரவர் விண்ணப்பம்
Monopoly	—	தனியுரிமை, முற்றுரிமை

Mutiny Act	—	படைக்கலகச் சட்டம்
Navigation Act	—	நாவாய்ச் சட்டம்
Nineteen Propositions	—	19 முன்மொழிக் கூற்றுகள்
Non-Conformists	—	ஒருப்படாதார்
Occasional Conformity	—	சிலவேளை இணக்கம்
Parish	—	திருச்சபை வட்டம்
Parliamentary Government	—	பாராளுமன்ற அரசாங்கம்
Personal Rule	—	தனியாட்சி
Petition of Right	—	உரிமை விண்ணப்பம்
Poor Law	—	இரவலர் சட்டம்
Poundage	—	பவுண்டுக் கட்டணம்
Pope	—	போப்பாண்டவர்
Prelate	—	குருமார்கள்
Prerogative	—	சிறப்பதிகாரங்கள்
Privileges	—	சிறப்புரிமைகள்
Proclamation	—	தனியாணைப் பேரறிக்கை
Protectorate	—	காப்பாளராட்சி
Quorum	—	குறைவெண் வரம்பு
Quowarento	—	எத்தகுதி பற்றி
Restoration	—	முன்னிலை மீட்சி
Reformation	—	சமயச் சீர்திருத்த இயக்கம்
Rotten borough	—	நசித்துப்போன நகர்த் தொகுதிகள்
Rule of Law	—	சட்டத்தின் ஆட்சி
Rump Parliament	—	எஞ்சிய பாராளுமன்றம்
Sheriff	—	அரசப் பேராள்
Ship money	—	கப்பற்பணம்
Sinking Fund	—	கடன்கழிவு நிதி
Speaker	—	நாடாளுமன்றத் தலைவர், சபாநாயகர்
Star Chamber	—	விண்மீன் நீதிமன்றம்
Standing army	—	நிலைப்படை
Suspending Power	—	சட்ட நிறுத்தஅதிகாரம்
Test Act	—	சோதனைச் சட்டம்

Treason Act — அரசத் துரோகக் குற்றச் சட்டம்

Treasurer — பொருளாளர்

Triennial Act — மூவாண்டுச்சட்டம்

Tonnage — டன் எடைவரி

Veto — தடைவாக்கு, ரத்து (அதிகாரம்)

Writ — கட்டளை

Yeoman — சிறு நிலக்கிழார்